# OLD DECCAN DAYS

# தக்காணத்துப் பூர்வகதைகள்

SAIVA SIDDHANTA
SANGAM LIBRARY.

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA
MADRAS ALLAHABAD CALCUTTA RANGOON COLOMBO
1918

*Republished by permission of the*

*Madras School Book and Literature Society*

# பொருள் அட்டவணை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | மந்திரவாதி ... | 1 |
| 2. | ஒரு விநோதக் கதை ... | 18 |
| 3. | ஜவந்தியம்மாள் கதை ... | 26 |
| 4. | சத்தியமே ஜயம் ... | 68 |
| 5. | ராமனும் லட்சுமணனும் கற்றறிந்த கோட்டானும் ... | 89 |
| 6. | சூரியபாய் கதை ... | 109 |
| 7. | விக்கிரமராஜன் செய்த தேசசஞ்சாரம் ... | 127 |
| 8. | ஏற்றத்தாழ்ச்சி அத்தனை அதிகமில்லை ... | 159 |
| 9. | ஐந்துமலர் அரசி கதை ... | 162 |
| 10. | சூரிய சந்திர வாயுக்கள் விருந்துண்ட கதை ... | 192 |
| 11. | நரியும், அம்பட்டனும், ஒரு பிராமணனும் ... | 195 |
| 12. | பிராமணனும், புலியும், ஆறு நியாயாதிபதிகளும் ... | 216 |
| 13. | ஒரு வீரவண்ணான் ... | 222 |
| 14. | அரக்கர் மாளிகை ... | 231 |
| 15. | குருடனும், செவிடனும், கழுதையும் ... | 246 |
| 16. | சிங்கமும், நரியும் ... | 257 |
| 17. | மச்சகுமாரன் கதை ... | 261 |
| 18. | பிரதிசெய்தல் ... | 273 |
| 19. | சந்தனராஜன் கதை ... | 276 |
| 20. | மூன்று வல்லவர்கள் வேதாளங்களை வென்ற கதை ... | 290 |
| 21. | பூமகளென்னும் பெண்மணி ... | 302 |
| 22. | நரியும், முதலையும் ... | 315 |

# தக்காணத்துப் பூர்வகதைகள்

## 1-வது மந்திரவாதி

முன்னொருகாலத்தில் அரசனொருவன் ராஜ்யபரிபாலனம் செய்துகொண்டிருந்தான். அவனுக்கு அழகிற்சிறந்தவர்களான ஏழு பெண்களுண்டு. அவர்களெல்லாரும் நற்குண நன்னடக்கையுடையவர்கள். அவர்களுள் சிங்காரமென்கிற கடைசிப்பெண்மாத்திரம் மற்றவர்களைவிட அதிகமான சமத்தும் சாதுரியமுமுள்ளவள். அவ்வரசன் மனைவி அப்பெண்கள் சிறுவயதுடையவர்களாய் இருக்கும்போதே இறந்துபோனதால் அவர்கள் தாயில்லாப் பெண்களாகவே வளர்ந்து வந்தார்கள்.

தங்கள் தாய் இறந்துபோனபிறகு அந்தப் பெண்கள் நாளொன்றுக்கு ஒருத்தி வீதம் முறைவைத்துக்கொண்டு தந்தைக்குச் சாப்பாடு சமைத்து வேளைக்கு அன்னமிட்டுக்கொண்டு வந்தார்கள். அவர்கள் தகப்பனும் ராஜாங்கத்து வேலைகளைச் சீராய்ப் பார்த்துவந்தான்.

இப்படியிருக்கையில் அவ்வரசனுடைய பிரதானமந்திரி இறந்துபோனான். அவனுக்கு ஒரு பெண்ணுண்டு. கைம்பெண்ணான அவன் மனையாள் இவ்வரசனுடைய பெண்கள் சமைத்துக்கொண்டிருக்கும்போது தினந்தப்பாமல் தன் மகளோடுகூடக் கொஞ்சம் நெருப்பு இரக்கவருவாள். அவள் வரும்போதெல்லாம் கடைசிப் பெண்ணான சிங்காரம், 'அவளை நமது வீட்டுக்கு வரவிடவேண்டாம்; வெளியே போகச்சொல்லுங்கள்; அவள் தன் வீட்டிலேயே நெருப்புத் தேடிக்

கொள்ளட்டும்; ஏன் நம்மண்டை வந்து இரக்கிறாள்? அவள் இவ்வாறு நமது வீட்டுக்கு வரும்படி நாம் இடங்கொடுப்போமானால் நமக்கு என்றைக்காவது தீங்கு சம்பவிக்குமேயன்றி வீண்போகாது' என்று சொல்லித் தடுத்துக்கொண்டேயிருப்பாள். 'அதற்கு மற்றப் பெண்கள், 'குழந்தாய் சிங்காரம்! சும்மாவிரு; ஏன் நீ எப்போதும் இந்த அனாதைப்பெண்ணோடு வாதாடுகிறாய்? வேண்டுமானால் கொஞ்சம் நெருப்பு எடுத்துக்கொண்டு போகட்டுமே; அதனால் நமக்கு என்ன கெடுதி விளைகிறது' என்று சொல்வார்கள். அதுகேட்டு அந்தக் கைப்பெண், அடுப்பண்டைபோய்க் கொஞ்சம் கட்டையும் நெருப்பும் எடுத்துக்கொண்டுபோவாள். அவள் இன்னும் என்ன செய்துகொண்டு வந்தாள் தெரியுமா? தான் அடுப்பண்டைபோகையில் ஒருவருமில்லாத சமயம் பார்த்து அங்கே பதார்த்தங்கள் பக்குவஞ்செய்து வைத்திருக்கிற பாத்திரங்களில் தப்பாமல் கொஞ்சம் மண்ணையெடுத்துப் போட்டுக் கொண்டுவந்தாள்.

அந்த அரசன் தன் மக்களை அதிக அபிமானமாய்ப் பாதுகாத்து வந்தான். அப்பெண்களும் தங்கள் தாய் இறந்ததுமுதல் தகப்பனுக்கு யாராவது விரோதிகள் விஷங்கொடுத்துக் கெடுதிவிளைவிக்கப் போகிறார்களென்று பரிவோடு தங்கள் கையினாலேயே அன்னம் சமைத்துப் போட்டுக்கொண்டுவந்தார்கள். அதனால், அவன் தன் உணவுகளில் மண் கலந்திருப்பதுகண்டு, இதை[1] வேறொருவரும் கொண்டுவந்து போட்டுவைக்க வழியில்லை; இப்பெண்களுடைய அஜாக்கிரதையினாலேதான் வந்திருக்கவேண்டும் என்று நினைத்தானாயினும், தன் பெண்களிடத்தில் அதிக அன்புள்ளவனாகையால் அதைப்பற்றி அவர்களைக் கண்டிப்பதற்குமாத்திரம் அவனுக்கு இஷ்டமில்லாமலிருந்தது. அப்படி நாள்தோறும் அவன் தன் போஜனத்தில் மண் கலந்திருக்கக் கண்டுகொண்டேவந்தான்.

ஒருநாள் அவ்வரசன், இப்படி நாள்தப்பாமல் நமது சோற்றில் மண் ஏன் வருகிறதோ? இப்பெண்கள் சமைப்பதைக் கண்டறிவோம் என்று சமையல் வீட்டுப் பக்கத்தறையிலிருந்து ஒரு சாளரத்தின் வழியாய்ப் பார்த்துக்கொண்டிருந்தான்.

அவ்வேழு பெண்களும் மிகவும் கவனமாய்ப் பாத்திரங்களையெல்லாம் சுத்திசெய்து சீராய்ச் சமைத்துவைத்தார்கள். இப்படியிருக்க, அந்தக் கைம்பெண் வழக்கப்படியே நெருப்பிரக்கவந்தாள். அவளைக்

கண்டு சிங்காரம் கோபித்து, 'உன் வீட்டிலேயே நீ விறகு ஏன் வாங்கி வைத்துக்கொள்ளக்கூடாது? தினந்தோறும் எங்கள் வீட்டில்வந்து வாங்கிப்போவானேன்? ஓ என் சகோதரிகளே! ஒருவரும் இவளுக்கு விறகுகொடுக்கவேண்டாம்; அவள் போய் விலைக்கு வாங்கிக்கொள்ளட்டும்' என்றாள். அதற்குப் பெரிய பெண், 'அம்மா சிங்காரம்! இந்த ஏழைப்பெண் கொஞ்சம் விறகும் நெருப்பும் வாங்கிக்கொண்டு போவதனால் நமக்கு என்ன குறைந்துபோகிறது; நாள்தோறும் நீ ஏன் இப்படி இவளோடு சண்டைக்கு நிற்கிறாய்? இவள் நமக்கு என்ன கெடுதிசெய்கிறாள்?' என்று சொல்லக்கேட்ட சிங்காரம், 'நீ அப்படியா நினைக்கிறாய்? அவள் எப்போதும் இங்கே வந்துகொண்டிருக்க நாம் இடங்கொடுப்போமானால் என்றைக்காவது நமக்குக் கெடுதிசெய்து வருத்தப்படுத்துவாள்' என்று சொன்னாள்.

இவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அரசன், பிறகு அந்த மந்திரியின் மனைவி உள்ளே சென்று கொஞ்சம் கட்டையும் விறகும் எடுத்துக்கொண்டு பக்கத்திற் சமைத்த பதார்த்தங்கள் வைத்திருந்த பாத்திரங்களில் ஒன்றுதப்பாமல் மண்ணைப் போட்டுவிட்டுப் போகவும் கண்டான். அதைப்பார்க்கவே அரசன் மிகவுங் கோபங்கொண்டு அவளைப் பிடித்துவரச்சொல்லி, நீ என்னகாரியஞ் செய்தாயென்று கேட்டதற்கு, அவள், தங்களுடைய தயவு பெற்றுத் தங்களுக்கு மனையாளாக வேண்டுமென்றே இந்தச் சூது செய்தேனென்று அவனுக்கு ஆசைபெருகும்படி இனிப்பாய்ப் பற்பல பேச்சுகள் பேசி அவனைக் களிக்கச் செய்தாள். இவ்வளவும் அவள் மோசமாய்ப் பேசின பேச்சேயன்றி வேறல்ல. அந்த வார்த்தைகளைக் கேட்கவே, அவளைத் தண்டிக்க வேண்டுமென்று நினைத்திருந்த அரசன் உடனே அவளை விவாகஞ்செய்து இராணியாய் வைத்துக்கொண்டான். அவளும் தன் பெண்ணோடுகூட அரசன் அரமனைக்கு வந்து சேர்ந்தாள்.

அதுமுதல் அந்தப் புதுராணி அவ்வேழு பெண்களையும் கண்ணிற் காணவொட்டாமல் பலவிதமாய்ப் பகைத்தாள். அவர்களுக்குப் பதில் தன் மகளே அரமனையில் ராஜாத்தியாக வேண்டுமென்றும், அவ்வரசன் பொருள்களெல்லாம் தன் மகளுக்கே சேரவேண்டுமென்றும் எண்ணித் தன்னாற் கூடியவளவு அவர்களுக்குக் கெடுதிசெய்ய நினைத்தாள். முன் அவர்கள் தனக்குச் செய்த உதவிக்காக இப்போது

அவள் அப்பெண்களிடத்தில் எவ்வளவு நன்றி பாராட்டவேண்டுமோ அவ்வளவுக் கவ்வளவு அவர்களுக்குத் தீங்குசெய்யக் கருதினாள். சோறுவது வயிறுநிரம்பப் போடுவாளோ? கிடையாது. குடிக்கத் தண்ணீர் கொடுப்பாளோ? ஐயோ! அந்தப் பெண்களுக்கு என்ன துரதிர்ஷ்டமுண்டாயிற்று பார்த்தீர்களா? இதுவரையில் அவர்கள் தங்க ளிஷ்டப்படி அதிக நேர்த்தியான உணவுகளெல்லாம் உண்டு, உயர்ந்த உடுப்புக்களெல்லாம் உடுத்துச் சுகமாயிருந்ததனால், இப்போது இந்தச் சங்கடத்தை அனுபவிக்கமாட்டவில்லை. அதனால் அவர்கள் நாள் தோறும் தங்கள் தாயைப் புதைத்திருக்கும் இடத்திற்போய் உட்கார்ந்து கொண்டு அழத்தொடங்கினார்கள். 'ஓ எங்கள் அருமைத்தாயே! இந்த அநாதைப் பெண்களைக் கண்ணெடுத்துப் பார்க்கமாட்டாயா? நாங்க ளென்ன துரதிர்ஷ்டத்துக்காளானோம்! இந்த வைப்பாட்டித்தாய் எங்க ளுக்குச் சோறுகூடப் போடாமற் கொல்லுகிறாளே!' என்று அழுது புலம்பிவந்தார்கள்.

இப்படி அந்தப் பெண்கள் புலம்பிக்கொண்டிருக்கையில் ஒரு நாள் அவர்கள் தாயைப் புதைத்திருந்த கல்லறையினின்றும் அழகான மாமரமொன்று முளைத்தது. அம்மரத்தில் அதி மதுரமான பழங்கள் அசைந்துகொண்டிருந்தன. இந்த எளியபெண்கள் அப்பழங்களை வயிறுநிரம்பப் புசித்துப் பசியாறினார்கள். அன்றுமுதல், தங்கள் சிற் றன்னையண்டைபோய்க் கால்வயிறுகஞ்சி இரப்பதைவிட இப்பழத்தைப் புசிப்பதே மேலானதென்று எண்ணி தினந்தோறும் அங்கேபோய் அப்பழங்களையே புசித்துவந்தார்கள். அதுகண்டு அந்தப் புதுராணி தன் மகளை யழைத்து, 'குழந்தாய்! இதென்ன அதிசயமோ எனக்குத் தெரியவில்லை; அந்த ஏழுபெண்களும் எப்போதும் தங்களுக்குச் சாப் பாடே வேண்டாமென்கிறார்கள்; ஏதாவது கொடுத்தாலும் உண்ணுவ தில்லை; அப்படியிருந்தும், அவர்களுக்கு உடம்பில் நோய்நொடி யொன்றையுங் காணோம்; நாளுக்குநாள் மேனியுண்டாகிறது; உன்னை விட அவர்கள் நன்றாயிருக்கிறார்கள்; இந்தப் புதுமையை நான் என்ன வென்று சொல்லுவேன்! நீ அவர்கள் மேலே கவனமாயிருந்து யாரா வது ஏதாயினும், அவர்களுக்குப் புசிக்கக் கொடுக்கிறார்களாவென்று எனக்குத் தெரிந்துசொல்' என்று வேண்டினாள்.

மறுநாள் அப்பெண்களெல்லாம் அந்தக் கல்லறையண்டைபோய் மாம்பழம் தின்பதுகண்டு, அந்த இராணியின் பெண்ணும் அங்கே

சென்றாள். அந்தப் பெண்ணைப்பார்த்துச் சிங்காரம், 'சகோதரிகாள்! அதோ அந்தப் பெண் வந்து நிற்கிறாள் பார்த்தீர்களா? அவளைத் துரத்திவிடுவோம்; அல்லது நமது பழங்களையாவது மறைத்துக்கொள்வோம்; இல்லாவிட்டால் இச்செய்தியெல்லாம் தன் தாய்க்குத் தெரியப்படுத்துவாள்; அதுகேட்டு அவள் இன்னும் தீங்குசெய்ய நினைப்பாள்' என்று சொன்னாள். அதற்குப் பெரிய பெண்கள், 'அப்படியன்று, நாம் இரக்கமற்றிருக்கக்கூடுமா? இவள் அவ்வளவு கொடியபெண் அன்று; இங்கே அழைத்துக் கொஞ்சம் பழங்கொடுப்போம்' என்று சொல்லி அச்சிறுமியை அழைத்து அவளுக்கு ஒரு பழம் கொடுத்தார்கள்.

அந்தப் பெண் அப்பழத்தைத் தின்றதுந் தின்னாததுமாய்த் தன் தாயண்டையோடி, 'அம்மா! நீ சமைத்துவைத்திருக்கிற சாப்பாட்டை அப்பெண்கள் வேண்டவில்லையென்பது எனக்கு அதிசயமாய்த் தோன்றவில்லை; அவர்கள் தாயைப் புதைத்த கல்லறையின்மேல் மதுரமான பழங்கள் நிறைந்த மரமொன்றிருக்கிறது; அதன் பழங்களையே புசித்துவருகிறார்கள்; எனக்கும் ஒன்று கொடுத்தார்கள்; தின்று பார்த்தேன்; அவ்வளவு உருசி நான் எங்குங் கண்டதில்லை' என்று சொன்னாள்.

அதைக்கேட்கவே எரிகிறவுடம்பில் எண்ணெயைக் காய்ச்சி ஊற்றினதுபோல் அந்த இராணி முன்னிலும் அதிகமாய் மனக்கவலையடைந்து மறுநாளெல்லாம் எழுந்திராமல் தனக்குத் தீராத்தலைநோயுண்டாயிருப்பதாய் அரசனுக்குத் தெரிவித்தாள். அதைக்கேட்கவே அரசன் துக்கக்கடலில் மூழ்கி, 'உன் தலைநோய்தீர என்னை என்ன செய்யச் சொன்னாலும் செய்யச் சித்தமாயிருக்கிறேன்' என்று சொன்னான். அதற்கு அவள், 'என் தலைநோய் தீர ஒரே மருந்துதானுண்டு; இறந்துபோன உம்முடைய மனையாளைப் புதைத்த கல்லறையில் மாமரமொன்று முளைத்திருக்கிறது; அதை வேரோடு பிடுங்கிக்கொண்டு வந்து தழை வேர் எல்லாவற்றையும் நறுக்கிப்போட்டுக் காய்ச்சி, அந்தத் தண்ணீரை என் முகத்திற் கொஞ்சம் பூசினால் இந்தத் தலைநோய் நீங்கிப்போம்' என்றாள். அரசன் உடனே சேவகர்களைத் துரத்தி அம்மரத்தைப் பிடுங்கிவரச்சொல்லி, அதை நறுக்கிப் போட்டுக் காய்ச்சின தண்ணீரை அவள் முகத்திற் பூசினான். அவளும் தலைவலிபோய் விட்டதென்று சந்தோஷமாய் எழுந்தாள்.

மறுநாள் அந்த எழுபெண்களும் வழக்கப்படி அவ்விடத்திற் போய்ப் பார்க்கையில் அங்கிருந்த மாமரத்தைக் காணுமல், முன்னிலும் அதிக பரிதாபமாய்ப் புலம்பத்தொடங்கினார்கள். அந்தக் கல்லறைக்குச் சமீபத்திற் சிறிய குளமொன்றுண்டு. இந்தப் பெண்கள் அழுது கொண்டிருக்கையில், அந்தக் குளத்திற் சிறந்த பாலாடைக் கட்டி போன்ற ஒருவகைப் பணிகாரங்கள் நிறையக் காணப்பட்டன. அதைக் கண்டு வெகு சந்தோஷத்துடனேபோய் எடுத்துப் புசித்து அப்பெண்கள் திருப்தியடைந்தார்கள். இப்படியே அநேக நாட்கள் சென்றன. அவர்கள் போய்ப் பார்க்கும்போதெல்லாம் அந்தக் குளத்திற் பணிகாரங்கள் நிறைந்தேயிருக்கும். இப்படி எழு பெண்களும் கொஞ்சநாள் சந்துஷ்டியடைந்திருப்பது கண்டு அந்தக் கொடிய இராணி முன்போலவே தன் மகளைக் கூவி, 'பெண்ணே! இந்தப் புதுமையை நான் என்னசொல்வேன்! அந்த மாமரத்தைத்தான் முன்னமே பிடுங்கிப்போடச் சொன்னேமே; பிடுங்கிப்போட்டும் இப்பெண்கள் வீட்டில் உணவுகொள்ளாமலிருக்கிறார்கள்; அப்படியிருந்தும் அவர்களுக்கு உடம்புமாத்திரம் சிறிதும் வாடவில்லை, மனதும் வியாகுலப்படக்காணேம்; இதென்ன அதிசயமோ எனக்குத் தெரியவில்லை' என்று சொல்ல, அந்தச் சிறுமி, 'அதை நான் பூரயமாய்ப் பார்த்துச் சொல்லுகிறேன்' என்றாள்.

மறுதினம் அவ்வேழு பெண்களும் போய் அந்தப் பணிகாரத்தைப் புசித்துக்கொண்டிருக்கையில் எவள் வந்து நிற்பாள்? அந்தப் புது ராணியின் மகள்தான் வந்துநின்றாள். சிங்காரம் அதைக்கண்டு, இதோ பார்த்தீர்களா? அந்தத் துஷ்டச்சிறுக்கி மறுபடியும் வருகின்றாள்; அவள் வந்து இதைப் பாராதபடி கரைமேல் சுற்றி உட்காருவோம்; அவள் கையிற் சிறிது கொடுப்போமானல் உடனே இச்செய்தியைத் தன் தாய்க்குத் தெரிவிப்பாளென்பது நிச்சயம்; அதனுல் நமக்கு மிகவும் கெடுதியுண்டாகும்' என்று சொல்ல, மற்றவர்கள், இவள் வீணை சந்தேகங்கொள்ளுகிறாளென்று எண்ணி, அவள் சொன்ன நற்புத்தியைக் கேளாமல் தங்கள் உணவிற் கொஞ்சம் அப்பெண் கையிற் கொடுத்தார்கள். அந்தப் பெண் அதைத் தின்று ஓடிப் போய் இச்செய்தியெல்லாம் தன் தாயுடன் சொன்னாள்.

அந்தப் பெண்கள் பிழைக்கிற வழியைக் கேட்கவே அந்த வைப்பாட்டிக்குக் கோபம் தலைக்கேறி, உடனே வேலைக்காரர்களைக் கூப்

பிட்டு முன் இறந்த இராணியார் கோரியை இடித்து அந்தக் குளத்தைத் தூர்த்துப்போடும்படி உத்தரவுசெய்து, அதிலும் திருப்தியடையாமல் தனக்குத் தேகம் சிறிதும் அனுகூலமில்லாமலிருப்பதுபோற் பாசாங்கு பண்ணினுள். அற்பசொற்பமான ஸ்திதியிலிருப்பதாயல்ல, உயிர் போகப்போகிற தருணமென்று நடித்தாள். அதுகேட்டு அரசன் மிகவும் விசனமடைந்து, ‘அந்த நோய் சிகிச்சைக்குச் சாத்தியமாகுமா ஆகாதா?’ என்று கேட்க, அவள், ‘என்னைப் பிழைப்பூட்டத்தக்க மருந்து ஒன்றே ஒன்றுதானுண்டு; அதை நீர் செய்யமாட்டீர்; சொல்லிப் பயனென்ன?’ என்றுள். அதற்கு அவன், ‘எதுவானுலும் செய்து முடிக்கிறேன்’ என்று சொல்லவே, அவள், ‘உமது மூத்த மனையாளுடைய எழு மக்களையுங் கொன்று, அவர்களுடைய இரத்தத்தை என் முகத்திலும் கைகளிலும் கால்களிலும் தெளித்தால் பிழைத்துக்கொள்வேன்’ என்றுள். இந்த வார்த்தை அரசனுக்கு மிகவும் மனவருத்தமுண்டாக்கிற்று. ஆயினும் அவள் வார்த்தையைத் தள்ளக்கூடாமையால் அவள் இஷ்டத்தை நிறைவேற்றும்படி தன் பெண்களைத் தேடிப்போக, அப்பெண்களெல்லாம் இடித்துப்போட்ட தன் மூத்தமனையாளின் கோரியண்டை உட்கார்ந்து அழுதுகொண்டிருக்கக்கண்டு இரங்கிக் கொல்ல மனம்வராமல், தன்னேடுகூடக் காட்டுக்கு வரும்படி அவர்களை வேண்டி அழைத்துக்கொண்டு போனுன். அங்கே அவன் கொஞ்சம் சோறு சமைத்துக் கொடுக்கவே அதைப் புசித்து அவ்வேழுபெண்களும் நடந்துவந்த ஆயாசத்தாலும் வெயிலாலும் அயர்ந்து தூங்கிவிட்டார்கள். அரசன் அத்தருணங்கண்டு, இந்த அநாதைப்பெண்கள் அந்த மாற்றுந்தாய் கையில் அகப்பட்டு மடிந்து போவதைவிட இங்கேயே உயிரிழந்துபோனுல் உத்தமமென்றெண்ணி, தன் மனையாளிடத்திலுள்ள பயத்தினுல் அவர்களை அங்கேயே விட்டுவிட்டு ஒரு முயலைக் கொன்று அதின் இரத்தத்தைக் கொண்டுபோய் அவளுடம்பிற் பூசினுன். அவ்வேழு பெண்களும் இறந்துபோனுர்களென்றெண்ணி அவளும் சந்தோஷமாய்த் தன் நோய் நீங்கிற்றென்று எழுந்து சுகித்திருந்தாள்.

இது இப்படியிருக்க, நடுக்காட்டிலே படுத்துத் தூங்கிக்கொண்டிருந்த எழுபெண்களும் எழுந்து, அண்டையில் ஒருவருமில்லாமல் தாங்கள் மாத்திரம் நடுக்காட்டிலே நிற்பதுகண்டு பயந்து, தங்கள் தகப்பனுர் தங்குரலைக்கேட்டு ஒருவேளை வருவாரோவென்று தங்களாற்

கூடியவளவு உரத்துக்கூவத் தலைப்பட்டார்கள். அதற்குள் அவன் வெகு தூரம் போய்விட்டான். இவர்கள் கோடை யிடிபோலத் தொண்டையைக் கிழித்துக்கொண்டு கூவினாலும் அவனுக்குக் கேட்குமோ? கேட்டாலும் வேண்டுமென்று விட்டுப்போகிறவன் திரும்பிவருவானா?

அன்றையதினம் அண்டையிலுள்ள பட்டணத்து ராஜகுமாரர்கள் ஏழுபேர் அந்தக் காட்டிற்கு வேட்டையாட வந்திருந்தார்கள். வேட்டையாடியபிறகு அவர்கள் வீட்டுக்குப்போகத் திரும்புகையில், கடைக்குமாரன் தன் தமையன்மாரைப் பார்த்து, 'கொஞ்சம் நிதானியுங்கள்; ஏதோ இங்கே அழுகைக்குரல் கேட்பதுபோலிருக்கிறது; அந்தக் கூக்குரல் உங்களுக்குக் கேட்கவில்லையா? என்னமோ அதைப்போய் விசாரிப்போம்' என்று சொல்லவே, எல்லாரும் அந்தக் கூச்சல் வருகிறவழியே பார்த்துக்கொண்டுபோய், அங்கே புலம்பிக் கூவிக்கொண்டிருந்த பெண்களைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, அவர்கள் கதையைக் கேட்கவே பின்னும் அதிகமாய் வியப்படைந்து, தாங்கள் ஏழுபேரும் அந்த ஆதரவற்ற பெண்களைப் பேருக்கொருத்தியாகக் கொண்டுபோய்க் கலியாணஞ் செய்துகொள்ளும்படி ஏற்படுத்திக்கொண்டார்கள். அப்படியே மூத்தகுமாரன் மூத்த பெண்ணையும், இரண்டாம் குமாரன் இரண்டாம் பெண்ணையும், மூன்றும் குமாரன் மூன்றும் பெண்ணையும், நான்காம் குமாரன் நான்காம் பெண்ணையும், ஐந்தாம் குமாரன் ஐந்தாம் பெண்ணையும், ஆறுங்குமாரன் ஆறும் பெண்ணையும், விசேஷமான வீரியமும் சாமர்த்தியமுமுள்ள ஏழாங்குமாரன் சுந்தரமான சிங்காரம் என்பவளையுமாய் ஏற்றுக்கொண்டார்கள். பட்டணம் போய்ச் சேர்ந்தவுடன் கோலாகலமாய் ஏழுபேருக்கும் கலியாணம் நடந்தது. அவ்வேழு ராஜகுமாரர்களும் தங்கள் மனைவிகளோடுகூடச் சுகமாயிருந்தார்கள்.

இப்படியிருக்கையில் ஒருவருஷகாலத்தில் சிங்காரத்திற்கு ஆண் குழந்தையொன்று பிறந்தது. அக்குழந்தைக்குப் பெரிய தந்தைமாரும் தாய்மாரும் தங்களுக்குப் பிள்ளையில்லாமையால் தங்கள் தங்கள் சொந்தப்பிள்ளைபோலவே அவனைப் பாராட்டி வந்தார்கள். அந்தப் பாலகன் அவ்வேழுபேருக்கும் பிள்ளையாய் மிகச் சிறப்புடன் வளர்ந்து வந்தான்.

இவ்வாறு சந்தோஷமாய்ச் சிலகாலம் சென்றது. அப்படியிருக்கையில் ஒருநாள் சிங்காரத்தின் புருஷனை ஏழாவது ராஜகுமாரன்

வேட்டையாடி வருவதாய்ப் புறப்பட்டுப்போனான். மற்றவர்கள் அவன் வரவை வெகுநாள் எதிர்பார்த்திருந்தார்கள். அவன் திரும்பிவரவே யில்லை. அதனால் அவன் சகோதரர்கள் ஆறுபேரும் அவன் போன வழியைப் பார்த்துவருவதாய்ப் போனார்கள். அவர்களும் திரும்பி வரவில்லை. அதுகண்டு தங்கள் புருஷர்களுக்கு என்ன அபாயம் நேர்ந்துவிட்டதோவென்று அவ்வேழு ராஜகுமாரத்திகளும் மிகவும் விசனமடைந்திருந்தார்கள்.

இன்னும் என்னென்ன அதிசயங்கள் நடந்தன பாருங்கள்! இது நடந்த கொஞ்சநாளைக்குப்பின்பு ஒருநாள் சிங்காரம் தன் குழந்தையைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டிக்கொண்டிருந்தாள். மற்ற ஆறு பெண்களும் அவரவர்களுக்குரிய வேலையைச் செய்துகொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்திலே ஒருவன் பிச்சைக்காரன்போல் உடம்பெல்லாம் கரித்துணி போர்த்துக்கொண்டு அரமனைவாயிலில் வந்தான். அதுகண்டு, அங்கு இருந்த காவலாளர்கள், ‘இது நீ உள்ளேபோகத் தருணமன்று; ராஜகுமாரர்களெல்லாம் வெளியே போயிருக்கிறார்கள்; அவர்கள் அங்கேயே மடிந்துபோனதுபோற் காண்கிறது; இந்த வேளையில் நீ போய் நாதனற்றிருக்கிற பரதேசிப் பெண்களை ஒன்றும் வருத்தப்படுத்தாதே’ என்று சொல்ல, அவன், ‘நான் மிகவும் பரிசுத்தனான ஒரு சன்னியாசி; என்னை உள்ளே விடுவதனால் என்ன தீங்கு நேரும்?’ என்று நயமாய்ப் பேசினதால் அந்த மதிகெட்ட வாசற்காரர்கள், அவன் சன்னியாசியன்று, ஒரு கெட்ட மந்திரவாதியென்று அறிந்துகொள்ளாமல் அவனுக்கு உள்ளேபோக உத்தரவுகொடுத்தார்கள். அந்த மாயச் சன்னியாசி அரமனைக்குள் நுழைந்து அங்குள்ள பல அழகான காட்சிகளைப் பார்த்துக்கொண்டே சிங்காரம் தொட்டிலாட்டிக்கொண்டிருக்கும் இடத்திற்கு வந்து அவளைப்பார்த்து, தான் கண்ட பொருள்களில் இவ்வளவு அழகியது எங்குமில்லையென்று அதிசயித்து, தன்னைக் கலியாணஞ் செய்துகொள்ளத் தன்னோடுகூட வந்துவிடும்படி அவளை வேண்டினான். அதற்கு அவள், ‘என் கணவன் இறந்து போனதாய்த் தோன்றுகிறது; என் பிள்ளையோ பச்சைக்குழந்தை; இனி இவன் நல்ல வல்லவனாகவேண்டிய வழிகளை இவனுக்குக் கற்பித்துக் கொடுத்து வயது வந்தபிறகு உலகமெல்லாந் தேடி இவன் தந்தையின் செய்தியைத் தெரிந்துகொண்டுவரச் செய்யவேண்டும்; அப்படியிருக்க, இக்குழந்தையை அநாதாவுசெய்து விட்டுவிட்டு வந்து

உன்னைக் கலியாணஞ்செய்துகொண்டால் தெய்வம் சகிக்குமா ? ' என்றாள். அதைக் கேட்கவே, அந்த மந்திரவாதி கோபமீறி, நீ உள்ளுறச் சம்மதித்து என்னுடன் வரமாட்டேனென்றதனால் உன்னை நான் இப்படிச் செய்கிறேனென்று சொல்லிக்கொண்டே அவளைச் சிறிய கறுப்பு நாயாய் மாற்றி வெளியே இழுத்துக்கொண்டுபோனான். ஐயோ பாவம்! அவள் என்னசெய்வாள் ! அவன் கையினின்றும் தப்பித்துக் கொள்ளச் சக்தியில்லையே! அதனால் தான் இன்னவிதமானதென்று கூடத் தன் சகோதரிகளுக்குத் தெரிவிக்கக்கூடாமல் அவன் இழுத்த வழியிற் போகும்படி நேரிட்டது. அந்த அரமனை வாசற்காரர்கள், ' இந்த அற்புதமான நாய் உனக்கு எங்கே கிடைத்தது ? ' என்று கேட்டதற்கு, மந்திரவாதி, ' இதை எனக்கு இங்கே ஒரு பெண் வெகுமதியாகக் கொடுத்தாள் ' என்று சொல்லவே, அவர்கள் அவனைத் தடுக்காமல் போகும்படி வழிவிட்டார்கள்.

அவன் போன கொஞ்சநேரத்துக்கெல்லாம் குழந்தை அழத் தலைப்பட்டது. அதைக்கேட்டு அக்குழந்தையின் பெரிய தாய்மார் அங்கே போய்ப் பார்த்துச் சிங்காரத்தைக் காணமல் திடுக்கிட்டு, எங்குந்தேடி வாசற்காரர்களைக் கேட்டார்கள். சன்னியாசி வந்த செய்தியையும், அவன் கொண்டுபோன நாயின் செய்தியையும் அவர்கள் சொல்லவே, அப்படித்தானிருக்கலாமென்று ஊகித்து அதைப் பார்த்துக்கொண்டு வரும்படி நாலுபக்கமும் ஆட்களைத் துரத்தினார்கள். சன்னியாசியும் அகப்படவில்லை, நாயும் அகப்படவில்லை. ஐயோ! இந்த எளிய பெண்கள் ஆறுபேர்களும் என்னசெய்வார்கள் ! தங்கள் பர்த்தாக்களையும், தங்கையையும், அவள் பர்த்தாவையும் இனி காணப்போகிறதில்லையென்று நிராசையாய், அன்றுமுதல் அக்குழந்தையைச் செம்மையாய்ப் பாதுகாப்பதிலேயே கண்ணாயிருந்தார்கள்.

இப்படியே கொஞ்சக்காலஞ் சென்றது. அந்தக் குழந்தைக்குப் பதினன்கு வயதாயிற்று. அப்போது ஒருநாள் அப்பெண்கள் ஆதி தொடங்கித் தங்கள் கதையைச் சொல்லக்கேட்டு அந்தக் குமாரன், உடனே புறப்பட்டுப்போய்த் தன் தாய்தந்தையரையும், பெரிய தகப்பன்மாரையுந் தேடி அழைத்துக்கொண்டுவரப் போராவல்கொண்டான். அவன் தீர்மானத்தையறிந்து அப்பெண்கள் மிகவும் பயந்து; ' அப்பா ! நாங்கள் எங்கள் நாயகரையும், தங்கையையும், அவள் நாயகனையும் இழந்திருக்கிறோம். எங்களுக்கெல்லாம் நீ ஒருவனே ஆதாரமாயிருக்

கிறாய். நீயும் போய்விட்டால் நாங்கள் என்ன செய்வோம்!' என்று சொல்லித் தடுக்கமுயன்றார்கள். அதற்கு அவன், 'அம்மா! நீங்கள் அதைரியப்படவேண்டாம். நான் சீக்கிரத்தில் திரும்பிவருகிறேன்; கூடுமானால் அவர்களையும் அழைத்துக்கொண்டு வருவேன்' என்று சொல்லித் தேசயாத்திரையாய்ப் புறப்பட்டான். சில மாதம்வரையில் அவனுக்கு அவர்களைப்பற்றி ஒரு செய்தியும் அகப்படவில்லை.

அவன் வெகுநாள் வெகுதூரம் அலைந்து ஓய்ந்து நிராசையாய்ப் போனபின்பு, ஒருநாள் ஒரு தேசத்திற் சென்றான். அங்கே பெரிய கோபுரமுள்ள அரமனையும், அதின் சமீபத்தில் பூந்தோட்டக்காரன் குடிசையொன்றும் இருந்தன. அந்தக் குடிசையின் வழியாய்த் தேடிக் கொண்டுபோகையில், அந்த வீட்டுக்காரி இந்தச் சிறுவனை யழைத்து, 'அப்பா குழந்தாய்! நீ யார்? இந்தக் கொடிய இடத்திற்குத் துணிந்து வந்தாயே!' என்று கேட்டதற்கு, அவன், 'நான் ஒரு ராஜகுமாரன்; என் தகப்பன்மாரையும் தாயையும் தேடிக்கொண்டுவந்தேன்; அவர்களுக்கு ஒரு கேடுகெட்ட மாயாவி சூனியஞ்செய்துவிட்டான்' என்று சொல்லவே, அவள், 'இந்தத் தேசமும், இந்த அரமனையும் ஒரு மாயவாதியினுடையவை; அவன் மகா பராக்கிரமசாலி; யாராவது அவனுக்கு விரோதஞ் செய்வார்களானால் உடனே அவர்களை மரங்களாகவும் கற்களாகவும் செய்துவிடுவான்; இதோ அபாரமாய்த் தென்படும் கற்களும் மரங்களும் முன் ஒருகால் மனிதர்களாயிருந்தவை; இந்த மந்திரவாதிதான் இப்படிச் செய்துவிட்டான்; சில நாளைக்கு முன்னே இங்கே ராஜகுமாரன் ஒருவனும் பின்பு அவன் அண்ணன்மார் ஆறு பேரும் வந்தார்கள்; இவன் மாயத்தால் அவர்களெல்லாம் கற்களாகவும் மரங்களாகவுமானார்கள்; இதுமாத்திரமல்ல, ஒரு ராஜஸ்திரீயையுங் கொண்டுவந்திருக்கிறான்; அவள் அவனைக் கலியாணம் செய்து கொள்ளமாட்டேனென்றதனால் பன்னிரண்டு வருஷமாய் அவளைச் சிறைவைத்திருக்கிறான்' என்றாள். அந்தக் குமாரன் அதைக் கேட்கவே, அவர்கள்தான் தன்னுடைய பிதாக்களென்றெண்ணித் தான் வந்தகாரியத்தை அந்தத் தோட்டக்காரிக்குச் சொல்லி, அங்கேயே சிலநாளிருந்து அவர்கள் செய்தியை நன்றாய் விசாரிக்கக் கொஞ்சம் ஒத்தாசை செய்யும்படி அவளை வேண்டினான். அப்படியே ஆகட்டுமென்று அவள் வாக்குக்கொடுத்ததுமன்றி, இந்தச் சிறுவனைக் கண்டால் மந்திரவாதி இவனையும் கல்லாக மாற்றிவிடுவானென்று பயந்து, அவனை

மாறுவேஷந் தரிக்கச்சொன்னாள். அதற்கு அவன் சம்மதித்ததனால் அவனுக்குத் தன் பெண்போல வேஷம்போட்டுவைத்தாள்.

ஒருநாள் இந்த வேஷதாரிப்பெண் விளையாடிக்கொண்டிருக்கையில் அந்த மாயாவி கண்டு, 'நீ யார்?' என்று கேட்டதற்கு, அந்தப் பெண், 'நான் இந்தத் தோட்டக்காரி மகள்' என்று சொல்லவே, அவன், 'நீ மிகவும் சிறுபெண்ணாயும் அழகாயுமிருக்கிறாய்; நாளைய தினம் நான் கொடுக்கிற பூமுதலியவைகளை என் அரமனையிலிருக்கிற ஒரு சுந்தரிக்குக் கொண்டுபோய்க் கொடுக்க வரவேண்டும்' என்றான். அதைக்கேட்கவே ராஜகுமாரன் மிகவும் சந்தோஷமடைந்து உடனே அந்தச் செய்தியைத் தோட்டக்காரியண்டை போய்ச் சொன்னான். தான் மாறுவேஷம் பூண்டது தனக்கு மிகவும் ஆதரவாயிற்றென்றும், அந்த அரமனையிலிருப்பவள் தன் தாயாயிருப்பாளாயின் அவளைக் கண்டுபேசத் தருணம் வாய்த்ததென்றும் எண்ணியிருந்தான்.

இதிருக்க, முன் சிங்காரத்திற்குக் கலியாணகாலத்தில் அவள் புருஷன் அவளுக்கு ஒரு சிறிய பொன்மோதிரங் கொடுத்திருந்தான். அதில் அவள் பெயர் செதுக்கியிருந்தது; அம்மோதிரம் அவள் குழந்தையின் விரலுக்குச் சரியாயிருந்ததனால் அவன் விரலில் போட்டு வைத்தாள். அந்தச் சிறுவன் பெரியவனான பின்பு அவனுடைய பெரியதாய்மார் அம்மோதிரத்தைக் கொஞ்சம் பெரிதாக்கி அவனுக்குப் போட்டிருந்தார்கள். அது இப்போதும் அவன் கையிலேயே இருந்தது. 'இந்தக் கணையாழியை நீ கொண்டுபோகிற பூஞ்செண்டுகளுள் ஒன்றில் சுற்றி உன் தாய்கையிற் கொடுத்தால் அவளுக்கு உன்னிடத்தில் நன்றாய் நம்பிக்கையுண்டாகும்' என்று அந்த வீட்டுக்காரி புத்திசொல்லி யனுப்பினாள். ஆயினும் அது சுலபத்திற் செய்துமுடிக்கக் கூடாமற்போயிற்று. அந்த இராணிக்கு வேண்டியவர்கள் யாராவது இந்த வேஷதாரிப்பெண் மூலமாய்ச் செய்திசொல்லி அனுப்பப்போகிறார்களென்று எப்போதும் அவனைக் கவனமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவன் தினந்தோறும் பூமாலைகள் கொண்டுபோனாலும் அவன் போகிறதருணத்தில் அங்கே மாயாவியாவது அல்லது அவன் வேலைக்காரனாவது இருவரில் ஒருவனிருப்பான். ராஜகுமாரனும் எப்போ தருணம் வாய்க்கப்போகிறதென்று எதிர்பார்த்திருந்தான். இப்படியிருக்கையில் ஒருநாள் இவன்

இஷ்டம் கைகூடிற்று. ஒருவரும் இராத தருணம் பார்த்து அம்மோதிரத்தை ஒரு பூஞ்செண்டில் சுற்றி அவள் காலண்டை எறிந்தான். அது 'கணீல்' என்று ஓசைகேட்கவே, இதென்னவென்று இராணி அதை எடுத்துப்பார்த்தாள். அதற்குள் அந்த மோதிரம் இருந்தது. அதைக் காணவே தன் பிள்ளை இத்தனைநாளாய்ச் சொல்லிக்கொண்டிருந்த செய்தியெல்லாம் உண்மையென்று நம்பி அவள், 'இப்போது நான் செய்யவேண்டுவதென்ன? நான் இவனைக் கலியாணஞ்செய்து கொள்ளமாட்டேனென்றதனால் பன்னிரண்டு வருஷமாய் என்னைக் கடுஞ்சிறை செய்திருக்கிறான்; ஆயினும் என்னைத் தப்புவிக்கவேண்டுமென்று உனக்கு அபாயகரமான காரியமொன்றையும் நீ தேடவேண்டாம்' என்றாள்.

அந்தச் சிறுவன் மிகவும் புத்திசாலி. அவன் நன்றாய் ஆலோசித்து, 'என் அருமைத்தாயே! நீ பயப்படவேண்டாம்; என் தகப்பன்மார்கள் கற்களாக மாறியிருக்கிறார்களே; அவர்களை நாம் மீட்கவேண்டுமல்லவா; அதற்காக முதலில் இவனுடைய வல்லமை எவ்வளவு தூரம் ஓடுகிறதோ ஆராய்ந்தறியவேண்டும்; பன்னிரண்டு வருஷகாலமாய் ஒருநாளும் நீ இந்த மாயாவியோடு குளிர்ந்து பேசாமலிருந்ததனால் அவன் வழிக்கு வரவில்லை; இப்போ அவனுடன் கொஞ்சம் இனிப்பாய்ப் பேசு; "இத்தனைநாளாய் என் பத்தாவைப் பார்க்கலாமென்று எண்ணங்கொண்டிருந்தேன்; இனி எனக்கு அந்த ஆசையில்லை; இப்போ உன்னைக் கலியாணம் செய்துகொள்ள விருப்பம் உண்டாயிருக்கிறது" என்று சொல்லி, பின்பு அவனுடைய சக்திக்கு இருப்பிடமெது? அவன் என்றும் அழிவில்லாதவனா? அல்லது அழியத்தக்கவனா? என்று இவைகளையும் அறிய முயலவேண்டும்' என்று சொன்னான். அந்த ஆலோசனையைக் கேட்டுச் சிங்காரம் மறுநாள் அந்த மந்திரவாதியை அழைப்பித்து, முன் ஆலோசித்திருந்தபடியே தன் எண்ணங்களை அறிவித்தாள்.

அதைக்கேட்டு மாயவாதி மிகவும் சந்தோஷமடைந்து கூடிய சீக்கிரத்தில் விவாகம் செய்துகொள்ளும்படி வேண்டினான். அதற்கு அவள், 'கலியாணம் செய்துகொள்வதற்குமுன் எனக்குக் கொஞ்சம் சாவகாசங்கொடுக்கவேண்டும்; அதற்குள் உன்னோடு நன்றாய்ப் பழக்கஞ்செய்துகொள்ளுகிறேன்; வெகுநாளாய் விரோ

திகளாயிருந்தவர்களுக்கு நாளாவட்டத்திலேதான் சிநேகக்கட்டுப்பாடு உறுதிப்படும்; இப்போது நான் சில சங்கதிகளைக் கேட்க வேண்டியிருக்கிறது; நீ தேவதைகள்போல் ஒருநாளும் சாவில்லாமல் என்றும் பதினாறு வயதாயிருப்பவனா? அல்லது பிராணிகளுக்குள்ள துன்பங்கள் உனக்குமுண்டோ?' என்று கேட்டாள். அவன், 'அதை ஏன் நீ கேட்கிறாய்?' என்றதற்கு, அவள், 'நான் உனக்கு அகமுடையாளாகப் போவதினால் இச்செய்திகள் தெரிந்திருந்தால் உனக்கு ஏதாவது துன்பம் நேர்ந்தபோது கூடுமானால் அதைத் தடுக்கலாம்' என்றாள். அதைக் கேட்டு அவன், 'நான் மற்ற மனிதர்களைப்போலல்லவென்பது மெய்தான்; ஏனெனில் எனக்குச் சாவென்பது சமீபத்திலில்லை. இவ்விடத்திலிருந்து அநேகம் காத தூரத்துக்கு அப்பால் மனுஷ சஞ்சாரமில்லாத வனாந்தரமொன்றுண்டு; அந்தப் பெருங்காட்டின் நடுவே வட்டமாய்ப் பனைமரங்கள் அடர்ந்திருக்கின்றன; அந்தப் பனந்தோப்பின் நடுவே ஆறு சட்டிகள் ஒன்றின்மேலொன்றாய் நிரம்பத் தண்ணீரோடு அடுக்கியிருக்கின்றன; அவைகளுக்குக் கீழே சிறிய கூடு ஒன்று இருக்கின்றது; அந்தக் கூட்டில் சிறிய பச்சைக்கிளியொன்று உண்டு; அதனுயிர்தான் என்னுயிர்; அதைக் கொன்றுவிட்டால் நான் இறந்து போகவேண்டுவதுதான்; ஆயினும் அந்தக் கிளிக்குத் தீங்கு சம்பவிப்பதென்பது ஒருபோதும் நடவாதகாரியம். ஏனென்றால் முதலில் அவ்விடத்திற்கு மனிதர்போவதே அசாத்தியம்; மேலும் நான் அந்தப் பனந்தோப்பைச்சுற்றி அநேகம் பூதகணங்களைக் காவல்வைத்திருக்கிறேன்; எப்படிப்பட்டவன் போனாலும் அவைகள் கொன்றுவிடும்' என்றான்.

இச்செய்திகளையெல்லாம் சிங்காரம் உடனே தன் பிள்ளைக்குச் சொல்லிக் கடைசியில், 'அந்தக் கிளியை நாம் பிடிக்கலாமென்கிற ஆசையை விட்டுவிடு' என்றும் சொன்னாள். அதைக்கேட்டு அவன், 'அந்தக் கிளியைப் பிடியாவிட்டால் உங்களையெல்லாம் விடுவிப்பதெப்படி? பயப்படாதே; துரிதமாய்த் திரும்பிவருகிறேன்; நீமாத்திரம் இந்த மாயாவிக்குப் பற்பல சாக்குபோக்குக்கள் சொல்லி ஆசைகாட்டிக்கொண்டிரு; கலியாணம் செய்துகொள்ளத் தாமதிப்பதற்குக் காரணமின்னதென்று அவன் தெரிந்துகொள்வதற்குமுன்னமே நான் இங்கேவந்து சேருவேன்' என்று சொல்லிப்போனான்.

அவன் வெகுதூரம் யாத்திரைசெய்தபிறகு ஆயாசத்தினால் ஒரு மரத்தின்கீழே படுத்துத் தூங்கிவிட்டான். தூங்குகையில் 'சலசல'

வென்று ஒரு சத்தங்கேட்க விழித்துக்கொண்டு சுற்றிப்பார்த்தான். ஒரு பெரும்பாம்பு தான் படுத்திருக்கும் மரத்தின்மேலே கட்டியிருந்த ஒரு கழுகுக்கூட்டுக்காக ஏறிப்போயிற்று. அந்தக் கூட்டிலே இரண்டு கழுகுக்குஞ்சுகள் இருந்தன. அவைகளுக்கு நேரிடப்போவதாயிருந்த அபாயத்தை ராஜகுமாரன் கண்டு தன் கத்தியையுருவி அந்தப் பாம்பைக் கொன்முன். அச்சமயத்தில் ஆகாசத்தில் ஒரு இரைச்சல் கேட்டது. உடனே அந்தக் குஞ்சுகளுக்காக இரை தேடப்போயிருந்த இரண்டு பெரிய கழுகுகள் வந்தன. அவை அங்கே செத்துக்கிடந்த பாம்பையும், அதன் சமீபத்திலிருந்த ராஜகுமாரனேயும் பார்த்துச் சந்தோஷமடைந்தன. அவைகளுள் பெட்டைக்கழுகு அவனை நோக்கி, 'என் அருமைக் குழந்தாய்! இந்தக் கொடிய பாம்பு வெகுகாலமாய் எங்கள் குஞ்சுகளையெல்லாந் தின்று கொண்டிருந்தது; இப்போது இந்தக் குஞ்சுகளை நீ பிழைப்பித்தாய்; ஆதலால் உனக்கு எப்போது எந்தக் காரியமாகவேண்டியிருந்தாலும் எங்களுக்குச் சொல்லியனுப்பினல் உடனே வந்து ஒத்தாசைசெய்வோம்; இந்தக் குஞ்சுகள் உன்னுலேயே பிழைத்தன வாகையால் இவைகளை நீயே உனக்குச் சேவகர்களாக வைத்துக்கொள்' என்றது.

அதைக்கேட்கவே ராஜகுமாரன் பேரானந்தமடைந்து, அவைகளோடு தான் வந்த செய்தியைச் சொன்னன். அந்தச் சிறிய கழுகுகள் அவன் கருத்தை நிறைவேற்றுவதற்காகத் தமது சிறகுகளை விரிக்க, அவன் அவற்றின்மேலேறிக்கொண்டு அந்தக் காட்டிடையே வெகுதூரஞ்சென்று அங்கே வாட்டமாய்ப் பனங்காடு ஒன்று இருப்பதுகண்டு, அதன் நடுவேபோய்ப் பார்த்தான். தண்ணீர் நிரப்பி ஆறுசட்டிகள் வைத்திருந்தன. அப்போ நல்ல நடுப்பகல்; தாகமோ அதிக உக்கிரமாயிருந்தது. அந்தத் தோப்பைச் சுற்றிக் காவலாயிருந்த பூதகணங்களெல்லாம் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தன. அங்கிருந்த பூதகணங்கள் இத்தனையென்று கணக்கில்லை. அளவற்றவைகள் அதைக் காத்துக்கொண்டிருந்தன. அவைகளைக் கடந்துபோக எவனுலுமாகாது. அவையெல்லாம் அயர்ந்திருக்கிற தருணம்பார்த்து ராஜகுமாரன் கீழேயிறங்கி அங்கிருந்த சட்டிகளை உதைத்துத் தள்ளி, அடியிலிருந்த கிளியைப் பிடித்துப் பையில்போட்டுக் கட்டிக்கொண்டு ஆகாயத்தில் கிளம்பிவிட்டான். பிறகு அந்தப் பூதங்கள் விழித்துக்கொண்டு தங்கள் நிதியைக்காணுமல் ஊளையிடத்தொடங்கின.

பின்பு அந்தச் சிறு கழுகுகள் முன் தாம் போனவழியே வெகு தூரம் பறந்துவந்து தாங்கள் இருந்த மரத்தண்டை ராஜகுமாரனைக் கொண்டுபோய்ச் சேர்த்தன. ராஜகுமாரன் அங்கிருந்த பெருங் கழுகுகளைக் கண்டு, 'உங்கள் குஞ்சுகளை நீங்களே வைத்துக்கொள் ளுங்கள்; இப்போது இவை எனக்குப் பேருதவிசெய்தன. எனக்கு எக்காலத்தில் ஒத்தாசைவேண்டுமானாலும் இங்கே வருகிறேன்' என்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு அந்த மந்திரவாதி இருப்பிடம் வந்துசேர்ந்து, அரமனை வாயிலண்டை அந்தக் கிளியைவைத்து விளை யாடிக்கொண்டிருந்தான். மந்திரவாதி அதைக் கண்டு சீக்கிரமாய் அங்கே வந்து, 'என் குழந்தாய்! இந்தக் கிளி உனக்கு எங்கே கிடைத்தது? இதை எனக்குக் கொடு' என்று வெகு நயமாய் வேண்டி ஞன். அந்தக் குமாரன், 'ஓ! நான் மாட்டேன்; என் கிளியை நான் ஒருவருக்குங் கொடுப்பதில்லை; இது எனக்குப் பெருஞ்செல்வமா யிற்றே; இதை நான் வெகுநாளாய் வைத்துக்கொண்டிருக்கிறேன்' என்று சொல்ல, மாயாவி, 'ஆம், அது மெய்தான். நெடுநாளாய் ஆதரித்துவைத்திருக்கிற பொருளைக் கொடுத்துவிட யாருக்காகிலும் மனம்வருமா? அப்பா குழந்தாய்! இங்கேவா, இதை எவ்வளவுக்கு விற்பாய்?' என்று கேட்டான். அதற்குச் சிறுவன், 'ஐயா! நான் இதை ஒருபோதும் விற்கப்போகிறதில்லை' என்ருன்.

அதைக் கேட்டு மாயாவி பயந்து, 'அப்பா! உனக்கு எதுவேண்டு மானாலுங் கேள், கொடுக்கிறேன்; அந்தக் கிளியைமாத்திரம் எனக் குக் கொடு' என்று வேண்ட, அந்தக் குமாரன், 'நீ முன் ஏழு ராஜ குமாரர்களைக் கல்லாகவும் மரமாகவும் செய்திருக்கிருயே; அவர்களை மீட்டுவிட்டால் தருவேனென்று சொல்லிமுடிவதற்கு முன்னமே, 'இதோ ஆயிற்று அப்பனே' என்று தன் செங்கோலைத் தட்டினன். அவர்களுக்கு முன்னுருவம் வந்துவிட்டது. மறுபடியும் அவன், 'என் கிளியைமாத்திரம் கொடுத்துவிடு' என்று வேண்டினன். அதற்கு அந்தச் சிறுவன், 'அவ்வளவு சுறுக்காய்க் கொடுத்துவிடுவேனே? முதலில் நீ இங்கே சிறைசெய்திருக்கிற யாவரையும் பிழைப்பூட்டும்படி கேட்க வேண்டுவதல்லவோ எனக்குப் பெரியகாரியம்' என்ருன். அதைக் கேட்டு மந்திரவாதி, 'என் கிளியைக் கொடு' என்று பரிதாபத்தோடு வேண்டினபடியே தன் கோலைச் சுழற்றினன். உடனே அங்கிருந்த வையெல்லாம் பிழைத்துவிட்டன. கற்களும் பாறைகளும் மரங்களு

மாயிருந்தவை யெல்லாம் ராஜாக்களாகவும் பிரபுக்களாகவும் சர்தார்களாகவும் பலவித ஆடையாபரணங்களோடு அநேக பரிவாரங்கள் சூழப் பல வாகனங்களின்மேல் நின்றபடியே எழுந்தன.

திரும்பவும் மாயாவி, 'என் கிளியைக் கொடுத்துவிடு குழந்தாய்!' என்று வேண்டினன். அப்போது அந்தச் சிறுவன் கிளியைக் கையில் பிடித்துக்கொண்டு அதின் ஒரு பக்கத்துச் சிறகைப் பிய்த்தெறிந்தான். மாயாவியின் வலதுகை கீழே விழுந்துபோயிற்று; மாயாவி மறுபடியும் தன் இடதுகை நீட்டிக் கிளியைக் கொடுவென்று புலம்பினன். அவன் மற்றொரு சிறகையும் பிய்த்துப்போட்டான். மாயாவியின் இடதுகையும் வீழ்ந்துபோயிற்று. மறுபடி முழங்காலிட்டுக் கிளியைக் கொடுக்கும்படி வேண்டினன். அந்தக் குமாரன் கிளியின் வலதுகாலைப் பிடுங்கினன்; அவனுக்கு வலதுகால் போய்விட்டது. இடதுகாலைப் பிடுங்கவே மாயாவிக்கு அதுவும் போய்விட்டது.

இப்போது அவனுக்கு அவயவங்கள் ஒன்றுமில்லாத முண்டமும் தலையுந் தவிர வேறொன்றுமில்லை. இன்னமும் அவன் தன் கண்களைச் சுழற்றிக் குறிப்புக்காட்டிக் கிளியைக்கொடுக்க வேண்டினன். அதற்கு அந்த ராஜகுமாரன், 'என் கிளியை நீ சுகமாய் எடுத்துக் கொள்' என்று சொல்லி அதின் கழுத்தைத் திருகி அவன்மேல் எறிந்தான். அவனும் தலை தெறித்துவிழுந்து இறந்துபோனன்.

இப்பொழுது உலகத்திற்கு என்ன சந்தோஷமுண்டாயிற்று பாருங்கள்! அந்த எழு ராஜாக்களும், அந்தச் சிறுவனும் அரமனைக்குச்சென்று சிங்காரத்தை அழைத்துக்கொண்டு சுதேசம்போய்ச் சுகமாய் வாழ்ந்திருந்தார்கள். மற்றவர்களும் ஆனந்தமடைந்தவர்களாய் அவரவர் தேசத்துக்குச் சென்றார்கள்.

## 2-வது ஒரு வினோதக்கதை

ஒருகால் ஒரு தேசத்தில் ஒரு அரசனும் அரசியுமிருந்தனர். அவர்கள் வெகுநாள் சந்தானமில்லாமல் விசனமடைந்திருந்தார்கள். அவர்கள் அரமனையிலிருந்த ஒரு நாயும் அப்படியே அநேகநாள் குட்டி போடவேயில்லை. இப்படியிருக்கையில் சிலநாளைக்குப் பின் அவ்வராசிக்குப் பிள்ளைகள் பிறந்தன; அக்காலத்தில் அவர்கள் அரமனை நாயும் குட்டிபோட்டது. விதிவசத்தால் இராணியின் இரண்டு பிள்ளைகள் இரண்டு நாய்க்குட்டிகளாகவும், நாயின் குட்டிகளிரண்டும் சுந்தரமான இரண்டு ராஜகன்னிகைகளாகவு மிருந்தன. இதென்ன துரதிர்ஷ்டம் பாருங்கள்! இதைக்காணவே இராணிக்கு மிகவும் மனத்துயரமுண்டாயிற்று. அதனால் அவள் ஒவ்வொரு வேளைகளில் அந்த நாய் இரை தேடப்போயிருக்கிற தருணம் பார்த்துத் தன் குழந்தைகளான நாய்க்குட்டிகளை அந்த நாய்க்குழியில் கொண்டுபோய் விடுவதும், அங்கிருக்கும் கன்னிகைகளைத் தன் அரமனைக்கு எடுத்துக்கொண்டு வருவதுமாயிருந்தாள். இச்செய்தி தெரிந்து அந்த நாய் மிக்க விசனமடைந்து, இவர்கள் என் குழந்தைகளை ஒருபோதும் விடார்கள்; இங்கே விட்டு வைத்தால் இவைகளுக்கு உயிர்கூடத் தப்புமோ தப்பாதோ? இவ்விடத்தைவிட்டுக் காட்டுக்குப் போவதே நலமென்றெண்ணி, ஒருநாள் இராத்திரி அவ்விரண்டு பெண்களையும் வாயிலே கவ்விக்கொண்டு ஒரு காட்டிற் சென்று. அங்கே ஒரு ஆற்றங்கரையில் ஒரு கற்குகைக்குள் இடமேற்படுத்தி அதில் அப்பெண்களை விட்டுவைத்தது. தினந்தோறும் பக்கத்துப் பட்டணங்களுக்கோடி அங்கங்கே தனக்கு அகப்படுகிற உணவுகளைக் கொண்டுவந்து அப்பெண்களுக்குக் கொடுக்கும். ஏதாவது

ஆடையாபரணங்கள் அகப்பட்டாலும் அவைகளையும் கொண்டுவந்து கொடுக்கும். இப்படியே கொஞ்சக்காலம் வரையில் நடந்துவந்தது.

இப்படியிருக்கையில் ஒருநாள், அந்த நாய் ஊணுக்காக வெளியே போயிருக்கையில், அந்தக் காட்டிற்கு இரண்டு ராஜகுமாரர்கள் வேட்டையாட வந்தார்கள். நெடுநேரம் வேட்டையாடியும் ஒன்றும் அகப்படாமல் வெயிலாற் களைத்து தாகத்தால் வருந்தி ஒரு மேட்டுத்தாக்கிலிருந்த மரத்தின்கீழ் வந்து உட்கார்ந்து தண்ணீர் தேடிக்கொண்டு வரும்படி தம் சேவகர்களை நாற்புறமுமனுப்ப, அவர்கள் எங்குந்தேடித் தண்ணீர் அகப்படாமல் வந்து சேர்ந்தார்கள். கடைசியில் ஒரு வேட்டைநாய் உடம்பெல்லாம் சேறு பூசிக்கொண்டு அம்மரத்தண்டை வந்து நின்றது. ராஜகுமாரன் அது வந்திருப்பதைப்பார்த்து, ' இதோ இந்த நாயின் உடம்பெல்லாம் சேறுயிருக்கின்றது ; இது எங்கேயோ தண்ணீரைக் கண்டுபிடித்திருக்கவேண்டும் ; அதன் பின்னேயே போய்ப் பாருங்கள் ' என்று கட்டளையிட்டான். அப்படியே அவர்கள் அந்த நாயைப் பின்தொடர்ந்து போனார்கள். அது அவர்களை அந்த நாய்ப் பெண்கள் இரண்டும் வாசம் பண்ணுகிற குகையண்டை கொண்டு போய்விட்டது. இவர்களைப் பார்த்தவுடன் அங்கே விளையாடிக் கொண்டிருந்த இரண்டு பெண்களும் பயந்து குகைக்குள் ஓடிப்போனார்கள். அந்த வேலைக்காரர்கள் அங்கே ஓடுகிற காற்றையும் இந்த விநோதத்தையும் பார்த்துக்கொண்டு ராஜகுமாரர்களண்டைபோய், ' இதோ கொஞ்சந்தூரத்தில் தெளிந்து அதி மதுரமான தண்ணீருள்ள நதியொன்றோடக் கண்டோம் ; அங்கே இன்னொரு விசேஷமுண்டு ; அந்த நதிக்கரையில் ஒரு குகையில் சிறந்த ஆடையாபரணங்கள் அணிந்துகொண்டு இரண்டு கன்னிகைகள் இருக்கிறார்கள் ; அப்படிப்பட்ட அழகுள்ள பெண்களை நாங்கள் இதுவரையில் எங்குங் கண்டதில்லை. எங்களைப் பார்த்தவுடன் அவர்கள் பயந்து உள்ளேபோய்ப் புகுந்து கொண்டார்கள் ' என்று சொல்ல, அதைக் கேட்டவுடன் ராஜபுத்திரர்கள் அதிசயப்பட்டு, அவ்விடத்திற்குத் தாங்களுஞ்சென்று அப்பெண்களைப் பார்த்துப் பிரமித்து, அவ்வழகிகளைத் தங்கள் பட்டணத்திற்கு வந்து தங்களைக் கலியாணம் செய்துகொள்ளும்படி வேண்டிக்கொண்டார்கள். அப்பெண்கள் இவர்களைக்கண்டு நடுநடுங்கிப் பேசாமலிருக்க, ராஜகுமாரர்களிருவரும் வெகு இனிப்பாய் மனங்களிக்கும்படி நெடுநேரம் பேசி வேண்டிக்கொண்டதனால் அப்பெண்கள் அவர்கள் வேண்

டுகோளுக் கிசைந்து அவர்களோடு பட்டணஞ்சென்றார்கள். அவர்களுள் மூத்தகுமாரன் மூத்தமகளையும், இளையவன் இளையமகளையும் கலியாணஞ்செய்துகொண்டு சுகமாயிருந்தார்கள்.

இது இப்படியிருக்க, இரைதேடப்போயிருந்த நாய் திரும்பிவந்து பார்த்துத் தன் மக்களைக் காணுமல் மிகவும் மனவருத்தமடைந்து அவர்களை நாலுபக்கமும் தேடத்தலைப்பட்டது. பன்னிரண்டு வருஷகாலம் ஒரு நிமிஷங்கூட நின்றவிடத்தில் நில்லாமல் சீமை முழுவதும் தேடிக்கொண்டு வந்தது. அந்தப் பெண்கள் எங்கும் அகப்படவில்லை. கடைசியில் ஒருநாள் அந்த ராஜகுமாரர்களிருக்கின்ற பட்டணத்திற்கு வந்தது, அங்கே உப்பரிகைமேல் நின்று சாளரத்தின் வழியாய்ப் பார்த்துக்கொண்டிருந்த ராஜபத்தினி தன் தாயான நாய் அந்த வீதிவழியாய்ப் போகக் கண்டு இரக்கமுற்று, சரேலென்று உப்பரிகையை விட்டிறங்கித் தெருவிலோடிவந்து அந்த நாயை எடுத்து அணைத்துக்கொண்டு, தன் மாளிகைக்குக் கொண்டுபோய் அதற்கு வேண்டிய உபசாரங்களைச் செய்து ஒரு மெத்தைமேல் படுக்கவிட்டாள். அந்த நாய் தன் மூத்தமகள் செய்த ஆதரணைகளைக்கண்டு மிகவும் சந்தோஷமடைந்து, 'குழந்தாய்! உனக்கு என்னிடத்திலிருக்கிற விசுவாசத்தை நான் என்னவென்று சொல்லுவேன்! உன்னைப்பார்த்து எனக்கு வெகு சந்தோஷமாயிற்று; ஆயினும் இப்போது எனக்கு இங்கே நிற்பதற்கு அவகாசமில்லை; முன்னே உன் தங்கையைப்போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்' என்று சொல்ல, அதற்கு இராணி, 'தாயே! வேண்டாம், இன்றையதினம் இங்கேயே இளைப்பாறிக்கொண்டிரு; நாளையதினம் அவளண்டை அனுப்புகிறேன்; அதற்குள் அவளே உன்னைப் பாக்கவருவாள்' என்று ஆதரவோடு சொல்ல, அந்த நாய் அதைக் கேளாமல் தன் இளைய மகளைப்பார்க்க ஓடிற்று. அந்த நாய் தன் வீட்டுவாயிலில் நுழைவதை உப்பரிகைமேலிருந்து பார்த்துக்கொண்டிருந்த அப்பெண் இது நமது தாய்போலக் காண்கிறதே; இந்த அவலக்ஷணமான அற்ப ஜந்து நமது தாயென்று நம்முடைய புருஷனுக்குத் தெரிந்தால் என்ன நினைப்பார் என்று எண்ணி, அதை உள்ளே வரவொட்டாமல் அதின் தலைமேல் கல்லெடுத்துப்போட்டுத் துரத்திவிடும்படி தன் சேவகர்களுக்குக் கட்டளையிட்டாள். அவர்களும் அப்படியே அக்கட்டளையை நிறைவேற்றினார்கள். அவர்கள் போட்ட பாறை தன் மண்டையில் வீழ்ந்து நன்றாய்க் காயம்படவே, அந்த நாய் திரும்பி வெகு வருத்தத்தோடு தன் பெரிய

பெண் வீட்டிற்கு வந்தது. அவள் அது தெருவிலே வருந்தி ஓடிவரு வதை மேலேயிருந்து பார்த்து உடனே இறங்கிவந்து, அதைத் தன் அர மனைக்கு எடுத்துக்கொண்டுபோய், 'என்னுயிர்த்தாயே! நீ ஏன் என் பேச்சைக்கேளாமல் இந்த வீட்டைவிட்டு வெளியே போனாய்?' என்று சொல்லி, மிகவும் விசனமடைந்து அது பிழைக்கும்படி தன்னால் கூடியவரையில் சிகிச்சைசெய்தாள். அவையொன்றும் பயன்படாமல் கடைசியாய் அந்த எளிய நாய் இறந்துபோயிற்று. தன் தாயான நாய் இறந்துபோகவே இராணி ஒன்றுந் தோன்றாமல், ஒரு அற்ப நாய் தன் அரமனையில் செத்துக்கிடக்கிறதென்று ராஜாவுக்குத் தெரிந்தால் என்ன நினைப்பாரென்று எண்ணி அவர் ஒருபோதும் எட்டிப்பாராத ஒரு அறையில் கொண்டுவந்து வைத்து ஒரு கூடையைக் கவிழ்த்து மூடி வைத்தாள். மிகவும் சிறப்பாய்க் கொண்டுபோய் அதைப் புதைக்க வேண்டுமென்பது அவள் கொண்ட கருத்து.

அன்றையதினம் வழக்கப்படி அரசன் தன் நாயகியைப் பார்க்க அந்தப்புரம் வருகையில், தற்செயலாய் நாய்ப்பிணம் வைத்து மூடி யிருந்த இருட்டறைக்குள் சென்றான். அங்கே ஒரு கூடை கவிழ்த் திருக்கவே அதைத் திறந்து அங்கிருப்பது இன்னதென்று தெளிவாய்த் தெரியாமையால் விளக்குக் கொண்டுவரவேண்டுமென்று உத்தரவு செய் தான். இப்போது அங்கிருந்தது என்ன தெரியுமா? விளக்குக் கொண்டுவந்து பார்க்கையில், வச்சிரம், வைடூரியம், மாகதம் முதலிய நவரத்தினங்களிழைத்த ஒரு பெரிய சுவர்ணநாயிருந்தது. அரசன் அதைப்பார்த்து அதிசயித்துத் தன் மனையாளை அழைத்து, உனக்கு இந்த அற்புதநாய் எங்கே கிடைத்தது என்று கேட்டான். அவள் ஓடி வந்து அங்கே சுவர்ணமயமாய் விலையுயர்ந்த நாய்ப் பிரதிமையொன்று இருக்கக்கண்டு திகைத்துநின்றாள். அப்போது அவள் அதற்கு என்ன உத்தரம் சொல்லலாம்? தன் நாயகனோடு உள்ளதை உள்ளபடி சொல் லத்துணியவில்லை. சற்றுநேரம் நிதானித்துப்பார்த்து, 'ஓ! ஓ! இதுவா! இதை என் தாய்தந்தையர்கள் எனக்குப்பரிசாய் அனுப்பினார்கள்' என்று ஒரு பொய்க்கதை கட்டிச்சொன்னாள்.

அவள் தன் கணவனோடு உண்மையையுரையாமையால் உண்டான வருத்தத்தை இதோ பாருங்கள். அதைக்கேட்டு அரசன் ஆச்சரிய மடைந்து, 'ஆ! அப்படியா! என் ராஜ்யமெல்லாங்கூட இவ்வொன் றுக்கு ஈடாகாதே! இப்படிப்பட்ட விலையில்லாப் பொருள்களை உனக்

குப் பரிசாய் அனுப்புகிறவர்கள் எவ்வளவு செல்வமுடையவர்களா யிருக்கவேண்டும்! அவர்களைப்பற்றி நீ என்னோடு இதுவரையில் பிரஸ் தாபமே செய்யாமலிருப்பானேன்? அவர்கள் அரசாட்சி எங்கே?' என்று கேட்டான். இப்போது அவள் செய்யவேண்டுவதென்ன? வேறொரு பொய்க்கதை கட்டியன்றோ முன்பொய்யை மறைக்கவேண் டும். 'ஒரு காட்டில் வசிக்கிறார்கள்' என்றாள். அதுகேட்டு அரசன், 'அப்படியா! ஆனால் நான் அவர்களைப் பார்க்கவேண்டும். அவர்க ளிருக்கும் இடத்திற்கு என்னை அழைத்துக்கொண்டுபோ' என்று சொல்ல, அவன் மனையாள், 'என்ன பொய்க்கதை சொல்லுகிறேன் பார்த்தையா! நான் சொல்வது பொய்யென்று இவர்க்குத் தெரிந்து போமானால் இவர் என்ன நினைப்பார்! உடனே தலையை வாங்கி விடுவாரேயொழிய வேறில்லையே' என்று மனதில் எண்ணிக்கொண்டு, 'அப்படியே ஆகட்டும்; முதலில் பல்லக்குக்கொடுத்து என்னை அனுப்பு வீர்களானால் தாங்கள் வருவதாக அவர்களுடன் முன்னதாய்ச் சொல்லி வருகிறேன்' என்றாள். தற்கொலைசெய்துகொண்டு தான் இவ்வருத் தத்தை நீக்கிக்கொள்ளவேண்டுமென்று அவள் உள்ளே நினைத்திருந் தாள்.

அவள் கேட்டுக்கொண்டபடியே அரசன் அவளைப் பிறந்தகத்திற்கு அனுப்பினான். அவள் நகரத்தைவிட்டுக் காடுகளின்வழியாய் வெகு நாள் யாத்திரைசெய்தபிறகு, ஒருநாள் ஒரு காட்டில் ஒரு புற்றின்மேல் ஒரு பாம்பு வாய்திறந்துகொண்டு படுத்திருக்கக்கண்டு, நாம் அத னண்டை போய் அதின் வாயில் விரலைவைத்தால் கடித்துவிடும், இறந்துபோகலாமென்று ஆலோசித்து, நான் கொஞ்சநேரத்தில் வருகி றேன், இங்கேயே காத்திருங்கள் என்று தன் வேலையாட்களுக்குக் கட் டளையிட்டு, பல்லக்கை விட்டிறங்கிப்போய் அந்தப் பாம்பின் வாயிலே விரலையிட்டாள். அப்போது தொண்டையில் ஒருமுள் மாட்டிக் கொண்டு அந்தப் பாம்பு மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருந்தது. இவள்போய் விரலை வாயிலிடவே, அந்த முள் வெளியே வந்துவிட் டது. அதனால் அந்தப் பாம்பு நிரம்பவும் சுகமடைந்து, அவளைப் பார்த்து, 'பெண்ணே, என்னருமைக் குழந்தாய்! நீ இப்போது எனக் குப் பேருதவிசெய்தாய்; உனக்குப் பிரதியுபகாரம் நான் என்ன செய்யமாட்டுவேன்' என்று சொல்ல, அவள் ஆதிதொடங்கித் தன் கதைகளைச் சொல்லித் தான் இறந்துபோகும்படி தன்னைக் கடிக்க

வேண்டினள். அதுகேட்டு அந்தச் சேஷன், 'நீ இவ்வாறு அரசனோடு பொய்க்கதை சொன்னது மிகவும் பிசகானகாரியம்; ஆயினும் இப்போது மகோபகாரஞ்செய்ததனால் நீ எனக்கு உயிர்த்தோழியாய் விட்டாய்; ஆதலால் இந்த வருத்தத்தினின்றும் நான் உன்னைக் கை தூக்கிவிடுகிறேன்; உன் நாயகனை இங்கே அழைத்துவா; உன்னிடத்தில் மிகவும் அன்பும் ஆதாவுமுள்ளவர்களாய்த் தாய்தந்தையர்களை நான் இங்கே ஏற்படுத்திவைக்கிறேன்' என்று சொல்ல, அந்த இராணி பேரானந்தமடைந்து பட்டணம்போய், தன் மாதாபிதாக்களைப் பார்க்க வரும்படி அரசனை அவ்விடத்திற்கு அழைத்துக்கொண்டுவந்தாள்.

முன் அந்த நாகமிருந்தவிடம் இப்போது அவர்கள் போய்ப் பார்க்கையில் எவ்வாறிருந்தது அறிவீர்களா? அந்தப் பெருங்காடு இருபத்தினன்கு சதுரமைல் அளவுள்ள ஒரு நகரமாயிருந்தது. அந்நகரமெங்கும் சிங்காரத்தோட்டங்களும், துரவுகளும், ஏரிகளும், குளங்களுமாய் அழகுமிகுந்திருந்தது. அப்பட்டணத்திலேற்றிய விளக்குகள் சுற்றிப் பதின்காதவழிக்குப் பிரகாசித்துக்கொண்டிருந்தன. அப்பட்டணம் முழுதும் பொன்னால் மதிலெடுத்து நவரத்தினங்களாற் சித்திரிக்கப்பட்டிருந்தது. அங்கே வாயில்கள்தோறும் அநேகம் சேவகர்கள் சிறந்த உடுப்புக்களுடுத்துக் காவல்காத்துக்கொண்டிருந்தார்கள். அப்பட்டணத்தினடுவே ஒரு உயர்ந்த மாளிகையிலே நவரத்தின சிங்காசனத்தில் அரசனும் அரசியும் வீற்றிருந்தார்கள். அவர்கள் இந்த ராஜனைக் கண்டவுடனே தங்கள் மருமகனைக் கண்டதுபோல அவனை மேலான மரியாதைகளோடு வரவழைத்து அவனுக்குச் சகலவித உபசாரங்களும் செய்து, ஐந்தாறுமாதகாலம் பாட்டு கூத்து விருந்து முதலியவைகளோடு வெகு விலாசமாய்த் தங்களண்டையே வைத்திருந்து, கடைசியில் பலவித வரிசைகளோடு அவனை அவன் பட்டணத்திற்கு அனுப்பினர்கள். அவ்விடத்தைவிட்டுப் புறப்படுவதற்குச் சற்றுமுன்னே அந்த இராணி தன்னுயிர்த்தோழனை சர்ப்பத்தண்டைபோய், 'என் வருத்தத்தைத் தணிப்பதற்காக நீ செய்த ஜாலவித்தையைப் பார்த்து எனக்கு வெகு சந்தோஷமாயிற்று; ஆனலொன்று, இப்போது என் கணவன் இவ்விடத்தில் நடந்த உபசாரங்களால் மிகவும் மனக்களிப்படைந்திருக்கிறர்; அவசியம் இன்னெருதடவை இவ்விடத்திற்கு வர விருப்பங்கொள்வார்; அப்போது வந்துபார்க்கையில் இங்கே ஒன்றுமில்லாமற்போனல் என்மேல் மிகவுங் கோபங்கொள்வாரே' என்று கேட்க,

அதற்கு அவளிடத்தில் மிகவும் அன்புள்ள அந்தப் பாம்பானது, ‘குழந்தாய்! நீ அஞ்சவேண்டாம். இவ்விடம்விட்டுச் சுமார் இரண்டு காத தூரம் போனபின்பு திரும்பிப் பார்த்தாயானால் உனக்குத் தெரிய வரும்’ என்று சொல்லி விடைகொடுத்தது. அப்படியே அவர்கள் புறப்பட்டுப்போனார்கள். இருபத்திநான்குமைல் தூரம் போனபிறகு திரும்பிப்பார்க்கையில் அந்நகரமிருந்தவிடத்தில் ஆகாயமளாவித் தீபற்றி யெரியக்கண்டார்கள். அரசன் அதைப்பார்த்து விசனமடைந்து, இரண்டொருவர் தப்பிப் பிழைத்தவர்களுக்காவது தான் கூடியவரையில் உதவிசெய்யலாமென்று திரும்பி அவ்விடஞ்சென்றான். அவன் போய்ப்பார்க்கையில் எல்லாம் எரிந்துபோய்க்கிடந்தன ; ஒரு பருக்காங் கற்கூட அவன் கண்ணுக்குத் தென்படவில்லை. முன் அவ்வளவு சிறப்புற்றிருந்த தன் மாமி மாமன்மார்களுக்கு இப்படிப்பட்ட விதி நேர்ந்ததற்காகத் தீராத்துயரமடைந்து திரும்பிப் பட்டணம் வந்து சேர்ந்தான்.

அவ்வரசன் இவ்வளவு விசேஷமான பரிசுபெற்றுவந்ததை அவன் தம்பி கண்டு ஆச்சரியமடைந்து, இவையெல்லாம் உமக்கு எங்கே கிடைத்தனவென்று கேட்க, அவன் இவையெல்லாம் என் மாமிவீட்டு வரிசையென்றான். அதைக் கேட்டவுடனே அவன் மிகவும் பேராசை கொண்டவனாய்த் தன் மனைவியண்டைபோய், ‘நீ என் இதுவரையில் உன் தாய்தந்தையர்களைப்பற்றி என்னோடு ஒன்றுஞ்சொன்னதில்லை ; உன் உடன்பிறந்தாளைப்போல நீயும் என் என்னை அவர்களிடம் அழைத்துக்கொண்டுபோகக் கூடாது? என் அண்ணனைப்போல் நானும் விசேஷமாய்ப் பரிசுபெற்றுவரமாட்டேனோ?’ என்று கேட்டான். அவன் மனையாள் அதைக்கேட்டு இதென்னவென்று அதிசயித்துத் தன் சகோதரியிடம் வந்து, ‘இவ்விலையில்லாப் பொருள்களெல்லாம் நீ எவ்வகையாய்ச் சம்பாதித்தாய்?’ என, அதற்கு அந்த இராணி, ‘நீ என் முகத்துக்கு எதிரில் நில்லாதே, அப்புறம்போ ; நான் உன்னுடன் பேசமாட்டேன் ; நமது தாயைக்கொன்ற கொடியவளல்லவா நீ’ என்று கடுஞ்சொல்லாய் அதட்டி, பிறகு நடந்ததை யெல்லாம் ஆதியோடந்தமாய்ச் சொன்னாள். அதுகேட்டு அந்தச் சிறுபெண், ‘நானும் அப்பாம்பைப்போய்க் கண்டு அதினின்றும் பரிசு பெறக் கூடுமாவென்றதற்கு, அவள், ‘என்னைக் கேட்பானேன்? உனக்கு இஷ்டமிருந்தால் போகலாம்’ என்று சொன்னாள்.

அதைக்கேட்டு அச்சிறுமி அங்கிருந்து வந்து, தான் முன்னதாய்ப் போய் இச்செய்தியைத் தன் தாய்தந்தையர்களுக்குத் தெரிவித்து வருவதாய்த் தன் கணவனோடு சொல்லிச் சிவிகையிலேறிக்கொண்டு தன் தமக்கை சொன்னவிடம்போய்ச் சேர்ந்து அங்கே அந்தப் புற்றிலே பாம்பிருக்கக்கண்டு அதின் வாயில் விரலையிட்டாள். பாம்பு கடித்தது; விஷந்தீண்டி உடனே இறந்துபோனாள்.

# 3-வது ஜவந்தியம்மாள் கதை

நெடுநாளைக்கு முன்னே அங்கதேசத்தில் சிங்கராசன் என்னும் அரசனொருவன் செங்கோல் செலுத்திவந்தான். அவனுக்கு ஒரே மகன். அந்தப் பிள்ளையினிடத்தில் அரசன் அதிக விசுவாசம் வைத்திருந்தான். லோகதாஸன் என்கிற அந்த ராஜகுமாரன் இளமையும் மேனியும் நல்ல சௌந்தரியமும் உடையவனா யிருந்ததோடுகூட, மிகுந்த சாமர்த்தியமும் உடையவனாய்ப் பார்வதியம்மாள் என்னும் ஒரு அழகியைக் கலியாணஞ்செய்துகொண்டு சுகமாயிருந்தான்.

அந்தச் சிங்கராஜனுடைய மந்திரிக்கு ஜவந்தியம்மாள் என்று ஒரு மகளுண்டு. அந்தப்பெண் சந்திரோதயமானதுபோல் வெகு அழகாய் எவரும் அதிசயப்படத்தக்கவளாயிருந்தாலும், அவளுடைய நற்குண நற்செய்கைகளைக் கண்டே யாவரும் அதிகமாய் மெச்சினார்கள். லோகதாஸன் என்கிற ராஜகுமாரன் ஒருநாள் அப்பெண்ணைப்பார்த்தபோது அவள்மேல் விருப்பங்கொண்டு, அவ்வழகியை அவசியம் கலியாணஞ் செய்துகொள்ளவேண்டுமென்று தீர்மானித்திருந்தான். இந்தச்செய்தி சிலநாளில் அரசன் காதுக்கு எட்டிற்று. அதைக் கேட்டதும் அவன் எங்குமில்லாத கோபமடைந்து, உடனே தன் மகனை அழைப்பித்து ஒருவார்த்தை சொன்னதாவது: 'குழந்தாய்! உன்னைவிட எனக்கு இஷ்டமானவர் வேறொருவருமில்லை; என் ராஜ்யத்தில் சிறந்தபொருள் என்னென்ன உண்டோ, அவையெல்லாம் நான் உனக்கு அழைப்பித்துக் கொடுத்திருக்கிறேன்; பார்வதியம்மாளைப் போல் அழகிய பெண்கூட வேறொருத்தியுமுண்டோ? அவள் சம்மதமில்லாமல் உனக்கு மறுவிவாகம் செய்துகொள்ள விருப்பமிருந்தாலும்

சுகமாய்ச் செய்துகொள்ளலாம்; அண்டைநாட்டு ராஜகன்னிகைகள் எத்தனையோபேர் உனக்கு மனையாளாகவேண்டுமென்று பேராவல் கொண்டிருக்கிறார்கள்; அவர்களையெல்லாம்விட்டு ஒரு அற்பமான மந்திரி மகளை மணம்புரிவது உன் அந்தஸ்துக்கு ஏற்குமா? இப்படிப் பட்ட ஈனமான காரியத்தை நீ ஒருபோதும் செய்யாதே; நான் சொல்வதைக்கேளாமல் உன் இஷ்டப்படியே நடப்பாயானால், உன்னை நான் என் நாட்டினின்றும் துரத்திவிடுவேனென்பது நிச்சயம். உன்னிடத்தில் எனக்கு இருக்கும் அன்பு அதற்கு ஒரு தடையாகமாட்டாதென்று உறுதியாய் நினை.

"ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந்தி யார்மாட்டுந்
தேர்ந்து செய்வதே முறை"

என்கிறபடி, பக்ஷபாதமில்லாமல் எவரிடத்திலும் மத்தியஸ்தமாய் நடப்பதே அரசுமுறையென்று நீதிநூல்களிற் சொல்லியிருக்கிறதாகையால் நான் அதற்கு மாறாக நடக்கமாட்டேன்' என்றான். லோகதாஸனோ 'தந்தைசொன்மிக்க மந்திரமில்லை' என்பதை மறந்து தன் தகப்பன் சொன்ன அந்த நற்புத்தியைக் கேளாமலே, ஜவந்தியம்மாளைக் கலியாணஞ்செய்துகொண்டான். அந்தச் செய்தி தன் காதில் வீழ்ந்தவுடன் சிங்கராஜனும் சொன்னசொல் தவறாமலே தன் நாட்டைவிட்டு ஓடிப்போகும்படி பிள்ளைக்குக் கட்டளையிட்டான். ஆயினும் தான் அப்பிள்ளையினிடத்தில் அதிக மனப்பற்றுடையவனா யிருந்ததனால் அவனைத் தனித்து ஓடிப்போகச்சொல்ல மனம்வாராமல், அவன் எங்கேயாவது போய் ஒன்றுமகப்படாமல் அலைந்து தவிக்கப்போகிறானென்பதற்காகவும், அவனுடைய அந்தஸ்து யாவர்க்கும் வெளிப்படையாய்த் தெரியவேண்டு மென்பதற்காகவும் யானை குதிரை முதலான அநேகம் பரிவாரங்களும் பல்லக்கு முதலிய வாகனங்களும் கொடுத்து அனுப்பினான்.

அரசனுடைய கட்டளையை மீறி அத்தேசத்திலிருக்கத் திறமையற்றவனாய் லோகதாஸன் தன் இரண்டு மனைவிகளையும் கூட்டிக் கொண்டு தேசாந்தரம்போகப் புறப்பட்டான். அப்படியே சிறிது தூரம் போனபிறகு, தான் சுதந்தரமாய்ப் போவதற்குத் தன் பரிவாரங்களெல்லாம் ஒரு தடையாயிருக்குமென்று நினைத்துத் தான் ஏறிப் போவதற்கு ஒரு யானையும், தன் மனைவிகளுக்கு ஒரு பல்லக்கும் மாத்

திரம் வைத்துக்கொண்டு மற்றச் சேனைகளையெல்லாம் விட்டுவிட்டு, எங்கேயாவது புதிதாய்த் தனக்கு ஓரிடம் தேடிக்கொள்ளவேண்டு மென்று ஒரு பெருங்காட்டினடுவே போனான். அந்த விடங்களை அவர்கள் ஒருநாளும் பார்த்ததில்லையாகையால், சிறிது தூரம் போகை யிலேயே வழிதப்பிப்போயிற்று. ஒருநாளும் வருத்தமென்பதையே அறியாத அந்தப் பெண்களுக்கு அப்போது உண்டான வருத்தங்களை என்னவென்று சொல்லலாம்! அந்தக் காட்டிற் புகுந்த மூன்றுநாள் முதல் அவர்கள் வேறுணவில்லாமல் காட்டிலுள்ள காய் கிழங்கு சருகு முதலியவைகளையே புசிக்கும்படியாயிற்று. இராக்காலங்களில் காதுக் கினிப்பாய்ச் சிறந்த கீதவாத்தியங்களைக் கேட்பதைவிட்டு மிகவும் பயங் கரமான காட்டுமிருகங்களின் கர்ச்சனைகளைக் கேட்கும்படியாயிற்று. இவைகளையெல்லாம் பார்க்கவே லோகநாதனுக்கு நாளுக்கு நாள் துக்கம் அதிகமாகிக்கொண்டேவந்தது. கடைசியில் அந்த ராஜகுமா ரன் தன் மனைவிகள் படும் துன்பத்தைப்பார்த்துப் பொறுக்கமாட்டா மல் மனந்தடுமாறினவனாய், ஒருநாள் இராத்திரி யாவரும் அயர்ந்து தூங்குகிற தருணம் பார்த்து எழுந்து தான் தரித்திருந்த ராஜவேஷத் தைக் களைந்துவிட்டு, ஒரு காவித்துணியைப் போர்த்துக்கொண்டு சன்னியாசிபோல் மாறுவேடம்பூண்டு அந்தக் காட்டின் நடுவே ஓடிப் போனான்.

அவன் புறப்பட்டுப்போன சிறிதுநேரத்துக்கெல்லாம் மந்திரி மக ளான ஜவந்தியம்மாள் விழித்துக்கொண்டாள். அப்போது **பார்வதி யம்மாள்** விம்மி விம்மி அழுதுகொண்டிருக்கக்கண்டு, அவள், 'அம்மா தோழி! என்னவிசேஷம்? ஏன் இப்படி விம்மி விம்மி அழுகிறாய்?' என்று கேட்க, **பார்வதியம்மாள்**, 'தோழி! நான் என்னவென்று சொல்லுவேன்! இப்போது நான் தூங்கிக்கொண்டிருக்கையில், நம் முடைய நாயகன் சன்னியாசிவேஷம் தரித்துக்கொண்டு காட்டில் ஓடிப்போனதாகக் கனவுகண்டேன்; உடனே விழித்துக்கொண்டு பார்க்கையில் அது உண்மையாகவேயிருந்தது; நம்முடைய நாயகனைக் காணேன்; நாம்மாத்திரம் தனியாய் இந்தப் பயங்கரமான காட்டினடுவே படுத்திருக்கிறோம்; இனி நாம் செய்யவேண்டுவதென்ன? கணவனைப் பறிகொடுத்துப் பிராணனை வைத்துக்கொண்டிருப்பதைவிட உடனே உயிரை மாய்த்துவிடுவதே உத்தமமென்று தோன்றுகிறது' என்று சொல்லி அழுதாள். அதைக்கேட்டு மிகவும் தைரியசாலியான ஜவந்தி

யம்மாள், 'இந்தச் சமயத்தில் நீ அதிகமாய் விசனப்படாதே; ஆபத்து வேளையில் தைரியமாயிருப்பதுதான் தெரிந்தவர்களுக்கு அடையாளம்; இப்போது நாம் அழுதால் நம்முடைய பிராணன் போனதுபோலவே ஆகும்; ஏனெனில், இங்கிருக்கிற பல்லக்குக்காரர்கள் நம்முடைய நாயகன் போய்விட்டதைத் தெரிந்துகொண்டு நம்மை ஒரு பொருளாக மதியாமல் உடனே ஓடிப்போவார்கள்; அவர்கள் போய்விட்டால் நம் மாலொன்றும் மாளாது; ஏதோ ஒரு கொடிய மிருகத்திற்கு நாம் இரை யாகவேண்டுவதுதான்; தைரியமாயிருந்தால் நமக்கு ஒருகாலும் குறைவு வாராது; நம்முடைய நாயகன் போய்விட்ட செய்தி இப்போது யாருக் குத் தெரியும்? நம்மால் கூடியவளவு நாம் அவரைத் தேடிப்பார்க்கலாம்; இப்போது நான் அவருடைய உடைகளை உடுத்திக்கொண்டு அவர் போலவே வேஷந்தரித்து ஜவந்திராஜன் என்று பேர்வைத்துக்கொள் கிறேன்; நீ என் மனையாள்போலப் பாவித்து இரு; இந்தப் பல்லக்குக் காரர்களெல்லாம் நான்தான் போய்விட்டதாக நினைத்துக்கொள்ளட்டும்; இப்படிப்பட்ட பெருங்காட்டில் ஏதோ ஒரு மிருகம் ஒரு பெண் பிள்ளையைப் புசித்துவிட்டதென்றால், அது கேட்போர்க்கும் ஒரு அதி சயமாய்த் தோன்றாது; அந்தமட்டும் ராஜாபோகாமல் பிழைத்திருக்கி றாரே என்று எவரும் சந்தோஷமாயிருப்பார்கள்' என்று சொன்னாள்.

அதைக்கேட்டுப் பார்வதியம்மாள் துக்கம் ஒருபக்கமிருக்கச் சிரிப் பும் சந்தோஷமும் அடைந்து, 'தோழி! உன் விவேகத்தின் பெரு மையை நான் என்னென்று சொல்லுவேன்! இந்த ஆபத்துவேளையி லும் தைரியத்தைக் கைவிடாமற்பேசுகிறாயே! அப்படியே நடப்போம்; நான் உன் மனைவிபோல் பாவித்துக்கொண்டிருப்பதற்கு ஆக்ஷேப மென்ன' என்று சொன்னாள்.

அப்படியே மறுநாள் காலையில் ஜவந்தியம்மாள், தன் நாயக னுடைய உடுப்புக்களைத் தான் தரித்துத் தன் நாயகன்போலவே யானை மேல் ஏறிக்கொண்டு, பார்வதியம்மாளைப் பல்லக்கில் ஏற்றுவித்து, வழக்கப்படியே ஒரு நல்ல நாட்டுக்கு வழிதேடிக்கொண்டு போகப் புறப்பட்டாள். ஜவந்தியம்மாள் காணாமற்போனது கண்டு பல்லக் குக்காரர்கள் ஒருவர்க்கொருவர், இதென்ன அதிசயம் பார்த்தாயா? தன வான்களெல்லாம் இப்படித்தான் தன் நயத்தையே பாராட்டுகிறவர்களாய் இருப்பார்களோ? நமது இளவரசர் எவ்வளவோ முயற்சிசெய்து மந் திரிமகளான ஜவந்தியம்மாளைக் கலியாணஞ்செய்து, அதனால் இப்

படிப்பட்ட சங்கடங்களையெல்லாம் வருவித்துக்கொண்டார்; உண்மையாய்ப்பார்த்தால் அவளவ்வளவு அழகுள்ள பெண் இவ்வுலகத்தில் எங்குமில்லையென்றே சொல்லலாம். நம்முடைய சிற்றரசரும் அந்த நாயகியைத் தன் உயிரைவிட அதிகமாய் நேசித்துவந்ததாகவே தெரியவருகிறது. இப்போது அந்தப் பெண்ணை இந்தப் பெருங்காட்டில் ஏதோ ஒரு கொடிய மிருகம் பிடித்திழுத்துக்கொண்டு போய்விட்டதோ என்னவோ? ஐயோ! அந்தத் தேவியாரைக் காணோமே; அப்படியிருந்தும் அதைக் கண்டு இந்த ராஜா ஒரு சொட்டுக் கண்ணீராவது சிந்தமாட்டாரா? இப்படிப்பட்ட கல்நெஞ்சு உடையவர்கூட உலகிலுண்டோ?' என்று சொல்லி ஆச்சரியப்பட்டுக்கொண்டே போனார்கள்.

அதிகமான யுக்தியும் தைரியமும் உள்ள மந்திரிகுமாரத்தியின் ஆலோசனைப்படியே அவர்கள் அக்காட்டிற் சென்றார்கள். அப்படியே போகையில் ஒருநாள் அக்காட்டினின்றும் விடுபட்டு வெளியே வந்து சேர்ந்தார்கள். அங்கே வெகுதூரத்திற் சிறந்த நகரமொன்று தெரிந்தது. அதைநோக்கிச் செல்லுகையில் அப்பட்டணத்து ஜனங்கள் இவர்களுடைய யானையைக்கண்டு ஓடிவந்து பார்த்து, ஒரு அரசனும் அரசியும் வருகிறார்களெனத் தெரிந்துகொண்டு உடனே தம் அரசனண்டை போய், 'இதோ சிறந்த ஆடை ஆபரணங்கள் அணிந்த ஒரு ராஜகுமாரனும், வெகு சவுந்தரியமுள்ள ஒரு ராஜகுமாரத்தியும் வருகிறார்கள்' என்று சொல்ல, அதைக்கேட்டு அந்த ராஜன், 'அவன் யார்? எங்கிருந்து வருகிறான்?' என்று விசாரித்துக்கொண்டுவரும்படி தூதர்களை அனுப்பினான். அவர்கள் வந்து கேட்டதற்கு ஜவந்தியம்மாள், 'என் பெயர் ஜவந்திராஜன்; என் தந்தை என்னிடத்தில் மிகவும் கோபங்கொண்டு என்னைத் தன் நாட்டினின்றும் துரத்திவிட்டார்; அவர் கட்டளைப்படியே நான் என் மனையாளுடன் புறப்பட்டு வந்துகொண்டிருக்கையில் நடுக்காட்டிலே வழிதப்பிப்போய்விட்டது. பல நாள் பலவிதமாய்த் துன்பங்கள் அனுபவித்துக் கடைசியில் தெய்வகதியாய் இங்கே வந்து சேர்ந்தோம்' என்றாள்.

அந்தச் செய்தியைக்கேட்டு அந்த ராஜாவும் மற்றுமுள்ள கனவான்களும் இவ்வளவு தைரியமும் பெருமையுமுடையவன் ஒருவனை நாம் இதுவரையில் எங்குங் கண்டதில்லையே என்றுசொல்லி ஆச்சரியப்பட்டார்கள். பின்பு அத்தேசத்தரசன் ராஜவேஷந்தரித்திருந்த அந்தப் பெண்ணை வந்துபார்த்து, 'ஓ ராஜகுமாரனே! நீ எங்கும் போய்த் திரிய

வேண்டாம்; என்னுடைய இராச்சியத்தில் ஏதாவது ஒரு உத்தியோகத்தைக் கைக்கொள்ள உனக்கு விருப்பமிருந்தால் அப்படியே செய்யலாம்; சம்பளம் எவ்வளவு வேண்டுமானாலுங் கொடுக்கிறேன்' என்று சொல்ல, அதைக்கேட்டு ஜவந்தியம்மாள், 'எவரண்டையும் எவ்விதமான வேலையும் நான் இதுவரையிலுஞ்செய்து வழக்கப்பட்டதில்லை; ஆயினும் தாங்கள் தயவுசெய்து என்னைக் காப்பாற்றவேண்டு மென்பதற்காகவே இப்படி உத்தரவு செய்கிறீர்களாகையால், அப்படியே நடத்தலாம். என் கையில் எந்த வேலையைக் கொடுத்து நடத்தலாமென்று தங்கள் சித்தத்திற்குத் தோன்றுகிறதோ அதைக் கொடுத்தால், தெரிந்தமட்டும் வஞ்சனையில்லாமல் சரியாக நடத்தக் காத்திருக்கிறேன்' என்று சொன்னாள். அதைக்கேட்டு அந்த ராஜா மாதம் 20,000 ரூபாய் சம்பளம் ஏற்படுத்திச் சிறந்த மாளிகையும் ஒன்று கட்டிக்கொடுத்து வெகு மேன்மையாக நடத்திவந்தான். வர வர அப்பெண்ணினிடத்தில் அவனுக்கு வெகு நம்பிக்கையும் விசுவாசமுமுண்டாயிற்று. ஏதாவதொரு பலத்தகாரியஞ் செய்யவேண்டுவதாயிருந்தால் அவளுடன் தீர ஆலோசித்தே நடத்துவான். முக்கியமான அநேக ராஜகாரியங்களை அவளாதீனமாகவே விட்டுவிட்டான். அவள் நற்குண நற்செய்கையுடையவளாயிருந்ததனால், திடீரென்று அவர்களுக்குக் கிடைத்த பெரும்பாக்கியம் ஒருவருக்கும் பொறாமைக் கிடமாகவில்லை. யாவரும் அவளை அதிகமாய் நேசித்துக் கனப்படுத்தினார்கள். இப்படியே வெகு மேன்மையாக ஜவந்தியம்மாள் பார்வதியம்மாளுடன் பன்னிரண்டு வருஷகாலம் அப்பட்டணத்திலேயே மாறுவேஷம் பூண்டு சுகமாக வாழ்ந்திருந்தாள். இவள் ராஜாவோ அல்லவோவென்கிற சந்தேகங்கூட ஒருவருக்கும் உண்டாகவில்லை. அவள், பார்வதியம்மாள் எவரோடாயினும் அதிகமாய் நெருங்கிப் பேசவாவது, பிறர் யாராவது வந்து அவளோடு அதிகமாய் நேசித்திருக்கவாவது ஒன்றுக்கும் இடங்கொடுக்கவில்லை. ஏனெனில், பார்வதியம்மாள் யாரோடாவது ஒரு வேளை ஞாபகப்பிசகாய் 'இவள் ஜவந்தியம்மாள்' என்று சொல்லிப்போடுவாள்; சொல்லிப்போட்டால் பிறகு தான் வேறொன்றும் செய்வதற்கில்லை; தன் உடன்பிறந்தாளைப்போல் நடத்திவந்தாலும், அவளைத் தன் கையினாலேயே உடனே கொன்றுபோடும்படி நேரிடும் என்றெண்ணி இச்செய்தியை வெளிப்படையாக அவளுடனுஞ்சொல்லி நிர்ப்பந்தஞ் செய்திருந்தாள்.

இப்படியிருக்கையில், அப்பட்டணம் ஒரு பெருங்காட்டுக்குச் சமீபத்திலிருந்ததனால், ஒருநாள் இராத்திரி அதிக பயங்கரமான இரைச்சலொன்று அக்காட்டிலிருந்து கேட்டது. அந்தக் கூச்சலினால் தூங்கிக்கொண்டிருந்த இராணி திடீரென்று கண்ணை விழித்துக்கொண்டு தன் கணவனை எழுப்பி, 'என் பிராணநாதனே! இதோ ஏதோ ஒரு பேரிரைச்சல் கேட்கிறது; அதைக் கேட்கும்போது எனக்கு வெகு பயமாயிருக்கிறது; நித்திரை பிடிக்கவேயில்லை; அது எதினுடைய சத்தமோ, எங்கிருந்து வருகிறதோ, யாரையாவது போய்ப் பார்த்து வரச்சொல்லும்' என்று சொன்னாள். அதைக்கேட்டு ராஜா உடனே தன் சேவகர்களை வரவழைத்து, 'நீங்கள் இப்போதே புறப்பட்டுக் காட்டுக்குப்போய், இது எதினுடைய இரைச்சலோ? ஏன் அது இப்படிக் கூச்சலிடுகிறதோ தெரிந்துகொண்டு வாருங்கள்' என்று சொல்ல, அவ்விரவு அதிகமாய் இருண்டிருந்ததனாலும் அந்தச் சத்தம் மிகக் கொடியதாயிருந்ததனாலும் அவர்கள் அதிகமாய்ப் பயந்து ராஜாவைப் பார்த்து, 'மகாப்பிரபுவே! இந்தக் கூச்சலைக் கேட்கும்போதே எங்களுக்கு வெகு திகிலாயிருக்கின்றது; அந்தவிடத்திற்கு நாங்கள் எப்படிப் போகத்துணிவோம்; தங்களுக்கு இவ்வளவு வருத்தமென்ன? தங்களுக்கு மிகவும் இஷ்டனாய் ராஜகுமாரன் ஒருவன் தங்கள் ஆதினத்திலிருக்கிறானன்றோ; இப்போது அவனை அனுப்புவதற்குத் தடையென்ன? அவன் அதிகமாய்த் துணிவும் பராக்கிரமமுமுடையவன்; மேலும் தாங்கள் யாவர்க்குங் கொடுப்பதைவிட அவனுக்கு அதிகமாகச் சம்பளங் கொடுத்துவருகிறீர்களே, இப்படிப்பட்ட காலத்தில் அவன் உதவாமற்போனால் அவனுக்கு அவ்வளவு பொருள் கொடுத்துக் காப்பதற்குத்தான் பயன் என்ன?' என்று சொன்னார்கள். அப்படியே செய்யும்படி ராஜா கட்டளையிடவே அவர்கள் ஜவந்தியம்மாள் வீட்டுக்குப் போய் இச்செய்தியை அவளுக்குத் தெரிவித்தார்கள். அதைக்கேட்டு ஜவந்தியம்மாள் சந்தோஷமடைந்து, 'அப்படியே நான் போய் அந்தச் சத்தத்தின் காரணத்தைத் தெரிந்துகொண்டுவருகிறேன்' என்று சொல்லிப் புறப்பட்டாள்.

இவர்களுக்கெல்லாம் இப்படித் திகிலுண்டாக்கின சத்தம் ஒரு ராக்ஷதனுடைய பேரிரைச்சல். முதனாள் அந்தக் காட்டிலே ஒரு திருடனைத் தூக்குப்போட்டார்கள். அந்தத் தூக்குமரத்தில் தொங்குகிற பிணத்தை வாள்போன்ற தன் நகங்களால் பிடுங்கித்தின்ன வேண்டு

மென்று ஒரு ராக்ஷதன் அந்தத் தூக்குமரத்தடியில் வந்து நின்று அதை எட்டப்பார்த்தான். அது அவன் கைக்கு எட்டாத உயரத்தி லிருந்ததனால் எத்தனைதரம் தாவித்தாவி எட்டமுயன்றும் எட்ட வில்லை. அதனால் அந்த ராக்ஷதன் மிகவும் ஏமாந்தவனாய் ரோஷம் அதிகமாகி வீரிடத்தொடங்கினான்.

மந்திரிமகள் அங்கேபோய்ப் பார்த்தபோது, ராக்ஷதன் அவள் கண்ணுக்குத் தென்படவில்லை. ஒரு கிழவி வெகு அழகான பொன்னுடை உடுத்திக்கொண்டு, தலைக்குமேல் தூக்குமரத்தில் ஒரு பிணம் காற்றில் ஆடித் தொங்கிக்கொண்டிருக்க, கீழே நின்று தன் தலையாடக் கையைப்பிசைந்து அழுதுகொண்டிருந்தாள். அதுகண்டு ஜவந்தியம்மாள், 'ஓ பாட்டியாரே! நீர் விசனப்படுவதற்குக் காரணமென்ன' வென்று கேட்க, பெண்ணாகத் தோன்றிய அந்த ராக்ஷதன், 'ஐயோ! குழந்தாய்! என் துக்கத்தை ஏன் கேட்கிறாய்? இதோ இந்தத் தூக்கு மரத்தில் தொங்குகிறவன் என்னுடைய மகன்; ஐயோ! இவனைக் கொன்றுபோட்டார்களே! உயிர்போன பிணந்தானே இதோ தொங்குகிறது! இந்தப் பிணத்தையாவது கட்டிக்கொண்டு கொஞ்ச நேரம் அழுவோமென்றால் அதை இந்தத் தூக்குமரத்தினின்றும் அவிழ்த்துக் கீழேதள்ள என்னால் ஆகவில்லை; அதுவோ ஆகாயத் தில் கட்டியிருக்கிறது; நானோ தள்ளாதகிழவியாய் முதுகுங்கூனிக் கிடக்கிறேன்' என்று சொல்லி அழுதாள். அதைக்கேட்டு ஜவந்தியம்மாள், அவளிடத்தில் பரிதாபப்பட்டு, 'அம்மா! நீ விசனப் படாதே; நான் கீழே நின்று உன்னைத் தாங்குகிறேன்; நீ என் தோள்மேல் ஏறிக்கொள்வாயானால் சுலபமாய் எட்டி உன் மகனை அவிழ்த்துக்கொள்ளலாம்' என்று சொல்லித் தோளைக் காட்டினாள். அந்த ராக்ஷதனும் அவள் தோள்மேல் ஏறிக்கொண்டான். கீழே நின்று அவனைத் தாங்கிக்கொண்டிருந்த ஜவந்தியம்மாள், நெடுநேரம் கீழிறங்காமல் ராக்ஷதன் தன் மேலேயே நின்றுகொண்டிருக்கவே, அந்தப் பிணத்தின் கழுத்தில் கட்டியிருக்கிற கயிற்றை அவிழ்ப்பது வருத்தமாயிருக்கிறதோ என்னவோ, அதனாலேதான் நேரமாகிறது என்று நினைத்துக்கொண்டிருந்தாள். இப்படியிருக்கையில் மேகத் தில் மறைந்திருந்த சந்திரன், திடீரென்று வெளித்தோன்றிப் பிரகா சித்தான். அத்தருணத்தில் ஜவந்தியம்மாள் அண்ணாந்து பார்த்தாள். பார்க்கவே, தன்மேல் கிழவி ஒருத்தி ஏறிக்கொண்டிருக்கிறா

ளென்று எண்ணியிருக்க அவளைக் காணுமல், ஒரு பயங்கரமான ராக்ஷதன் நின்று அந்தப் பிணத்தைப் பிடுங்கித் தின்று எலும்புகளைக் கீழே எறிந்துகொண்டிருக்கக் கண்டு, மிகவும் பயந்து பின்னே ஒதுங்கினுள். அதுகண்டு அந்த ராக்ஷதனும் உயர்ந்த பொற்புடவை யொன்றை அவள் கையில் எறிந்துவிட்டு வீரிட்டுக்கொண்டு ஓடிப் போயினுன்.

ஜவந்தியம்மாள் மகா தைரியசாலியாகையால் இந்தக் காட்சியைக் கண்டு கிஞ்சித்துங் கலக்கமுருமல் பட்டணத்திற்குப் போய், இச்செய்தி ஒன்றையும் உள்ளபடி சொல்லி இராணிக்குப் பயமுறுத்தக்கூடாதென்று, 'அங்கே ஒரு தூக்குமரத்தில் தன் மகனைக் கட்டித் தொங்கவிட்டிருப்பது கண்டு ஒரு கிழவி புலம்பிக்கொண்டிருந்தாள். இது தவிர மற்றொரு விசேஷமும் இல்லை' என்று சொல்லிவிட்டுத் தன் வீட்டுக்குப்போய் ராக்ஷதன் கொடுத்த பொன் சேலையைப் பார்வதியம்மாளுக்குக் கொடுத்து அவளுடன் அங்கேயே சிலகாலம் க்ஷேமமாய்ப் பெருந்தகைமை பெற்று வாழ்ந்திருந்தாள்.

அப்படியிருக்கையில் ஏதோ பண்டிகை நாளொன்று வந்தது. அன்று ராஜாவினுடைய சிறுபெண்கள் இருவர் பார்வதியம்மாளைப் பார்க்கவேண்டுமென்று ஆசைகொண்டார்கள். அன்றையதினம் பார்வதியம்மாள் ராக்ஷதன் கொடுத்த பீதாம்பரத்தைத் தரித்துக் கொண்டு தெருப்புறத்துப் பலகணிவாயிலண்டையிருந்து விநோதங்களைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவளைப் பார்க்கவந்த பெண்கள் அவள் அரையிலிருந்த பொற்புடவையைப் பார்த்து மிகவும் பிரமித்து உடனே தாயண்டை ஓடிவந்து, 'அம்மா, இதென்ன அதிசயம்! இங்கே வந்திருக்கிற ராஜகுமாரனுடைய மனைவி வெகு அழகான பீதாம்பரம் தரித்துக்கொண்டிருக்கிருள்; அதைப்போல நாங்கள் இதுவரையில் எங்குங் கண்டதில்லை. அது சூரியனொளிபோல் மிகப் பளபளப்பாயிருக்கின்றது; பார்ப்போர் கண்ணைப் பறித்துக் கொண்டுபோகின்றது; அதில் பாதியழகுள்ள புடவைகூட எங்களுக்குக் கிடையாதே! நீ மகாராணியென்று பேரிட்டுக்கொண்டிருக்கிருயே; அப்படிப்பட்ட பட்டாடை உனக்காவதுண்டா? அவ்விதமான உயர்ந்த புடவைகளை நீயும் ஏன் வாங்கக்கூடாது?' என்ருர்கள்.

பார்வதியம்மாள் தரித்துக்கொண்டிருந்த புடவையின் பெருமையைக் கேட்கவே இராணியானவள், அத்தன்மையாய்த் தானும் ஒன்று தேடிக்கொள்ளவேண்டுமென்று ஆவல்கொண்டு அரசனண்டை போய், 'மகாராஜனே! உன் பரிசாரகன் பெண்சாதி உன் பட்ட மகிஷி கட்டிக்கொண்டிருப்பதைவிடப் பதினாயிரம்பங்கு உயர்ந்த உடைகள் உடுத்திக்கொண்டிருக்கிறாள்; என்னிடத்திலுள்ள ஆடைகளெல்லாவற்றையும்விட மிகவும் விலையுயர்ந்த பொற்புடவையொன்று பார்வதியம்மாள் அரையில் இருப்பதாய்க் கேள்விப்படுகிறேன்; இதைவிட மானக்கேடு வேறென்ன? அப்படிப்பட்டதொன்று நம்மிடத்தில் இல்லாமலிருப்பது எனக்குப் பெருங்குறையாயிருக்கிறது; அவ்வகையானதொன்று எனக்கு அவசியம் வாங்கிக் கொடுக்க வேண்டுகிறேன்' என்றாள்.

அதைக் கேட்டு ராஜா ஜவந்தியம்மாளை அழைப்பித்து: 'உன் மனையாள் உயர்ந்த பீதாம்பரமொன்று உடுத்திக்கொண்டிருப்பதாய்க் கேள்விப்பட்டேன்; அந்த வஸ்திரம் எங்கே கிடைத்தது; அம்மாதிரி உம்முடைய இராணிக்கும் ஒன்று வேண்டுமாம்' என்று கேட்க, அவள், 'மகாப்பிரபுவே! அந்தப் பொற்புடவை வெகு தூரத்துக்கப்பால் ராக்ஷதர் சீமையிலிருந்து வந்தது; அப்படிப்பட்ட புடவை இங்கெங்கும் அகப்படாது; எனக்கு உத்தரவானால் நான் உடனே புறப்பட்டு என்னால் கூடியவரையில் அத்தேசம் எங்கிருக்கிறதோ நாலாபக்கமும் தேடிப்பார்த்து, அத்தேசமிருக்குமிடந்தெரிந்தால் இப்படிப்பட்ட புடவைகள் அநேகங்கொண்டுவருகிறேன்' என்று சொன்னாள். அதைக்கேட்டு ராஜா மிகவும் சந்தோஷமடைந்து அப்படியே போய் வரும்படி உத்தரவு கொடுத்தான். அரசனிடத்தில் செலவு பெற்றுக்கொண்டு ஜவந்தியம்மாள் தன் வீட்டுக்குப்போய், வெகு ஜாக்கிரதையாய்த் தான் போய்வருமளவும் அங்கேயே இருக்கும்படி பார்வதியம்மாளுக்கு எச்சரிக்கை சொல்லிவிட்டுத் தன் குதிரைமேல் ஏறிக்கொண்டு ராக்ஷதர் தேசத்தைத் தேடிக்கொண்டுபோனாள். புறப்பட்டநாள் முதல் அவள் நாளொன்றுக்குப் பதின்காதவழிக்குக் குறையாமல் யாத்திரைசெய்து அங்கங்கே வழியிலுள்ள சிறுகிராமங்களிலும் நகரங்களிலும் தங்கிக்கொண்டு ஓயாமல் அநேக நாள் பெருங்காட்டுவழியாய்ப் போய்க்கொண்டிருந்தாள்.

இப்படிப் போய்க்கொண்டிருக்கையில் அநேகங்காதவழி கடந்து போனபின்பு ஒருநாள் ஒரு பெரிய பட்டணம்போய்ச் சேர்ந்தாள். அதனருகே வெகு அழகாய் ஆறொன்று பெருகுகின்றது. அப்பட்டணத்து மதிட்சுவரில் பெரிய பொன்னெழுத்துகளால் விளம்பரமொன்று எழுதியிருந்தது. அதைப்பார்த்து ஜவந்தியம்மாள், இந்த விளம்பரத்தின் கருத்தென்னவென்று அப்பட்டணத்துப் பிரஜைகளை வினவ, அவர்கள், 'இப்பட்டணத்து அரசனிடத்தில் மிகவுங் கொடியதான குதிரை மட்டமொன்று உண்டு; அதை எவனொருவன் பிடித்து அடக்குகிறானோ அவனையே தான் கலியாணஞ் செய்துகொள்வதாக இப்பட்டணத்தரசன் மகள் பிரசித்தப்படுத்தியிருக்கிறாள்' என்றார்கள். அதைக்கேட்டு ஜவந்தியம்மாள், 'அதை அடக்கியாள ஒருவராலும் ஆகவில்லையா?' என்று கேட்க, அவர்கள், 'அது ஒருவராலும் ஆகவில்லை; அநேகர் அதன் கொழுப்பை அடக்க முயன்றார்கள்; ஆயினும் ஒருவராவது காரியசித்தி பெறவில்லை; எங்கள் ராஜகுமாரத்தி பிறந்த தினத்திலேதான் அந்தக் குதிரையும் பிறந்தது. அது மிகவும் கொடியதாய்த் தன்னண்டை ஒருவரையும் அண்டவொட்டுகிறதில்லை; இச்செய்தியை ராஜகுமாரத்தி கேள்விப்பட்டு, இந்தக் குதிரையை அடக்கி ஆளமாட்டாத புருஷனைத் தான் கைபிடிப்பதில்லை யென்று பிரதிக்கினை பண்ணினாள்; அதை அடக்க அபேக்ஷை உடையவர்களெல்லோரும் போய்க் கூடியவரையில் ஒருகை பார்க்கலாம்; அதற்கு ஒரு தடையுமில்லை' என்று சொல்லவே, ஜவந்தியம்மாள், 'ஆனால் அந்தக் குதிரை மட்டத்தை நாளை எனக்குக் காட்டுங்கள்; நான் எளிதில் அதை ஏறிச் செலுத்தமாட்டுவேனென்று நினைக்கிறேன்' என்றாள். அதற்கு அவர்கள், 'உனக்கு இஷ்டமிருந்தால் நீ சுகமாய்ப் பிரயத்தனப்பட்டுப் பார்க்கலாம்; யோசித்துப் பார்க்குமளவில் அது மிகவும் அபாயகரமான காரியம்; நீயோ மிகச் சிறுபிள்ளையாயிருக்கிறாய்' என்று சொன்னதற்கு, ஜவந்தியம்மாள், 'என்னைப்போல் பலமில்லாதவர்களுக்குச் சுவாமிதான் பலங்கொடுக்கிறார்; இதில் எனக்குப் பயமொன்றும் தோன்றவில்லை' என்று சொல்லிவிட்டுப் படுக்கப் போனாள்.

மறுநாள் காலையில், ராஜாவின் குதிரை மட்டத்தை அடக்கும்படியாக மற்றொரு மனிதன் வந்திருக்கிறானென்று அப்பட்டணம்

முழுதும் பிரசித்தப்படுத்தினார்கள். அதைக் கேட்டு அப்பட்டணத்து ஜனங்களெல்லாம் அந்த அதிசயத்தைக் காணவந்து திரளாகக் கூட்டங் கூடினார்கள். அந்தக் குதிரை ஆற்றண்டை ஒரு புலத்தில் விடப்பட்டிருந்தது. அது இவளை ஒரேமிதியாய் மிதித்துக் கொன்று விடவேண்டுமென்று எண்ணிக்கொண்டு ஓடிவருகையில், ஜவந்தியம்மாள் அதை எதிர்த்தோடி, அது தன்னை உதைக்கவும் கடிக்கவும் மாட்டாதபடி, அதின் பிடரியை வலித்துப் பிடித்துக்கொண்டாள். அந்தக் குதிரை தன்னாலியன்றமட்டும் அந்தப் பிடியை விடுவித்துக் கொள்ளப் பார்த்தது. ஜவந்தியம்மாள் அதை ஒரு பொருளாக மதியாமல் அதன் கழுத்தை நன்றாய் உறுத்திப்பிடித்துக்கொண்டு கடைசியில் அதன்மேலேறினாள். அதைக் கண்டு அந்தக் குதிரை நமது கொழுப்பை அடக்கியாளத்தக்க சூரனொருவன் ஏற்பட்டுவிட்டான்; இனி நாம் வாலாட்டுவதிற் பயனில்லையென்று தடையில் அகப்பட்ட பாம்புபோல் அடங்கி நின்றது. ஜவந்தியம்மாள் அந்தக் கொடிய குதிரை முற்றும் தனக்குக் கைவசமாயிற்றென்பதை யாவர்க்கும் வெளிப்படையாய்க் காட்டவேண்டுமென்று, அந்த ஆற்றுக்குக் குறுக்கே எழும்பித் தாவும்படி குதிரையைத் தட்டினாள். அந்தக் குறிப்பை அறிந்துகொண்டு குதிரை உடனே ஆகாயமார்க்கமாய் எழும்பி அந்த நதியைத் தாவ ஆரம்பித்தது. அந்த ஆறு குறுக்கே சுமார் மூன்றுமைல் அகலமிருக்கும். அந்தக் குதிரை மிக்க வலிமையும் சாமர்த்தியமும் உடையதாயிருப்பதோடுகூட ஒரு வேலையுமில்லாமல் கொழுத்திருந்ததனால், அதன் கொழுப்பு நன்றாய் அடங்கும்படியாகத் திருப்பித் திருப்பி மூன்றுதரம் அந்த நதியைத் தாவச்செய்தாள். இந்த அதிசயத்தைப் பார்க்க வந்து நிறைந்திருந்த ஜனங்களெல்லாம் அவள் அப்படித் தாவினதைப்பார்த்து அதிசயித்து ஆனந்தத்தால் கலகலவென்று இரைச்சலிட்டுக்கொண்டு ஆற்றோரத்தில் ஓடிவந்து, ஜயசாலியாய் விளங்குகின்ற ஜவந்தியம்மாளை, அந்தக் குதிரைமேலேறினபடியே, அரசனண்டைக்கு அழைத்துக் கொண்டு போனார்கள். அந்த ராஜன் அவளைப்பார்த்து, 'ஓ, மகாபுருஷனே! எல்லாப் பெருமைக்கும் இருப்பிடமானவனே! இப்போது என் மகள் உன் அதீனமாயினாள்' என்று சொல்லிப் புகழ்ந்து, அரமனைக்கு அழைத்துக்கொண்டுபோய், சகலோபசாரமுஞ்செய்து அநேகம் ஆடையாபரணங்களும் யானை குதிரை முத

லிய சேனைகளும் அவனுடைய வல்லமைக்கு வெகுமானமாகக் கொடுத்தான். இராணியும் வந்து அவனுடைய பெருமையைக் கண்டு கொண்டாடினாள். இப்படிச் சிறிதுநேரம் கோலாகலமாயிருந்து பின்பு அவர்கள், நாளையதினம் கலியாண மகோற்சவம் தப்பாமல் நடந்தேறவேண்டுமென்று சொல்லி வேண்ட, ஜவந்தியம்மாள், 'பிரபுக்களே! எங்கள் அரசனுக்கு அவசியம் ஆகவேண்டிய ஒரு காரியத்தை நிறைவேற்றுவதற்காக நான் போய்க்கொண்டிருக்கிறேன்; அதை நிறைவேற்றாமல் மற்றொரு காரியத்தில் தலையிட்டுக்கொள்வது நியாயமன்று; ஆதலால் முதலில் அந்தக் காரியத்தைப்போய் முடித்துக்கொண்டுவரும்படியாக எனக்குச் செல்வுகொடுக்கக் கோருகிறேன்; நான் திரும்பிவரும்போது அவசியம் இந்த வழியாகவே வந்து நீங்கள் சொல்லுகிறபடியே நடக்கிறேன்' என்றாள். அந்தப் பேச்சைக்கேட்டு அவர்கள் உவந்து, 'அப்பனே! நீ சொன்ன பேச்சு உன் குணத்திற்கேற்றதாகவே இருக்கின்றது. உன்னுடைய ராஜகாரியத்தில் நீ ஆவல்கொண்டுபோவதை நாங்கள் தடுப்பது நியாயமன்று; நீ உன் இஷ்டப்படியே சுகமாய்ப் போய்வா; எப்பொழுது எங்கள் மகளைக் கலியாணஞ்செய்துகொண்டு உன் பொருள்களையெல்லாம் கைக்கொள்வாயென்று உன் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருப்போம்; நீ துரிதமாய் வந்து எங்கள் இஷ்டத்தை நிறைவேற்றவேண்டும்; இவ்வுலகத்தில் இதுவரையில் நடவாததாய் மிகவும் சிறப்பாகக் கலியாணத்தை நடத்தவேண்டுமென்று எண்ணங்கொண்டிருக்கிறோம்' எனச் சொல்லித் தங்கள் நாட்டு எல்லை தாண்டுமளவும் அவனுக்கு வழிவிட்டு அப்புறம் போகவேண்டிய வழியுங் காட்டிவிட்டு வந்து சேர்ந்தார்கள்.

அந்த மந்திரிமகளும் அவர்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டு ராக்ஷதர்களுடைய சீமையைத் தேடிச்சென்றாள். அப்படி வெகுதூரம் போகையில் வழியே வேறொரு பெரியபட்டணம் இருந்தது. அந்தப் பட்டணம்போய்ச் சேர்ந்து அங்கே ஒரு சத்திரத்தில் சிலநாள் வாசம்பண்ணிக்கொண்டிருந்தாள். அந்தப் பட்டணத்து அரசனுக்கு ஒரே மகள்; அந்தப் பெண் அதிக சவுந்தரியமுள்ளவள்; அவள் நீராடுவதற்காக அரசன் அழகான நடபாவியொன்று வெட்டுவித்தான். அந்த நடபாவி சமுத்திரம்போல மிகப் பெரிதாயிருந்தது. அதைச் சுற்றி அரசன் மறைவாக ஆகாயமளாவியதாய்ச் சலவைக்

கற்களால் மதிலெடுத்து மதிட்சுவரின் வழியாய்த் தாவி ஒருவரும் உள்ளே புகாதபடி நுனியில் கூராகக் கத்திகள் நாட்டிவைத்தான். அந்த மதில் எவ்வளவு தூரத்திலிருந்து பார்த்தாலும் உயர்ந்த உப்பரிகைபோலக் காணத்தக்கதாயிருந்தது. அந்த வாவியினிடத்தில் அவ்வரசன் மகளுக்கு விருப்பம் அதிகம்; அந்த வாவியைக் குதிரைமேலேறினபடியே எவன் தாவுகிருனே, அவனுக்கே தான் மணமாலை சூட்டுவதாகப் பிரதிக்கினை பண்ணியிருந்தாள். அப்படி பிரதிக்கினை செய்து நெடுநாளாயிற்று; ஆகியும் அதைத் தாவவல்லவனுய் ஒருவனும் அகப்படவில்லை; அதனுல், தம் குழந்தைக்குச் சீக்கிரத்தில் கலியாணஞ்செய்து களிக்கவேண்டுமென்று ஆவல்கொண்டிருந்த அரசனும் அரசியும் மிகவும் துயரமடைந்து, ஒருநாள் மகளைப்பார்த்து: 'குழந்தாய்! நீ உன் புத்திக்கேற்றவனுய்க் கணவனெருவனைத் தேடிக் கலியாணஞ் செய்துகொள்வதற்கு முன்னேயே நாங்கள் இருவரும் மாண்டுபோவோம்போலிருக்கிறதே! இதென்ன மூடத்தனம்! ஆகாயம் அளாவியும் நுனியில் கத்திகள் நாட்டப்பெற்றுமிருக்கும் இம்மதிலைத் தாண்டத்தக்கவனுய் எவன் எப்போது வருவானென்று எதிர்பார்த்திருக்கிறது' என்று சொல்லிப் புலம்பினுர்கள். அதைக்கேட்டு அந்தப் பெண், 'அப்படிப்பட்டவன் ஒருவனும் கிடையாதபக்ஷத்தில் எனக்கு விவாகமே வேண்டாம்; இந்தச் சுவரைத் தாவமாட்டாத புருஷனைக் கலியாணஞ் செய்துகொள்வதைவிடச் சும்மாவிருப்பதே நலம்' என்று சொன்னுள்.

தன் மகள் ஒரே பிடியாய்ப் பிடிக்கவே அரசன் ஒன்றுந் தோன்ருமல், 'குதிரைமேல் ஏறினபடியே என் மகளுடைய நடபாவியைத் தாண்டுகிறவனுக்கு அவளைக் கன்னிகாதானஞ்செய்து கொடுப்பதுமன்றி, அளவற்ற ஐசுவரியமும் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன்' என்று பிரசித்தப்படுத்தினுன்.

ஜவந்தியம்மாள் அந்தப் பட்டணத்திற் புகுந்தவுடனே இச்செய்தியெல்லாந்தெரிந்துகொண்டு, நாளைக்காலையில் நான் இந்த வாவியைத் தாவ முயலப்போகின்றேன் என்று அறிக்கை செய்தாள். அதைக்கேட்ட அப்பட்டணத்து ஜனங்கள் அவளைப்பார்த்து, 'நீ என்ன யோசனையில்லாத பேச்சுப் பேசுகிருய்; இந்த மதிலையாவது தாண்டவாவது! இதைத் தாவ எவனுலாகும்? உனக்குப் பத்துப்பங்கு கொண்டவர்களெல்லாம் வந்துபார்த்துக் கையாலாகாமல்

MARIMALAI ... LIBRARY MADRAS-1

போய்விட்டார்களே' என்றுசொல்ல, அவள், 'எனக்கு இயற்கையாய் வல்லமையில்லாமற்போனாலும், நான் துணையாக நம்பியிருக்கிற ஸ்வாமி எனக்குக் கைகொடுப்பார்' என்று சொல்லிச் சித்தமாயிருந்தாள். மறுநாள் காலையில் எழுந்து தன் குதிரையைச் சித்தப்படுத்தி அரமனைவாயிலில் கொண்டுவந்து நிறுத்தி அங்கிருந்து அதிக வேகமாக நாலுகால் பாய்ச்சலாய்ச் சவாரிசெய்து, அந்த நடபாவியின் சமீபத்திற்சென்று சட்டென வெழும்பி அதின் மதிலைத்தாவி எதிர்ப்புறத்திற்போய்க் குதித்தாள். இப்படியே மூன்று தரம் செய்தாள். அதைப்பார்த்து ராஜா ஆச்சரியமடைந்து சந்தோஷத்தால் உடம்பு பூரித்து, ஜவந்தியம்மாளை அரமனைக்கு வரவழைத்து, 'ஓ! தைரிய சௌரியபராக்கிரமமுள்ள ராஜகுமாரனே! நீ யார்? உன் பெயரென்ன? இவ்வுலகத்தில் ஆண்பிள்ளை நீ ஒருவனே; இப்போது என் மகள் உன் அடிமையாயினள். அவளை நீ கைப்பற்ற வேண்டும்' என்றான். அதற்கு அந்த மந்திரிமகள், எனக்கு ஜவந்திராஜன் என்று பெயர்; நான் எங்கள் அரசன் ஏவலால் வெகு தூரத்திலிருந்து ராக்ஷதர்களுடைய தேசத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறேன்; ஆதலின் முதலில் அந்தக் காரியத்தை முடித்துக்கொண்டு வரும்படி எனக்குச் செலவு கொடுங்கள். நான் போய் அந்தக் காரியத்தை முடித்துக்கொண்டு சுகமாய்த் திரும்பினேனானால், அவசியம் இவ்வழியாகவே வந்து, தங்கள் கட்டளைப்படி நடக்கிறேன்' என்றுசொல்ல, அதைக்கேட்டு அவர்கள், இப்போதே இம்மகளை இவனுக்கு விவாகம் செய்துக்கொடுத்துச் சீமைசுற்றப்போகிற இவனோடு அலையவிடுவதிற் பயனென்ன? இவன் போய்வரும்போதுதான் ஆகட்டுமென்று அவன் சொன்னதை ஒப்புக்கொண்டு, எங்கள் அருமைமகள் இங்கேயே நின்று உன் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருப்பாள்; தாமதப்படுத்தாமல் சீக்கிரமேவந்து சேரக்கடவையென்று சொல்லியனுப்பினார்கள்.

அவ்விடம்விட்டுப் புறப்பட்டபின்பு அந்த மந்திரிமகள் நடுவே ஒரு தடையுமில்லாமல் அநேகநாள் யாத்திரைசெய்தாள். இடையிலே என்னென்ன வருத்தம் நேர்ந்தாலும் பயமுண்டானாலும் தன் மனோதைரியத்தினால் அவள் ஒன்றுக்கும் சலியாமல் ஒரு பெருங்காட்டினடுவே வெகுதூரம் சென்றாள். செல்லுகையில் வழியில்

அழகான வேறொரு நகரம் தென்பட்டது. அதன் சமீபத்தில் ஒரு பெரிய தடாகமும் அதைச்சுற்றி மல்லிகை, முல்லை முதலான பல மனோகரமான மலர்கள் நிறைந்த பூந்தோட்டங்களும் பழத்தோட்டங்களும் விளங்கினமையால், அப்பட்டணம் வெகு விநோதமாயிருந்தது.

அந்த மந்திரிமகள் வெகு தூரப்பயணத்தினால் ஓய்ந்துபோய் அப்பட்டணத்தில் ஒரு தோட்டக்காரன் வீட்டிலேபோய் இறங்கினாள். அந்த வீட்டுக்காரர்கள் உதாரகுணமுள்ளவர்களாயிருந்ததனால், இவளைப்பார்த்து வெகுதூரத்திலிருந்து அயர்ந்துவந்திருக்கிறாளென்று மனதில் இரக்கமுற்று, வேண்டியபடி அவளுக்கு உபசாரஞ் செய்து விருந்தளித்தார்கள். அவளும் அதை வினயமாய் ஏற்றுக் கொண்டு அவர்களோடு கூட விநோதமாயிருந்தாள்.

அன்று மாலைவேளையில் யாவரும் சந்தோஷமாய்ப் பேசிக் கொண்டிருக்கையில், ஜவந்தியம்மாள் பேச்சின்மேல் பேச்சாய், 'இப்பட்டணத்தில் ஏதாவது அதிசயமுண்டோ?' என, அந்தத்தோட்டக்காரி, 'மிகவும் அதிசயமான செய்தியொன்று உண்டு; நெடுநாளைக்குமுன் எங்கள் அரசன் ஒரு கனவுகண்டாராம்; அதுமுதல் இத்தேசமெங்கும் அமளிகுமளியாயிருக்கிறது; இன்னும் அந்தக் கனவின் கருத்தை அறிந்து சொல்லத்தக்கவர் ஒருவரையுங் காணோம்' என்றாள். அதைக்கேட்டு ஜவந்தியம்மாள், 'அதென்னகனவு? அவர் அக்கனவு கண்டதெப்போ?' என, அவள், 'இந்த ராஜன் பத்து வயதுப் பிள்ளையாயிருக்கையில், ஒரு பெரிய தோட்டத்தினடுவே மிக்க மகிமைபெற்ற மரமொன்று முளைத்திருக்கக் கனவுகண்டார்; அம்மரத்தின் கிளைகள் வெள்ளியாகவும், இலைகள் தங்கமாகவும், பூக்கள் முத்துக்குலைகளாகவும் இருந்தனவாம்; அந்தக் கனவுகண்ட பிறகு ராஜா அப்படிப்பட்ட விருக்ஷம் எங்கேயிருக்குமென்று அநேகம் பண்டிதர்களையும் பெரியோர்களையும் அழைப்பித்து விசாரித்தார்; யாவரும் அப்படிப்பட்ட விருக்ஷம் இவ்வுலகத்தில் இல்லவே இல்லையென்று சொல்லிப் போனார்கள். அதைக்கேட்டு இந்த ராஜா, அம்மரத்தை அறியவேண்டுமென்கிற ஆவல் அதிகமாயிருக்கவே ஒன்றுந் தோன்றாமல் விசனங்கொண்டிருக்கிறார். இது மாத்திரமேயல்ல; இவ்வரசன் மகள் அந்தக் கனவைக் கேள்விப் பட்டு, அந்த அற்புதமான மரத்தைக் கண்டறிந்து சொல்லுகிறவனை

யல்லாது மற்றெவனையும் தான் விவாகஞ்செய்துகொள்வதில்லை யென்று தீர்மானம் பண்ணியிருக்கிறாள்' என்று சொன்னாள். அதைக் கேட்கவே ஜவந்தியம்மாளுக்கு அதிக ஆச்சரியம் உண்டாயிற்று. அன்றிராத்திரிப் போஜனம்பண்ணிவிட்டு அவள், ஏரிக் கரையில் சவுக்கியமாய்க் குளிர்ந்த காற்றிலே படுத்துத் தூங்கலாமென்றுபோய், அங்கே ஒரு மரத்தடியில் கட்டிலைப்போட்டுக் கொண்டு உட்கார்ந்து கடவுளைத் தியானம்பண்ணிக்கொண்டிருந்தாள். தினந்தோறும் இராத்திரிப் படுப்பதற்கு முன் கடவுளைத் தியானஞ் செய்துவிட்டு நித்திரைசெய்யவேண்டுவது எவர்க்கும் கடமை. ஏரிக்கு நேராய்த் திரும்பி தியானஞ்செய்துகொண்டிருக்கையில், மிகவும் பளபளப்பான ஒளியொன்று தனக்கு எதிர்முகமாக வரக்கண்டாள். இரண்டொரு நிமிஷம் நிதானித்துப் பார்க்கையில் பெரிய சர்ப்பமொன்று, இதென்ன சூரியக்குஞ்சோ, அல்லது ஆகாயத்தினின்றுந் தவறி வீழ்ந்துபோன நக்ஷத்திரமோ என்று சொல்லிச் சந்தேகிக்கத்தக்கதாய் அதிக பளபளப்பும், ஒரு பெரிய கிச்சிலிப்பழத்தவ்வளவு உருவமும் உள்ள உயர்ந்த வச்சிர மணியொன்றை வாயிலே கௌவிக்கொண்டு தண்ணீருக்குள்ளிருந்து ஒரு ஏணியின் வழியாய் மேலெழுந்து வருவதாகத் தெரிந்தது. அந்தப் பாம்பு மேலே வந்தவுடன் வாயிலிருந்த வச்சிரக் கல்லை அந்த ஏணிநுனியில் வைத்துவிட்டு வெளியே இரை தேடச்சென்றது. இரவுகழிந்து விடியும் நேரமானபோது அது திரும்பிவந்து முன்போலவே வைரமணியை வாயில் கௌவிக் கொண்டு முன் வந்த ஏணியின் வழியே நீரிலிழிந்து போய்விட்டது. ஜவந்தியம்மாள் அதையெல்லாம் பார்த்து இதென்னவென்று அதிசயித்து மறுநாள் இராத்திரியும் அவ்விடத்திற்கே படுக்கவந்து அதை இன்னொருதரம் பார்க்கவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு வீட்டுக்குப்போனாள்.

மறுநாள் இரவில் அப்படியே வந்துபார்த்தாள்; அந்தப் பாம்பு முதனாளிராத்திரிச் செய்ததுபோலவே, வைரக்கல்லோடு தண்ணீரிலிருந்து வெளியேவந்து, அந்த மணியை அங்கேயே வைத்துவிட்டு இரைதேடிக்கொண்டு, போகும்போது மணியைக்கௌவிக்கொண்டு போய்விட்டது. மூன்றாம் நாளும் அவ்வாறே நடந்தது. அதைக் கண்டு ஜவந்தியம்மாள், எப்படியாவது அந்தப் பாம்பைக் கொன்று,

கூடுமானால் அந்த வைரக்கல்லையும் கைக்கொள்ளவேண்டுமென்று நிச்சயித்து, மறுநாள் உதயத்திற்கு எழுந்து கடைத்தெருவுக்குப்போய், எப்படிப்பட்டதையும் பிடித்துக்கொள்ளத்தக்கதும், பத்து இருபது போனாலும் மீறிக்கொண்டு வெளியே வரக்கூடாததுமாய் மிகவும் உறுதியான இரும்பு வலையொன்று செய்துகொடுக்க வேண்டுமென்று ஒரு கருமானைக் கேட்க, அவன் அப்படியே செய்து கொடுத்தான். அந்த வலையின் உட்புறம் கத்திநுனிபோல் அதிக கூர்மையுடையதாயிருந்தது; அவ்வலையில் அகப்படுவது எத்தன்மையதாயினும் அது அப்படியே மாண்டுபோக வேண்டுமேயொழியத் திரும்பி வெளியே வரமாட்டாது.

ஜவந்தியம்மாள் அதை வாங்கிவந்து அந்த ஏரியின் அருகே ஒரு மரத்தில் கட்டித் தொங்கவிட்டு, அம்மரத்தின்கீழ்ப் பாம்புகள் விரும்பத்தக்க பல பூக்களும், இன்னும் அநேகம் வாசனைப்பொருள்களும் வாரித் தூவிவைத்துப் பொழுதுபோனவுடன் தானும் அம்மரத்திலேறி, வலைக்குநேராய் உட்கார்ந்து பாம்பின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

இராத்திரி சுமார் பத்துநாழிகையானவுடனே அந்தப் பாம்பு வழக்கப்படியே வந்து, அம்மரத்தடியில் இறைத்திருந்த பொருள்களின் வாசனையைக் கண்டு மற்றெங்கும் போகாமல், வாயில் வச்சிரத்தைக் கௌவினபடியே மரத்தின்கீழ் மேயவந்தது; அது தனக்கு நேராய் வரப்பார்த்து ஜவந்தியம்மாள், வலையைக் கட்டியிருக்கும் கயிற்றை அவிழ்த்துவிட்டாள். அது மேலே வீழ்ந்தவுடனே பாம்பு இறந்துபோயிற்று; ஆயினும் அது முற்றிலும் இறந்ததோ இல்லையோ வென்று அச்சமுற்று உடனே இறங்கத்துணியாமல் அவள் அம்மரத்துமேலேயே நின்று எப்போ பொழுதுவிடியப்போகிறதென்று காத்துக்கொண்டிருந்தாள்.

சூரியன் புறப்பட்டு வெளிச்சமானவுடனே அவள் மரத்தினின்றும் இறங்கிவந்துபார்த்து, பாம்பு செத்துப் பிணமாய்க் கிடக்கக் கண்டு, அதின் வாயில் ஒளிமலைபோலப் பிரகாசித்துக்கொண்டிருந்த மணியை எடுத்துக்கொண்டு, இரவெல்லாம் கண்விழித்துக் கொண்டிருந்த ஆயாசத்தினால், அந்த ஏரியில் ஸ்நானம்பண்ணிவிட்டு வீட்டிற்குப் போகலாமென்று எண்ணிப் போய் ஏரியிலே இறங்கினாள். இறங்கி அந்த வைரமணியைக் கையில் வைத்துக்கொண்ட

படி அவள் தண்ணீரைத் தொட்டதும், அந்த நீர் சுவர்போல் இருபுறமும் ஒதுங்கி வழிவிட, இருபுறத்திலும் சிறந்த மெத்தைகளும் மாளிகைகளும் தோப்புக்களும் தோட்டங்களுமாய், வெகு சிங்காரமான ராஜமார்க்கமொன்று அந்த ஏரிக்கு உட்புறமாய்ப் போவதாகத் தெரிந்தது. இந்தவழி எங்கேபோகிறதோ போய்ப்பார்த்து வருவோமென்று அவள் அது போகிற வழியே சென்றாள். வெகுதூரம் போகையில் எதிரே பெரிய கோபுரவாயிலொன்று இருந்தது. அதனுள் நுழைந்து பார்த்தாள்; வெகுவிநோதமாய் எங்கும் காணப்படாத புதுமையெல்லாம் அதினுட் காணப்பட்டன. இலைகளும் காய்களும் பூக்களும் பழங்களும் நிறைந்து ஆகாயமளாவிய மரங்களும் அநேகம் செடிகளும் கொடிகளும் அடர்ந்து சிறந்து நிற்கவும் தரையெல்லாம் இதழ்பரப்பினதுபோல் மலர்கள் உதிர்ந்து வாசனை வீசவும், மயில்கள் ஆடவும், குயில்கள் கூவவும் அந்த உத்தியானவனம் மிகவும் மனோகரமாயிருந்தது.

அத்தோட்டத்து மத்தியில் அங்குள்ள மரங்கள் எல்லாவற்றுள்ளும் மிகச் சிறந்ததான விருக்ஷமொன்றிருந்தது. அம்மரத்தில் கட்டைகளெல்லாம் வெள்ளியாகவும், இலைகளெல்லாம் தங்கமாகவும், பூக்களெல்லாம் முத்தாகவும், பழங்களெல்லாம் இரத்தினமாகவும் இருந்தன. அம்மரத்தின் உச்சியில் தேவகன்னிகைபோன்ற சுந்தரியொருத்தி ஊசலில் உட்கார்ந்து இனிமையாய்ப் பாடிக்கொண்டிருந்தாள். அப்பெண்மணியின் வடிவழகைக் கனவிலேகூட ஒருவருங் கண்டிருக்கமாட்டார்கள். முகம் சந்திரபிம்பம்போலவும், கண்களிரண்டும் இரண்டு கருநெய்தற்பூப்போலவும், தலைமயிர் நீர்கொண்ட கருமேகம்போலவும் இப்படி ஒவ்வொரு அவயவமும் வெகு அழகாய் விளங்கிற்று. அந்த அழகி புதிதாய்வந்த இவளைப்பார்த்துத் தன் தீங்குரலால் அழைத்து, 'ஓ என் ஆண்டவனே! நீ யார்? ஏன் இவ்விடத்திற்கு வந்தாய்?' என்று கேட்க, ஜவந்தியம்மாள், 'நான் இங்கேவந்து உன்னைப் பார்க்கக்கூடாதோ கண்மணியே' என்றாள். அதற்கு அந்தப்பெண் 'சுகமாய் வரலாம் சுவாமி; நீ இங்கே வந்திருப்பது என் தகப்பனுக்குத் தெரிந்தால் உடனே கொன்றுபோடுவாரே; நான் ஒரு பெரிய சர்ப்பத்தின் மகள்; நான் விளையாடுவதற்காக அவர் இந்தச் சிங்காரத்தோட்டத்தை யுண்டாக்கினார். நான் அநேக வருஷகாலமாய் இந்தத் தோட்டத்திலேயே விளையாடிக்கொண்டி

ருக்கிறேன்; அவர் என்னை வெளியேபோய் ஒன்றையும் பார்க்க விடுகிறதில்லை; உண்மையாய் எங்களினத்தைச் சேர்ந்தவையைக் கூட இன்னும் எனக்குத் தெரியாது. இப்பூமியில் பிறந்தபிறகு முதல்முதல் நான் உன்னைத்தான் பார்த்தேன்; நீ யார்? நீ இவ்விடத்திற்கு வந்தவித மெப்படி? யாவையும் எனக்குத் தெரியச் சொல்லவேண்டும்' என்றாள். மந்திரிகுமாரத்தி, 'அழகிற்பெருத்த பவழக்கொடியே! நான் ஜவந்திராஜன்; உன் தகப்பனுருக்காக நீ பயப்படவேண்டாம்; அந்தக் கொடிய பாம்பு அன்றே இறந்து போயிற்று' என்று சொல்லக்கேட்டு, இத்தனைநாளாய்த் தன்னிடத்தில் கொடுங்கோலனுயிருந்த தன் தகப்பன் இறந்துபோனனெனவே அந்தப் பெண் மிகவும் சந்தோஷமடைந்து, 'என்னை ஆளவந்த மகாராஜனே! எனக்கு இரத்தினம்மாள் என்று பெயர்; இங்கிருக்கிற ஐசுவரியமெல்லாம் என்னுடையவைதான்; நீ இங்கேயே இருந்து இவ்விடத்திற்கு அரசனாய் இங்கிருக்கும் பொருள்களையெல்லாம் ஆளக்கடவாய்; நானும் உனக்கு மனைவியாய் விடுகிறேன்' என்று சொன்னாள். அதைக்கேட்டு ஜவந்தியம்மாள், 'அப்படிச் செய்யமுடியாது; நான் இப்போது ஒரு காரியத்திற்காக என் எஜமானனால் அனுப்பப்பட்டிருக்கிறேன். முதலில்போய் அந்தக் காரியத்தை முடித்துக்கொண்டு வந்தபிறகுதான் மற்றொன்று செய்ய வேண்டும். உனக்கு என்னிடத்தில் இஷ்டமிருப்பது உண்மையானால் என்னுடன் எங்கள் தேசத்துக்கு வந்துவிடு; உன்னிஷ்டப்படியே எனக்கு மனையாளாயிருக்கலாம்' என்று சொல்ல, இரத்தினம்மாள் தலையசைத்து, 'என் நாயகனே! நீ அப்படிக் கட்டளையிடுவது தகுதியன்று: நான் உன்னோடுகூட வருவேனேயானால், ஜனங்கள் என்னைப்பார்த்து, இவ்வழகியை நாம் கொண்டுபோய் விடவேண்டுமென்று பேராசைகொண்டு உன்னைக் கொன்றுபோடுவார்கள்; கடைசியில் என்னை அழைத்துக்கொண்டுபோவதனால் உனக்குத் தீமையுண்டாகுமேயொழிய நன்மையுண்டாகாது. ஆதலால், இந்த வீணையைக் கையிலெடுத்துக்கொண்டுபோ' என்று சொல்லி, ஒரு தங்க வீணையை அவள் கையிற்கொடுத்து, 'நீ என்னைப் பார்க்க விரும்பினாலும், என்னுதவியை வேண்டினாலும், ஒரு நடுக்காட்டிலே போய்நின்று இந்த வீணையை எடுத்து வாசி; அதன் ஓசை நிற்பதற்கு முன்னமே நான் உன் எதிரில் வந்து நிற்பேன்;

பட்டணத்திலாகட்டும், ஜனங்கள் அடர்ந்திருக்குமிடங்களிலாகட்டும் இதை வாசியாதே' என்று சொல்லியனுப்ப, ஜவந்தியம்மாளும் அந்த வீணையை வாங்கித் தன் கைக்குட்டையில் சுற்றிக்கொண்டு அந்தப் பெண்ணினிடத்தில் விடைபெற்றுப் புறப்பட்டாள்.

அங்கிருந்து தான் போனவழியே திரும்பி அவள் அந்தத் தோட்டக்காரன் வீடுவந்து சேர்ந்தாள். அவளைப் பார்த்துத் தோட்டக்காரன், 'ஸ்வாமிகளே! நீங்கள் இரண்டுநாளாய் எங்கேபோயிருந்தீர்கள்; எங்களுக்கெல்லாம் மிகவும் விசனமாயிருந்தது. இப்பட்டணத்தை விட்டுப் போய்விட்டீர்களென்று நினைத்திருந்தோம்; தெய்வாதீனமாய் வந்து சேர்ந்தீர்கள்; இத்தனைநாள் எங்கேயிருந்தீர்கள்?' என்று கேட்க, அவள், 'கடைத்தெருவில் சொந்தக்காரியம் கொஞ்சமிருந்தது; அதற்காக அங்கேயே இருந்துவிட்டேன்; (தான் அந்த ஏரியின் கீழ்ப்புறத்திற்குப் போயிருந்ததும், அங்கே கண்டதும் சொல்ல அவளுக்குச் சம்மதமில்லை.) அதிருக்கட்டும், நான் இவ்விடத்தைவிட்டுப் போவதற்கு முன்னே இப்பட்டணத்து மந்திரியைப் போய்ப்பார்க்கவேண்டும்; எப்போ போய்ப்பார்க்கலாம்; அவர்களுக்கு எப்போது அனுகூலப்படுமோ அதைப் போய்த் தெரிந்துகொண்டு வந்துசொல்வாயா?' என்றாள். அந்தத் தோட்டக்காரன் அப்படியே ஆகட்டுமென்று அதை விசாரித்துவரப்போனான். அத்தருணத்தில் ஜவந்தியம்மாள் ஏரிக்கரைக்குப்போய், அங்கே தான் கொன்றுபோட்டிருந்த நாகத்தை, அது ஒரு பரிசுத்தமான பிராணியென்பதற்காகவும், இரத்தினம்மாளுடைய தகப்பனென்பதற்காகவும், கொளுத்திவிட்டு வந்து சேர்ந்தாள். அதற்குள் அந்தத் தோட்டக்காரன் அரமனைக்குப்போய் விசாரித்துவந்து நாளையதினம் வரும்படி சொன்னதாகச் செய்திசொல்லவே, அப்படியே மறுநாள் ஜவந்தியம்மாள் மந்திரியைப் பார்க்கப்போனாள். இவளைப் பார்த்து அந்த மந்திரி, 'நீ யார்? இங்கே வந்த காரியமென்ன?' என்று கேட்க, அவள், 'நான் ஜவந்திராஜன்; என் எஜமானனுடைய காரியமாக நெடுநாளாய்த் தேசசஞ்சாரம் பண்ணிக்கொண்டிருக்கிறேன். இப்போது இப்பட்டணத்து வழியாய்ப் போம்படி நேரிடவே தங்களைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்' என்றாள். அதைக் கேட்டு மந்திரி அவளுடன் நேசம் பாராட்டி, அந்நாட்டைப்பற்றியும், பட்டணத்தைப்பற்றியும், ராஜாவைப்பற்றியும், அவன் கண்ட

கனவைப்பற்றியும் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தான். அதை யெல்லாங்கேட்டு ஜயந்தியம்மாள், 'மகாராஜா கனவிற்கண்ட விரு க்ஷத்தை இதுவரையில் பிரத்தியக்ஷமாய்க் காட்டினவர்கள் ஒருவரு மில்லையோ? நல்லது; இப்போது யாராவது அதை நேராய்க் காட்டு வதாயிருந்தால், அவனுக்கு மகாராஜா என்ன வெகுமானங்கொடுப் பதாயிருக்கிறார்?' என்று கேட்க, மந்திரி, 'அவனுக்குத் தன் மகளைக் கலியாணஞ் செய்துகொடுப்பதுமன்றித் தன் நாட்டிற் பாதியும் கொடுக்கச் சித்தமாயிருக்கிறார்' என்றான்.

அதைக்கேட்டு ஜயந்தியம்மாள், 'ஆனால் சந்தோஷம்; அவர் அப்படிச் செய்வது உண்மையானால், நான் அதைக் காட்டுகிறேன்; என்றைக்காவது ஒருநாள் ராத்திரி அம்மரத்தை அவர் வந்து நன் றாய்ப் பார்க்கலாம்; அம்மரம்மாத்திரம் அவருக்குச் சொந்தமாய்க் கிடைக்கமாட்டாது. இதை உங்கள் அரசனுக்கு அறிவித்து அவர் கருத்தைத் தெரிவியுங்கள்' என்று சொல்லிவிட்டு வீடுவந்து சேர்ந் தாள்.

இச்செய்தியை மந்திரி மகாராஜாவுக்குத் தெரிவித்து அவருடைய அனுமதியால் மறுநாள், பிரதானி முதலிய உத்தியோகஸ்தர்களும் பரிவாரங்களும் சூழ, அந்தத் தோட்டக்காரன் வீட்டுக்கு வந்து, 'நீ சொன்னபடியே ராஜா சம்மதித்திருக்கிறார்; இன்று இராத்திரியே அந்த விருக்ஷத்தைப் பார்க்கவேண்டுமென்கிறார்' என்று சொல்ல, ஜயந்தியம்மாள், 'அப்படியே ஆகட்டும்; ராஜா தம்முடைய பரி ஜனங்களோடு வந்தால் தாம் கண்ட கனவு உண்மையென்பதைத் தெரிந்துகொள்ளலாம்' என்றாள். அதைக் கேட்டுக்கொண்டு அவர் கள் அரமனைபோய்ச் சேர்ந்தார்கள். அவர்களை அனுப்பிவிட்டு ஜயந்தியம்மாள் நடுக்காட்டிற்சென்று தன் சிறுவீணையை வாசிக்க, உடனே இரத்தினம்மாள் முன் அந்தத் தோட்டத்தின் நடுவே தென் பட்டது போலவே சகல வைபவங்களோடு வெள்ளிவிருக்ஷத்தில் ஊசலாடினபடியே வந்து தோன்றினாள். வந்து தோன்றி அவள் ஜயந்தியம்மாளை நோக்கி, 'உனக்கு என்னவேண்டும்?' என்று கேட்க, அவள், 'நான் இன்று இரவில் ராஜாவை இங்கு அழைத்து வருவேன்; நீ தப்பாமல் அவன் கண்ணுக்குக் காட்சியளிக்கவேண் டும்' என, இரத்தினம்மாள் 'அப்படியே அழைத்துவா, அவன் சுகமாய் வந்து என்னைப் பார்க்கலாம்' என்றாள்.

இராத்திரி அரசன் முதலானோர் அனைவரும் வந்து அதைப் பார்த்தபோது யாவரும் இதென்னவென்று பிரமித்துநின்றார்கள். மனித சஞ்சாரமேயில்லாத ஒரு பெருங்காட்டின் நடுவே மிகவும் அழகான மாளிகையொன்று தெரிந்தது. அம்மாளிகை முழுதும் பொன் வெள்ளி இரத்தினம் முதலியவைகளால் விநோதமாய் அலங் கரிக்கப்பட்டு, சூரியனையும் ஏளனஞ்செய்பவைபோன்ற பல விளக் குகளாற் சிங்காரிக்கப்பட்டிருந்தது. மனிதர் ஒருவரும் கண்ணுக்குத் தோன்றாமலே பல கீதவாத்தியங்கள் காதுக்கினிப்பாய்க் கேட்டுக் கொண்டிருந்தன; அத்தர் சந்தனம் முதலியவைகளால் அம்மாளி கையிலுண்டான வாசனைகள் ஆகாயமெங்கும் வீசிப்பரந்தன. அம் மாளிகையைச் சுற்றிலும் தாறாய் நீரூறிப்பாய்ந்துகொண்டிருந்தது. அப்படிப்பட்ட அரமனையின் உத்தியானவனத்து மத்தியிலே பொன் னிலைகளும் இரத்தினப்பழங்களும் நிறைந்த வெள்ளி மரமொன்று வளர்ந்திருக்கக் கண்டார்கள்.

காலையில் இவையெல்லாம் மறைந்துபோயின. அரசன் இவ்வதி சயங்களையெல்லாம் கண்டு மதிமயங்கி ஆநந்தக்கடலில் அமிழ்ந்த வனாய், சொன்னசொல் தவறாமல், நிர்மானுஷியமான ஒரு பெருங் காட்டை ஒரே இரவில் தேவலோகமாக மாற்றத்தக்கவனல்லாது மற் றெவன் நமக்கு மருமகனாகத்தக்க மகிமையுடையவனென்று தனக் குத்தானே அகமகிழ்ந்து, தன் மகளை அவனுக்கு மணம்புரிவித்துத் தன் ராஜ்யத்திலும் பாதிகொடுக்கச் சம்மதித்து, தன் மகளைக் கலியா ணஞ்செய்துகொள்ளும்படி வேண்ட, ஜவந்தியம்மாள், 'அப்படியே ஆகட்டும், இப்போது நான் எங்கள் அரசனுடைய காரியமாய் ஓரிடத்திற்குப் போய்க்கொண்டிருக்கிறேனாகையால், முன்னே அதைப்போய் முடித்துக்கொண்டு வரும்படியாகச் செலவுகொடுங் கள்; என் காரியத்தை நிறைவேற்றிக்கொண்டு திரும்பிவரும்போது அவசியம் இப்பட்டணத்திற்கு வந்து சிலநாளிருந்து உங்கள் இஷ் டப்படி நடக்கிறேன்' என்றாள். அதற்கு அவர்களெல்லாரும் சம் மதித்து, தங்கள் தேசம் தாண்டுமளவும் வழிகொண்டுசென்று அவளை அனுப்பினார்கள்.

அங்கிருந்து ஜவந்தியம்மாள் ஒரு தடையுமின்றி அநேகநாள் யாத்திரைசெய்து வெகுதூரம் போனாள். எவ்வளவுதூரம் போனா லும் இராகூதர் சீமைக்குப் போகவேண்டிய வழிக்கு ஒருவிதமான

குறிப்பும் காணப்படவில்லை. அப்படிப்பட்ட வருத்தமானகாலத்தில் அவள் இரத்தினமாலை நினைத்துக்கொண்டு அவள் கொடுத்த சுவர்ண வீணையை வாசித்தாள். உடனே அவள் எதிரே வந்து நின்று, 'நாயகனே! உனக்கு என்னகுறை?' என்று கேட்க, ஜவந்தியம்மாள், 'என் கண்மணியே! நான் அரசன் கட்டளையினால் இராக்ஷதர் சீமையைக் காணவேண்டுமென்று இக்காட்டில் நெடுநாளாய் அல்லாடித்திரிகிறேன்; எத்தனைநாள் திரிந்தும் அது இருக்குமிடந் தெரியவில்லை; அத்தேசமிருக்குமிடம் உனக்குத்தெரியுமா? என்னை எப்படியாவது அவ்விடத்திற்கு அழைத்துக்கொண்டு போவாயா?' என, அவள், 'நீ ஒருபோதும் தனியே அவ்விடத்திற்குப் போகமாட்டாய்; ஆறுமாதப் பிரயாணதூரம் சுற்றளவுள்ள அரக்கர் சீமையைச் சுற்றிலும் எண்ணிறந்த இராக்ஷதர்கள் காவல்காத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்பூமியிலுள்ள மரங்களைக் கணக்கிட்டாலும் கணக்கிடலாம்; அங்கே காவல்காக்கும் அரக்கர்களைக் கணக்கிடமுடியாது. அவர்களுக்குத் தெரியாமலும் அவர்களுடைய அனுமதியில்லாமலும் அத்தேசத்துள் ஒரு ஈயாவது காக்கையாவது நுழையக்கூடாது. தங்கள் தேசத்தில் மனிதன் வரப்பார்த்து அவர்கள் ஒருபோதும் பொறுக்கமாட்டார்கள். நமது கண்ணுக்கு அவர்கள் ஒருக்காலும் தென்படார்கள். நாம் போவதுமாத்திரம் அவர்களுக்கு நன்றாய்த் தெரியும். நம்மைப் பார்த்தமாத்திரத்தில் கைவேறு கால்வேறாகக் கிழித்துப்போடுவார்கள். ஆயினும் நீ அதைரியப்படவேண்டாம்; நான் கூடியவளவு உனக்குத் துணைசெய்கிறேன்; உன் இஷ்டத்தை நீ நிறைவேற்றிக்கொள்ளும்படியான வழியொன்று சொல்லுகிறேன் கேள்; இந்தக் கணையாழியைக் கைக்கொள்ளு (இப்படிச் சொல்லிக்கொண்டே ஒரு விலையில்லா மோதிரத்தை அவள் கையிற் கொடுத்தாள்); இம்மோதிரம் என் உயிர்த்தோழியான இராக்ஷதராஜன் மகள் எனக்குக் கொடுத்தாள்; இது உன்னை ஒருவர் கண்ணுக்கும் தெரியாமல் மறைந்திருக்கச் செய்யும்; அதோ வெகு தூரத்துக்கப்பால் மேகமண்டலம்போல் இருண்ட கொடுமுடியுள்ள மலையொன்று தோன்றுகிறது பார்; அது இராக்ஷதர் சீமையின் ஓரத்தில் அதற்கு ஒரு எல்லைக்கல்போலிருக்கின்றது. நீ இங்கிருந்துபோய் அம்மலை நுனியில் ஏறவேண்டும்; ஏறியபிறகு நான் கொடுத்த இம்மோதிரத்தின் மணியை உன் உள்ளங்கைக்கு

நேராய்த் திருப்பிக்காட்டு; உடனே நீ அம்மலை நுனியிலிருந்து வெகுதூரம் கீழே அதன் அடிவாரத்திற்சென்று, அங்கிருக்கும் இராக்ஷதராஜன் அரமனையில், அவன் மகள் எதிரேபோய் நிற்கக் காண்பாய்; அம்மகளைப்பார்த்து நீ என்னுடைய மணமகனென்று சொல்; எனக்காக அவள் உன்னை மிகவும் நேசித்து ஆதரிப்பாள்' என்று சொல்லிவிட்டு மறைந்துபோனாள்.

ஜவந்தியம்மாள் அதைக்கேட்டு அவள் சொன்னபடியே வெகு தூரத்திலே தெரிந்த பர்வதத்தை நோக்கிச்சென்று அதின் நுனியிலேறி அங்கே அவள் சொன்னபடியே கையிலிருந்த மோதிரத்தை உள்ளங்கைக்கு நேராய்த் திருப்பினாள்; திருப்பினவுடனே அவ்விடத்திலிருந்து கீழேவிழ ஆரம்பித்தாள். பின்பு அப்படியே கீழே ஓயாமல் நெடுநேரம் போய்க்கொண்டிருந்தாள். இப்படி வெகு தூரம் போனபிறகு கடைசியில் ஒரு மணிமயமான மண்டபத்தின் நடுவேபோய்ச் சேர்ந்தாள். அந்த மண்டபத்தை வர்ணிக்க ஒருவராலும் ஆகாது. அது பொன்னாற் சுவரெடுத்து வச்சிரத்தால் வேலை செய்து வெகு அழகாய் அலங்கரித்திருந்தது. எந்தப்பக்கம் திரும்பினாலும் எவ்வளவு தூரம் பார்த்தாலும் அவள் கண்ணுக்கு ராக்ஷதனைத் தவிர வேறொன்றும் தோன்றவில்லை. அந்த மண்டபத்தின் நடுவே தந்தத்தால் செய்து தங்கத்தால் சித்திரித்த திவ்விய சிங்காசனத்திலே, வெள்ளிமலையில் மின்னல் மின்னுவதுபோல, மனதினாலேகூட நினைக்கக்கூடாத சௌந்தரியமுடையவளாய் இராக்ஷதராஜன் மகள் உட்கார்ந்திருக்கக் கண்டாள். அவள் திவ்வியமான ஆடையாபரணங்கள் அணிந்து பார்ப்போர் கண்ணைக் கவரும்படியான தன்மையுடையவளாயிருந்தாள். இவற்றையெல்லாம் சொல்லியென்ன? அவளுடைய சங்கம்போன்ற கழுத்தும், தாமரை மலர்போன்ற முகமும், கருநெய்தல்போன்ற இதழும், தாமரையிதழ்போன்ற கையும், தங்கக்கொடிபோன்ற தேகமும் பார்க்கப்பார்க்கப் புதுமையாயிருந்தன. ஜவந்தியம்மாள் தான் கொண்டுவந்த மோதிரத்தின் மகிமையால் காவலாளருடைய கண்ணுக்குத் தெரியாமலிருந்தாலும் இராக்ஷதன் மகளுடைய கண்ணுக்குமாத்திரம் நன்றாய்த் தெரிந்தாள். அவ்வரக்கன்மகள் இவளைப்பார்த்தவுடனே திடுக்கிட்டு, 'நீ யார்? நீ இங்கே வந்தவிதம் என்ன?' என்றுகேட்க, ஜவந்தியம்மாள், 'நான் ஜவந்திராஜன்; இரத்தினம்மாளுடைய மணமகன்; நீ அவளுக்குக் கொடுத்

திருந்த மந்திரமோதிரத்தின் மகிமையால் நான் இவ்விடம் வந்து சேர்ந்தேன்' என்றாள். அதைக்கேட்டு அந்த இராக்ஷதராஜன் மகள், 'அப்படியா? மிகவும் சந்தோஷம்; க்ஷேமமா? தெய்வாதீனமாய் நீ இவ்விடத்திலுள்ள அபாயமொன்றுக்கும் அகப்படாமல் பத்திரமாய் வந்துசேர்ந்தையே! என்னைச் சுற்றிலும் என் தகப்பனால் ஏற்படுத்தப் பட்டிருக்கிற காவலாளர்கள் உன்னைக் கண்டார்களானால் உடனே கொன்றுபோடுவார்களே! அவர்கள் கையில் அகப்பட்டுக்கொண்ட பிறகு உன்னைத் தப்புவிக்க என்னாலுமாகாது; அதிருக்கட்டும், இப் போது நீ இங்கே வந்த காரியம் என்ன?' என்று கேட்டதற்கு, அவள் 'என் அழகியே, எனக்கு வேறென்னகாரியம்; உன்னைப் பார்த்துப் போகவேண்டுமென்றே வந்தேன்; உன் பெயரென்ன? இதென்ன நீ மாத்திரம் இங்கே தனித்து இருக்கிறையே' என, இராக்ஷத ராஜன் மகள், 'நான் இந்த இராக்ஷதராஜனுக்கு ஒரே மகள்; எனக்கு நக்ஷத்திரம்மாள் என்று பெயர்; என் தகப்பனுக்கு என்னிடத்தில் அதிக பட்சமாகையால், அவர் இந்த அரமனையை எனக்கென்றே கட்டுவித்து, தன்னுடைய அனுமதியில்லாமல் வெளியிலிருந்துவந்து ஒருவரும் உள்ளேபுகாமலும், உள்ளே இருப்பவர் வெளியே போகா மலும் இருப்பதற்காக, இதைச் சுற்றி அநேகங்காத தூரம்வரையில் அளவற்ற இராக்ஷதர்களைக் காவல்வைத்திருக்கிறார். என் தாய்தந் தையர்களைக் கூட நான் பார்ப்பது அருமையாயிருக்கும்படி இந்தக் காவல் அவ்வளவு கொடியதாயிருக்கின்றது. வாஸ்தவத்தில் நான் தாய்தந்தையர்களைப்பார்த்து வெகுநாளாயிற்று. இப்போது அதைச் சொல்வதிற் பயனென்ன? நான் பிறந்தநாள்முதல் ராஜகுமாரர் களை ஒருநாளும் பார்த்ததில்லையாயினும், உன்னைப் பார்க்கும்போதே உன்னிடத்தில் எனக்கு அதிக விருப்பமுண்டாகின்றது. ஆதலால் உனக்கு யாதொரு அபாயமும் உண்டாகாதபடி நானே நேராய் என் தந்தையண்டைபோய் அதற்குத்தக்க ஏற்பாடு செய்துகொண்டுவருகி றேன்' என்று சொல்லி, தான் போய் வருமளவும் அவளை அங் கேயே இருக்கச்செய்து, சிங்காசனத்தினின்றும் எழுந்து தகப்ப னிடத்திற்குச் சென்றாள்.

தங்களுடைய அருமை மகள் தங்களைப் பார்க்கவருகிறாளென்று கேள்விப்பட்டு அவளுடைய தாய்தந்தையர்கள் இதென்னவென்று சந்தேகப்பட்டு, 'நமது குழந்தை என் வருகிறாள்? என்ன விசேஷ

யிருக்கும்? ஒருவேளை உடம்புசொஸ்தமில்லையோ? அல்லது நாம் கட்டிக்கொடுத்த மாளிகையில் வசிப்பது அவளுக்குச் சௌக்கிய மாயில்லையோ?' என்று சிந்தித்துக்கொண்டிருந்தார்கள். பெண் பக்கத்தில் வரக்கண்டு அவளைப்பார்த்து: 'குழந்தாய்! நீ இப்போது இங்கே வந்தகாரணமென்ன? ஏதாவது அதிசயமுண்டோ?' என்று கேட்க, அவள், 'என் அருமைத் தந்தையே; எனக்குக் கலியாணஞ் செய்துகொள்ளவேண்டுமென்று ஆசையுண்டாயிருக்கிறதென்பதைத் தங்களுக்குத் தெரிவிக்கவேண்டுமென்று வந்தேன்; மிக்க வல்லவனை அழகிய ராஜகுமாரன் ஒருவனைத் தேடிக்கொண்டுவந்து எனக்குக் கலியாணஞ்செய்விக்கவேண்டும்' என்றதை அந்த இராக்ஷத ராஜன் கேட்டு நகைத்து, 'குழந்தாய்! நீ இன்னும் பாலிய வயதுடையவளாயிருக்கிறாயே; அப்படியின்றி இப்போதே உனக்கு அதிகமாய் விவாகத்தில் விருப்பமிருக்குமாயின், எவனாவது ஒரு ராஜகுமாரன் இங்கே வந்து உன்னைக் கலியாணஞ்செய்துகொடுக்கும்படி கேட்டால், உன் இஷ்டப்படியே உனக்கு அவசியம் விவாகஞ் செய்விக்கிறோம்' என்று சொன்னான். நக்ஷத்திரம்மாள் அதைக் கேட்டு, மிகத்துணிவுடையவனான அழகனொருவன் இவ்விடத்தைச் சுற்றி நீ ஏற்படுத்தியிருக்கிற காவல்களையெல்லாம் தன் மனோதைரியத்தால் அலட்சியஞ்செய்துகொண்டு இவ்விடத்துக்கு வருவானானால், உன் காவலாட்களைக்கொண்டு அவனைச் சின்னாபின்னமாய்க் கொல்லச்செய்யாதபடி எனக்காக மன்னித்து அவனைக் காப்பாயா?' என்றதற்கு, அந்த இராக்ஷதராஜன், 'அப்படி ஒருவன் வருவானானால் அவனுக்கு ஒருநாளும் அபாயமில்லை' என்று சொன்னான்.

நக்ஷத்திரம்மாள் அதைக்கேட்டு மிகவும் சந்தோஷமாய் ஓடி ஜவந்தியம்மாளை அழைத்துக்கொண்டு தாய்தந்தையர்முன் நிறுத்தி, 'இதோ பார்த்தீர்களா? நான் சொன்னபடி மிகவும் அழகாய் ஜவந்தி ராஜனென்று பேர்பெற்ற ராஜகுமாரன் ஒருவன் வந்திருக்கிறான்' என்று காட்ட, அவர்கள் ஜவந்தியம்மாளைப் பார்த்து அளவில்லாத ஆச்சரியமடைந்து, 'எவராலும் அண்டக்கூடாத இத்தேசத்திற்குள் இவன் எப்படிவந்து சேர்ந்தான்? இந்த அசாத்தியமான காரியத்தை நிறைவேற்றினவனுக்கு எவ்வளவு தைரியமும் சாமர்த்தியமும் இருந்திருக்கவேண்டும்!' என்று தமக்குத்தாமே நினைத்து மகிழ்ந்தார்கள். இவ்வளவோடுகூட ஜவந்தியம்மாள் நல்ல சௌந்தரியமும் கம்பீர

மான தோற்றமுமுடையவளாயிருந்ததனால், தங்கள் மகளை அவனுக்கே கட்டிக்கொடுக்கவேண்டுமென்று அதிக ஆசையுடையவர்களாய் ஜவந்தியம்மாளைப் பார்த்து, 'ஓ ஜவந்திராஜனே! நீ எங்களுக்கு மருமகனாக வேண்டுமென்று நாங்கள் ஆவல்கொண்டிருக்கிறோம்; ஏனெனில், நீ மிகவும் நற்குணமுடையவனாய்க் காண்கிறாய்; அதுவுமன்றி, நீ உன் மனையாளுக்காக மிகவும் பயங்கரமான வழியையெல்லாம் கடந்து வெகுதூரம் வந்தாயாகையால், உன்னளவு தைரியசாலி உலகத்தில் இல்லையென்று சொல்லலாம்; ஆதலால் இப்போதே நீ எங்கள் மகளைக் கலியாணம் செய்துகொள்ளவேண்டும். இனி எங்கள் சீமைமுழுதும் உன் சொந்தந்தான். இப்போது நாங்கள் வைத்துக்கொண்டிருக்கிற பொருள்களெல்லாம் உன்னுடையவைதான். எங்களுக்கு மிகவும் அருமையான இப்பெண்ணைமாத்திரம் நீ மிகவும் பத்திரமாய்க் காத்துகொள்! எப்போதாகிலும் உனக்காவது இவளுக்காவது உங்கள் தேசத்திலிருக்க அனுகூலப்படாமற்போனால், இங்கே வந்துவிடுங்கள்; உங்களுக்கு இஷ்டமானபடி இத்தேசத்தில் சுகமாய் வாழ்ந்துகொண்டிருக்கலாம்' என்று சொல்லி அவளை வேண்டிக்கொண்டு கலியாணத்திற்கு ஆரம்பித்தார்கள்.

அந்தக் கலியாணம் அதிக சிறப்பும் களிப்புமாய்ப் பன்னிரண்டு நாள்வரையில் நடந்தேறிற்று. அந்தக் கலியாண வைபவத்தை நடப்பிக்கவந்த இராக்ஷதர்களுக்குக் கணக்கில்லை. கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, வடகிழக்கு, வடமேற்கு, ஆகாயம், பாதாளம் என்னும் பத்துத்திக்கிலுமிருந்து இராக்ஷதர்கள் தங்கள் அரசன் மகளுடைய கலியாண மகோற்சவத்தைக் கண்டு கொண்டாட அளவற்ற காணிக்கைகளோடு, ஓயாமல் கூட்டங்கூட்டமாய் வந்துகொண்டேயிருந்தார்கள். யாவரும் வந்து நிறைந்தபிறகு ஒரு திவ்விய சபாமண்டபத்திலே நானாதேசத்து ராஜாக்களும் வந்து சூழ்ந்திருக்க ஜவந்தியம்மாளுக்கும் நக்ஷத்திரம்மாளுக்கும் மகா வைபவத்துடனே கலியாணம் நிறைவேறிற்று.

அந்த இராக்ஷதராஜன் தன் மகளுக்கும் மருமகனுக்கும் கொடுத்த வரிசைகளைக் கணக்கிட்டுச்சொல்ல எவராலும் ஆகாது. அவர்கள் கொடுத்த பூஷணங்கள் கடலிலும் அடங்கமாட்டாதவையாயிருந்தன. அவர்கள் கொடுத்த மரகதம் மாணிக்கம் வைடூரியம் கோமேதகம் புஷ்பராகம் முதலான நவரத்தினங்களும், பொன் வெள்ளிச்சாமான்

களும், அளவு சங்கியை இல்லை. தந்தச்சாமான்களோ எண்ணிறந்தவை; இவற்றையெல்லாம் கணக்கிட்டுச்சொல்ல ஒருவனுக்கு ஆயிரம் வயதிருந்தாலும் போதாது. இராக்ஷதராஜன் இந்தச் சாமான்களையெல்லாம் கொண்டுபோவதற்காகத் தன் மகளுடன் அநேகங்கோடி இராக்ஷதர்களையும் யானை குதிரை முதலிய அளவற்ற சேனைகளையும் கொடுத்தான். கலியாணம் நிறைவேறினபின்பு கொஞ்சநாள் அவ்விடத்திலேயேயிருந்து பிறகு ஜவந்தியம்மாள் மாமி மாமன்மார்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தன் பெண்சாதியோடுகூடத் தன் தேசம் போகப் புறப்பட்டாள். உடனே ஒவ்வொரு இராக்ஷதனும் ஒவ்வொரு மலைபோன்ற மூட்டையைத் தலையிலே தூக்கிக்கொண்டு அவளைப் பின்தொடர்ந்துபோனான்.

அவர்கள் எல்லாரும் அத்தேசத்தைக்கடந்து சிலநாளில் பொன்னிலையும் முத்துப்பழமுமுள்ள வெள்ளி விருக்ஷமொன்றைக் கனவு கண்ட ராஜனுடைய தேசம்போய்ச் சேர்ந்தார்கள். அதனருகே போகையில் ஜவந்தியம்மாள், இவ்வளவு இராக்ஷதசேனையும் தன்னோடுகூடப் பட்டணத்துக்கு வந்தால் அதை அடியோடு அழித்துப் புசித்துவிடுமென்று எண்ணி, அந்தச் சேனைகளோடு நக்ஷத்திரம்மாளை அத்தேசத்திற்கு அப்புறமே நிறுத்திவிட்டுத் தான்மாத்திரம் முன் பிரதிக்கினைசெய்து வந்தபடியே அந்தப் பட்டணத்திற்குப் போய் அங்கே ஒருவாரமிருந்தாள். முன் நிச்சயித்திருந்தபடியே அவ்வரசன் மகளுக்கும் ஜவந்தியம்மாளுக்கும் வெகு ஆடம்பரமாய்க் கலியாணம் நிறைவேறிற்று. கலியாணத்தை முடித்துக்கொண்டு ஜவந்தியம்மாள் புறப்படும்போது அவ்வரசன் வேண்டிய ஆடை ஆபரணங்களும், பொன் வெள்ளிச் சாமான்களும், யானை குதிரை முதலிய சேனைகளும் அளவில்லாமல் சீதனமாய்க்கொடுத்துத் தன் மகளையுங்கூட்டித் தன் தேசத்தெல்லை தாண்டுமளவும் தன் பரிவாரத்துடனே வழிவிட்டு அனுப்பினான்.

அவ்விடம்விட்டுப் புறப்பட்டு ஜவந்தியம்மாள், தான் முன் வாக்குத்தத்தஞ் செய்துவந்த மற்றொரு ராஜனுடைய நகரம் போய்ச் சேர்ந்தாள்; அதாவது, ஒரு ராஜகுமாரத்தியின் சலவைக்கல் நடபாவியைத் தாண்டும்படி நேர்ந்த நகரத்தையடைந்தாள். அங்கே போய் அவ்வரசன் மகளை அதிக வைபவத்துடனே கைப்பிடித்துக் கலியாணஞ்செய்துகொண்டு அங்கேயும் சிலநாளிருந்து மாமன்மாமி

மார்களைக் களிக்கச்செய்து, பின்பு அவர்களிடம் செலவுபெற்றுக் கொண்டு அளவற்ற வரிசைகளோடு அவர்களால் மிகவும் வருந்தி வழிவிடப்பட்டவளாய் அந்நகரம்விட்டுப் புறப்பட்டாள்.

அங்கிருந்து வெகு வேகமாய் **ஜவந்தியம்மாள்** தன் சேனைகளுடனே முன் தான் ஒரு அடங்காக்குதிரையை அடக்குவித்த பட்டணம்போய்ச் சேர்ந்து அப்பட்டணத்தரசன் மகளையும் சொன்ன சொல் தவருமல் பாணிக்கிரகணம் செய்துகொண்டு பாட்டு கூத்து முதலிய பலவித விநோதங்களோடு அங்கேயே சிலநாள் கழித்தாள். இவ்வாருகத் தனக்குக் கிடைத்த மனைவிகள் ஐவரோடும், அதாவது நாகராஜன் மகளாகிய **இரத்தினம்மாள்**, ராக்ஷதராஜன் பெண்ணுகிய **நட்சத்திரம்மாள்**, மற்ற மூன்று ராஜகன்னிகைகள் இவர்களோடும், அளவற்ற பரிஜனங்களோடும், யானை குதிரை முதலிய சேனைகளோடும் மிகவும் கோலாகலத்துடன் அங்கிருந்து புறப்பட்டுத் தனக்குப் பிராண பிரியையான **பார்வதியம்மாளை** விட்டுவந்த பட்டணம் நோக்கிச் சென்ருள்.

இப்படி விசேஷவைபவத்துடனே **ஜவந்தியம்மாள்** தன் எசமானனை நல்லரசனுடைய நகரத்தருகே போகும்போது அதைப் பார்த்து அப்பட்டணத்து ஜனங்கள் தம்மரசனுக்கு அறிவிக்க, அவன் யாரோ ஒரு பிறதேசத்து அரசன் தன்னுடன் போராடப் படையெடுத்துவருகிருனென்று மிகவும் திகிலடைந்து ஒன்றும் தோன்ருமல் தத்தளித்துக்கொண்டிருந்தான். இச்செய்தி கேள்விப்பட்டு **ஜவந்தியம்மாள்**, யாரோ ஒருவன் வருகிருனென்றெண்ணித் தாங்கள் அஞ்சி நடுங்கவேண்டாம்; தங்கள் கட்டளையினுல் ராக்ஷதன் சீமைக்குச் சென்றிருந்த சேவகனுகிய ஜவந்திராஜன் போன காரியத்தை முடித்துக்கொண்டு திரும்பிவருகிருன் என்று சொல்லி, வாயுவேகம் மனோவேகமாய்ப் பறந்தோடத்தக்க ஒரு குதிரையின்மேல் வெகு துரிதமாய் அவ்வரசனுக்குச் செய்தியனுப்பினுள். அதைக்கேட்டு அந்த ராஜன் பயம் நீங்கி அதிக சந்தோஷமடைந்தவனுய், மங்கள வாத்தியம் முழங்கச்செய்து உடனே தன் ஆடம்பரங்களோடு கூடப் புறப்பட்டு எதிர்கொண்டுவந்து, மகா வைபவத்துடனே அவளை அழைத்துக்கொண்டு பட்டணம் சேர்ந்தான். பட்டணம்போய்ச் சேர்ந்ததும் **ஜவந்தியம்மாள்** அந்த ராஜாவைப்பார்த்து, 'மகாப்பிரபுவே! மகாராணியாருக்காகப் பொன்னுடை கொண்டுவரும்படி ராக்ஷ

தர் சீமைக்குத் தாஸனை அனுப்பினீர்களல்லவா? அப்படியே இதோ கொண்டுவந்து சேர்ந்தேன்' என்று சொல்லி, ஐந்து ராக்ஷதர் தலையிலிருந்த பெருமூட்டைகளை அவ்வரசனுக்கும், இரண்டு மூட்டைகளை மந்திரிக்குங் கொடுத்தாள். அம்மூட்டை ஒவ்வொன்றிலுமிருந்த மிகச்சிறந்த ஆடையாபரணங்களும், பொன் வெள்ளி ரத்தினம் முதலியவைகளும் ஒவ்வொரு பெரிய வீட்டிலும் கொள்ளாதவையாயிருந்தன.

அந்தப் பட்டணம் போய்ச் சேர்ந்தபிறகு ஜவந்தியம்மாள், தன்னுடன் வந்த சேனைகளெல்லாம் அத்தேசத்திலேயே இருக்குமானால், சிலநாளில் பெரும்பஞ்சம் விளையுமென்று எண்ணி அவரவர்களுக்கு வேண்டியபடி வெகுமானங்கொடுத்து அவரவர் தேசத்திற்கு அனுப்பினாள். தன் மனைவிகளாகத் தான் கொண்டுவந்த ஐந்து பெண்மணிகளுள், மூன்று ராஜகுமாரத்திகளை மாத்திரம் தன்னோடுகூடத் தன் வீட்டிலேயே பார்வதியம்மாளைப்போல வாழும்படி வைத்துக்கொண்டு, சர்ப்பராஜன்மகளும் ராக்ஷதராஜன்மகளுமாகிய மற்ற இருவரும் மேலான அந்தஸ்தும் அழகும் உடையவர்களாகையால் அவர்களைத் தன்னுடன் வைத்துக்கொண்டிருப்பது தகுதியல்லவென்று, அவர்களுக்காக நடுக்காட்டிலே அற்புதமான அரமனையொன்று கட்டுவித்து அதிலே அவர்களை வாசமாயிருக்கச் செய்தாள். இந்தச்செய்தி ஜவந்தியம்மாள் தவிர மற்றெவர்க்கும் தெரியாது.

இப்படியிருக்க ஒருநாள் அந்த ராஜாவின் சிறுபெண் ஒருத்தி ஜவந்தியம்மாளின் பெருமையைப்பார்த்து அதிசயித்துத் தகப்பனண்டைபோய், 'என்னைப் பிரியமுடன் வளர்த்த ஐயாவே! இந்த ஜவந்திராஜனளவு தைரியமும் சாமர்த்தியமும் அழகுமுள்ள புருஷன் வேறொருவனும் இவ்வுலகத்திலிருப்பதாய் என் புத்திக்குத் தோன்றவில்லை. இப்படிப்பட்ட மகா புருஷனுக்கு அல்லாமல் பின் யாருக்கு நான் வாழ்க்கைப்படுவேன்? இவனையே கலியாணம் செய்துகொள்ளவேண்டுமென்று எனக்கு அதிக விருப்பமாயிருக்கிறது' என்று சொன்னதற்கு, அவன், 'குழந்தாய்! நீ இவனைக் கலியாணஞ்செய்துகொள்ள விருப்பங்கொண்டதைப்பார்த்து எனக்கு வெகு சந்தோஷமாயிற்று' என்று சொல்லி, ஜவந்தியம்மாளை வரவழைத்து அதை அப்படியே நிச்சயம்பண்ணினான். அதற்கு ஜவந்தியம்மாள் சொன்னதாவது: 'மகாப்பிரபுவே! தங்களுடைய மகளை நீணம்

புரிந்துகொள்ளும்படியான பாக்கியம் அடியேனுக்குக் கிடைக்கத் தக்கதா? தங்கள் கட்டளைப்படி நடக்கச் சித்தமாயிருக்கிறேன். ஆனால் ஒன்று; இப்போது நாம் செய்யப்போகிற கலியாணம் மிகவும் சிறப்புற்றிருக்கவேண்டும்; ஆதலால் எல்லாத் தேசத்து ராஜாக்களுக்கும் செய்தி அனுப்பி அவர்களை வரவழைக்கும்படி எனக்குக் கொஞ்சக்காலம் அவகாசம் கொடுக்கவேண்டும்' என்று கேட்க, அவன் அப்படியே ஆகட்டுமென்று ஒப்புக்கொண்டான்.

அச்சமயத்தில் ஒருநாள் பார்வதியம்மாள் முகம்வாடிக் கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கக்கண்டு, ஜவந்தியம்மாள், 'தோழியே! இன்றையதினம் நீ ஏன் விசனப்பட்டுக்கொண்டிருக்கிறாய்? உனக்கு ஏதாவது குறையுண்டோ?' என்று கேட்க, அவள், 'என் தாயே! எனக்கு ஒரு குறையும் உண்டாகவொட்டாமல், நீ எல்லா வருத்தங்களையும் நீக்கி நமக்கு நிகரில்லாத பெருமையையும் பாக்கியத்தையும் சம்பாதித்தாய்; ஆயினும் எனக்குச் சந்தோஷமுண்டாகவில்லை; நம்முடைய நாயகன் நினைவு என் மனதைவிட்டு நீங்காமல் எப்போதும் என்னை வருத்திக்கொண்டே இருக்கிறது. எள்ளளவும் ஆதரவற்று அவர் கட்டக் கந்தையும் குடிக்கக் கூழுமில்லாமல் பிச்சாண்டியாய் எங்கே அலைகிறாரோ? என்ன வருத்தப்படுகிறாரோ? எப்படியாவது அவரை ஒருதரம் பார்க்கவேண்டுமென்று என் மனம் பதைக்கின்றது' என்று சொல்லியழுதாள். அதைக்கேட்டு ஜவந்தியம்மாள், 'நல்லது, அப்படியே ஆகட்டும்; விசனப்படாதே, மனதை உறுதிப்படுத்திக்கொண்டிரு; என்னை ஜவந்திராஜனல்லவென்று இந்தப் பெண்பிள்ளைகள் யாராவது இந்த வேளையில் கண்டுகொள்ளப்போகிறார்கள்! எச்சரிக்கையாய்ப் பொறுத்திரு; நமது நாயகனைக் கண்டுபிடிக்கும்படி கூடியவரையில் முயல்கிறேன்' என்றுசொல்லி அவளைச் சமாதானப்படுத்திவிட்டு, இரத்தினம்மாளைப் பார்க்கவேண்டுமென்று காட்டுமாளிகைக்குப் போனாள். அங்கேபோய் மிகுந்த யுக்தியோசனையும் வல்லமையுமுடையவளான இரத்தினம்மாளைக் கண்டு, 'என் கண்மணியே! எனக்கு ஒரு சிநேகிதருண்டு; அவர் பன்னிரண்டு வருஷத்திற்கு முன்னே பைத்தியம் பிடித்துப் பிச்சாண்டிவேடம் பூண்டு போனவிடந் தெரியாமல் ஓடிப்போனார். பின்பு அவர் எவ்விதமானாரோ தெரியாது; அவர் இன்னும் உயிரோடு இருப்பாரானால் அவரைக் கண்டுபிடிக்கவேண்டுமென்று

அதிக அபேக்ஷையாயிருக்கின்றது. அதற்கு வழி எப்படி ?' என்று கேட்க, இரத்தினம்மாள் நல்ல புத்திகூர்மையுடையவளாகையால் நன்றாய்த்தீர ஆலோசித்துச் சொன்னதாவது: 'அவரைக் கண்டுபிடிப்பதற்காக நீ செய்யவேண்டிய சிறந்த உபாயம் என்னவெனில், ஏழைப் பாதேசிகளைப் போஷிப்பதற்காகப் பெரிய அன்னசத்திரம் ஒன்று கட்டுவித்து, இன்னவிடத்தில் சகலமான பாதேசிகளுக்கும் அவரவர் இஷ்டப்படி வேண்டுமளவும் தருமத்திற்குச் சாப்பாடு போடப்படும் என்று சீமைமுழுதும் அறிக்கைசெய்யவேண்டும். அப்படிச் செய்வாயானால், அங்கங்கிருந்து அநேகம் எளியவர்கள் வந்து கூடுவார்கள். அவர்களோடு ஒருவேளை உன் நேசரும் வந்தாலும் வருவார்' என்று சொன்னாள்.

இந்த யோசனையைக் கேட்டு ஜவந்தியம்மாள், இரண்டொரு தினத்தில் அப்படியே செய்வித்தாள். ஏழைகள் அநேகர் வந்து கூடிப்போயினர். அவர்களுக்கு வேண்டியபடி விருந்து விசேஷமாய் நடத்தப்பட்டது. ஜவந்தியம்மாளும் பார்வதியம்மாளும் சமாராதனையை நேரே வந்து நன்றாய் நடப்பிப்பவர்போல நாள்தோறும்வந்து சுற்றிப்பார்த்துக்கொண்டிருந்தார்கள். லோகதாஸ ராஜன் வந்திருந்தால் அவனைக் கண்டுபிடிக்கவேண்டுமென்பது அவர்களுடைய கருத்து. அவர்கள் வெகு கவனமாய் நாள் தப்பாமல் பார்த்துக்கொண்டுவந்தார்கள்; அவன்மாத்திரம் அகப்படவில்லை.

இப்படியிருக்கையில், ஆறுமாதத்திற்குப்பிறகு ஒருநாள் ஜவந்தியம்மாள், விருந்து நடப்பதை வழக்கப்படிச் சுற்றிப்பார்க்கும்போது விருந்தாளிகளுடைய நடுவில் கன்னங்கறேலென்று வற்றி உலர்ந்த உடலும், வாடி வதங்கிச் சுருங்கிய முகமும், குழிந்திடுங்கிய கண்களும், சடைத்தலையும் செம்பட்டமயிருமாய் உடம்புமுழுதும் வெளேலென்று சொறிபிடித்துச் சாம்பற்பூத்து அதன்மேல் காடிபோல முழுமுழு நீளம் மயிர்வளர்ந்து கண்ணுக்கு மிகவும் பயங்கரமான வடிவத்தோடு கோலுங்குடுவையும் சாவிக்கந்தையுமாய், ஒருவன் இருக்கக்கண்டு பார்வதியம்மாளுக்குக் குறிப்புகாட்டி, இதோ பார்த்தாயா நம் புருஷன் என்றாள். அவனுடைய விகாரவடிவத்தைக் கண்டு பார்வதியம்மாள் உடனே அழத்தொடங்கினாள். (அவன் லோகதாஸ ராஜன்தான்; ஆயினும் அவன் பெண்ஜாதிகள்கூட

அவன் இன்னானென்று அறிந்துகொள்ளக் கூடாதபடி அவன் உடம்பு அவ்வளவு மாறிப்போயிருந்தது.) அவள் அழத்துவக்கின தைக் கண்டு ஜவந்தியம்மாள்: 'இச்சமயத்தில் நீ ஒன்றும் பேசாதே; உடனே வீடுபோய்ச் சேர்; இவனை நான் பத்திரமாய்ப் பார்த்துக் கொள்கிறேன்' என்று சொல்லிப் பார்வதியம்மாளை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, காவற்காரன் ஒருவனை அழைத்து, 'இதோ இந்த மனிதனைப் பிடித்துக்கொண்டுபோய்ச் சிறையிலடை' என்று கட்டளையிட்டாள். அந்தக் காவற்காரன் போய்ப் பிடிக்கும்போது லோகதாஸன், 'நீ என்னை என் பிடிக்கிறாய்? நான் யாருக்கு என்ன அபகாரஞ்செய்தேன்?' என்று சொல்ல, ஜவந்தியம்மாள், 'நீ அவன் பேசுவது ஒன்றையுங் கேளாதே; உடனே பிடித்துக்கொண்டு போய்ச் சிறையில் அடைத்துவிட்டு மறுகாரியம் பார்' என்றாள். தனக்கு அவனிடத்திலிருக்கிற ஆசையைச் சிறிதும் வெளியிடக் கூடாதென்பதற்காகவே அவள் அவ்வளவு உறுதியாய்க் கட்டளையிட்டாள். அவள் கட்டளைப்படியே காவற்காரன் லோகதாஸனைக் கொண்டுபோய்ச் சிறைச்சாலையில் அடைத்துப் பூட்டிவிட்டான். தன்னைக் காவல் செய்துபோடவே லோகதாஸராஜன் ஒன்றுந் தோன்றாமல், அங்கிருப்பவர்களைப்பார்த்து, 'இதென்ன, இந்த ராஜா கொஞ்சமும் நியாயமறியாத கொடுங்கோலனாயிருக்கிறார்; இப்போது இவர் என் என்னைக் காவலில் வைத்தார்? நான் யாருக்காகிலும் தீங்குசெய்தேனா? யாரோடாவது சண்டைபோட்டேனா? எங்கேயாவது கொள்ளையடித்தேனா? யாராவது ஒரு கவளம் பிச்சை போடுவார்களாவென்று புண்ணியவான்களுடைய கையை எதிர் பார்த்துக்கொண்டு பன்னிரண்டு வருஷகாலமாகப் பரதேசியாய்த் திரிந்துகொண்டிருந்தேனே' என்றான். தன் கதையைச் சொன்னால் கேட்போர் நகைப்பார்களென்று தான் ஒரு ராஜகுமாரனென்பதை அவன் எடுத்துச் சொல்லவேயில்லை. அவன் சொன்னதைக் கேட்டுக் காவற்காரர்கள், 'எங்கள் பிரபுவைக் கெட்டவரென்று ஒரு போதும் சொல்லக்கூடாது. அவர் எல்லா நீதிகளையும் நன்றாய் உணர்ந்தவர். நீதான் கெட்டவனாயிருப்பாய்; உன் தலையை அவர் வாங்கிவிடப்போகிறாரென்பது நிச்சயம்' என்று சொன்னார்கள்.

அவர்கள் தன்னைச் சிறையில் அடைத்தபிறகு லோகதாஸன் தன்னை என்ன செய்யப்போகிறார்களென்று அங்கிருப்பவர்களை

வேண்டிக்கேட்பான். அதற்கு அவர்கள்: 'ஓ! அதைக் கேட்பானேன்? அது யாவர்க்குந் தெளிவாய்த் தெரிந்ததுதான்; நாளைக் காலையில் உன்னைத் தூக்குப்போடுவார்கள்; அல்லது தலையை வெட்டுவது உனக்கு நன்மையாய்த் தோன்றுகிறபக்ஷத்தில், உன் இஷ்டப்படியே அரமனைவாயிலில் தலையை வெட்டுவார்கள்' என்று சொல்லுவார்கள்.

இது இப்படியிருக்க ஜவந்தியம்மாள் வீட்டிற்குப் போனவுடனே தன் பெரிய சேவகர்களை அழைத்து, 'நீங்கள் இப்படியே சரேலென்று சிறைச்சாலைக்குப் போய், அங்கே நான் காவற்காரன் வசத்தில் ஒப்புவித்திருக்கிற பிச்சாண்டியைப் பல்லக்கில் ஏற்றிக்கொண்டு இவ்விடத்திற்கு வாருங்கள்; அவன் தப்பித்துக்கொண்டு ஓடிப் போவான்! பத்திரமாய் அவனை விடாதபடி கொண்டுவந்து சேருங்கள்' என்று சொல்லி அனுப்பினாள். அவர்கள் அப்படியே அழைத்துக்கொண்டு வந்தார்கள். பின்பு ஜவந்தியம்மாள், அவனைத் தன் அரமனையில் தனிப்புறமான ஓரிடத்தில் கொண்டுபோய் விட்டு மிக்க வல்லவனான ஒரு அம்பட்டனை அழைப்பித்துக் கரடிபோல் உடம்பெல்லாம் படர்ந்திருக்கும் மயிர்கூட்டமெல்லாம் கழியும்படியாக க்ஷௌரகலியாணஞ் செய்வித்து நன்றாய் நீராட்டி உயர்ந்த ஆடைகள் உடுத்தி உசிதமாய் இனிய உணவுகளும் அளிக்கக் கட்டளையிட்டாள்; அவ்வாறே எல்லாம் நடந்தேறின. இவையெல்லாம் கண்டு லோகதூஷன், 'இந்த ராஜா என் விஷயத்தில் எவ்வளவு நல்லவராயிருக்கிறார் பார்த்தீர்களா? இவர் எனக்கு ஒருபோதும் சிக்ஷவிதிக்கமாட்டார்' என்று சொன்னான். அதைக்கேட்டு அவனண்டையிலிருந்த காவற்காரர்கள்: 'ஓ! நீ அப்படியா நினைக்கிறாய்? அவசரப்படாதே; நல்ல உடுப்பு முதலியவைகளால் உனக்கு நன்றாய் அழகுசெய்து போஜனமும் பூர்த்தியாய்ப் போட்டுப் பின்பு கொலைக்களத்திற்குக் கொண்டுபோனால், அப்போது எவ்வளவு விநோதமாயிராது!' என்று இப்படிப் பலவிதமாய்ச் சொல்லி அந்தப் பேதைக்குப் பயமுறுத்திக்கொண்டிருந்தார்கள்.

பின்பு ஜவந்தியம்மாள், அந்தத் தேசத்திலுள்ள சிறந்த வைத்தியர்களையெல்லாம் வரவழைத்து அவர்களை ஒன்று கேட்டாள்: அரசன் ஒருவன் தன்னுடைய ராஜலக்ஷணங்களும் மேனியும் அழகும் அடியோடு மாறிப்போம்படி பன்னிரண்டு வருஷகாலம்

காட்டிலே திரிந்துகொண்டிருப்பானுனல், அவனுக்கு மறுபடி முன் அழகு வரும்படி செய்ய உங்களுக்கு எத்தனை நாள் செல்லும் என்று கேட்க, அவர்கள், அதேகாரியமாய் வேறுவேலை யில்லாமல் மிக்க கவனத்தோடு பார்த்துவந்தால், ஆறுமாதத்தில் செய்யலாமென்றார்கள். அதைக்கேட்டு அவள், 'நல்லது, இதோ என் அரமனையில் என் சிநேகிதர் ஒருவர் இருக்கிறார்; நான் இப்போது சொன்னது அவரைப்பற்றியே; உங்கள் இஷ்டப்படியே நீங்கள் அவருக்குச் சிகிச்சைசெய்யுங்கள்; ஆறுமாதமானதும் அவருக்குச் சுபாவமான வலிமையும் சௌளக்கியமும் நிறமும் அழகும் வந்திருக்கவேண்டும்' என்று சொல்லியனுப்பினுள்.

அதுமுதல் லோகதாஸன் வைத்தியர்களுடைய வசமாகி, அவர்களால் பத்திரமாகப் போஷிக்கப்பட்டுவந்தான்; ஆயினும் அக்காலத்தில் அவனுக்கு ஜவந்தியம்மாள் இன்னுரென்பதுந் தெரியாது; தன்னை ஏன் இப்படிப் போஷிக்கிறார்களோ அதுவுந்தெரியாது. ஜவந்தியம்மாள் மாத்திரம் நாள்தோறும் அவனைப் போய்ப்பார்த்து அவனோடு உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பாள். அப்போது அவன் தன்னண்டையில்இருப்பவர்களைப் பார்த்து, 'ஓ புண்ணியவான்களே! இந்த ராஜா எவ்வுளவு நல்லவர் பார்த்தீர்களா? நாள் தப்பினுலும் இவர் என்னைப் பார்க்கவருவது தப்புகிறதில்லை; என்னிடத்தில் இவர் மிகவும் பக்ஷமாயிருக்கிறார்; எனக்கு இவர் ஒரு கெடுதியும் செய்ய மாட்டார்' என்றுசொல்ல, அதைக்கேட்கிறவர்கள், 'அவசரப்படாதே அப்பா; நீராழங்கண்டாலும் நெஞ்சாழம் காணக்கூடாதென்பதை நீ கேட்டதில்லையோ? அதிலும் அரசர்களுடைய உள்ளத்தை ஆழ்ந்தறிய எவராலாகும்? அரசு அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும் என்பதை நினைத்து நீ என்னவோ பதைக்கிறாய்; எங்கள் அரசன் அப்படிப்பட்டவனன்று; குளிர்ந்தகொள்ளி; இத்தனைக்கும் கடைசியில் வட்டியும் முதலுமாய்த் தீர்ந்துபோகப்போகிறது பார்' என்று இப்படிச் சொல்லி அவனுக்குத் திகிலுண்டாக்கிக்கொண்டு விநோதமாய்த் தங்கள் காலத்தைக் கழித்துக்கொண்டிருந்தார்கள்.

இப்படியிருக்க, ஒருநாள் ஜவந்தியம்மாள் தன்னிடத்தில் அதிக பக்ஷமாய் நடக்கக்கண்டு லோகதாஸன் தன் காவற்காரர்களைப் பார்த்து, 'இனி இந்த ராஜாவினிடத்தில் எனக்கு எவ்வளவும் அச்சமில்லை, இன்றைத்தினம் என்னிடத்தில் எவ்வளவு விசுவாசமாயிருந்தார்!

அதை நீங்கள் பார்க்கவில்லையா?'' என்று அகமகிழ்ந்து உரைக்க, அவர்கள், 'மெய்தான்; இதுவும் அவர்க்கு ஒரு வேடிக்கை. அதைக் கண்டு நீ துள்ளிப்போகாதே; பூனை எலியோடு விளையாடுவதுபோல் அவர் இப்படித்தான் கொஞ்சகாலம் உன்னோடு விளையாடிக்கொண்டிருப்பார்; மூன்றுமாதங்கழித்து அவர்க்குப் பிறந்தநாள் வருகிறது; அன்றையதினம் உன்னைக்கொல்ல நினைத்திருப்பதுபோல் தோன்றுகிறது. ஆயிற்று! ஆயிற்று! இதோ அந்த நாள் வந்துவிட்டது' என்று பதில் உரைத்தார்கள்.

ஜவந்தியம்மாளுடைய பிறந்ததினத்திலேதான் அந்த அரசன் மகளுக்கும் கலியாணம் நடக்கும்படி தீர்மானமாயிற்று. வெகுநாளாய் அதற்கு வேண்டிய காரியங்களை நடத்த முயற்சிகள் நடந்து வந்தன. அந்தப் பட்டணத்திற்கு வெளியில் பன்னிரண்டு சதுரமைல் அளவுள்ள ஒரு பெரிய மைதானத்திலே பிறதேசத்தரசர்கள் வந்து இறங்குவதற்காகப் பலவகைப் பட்டாடைகளாலும் சால்வைகளாலும் தகடிகளாலும் விசித்திரமாய் அநேகங் கூடாரங்கள் அமைக்கப்பட்டன. அவற்றின் மத்தியில் யாவரும் ஒன்றாய்க் கூடுவதற்காகச் சுவர்ணமாளிகைபோல் அநேகவித அலங்காரங்களோடு மிக்க விசாலமாய்ச் சிறந்த சபாமண்டபமொன்று சமைக்கப்பட்டது.

அப்போது ஒருநாள் ஜவந்தியம்மாள், 'தோழி! என் பிறந்த தினத்தன்று நான் உன் கணவனோடு உன்னைக் கூட்டுவிக்கிறேன்' என்று சொல்லக்கேட்டு, பார்வதியம்மாள், கொஞ்சம் வெறுப்படைந்தவள் போல முகஞ்சுளித்து, 'நீ சொல்வது சரிதான், நம்முடைய நாயகனைச் சிறந்த வடிவழகும், யாவரும் பார்த்து விரும்பத்தக்க குளிர்ந்த காட்சியும் உள்ளவனாகக் கண்ட கண்ணால், இப்போது மிகவும் பயங்கரமான ஒரு முரட்டு மனிதனைக் காண எனக்கு மிகவும் அருவருப்பும் வெறுப்புமுண்டாகின்றது. இப்போது அவருடைய விகாரவடிவத்தை மனதினாலேகூட நினைக்கக்கூடவில்லையே' என்றாள். அதைக் கேட்டு ஜவந்தியம்மாள் நகைத்து, 'ஆம், நீ பார்த்தபோது அவர் அப்படித்தானிருந்தார்; ஆயினும் அவருடைய உருவம் எவ்வளவோ அழகாக மாறிப்போயிருக்க நீ காணப்போகிறாய். முன் இருந்த வடிவழகு வருவதற்காக இப்போது அவர்க்கு எவ்வளவு உபசாரங்கள் நடந்துவருகின்றன தெரியுமா? நாம் இன்னாரென்பது மாத்திரம் இன்னும் அவர்க்குத் தெரியாது. நீ இத்தனை நாள் பொறுத்

திருந்தது பெரிதன்று; இந்தச் சமயத்தில் நான் ராஜாவன்று, ஆண் வேடம்பூண்ட ஒரு பெண்பிள்ளையென்பதை யாரோடாவது வெளியிடப்போகிறாய், கொஞ்சம் கவனமாயிரு' என்று சொல்ல, அவள்: 'எனக்கு இவ்வளவு நன்மை விளைவித்த உனக்கு விரோதமாய் நான் ஒரு காரியஞ்செய்யத் துணிவேனோ? பன்னிரண்டு வருஷகாலமாய் இங்கே நாமிருவரும் தங்கை தமக்கைபோல் ஒரு குறைவுமில்லாமல் மிகவும் மேன்மையாய் வாழ்ந்துகொண்டிருப்பது உன்னுடைய பெருமையாலன்றோ; நன்றாய் ஆய்ந்து பார்க்குமளவில், உன்னவ்வளவு சாமர்த்தியமுள்ள பெண்பிள்ளை இவ்வுலகத்தில் இதுவரையில் உண்டானதுமில்லை, இனி உண்டாகப்போகிறதுமில்லை' என்று பதில் உரைத்தாள். இப்படியாக லோகதாஸன் உடல் சீர்ப்படுமளவும் கொஞ்சக்காலம் விநோதமாய்க் கழிந்தது.

அந்தக் கலியாண மகோற்சவத்திற்காக வரவழைக்கப்பட்டது பல தேசத்து ராஜாக்களுள் லோகதாஸராஜனுடைய தந்தையான சிங்கராஜனும் அவன் மனைவியும், ஜவந்தியம்மாளுடைய தந்தையான சிங்கராஜன் மந்திரியும் அவன் மனைவியும் முக்கியமாய் வரவழைக்கப்பட்டார்கள். ஜவந்தியம்மாள் அவரவர்களுடைய அந்தஸ்துக்கேற்றபடி பொன் வெள்ளி முத்து மாணிக்கம் முதலான பல சிறந்த பொருள்களால் பற்பலவிதமாய் ஆசனங்கள் அமைத்து, அவற்றின் மத்தியில் தன் எஜமானனை அரசனுக்கும், தன் தகப்பனுக்கும், அவன் எஜமானனுக்குமாக, மிகவும் அற்புதமாய் மூன்று சிங்காசனமேற்படுத்தி, அந்தச் சபாமண்டபத்தின் நடுவே சிறிதாய்ச் சிங்காரமண்டபமொன்று அமைத்து அதன் மத்தியில் தனக்கொரு ஆசனமும் தன்னைச் சுற்றித் தன் மனைவிகளுக்கு ஆறு ஆசனங்களும் எதிரே லோகதாஸனுக்கு ஒன்றும் அமைக்கும்படி ஏற்பாடு செய்திருந்தாள். அந்த ஏற்பாட்டின்படியே எல்லாம் செம்மையாய்ச் செய்துமுடிந்தபிறகு அந்தந்த அரசர்களை அவ்வவ்வாசனங்களில் அவரவருடைய பெருமைக்கேற்றபடி வீற்றிருக்கச் செய்தாள். பேருரில்லாத யாரோ ஒரு மந்திரிக்கும் அக்கிராசனங்கிடைத்ததேயென்று யாவரும் மிக்க ஆச்சரியமடைந்தார்கள். தான் கோரியிருந்தபடியே யாவரும் வந்து கூடி அவரவர் ஆசனத்தில் உட்கார்ந்தபிறகு ஜவந்தியம்மாள், தன்னுடைய சிறந்த உடைகளை லோகதாஸ ராஜனுக்கு உடுத்தி அவனை முன்னிட்டுக்கொண்டு, தானும்

அழகாய் ராஜவேஷந்தரித்துப் பார்வதியம்மாளோடு புறப்பட்டு தேவதாஸ்திரீகளும் பார்த்து ஆசைகொள்ளத்தக்க சௌந்தரியமுள்ளவர்களான ரத்தினம்மாள் நக்ஷத்திரம்மாள் இவர்களும், மற்ற மூன்று ராஜகுமாரத்திகளும் உயர்ந்த ஆடையாபரணங்கள் அணிந்துகொண்டு பின்தொடர்ந்துவர, மகா வைபவத்துடனே ஆஸ்தான மண்டபத்திற்குச் சென்றாள். இப்போதும் அவள் இன்னாளென்பது லோகதாஸனுக்குத் தெரியாது. இப்படிப் பலவித ஷேவாத்தியங்களோடும் அளவற்ற பரிஜனங்களோடும் புறப்பட்டுச் சபாமண்டபத்து மத்தியில் அமைத்த சிறு சிங்காரமண்டபத்திற்சென்று சபையார்க்குத் தண்டனிட்டு ஜீவந்தியம்மாள், சுற்றிப் பின்புறத்தில் பெண்சாதிகளையும் எதிரே புருஷரையும் உட்காரச்செய்து மத்தியில் தானும் உட்கார்ந்தாள். உட்கார்ந்து சபையில் சகலமானபேரும் வந்து நிறைந்திருக்கக்கண்டு அவர்களைப்பார்த்து அடியில்வருமாறு ஒரு அறிக்கை செய்யலானாள்:—

கேளுங்கள், அரசர்களே! யான் இப்போது இந்தச் சபைமுன்னிலையில் ஒரு சிறு விண்ணப்பஞ்செய்கிறேன். அனைவரும் அதற்குச் சற்று செவிகொடுக்கக் கோருகிறேன். நான் என் மனையாளோடு கூட இப்பட்டணத்திற்குவந்து பன்னிரண்டு வருஷகாலமாய் இந்த மகாராஜாவினிடத்தில் உத்தியோகஞ் செய்துவருகிறேனாதலால், என்னுடைய நடத்தைகளைப்பற்றி இந்தப் பிரபுவுக்கு வெகு நன்றாய்த் தெரிந்திருக்கலாம். இவருடைய காரியமாக நான் அரக்கர் சீமைக்கு யாத்திரைபோயிருக்கையில் நடந்த செய்கைகளெல்லாம் இதோ பக்கத்திலிருக்கின்ற என் பத்தினிமார்களுக்கு நன்றாய்த்தெரியும். அதிருக்கட்டும், நான் இப்போது சொல்ல வந்தது இதுவன்று. இதோ என்னெதிரே அக்கிராசனத்தில் வீற்றிருக்கும் அங்கதேசத்தரசருக்கு லோகதாஸனென்று ஒரு குமாரருண்டு. அந்தக் குமாரர் தம்முடைய மந்திரிமகளை மணம்புரியக் கருதியிருப்பது கேள்விப்பட்டு இவ்வரசர், 'நாம் மந்திரி மகளைக் கலியாணஞ்செய்துகொள்வது யோக்கியமன்று, வேண்டாம், என் சொல் தள்ளிவிட்டு உன் மனம்போனபடியே நடப்பாயானால் உன்னை நான் நாட்டினின்றும் துரத்திவிடுவேன்' என்று சொல்லிப் பலவாறு மறுத்தும், அவ்விளவரசர் அதைக் கேளாமல் அந்தப் பெண்ணைக் கலியாணஞ்செய்துகொண்டார். அதைக்கண்டு அவ்வரசரும் சொன்னதைச் சொன்னபடியே நடத்தி

விட்டார். இது யதார்த்தமென்பதை இவ்வங்கதேசத்தரசரே அங்கீகரிப்பார். பின்பு அந்தக்குமாரருடைய கதி எவ்விதமாயிற்றோ அது இவர்க்குத் தெரியாது. நான் தெரிந்தவரையில் சொல்லுகிறேன் கேளுங்கள். (இப்படிச் சொல்லக்கேட்டுச் சிங்காராஜனும் லோகதாஸனும் இதென்னவென்று பிரமித்து அவளையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.) அவ்விளவரசர் நாட்டினின்றும் ஓட்டப்பட்டுத் தன் இரண்டு மனைவிகளோடு கொஞ்சக்காலம் காட்டில் அலைந்து பின்பு அப்பேதைப்பெண்களைத் தனியே நடுக்காட்டில் விட்டுவிட்டு ஆண்டிவேடம் பூண்டு ஓடிப்போயினார். பின்பு அப்பெண்கள் எவ்விதமானார்களோ தெரியாது. (இதைக்கேட்டு லோகதாஸன், ஓகோ! த...துவரையில் நம்மைச் சேவகர்கள் வெருட்டிக்கொண்டிருந்ததெல்லாம் பொய்யென்று எண்ணியிருந்தோமே, இந்தக் குற்றத்திற்காக ...மைக் கொலைசெய்யப் போகிறார்களோவென்று மனந்தத்தளித்து ...றான்.) இப்போது நான் சொன்ன விருத்தாந்தம் ஓயாமல் நா...டிலும் காட்டிலு மல்லாடுகிறவரான என் பிராணசிநேகிதராகிய இ...க்கு நன்றாய்த் தெரிந்திருக்கலாம். நல்லது, இவரை அழைத்து இவர் வரலாற்றைச் செம்மையாய் விசாரியுங்களென்று சொல்லி லோகதாஸனைச் சுட்டிக்காட்ட, உடனே அவனெழுந்துநின்று, அவள் சொன்னதெல்லாம் உண்மைதானென்று ஒப்புக்கொண்டு, தன் கதையை ஆதியோடந்தமாய்ச்சொல்லி அப்பெண்களைத் தான் நடுக்காட்டில் விட்டுப்போனது பிசகுதான், பொறுக்கவேண்டுமென்றான். உடனே ஜவந்தியம்மாள், அண்டையில் அமைந்திருந்த ஒரு அறைக்குள் நுழைந்து தன் ராஜவேஷத்தைக் களைந்து தன் இயற்கையான பெண்வடிவத்தோடு வெளியேவந்து, பார்வதியம்மாளைக் கைபிடித்தழைத்துக்கொண்டு லோகதாஸனோடுகூடச் சிங்காராஜனெதிரேபோய் நின்று எங்கள் இருவரையும் நீங்கள் என்றைக் காவது பார்த்திருப்பீர்களாவென, சிங்காராஜன் சற்று நிதானித்துப் பார்த்து, அவ்விருவரும் தன் மருமக்கள்தாமென்று தெரிந்துகொண்டு உடனே எழுந்துவந்து ஜவந்தியம்மாளை அணைத்து உச்சிமோந்து, என் பெருமைக்குழந்தாய்! நீ என் மகனுக்கு நேர்ந்த பெருந்துயரத்தைத் தீர்த்த பாக்கியவதியன்றோ? இப்படிப்பட்ட பெருங்காரியத்தைச் செய்துமுடிக்க வல்லவர் உன்னைத்தவிர வேறொருவர் உலகிலுண்டோ? உன்னுடைய யுக்தி விவேகங்களுக்கும் கற்பின

பெருமைக்கும் நான் என்னசொல்வேன்! பன்னிரண்டு வருஷ காலமாய் இவ்வளவு வருத்தப்பட்டு உன் கணவனைத் தேடிப்பிடித்தாயே; நீ சகல சாம்பிராஜ்யமும் பெற்று ஒரு குறையுமின்றி வாழ்ந்திருக்கக்கடவாய் என்று வாழ்த்தினான்.

இவ்வதிசயத்தைக்கண்டு யாவரும் மலர்ந்தகண் மூடாமலே பிரமித்துநிற்க, ஜவந்தியம்மாள் லோகதாஸனைத் தண்டனிட்டு: ஓ என் பிராணநாதனே! நான் உன்னையே தெய்வமாகக்கொண்ட உன்னடியாள்; பன்னிரண்டு வருஷத்திற்குமுன் பார்வதியம்மாளுடன் நடுக்காட்டிலே விட்டுவிட்டு ஓடிப்போனாயே, அந்த ஜவந்தியம்மாள் அடியாள்தான்; பார்வதியம்மாள்கூட இதோ நிற்கின்றாள் பார்; இதோ விலையில்லாத பலவித பூஷணங்களும் ரத்தினங்களும் ஆடைகளும் யானை குதிரை ஒட்டகம் முதலியவைகளும் போர்வீரர்களும் வேலையாட்களும் இன்னும் அநேகம் பொருள்களும் காணப்படுகின்றனவே; இவற்றையெல்லாம் நீ கைக்கொள்ளவேண்டும்; இவை யாவும் உன்னுடையவைதாம். உன் அடியாளாகிய நான் இவற்றையெல்லாம் உனக்காகவே தேடிக்கொண்டுவந்தேன் என்றாள்.

ஜவந்தியம்மாளையும் பார்த்து அவள் சொன்ன சொற்களையும் கேட்டபோது, லோகதாஸனுடைய மனநிலை இத்தன்மையதாயிருந்ததென்று சொல்ல எவராலாகும்! அதன்மேல் அவன் ஒன்றும் பேச நாவெழாமல் ஆனந்தக்கண்ணீர் பெருக்கி நின்றான்.

அங்கே வந்து கூடியிருந்த பிறதேசத்து ராஜாக்களும் ராணிகளும் மற்றுமுள்ள அநேகம் பிரபுக்களும் இப்படிப்பட்ட பேருதவி செய்த பெண்மணியை இதுவரையில் யாராயினும் எங்கேயாவது கேள்விப்பட்டதுண்டோ என்று சொல்லி, ஆச்சரியப்பட்டார்கள். முக்கியமாய், இதுவரையில் ஜவந்தியம்மாளுக்கு வேலைகொடுத்துக் காப்பாற்றினவனும் தன் பெண்ணை அன்றையதினம் அவளுக்குக் கலியாணஞ் செய்துகொடுக்கத் தீர்மானித்திருந்தவனுமான அத்தேசத்து நல்லரசன், இதென்ன புதுமையென்று ஆச்சரியக்கடலுள் அமிழ்ந்துபோயினான். இப்போதுதான் ஜவந்தியம்மாள் ஆணல்ல, பெண்பிள்ளையென்று அவனுக்குத் தெரிந்தது. ஜவந்தியம்மாளுக்கு மனைவிகளாகப் பாவித்துக்கொண்டிருந்த மகா சௌந்தரியமும் சாமர்த்தியமும் உடையவர்களான ஐந்து பெண்மணிகளும்,

இதென்ன ஆச்சரியம், இப்படிப்பட்ட மேலான வடிவழகுள்ள பெண்ணரசி கூடப் பூலோகத்திலுண்டோ! இவளுடைய வல்லமையால் நாம் அனைவரும் வஞ்சிக்கப்பட்டுப் போனோமேயென்று திகைத்து நின்றார்கள். அந்த அற்புதத்தைப் பார்த்து யாவரும் சிறிது நேரம் வியந்துகொண்டிருந்து பின்பு லோகதாஸ ராஜன், ஜவந்தியம்மாள் பார்வதியம்மாளாகிய தன் இரண்டு மனைவிகளையும் மறுபடியும் விவாகஞ் செய்துகொள்வதுமன்றி, இரத்தினம்மாள் நக்ஷத்திரம்மாள் அந்த நல்லரசன் சிறுமகள் மற்ற மூன்று ராஜகன்னிகைகள் ஆகிய ஆறு பெண்மணிகளையும் கலியாணஞ்செய்துகொண்டு தகப்பனோடு தன் தேசம்போய்ச் சேரவேண்டுமென்று ஏற்பாடு செய்தார்கள். அப்படியே ஒருநாளும் ஒருவரும் காதினாலும் கேட்டிராத விசேஷ வைபவத்துடனே அவர்களுக்குக் கலியாணம் நடத்தப்பட்டது. அன்று நடந்த அதிசயங்களை எடுத்துரைக்க ஒருவராலுமாகாது. இப்படி மிகவும் கோலாகலமாய் அனைவருங்கண்டு களிக்கக் கலியாணஞ்செய்துகொண்டு லோகதாஸன் தன் எட்டு மனைவிகளோடும், தாய்தந்தையர்களோடும், மந்திரி முதலியவர்களோடும், அளவற்ற சேனைகள் புடைசூழ்ந்துவரப் புறப்பட்டுத் தன் தேசம் போய்ச்சேர்ந்து மிகவும் சௌக்கியமாக நெடுநாள் வாழ்ந்துகொண்டிருந்தான். இக்கதையைப் படிப்பவர்களும் கேட்பவர்களுங்கூட ஒரு குறையுமின்றி எந்நாளும் மேன்மைபெற்று வாழ்வார்கள்.

## 4-வது. சத்தியமே ஜயம்

வெகுகாலத்திற்குமுன் அழகிலும், செல்வத்திலும், விவேகத்திலும், வல்லமையிலும், பூததயை பச்சாத்தாபம் முதலியவைகளிலும் மற்ற அரசர்களை விட மிகவும் மேன்மைபெற்றவனுன மராட்டி அரசன் ஒருவன் இருந்தான். அவனுக்கு ஒரே தன்மையுடையவர்களாய்ப் பன்னிரண்டு பத்தினிகளிருந்தார்கள். அவர்களோடு சுகமாக வாழ்ந்துகொண்டிருந்த அந்த ராஜாவுக்கு, ஒருத்தியினிடத்திலாவது புத்திரனுண்டாகவில்லை. எப்படியாவது சந்தானம் உண்டானுற்போதுமென்று அவன் சுதேசத்திலும் அந்நியதேசங்களிலுமுள்ள சகலமான தேவதைகளுக்கும், ஆலயம் கோபுரம் மண்டபம் பிராகாரம் வாவி தடாகம் முதலியவைகளைப் புதிதாய்ப் பிரதிஷ்டை செய்விப்பது, இடிந்தவைகளைப் பழுதுபார்ப்பது முதலான திருப்பணிகள் செய்தான்; அபிஷேகம் நிவேதனம் உற்சவம் முதலான நித்திய நைமித்தியங்களெல்லாம் செய்தான்.; நோன்பு, ஏழைகளுக்கு அன்னமிடல், புண்ணிய கதைகள் கேட்டல் முதலான பல தானதருமங்கள் செய்தான். என்னசெய்தும் சந்தான முண்டாகவில்லை. அதனுல், தேசசஞ்சாரமாவது பண்ணினுல் பாவங்கழிந்து பிள்ளை பிறக்குமோவென்று, மந்திரி பிரதானி முதலிய பரிஜனங்களுடனே தேசசஞ்சாரம் பண்ணப் புறப்பட்டான்.

அப்படிப் போம்போது ஒரு தேசத்து நடுவிலே பூஞ்செடிகளும் நிழல் மரங்களும் நிறைந்த ஒரு தோப்பு காணப்பட்டது. அதினுள் சென்று சுற்றிப்பார்க்குமிடத்தில் இலை பூ ஒன்றுமில்லாமல் நூற்றொரு காயோடுகூட இரண்டடி உயரமுள்ளதாய்க் கத்தரிச்செடி போன்ற செடியொன்று தென்பட்டது. அதைக்கண்டு ராஜா மந்திரி

யைப்பார்த்து, இந்தச் சிறியசெடி இலை பூ ஒன்றுமில்லாமல் நூற்றொரு காயோடுமாத்திரம் கூடியிருப்பதற்கு என்னகாரணம்? இதற்கு நீ என்ன சொல்லுகிறாயென்று கேட்க, மந்திரி, மகாராஜாவே! நான் சொல்லுகிறது தங்களுக்குப் பொய்யென்றாவது, பரிகாசமென்றாவது, சமயத்துக்கேற்றபடிச் சொன்னேனென்றாவது, எப்படித் தோன்றினபோதிலும், என்னிடத்தில் கோபம்செய்து என்னைச் சிட்கிக்கவில்லையென்று வாக்குத்தத்தம் பண்ணினால் இதன் விவரங்களை வெளிப்படுத்துவேன் என்றதற்கு, அரசனும் அப்படியே ஆகட்டும், சொல்லெனவே, மந்திரி: இந்தத் தோட்டக்காரனுக்குப் பூம்பாவை என்று ஒரு பெண்ணிருக்கிறாள். அந்தப் பெண்ணை யார் கலியாணம் பண்ணிக்கொண்டாலும் அவருக்கு அவளிடத்தில் நூறு பிள்ளைகளும் ஒரு பெண்ணும் பிறக்குமென்பது இதன் கருத்தென்றான், அதைக்கேட்டு அரசன், ஆயின், அந்தப்பெண்ணை எவ்விதமாயாவது, நான் கலியாணம் பண்ணிக்கொள்ள வேண்டும்; அதற்கு என்ன உபாயம் சொல்லென்று கேட்டான். அதற்கு மந்திரி, மகாராஜாவே! தங்களுடைய சேனைகளையெல்லாம் அனுப்பிவிட்டுத் தாங்களும் பட்டணத்துக்குப் போய்விடுகிறதாய் விளம்பரஞ் செய்வித்து, தாங்கள் மாத்திரம் இவ்விடத்திலேயே சிலநாள் வரையில் மறைந்திருக்கவேண்டும். அந்தப்பெண் இந்த வனத்தில் பூ முதலானவை பறிக்கவருவாள்; அப்போது தருணம் பார்த்துத் தக்கபடி உபாயம் செய்து அவளைச் சுவாதீனம் பண்ணிக்கொள்ளலாமென்று சொன்னான். அரசன் அதைக்கேட்டு அப்படியே தன்னுடைய சேனை பரிவாரமுதலான யாவற்றையும் பட்டணத்திற்கு அனுப்பிவிட்டுத் தான்மாத்திரம் அங்கேயே ஒளித்திருந்தான்.

அப்படியிருக்க ஒருநாள் அந்த ராஜா பூம்பாவை என்கிற பெண் அந்தப் பூந்தோட்டத்தில் வந்து புஷ்பமெடுத்துக்கொண்டிருக்கக் கண்டான். அப்போது அந்தப் பெண்ணுக்குச் சுமார் பன்னிரண்டு வயது. பட்டணமென்கிற பெயரையே அறியாத காட்டுப் பூச்சியான அந்தப் பெண் அதிக அழகும் கம்பீரமான தோற்றமுமுள்ள இந்த ராஜாவைப்பார்த்து வெட்கமும் அச்சமுமுற்று விரைவாக வீட்டுக்கு ஓட, ராஜாவும், அந்தப் பெண்ணினுடைய அன்ன நடையையும் குதிக்காலில் புரளுகிற தலைமயிர்ப் பின்னலையும் தேவர்கள்கூடக்கண்டு மயங்கும்படியான மேனியையும் பார்த்து, ஆசை

யுடன் அவளைப் பின்தொடர்ந்து சென்றான். அந்தப் பெண் வீட்டுக்குள்ளே நுழைந்து சரேலென்று தெருக்கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டாள். உடனே ராஜாவும் போய்க் கதவை இடிக்க, அந்தப் பெண்ணினுடைய தகப்பன் வந்து, நீ யார்? ஏன் கதவை இடிக்கிறாயென்று கேட்டதற்கு, அரசன்: நான் இந்தத் தேசாதிபதியாகிய ராஜா; உன் பெண்ணினிடத்தில் ஆசைகொண்டு அவளை விவாகம் செய்துகொள்ள வந்திருக்கிறேனென்று சொன்னான். அதைக்கேட்டு அந்தப் பூந்தோட்டக்காரன், நீ இந்த மோசவார்த்தை யாரண்டை சொல்லுகிறாய்? எங்கள் ராஜா இந்நேரம் இவ்விடம் விட்டு வெகுதூரம் போயிருப்பாரே! நீ ராஜனல்ல போ; இந்தப் பரிகாசமான பேச்சு என்னிடத்திலேயே பேசுகிறாய்? ராஜாவானால் உன்மட்டு மிருக்கட்டும்; நான் எளியவனானாலும் என் பெண் விஷயத்திலும் என் விஷயத்திலும் இப்படிப்பட்ட ஏளனமான சொல்லைச் சொல்ல இடங்கொடேன்; போபோவென்று சொல்ல, ராஜன், நான் இந்தத் தேசாதிபதி தான்; நான் இங்கே இருப்பதாகத் தெரிந்தால் இந்த வனத்தில் வசிக்கின்ற உங்கள் ஜனங்கள் வெளியில் வரமாட்டார்களென்று ஊருக்குப் போவதாக எங்கும் பறை அறைவித்து ஒளித்திருந்தேன். உங்கள் தோட்டத்தில் இலை பூ ஒன்றும் இல்லாமல் காய்கள் மாத்திரம் நிறைந்த ஒரு சிறு செடியைக் கண்டு, அதன் விவரத்தை மந்திரிமூலமாய் அறிந்து, உன்னுடைய பெண்ணையும் அவளால் எனக்குண்டாகப்போகிற சந்ததி முதலான சௌக்கியங்களையும் தெரிந்துகொண்டு தனித்திருந்து, உன் பெண்ணையும் அவ்விடத்தில் பார்த்து அவளைப் பின்தொடர்ந்து உன் வீட்டுக்கு வந்தேன்; உன் மகளை நான் விவாகம் செய்துகொள்ளவேண்டும்; நான் ராஜன்தான், சத்தியமாகவே சொல்லுகிறேன்; கதவைத் திற; உன் பெண் தாழ்ந்த ஜாதியென்று நான் அவளை அவமானம் செய்கிறதில்லை; அவளையே பட்டஸ்திரீயாக வைத்துக்கொள்ளுகிறேனென்று சொல்ல, தோட்டக்காரனும் அந்தப்பேச்சை நம்பிக் கதவைத்திறந்து பார்த்தான். ராஜாவென்று நிச்சயமாய்த் தெரிந்தது. அதனால் பெண்ணை அவனுக்கே விவாகம் செய்துகொடுத்து, அவனோடு பட்டணத்திற்கு அனுப்பிவிட்டான்.

ராஜாவும் தோட்டக்காரனைப் பலவிதமாய்ச் சந்தோஷப்படுத்திப் பூம்பாவையை அழைத்துக்கொண்டு பட்டணம்போய்ச் சேர்ந்தான்.

அதைக்கண்டு அவன் மூத்த மனைவிகளான பன்னிரண்டு ராஜஸ்திரீகளும், தாழ்ந்த ஜாதியில் ஒரு பெண்ணை விவாகஞ்செய்துகொண்டு நமக்குச் சரியாகவைக்க அரசன் யோசித்திருக்கிறது எவ்வளவும் சரியல்லவென்று எண்ணி, அந்தப் பெண்ணைப் பகைத்து அவளுக்குத் தங்களால் இயன்றமட்டும் தீங்கு விளைவிக்க யோசித்தார்கள். இதை ராஜா எப்படியோ அறிந்துகொண்டு வேறொரு உப்பரிகைகட்டி, அதில் அந்தப் பெண்ணை வைத்துக் கொஞ்சகாலம் வெகு சௌக்கியமாக சம்ரட்சணை பண்ணிக்கொண்டு வந்தான்.

அப்படியிருக்க, அவனுக்கு துரைத்தனக்காரியமாய் வெகுதூர தேசம் போகவேண்டிய அவசரமொன்று நேரிட்டது. நேரிடவே அவன், தன் மூத்த மனைவிகள் இளையாளுக்கு ஏதாவது தீங்குசெய்வார்களென்று நினைத்துப் பூம்பாவையைப் பார்த்து, என் கண்மணியே! நான் அவசியம் தூரதேசம் போகவேண்டியிருக்கிறது; போய்ச் சீக்கிரமாய் வந்துவிடுகிறேன்; அதற்குள் உனக்கு ஏதாவது சங்கடம் நேரிட்டால் இந்த மணியை அடி; நான் எங்கிருந்தபோதிலும் அதைக்கேட்டவுடனே வந்து, உன் சங்கடத்தை நீக்கிவிடுகிறேனென்று சொல்லி, தங்கத்தினாற் செய்த ஒரு மணியை அவள் கையில் கொடுத்துவிட்டுப் பிரயாணப்பட்டுப் போனான். அவன் அரைநாழிகைவழி தூரம் போகிறதற்குள்ளாகவே அந்தப் பெண், இங்கே நாம் மணியை அடித்தால் தூரத்திலிருக்கிறவருக்கு எப்படிக் கேட்கும், இந்த மணியின் பெருமையைப் பார்க்கவேண்டுமென்று அதை அடித்தாள். அடித்தவுடனே ராஜன் ஓடிவந்து, பெண்ணே! என்ன சங்கடம் நேரிட்டதென்று கேட்க, அந்தப் பெண், ஒன்றுமில்லை; என்னுடைய சங்கடகாலத்தில் இந்த மணியை அடித்தால், அது கேட்டு ராஜா வருவாரோ மாட்டாரோ வென்று மூடத்தனத்தால் சந்தேகித்துப் பரீட்சைக்காக அடித்தேன் என்றாள். அதற்கு ராஜா, இனிமேல் சந்தேகப்பட வேண்டியதில்லையென்று சொல்லிவிட்டுப் போனான். ராஜன் இரண்டு நாழிகை வழி தூரத்திற்போகும்போது திரும்பியும் ஐயமுற்று அவள் மணியை மறுதரம் அடித்தாள். அதைக் கேட்டு ராஜா மறுபடியும் வந்து, பெண்ணே! என்ன அபாயம் நேர்ந்ததென்று கேட்க, என் பிராணநாதனே! நீர் மிகவும் தூரதேசத்தில் போய்விட்டால் கேட்குமோ கேட்காதோவென்று சந்தேகித்து அடித்தேன் என, அரசன், பெண்ணே! இனிமேல் இப்படி

சங்கடமில்லாதகாலத்தில் வீணாக அடிக்கவேண்டாமென்று சொல்லிப் போய்விட்டான். சிலநாள் கழிந்து வெகு தூரதேசத்தில் அரசன் போய்க்கொண்டிருக்கும்போது அவள் மறுபடியும் ஒருதரம் மணியை அடித்தாள். அதுகேட்டு ராஜா அதிவேகமாய் ஓடிவந்து, பெண்ணே! இந்த ராணிகள் யாராவது உனக்குத் தீமை விளைத்தார்களோ வென்று கேட்க, அவள்: அப்படிப்பட்ட தொன்றுமில்லை, அவர்களை நான் கண்ணாலேகூடப் பார்க்கவில்லை. என் தேகத்திற்குள் என்னவோ சொல்லத்தெரியாத ஒரு சங்கடம் செய்தது; அதனால் உடம்பு தெரியாமல் அடித்துவிட்டேனென்றாள், அதுகேட்டு ராஜன் நீ என்ன சிறிதும் விவேகமற்றவளாயிருக்கிறாய்; இனிமேல் இப்படிப்பட்ட காரியம் செய்யாதே; நான் அவசியம் தூரதேசம் போய்வர வேண்டியிருக்கிறது. நான் போய்வருமளவும் மனதைத் திடப்படுத்திக்கொண்டு பத்திரமாயிரு என்று எச்சரிக்கை சொல்லிவிட்டுத் தன் காரியத்திற்குப் போயினான்.

பின்பு சிலநாளையில் கர்ப்பமாயிருந்த அந்தப் பெண்ணுக்கு ஒவ்வொன்றாக நூறு பிள்ளைகளும், ஒரு பெண்ணும் பிறந்தன. அக்குழந்தைகளைத் தனித்தனியாய் ஒவ்வொரு தொட்டிலில் விட்டுத் தாலாட்டி வளர்த்துக்கொண்டு வருகிற சமாசாரத்தை மற்ற ராஜபத்தினிகள் பன்னிருவரும் கேள்விப்பட்டு, முன்னமே அவளிடத்தில் ராஜா பிராணப் பிரீதியாயிருக்கிறாரே; இப்போது பிள்ளைகளும், பெண்ணும் பிறந்திருப்பதையும் பார்த்தால், பிறகு நம்மைக் கண்ணெடுத்தாவது பார்ப்பாரா? இதற்குச் செய்யவேண்டிய உபாயம் என்னவென்று ஆலோசித்துக் கடைசியில் இந்தக் குழந்தைகள் எல்லாவற்றையும் நாம் கொன்றுவிட்டு, இவள் வித்தைக்கள்ளி; தொட்டிலில் அழகாய் விட்டிருந்த குழந்தைகளைக் கல்லாகச் செய்துவிட்டாள்; வெகு மோசக்காரியென்று ராஜா வந்தவுடன் கலகஞ்செய்து இவளை ராஜாவைக்கொண்டே நீக்கிப்போடவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டு பூம்பாவையின் அரமனைக்குப் போனார்கள். அவர்களைக் கண்டதும் அந்தப் பெண், இவர்கள் ஏதோ கடுந்தீமை விளைவிக்க வருவதுபோல் காண்கிறதென்று பயந்து, தன் சுவர்ணமணியை அடித்தாள். அரசன் வரவில்லை; மறுபடியும் அடித்தாள், அதற்கும் வரவில்லை. இப்படி அவள் அதைப் பலதாம் அடித்தும் அரசன் வந்து சேரவில்லை. இதற்கு

முன் அந்தப்பெண் பலதரம் அரசனை வீணாய் அழைத்து ஏமாற்றினதினால், இப்போதும் அவள் வேலையற்று மணியடிக்கிறாள் என்று எண்ணி அரசன் அதை நம்பாமல், ஒரேதரமாய்க் காரியத்தைமுடித்துக்கொண்டு போகலாமென்று நின்றுவிட்டான். இனி அந்தப் பேதைப்பெண்ணை அந்தக் கொடிய ராணிகள் என்ன செய்தால்தான் கேட்பார் யார்? அவர்கள் இட்டது சட்டந்தான்.

கொல்லப்போனவிடத்தில் கத்தியொன்று கிடைத்தாற்போல் இந்தக் கொடிய ராணிகளுக்குத்துணையும் ஒன்று தக்கதாய் நேர்ந்தது. பூம்பாவையின் நூற்றொரு பிள்ளைகளுக்கும் தாதியாயிருப்பவள், அந்த ராணிகளுடைய பழைய வேலைக்காரி; மேலும் அவள் மிகக் கொடிய தன்மையுடையவள்; அந்தக் கொடிய ராணிகள் கேட்டுக் கொள்வதை யெல்லாம் அப்படியே செய்ய வல்லமையும் விருப்பமு முடையவள். அவளைக்கண்டு அந்தப் பொல்லாத ராணிகள், நீ இந்தக் குழந்தைகளைக் கொன்றுபோடமாட்டுவாயாவென்று கேட்க அவள், இதொரு பெரியகாரியமா? இதோ நொடியில் கொன்று போடுகிறேன்; இந்த அரமனைக்குப் பின்புறத்தில் குப்பைமேடு ஒன்று இருக்கிறது. இப்பிள்ளைகளை அங்கே எறிந்துவிட்டால், பொழுதுவிடிவதற்கு முன்னமே ஒன்றுகூட வையாமல் எலியும், பெருச்சாளியும், பருந்தும், பூனையும், நாயும் இழுத்துக்கொண்டு போய்விடும் என்று சொன்னாள். அதைக்கேட்டு அந்தப் பன்னிரண்டு ராணிகளும், நல்ல யோசனை சொன்னாய்; அப்படியே நடத்து என்று அதை அங்கீகரித்தார்கள். அந்தத் தாதி உடனே நூற்றொரு பிள்ளைகளையும் எறித்துக் கொல்லைப் புறத்திலிருந்த குப்பை மேட்டில் எறிந்துவிட்டாள். பிறகு அந்தத் தாதியும் கொடிய ராணிகளும், சிறிதும் பெரிதுமாய்ப் பல கற்கள் கொண்டுவந்து தொட்டிலுக்கு ஒன்றாய்ப் போட்டுவிட்டு, பெருங்கூச்சலிட்டுப் பூம்பாவையை அழைத்து, அடி மாயக்கள்ளி! நீ மாறு வேடம் பூண்டுவந்த மாயக்காரியென்று இதுவரையில் ஒருவருக்கும் தெரியாமற்போயிற்றே! இதோ தொட்டிலில் உன் குழந்தைகளை வந்துபார்! வெகு அழகாயும் ராஜவம்சத்திற்கு வித்தாயுமிருந்த பச்சைப் பாலகர்களைக் கற்களாக்கிவிட்டாயே; உன் மாயம் எத்தனைநாளைக்குத்தான் பயன் படப்போகிறதோ பார்ப்போம் என்று அதட்டிப் பயமுறுத்திவிட்டுத் தொட்டிலிலிருந்த கற்களையெல்லாம் எடுத்துக் குப்பலாகக் குவித்தார்

கள். அதைப்பார்த்துப் பூம்பாவை, இதென்ன பெருமோசமா யிருக்கிறது ; நமது நூற்றொரு அருமைக் குழந்தைகளையும் அநியாய மாய்க் கொன்றதுமன்றி நம்மைப் பழிக்கும் ஆளாக்கினார்களே யென்று பரிதபித்துத் துக்கத்தால் மெய்ம்மறந்து மூர்ச்சை போயி னாள். ஐயோ! பதின்மூன்று பொல்லாத ராட்சசிகளுக்கு முன்னே ஒரு பேதைப்பெண் என்னசெய்யமாட்டுவாள் !

சிலநாள் கழித்துத் தன் காரியத்தை முடித்துக்கொண்டு அரசன் திரும்பிப் பட்டணம்வந்து சேர்ந்தான். அவன் வந்ததும் வராததுமாய் அந்தக் கொடிய ராணிகள், பூம்பாவையைப்பற்றிக் கோள் சொல்லிக்கொடுத்தார்கள். 'ஆகாத்தியக்காரனுக்குப் பிரம்மஹத்திக் காரன் சாக்ஷி' என்கிறபடி அந்தத் தாதியும் அவர்களுக்குச் சாக்ஷியா யிருந்தாள். இது அவன் மனதில் முன்னமே படர்ந்துகொண்டிருந்த சந்தேகமாகிற விஷக்கொடிக்குக் கொள்கொம்பு நாட்டினது போலாயிற்று. முன்னமே பூம்பாவையினிடத்தில் அவனுக்குக் கொஞ்சம் சந்தேகமுண்டாயிருந்ததனால், இந்தக் கொடிய பெண்கள் சொன்னசெய்தியையும் கேட்கவே, பூம்பாவை மாயக் காரிதானென்று நிச்சயமாய் நம்பி, அவள் எவ்வளவு சத்தியமாய் நடந்த செய்தியைச்சொல்லியும் கேளாமல், அவளை வாழ்நாள் முழுதும் காவலில் வைத்துப்போடும்படிக் கொடியதாய்க் கட்டளை யிட்டான்.

இது இப்படியிருக்க, குப்பைமேட்டில் எறியப்பட்ட ஒன்றுமறியாத பேதைப்பாலர்கள் பசியால் தீனமாய்ப் புலம்பக்கேட்டு, அதன் அருகில் ஒரு பெரிய வளையிலிருந்த பெரும்பெருச்சாளியொன்று அதிக தயவுடனே அந்தக் குழந்தைகளைத் தன் வளையில் ஒவ்வொன்றாகக்கொண்டுபோய்ச் சேர்த்து, பருந்து கழுகு ஒன்றுக்குந்தெரியாமல் ஓரிடத்தில் பத்திரமாய் விட்டு, தன் இனங்களான அநேகம் பெருச்சாளிகளை வரவழைத்து, அவற்றுள் அதிக புத்திசாலிகளான நூற்றொரு பெருச்சாளிகளைப் பார்த்து, அந்தக் குழந்தைகளுக்குத் தனித்தனி வேண்டுமான ஆகாரங்களைத் தினந்தோறும் கொண்டுவந்து கொடுத்து இரட்சிக்கும்படி ஒவ்வொன்றுக்கும் கட்டளையிட்டது. அந்தப்படியே அந்த நூற்றொரு பெருச்சாளிகளும் நாள்தோறும் இரைதேடிக்கொண்டுவந்து அக்குழந்தைகளுக்குக் கொடுத்துக் காப்பாற்றி வந்தன. அப்பிள்ளைகளும் அவைகள்

கொடுக்கும் ஆகாரங்களைப் புசித்துக்கொண்டு நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வெகு சௌக்கியமாய் வளர்ந்துவந்தார்கள். கொஞ்சநாளையில் அப்பிள்ளைகளுக்கு எழுந்து வெளியே ஓடி விளையாடும்படியான வயதுவர, அவர்கள் தினந்தோறும் பகலில் அவ்வளையின் வாயிலில் வந்து விளையாடுவதும், இரவில் அதற்குள்ளேபோய்ப் படுப்பதுமாய்ப் பொழுதுபோக்கிவந்தார்கள்.

அப்படியிருக்க ஒருநாள் அந்தப் பிள்ளைகளெல்லாம் வெளியில் வந்து விளையாடிவிட்டு உள்ளே நுழைகையில் எவளோ ஒருத்தி அவ்விடத்திற்கு வந்தாள். அந்தக் கொடிய தாதியல்லாமல் மற்றெவள் வரப்போகிறாள்! தெய்வாதீனமாய் அவள் வந்து பார்ப்பதற்குமுன்னமே ஆண் பிள்ளைகள் நூறுபேரும் உள்ளே நுழைந்துவிட்டார்கள். வெளியே நின்று விளையாடிக்கொண்டிருந்த பெண்ணும் அந்தக் கொடியவளைப்பார்த்து உடனே உள்ளே போய்விட்டாள். ஆயினும் அவளைத் தாதி பார்க்காமற்போகவில்லை. அந்தப் பெண்ணைப் பார்த்தவுடனே, தீக்குணமே வடிவெடுத்து வந்ததுபோன்ற அந்தத்தாதி பெரும்பாவிகளான ராஜபத்தினிகளிடம் போய், நாம் கொன்றுபோட்ட குழந்தைகளில் ஒரு பெண்குழந்தை புறக்கடைப் பெருச்சாளிவளை வாசற்படியில் நுழையக்கண்டேன்; இன்னம் எத்தனை ஆண்பிள்ளை உயிருடனிருக்குமோ தெரியவில்லை. அந்த வளையைச் சோதித்து அங்கிருக்கிற குழந்தைகளைக் கொன்றுபோடுவது நல்லதென்று சொன்னாள். அதைக்கேட்டு அந்தக் கொடிய ராஜஸ்திரீகள்: அப்படிச் செய்யக்கூடாது, செய்தால்சந்தேகத்திற்கிடமாகும்; தோட்டக்காரரைக்கொண்டு அந்தக் குப்பையைக் கொத்தி நிரவிப் பாத்திகட்டிப் பயிர்செய்யச் சொல்வதே உத்தமம். குப்பையை நிரவிவிட்டால் வளைகளில் மண்விழுந்து மூச்சுவிட இடமில்லாமல் பிள்ளைகள் தாமே இறந்துபோகுமென்று சொல்லித் தோட்டக்காரர்களை அழைத்துக் குப்பையை நிரவ உத்தரவுபண்ணினார்கள். அப்போது அவ்விடத்தில் இரைதேட வந்திருந்த பெருச்சாளியொன்று இந்தச் செய்தியையெல்லாம் கேட்டு உடனே தன் வளைக்குப்போய் நடந்த வர்த்தமானத்தைத் தன் தோழர்களுக்குத் தெரிவித்து, பக்கத்திலிருக்கும் நூற்றொரு படியுள்ள நடபாவியின் படிக்கட்டுக் கல்லுகளின்கீழே ஒவ்வொரு படிக்கு ஒவ்வொரு குழந்தையாக, அந்தப் படிக்குக் கீழேபோகிற வளையிலே குழந்தைகளைக்

கொண்டுபோய்ச் சேர்த்தது. தோட்டக்காரர்களும் ராணிகளின் கட்டளைப்படியே குப்பைமேட்டை நிரவிவிட்டார்கள்.

பின்பு சிலநாள் கழித்து ஒரு வண்ணான் அந்த நடபாவியில் துணி தோய்க்க வந்தான். அவனுடைய பெண்ணும் ஒருத்தி அவனுடன் கூடவந்தாள். அவன் நடபாவியிலிருந்து தண்ணீரை மொண்டு வெளியிலே தோய்த்துக்கொண்டிருக்கையில், அவன் பெண் நடபாவியின் நூற்றொரு படியிலும் குதித்து விளையாடிக்கொண்டிருந்தாள். அந்தப் பெண் குதிக்கும்போது அந்தப் படி அதிர்ந்து அதன கீழிருந்த பிள்ளைகளின்மேல் தாங்க, ஆண்பிள்ளைகள் நூறுபேரும் பொறுத்துக்கொண்டிருந்தார்கள். பெண்குழந்தை மாத்திரம் சகிக்கமாட்டாமல், நானும் உனைப்போல் ஒரு சிறுபெண் தானே! என் உடம்பு நசுங்கிப்போம்படி நீ இப்படிக் குதிக்கலாமா? உன்மேல் ஏறிக்குதித்தால் உனக்கு எப்படியிருக்கும்? நானும் உன்னைப்போலவே வளருகிற பெண்ணல்லவோவென்று சொன்னாள். அந்தச் சத்தங்கேட்டு வண்ணாரப்பெண் பிரமித்துத் தகப்பனண்டைபோய், இந்தப் படிக்கட்டில் நான் விளையாடும்போது அதன்கீழிருந்து பேயோ பிசாசோ இன்னும் எதுவோ ஒன்று, உன்னைப்போல நானும் விளையாடுகிற பெண்ணல்லவா? என்முதுகில் கல்படும்படி ஏன் மிதிக்கிறாயென்று கேட்டது என்று சொல்ல, வண்ணான் உடனேபோய்த் துஷ்ட ராஜஸ்திரீகளுக்கு அந்தச் சமாசாரத்தைச் சொன்னான். அதைக்கேட்டு அவர்கள் அது பூம்பாவையின் பிள்ளையாய்த்தானிருக்குமென்று எண்ணி உடனே தோட்டக்காரர்களையழைத்து இந்த நடபாவிப் படிக்கற்களெல்லாவற்றையும் பெயர்த்து, அதன்கீழ் எதாவது துஷ்டமிருகமிருந்தால் அடித்துவிட்டு நடபாவியைத் தூர்த்துவிடுங்களென்று கட்டளையிட்டார்கள். அந்தத் தோட்டக்காரர்கள் மண்வெட்டி, கடப்பாரை இவைகளை எடுத்துக்கொண்டுவந்து அந்தக் கல்லுகளைப் பெயர்க்கும்பொழுது, அதன் கீழிருந்தபாலகர்கள் நடபாவியருகிலுள்ள கோவிலிலிருக்கும் விநாயகக்கடவுளைத் துதிசெய்தார்கள். அவரும் ஐயோவென்று இரக்கமுற்று அந்தப்பிள்ளைகளைத் தன் கோவிலைச்சுற்றி மாமரமாகவும், பெண்ணை நடுவில் ஒரு ரோஜாச்செடியாகவும் மாற்றிச் சுகமாக வளர்ந்துகொண்டிருக்க அநுக்கிரகம் செய்தார்.

இப்படியிருக்க, மற்றொருநாள் அந்த வண்ணான் போய் அதே

யிடத்தில் தோய்க்கும்போது அவனோடு கூடப்போயிருந்த அவன் மகள், அவ்விடத்தில் ஓடித்திரிந்து விளையாடுகையில், பிள்ளையார் கோவில் வாயிலில் வெகு அழகாக வளர்ந்திருந்த மாமரங்களைக்கண்டு அதிசயப்பட்டு, தந்தாய்! இதோ அற்புதமாய் முளைத்திருக்கிற மாமரங் களைப்பாரும்; இங்கே மாமரம் முளைத்திருக்க இதுவரையில் பார்த்த தாய் எனக்கு நினைவில்லை; இதென்ன புதுமையென்று சொல்லி அதை நன்றாய்ப் பார்க்கவேண்டுமென்று ஆவல்கொண்டு அம்மரத் தண்டை ஓடினாள். கிட்டப்போய்ப் பார்க்கையில், வட்டவடிவமாய் நூறு மாஞ்செடியும் அவற்றின் நடுவே அழகான ஒரு ரோஜாச் செடியும் இருக்கக்கண்டாள். அவள் அந்த மாந்தோப்பில் திரிந்து விளையாடுகையில் அம்மரங்களை என்னசெய்தும் அவையொன்றும் மூச்சுகூட விடவில்லை. அவற்றின் நடுவே ரோஜாச்செடியில் வெகு அழகாய்ப் பூக்கள் பூத்திருக்கக்கண்டு அவைகளைப்போய்ப் பறிக்க, அந்தச் செடி மிகவும் உடம்பு நொந்து பெருமூச்செறிந்து: பெண் ணே! உன்னைப்போல நானும் ஒரு சிறுபெண்தானே! என் நரம்பைக் கிள்ளுகிறாயே; எனக்கு நோகாதாவென்று கேட்க, அந்த வண்ணாரப்பெண் ஓடிவந்து தகப்பனுடன் இந்த அதிசயத்தைச் சொல்ல, அவனும் அந்தக்ஷணமே ஓடி அச்செய்தியைக் கொடிய ராணிகளுக்கு அறிவித்தான். அதுகேட்டு அவர்கள் தோட்டக்காரர் களை அழைத்து நீங்கள் உடனே பெருந்தீவளர்த்தித் தோட்டத்தில் முளைத்திருக்கும் நூறு மாஞ்செடிகளையும் ரோஜாச்செடியையும் வேருடன் வெட்டி, வேர் தழைகளோடு ஒரு துண்டுகூட விடாமல் அதில் போட்டு எரித்துச் சாம்பலாக்கிவிடுங்களென்று கடுங்கட்டளை யிட்டு அனுப்பினார்கள்.

அந்தக் கட்டளையே தோட்டக்காரர்கள் உடனே பெருந்தீ வளர்த்தி அந்த நூற்றொரு செடிகளையும் வேரோடு வெட்டினார்கள். அந்தச் செடிகளைத் தூக்கித் தீயிலேபோடப்போகிற தருணத்தில் மகா தயாபரரான விக்கினேசுவரர் அந்த அநாதப்பிள்ளைகளிடத்தில் அருள்கூர்ந்து அளவற்ற மேகங்களை வரவழைத்துச் சராமாரியாக மழைபொழியச்செய்தார். அவருடைய அனுக்கிரகத்தால் அளவற்ற மழைபெய்து எங்கும் வெள்ளக்காடாய்ப்போகவே, அந்தப் பழி காரர்கள் மூட்டின பெருந்தீ தணிந்துபோனதுமன்றி, அவர்கள் வெட்டிவைத்த நூற்றொரு செடிகளும் வெள்ளத்திலடித்துக்கொண்டு

போய் ஒரு பெருநதியிற் சேர்ந்தன. இப்படி மரங்களாய் ஆற்றிலடித்துக்கொண்டுபோன ராஜகுமாரர்கள் தெய்வாதீனமாய் வெகு தூரம்போனபிறகு மனுஷிய சஞ்சாரமேயில்லாத ஒரு பெருங்காட்டண்டையில் எப்போதும்போல மானிட வடிவம்வந்து கரையேறினார்கள்.

அன்றுதொட்டு அந்தப் பிள்ளைகளெல்லாரும் ஒருவர்க்கொருவர் மிக்க அன்பும் ஆதரவுமாய் அக்காட்டிலேயே சௌக்கியமாகப் பத்துவருஷகாலம் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். அங்கே அவர்கள் வசித்துக்கொண்டிருக்கையில், சாதாரணமாய் நாள்தோறும் ஐம்பது பிள்ளைகளைக் குடியிருப்பிடத்தில் தங்கள் அருமைத் தங்கையைப் பத்திரமாய்க் காத்துக்கொண்டிருக்க நிறுத்திவிட்டு, மற்ற ஐம்பது பிள்ளைகள் காய்கிழங்கு முதலிய உணவுப்பொருள்கள் தேடிக்கொண்டு வர வெளியேபோவது வழக்கம். ஒவ்வொருநாள் அந்தப்பெண்ணை மாத்திரம் எங்கேயாவது பத்திரமாய்த் தனியே உட்காரவைத்துவிட்டு நூறுபேரும் போனாலும் போவார்கள். அநேகநாள் வரையில் புலி கரடி கோநாய் குடத்தி நாய் நரி பாம்பு தேள் முதலிய துஷ்ட ஜந்துக்கள் எதனாலும் எவ்விதமான தீங்கும் உண்டாகாமல் அவர்கள் அப்படியே சுகமாயிருந்தார்கள்.

அப்படியிருக்க ஒருநாள் தங்கள் தங்கையை ஒரு அழகான நிழல் மரத்தில் உட்காரவைத்துவிட்டு நூறுபேரும் ஆகாரம் தேடிக்கொண்டு வரப்போனார்கள். போனவிடத்தில் நடுகாட்டிலே கொஞ்சநேரம் அல்லாடிக் கடைசியில் கிழவிபோல மாறுவேஷம் பூண்டு வசித்துக் கொண்டிருந்த ஒரு ராக்ஷதன் மாளிகையண்டைபோய்ச் சேர்ந்தார்கள். அந்த ராக்ஷதன் அக்காட்டிலே வெகுநாளாயிருப்பவன். அவன் இத்தனைபேர் கூட்டங்கூடிவருவதைக்கண்ட மாத்திரத்திலே மிகக் கோபங்கொண்டு தன் மாயையினால் இவ்வளவுபேரையும் காக்கையாக மாற்றிவிட்டான். அவர்கள் காக்கையைப் போயும் தங்கள் தங்கையினிடத்தில் அவர்களுக்கு இருந்த பிரீதிமாத்திரம் மாறவில்லை. அத்தருணத்தில் பொழுதுபோய்விட்டது; தன் சகோதரர்கள் எப்போது வருவார்கள் என்று அந்தச் சிறு பெண் ஆவலுடன் எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்தாள். அப்படியிருக்கையில் திடீரென்று ஆகாயத்தில் சலசலவென்று ஒரு சத்தம் கேட்டது. உடனே அம்மரத்தைச்சுற்றிக் காக்கைகள் அநேகம் வந்து உட்கார்ந்து கா!

கா! என்று கத்திக்கொண்டு தங்கள் மூக்கினுல் அந்தப் பெண்ணுக்குக் காய்களும் கிழங்குகளும் கொண்டுவந்து கொடுத்தன. அதைக்கண்டு அந்தச் சிறுபெண் இதென்னவென்று திகிலடைந்து கொஞ்சநேரம் ஆலோசித்து, தன் சகோதரர்களும் வராமற்போகவே, யாரோ ஒரு மாயாவாதி நம் உடன் பிறந்தவர்களை இப்படி உருமாற்றி விட்டான் என்று அறிந்துகொண்டு 'ஐயோ! நமக்கு என்னவிதி நேர்ந்தது!' என்று சொல்லித் துக்கிக்கலானுள். அப்படியே கொஞ்சகாலம் சென்றது. அந்தக் காக்கைவடிவமான ராஜகுமாரர்களும் தினந் தப்பாமல் காலையிலெழுந்துபோய்க் காய்கனி கிழங்கு முதலிய உணவுகள் தேடிக்கொண்டுவந்து கொடுத்து அந்தப் பெண்ணைக் காப்பாற்றிக் கொண்டிருந்தார்கள்.

அந்தச் சிறுமகள் தன் சகோதரர்களுக்கு நேர்ந்த துன்பத்தையும் அதனுல் தான் படும் சங்கடத்தையும் நாள்தோறும் நினைத்து நினைத்து ஓயாமல் கண்ணீர்விட்டுக் கதறிக்கொண்டேயிருந்தாள். அவள் கண்களினின்றும் நீர் இடைவிடாமல் மாலைமாலையாய்ப் பெருகிக் கொண்டிருக்கவே, கொஞ்சநாளில் அது அம்மரத்தடியில் நன்ருய் ஊறி அங்கிருந்து காட்டின் நடுவே ஒரு சிற்ருருகப் பெருகத் தலைப் பட்டது.

சிலமாதங்கள் சென்றபிறகு ஒருநாள் அண்டைநாட்டு ராஜகுமாரன் ஒருவன் அந்தக் காட்டிற்கு வேட்டையாடவந்தான். எந்நேரம் அலைந்தும் அன்றையதினம் அவனுக்கு ஒருமிருகங்கூட அகப்படவில்லை. பொழுதும் போய்விட்டது; வழியும் தப்பிப்போயிற்று; கூடவந்தவர்களும் எங்கேயோ பிரிந்துபோய்விட்டார்கள். இப்படித் தனியே நடுக்காட்டில் அகப்பட்டுக்கொண்டு அவன் மிகவும் களைத்துத் தண்ணீர் அகப்படாமல் தாகத்தால் நாவறண்டு தவித்தான். அவனுேடுகூடவேயிருந்த இரண்டு வேட்டைநாய்களும் தாகத்தால் வருந்தி எங்கே தண்ணீர் அகப்படுமோவென்று நாலாமூலையிலும் தேடித்திரிந்தன. கடைசியில் கொஞ்சதூரத்தில் இந்தப் பெண்ணுடைய கண்ணீர் வெள்ளத்தைக்கண்டு நாய்கள் அதைநோக்கிச் செல்ல, ராஜகுமாரனும், கண்சுழலமிடக் கால் தள்ளாட மெல்ல மெல்ல அவைகளைப் பின்தொடர்ந்துபோய்ச் சிறுநதியின் கரைசேர்ந்து, அன்று இராத்திரி அங்கேயே படுத்திருக்கும்படி நிச்சயித்து, அந்தப்பெண் உட்கார்ந்திருக்கும் மரத்தடியில் பசும்புற்றரையிலே

தன் கையைத் தலையணையாக வைத்துப்படுத்தான். படுத்துக்கொண்டு அண்ணாந்து பார்க்கையில் தலைக்குமேலே மரத்தில் அநேகங் காக்கை களும் அவற்றின் நடுவே அதிக ரூபவதியான ஒரு கன்னிகையும் இருக்கக்கண்டு, இதென்னவென்று ஆச்சரியமடைந்து சரேலென்று எழுந்து அந்த மரத்தின்மேலேறி அந்தச் சிறுமியை மெதுவாய்க் கீழே இறக்கி அழைத்துவந்து தன் பக்கத்தில் உட்காரவைத்துக் கொண்டு, பெண்ணே! நீ யார்? நீ இந்தப் பயங்கரமான காட்டில் வந்து தனியே வசிப்பதற்குக் காரணமென்னவென்று கேட்க, தன்னைக் காப்பாற்றவந்த தெய்வந்தான் அவன் என்றெண்ணி அவள், தான் பிறந்து வளர்ந்த கதையை முழுவதும் தனக்குத் தெரிந்தவரை யில் ஒன்றுகூட விடாமற்சொன்னாள்; அம்மரத்தின்மேலிருக்கும் நூறு காக்கைகளும் உருவம் மாறிப்போன தன் நூறு சகோதரர்கள் என்பதைமட்டும் வெளியிடவில்லை. அவள் சொன்ன துக்கக்கதை யைக் கேட்டு ராஜகுமாரன், கொஞ்சநேரம் இனியவார்த்தைகள் சொல்லி அந்தப் பெண்ணைச் சமாதானப்படுத்தி, என் கண்ணே! இனி நீ விசனப்படவேண்டாம்; என்னோடு கூடவே என் நகரத் திற்குவந்து என்னைக் கலியாணஞ் செய்துகொண்டு சுகமாயிருக்க லாம்; என் தாய் தந்தையர்கள் மிகவும் நல்லவர்கள்; உன்னைக் கண்ணாகவைத்துக் காப்பாற்றுவார்கள் என்று சொல்ல, அந்தப்பெண் கொஞ்சம் துக்கந்தணிந்து புன்னகையுடன் முகத்தில் வழிந்து கொண்டிருந்த கண்ணீரைத்துடைத்துக்கொண்டு என்பிராணநாதரே! எனக்குத் தெய்வம் தங்களைவிட வேறுயார்? தங்கள் இஷ்டப்படியே ஆகட்டும்; இம்மரத்திலுள்ள காக்கைகளையும் கூடவே அழைத்துக் கொண்டு போகவேண்டும்; வெகுநாளாய்க் கூடவேயிருந்து பழ கினவளாதலால் இவைகளை விட்டுப்போக எனக்கு மனமில்லை என்றாள். அதைக்கேட்டு அவன், உனக்கு இந்தக்காட்டிலுள்ள ஜந்துக்கள் எல்லாவற்றையும் அழைத்துவரவேண்டுமென்றிருந்தாலும் அழைத்துவரலாம். எப்படியாவது நீ வந்தால் போதும் என்றான். இப்படி அவர்கள் பேசிக்கொண்டே அன்று இராத்திரியை அங் கேயே கழித்தார்கள்.

மறுநாள் காலையில் ராஜகுமாரன் எழுந்து அந்தப் பெண்ணோடு கூட அவளுடைய காக்கைகளையும் கூட்டிக்கொண்டு தன் பட்ட ணம்போய்ச் சேர்ந்தான். அவனுடைய தாய்தந்தையர்கள் தம் மக

ளுேடுகூடத் தங்கக்கொடிபோன்ற தேகமும், சந்திரபிம்பம்போன்ற முகமுமாய் அதிக சௌந்தரியமுள்ள பெண் ஒருத்தி வரக்கண்டு காட்டிலேகூட இப்படி ஒரு பெண் இருப்பாளோவென்று அதி சயித்தார்கள். பிறகு தங்கள் மகன் அந்தப் பெண்ணின் வரலாற் றையெல்லாம் சொல்லக்கேட்டு அவர்கள் அவளுடைய நற்குண நற் செய்கைகளுக்காகவும், மனேதைரியத்திற்காகவும் மிகவும் வியந்து அவளுக்கு திரௌபதியென்று பெயரிட்டு, ஒரு மகாராஜனுடைய மகள் அளவற்ற வரிசைகளோடு மருமகளாக வந்தால் எவ்வளவு சந்தோஷமுண்டாகுமோ அவ்வளவு சந்தோஷமும் பெருமையுமாய் அவளைத் தம் மகனுக்குக் கலியாணஞ்செய்துகொண்டு, அவளுக் குப் புதிதாய் ஒரு உப்பரிகையும் கட்டுவித்து அதில் வைத்துச் சுக மாய் ஆதரித்து வந்தார்கள். அந்தத் திரௌபதியும் தன் உப்பரி கைக்கு எதிரில் மிகவும் அழகான சில செடிகள் வைத்துப் பயிராக்கி அவற்றில் தன் சகோதரர்களான காகங்களை வசிக்கச்செய்து நாள் தோறும் தானே சொந்தமாய்ச் சோறுசமைத்துப்போட்டு அவை களைப் பாதுகாத்து வந்தாள்.

இப்படியிருக்க, சிலநாள் கழித்து அவளுக்குப் பிள்ளையொன்று பிறந்தது. அந்தப்பிள்ளையின் பெருமையையும் அழகையும் பார்த்து அவனுக்கு இராமசந்திரன் என்று பெயரிட்டார்கள். அச்சிறுவ னுக்குப் பாடசாலைக்குப்போய்ப் படிக்கத்தக்க வயது வந்தபிறகு திரௌபதியானவள் தானே நாள்தோறும் காலையில் அந்தப் பிள்ளை யைப் பாடசாலைக்குக் கொண்டுபோய் விடுவதும், மாலையில் வீட் டுக்கு அழைத்து வருவதுமாயிருந்தாள். இப்படியிருக்க, அந்தப் பிள்ளைக்குப் பதினென்கு வயதான பிறகு, ஒருநாள் சாயங்காலம் அவள் தன் மகனை அழைத்துவரப் போகவில்லை. அன்றையதினம் அம்மகன் தானே தனியாய்த் திரும்பி வீட்டிற்குவந்தான். வரும் போது தன் தாய் மாளிகையின் முன்புறத்தில் உட்கார்ந்து சுற்றிலும் வந்து நிறைந்திருக்கும் காகங்களைக் கையால் தடவிக்கொடுத்துக் கண்ணீர்விட்டுக்கொண்டிருக்கக்கண்டு அவளண்டைபோய் அவள் மடியில் உட்கார்ந்து, தாயே! நீ ஏன் இப்போது துக்கிக்கிறுய்? எப்பொழுது பார்த்தாலும் நீ இப்படியே முகம்வாடி மனங்கலங்கி நிற்கிறுயே, இதற்குக் காரணமென்னவென்று கேட்க, அவள் ஒன்றுமில்லை, என் விசாரம் உனக்கேன் போ என்றுள். அவன்

அதைச் சொன்னாலொழியப் போகமாட்டேன் என்று பலதரம் பல வந்தப்படுத்தி வேண்டினதற்கு, அவள் மூலைப்பால் மாறாத பாலக னோடு சொல்லி யாவதென்ன? சொன்னால் நீ அதைத் தீர்க்கப் போகிறாயா? அப்புறம்போ என்று தள்ள அவன், என்னால் கூடுமா னால் நான் தீர்க்கிறேன் சொல் என்று மறுபடியும் வற்புறுத்தி வேண் டினான். இதுவரையில் நான் என் துக்கத்தை ஒருவரோடும் சொன்னதில்லையே; உன்னோடு சொல்லியா ஆகப்போகிறதென்று அவள் மறுபடியும் மறுத்தாள். எத்தனைதரம் மறுத்தும் அந்தப் பிள்ளை விடாமல் சொல்லச் சொல்லிப் போராடவே, அவள் தன் கதையை யெல்லாம் சொல்லிக் கடைசியில், இதோ நம்மைச் சுற்றிக் காக் கையாயிருப்பவர்களெல்லாரும் உன் அம்மான்மார்கள்; யாரோ ஒரு கொடிய ராக்ஷதன் இவர்களை இப்படி உருமாற்றிவிட்டான். இதை நினைத்தே நான் எப்போதும் விசனப்படுகிறேன் என்றாள்.

அதைக் கேட்கவே அந்த ராஜகுமாரன் கொஞ்சம் வீராவேச முடையவனாய், உன் சகோதரர்கள் ராக்ஷதனண்டை போம்போது எந்தவழியாய்ப் போனார்களென, அவள் அதை நான் கண்டேனா என்று சொன்னாள். அதைக்கேட்டு அவன், அவர்கள் என்றைய தினம் காக்கைகளாய்ப்போனார்களோ, அன்று மாலையில் எந்தத் திக்கிலிருந்து உன்னண்டைக்கு வந்தார்கள்; அதுகூட உனக்கு நினைவில்லையா என, அவள், அதையா நீ கேட்கிறாய்? இந்த மாளி கையின் பின்புறத்திற்கு நேராயிருக்கின்ற காட்டில் நானிருந்த விரு க்ஷத்தை நோக்கிவந்தார்கள் என்று சொல்லக்கேட்டு, அவன் மிக வும் சந்தோஷமாய், நல்லது, அம்மா! இதோ நான் புறப்பட்டுப் போய் அந்தக் கெட்ட ராக்ஷதன் இருக்குமிடத்தைக் கண்டுபிடித்து, இவர்களை மறுபடியும் மானிடராக்க வழி என்னவோ அதையும் மெதுவாய்த் தெரிந்துகொண்டுவந்து சேருகிறேனென்று சொல்லிப் போகப்புறப்பட்டான். அதைக்கண்டு திரௌபதி, என் அருமைக் குழந்தாய்! நான் தாய்தந்தையர்களையுமிழந்து கூடப்பிறந்தவர்களை யும் காகங்களாக வைத்துக்கொண்டு தவிக்கிறேன்; இத்தருணத்தில் நீயும்போய் ஒரு ராக்ஷதனுடைய மாயையில் சிக்கிக்கொள்வா யானால், பிறகு எனக்கு என்ன இருக்கிறது! நீ ஒருபோதும் போகக் கூடாதென்று மறுக்க, அவன், தாயே! நீ பயப்படாதே! அந்தந்தத் தருணத்திற்குத் தக்கபடி யுக்தி ஆலோசனையுடன் சாவதானமாய்,

நடப்பதற்கு எனக்கு நன்றாய்த்தெரியும்; பத்திரமாய்ப்போய் வரு கிறேனென்று சொல்லிச் செலவுபெற்றுக்கொண்டு தந்தையிடஞ் சென்று, தந்தையே! இப்போது எனக்குத் தேசங்களை ஒருவாறு சுற்றிப்பார்த்து வரவேண்டுமென்று ஆவலாயிருக்கின்றது; போய் வரும்படி அனுமதிகொடுக்கக் கோருகிறேன் என்று சொல்லி, அந்த ராஜன்! குழந்தாய்! சுகமாய்ப்போய்வா, உன்னோடு கூடவர எவ் வளவு பரிஜனங்கள் வேண்டுமென்று கேட்க, இராமசந்திரன், எனக்கு அதிகமாய் ஒன்றும் வேண்டாம், ஏறிப்போக ஒரு குதிரை யும் அதைக்காற்றுக்கொள்ள ஒரு குதிரைக்காரனுமிருந்தால் போதும் என்று சொல்லி அவரிடத்திலும் உத்தரவுபெற்றுக் குதிரைமேல் ஏறிக்கொண்டு தன தாய் சொன்ன பெருங்காட்டை நோக்கிச் சென்றான்.

அந்தப் பெருங்காட்டில் தாய் குறித்தவிடம் போய்ச் சேர்ந்த தும் இராமசந்திரன் தாய் தந்தையர்களுக்குச் செய்திசொல்லிக் குதி ரைக்காரனைக் குதிரையுடன் அனுப்பிவிட்டு, அப்புறம் தான்மாத்தி ரம் தனியே காலால் நடந்து அந்த ராக்ஷதன் இருக்குமிடம் தேடிப் போனான். வெகுதூரம் போனபிறகு ஓரிடத்தில் ஒரு சிறு குடி சையைக்கண்டு அதனுள் நுழைந்து பார்க்கையில் அங்கே ஒரு கிழவி படுத்து அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள், சிங்கநகமும் கோரைப் பல்லுமாயிருந்த மிகவும் பயங்கரமான அவள் வடிவத்தைத் கண்டு அஞ்சி நடுங்காமல் அவன், அவ்விடத்தின் நிலைமையினால் தான் தேடிவந்த இடம் அதுதானென்று தெரிந்துகொண்டு, மெதுவாய் அவளண்டைபோய் உட்கார்ந்து அவளுடைய கைகால் முதலிய உறுப்புக்களைச் சுகமாய்ப் பிடித்துக்கொண்டிருந்தான். கொஞ்ச நேரத்தில் பிரம்மராக்ஷசியாகிய அந்தக்கிழவி விழித்துக்கொண்டு, தன்னண்டையில் அதிக சுந்தரனான ராஜகுமாரன் உட்கார்ந்திருக் கக்கண்டு அவனைப்பார்த்து, குழந்தாய்! நீ பயப்படாதே! நான் ஒரு தள்ளாத கிழவி, நான் உனக்கு யாதொரு தீங்கும் செய்வதில்லை, நான் இட்டவேலையைச் செய்துகொண்டு என்னோடுகூடவே சுக மாயிரு என்றாள். இது, 'ஐயோ! யாரோ ஒருவன் தனியாய் இங்கே வந்துவிட்டானே' என்று அவள் இராமசந்திரனிடத்தில் பரிதாபத்தால் சொன்னபேச்சு அன்று; அவன் கூட இருந்தால் தனக்குக் கொஞ்சம் ஒத்தாசையாயிருக்குமென்றெண்ணிச் சொன்

ளது. அந்த ராஜகுமாரனும் தான் நினைத்துவந்தபடியே தனக்கு வேண்டிய விஷயங்களையெல்லாம் அவளினின்றும் நன்றாய்க் கற்றுக்கொள்ளுமளவும் அவளுக்கு இச்சகமாய் அங்கேயே இருக்க வேண்டுமென்று தீர்மானித்து, அந்த ராக்ஷஸி சொன்னபடியே ஒப்புக்கொண்டு, அவளுக்கு முகங்கோணாமல் பணிவிடைசெய்து வந்தான்.

இப்படியிருக்க ஒருநாள் இராமசந்திரன் ராக்ஷஸியைப்பார்த்து, பாட்டியாரே! இந்த வீட்டைச் சுற்றிலும் சிறு கலசங்களில் தண்ணீர் நிரப்பி அடுக்குவைத்திருக்கின்றனவே, இவற்றின் பயனென்ன, வென்று கேட்க, ராக்ஷஸி, இந்தக் கலசங்களிலுள்ள தண்ணீரெல்லாம் மந்திரதீர்த்தங்கள்; இவற்றில் அற்புதமான சக்தியொன்று உண்டு. என் மாயையால் உருமாற்றப்பட்டவர்களின் மேல் இந்தத் தண்ணீரை ஒரு பொட்டு தெளித்தால் உடனே அவர்களுக்குத் தம் இயற்கை உருவம் வந்துவிடுமென்றாள்; பிறகு அவளுடைய மந்திரதண்டத்தைப்பார்த்து, இந்தத்தடியில் ஏதாவது அதிசயமுண்டோ வென்றுகேட்க, ராக்ஷஸி, இதில் அற்புதமான அநேகம் சக்திகளுண்டு; அதற்குத் திருஷ்டாந்தமாய் ஒன்று சொல்லுகிறேன், நமது இஷ்டத்தை மனதில் நினைத்துக்கொண்டு இந்த மந்திரதண்டத்தை வானத்தில் வீசினால், மலையோ காடோ நதியோ எது வேண்டுமானாலும் நம்மிஷ்டப்படியே உடனே உண்டாகும் என்று சொன்னாள்.

இப்படியிருக்க மற்றொருநாள் ராஜகுமாரன் பிரம்மராக்ஷஸியாகிய அந்தக் கிழவியைப்பார்த்து, தாயே! உன் தலைமயிரெல்லாம் சடையாய்த்திரிந்து இப்படிக் கூடுகட்டிப் போயிருக்கின்றனவே, அவைகளைச் கோதிச் சிக்குவிடுக்கலாமாவென்று வணக்கமாய்க் கேட்க, அவள், வேண்டாம்; நீ என் தலைமயிரைத் தொடாதே; தொட்டால் அபாயத்திற்கு இடமாகும்; என் தலைமயிர் ஒவ்வொன்றுக்கும் இக்காடுமுழுதும் கொளுத்திவிடும்படியான திறமையுண்டு என்றதைக்கேட்டு, அவன் அதெப்படி அம்மா என, அவள் என்மயிரில் எவ்வளவு துண்டு எடுத்து எறிந்தாலும் நாம் எந்தப்பக்கமாய் எறிகிறோமோ அந்தப் பக்கத்திலுள்ள காடுமுழுதும் அப்படியே பற்றி யெரிந்துபோமென்று சொன்னாள்.

இப்படி அந்த ராக்ஷஸியின் வாயைக்கொண்டே அவளுடைய சூதுகளையெல்லாம் தெரிந்துகொண்டு ராஜகுமாரன் சிலநாள் அங்

கேயே இருந்தான். அப்படியிருக்க, ஒருநாள் நடுப்பகலில் அந்த ராக்ஷசி உடம்பு கொஞ்சம் தள்ளாமையாயிருந்ததனால் கைகால்களைச் சற்றே பிடிக்கும்படி ராஜகுமாரனுக்குக் கட்டளையிட்டுப் படுத்து உடனே அயர்ந்து தூங்கிப்போயினாள். அத்தருணங்கண்டு இராமசந்திரன் தலையண்டை பிடிப்பதுபோல் அவள் தலையிலிருந்து நாலைந்து மயிரை மெதுவாய்ப் பிடுங்கிக்கொண்டு எழுந்து, ஒரு கையில் அவளுடைய மந்திரதண்டத்தையும் மற்றொரு கையில் இரண்டு தண்ணீர்க் கலசங்களையும் எடுத்துக்கொண்டு, உடனே அவ்விடம் விட்டுப் போயினான். கொஞ்சநேரத்தில் பிரம்மராக்ஷசி விழித்துக்கொண்டு சுற்று நாற்புறமும் பார்க்க, ராஜகுமாரனையும் தன் மந்திரத்தண்டத்தையும் காணாமற்போகவே, ஓகோ! இந்தப் பையல் நம்மை மோசஞ்செய்துவிட்டு ஓடிப்போயினானென்று தெரிந்து உடனே எழுந்து 'அவனை எப்படியாவது தேடிப்பிடித்துக் கொன்றுவிடவேண்டுமென்று தீர்மானித்து அவனைத் துரத்திக்கொண்டு ஓடினாள். ராஜகுமாரனும் எங்கே ராக்ஷசி பின்தொடர்ந்து ஓடிவருகிறாளோவென்று திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே போனான். போகையில் பின்னே கொஞ்சதூரத்தில் ராக்ஷசி அதிவேகமாய் ஓடிவரக்கண்டு தன் கையிலிருந்த மந்திரத்தண்டத்தை வீசி நடுவே அகாதமான ஒரு பேராற்றை உண்டுபண்ணினான்; அதை ஒரு நொடியில் நீந்திக்கொண்டு ராக்ஷசி ஓடிவரக்கண்டு மறுபடியும் தடியைச் சுழற்றி நடுவே ஒரு பெருமலையை உண்டாக்க, அதையும் ஒருக்ஷணத்திலே ஏறியிறங்கிப் பிரம்ம ராக்ஷசி வெகு நெருக்கத்தில் வந்துவிட்டாள். எத்தனைதரம் எவ்விதமான இடையூறு செய்தாலும் ஒன்றையும் லக்ஷியம் பண்ணாமல் அந்தக் கொடிய ராக்ஷசி பக்கத்தில் வந்துவிடக்கண்டு கடைசியாய் ராஜகுமாரன், தான் வைத்திருந்த ராக்ஷசி தலைமயிரை அவள் வருகிற திசைக்கு நேராய் எறிய, உடனே அக்காட்டில் பெருந்தீயுண்டாகி மலையாய் வளர்ந்து ராக்ஷசியைச் சூழ்ந்துகொண்டு அவளை எரித்து நீறாக்கிவிட்டது.

அந்தக் கொடிய ராக்ஷசி மாண்டுபோகவே, ராஜகுமாரன் மிகவும் சந்தோஷமடைந்து சீக்கிரமாய்ப் பட்டணம்வந்து சேர்ந்து தாய் தந்தையர்களை வந்தனம்பண்ணித் தான் போய் ராக்ஷசியை ஜெயித்து வந்த செய்தியை ஆதியோடந்தமாய்ச் சொல்லி அவர்களைக் களிக்கச்

செய்து, பின்பு அவர்களை அழைத்துக்கொண்டு காகங்களாக மாறிய தன் அம்மான்மார்கள் வசித்துக்கொண்டிருக்கும் தோப்பிற்சென்று, தான் கையில் கலசத்திலே வைத்துக்கொண்டிருந்த மந்திரஜலத்தை அவர்கள்மேல் தெளிக்க, உடனே அவர்களெல்லாரும் காகவடிவம் மாறி நல்லவயதும் அழகுமுள்ள சிறந்த ராஜகுமாரர்களாய் எழுந்தார்கள். ஒருவராலும் செய்து முடிக்க மாளாத பெருங்காரியத்தை ஒன்றுமறியாத பாலகன் செய்துமுடித்ததை அவ்வாண்மனையிலுள்ளோர் அனைவரும் கண்டு, அவனுடைய திறமையின் பெருமைக்காக மிகவும் ஆனந்தித்தார்கள். அந்த நூறு ராஜகுமாரர்களும் தம் மருமகனுடைய வல்லமையாலேயே தாம் மாயையினின்றும் மீட்கப் பட்டோமென்று தெரிந்து அச்சிறுவனை மிகவும் மேன்மையாய்க் கொண்டாடினார்கள்.

இப்படி அந்த நூறு ராஜகுமாரர்கள் மாயையினின்றும் மீட்கப் பட்ட செய்தி சிறிதுநேரத்தில் அந்நகரமெங்கும் பரவ, அதுகேட்டு அனைவரும் பேரானந்தமடைந்தார்கள். அத்தேசத்து ராஜாவும் புதிதாய்ப் பிழைத்தெழுந்த தன் மைத்துனன்மார்களுக்கு மேன்மையாய் விருந்து செய்விக்கவேண்டுமென்று அதற்காகப் பலதேசத்து ராஜாக்களும் அவரவர்களுடைய குடும்பத்தோடு உடனே வந்து சேரும்படி தேசாதேசங்களுக்கு செய்தி சொல்லியனுப்பினான்.

இவ்வளவு காலத்தில் திரௌபதியானவள், தன் தாய்தந்தையர்கள் இன்னாரென்றும் அவர்களின் வரலாறு இத்தன்மையதென்றும் தன் தாய் இன்னவிதமான நிலையில் வைக்கப்பட்டிருக்கிறாளென்றும் நன்றாய்த் தெரிந்துகொண்டிருந்ததனால், தன் தாயைச் சிறைமீட்டுவைக்க இதுதான் தருணமென்று அவர்கள் வரவை எதிர்பார்த்திருந்தாள். அங்கங்கிருந்துவந்த பலராஜாக்களோடு திரௌபதியின் தந்தையான அரசனும் தன் மூத்தமனைவிகளான பன்னிருவரைமாத்திரம் அழைத்துக்கொண்டு வந்துசேர்ந்தான். அவன் வந்திருப்பதைத் தூதர்கள்மூலமாய்த் தெரிந்துகொண்டு திரௌபதி தன் கணவனோடும் சகோதரர்களோடுங்கூட அவனண்டைபோய்: ஓ! மகாராஜனே! நீங்கள் உங்கள் மனையாளான பூம்பாவையையும் கூடக் கூட்டிக்கொண்டு வருவீர்களென்று எதிர்பார்த்திருந்தோமே அவளை ஏன் அழைத்துக்கொண்டு வரவில்லையென்று கேட்க, அந்த ராஜா, பூம்பாவையின் செய்தி இவர்களுக்கு எப்படித் தெரிந்ததென்று ஆச்

சரியமடைந்து, நீங்கள் அவளுடைய பேச்சை என்னிடத்தில் எடுக்க வேண்டாம்; அவள் மிகவும் கொடியவள்; தன் வாழ்நாள் முழுமையும் அவள் சிறைச்சாலையிலேயேதான் கழிக்கவேண்டும்; அவள் தலைவிதி அவ்வளவுதானென்ன, அவர்கள் மிகவும் கோபங்கொண்டு, இந்த க்ஷணமே செய்தியனுப்பிச் சிறையில் அடைபட்டுப் பரிதவிக்கும் அந்தச் சீமாட்டியை உடனே இவ்விடத்திற்கு அழைப்பிக்காவிட்டால், உங்களுடைய இந்தப் பன்னிரண்டு பத்தினிகளையும் சிறைசெய்வதுமன்றியில் உங்களையும் ராஜ்யத்தைவிட்டுத் துரத்திவிடுவோமென்றார்கள்.

இவர்கள் இப்படிச் சொல்வதற்குக் காரணமின்னதென்று அவ்வரசனுக்குத் தெரியவில்லை. தன்னுடன் எவ்விதமாயாவது சண்டை செய்யவேண்டுமென்று கருதி அதற்காகவே இப்படி ஒரு வழிதேடுகிறார்களென்று நினைத்தான். ஆயினும் பூம்பாவை வந்தாலும் வராவிட்டாலும் எல்லாம் ஒன்றுதானென்று எண்ணி அவர்கள் கேட்டுக்கொண்டபடியே அவளை அழைத்துவரும்படி தூதனையனுப்பினான். பூம்பாவை பட்டணத்தருகே வருகிற செய்திதெரிந்து திரௌபதி தன் சகோதரர்கள் கணவன் முதலியவர்களைக் கூட்டிக்கொண்டு அநேகம் பரிஜனங்களோடு புறப்பட்டு எதிர்கொண்டுபோய் மிகவும் மேன்மையாய் அவளை அழைத்துவந்தாள். பின்பு நானாதேசத்து ராஜாக்களையும் சபைசேர்த்து அவர்கள் மத்தியில் பூம்பாவையையும் அழைத்துக்கொண்டு போய்நின்று அந்த நூறு ராஜகுமாரர்கள் சபையாரை நோக்கி, தங்கள் தாயாகிய பூம்பாவையை அந்த ராஜன் அதிக ஆசையுடன் கலியாணஞ்செய்துகொண்டது, பின்பு ராஜா வெளியே போயிருந்த தருணத்தில் அவள் வயிற்றிலே தாங்கள் நூற்றொரு பிள்ளைகளும் பிறந்து துன்பப்பட்டது, பூம்பாவை சிறைப்பட்டது முதலான தங்கள் கதைகளையெல்லாம் ஒன்றுகூட விடாமல் எடுத்துச் சொல்லிக் கடைசியில், தங்களுக்கு என்னென்ன துன்பங்கள் நேரிட்டும் அவைகளுக்கெல்லாம் தப்பிப் பிழைத்து இப்போது தங்கள் தாய் தந்தையர்களுக்குக் களிப்புண்டாக்கவும், பின்பு விருத்தாப்பியத்தில் அவர்களைச் சம்ரக்ஷிப்பது முதலிய தங்கள் கடைமைகளைச் செய்யவும் காத்துக்கொண்டிருப்பதாயும் சொன்னார்கள்.

அதைக்கேட்டு அந்தச் சபைமுழுதும் இப்படிக்கூட ஒரு கதை நடக்குமோ என்று திகைத்துநின்றது. அந்தக் கிழராஜனும், தன்

பத்தினியான பூம்பாவை ஒரு பாவமுமறியாத பேதையென்றும், அந்த நூற்றொரு பிள்ளைகளும் அவள் வயிற்றிற்பிறந்த குழந்தைகளென்றும் தெரிந்து, தான் இத்தனைநாள் செய்துவந்த கொடுமைக்காகச் சபையாரை மன்னிப்பு கேட்டுக்கொண்டு தன் அருமைப் பெண்டான பூம்பாவையை உடனேபோய் அணைத்துத் தேற்றிக் களிக்கச்செய்தான். மிகக் கொடியவர்களும், சிறிதும் கடவுளுக்கு அஞ்சாமல் சிசுஹத்திசெய்யத் துணிந்தவர்களுமான தன் பன்னிரண்டு பட்டமகிஷிகளையும் அந்தக்ஷணமே சுண்ணாம்புக்காளவாயில் வைத்து எரித்துவிடக் கட்டளையிட்டான். பிறகு, அந்த ராஜா தன் நூறு பிள்ளைகளோடும் பூம்பாவையைத் தன் பட்டணத்திற்கு அழைத்துக் கொண்டு போம்படியாகவும், திரௌபதியென்னும் பெண்மணியை அவள் அருமைமகனாகிய இராமச்சந்திரனென்னும் ராஜசிங்கத்தோடுகூட அங்காத்திலேயே அவள் நாயகனிடத்தில் விட்டுப் போம்படியாகவும் ஏற்பாடாயிற்று. அப்படியே, வந்த ராஜாக்களெல்லாரும் சம்பிரமமாய் விருந்துண்டு செலவுபெற்றுக்கொண்டு சுதேசங்களுக்குப் போம்போது, பூம்பாவையின் புருஷனாகிய ராஜனும் விசேஷ சீதனங்கொடுத்துத் தன் மகளாகிய திரௌபதியை அங்கேயே நிறுத்திவிட்டுத் தன் நூறு பிள்ளைகளோடுகூடி மிக்க மனவெழுச்சியோடு தன் பட்டணம்போய்ச் சேர்ந்தான். அவனுடைய கொடிய இராணிகளும் கொலை செய்யப்பட்டார்கள். ராஜசிங்கமாகிய இராமச்சந்திரனும் தந்தைகாலத்திற்குப்பிறகு தானே பட்டம்பெற்றுச் சீர்மையாய் அரசுசெலுத்திக் குடிகளுக்கு க்ஷேமம் விளைத்துவந்தான். இப்படியாகக் கடைசியில் சத்தியமே ஜயம் பெற்றது பாருங்கள். இப்புவியில் ஒன்றும் பூரணமாய் நிறைவேறாதென்பதற்கும் அத்தாக்ஷி ஒன்று உண்டு. அந்தக் கொடிய இராணிகளின் கெட்ட நினைவு காரியப்படும்படித் தன் கையினாலேயே கடுஞ்செய்கை செய்தவளாகிய தாதிக்குமட்டும் ஒரு சிக்ஷையும் உண்டாகவில்லை. முன்னிருந்த வாழ்வுக்கு எள்ளளவும் குறைவில்லாமல் தன் ஆயுள்முழுதும் அவள் பெருமையாகவே வாழ்ந்திருந்தாள். ஆயினும் அவள் செய்த கடுஞ்செயல் கடவுள் கண்ணுக்குத் தெரியாமற்போகாது.

## 5-வது. ராமனும் லட்சுமணனும்

## கற்றறிந்த கோட்டானும்

முன் ஒருகாலத்தில், ஈவு இரக்கம் அனுதாபமுதலிய சாதாரண நற்குணங்களும், வீரியம் சௌரியம் பராக்கிரமம் முதலிய ராஜ நற்குணங்களும் நிறைந்த சந்திரராஜனென்னும் ஒரு அரசன் நீதிமுறை தவறாமல் துரைத்தனஞ்செய்துவந்தான். மிகக் கல்விகேள்விகளில் தேர்ந்தவனும், ஆழ்ந்த ஆலோசனைத் திறமுடையவனுமான பட்டி யென்னும் ஒரு மந்திரி அவ்வரசனுக்கு ஏற்றபடி மந்திராலோசனை சொல்லிவந்தான். அவ்வரசனும் அமைச்சனும் எப்பொழுதும் ஒருவரையொருவர் விட்டுப்பிரியாத பிராணசிநேகிதரா யிருந்ததனால், அவர்கள் தம் அந்தஸ்துக்கேற்றபடி அதிகாரியும் ஏவலாளனுமாயிருப்பதை விட்டு, ஒரு தாய்வயிற்றில் பிறந்து ஒரே அதிகாரம் அமைந்த அண்ணன் தம்பிபோல் அணுவளவும் பேதமில்லாமல் சமநிலையா யிருந்தார்கள். அவர்களுக்குக் கல்விப்பொருள் செல்வப்பொருள் முதலிய எல்லாப் பேறுகளும் ஒன்றுமொன்று குறைவின்றிப் பரிபூரணமாய் அமைந்திருந்தன. ஆயினும் அவ்விருவருள் ஒருவர்க்காயினும் மக்கட் பேறு ஒன்று உண்டாகவில்லை; அதனால் அவர்கள்,

> "பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த
> மக்கட்பே றல்ல பிற"

என்கிறபடி மக்கட்பேறொன்றில்லாமல் மற்றெது இருந்தென்ன? மேலும் 'தம்பொருளென்ப தம்மக்கள்' என்கிறபடி நமக்குப் பெரும் பொருளாயும்,

"எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்"

என்கிறபடி நங்குலத்திற்கு ஒரு பெரு விளக்காயும் ஒரு புதல்வனைப் பெறாத பிழைப்பு என்ன பிழைப்பு என்றிப்படிப் பலவாறு சிந்தித்து, தங்களுக்கு எவ்விதத்திலாவது ஒரு குமாரன் உற்பவிக்கவேண்டு மென்று கடவுளைத் துதித்துப் பலவிதமாக தானதருமங்கள் செய்து வந்தார்கள். இப்படியிருக்க, அவர்கள் செய்த நற்றவத்தால் அவ்விரு வருடைய மனைவிகளும் ஒருதினத்தில் கருத்தரித்துப் பூரண கர்ப் பிணிகளாய், ஒரே சுபமுகூர்த்தத்தில் ஒரே நிமிஷத்தில் ஒவ்வொரு ஆண்குழந்தையைப் பெற்றார்கள். அதைக் கேட்டவுடனே அரச னும் அமைச்சனும் ஆனந்தக்கடலில் ஆழ்ந்தவர்களாய், அக்காலத்தில் செய்யவேண்டிய சடங்குகளோடுகூடப் பற்பல தானதருமங்கள் செய்து, ராஜகுமாரனுக்கு ராமனென்றும், மந்திரிகுமாரனுக்கு லட்சுமணனென்றும் நாமகரணம் செய்தார்கள். அவர்கள் உற்ப வித்த தினத்தில் அப்பட்டணம் முழுதும் மகோற்சவமாயிருந்தது. அன்று முதல் அந்தக் குமாரர்கள் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துவந்ததுமன்றியில், சிறு குழந்தைப் பருவந் தொட்டே இருவரும் இணைபிரியாத நேசர்களாய் ஒருவரையொரு வர் விநாடிகூட விட்டுப்பிரியாமல் கூடிவளர்ந்தார்கள். படிக்கப் பாடசாலைக்குப் போனாலும், குளிக்கக் குளத்திற்குப் போனாலும், விளையாட வெளிப் புலங்களுக்குப் போனாலும், மற்றென்ன செயற் செய்தாலும் ஒருவரை யொருவர் கைவிடாமல் கூடியேயிருப்பார் கள். பலவாறு சொல்லி யென்ன? ஒருவேளைகூட ஒருவரைவிட் டொருவர் உண்ணப்போகிறதில்லை. தேவாமுதந்தான் கிடைப்பி னும் அதை இருவரும் சரிபாதி பங்கிட்டுப் புசிப்பதேயொழியத் தனித்து உண்பதில்லை. இப்படி அந்தக் குமாரர்கள் மகா சந்தோஷ மாய்ப் பதினறுவயது வளர்ந்தார்கள்.

அப்போது ஒருநாள் ராணி அரசனைப்பார்த்து, நாயகனே! நம் முடைய மகன் எப்போதும் இழிஜனங்களோடேயே சகவாசம் செய்துகொண்டிருக்கிறன். முக்கியமாய் மந்திரி மகனைக் கணப் பொழுதேனும் கைவிடுகிறதில்லை. இது அவனுடைய அந்தஸ்துக்கு என்றைக்காவது எற்குமா? ஆதலால் நீங்கள் இவர்களுடைய

நேசத்தை எப்படியாவது பிரித்து நமது அந்தஸ்துக்கு ஏற்ற பிள்ளைகளோடு நமது குழந்தையை நேசம்பாராட்டச் செய்யக்கடவீர்கள் என்றாள்.

அவள் சொன்னதைக்கேட்டு சந்திரராஜன், என் பட்டமகிஷி! நான் அப்படி ஒருநாளும் செய்யமாட்டேன்; இப்போது நமது மந்திரியும் நானும் சிறிதும் பேதமில்லாமல் நேசம்பாராட்டிவருகிறோம்; இப்படியே முன் எங்களுடைய தந்தைகளும் இருந்தார்கள். ஆதலால் இனி எங்களுடைய மக்களும் இப்படியே கூடி வாழட்டுமென்றான். அதைக் கேட்டு ராணி மிகக் கோபங்கொண்டு அதன்மேல் ஒரு வார்த்தைகூட அவர்க்குப் பதில் உரையாமல் சரேலென்று புறப்பட்டுத் தன் வீட்டிற்கு வந்து, இம்மக்களுடைய நேசத்தைப் பிரிக்கத்தக்க வழி தனக்கு யாதொன்றும் தோன்றாமல், இப்பூமண்டலத்திலுள்ள பிரபுக்கள் பண்டிதர்கள் மந்திரவாதிகள் அனைவரையும் அழைப்பித்து, சிறுவர்களுடைய சிநேகத்தைப் பிரிக்கத்தகுந்த மருந்து ஏதாவது உண்டாவென்று கேட்டாள். அநேகர் வந்து பார்த்து அப்படிப்பட்ட மருந்து தங்களுக்கு ஒன்றும் தெரியாதென்று சொல்லிப் போய்விட்டார்கள். கடைசியில் மாயக்கிழவி ஒருத்தி அவ்வரசியினிடம் வந்து, ஓ எம்பெருமாட்டி! நீ எனக்கு விசேஷ வெகுமானம் செய்வதானால் நான் உன் இஷ்டத்தை நிறைவேற்றுகிறேன் என்றாள். அதைக்கேட்டவுடனே ராணி அளவற்றபொருள் அவள் கையில் கொடுத்து, ஓ பாட்டியாரே! இது நான் உமக்கு இப்போது கொஞ்சம் காணிக்கையாகக் கொடுத்ததேயல்லது வெகுமதியன்று; நீர் நமது காரியத்தைக் கைகூட்டிய பிறகு நான் உமக்குச் சுவர்ணாபிஷேகஞ் செய்விக்கிறேன் என்று சொன்னாள். அதைக் கேட்டதும் அந்தக் கடுநெஞ்சுள்ள கிழவி உயர்ந்த ஆடையாபரணங்களால் வெகு அழகாய்ச் சிங்காரித்து மாய வேடம் பூண்டு, ராமராஜனும் லட்சுமண மந்திரியும் ஒழிவுவேளைகளில் கூடி விளையாடுமிடமான ராஜோத்தியான வனத்திற்குச் சென்றாள். இவள் போனபோது அந்தப் பிள்ளைகள் இருவரும் அந்தத் தோட்டத்துச் சிங்காரமாளிகையில் உட்கார்ந்து வேடிக்கையாய் விளையாடிக்கொண்டிருந்தார்கள். அம்மாளிகையின் அருகே ஒரு சிறு தோட்டமும் தூரவுமுண்டு. இந்த மோசக்கிழவி அந்தக் கிணற்றண்டை போய்நின்று தண்ணீர் மொள்ளுகிறவள்போல்

இருந்தாள். ராமராஜன் அவனைப்பார்த்து, அப்பா லட்சுமணா! அதோ யாரோ ஒரு பெண்பிள்ளை வெகு செல்வமாய்ச் சிங்காரித்து வந்திருக்கிறாள் பார்! அவள் யார்? என்னசெய்தி? விசாரித்து வந்து எனக்குத் தெரியச்சொல்வாய் என, அந்த மந்திரிமகன் அப்படியே ஆகட்டுமென்று எழுந்து அந்தக் கிழவியண்டை போய், நீ யார்? நீ இங்கே வந்தகாரியமென்னவென்று கேட்டான். அதற்கு அவள் ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை என்று தலையசைத்துச் சொல்லிவிட்டு உடனே அங்கிருந்து ராணியண்டை வந்து, நீ கேட்டுக்கொண்ட காரியத்தை நிறைவேற்றியாயிற்று; எனக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுவென்று அநேகம் பைகள் நிரம்பப் பொருள் பெற்றுக்கொண்டு போயினாள்.

இது இப்படியிருக்க, மந்திரிகுமாரன் அந்தக் கிழவி சொன்ன சொல்லைக் கேட்டுக்கொண்டு ராஜகுமாரனண்டை போனான். ராமராஜன்: அடா! லட்சுமணா! அவள் சொன்ன செய்தி என்னவென்று கேட்க, லட்சுமணன் ஒன்றுமில்லையென்று தலையசைத்துப்போனாள் என்று நடந்ததை நடந்தபடியே உரைத்தான். அதைக் கேட்டு ராஜகுமாரன் கோபங்கொண்டு, நீ என்ன பொய்ப்பேச்சு பேசுகிறாய்! அவள் ஏதாவது ஒரு செய்தி உன்னுடன் சொல்லியேயிருப்பாள்; ஒருகாரியமும் இன்றி அவள் ஏன் இங்கு வரவேண்டும்? ஏதாவதொன்று உன்னுடன் சொல்லியேயிருப்பாள்; அதை நீ என்னிடத்தில் ஒளிக்கிறாய்; அதை நீ எனக்குச் சொல்லியே தீரவேண்டுமென்றான். லட்சுமணன், அவள் ஒரு அதிசயமும் சொல்லவில்லை; நான் என்றைக்காவது உனக்கு ஒளிக்கிறது உண்டா என்று பலதரம் வருந்திவருந்திச் சொல்லியும் ராமன் அதை நம்பவில்லை. வரவர அவனுக்குக் கோபமே அதிகமாயிற்று. கொஞ்ச நேரத்தில் இருவரும் கலகப்பட்டுப் பெருஞ்சண்டையாகிக் கடைசியில் ராஜகுமாரன் சரேலென்று வீட்டுக்கோடி, உதடுதுடிக்கக் கண்களில் நெருப்புப்பொறி பறக்க, அரசன் எதிரே போய்நின்றான். அவனைப்பார்த்து ராஜா திடுக்கிட்டு, நடந்தசெய்தி என்னவென்று கேட்க, ராமராஜன், மந்திரிமகன் எனக்குப் பெரும்பகையாளியாயிருக்கிறான். அவன் இனி ஒரு நிமிஷங்கூட இவ்வுலகிலிருக்க நான் பொறுக்கமாட்டேன். உடனே அவனைப்பிடித்துக் கொன்று அதற்கு அடையாளமாய் அவன் கண்களை என் கையிற்

கொண்டுவந்து கொடுத்தாலல்லது நான் தண்ணீர்கூடக் குடிக்கமாட்டேன்; உடனே அவனைக் கொன்றுவிட்டு நீங்கள் மறுகாரியம் பார்க்கவேண்டும் என்று முகத்தில் ரத்தந்தெறிக்கத் தெறிக்கப் பேசினான். அதைக்கேட்டு சந்திரராஜன் மிகவும் விசனமுற்று மந்திரிகுமாரன் செய்த பிழையைப் பொறுக்கும்படி மகனைப் பலவாறு வேண்டினான். என்னசொல்லியும் அவன் கேளாமற்போகவே ராஜன் ஒன்றுந்தோன்றாமல் மந்திரியண்டைபோய், நேசனே! நீ உன் மகனை வெளிவிடாமல் எங்கேயாவது பத்திரமாய் ஒளித்துவை. இவ்விரண்டு துஷ்டப்பயல்களும் எங்கேயோ சண்டைபோட்டுக் கொண்டு வந்திருப்பதாய்த் தோன்றுகிறது என்று அவனுக்கு எச்சரிக்கை சொல்லிவிட்டுக் காட்டிற்குப்போய் ஒரு முயலைக்கொன்று அதன் கண்களைக் கொண்டுவந்து ராமனைப்பார்த்து, பிள்ளாய்! உன்னிஷ்டப்படியே நம்மந்திரி மகன் உயிரை இழந்துபோனான்; இதோ அவன் கண்களைப்பார் என்று சொல்லித் தான் காட்டிலிருந்து கொண்டுவந்த முயற்கண்களைக் காட்டினான். அதைப் பார்த்தபிறகுதான் ராமராஜன் சந்தோஷமடைந்து வயிற்றுக்குச் சோறு தின்றான்.

இப்படி ராஜகுமாரன் பிராணபிரியனை தன் தோழனை இழந்து சிலநாளாயிற்று. அவனைவிட்டுப் பிரிந்தபிறகு ராஜகுமாரனோடு கூடிக்களித்து விளையாடுவாருமில்லை; இனியகதைகள் சொல்லித் களிக்கச்செய்வாருமில்லை. இப்படியிருக்கையில் ஒருநாள் அவன், பளிங்கினாற்செய்த ஒரு ராஜமாளிகையின் மத்தியில், சுவர்ணச்சாயையான வடிவழகுள்ள பெண்மணி ஒருத்தியிருப்பதாகக் கனவுகண்டான். பிறகு அதன் வரலாறு இன்னதென்று தெரியாமல், அதைத் தெரிந்து சொல்லும்படியாக அத்தேசத்திலுள்ள பண்டிதர்களை யெல்லாம் வரவழைத்து விசாரித்தான். யாவரும அதன் விதம் இத்தன்மையதென்று சொல்லத்தெரியாமற்போனார்கள். அப்பெண் மணியின் நினைவுமாத்திரம் அவன் மனதில் உறுதியாய் நிலைகொள்ளத் தலைப்பட்டது. அவ்வழகியின் எண்ணம் அதிகமாக ஆகத்தான் வேண்டுமென்று துறந்த தோழனைப்பற்றித் துக்கமும் அதிகரித்து, ஐயோ! இந்த வேளையில் எனக்குக் கைகொடுத்து உதவத்தக்கதவர் ஒருவருமில்லையே! நம்மந்திரி குமாரன் இருந்தால் இப்போது நமக்கு எவ்வளவு சகாயமாயிருக்கும்? அப்பா! என் தோழனே!

தோழனே! என் உயிர்த்தோழனே! ஐயோ! நான் உன்னைக் கொல்வித்துக் கொலைபாதகனுனேனே என்று இவ்வாறு கண்ட விடத்திலும் புலம்பத்தலைப்பட்டான். ஒருநாள் தகப்பனைக் கண்டு, மந்திரி குமாரனை லட்சுமணனைக் கொன்ற இடம் எது? அதை எனக்குக் காட்டும்; நானும் அவ்விடத்திலேயே போய் மாண்டு போகிறேன் என்று கதறினன். அதைக்கேட்டு ராஜா, நீ என்ன முழு மூடனுயிருக்கிருய்? உனக்கு விவேகமென்பது சிறிது மில்லையோ? முதலில் மந்திரிமகனைக் கொன்றுவிடும்படி என்னை வேண்டினதென்ன, இப்போது அவன் மாண்டவிடத்தில் நீயும் மாண்டுபோவதாய்ச் சொல்லுவதென்ன? இது என்ன மூடத்தன மென்று கேட்க, ராமன், நீர் ஏன் அவனைக் கொன்றுபோடும்படி கட்டளையிட்டீர்? அவனுடன் நான் என் தோழனை இழந்துபோனது மாத்திரமேயன்றி என் சௌக்கியம் சந்தோஷமனைத்தையும் இழந் தேனே! அவன் மடிந்தவிடத்தைக் காட்டும்; நானும் அங்கேயே மடி ந்துபோகிறேனென்று புலம்பிக்கொண்டே மெய்மறந்து மூர்ச்சை போயினன். அதைப்பார்த்து அரசன் லட்சுமணனைக் கொல்லும் படி கட்டளையிட்டதற்காகத் தன் மகன் உண்மையாகவே பச்சாத் தாபப்படுகிருனென்று தெரிந்துகொண்டு, மகனே! மந்திரிமகன் இப்போது உயிரோடிருந்தால் உனக்கு மிகச்சந்தோஷமல்லவா? நீ விவேகமில்லாமற் சொன்ன சொற்படி நடவாமல் இருந்ததற்காக நீ என்னிடத்தில் எவ்வளவு நன்றிபாராட்டவேண்டும்! உன் பழைய நேசனை ஒருவரும் கொல்லவில்லை. அவன் உயிருடனேதானிருக்கி றன். முன் நீ அவனுடைய கண்களென்று நினைத்தாயே, அவை முயற்கண்கள்; இனி ஒருபோதும் நீங்கள் கலகப்படாமல் மன மொத்த நேசராயிருங்கள் என்று சொன்னன். அதைக் கேட்ட வுடனே ராமராஜன் லட்சுமணன் வீட்டுக்கோடி அவனைக் கட்டி யணைத்து ஆநந்தக்கண்ணீர் பெருக்கி முன்னிலும் அதிகமாக அவ னுடன் சிநேகஞ்செய்துகொண்டான்.

தான் கோரினபடி தன் தோழன் கிடைக்கவே மிகச்சந்தோஷ மடைந்து ராமராஜன் தான் கண்ட கனவை அவனோடு சொன்னன். அதாவது: நான்கு நாளைக்குமுன்னே நான் ஒரு புதுமையான கனவுகண்டேன்: அதென்ன கனவென்கிருயோ? நான் அநேகங் காதவழிதூரம ஒரு இருண்ட காட்டினிடையே சென்றேன்.

அக்காட்டிலே வெகுதூரத்துக்கப்பால் தென்னஞ்சோலை யொன்றிருந்தது; அதற்கப்பால் பெரிய மாந்தோப்பு ஒன்றிருந்தது; அதன் பின்பு பலாத்தோப்பு ஒன்று இருக்கக்கண்டேன். அதையும் கடந்து போனேன்; கமுகஞ்சோலையொன்று வெகுதூரம் பரவியிருந்தது; அவைகளுக்கப்பால் அழகிய பூந்தோட்டம் ஒன்று இருக்கக்கண்டேன். அந்தத்தோட்டக்காரி ஒரு பூங்கொத்து என் கையிற்கொடுத்தாள். அதன் பரிமளத்தை நான் என்னென்று சொல்வேன்! அத்தோட்டத்தைச் சுற்றி அழகாய் ஆறொன்று பெருகுகின்றது. அவ்வாற்றிற்கு அக்கரையில் மிகப் பளபளப்பான பளிங்கினாற்செய்த ராஜமாளிகை ஒன்று இருக்கக்கண்டேன். அவ்வரண்மனையின் நடுவே மகா சுந்தரமான வடிவழகுள்ள பெண்மணி ஒருத்தியிருக்கின்றாள். அவளைப்போல் அழகுள்ள பெண் ஒருத்தியையும் நான் இதுவரையுங்கண்டதில்லை. அவள் அணிந்துகொண்டிருந்த ஆபரணங்களோ இவ்வளவென்று சொல்லிமுடியாது. அவ்வழகியைப் பார்த்து நான் ஒன்றுந்தோன்றாமல் பிரமித்து நின்றேன். இப்படியிருக்கக் கண்ணை விழித்துக்கொண்டேன். இப்படியே நான்கு தரம் கனவுகண்டேன். இதுவரையில் இந்தச் சொப்பனத்தின் வரலாற்றைத் தெரிந்து சொன்னவர் ஒருவருமில்லை. ஒருவரும் சொல்லமாட்டாமற் போகவே எப்படிப்பட்ட ஆபத்துவேளையிலும் காப்பாற்றத் தகுந்தவனான உன்னை நினைத்துக்கொண்டு கோவென்று கதறலானேன் என்றான். அதைக்கேட்டு மந்திரிமகன், அவனைச் சமாதானப்படுத்தி, நீ ஒன்றும் குறைப்படவேண்டாம்; கனவில் நீ கண்டதெல்லாம் உண்மையே; நீ கண்டவிதமாகவே ராஜகன்னிகை ஒருத்தி இவ்வுலகிலிருக்கின்றாள். உனக்கு விருப்பமானால் நீ அங்கேபோய் அவ்வழகியை மணம்புரியலாம் என்றுசொல்ல, ராஜகுமாரன், அங்கே நாம் எப்படிப்போகின்றது? அது தெரியாமல் தானே நான் தவித்துநிற்கிறேன்; அந்தக் கனவை எனக்கு விவரமாய் விளக்கிச் சொல்வாயென, மந்திரிகுமாரன் சொல்லுகிறான்: தோழனே சொல்லுகிறேன் கேள்: இங்கிருந்து அநேகங்காத தூரத்திற்கு அப்பால் ஒருபெரிய சீமையொன்றுண்டு. அத்தேசத்தரசனுக்கு மிக்க ரூபலாவண்ணியமுடையவளான கன்னிகை ஒருத்தியிருக்கிறாள். அவளுக்கென்றே பளிங்கினாற்செய்த திவ்வியமான மாளிகையின் மத்தியிலே அந்தப் பெண்மணி வசித்துக்கொண்டிருக்

கிறான். அந்த அரண்மனையைச்சுற்றிப் பெரியநதியொன்று பெருகுகிறது. அந்த நதியைச்சுற்றி அழகிய பூந்தோட்டமொன்று இருக்கின்றது. அந்தப் பூந்தோட்டத்தைச்சுற்றி, ஒன்று கமுகும், ஒன்று பலாவும், ஒன்று மாவும், மற்றொன்று தென்னையுமாக நான்கு நெருங்கிய தோப்புகள் இருக்கின்றன. இவ்வித விநோதக்காட்சிகளின் நடுவே அற்புதமாய் விளங்காநின்ற ராஜமாளிகைக்கு ஓரழகாயிருக்கின்ற அந்த ராஜகன்னிகைக்கு இப்போது இருபத்துநான்குவயதாகிறது. ஆயினும் அவள், எவனொருவன் தன்னைக் கலியாணஞ்செய்துகொள்ள விரும்பி அந்த மகாநதியைத் தாண்டித் தன்னிடத்திற்குத் துணிந்துவருகிறானோ, அவனையே தான் பாணிக்கிரகணஞ் செய்துகொள்வதாகப் பிரதிக்கினை பண்ணியிருக்கிறாளாதலால் இன்னும் அவளுக்கு விவாகம் நடவாமலிருக்கின்றது. அநேக ராஜாக்கள் அதைச் சாதிக்க முயன்றார்கள்; ஒருவராவது ஜயம்பெறவில்லை. அநேகர் அந்த நதியில் விழுந்து முழுகிப்போனார்கள்; அநேகர் கீழே விழுந்து முழங்கால் முறிந்து மாண்டுபோனார்கள்; ஆதலால் நீ கண்டகனவு வாஸ்தவமே என்றான். ராமராஜன் அதைக்கேட்டு நாம் அவ்விடத்துக்குப் போகக்கூடுமா என, லட்சுமணன், அதற்கு ஆக்ஷேபமென்ன; அப்படிச் செய்தே தீரவேண்டும்; உடனே நீ உன் தகப்பனிடம் போய், நான் லோகசஞ்சாரம் பண்ணிவர விருப்பங்கொண்டிருக்கிறேனென்று சொல்லிச் செலவுபெற்றுக்கொண்டுவா; யானை குதிரை முதலிய சேனைகளைக் கூட்டிக்கொண்டு வரப்போகிறாய். அவையொன்றும் வேண்டாம், நன்றாய்ப் 'பழகிய அவருடைய போர்க்குதிரை ஒன்றைமாத்திரம் பிரயாணத்துக்கு உதவும்படி கேட்டு வாங்கிக்கொண்டுவா என்று சொல்லியனுப்பினான்.

ராமராஜனும் அப்படியே தகப்பனிடஞ்சென்று, தந்தையே! நான் மந்திரிகுமாரனோடு தேசசஞ்சாரம்பண்ணி அங்கங்குள்ள அதிசயங்களைப் பார்த்துவர விருப்பங்கொண்டிருக்கிறேனாகையால் எனக்கு விடைகொடுத்து அனுப்பக்கோருகிறேன் என்று கேட்க, அரசன், அருமைமகனே! சுகமாய்ப் போய்வா; பிரயாணத்துக்கு உனக்கு என்னென்ன வேண்டும்? யானைகள் வேண்டுமா, குதிரைகள் வேண்டுமா, வேலையாட்கள் வேண்டுமா? எதெது எவ்வளவு வேண்டும்? தேவையைச் சொல்லென, அந்தச் சிற்றரசன், ஐயனே!

எனக்கு அதிகமாய் ஆடம்பரமொன்றுந் தேவையில்லை; ஏறிச் சவாரிசெய்துகொண்டு போவதற்காக உம்முடைய பழைய போர்க் குதிரையைமட்டுங் கொடுத்தனுப்புங்களென அவர் அப்படியே கொடுத்து க்ஷேமமாய்ப் போய்வரும்படி சொல்லியனுப்பினார். தந்தையினிடத்தில் விடைபெற்றுக்கொண்டு ராமராஜனும் லட்சுமணனிடம் வந்துசேர இருவருமாகச் சந்தோஷமாய்ப் பயணப்பட்டார்கள்.

வெகுதூரம் யாத்திரைபண்ணினபிறகு ஒருநாள், மேகமண்டலம் வந்து தரையைக் கவிழ்ந்ததுபோல் அடர்ந்து இருண்டு சூரியனொளியே தோன்றாமல் எப்போதும் குளிர்ந்து சில்லென்று மந்த மாருதம் வீசிக்கொண்டிருக்கும் ஒரு தென்னந்தோப்பைக் கண்டார்கள். அதைக் காணவே காரியங் கைக்கூடிற்றென்று களிப்படைந்து அதைக் கடந்துபோனார்கள். போகையில், அங்கே மாந்தோப்பொன்று இருந்தது; அதற்கப்பால் குமுகுமுவென்று காத வழிக்கு மணம்வீசும் ஒரு பலாத்தோப்பும் கடைசியாய் அழகிய கமுகஞ்சோலையொன்றும் இருக்கக் கண்டார்கள். அவற்றிலுள்ள அதிசயக் காட்சிகளையெல்லாம் கண்டு கண்குளிர்ந்து விநோதமாய் அந்தக் குமாரர்களிருவரும் அப்புறம் போகையில், அங்கே சிங்காரமான பூந்தோட்டம் ஒன்றிருந்தது. அதனுட்புகுந்து அங்குள்ள அற்புதங்களைக் கண்டுகளித்து நிற்கையில், அந்தத் தோட்டக்காரி ஒரு அழகிய பூங்கொத்தை அவர்களுக்குக் காணிக்கையாகக் கொண்டு வந்து கொடுத்தாள். அவர்கள் அதை வாங்கிக்கொண்டு, தாங்கள் காணக்கருதிய ராஜகன்னிகை வசிக்கின்ற ராஜமாளிகையைக் கிட்டினோமென்றும், தங்கள் காரியம் அநேகமாய்க் கைகூடிற்றென்றும் எண்ணி அகமகிழ்ந்தார்கள்.

இதிப்படியிருக்க, அந்தப் பெண்மணியை மணம்புரியவேண்டுமென்று ஆவல்கொண்ட அநேகர், அவள் வசிக்கும் பளிங்குமாளிகையைச் சுற்றியோடுகின்ற ஆற்றைத் தாவமுயன்று, அவ்வாற்றிலே வீழ்ந்து முழுகிப்போகிறார்களென்று கேள்விப்பட்டு, அவள் தந்தையாகிய அவ்விடத்தரசன், ஒரு சட்டம் ஏற்படுத்தினான். அதாவது: இனி யாராயினும் நமது குழந்தையைக் கலியாணஞ் செய்துகொள்ளக் கருதினால், அவர்கள் நாம் ஏற்படுத்திய சில சமயங்களில் மாத்திரமே இந்நதியைத் தாவ முயலவேண்டுமேயொழியத் தங்களுக்

குத் தோன்றினபோதெல்லாம் வந்து தாவக்கூடாது ; அப்பொழுதும் தனக்குத் தெரிவித்துத் தன் அனுமதியைக்கொண்டே அக்காரியஞ் செய்யவேண்டும் ; இந்தச் சட்டத்திற்கு விரோதமாய் யாராவது அரசர்கள் இவ்விடத்தில் திரிந்துகொண்டிருப்பதாய்த் தெரிந்தால், அவர்களை உடனே பிடித்துச் சிறைசெய்யப்படும் என்று ஒரு கடும் சட்டம் ஏற்படுத்தினான். இப்படி ஒரு சட்டம் ஏற்பட்ட செய்தி சிறிதும் இந்த ராமலட்சுமணர்களுக்குத் தெரியாது. இவர்கள் அந்தத் தோட்டத்தில் சுற்றிக்கொண்டேயிருக்கையில் தற்செயலாய் அவ்வாற்றங்கரை போய்ச் சேர்ந்து எதிரே அத்தேசத்தரசனுடைய பளிங்குமாளிகை பளபளவென்று பிரகாசித்துக்கொண்டிருக்கக் கண்டார்கள். இனிச் செய்யவேண்டுவ தென்னவென்று அக்குமாரர்கள் சிந்தித்துக்கொண்டிருக்கையில், திடீரென்று அங்கிருந்த காவற்காரர்கள் கண்டு, அவர்களைப் பிடித்துக்கொண்டுபோய்ச் சிறையில் அடைத்துவிட்டார்கள்.

தங்களைச் சிறையில் அடைத்துப்போடவே மந்திரிமகன் ஒன்றுந் தோன்றாமல், தோழனே ! இதென்ன துர்ப்பாக்கியம் ! பிள்ளைவரங் கேட்கப்போனவிடத்தில் புருடனைப் பறிகொடுத்ததுபோலாயிற்றே என, ராஜகுமாரன் பெருமூச்செறிந்து, ஆம், நாம் என்னென்னவோ எண்ணிக்கொண்டிருந்தோமே ! நமது தலைவிதி இத்தன்மையதென்று நமக்குத் தெரியாமற்போயிற்றே ! அதிக ஆசை அதிக நஷ்டம் என்கிற பழமொழி பொய்யாகுமா ! இப்போது அதைச் சொல்லிப் பயனென்ன ? நாம் இங்கிருந்து தப்பித்துக் கொண்டு போவதற்கு வழி ஏதாவது உண்டா என, லட்சுமணன், உண்டென்றுதான் எனக்குத் தோன்றுகிறது ; நம்மால் கூடியவரையில் முயன்றுபார்ப்போம் என்றுசொல்லி, அங்கிருந்த காவலாளனைப் பார்த்து, ஐயா ! நாங்கள் சிறையில் அகப்பட்டுப்போயினோம் ; இதினின்றும் விடுவித்துக்கொள்வதற்கு எங்களால் இல்லை ; என்னவோ அது கடவுள் கட்டளைப்படி நடக்கிறது. இப்போது நீ எங்களுக்கு ஒரு உதவி செய்வாயா ? தோட்டக்காரனுடைய பசு எங்கேயோ வழிதப்பி ஓடிப்போய்விட்டது என்று உரத்துக்கூவுவாயானால் இந்தப் பொருளை நாங்கள் உனக்குக் கொடுக்கிறோமென, காவற்காரன் இதுதான் பொருள் சேகரிக்கச் சுலபமான வழியென்று நினைத்து, அவர்கள் கொடுத்த பொருளைப் பெற்றுக்கொண்டு அவர்கள் கேட்

டுக்கொண்டபடியே கூவினன். அதனால் லட்சுமணன் எதிர்பார்த்திருந்தபடியே காரியம் கைகூடிற்று. காவற்காரன் கூவின கூச்சலைக்கேட்டு தோட்டக்காரி, இதென்ன காவற்காரர்கள் மறுபடியும் சிறைச்சாலையைச் சுற்றிக்கொண்டிருக்கிறார்களே! யாராவது சிறையாய்ப் பிடிபட்டிருக்கவேண்டும்; இன்று விடியநேரத்தில் நாம் தோட்டத்தில் கண்ட இரண்டு ராஜகுமாரர்கள்தாம் சிறையாய் அகப்பட்டிருப்பார்கள், சந்தேகமே இல்லையென்று எண்ணி, அவர்களை எப்படியாவது விடுவிக்க முயலவேண்டுமென்று அவ்விடத்திலிருந்த இரண்டு ஆண்டிகளைக் கூட்டிக்கொண்டு, பாக்கு வெற்றிலை பூ பழம் முதலான வேண்டிய காணிக்கைப் பொருள்களை எடுத்துக் கொண்டு சிறைச்சாலையின் பிராகாரத்துக்குள்ளேயிருக்கும் கோயிலுக்குக் கடவுளைத் தொழப்போகிறவள்போலப் போனாள். வழக்கப்படியே அவள் தோழர்களோடுகூடக் கோயிலுக்குப் போகிறாளென்றெண்ணிக் காவற்காரர்கள் ஒரு தடையுமின்றி அவளுக்கு வழிவிட்டார்கள். அவள் அவ்விடத்திற்குப் போனவுடனே சிறைச்சாலைக் கதவைத்திறந்து அங்கிருந்த இருவரையும் கண்டு ஆண்டிகளுடைய உடையை உடுத்து ஆண்டிவேஷந்தரிக்கச்செய்து, தன்னுடன் வந்த இரண்டாண்டிகளை அங்கேயே விட்டுவிட்டு, அவ்விரண்டு குமாரர்களையும் ஒரு அபாயமுமில்லாமல் தன் வீடு கொண்டுவந்து சேர்த்தாள். வீட்டுக்குவந்ததும் அவள் அப்பிள்ளைகளைப் பார்த்து இளவரசர்களே! நீங்கள் உங்கள் வரவை எங்கள் அரசனுக்குத் தெரிவித்து அவருடைய அனுமதி பெற்றுக்கொள்ளாமல் இவ்வாற்றண்டை போனது மிகவும் பிசகு. இவ்விஷயத்தைப்பற்றி இந்த ராஜா மிகக் கடுமையாய்க் கட்டளையொன்று செய்திருக்கிறார். நான் இப்போது உங்களை விடுவியாமற்போவேனானால் நீங்கள் ஆயுளளவும் இச்சிறையிலேதான் அடைபட்டுக் கிடக்கவேண்டும். நீங்கள் அறியாமையாலேயே இந்தப்பிழை செய்தீர்களென்று எனக்கு நன்றாய்த்தெரியும். ஆயினும் நீங்கள் இவ்விடம்வந்த செய்தி அரசனுக்குத் தெரிந்துபோமானால் பிறகு உங்களை விடுவிக்க ஒருவராலுமாகாது; எப்படியோ தெய்வாதீனமாய்த் தப்பிவந்தீர்களே; நாளைக் காலையில் எழுந்து முன்னே ராஜாவைப்போய்க் காணுங்கள் என்று சொன்னாள்.

மறுநாள் உதயமானதும் காவற்காரர்கள் சிறைச்சாலையிலிருந்த இருவரையும் பிடித்துக்கொண்டு ராஜசபையின்முன் நிறுத்தி, மகாப்

பிரபுவே! தங்களுடைய கட்டளைக்கு மாறாக இவ்விருவரும் ஆற் றோரத்தில் நேற்று இராத்திரி திரிந்துகொண்டிருந்தார்கள்; நாங்கள் கண்டு பிடித்துவந்தோம் என்று சொன்னார்கள். அரசன் அவர் களைக் கிட்ட வரவழைத்துப் பார்க்கையில் அவனுக்குண்டான அதி சயத்தை என்னவென்று சொல்லலாம்! அவ்விருவரும் இரண்டு கிழ ஆண்டிகள். அவ்வாண்டிகளை அப்பட்டணத்தார் அனைவரும் நன்றாய் அறிவார்கள். அவர்கள் வெகுவாய் அவ்வரசமாளிகையின் கோபுர வாயிலண்டை காத்துக்கொண்டிருப்பவர்கள்.

அவ்விரண்டு ஆண்டிகளைப் பார்த்து அரசன் நகைத்து, ஓ மதி யீனர்களே! நீங்கள் சாக்கின்ற காவல் மிதம்மிஞ்சியிருப்பதுபோல் காண்கிறதே! நீங்கள் பிடித்துவந்த ராஜகுமாரர்களை வந்துபாருங் கள்; இதுவரையில் ஒருநாளும் நீங்கள் இவ்விரண்டு ஆண்டிகளை யும் கண்டதில்லையா என்று காவற்காரர்களோடு சொல்ல, அவர்கள் அவ்வாண்டிகளைப்பார்த்து மிகவும் வெட்கமடைந்து திரும்பிப்பாரா மல் அப்புறம்போய்விட்டார்கள்.

இதற்குள் ராமராஜனும் லட்சுமணனும் தாங்கள் நடக்கவேண் டியவிதம் இப்படிப்பட்டதென்பதைத் தோட்டக்காரி சொன்ன யோசனையால் அறிந்துகொண்டு அரசனுக்குத் தங்கள் வரவை அறி விக்கக் காலையில் ராஜாவின் அரமனைபோய்ச் சேர்ந்தார்கள். அவ் வரசனும் அவர்களை மிக்க மரியாதையுடன் வரவழைக்க, அவர்கள் அவனைப்போய்க் கண்டு தாங்கள் வந்தகாரியம் இன்னதென்பதை அறிவித்தார்கள். அதைக்கேட்டு அரசன் தலையசைத்து, ஓ ராஜ குமாரர்களே! உங்கள் அழகையும் வயதையும் திறமையையும் பார்க் கும்போதே எனக்கு உங்களிடத்தில் அதிக அன்பு உண்டாகின்றது. ஆதலால் என் மகளுடைய மனோரதத்தை நிறைவேற்றி அவளைக் கைப்பற்ற முயலவேண்டுமென்று உள்ளூற ஆவல் கொண்டிருப் பீர்களானால் அதை நான் ஒருபோதும் மறுப்பதில்லை. அதிருக் கட்டும்; இப்போது நான் உங்களோடு நட்புப்பாராட்டி உங்களுக்கு இதத்தைச்சொல்லுகிறேன் கேளுங்கள்: இப்போது நீங்கள் கொண் டிருக்கும் எண்ணத்தை விட்டுவிடுங்கள்; உங்களைக் கலியாணஞ் செய்துகொள்ள வேண்டுமென்று உலகில் எத்தனையோ ராஜ கன் னிகைகள் காத்திருக்கிறார்கள்; அப்படியிருக்க எவ்வளவோ வருத் தப்பட்டு என் இவ்விடம் வந்தீர்கள்? உங்களைப்போலவே சௌந்தரிய

மும் சாமர்த்தியமுமுள்ள ராஜகுமாரர்கள் எத்தனையோபேர் வந்து என் மகளைக் கைக்கொள்ள முயன்று உயிரையிழந்தார்கள்; ஆதலின் நீங்கள் இந்தப் பெண்ணைப்பற்றிய ஆசையை இவ்வளவோடு ஒழித்து விடுங்கள்; அவள் மிகக்கொடியதான பிடிவாத முடையவளாயிருக்கிறாள் என்று சொன்னான். என்னசொல்லியும் ராமராஜன், அந்த ஆற்றைத் தாண்டுவது எவ்வளவு அபாயமாயிருந்தாலும், தன்னால் கூடியவரையில் ஒருகை பார்த்துத்தான் விடவேண்டுமென்று ஒரே பிடிவாதமாய்ச் சொல்லவே, அந்த ராஜன் மனமில்லாமலே அதற்குச் சம்மதித்து, அந்தக் குமாரனுக்கு ஜயமுண்டாகவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கும்படி அந்நகரத்திலுள்ள புண்ணிய புருஷர்களையெல்லாம் வேண்டிக்கொண்டு, இப்போது ஒரு ராஜகுமாரன் தன் உயிர்க்குத்துணிந்து இந்நதியைத்தாண்ட வந்திருக்கிறானென்றதாய் அந்நகரம் முழுதும் பறையறைவித்தான்.

அந்த விநோதத்தைப் பார்க்க அனைவரும் வந்துகூடினார்கள். அப்போது ராமராஜன் வெகு சிறந்த ஆடையாபரணங்கள் அணிந்து தன் தந்தையின் பேர்போன போர்க்குதிரைமேலேறி அதைத்தட்டினான். உடனே அந்தக் குதிரை நாலுகால் பாய்ச்சலாய்ச் சவாரி செய்ய ஆரம்பித்துக் கொஞ்சநேரத்தில் பக்ஷிகள் பறப்பதுபோல வாயுவேகம் மனோவேகமாய் ஆகாயமார்க்கத்தில் பறந்து அந்த நதியைத்தாவி ராஜகன்னிகை வசிக்கின்ற கண்ணாடிமாளிகையின் மத்தியிலேபோய் நின்றது. அந்தச் செய்கை மிகவும் அற்பமென்று நினைத்து அதனால் வெட்கமடைந்தவன்போல ராஜகுமாரன் அதே விதமாய் அந்நதியை மூன்றுதரம் தாவினான். அதைப்பார்க்கவே அந்த ராஜனுக்கு உண்டான சந்தோஷத்திற்கு அளவில்லை. ராஜகுமாரன் அந்த மாளிகையில் வந்திறங்கினவுடனே அரசன் எழுந்தோடி அந்தக் குதிரையைத் தட்டிக்கொடுத்து ராஜகுமாரனையும் கட்டி முத்தமிட்டுக்கொண்டு; என் அருமை மருமகனே! நீ க்ஷேமமாயிருக்கக் கடவாய் என்று வாழ்த்தினான்.

பின்பு ஒருநாள் நல்ல சுபமுகூர்த்தத்தில் பலவித வேடிக்கை விநோதங்களோடு யாவரும் கண்டுகளிக்க மிகவும் சம்பிரமமாய் அவ்விருவருக்கும் கலியாணம் நடத்தப்பட்டது. அந்தக் கலியாணத்தில் நடந்த விருந்து வேடிக்கை முதலியவற்றின் சிறப்பைச் சொல்ல இங்கிடமில்லை. இப்படித் தான்கோரினபடியே மிகவும் மேன்மை

யாய்க் கலியாணம் நடந்தேறின பின்பு ராமராஜன் தன் மனையாளான கங்காதேவியோடு சௌக்கியமாய்ச் சிலநாள் மாமன்வீட்டிலேயே இருந்தான். கடைசியில் ஒருநாள் தன் தேசம் போக வேண்டுமென்று எண்ணங்கொண்டு மாமனண்டைபோய், ஐயா! நான் இத்தனைநாள் தங்கள் சன்னிதானத்தில் வெகுசௌக்கியமாய் இருந்தேன். இப்போது என் தாய்தந்தையர்களையும் சுதேசத்தையும் பார்க்க எனக்கு விருப்பம் உண்டாயிருக்கின்றது என்று சொல்ல, அதைக்கேட்டு ராஜா, குழந்தாய்! சுகமாய்ப் போய்வா; ஆனால் நீதான் எனக்குப் பிள்ளை! உன்னைத்தவிர எனக்கு வேறுபிள்ளையில்லை; உன் மனையாளைத்தவிர வேறுமகளுமில்லை; ஆதலால் உங்களைப் பாராமல் தனித்திருப்பது எனக்கு மிக்க விசனமுண்டாக்குமாதலால், அடிக்கடி இவ்விடத்துக்கு வந்து என்னைச் சந்தோஷப்படுத்திக்கொண்டிருக்க வேண்டும்; இனி நீ என் அரமனைக்குவர எப்பொழுதும் யாதொரு தடையுமில்லை; எப்பொழுதும் உன் நல்வரவை இங்கே எதிர்பார்த்திருப்பேன் என்றான்.

அந்த ராஜன் கேட்டுக்கொண்டபடியே ஒவ்வொரு காலத்தில் அவ்விடத்துக்கு வருவதாய்ச் சொல்லிச் செலவுபெற்றுக்கொண்டு ராமராஜன், பலவிதமான பரிசுகளும் வழிச்செலவுக்கு வேண்டிய பல சாமான்களும் அநேகம் சேனைமுதலியவைகளும் கொடுக்க, அவைகளையெல்லாம் பெற்றுக்கொண்டு தன் மனையாளான கங்காதேவியோடும் அருமைத்தோழனான மந்திரிமகனோடும் அவ்விடம் விட்டுச் சுதேசத்திற்குப் பயணம் புறப்பட்டான். அந்நதியைக் கடந்ததும் தங்களுக்குப் பேருதவி செய்தவளான தோட்டக்காரிக்கு ராமனும் லட்சுமணனும் விசேஷமாய் வெகுமானம் செய்துவிட்டு அப்புறம் போனார்கள்.

அவர்கள் அங்கிருந்து புறப்பட்டதினம் சாயங்காலம் வரும்போது வழியில் கண்ட தென்னஞ்சோலையைக் கடந்து காட்டோரஞ்சேர்ந்து அங்கேயே அன்றிரவைக் கழிக்கும்படி நிச்சயித்தார்கள். அங்கேயே கூடாரமடித்துச் சேனைகளெல்லாமிறங்க, ராமராஜன் தன் மனையாளான கங்காதேவியோடு கூடாரத்திற்போய்ப் படுத்தான். லட்சுமணன் அவர்களிடத்தில் அதிகநேசம் வைத்திருந்ததனால், இரவெல்லாம் கண்விழித்து அவர்கள் கூடாரத்தின் வாயிலண்டை காத்திருக்கும்படி நிச்சயித்து அண்டையிலிருந்த ஒரு பெரிய ஆலமரத்தின்

கீழேபோய் உட்கார்ந்தான். அப்போது ஆணும் பெண்ணுமாய் இரண்டு கோட்டான்கள் பறந்துவந்து அம்மரத்து நுனிக்கிளையில் உட்கார்ந்து ஒன்றுக்கொன்று விநோதமாய்ப் பேசத்தொடங்கின. மற்றவர்களைவிடப் பலவிதத்திலும் வல்லவனான மந்திரிகுமாரனுக்கு அந்தப் பறவைகளின் பேச்சும் நன்றாய்த் தெரியும். அவன் கேட்டுப் பிரமிக்கும்படி பெண்பறவை ஆணைப்பார்த்து ஒருவார்த்தை சொல்லிற்று. அதாவது: என் நாதனே! நீ கதை சொல்லக்கேட்டு எத்தனையோ நாளாயிற்றே; இப்போது ஒரு கதை சொல்ல வேண்டுகிறேனென்றது. அதைக்கேட்டு ஆண்பறவை, கதையா சொல்லச் சொல்லுகிறாய்? உனக்கு என்ன கதைவேண்டும்; இம்மரத்தின் கீழ் ஜனங்கள் வந்திறங்கியிருக்கிறார்கள் பார்த்தாயா? இவர்கள் கதையைச் சொல்லட்டுமா என, பெண்பறவை அதற்குச் சம்மதிக்கவே ஆண்பறவை சொல்லத்தொடங்கிற்று.

இதோ மந்திரிகுமாரன் இருக்கிறான் பார்த்தாயா? ஐயோ பாவம்! இவன் மிக்க நனறியும் நன்னடக்கையும் உடையவன்; இந்த ராஜகுமாரனுக்கு எவ்வளவோ நன்மைகள் செய்திருக்கிறான். ஆயினும் அதனால் இவனுக்கு இத்தனைநாளும் யாதொரு நன்மையும் உண்டாகவில்லை; இனிமேலும் யாதொன்றும் உண்டாகப்போகிறது மில்லை என்றது. அம்மரத்தின கீழிருந்த லட்சுமணன் அதைக் கேட்டு இதென்னவென்று திடுக்கிட்டு அந்தப்பேச்சில் மிக்க கவனமுடையவனாய் தன் ஜேப்பிலிருந்து எழுதுகிற கருவிகளைக் கையில் எடுத்துக்கொண்டு, அது சொல்வது ஒவ்வொன்றையும் குறித்துக்கொள்ளத் தீர்மானித்தான். அந்தக் கோட்டான் அவர்கள் கதையைச் சொல்ல ஆரம்பித்து, அவர்கள் பிறந்து வளர்ந்தது, நேசர்களானது, கலகப்பட்டது; பின்பு ராஜகுமாரன் கனவுகண்டது, மறுபடியும் அவர்கள் நேசர்களானது, கங்காதேவியென்னும் ராஜகுமாரத்தியைத் தேடிக்கொண்டு யாத்திரை புறப்பட்டது முதலாய் அன்றைய தினம் வரையில் நடந்த கதையையெல்லாம் சொல்லிமுடித்தது. மந்திரிகுமாரனுடைய துரதிர்ஷ்டம் இவ்வளவுதானோ இன்னும் விசேஷம் உண்டோவென்று பெண்பட்சி கேட்க, ஆண் மேலும் சொல்லுகின்றது.

மந்திரிகுமாரன் இங்கிருந்து இவர்களோடுகூடவே புறப்பட்டுப் போவான். சந்திரராஜனுடைய தேசத்தருகே போம்போது இந்தச்

சேனையெல்லாம் ஒரு பெரிய ஆலமரத்தின்கீழே போகப்போகிற தருணத்தில், இந்த மந்திரிகுமாரன் அம்மரத்தின் பெரிய நுனிக்கிளை யொன்று முறிந்து விழப்போவதாய்க் கண்டு இந்த ராஜதம்பதிகளைச் சரேலென்று அப்புறம் கொண்டு சேர்ப்பான். உடனே அந்தக் கிளை மளமளவென்று முறிந்து வெகுவேகமாய்க் கீழே விழும், மந்திரிகுமாரன் கொஞ்சம் எச்சரிக்காவிட்டால் அது தலையில் விழுந்து அவர்கள் மாளவேண்டுவதுதான். இப்படி இவன் ராஜாவின் உயிரைக் காப்பாற்றியும் இவன் தலைவிதிமாத்திரம் மாறப்போகிறதில்லை என்றது, இதையெல்லாம் மந்திரிகுமாரன் குறித்துக்கொண்டான். அப்புறம் என்னவென்று பெண்பட்சி கேட்க, ஆண் இன்னும் சொல்லுகின்றது.

அப்புறம் என்ன வென்கிறாயோ ? இவர்களெல்லாரும் தங்கள் பட்டணத்து ராஜமாளிகைக் கோபுரவாயிலண்டை போம்போது மேல்மாடி கொஞ்சம் ஆடிக்கொண்டிருக்கிறதென்று கண்டு மந்திரி மகன் இந்த ராஜதம்பதிகள் அதின்கீழ் அகப்பட்டுக்கொண்டு நசுங்கிப் போகாதபடி சரேலென்று அவர்களை அப்புறம் சேர்ப்பான் என்றது. அப்புறம் என்னவென்று பெண்பட்சி கேட்க, இது இன்னும் சொல்லுகிறது : பின்பு ஒருநாள் ராமராஜனும் கங்காதேவியும் படுத்துத் தூங்கும்போது, அவர்களண்டை காவல் காத்துக்கொண்டிருக்கும் லட்சுமணன், ஒரு பாம்பு ராணிக்கு நேராய்ச் சுவரிலிறங்கிவரக் கண்டு தன் கத்தியால் அந்தச் சர்ப்பத்தைக் கொல்லுவான். அப்போது ஒரு சொட்டு ரத்தம் அவள் முகத்தில் சிந்தும். லட்சுமணன் அதைத் தன் கையால் துடைக்க அஞ்சித் தன் முகத்தைத் துணியால் மூடிக்கொண்டு அதைத் துடைப்பான். அத்தருணத்தில் ராமராஜன் விழித்துக்கொண்டு பார்த்துக் கோபங்கொண்டு சபிக்க, ஐயோ ! இந்த லட்சுமணன் கல்லாக மாறிப்போகப் போகிறானே என்றது.

அவன் எந்நாளைக்கும் அப்படிக் கல்லாகவேதான் இருப்பானோ வென்று பெண்பட்சி மறுபடியும் கேட்க, ஆண்பறவை எந்நாளுமில்லை; எட்டுவருஷகாலம் கல்லாகக்கிடப்பான் என, ஆனால் பின்பு நடப்பதென்னவென்று கேட்டதற்கு, ஆண்பறவை, அந்த ராஜதம்பதிகளுக்கு ஒரு குழந்தை பிறந்து அது பெரிதாகி தவிழ்ந்து விளையாடுகையில் ஒருநாள் அந்தக் கல்லுருவத்தைப் பிடித்துக்கொண்டு

தானே எழுந்திருக்கும். அந்தக் குழந்தையின் கைபட்டவுடனே மந்திரிகுமாரனுக்கு உயிருண்டாகும். இன்று இராத்திரிக்கு இவ்வளவு கதைபோதும்; எழுந்திரு, எங்கேயாவது கொஞ்சம் இரைதேடிக் கொண்டு போய்ப் படுப்போமென, அவை இரண்டும் பறந்துபோயின. இவற்றையெல்லாம் லட்சுமணன் குறித்துக்கொண்டான். இந்தக் கதையைக் கேட்கவே அவனுக்கு மிகவும் துக்கமுண்டாயிற்று. ஆயினும் இவையெல்லாம் உண்மையாயிருக்கப்போகிறதாவென்று நினைத்து அந்தச் செய்தியை அவன் ஒருவரோடும் சொல்லவேயில்லை.

மறுநாள் காலையில் அவர்களெல்லாரும் அவ்விடம் விட்டுப்போனார்கள். கோட்டான் சொன்னதுமட்டும் பொய்யாகவில்லை: ஒரு பெரிய ஆலமரத்தின்கீழ் அவர்கள் போகையில் அம்மரத்தின் பெருங்கிளையொன்று முறியக்கண்டு லட்சுமணன் கோட்டான் சொன்னது உண்மைதானென்றெண்ணி ராஜாவையும் இராணியையும் வேகமாய் அப்புறம் அழைத்துக்கொண்டுபோக, உடனே இடி முழக்கம்போன்ற பயங்கரமான சத்தத்துடன் கிளை முறிந்து கீழே விழுந்தது.

அங்கிருந்து சிலநாள் வழிநடந்தபிறகு அவர்கள் பட்டணம் போய்ச்சேர்ந்தார்கள். பட்டணத்துக் கோபுரவாயிலில் நுழைகையில் மேல்மச்சில் பாவுகல் ஒன்று ஆடக்கண்டு, லட்சுமணன் கோட்டான் நல்ல தீர்க்கதரிசி என்று ஆச்சரியப்பட்டு ராமனையும் கங்காதேவியையும் கையைப்பிடித்துச் சரேலென்று அப்புறம் கொண்டுவிட்டு, நேசனே! நான் உன் அனுமதியின்றி உன் கையையும் ராணியின் கையையும் பிடித்ததற்காக மன்னிக்கவேண்டும்; நிமிஷத்தில் பெரிய அபாயம் வரப்போகிறதென்று கண்டு இப்படிச் செய்யத்துணிந்தேன் என்று சொல்லி மன்னிப்பு கேட்டுக்கொண்டான். இப்படி அவர்கள் க்ஷேமமாய் வீடுபோய்ச்சேர, சந்திரராஜன் ராணி மந்திரி முதலியவர்களெல்லாரும் அவர்களை நல்வரவாய் வரவழைத்துக் களிப்படைந்தார்கள்.

பின்பு ஒருநாள் இராத்திரி ராமராஜனும் கங்காதேவியும் படுத்து நித்திரைசெய்ய, லட்சுமணன் வழக்கப்படியே அண்டையிலிருந்து காவல்காத்துக்கொண்டிருக்கிற வேளையில், பெரிய கருநாகமொன்று ராணியின் தலைக்கு நேராகச் சுவரில் மெதுவாய் இறங்கிவரக்கண்

டான். கண்டு, ஐயோ! என்விதி இப்படித்தானுயிருக்கிறது! கடவுள் கட்டளையை யார் மீறலாம்? நம்முடைய தொழிலை நாம் செய்தேதீர வேண்டும் என்று, கோட்டான் சொல்லத் தான் எழுதிவைத்திருந்த பிறப்புவளர்ப்பு முதலாய் அன்றையதினம்வரையில் நடந்த தங்கள் சரித்திரத்தை எடுத்துப் படுத்திருந்த ராஜகுமாரன் முன்னிலையில் வைத்துவிட்டு, கத்தியை எடுத்துப் பாம்பை வெட்டினுன். சர்ப்பத்தின் இரண்டுமூன்று இரத்தத்துளி கங்காதேவியின் முகத்தில் தெறித்தது. மந்திரிமகன் அதைக் கையால் துடைக்க அஞ்சி, ராணியின மதிமுகம் விஷத்தால் விகாரப்படக்கூடாதென்று, தன் முகத்தை வஸ்திரத்தால் மூடிக்கொண்டு அதனுல் விஷத்தைத் துடைக்கப்போனுன். அத்தருணத்தில் ராமராஜன் விழித்துக்கொண்டு அவனைப் பார்த்து, ஓ மந்திரி! மந்திரி! இதுதானு நீ செய்கிற காரியம்? அடா லட்சுமணு! எனக்குச் சகோதரன்போலிருந்து எவ்வளவோ வருத்தங்களினின்றும் என்னைத் தப்புவித்த நீ கடைசியில் எனக்கு இப்படிப்பட்ட பொல்லாங்கு செய்கிறதா? ராணியின் மதிமுகத்தை நீ முத்தமிடுகிறதா? உனக்கு அப்படி இவளிடத்தில் ஆசையிருக்கும் பக்ஷத்தில், கண்ணுடிமாளிகையில் இவளை நாம் கண்டவுடனே அதை நீ என்னுடன் ஏன் சொல்லக்கூடாது? அவளை நீயே கலியாணஞ் செய்துகொள்ளென்று நான் எங்கேயாவது தேசம்விட்டோடிப்போயிருப்பேனே; அப்பா தோழனே! நீ என்ன இப்படி என்னைப் பரிகாசம்பண்ணினுய்? என்று சொல்லிக் கையிலே முகத்தை வைத்துக்கொண்டு மந்திரியை விழித்துப்பார்த்தான். அவனென்றும் விடைகொடுக்கவேயில்லை; ஆனதினுல் கல்லாகுக வென்று அரசன் சபிக்க, அப்படியே கல்லாய்ப்போயினுன்.

பிறகு ராமராஜன் தன் படுக்கையைக் குனிந்துபார்க்க, அங்கே லட்சுமணன் வைத்த கடிதத்தைக்கண்டு அதைப் படித்தான். ஆதி தொடங்கி அதுவரையில் லட்சுமணன் அவனுக்குச் செய்துவந்த நன்மையெல்லாம் அதில் எழுதியிருந்தன. அதைப்பார்கக அவனுக்குப் பெருந்துக்கமுண்டாயிற்று. அதனுல் அவன் தேகம்தெரியாமல் கல்லாயிருக்கின்ற மந்திரியின் காலில் விழுந்து கோவென்று கதறலானுன். காலையில் சந்திரராஜன் ராணி முதலியவர்கள் அவன் அழுகைக்குரலைக்கேட்டு இதென்னவென்று ஓடிவந்து, இளவரசன் அந்தக் கல்லில் விழுந்து தீனமாய்ப் புலம்பிக்கொண்டே அதை

மன்னிப்பு வேண்டிக்கொண்டிருக்கக்கண்டு, நடந்தசெய்தி என்னவென்று கேட்டார்கள். அவன் நடந்த வர்த்தமானத்தைச்சொல்ல, ராஜா மிகக்கோபங்கொண்டு, நீ ஒருதரம் அநியாயமாய் இந்த நல்ல பிள்ளையின் கொலையைக் கோரினது போதாதா? மறுபடியும் உன் முன்கோபத்தால் இவனைக் கல்லாக்கினுயே? அப்புறம்போ! இப்படித் தீங்குசெய்வதே உனக்கு வேலையென்று அவனை அதட்டினான்.

அன்றுமுதல் ராமராஜனும் கங்கர்தேவியும் எப்போதும் அந்தக் கல்லுருவத்தண்டையே இருந்துகொண்டு அதைக் கட்டிக்கொள்வதும் முத்தமிடுவதும் நல்வார்த்தை சொல்வதும் தங்கள் பிழையைப் பொறுத்து மறுபடியும் மானிடவடிவத்தைப் பெற்றுக்கொள்ளும்படி வேண்டுவதுமாயிருந்தார்கள். அவர்கள் என்னசெய்தும் அவன் உருவம் மாறவேயில்லை. அவனில்லாமல் அவர்களுக்கு ஒரு நிமிஷம்போவது ஒரு யுகமாயிருந்தது. அப்படியே ஒரு நன்மையுமில்லாமல் எட்டுவருஷகாலஞ் சென்றபிறகு அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது. ஒன்பதுமாதமாகி அந்தக் குழந்தை தவிழ்ந்து விளையாடத்தொடங்கின நாள்முதல் ராமராஜனும் கங்கர்தேவியும் அந்தப் பிள்ளையை நாள்தோறும் மந்திரியுருவத்தண்டை கொண்டுவிட்டு, கோட்டான் சொன்னபடியே என்றைக்காவது குழந்தை அதைத் தொடுமோ என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

மூன்றுமாதகாலம் வீணே கழிந்தன; குழந்தை அந்தக் கல்லைத் தொட முயலவேயில்லை. ஒருவயதாகி நடக்கமுயலும்போது ஒரு நாள் அந்தக் குழந்தை தற்செயலாய் மந்திரியுருவத்தண்டைபோய்ச் செம்மையாய்த் தரையிலே கால்பரவி நிற்கமாட்டாமல் தன் அழகிய செந்தாமரைக்கையினுல் அவ்வுருவத்தைப் பிடித்தது. உடனே மந்திரிக்குச் சாபம் நீங்கிப் பிரக்ஞைவந்தது. அந்தக்ஷணமே அவன் கண்ணைவிழித்துத் தன்னை உயிர்ப்பித்த மகோபகாரியான அச்சிறுவன் தன்னைப்பிடித்து நிற்கக்கண்டு, அவனைக் குனிந்து அணைத்தெடுத்து உச்சிமோந்து முத்தமிட்டுக்கொண்டான். வெகுகாலமாய் இழந்துபோயிருந்த நேசனை மறுபடியும் கண்டபோது ராமராஜனுக்கும் கங்காதேவிக்கும் உண்டான ஆனந்தம் இவ்வளவவ்வளவென்று சொல்ல எவராலுமாகாது. கிழராஜனும் ராணியும் அவர்களுடைய மந்திரியும், அதாவது லட்சுமணனுடைய தந்தையும் தாயுங்கூட அதைக்கேட்டுப் பேரானந்தமடைந்தார்கள்.

அப்படியிருக்க ஒருநாள் சந்திரராஜன் தன் மந்திரியைப்பார்த்து, இதோ என் மகன் பெண்டும் பிள்ளையுமாக வெகு சௌக்கியமாயிருக்கிறான்; உன் மகன் ஒன்றுமில்லாமலிருப்பது தகுதியன்று; அவனுக்கும் தகுந்ததாய் நல்ல ஒரு கன்னிகையைத் தேடவேண்டுமென, மந்திரி அப்படியே சிறந்த அழகியொருத்தியைத் தேடிக்கொண்டு வந்தான். அதுவரையில் ஒரு ராஜாவுக்கும் நடவாத விசேஷ வைபவத்துடனே ராஜாவின் அரண்மனையிலேயே மந்திரிகுமாரனுக்குக் கலியாணம் நடந்தது. அதுமுதல் அவர்கள் எல்லாரும் ஒரு குறையுமில்லாமல் நெடுநாள் களிப்பும் பெருமையுமாக வெகு சௌக்கியமாய் வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.

# 6-வது. சூரியபாய் கதை

ஒருகால் ஒரு தேசத்தில் இடைச்சி ஒருத்தி இருந்தாள். அவளுக்குப் பெண்குழந்தையொன்று இருந்தது. அவள் நாள்தோறும் இடைச்சேரியிலிருந்து பால்கொண்டுபோய்ப் பட்டணத்தில் விற்றுவிட்டு வருவது வழக்கம். ஒருநாள் போகும்போது கைக்குழந்தையை வீட்டிலே காத்துக்கொள்ள ஒருவருமில்லாமல் அதையும் கையோடே எடுத்துக்கொண்டுபோம்படியாயிற்று. பாதிவழி போகையில் நடக்கத்தள்ளாமல் அவள் பாற்குடத்தைக் கீழே வைத்துக் குழந்தையையும் பக்கத்தில் விட்டுக்கொண்டு பாதையோரத்தில் படுத்தாள். அப்போது இரண்டு கழுகு பறந்துவந்து அந்தப்பெண்குழந்தையைச் சரேலென்று தூக்கிக்கொண்டு கண்ணுக்குத் தெரியாமல் ஆகாயத்தில் பறந்துபோயின.

கழுகுகள் அந்தப் பெண்குழந்தையைத் தூக்கிக்கொண்டுபோய் வெகு தூரத்துக்கப்பால் தமக்கு இருப்பிடமான ஒரு பெரிய ஆலமரத்திற்கொண்டு சேர்த்து, அம்மரத்து நுனிக்கிளையிலே நல்ல வைரமான மரங்களாலும், இரும்புகளாலும், மிகவும் உறுதியாய்ச் சிறு வீடொன்று கட்டி அதில் அக்குழந்தையை வைத்துக் காப்பாற்றி வந்தன. அந்த வீட்டைச்சுற்றி இரும்புகளால் நல்ல அரண்செய்யப் பட்டிருந்தது. அந்த வீட்டுக்கு உள்ளே புகவேண்டுமெனுலும் வெளிவரவேண்டுமென்ருலும் ஏழு இருப்புவாயில்களைத்தாண்டியே புகவேண்டும்.

அக்குழந்தை சூரியோதயமானதுபோல் யாவரும் பார்த்து விரும்பத்தக்க வெகு பளபளப்பான மேனியுடையதாயிருந்ததனுல் அதற்குச் சூரியபாய் என்று பெயரிட்டு அதை வெகு அன்பாகக் கழுகுகள்

ஆதரித்துவந்தன. மேலும் அந்தப் பெண்ணுக்கு யாதொரு குறையும் உண்டாகாதபடி பலதேசங்களிலுமிருந்து அருமையான விலைபெற்ற பற்பல ஆடையாபரணங்கள் விளையாட்டுக்கருவிகள் முதலிய யாவும் கொண்டுவந்து கொடுத்து அந்தச் சிறுமியைத் தங்கள் கண்ணைப் போலவே காத்துவந்தன.

அந்தப் பெண்ணுக்குப் பன்னிரண்டு வயதானபிறகு ஒருநாள் ஆண்கழுகு பெண்கழுகைப் பார்த்து, நமது குழந்தைக்குப் பலவித அணிகளுமிருந்தும் கையின் சிறுவிரலுக்குச் சிறந்த வச்சிரக்கல் மோதிரம் ஒன்றில்லாமலிருப்பது பெருங்குறையாயிருக்கின்றது. ஒன்று தேடிக்கொண்டுவருவோமா என, அதற்குப் பெண்பறவை, ஆம், அது ஒன்று வேண்டுவதுதான்; ஆனால் அது சமீபத்தில் கிடைக்கத்தக்கதன்றே; ஒருவருஷப்பிரயாணத்துக்கு அப்பாலல்ல வோ போய்ப்பார்க்கவேண்டும்; எப்படியாயினும் போய்வரவேண்டு வதுதான் என, அவ்விரண்டு பறவைகளும் ஒரு வருஷத்துக்கு வேண் டிய உணப்பொருள்களைச் சித்தமாய்ச் சேகரித்துக்கொடுத்து ஒரு நாயையும் பூனையையும் காவலாக்கி, தங்கள் பெண்ணை அந்தச் சிறு வீட்டிலேயே விட்டுவிட்டு, வைரமோதிரம் தேடிவரப் பறந்து போயின.

அவைபோன இரண்டொருமாதத்திற்குப்பிறகு ஒருநாள், பூனை எப்போதும் கெட்ட எண்ணமுடையதாகையால், சூரியபாய் சமைத் துவைத்திருந்த சோற்றைத் திருடித் தின்றுவிட்டது. அதுகண்டு அவள் அந்தப் பூனையை உதைக்க, அது அதிக கோபங்கொண்டு அடுப்பங்கரையிற்சென்று அடுப்பிலிருந்த நெருப்பை அணைத்துவிட் டது. அந்தப் பெண் மரத்தினின்றும் கீழே இறங்கிப்போய் நெருப் புத் தேடமாட்டாளாகையால், அவள் எப்போதும் அணையாதபடி அடுப்பிலேயே நெருப்பு வைத்துக்கொண்டிருந்தாள். சமைத்துவைத் திருந்த சோறும்போய், மறுபடியும் சமைத்துக்கொள்வதற்குமிலலா மல் அடுப்பு நெருப்பும் போய்விடவே, அவள் இன்னது செய்கிற தென்று தெரியாமல் மூன்றுநாள் மிகவும் வருத்தப்பட்டுக்கொண் டிருந்தாள். அந்த மூன்றுநாளும் அவள் நாய் பூனை எல்லாம் பட்டி னியே. மறுநாளும் அவள் பட்டினியிருக்கத் தாளாமல், அந்தச் சிறு வீட்டுக்கு வெளியே போய்ப்பார்த்துக் கீழே எங்கேயாவது கொஞ் சம் நெருப்பு இருப்பதாய்த் தெரிந்தால் அங்கேபோய் வாங்கிக்

கொண்டுவருவோமென்றெண்ணி அந்த வீட்டிற்கு வெளியேபோய்ப் பார்த்தாள். வெகு தூரத்துக்கு அப்பால் மெல்லியதாய்ப் புகை ஆகாயத்தில கிளம்பியது. அதைப் பார்த்து அவ்விடம் போய் நெருப்பு வாங்கிவரவேண்டுமென்று அம்மரத்தினின்றும் கீழிறங்கி அந்தப்புகை தெரிந்தபக்கமாயே நடந்துபோனாள். ஒரு பகலெல்லாம் ஓயாமல் நடந்து மாலைவேளையில் அவ்விடம் போய்ச்சேர்ந்தாள். அங்கே போய்ப் பார்க்கையில் அந்தப் புகை ஒரு சிறிய குடிசையிலிருந்து வருவதாய்த் தெரிந்தது. அந்தக் குடிசையிலே நுழைந்து பார்த்தபோது அதனுள்ளே ஒரு கிழவி நெருப்பண்டை உட்கார்ந்து குளிர் காய்ந்துகொண்டிருந்தாள். அது ஒரு ராக்ஷசனுடைய வீடு; அந்தக் கிழவி ஒரு ராக்ஷசி; அந்த ராக்ஷசி தன் மகனோடுகூட அந்த வீட்டில் வசித்துக்கொண்டிருக்கிறாள். இந்தச் செய்தி சூரியபாய்க்குத் தெரியாது. தெய்வாதீனமாய் அவள் போன தருணத்தில் அந்த ராக்ஷசியின் மகன் எங்கேயோ வெளியே போயிருந்தான்.

ராக்ஷசி அந்தப் பெண்ணினுடைய அழகையும், அவள் அணிந்துகொண்டிருந்த ஆபரணங்களையும் கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டு, ஆ! இந்தப் பெண் பார்வைக்கே எவ்வளவு மதுரமாயிருக்கிறாள்; இவளைப் புசித்தால் நாவுக்கு எவ்வளவு ருசியாயிருக்கும்! இத்தருணத்தில் நம்மகன் இல்லாமற்போனனே! அவனிருந்தால் உடனே இவளைக் கொன்று சமைத்துப் புசித்திடுவானே! நல்லது, ஆகட்டும் அவன் வருமளவும் இவளை நிறுத்திவைத்திருப்போமென்று எண்ணிக்கொண்டு அவளைப்பார்த்து, குழந்தாய்! நீ யார்? எங்கேவந்தாய்? என்று கேட்டாள். அதைக்கேட்டுச் சூரியபாய், பாட்டியாரே! நான் ஒரு கழுகின் மகள்; அந்தப் பறவை எனக்கு வைரக்கல் மோதிரம் தேடிக்கொண்டுவரப் போயிருக்கிறது; என் வீட்டில் நெருப்பு அணைந்துபோயிற்று; கொஞ்சம் நெருப்பு வாங்கிக்கொண்டு போகவந்தேன் என, ராக்ஷசி, பெண்ணே! நல்லது, அப்படியே வாங்கிக்கொண்டுபோ; எனக்குத் தள்ளவில்லை, இந்த அரிசியைமாத்திரம் கொஞ்சம் மாவரைத்துக் கொடுத்துவிட்டுப் போவென, அவள் அப்படியே அரைத்துக்கொடுத்தாள். ஆயினும் அதற்குள் வெளியே போன ராக்ஷசன் திரும்பிவரவில்லை. அதனால் அந்த ராக்ஷசி குழந்தாய்! கையோடுகையாய் இந்தக் கோதுமையையும் சற்றே அரைத்துக் கொடுத்துவிட்டுப்போ; கிழவி கைக்கு இது அரைபடவில்லை

யென, அச்சிறுபெண் அதையும் அப்படியே செய்துகொடுத்தாள். அவ்வளவு நேரத்திலும் அந்த ராக்ஷசன் வீட்டுக்கு வரவில்லை. அது கண்டு ராக்ஷசி, இந்த வீட்டைச் சற்றே பெருக்கிவிடு; இதோ நெருப்பு எடுத்துத்தருகிறேன் என்றாள். அப்படியே சூரியபாய் வீட்டையும் பெருக்கினாள். அந்நேரமும் ராக்ஷசன் வீடுவந்து சேரவில்லை.

அப்போது ராக்ஷசி சூரியபாயைப்பார்த்து, பெண்ணே! நீ வெகு அவசரமாய் வீட்டுக்குப் போகவேண்டுமோ? இரண்டு குடம் தண்ணீர் எடுத்துக் கொடுத்துவிட்டுப்போ என்றாள். சூரியபாய் அப்படியே தண்ணீர் எடுத்துக் கொடுத்துவிட்டு, அம்மா! நீர் இட்ட வேலையையெல்லாம் நான் செய்தாயிற்று. கொஞ்சம் நெருப்பு கொடுத்தால் கொடும்; இல்லாவிட்டால் வேறெங்கேயாவது வாங்கிக் கொண்டுபோகிறேன் என்று சொன்னாள்.

அவ்வளவு நேரத்திலும் தன் மகன் திரும்பி வராமையைப்பற்றி ராக்ஷசி மிகவும் துக்கமடைந்து, எவ்வளவு நேரந்தான் இவளைத் தடுத்துவைத்திருக்கலாம் என்று கொஞ்சம் நெருப்பு கொடுத்துச் சூரியபாயை அனுப்பிவிட்டாள். ஆயினும் அத்தோடுகூட அவள் கையில் கொஞ்சம் தானியமும் கொடுத்து, குழந்தாய்! இவ்விடத்திற்கும் உன் வீட்டிற்கும் வழி நன்றாய்த் தெரியும்படியாக இதை வழி முழுதும் இறைத்துக்கொண்டுபோ என்று சொல்லி அனுப்பினாள். அந்தப் பெண் சிறிதும் கபடமற்றவளாதலால், அது ஒரு சூதென்று தெரிந்துகொள்ளாமல் அவள் சொன்னபடியே அந்தத் தானியத்தை வழி முழுதும் இறைத்துக்கொண்டே போனாள். தன் வீடு கட்டியிருக்கிற மரத்தண்டை போனதும் மரத்தின்மேல் ஏறித் தன் வீட்டிற்புகுந்து ஏழு இருப்புக்கதவுகளையும் நன்றாய்த் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு உள்ளே போய், நெருப்பு மூட்டிச் சோறாக்கி நாய்க்கும் பூனைக்கும் போட்டுத் தானும் தின்று படுத்துத் தூங்கினாள்.

சூரியபாய் ராக்ஷசன் வீட்டைவிட்டுப் புறப்பட்டதும் வெளியே போயிருந்த ராக்ஷசன் வீடுவந்து சேர்ந்தான். அவனைப் பார்த்து ராக்ஷசி, மகனே! நீ வர ஏன் இவ்வளவு நாழிகை? எவ்வளவு மதுரமான பொருள் இங்கே வந்து போய்விட்டது? கைக்கெட்டினது வாய்க்கெட்டவில்லை எனகிற வசனம் நமக்குப் பிரத்தியக்ஷமாயிற்றே என்று சூரியபாயைப்பற்றிய செய்தியையெல்லாம் சொன்னாள்.

அதைக்கேட்டு ராக்ஷசன், 'அவள் எந்த வழிபோனாள்? அதை மட்டும் எனக்குச் சொல்; உதயமாவதற்குள் நான் அவளைப் பிடித்திழுத்துக்கொண்டு வந்துவிடுகிறேன்' என்றான்.

ராக்ஷசி தான் அவள் கையில் தானியத்தைக் கொடுத்து வழியில் இறைத்துக்கொண்டு போகச்சொன்ன செய்தியை அவனுடன் சொல்ல, அவன் உடனே அந்தக் குறிப்பைக் கண்டு அதைத் தொடர்ந்துகொண்டே சூரியபாய் இருக்கிற மரத்தடி போய்ச் சேர்ந்தான். அங்கே நாற்புறமும் சுற்றிப்பார்க்க ஒன்றையும் காணமல் அண்ணாந்துபார்த்தான். அம்மரத்தின் நுனிக்கிளையில் சிறு வீடொன்று இருக்கக்கண்டு, சரேலென்று மரத்துமேலேறி அந்த வீட்டின் வெளியிலிருக்கும் இருப்புக்கதவைப் பலதடவை இடித்துத் தன்னால் கூடிய வரையில் ஆட்டி அசைத்துப்பார்த்தான். கதவு திறக்கவில்லை; சூரியபாய் அழுந்தத் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு போய்விட்டாளே! இவனால் எப்படித் திறக்கமாளும்! பிறகு அவன், குழந்தாய்! கதவைத்திற, கதவைத்திற, நாங்கள் வந்து எந்நேரம் வாயிலில் காத்துநிற்போம்? நாங்கள் உன் தாய்தந்தையர்களல்லவா? வெகு தூரத்திலிருந்து உனக்காக மிகவும் சிறந்த நகைகளும் முக்கியமாய் உன் சிறுவிரலுக்குச் சிறந்த வைரக்கல் மோதிரமும் கொண்டுவந்திருக்கிறோம்; கதவைத்திறவென்று கூவிக் கதவையிடித்தான். சூரியபாய் அலுத்து மெய்ம்மறந்து தூங்குவதனால் ஒரு வார்த்தையும் அவளுக்குக் கேட்கவேயில்லை.

பிறகு அவன் கதவைப் பெயர்த்துக்கொண்டு உள்ளே நுழையப் பார்த்தான். அந்தக் கதவு மிகவும் உறுதியாயிருந்ததனால் அதுவும் அவனாலாகவில்லை. அப்படி அவன் கதவைப் பெயர்க்க முயலும் போது அவனுடைய நகமொன்று ஒடிந்துபோயிற்று. அந்த ராக்ஷசனுடைய நகமெல்லாம் விஷமுள்ளவை. அந்த ஒடிந்த நகத்தை அவன் கதவின் சந்திலே தொடுத்துவிட்டுப்போயினான்.

மறுநாள் காலையில் சூரியபாய் எழுந்து வெளியே உலக விநோதத்தைப் பார்க்கவேண்டுமென்று கதவுகளையெல்லாம் திறந்துகொண்டுவந்தாள். ஏழாவது கதவைத்திறக்கையில் அதிலிருந்த ராக்ஷசன் நகம் அவள் கையில் தைத்தது. தைக்கவே அதிலிருந்த விஷம் தீண்ட, அவள் உடனே மெய்ம்மறந்து கீழே விழுந்தாள்.

அத்தருணத்தில் அவளுக்கு மோதிரம் கொண்டுவரப்போன இரண்டு கழுகுகளும் திரும்பிவந்தன; வந்து தங்கள் அருமை மகள் உயிரற்றுக் கீழே வீழ்ந்திருப்பதைக் கண்டு, அந்தத் துக்கத்தைப் பார்க்க மாட்டாமல், தாங்கள் கொண்டுவந்த மோதிரத்தைமட்டும் அவள் விரலிலேயே போட்டுவிட்டு மறுபடியும் அவ்விடத்துக்கு வருகிற தில்லையென்று தீர்மானம் செய்துகொண்டு பறந்தோடிப்போயின.

இது நடந்த சில நாளைக்குப்பிறகு ஒருநாள் ஒரு தேசத்து ராஜா வேட்டைமார்க்கமாய்க் குதிரைகளும் வேட்டைநாய்களும் வேட்டைக்காரர்களுமாய் வந்து அந்தக் கழுகுகள் கூடுகட்டியிருந்த மரத்தின் கீழ்க் கூடாரம் அடித்து இறங்கினான். அவன் அந்த மரத்தை நிமிர்ந்துபார்க்க, அங்கே கழுகுகள் கட்டியிருந்த விசித்திரமான சிறு வீட்டைக்கண்டு, அதென்ன ஏறிப்பாருங்கள் என்று வேலையாட்களோடு சொன்னான். அவர்கள் மரத்தின்மேலேறிப் பார்த்துவந்து, அது ஏழு இருப்புவாயில்களோடு கூடிய வெகு விசித்திரமான சிறு வீடென்றும், அதின் வெளிவாயிலண்டை அழகிய பெண் ஒருத்தி மிகவும் அற்புதமான அலங்காரங்களோடு செத்து விழுந்துகிடக்கிறாளென்றும், அவளண்டையில் ஒரு நாயும் பூனையும் நின்று காத்துக் கொண்டிருக்கின்றனவென்றும் சொன்னார்கள்.

அதைக்கேட்டு ராஜா அந்தப் பெண்ணை மெதுவாய்க் கீழே எடுத்துக்கொண்டு வாருங்களென, அவர்கள் அப்படியே எடுத்துக்கொண்டு வந்தார்கள். ராஜா அவளைப்பார்த்து, ஐயோ! இப்படிப்பட்ட அழகுள்ள பெண் இறந்துபோனாளே என்று மிகவும் துக்கமடைந்து, இவளுடம்பு பிணம்போலக் கட்டையாய்ப்போயிற்றா, மெதுவாயிருக்கிறதாவென்று அவளைத் தொட்டுப்பார்த்தான். அது உயிரோடிருப்பவளுடைய உடம்புபோலவே மெதுவாயும் சூடுகொண்டுமிருந்தது. இதென்ன அதிசயமென்று அவள் உடம்பை முழுதும் நன்றாய்ப் பரிசோதித்துப்பார்க்க, நல்ல கூரான ஆணிபோன்ற ஒரு பொருள் உள்ளங்கையில் பொத்திப் புறங்கைவரையில் பாய்ந்துகிடக்கக்கண்டு அதை மெதுவாய் வாங்கினான். அதை வாங்கினவுடனே பிரக்ஞை வரச் சூரிபாய் கண்ணை விழித்துப்பார்த்து, நான் இப்போது எங்கேயிருக்கிறேன்? நீங்கள் யார்? நான் இப்போது கனவுகாண்கிறேனா? அல்லது இதெல்லாம் நினைவுதானா என, அந்த ராஜா, எல்லாம் உண்மைதான்; என் அழகியே! நான் அண்டை நாட்டு அரசன்;

நீ யார்? உன் செய்தி என்ன? அதை எனக்குத் தெரியச்சொல் என்று கேட்டான்.

அதற்கு அந்தப்பெண் நான் ஒரு கழுகின் மகளென, ராஜா நகைத்து, அப்படி என்றைக்காவது இருக்குமா? உன்னைப்பார்த்தால் ஒரு ராஜாவினுடைய மகள்போலிருக்கிறதென்றதற்கு, அவள், இல்லை இல்லை, நான் சொல்வது மெய்தான்; நான் ராஜகுமாரத்தியன்று, கழுகின் மகளே; நான் பிறந்தநாள்முதல் இந்த மரத்திலேயே வசித்துக்கொண்டிருக்கிறேன் என்றாள்.

அதைக்கேட்டு ராஜா, நல்லது; நீ பிறப்பிலே ராஜாத்தியல்லாமற் போனாலும், இப்போது நான் உன்னை ஒரு பெரிய இராணியாகச் செய்துவிடுகிறேன்; நீ மட்டும் மனமொப்பி எனக்கு மனையாளாக வேண்டும் என்றான். அதற்கு அவள் சம்மதிக்கவே, அவளைத் தன் தேசத்திற்கு அழைத்துக்கொண்டுபோய், அனைவரும் கண்டுகளிக்கக் கலியாணஞ்செய்துகொண்டு அவளோடுகூடச் சுகமாயிருந்தான். இந்தச் சூரியபாய் மாத்திரமே அவனுக்கு ஒரு மனையாள் அன்று; மூத்தவளும் ஒருத்தியிருக்கிறாள்; அவள் இந்த இளையாளைப் பார்த்தவுடனே இவளிடத்தில் பகையும் பொறாமையுங்கொண்டாள்.

அந்த ராஜன் தன் இளையாளைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்ளும்படி அதிக நம்பிக்கையான பல வேலையாட்களை அவள் ஆதீனத்தில் வைத்தான். அவர்களுள் ஒரு கிழவி, அந்தப் பெண்ணினிடத்தில் மிகவும் பட்சமாய்ச் சமயம்வாய்ந்தபோதெல்லாம், என் தாயே! நீ அதிகமாய் மூத்த ராணியோடு கூடாதே; அவள் உன்னிடத்தில் அதிகமாய்ப் பகைகொண்டிருக்கிறாள்; தருணம்பார்த்து ஏதாவது தீங்கு செய்துவிடுவாள்; ஜாக்கிரதையாயிரு என்று சொல்லுவாள். அதற்குச் சூரியபாய், நீ என்ன மதிகெட்ட பேச்சு பேசுகிறாய்; திடீரென்று நாம் ஏன் வீணாய்ப் பயப்படவேண்டும்? நாங்கள் இருவரும் உடன்பிறந்தவர்கள்போல் ஏன் ஒத்துவாழக்கூடாது? என்று சொல்ல, கிழவி, என் அருமைச்சீமாட்டி! நீங்கள் இருவரும் ஒத்துவாழ்வதை நான் வேண்டாமென்று தடுக்கவில்லை; கடைசியில் உனக்குத் தீமை யுண்டாகுமென்று பயந்து இதைச் சொல்லவந்தேன் என்று பதில் உரைப்பாள். அந்தக் கிழவி என்னசொல்லியும் சூரியபாய் அதைக்கேளாமல் எப்போதும் மூத்தாளோடுகூடவே சேர்ந்து பேசி விளையாடிக்கொண்டிருந்தாள்.

ஒருநாள் அவர்கள் அரமனை உத்தியானவனத்தில் ஒரு நடபாவியின் அருகே விளையாடிக்கொண்டிருக்கையில் மூத்தவள் இளையாளைப்பார்த்து, தோழி! நீ ஆபரணங்கள் அணிந்துகொண்டிருப்பது எவ்வளவு அழகாயிருக்கிறது! நானும் இவைகளைச் சற்றே அணிந்துகொண்டு அழகுபார்க்கலாமா என்றாள்.

அப்போது அவர்கள் அண்டையில் நின்றுகொண்டிருந்த வேலைக்காரக்கிழவி சூரியபாயைப்பார்த்து, நீ உன் அணிகளை அவளுக்குக் கொடாதேயென்று இரகசியமாய்ச்சொல்ல, அவள், அப்புறம்போ! எப்போதும் உன் உபத்திரவமே பெரிதாயிருக்கிறது; சற்றே கொடுத்தால் என்ன தீங்குவிளைந்துபோம் என்றுசொல்லித் தான் அணிந்துகொண்டிருந்த அணிகளையெல்லாம் அவளுக்குக் கொடுத்தாள். அவைகளை அணிந்துகொண்டு மூத்தவள், உன் அணிகள் எவ்வளவு அழகாயிருக்கின்றன! நான் அணிந்துகொண்டாலுங்கூட நீ அணிந்துகொண்டால் எப்படியோ அப்படியிருக்கவில்லையா? இந்த நடபாவியின் நீர்முத்துக்களைக் கூடப்போட்டெடுக்கும்படி அவ்வளவு தெளிவாயிருக்கிறது; இதினோரமாய் நின்று நாம் இருவரும் நம் அழகையும் பிரதிபலிக்கப் பார்ப்போம் என்றாள்.

அவர்களண்டையிலிருந்த கிழவி அந்தப் பேச்சைக்கேட்டு மிகவும் பயந்து, அம்மா நீ அவளோடு தண்ணீரண்டைமட்டும் போகவேண்டாமென்றுசொல்ல, அவள், நீ கொஞ்சநேரம் வாயை மூடிக்கொண்டிரு; நான் என் தோழியினிடத்தில் அவநம்பிக்கை கொள்ளமாட்டேனென்றுசொல்லி, மற்றெவரும் அண்டையிலில்லாமலிருக்கிற தருணத்தில் அந்தக் கொடியவளோடுகூட நடபாவியோரத்திற் சென்று தண்ணீரை எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தாள். அப்போது மூத்தாள் திடீரென்று இளையாளைத் தண்ணீரில் தள்ளிவிட்டாள். தள்ளிவிடவே அவள் தலைகீழாய் உருண்டு தண்ணீரில் வீழ்ந்து முழுகிப்போனாள். இது நடந்த சிலநாளையில் அவள் விழுந்த இடத்திலிருந்து அழகிய பொற்றாமரைமலர் ஒன்று மலர்ந்தது.

சூரியபாய் குளத்தில் விழுந்தபிறகு அரசன் அவளைக் காணாமல் அவள் எங்கேயென்று விசாரிக்க, அவளைப்பற்றி யாதொரு செய்தியும் தெரியாமற்போகவே, மூத்தாள்தான் சூரியபாயை ஏதோ செய்துவிட்டாளென்று அவளிடத்தில் மிகவும் கோபங்கொண்டு அவளண்டைபோய், அந்தச் சிறுபெண் எங்கேபோனாள்? உன் கொடு

மையாலேதான் அவளுக்கு ஏதாவது தீங்கு நேரிட்டிருக்கவேண்டும் என்று வெருட்டிக் கேட்க, அவள் நீ என்மேல் ஏன் எரிந்து விழுந்து வீணுனபழி போடுகிருய்? அவளைக்கண்டது யார்? நீ வெகு நம்பிக்கையாய் ஒரு கிழவியை ஏற்படுத்தியிருக்கிருயே; அவள்தான் ஏதாவது தீங்கு செய்திருக்கவேண்டுமென்று சொல்ல, அரசன் அதை மெய்தானென்று நம்பி அந்தப் பேதைக்கிழவியை உடனே சிறைசெய்யக் கட்டளையிட்டான்.

சூரியபாயினுடைய நினைவும், அவளுடைய அழகு நன்னடக்கை முதலியவையும் தன் மனதிற்ருேன்ருதபடி அதை மறக்க அரசன் அன்றுமுதல் பலவாறு முயன்ருன். ஆயினும் அவைகளை மறக்க அவனுல் முடியவில்லை. அவன் எங்கேபோனுலும் அவள் வடிவழகு கண்ணெதிரிலேயே தோன்றிக்கொண்டிருந்தது; எதைக் கேட்டாலும் அவள் தீங்குரலே காதிற்கேட்டுக்கொண்டிருந்தது; அவன் எந்தக்காரியஞ் செய்யப்போனுலும் எல்லாம் அவளுடையவையாய்த் தோன்றினவே யொழிய ஒன்றும் வேருய்த் தோன்றவில்லை. அதனுல் அவனுக்கு நாளுக்குநாள் துக்கம் அதிகமாகிக் கொண்டே வந்தது. அவன் சோறும் உண்பதில்லை, தண்ணீரும் குடிப்பதில்லை. மற்ற இராணிகளோடு பேசுவதே கிடையாது. ஒன்றுந்தோன்ருமல் பித்தம் பிடித்தவன்போலிருந்தான். அவனுடைய நிலைமையைக்கண்டு நம்மரசனுக்கு என்னசங்கடம் நேர்ந்ததென்று ஜனங்களெல்லாம் ஏக்கம் கொண்டிருந்தார்கள்.

இப்படியிருக்கையில் ஒருநாள், அரசன் நடபாவிக்கரையில் உலாவிக்கொண்டிருக்கிறபோது தற்செயலாய் நடபாவியைப் பார்க்க, அதில் அற்புதமான பொற்ருமரை மலர் ஒன்று பூத்திருக்கக்கண்டு அகமகிழ்ந்தான். அத்தருணத்தில் அந்த மலரும் தலைவணங்கிச் சாய்ந்து அவனருகே வந்தது. அம்மலரைப்பார்த்து அவன் அகங்குளிர்ந்து, இந்தப்பூவைப் பார்த்தவுடனே எனக்கு என் மனையாளுடைய நினைவு வருகின்றது; அவளைப்போலவே இது மிகவும் அழகாய் மனதைக் கவர்கின்றது என்று சொல்லி அம்மலரை முத்தமிட்டுக்கொண்டு, அன்றுமுதல் அதனண்டைபோய் உட்கார்ந்து அதைப் பார்த்துக்கொண்டே சிலநாள் பொழுது போக்கிக்கொண்டிருந்தான். இச்செய்தி தெரிந்து மூத்தராணி அந்தக்ஷணமே அந்தப் பூவைப்பிடுங்கி வெகு தூரத்துக்கப்பால் நடுக்காட்டிலேகொண்டு

போய்ப் போட்டுக் கொளுத்திவிட்டுவரக் கட்டளையிட்டான். அவ னுடைய வேலைக்காரர்களும் அப்படியே நடத்திவிட்டார்கள். மறு தடவை அரசன் போனபோது நடபாவியில் அவ்வழகிய பொற்றா மரை மலரைக்காணாமல் அதற்காக அவன்பட்ட விசனத்தைச் சொல்லி முடியாது. தன் அருமைப் பெண்சாதியை இழந்தத னாலேகூட அவனுக்கு அவ்வளவு துக்கமுண்டாகவில்லை. ஆயினும் அம்மலர் இவ்விதமாயிற்றென்கிற செய்தியை அவனோடு சொல்ல யாவரும் பயந்தார்கள்.

அதன் பிறகு அம்மலரின் கதையைக் கேளுங்கள்: காட்டிலே அந்தப் பூவைக்கொளுத்தின சாம்பலிலிருந்து அப்போதே ஒரு மாஞ்செடி முளைத்து இரண்டொருதினத்தில் அது, அவ்வழியே போகிறவர்களும் அண்டைநாட்டாரும் கண்டு களிக்கும்படியாக, கப்பும் கிளையுமாய் ஆகாயமளாவிச் சிறந்த ஒரு விருக்ஷமாய்விட் டது. சிலநாள் கழித்து அந்த விருக்ஷத்தின் நுனிக்கிளையில் மிகவும் அற்புதமான பூவொன்று பூத்தது. அந்தப் பூ உதிர்ந்து பிஞ்சு விட் டுக் காயாகிப் பழுக்க ஆரம்பித்தபோது, நாளுதேசத்து ஜனங்களும் கூட்டங்கூட்டமாய் வந்து கண்டு வியக்கும்படி, அப்பழம் அவ்வ ளவு விநோதமாயிருந்தது. அதன் அழகும் நிறமும் வடிவமும் பரு மனும் மிகவும் அற்புதமாயிருந்தன. ஆயினும் அந்தப் பழத்தைப் பறிக்க ஒருவர்க்கும் துணிவு உண்டாகவில்லை. இந்தப் பழம் அர சர்க்கே உரியதென்று அனைவரும் ஆச்சரியமாய்ப் பார்த்துவிட்டுப் போனார்கள்.

இப்படியிருக்க, சூரியபாயினுடைய தாயான இடைச்சி ஒருநாள் வழக்கப்படியே பட்டணத்துக்குப்போய்ப் பால் விற்றுவிட்டு வெறும் பானையோடு வீட்டுக்குத் திரும்பிவந்தாள். வெகுதூரம் நடந்து வரவே அப்புறம்போகத் தள்ளாமல் அந்த மாமரத்தின் அடியில்வந்து படுத்து உடனே தூங்கிவிட்டாள். அவள் தூங்குகையில் அம்ம ரத்திலிருந்த விசித்திரமான மாம்பழம் தற்செயலாய்க் காம்பற்று அவள் பக்கத்திலிருந்த பாற்குடத்தில் விழுந்தது. எழுந்தவுடனே அவள் அதைப்பார்த்துப் பயந்து, வெகுநாளாய் உலகத்தாரெல்லாரும் அரசனுக்கென்று கண்கொட்டாமல் காவல் காத்துக்கொண்டிருந்த இந்தப் பழம் இப்போது என் பாற்பானையில் விழுந்திருப்பதை யார் கண்டாலும் உடனே என்னைப் பிடித்துக்கொண்டுபோய்க் காவல்

செய்துவிட மாட்டார்களா? இப்பழம் நான் திருடினதன்று, தற்செயலாய் விழுந்ததென்று நான் எப்படித்தான் சத்தியம்பண்ணிச் சொன்னாலும் என் பேச்சை யார் நம்புவார்கள்? ஆயினும் இப்பழத்தை இங்கேயே போட்டுவிட்டுப் போவது சரியன்று; தானாய் வந்த லட்சுமியைக் காலால் உதைத்துத் தள்ளலாகாது என்கிறபடி, தற்செயலாய் பானையில் வந்து வீழ்ந்த பழத்தை எறிந்துவிடலாகாது; எப்படியாவது ஒளித்து வீட்டுக்குக் கொண்டுபோய்க் குழந்தைகளுக்குப் பகிர்ந்துகொடுக்கவேண்டும் என்று எண்ணினாள்.

அப்படியே அவள் அந்தப் பானையைத் துணியால் மூடிக்கொண்டு ஒருவருக்கும் தெரியாமல் வெகு சீக்கிரம் வீடுபோய்ச் சேர்ந்து, அந்தப் பழம்பானையை அடியில் வைத்து அதன்மேல் பத்துப் பன்னிரண்டு பானைகளை மூடிவைத்தாள். பொழுது போனதும் அவள் கணவனையும் மூத்தமகனையும் அழைத்து, இன்றையதினம் நமக்கு என்னசெல்வம் வந்திருக்கிறது தெரியுமா என்று கேட்டாள். அதற்கு அவர்கள் எங்களுக்கு ஒன்றும் தெரியவில்லையே; ஏதாவது அதிசயமுண்டோ என, அவள் சொல்லுகிறாள்:—

என்ன விசேஷம் தெரியுமா? நான் பால்விற்கப்போய்த் திரும்பி வருகையில் நடுவழியிலே அந்தச் சிறந்த மாமரத்தின்கீழ்ச் சற்றே படுத்தேன். இதுவரையில் இந்நாடெங்கும் பிரசித்திபெற்றிருந்த அதிசயத்திலும் அதிசயமான பாம்பழம் என் பாற்பானையில் விழுந்தது. அதோ அந்த அடிப்பானையில் வைத்திருக்கிறேன் என்று சொல்லித் தன் குழந்தைகளையெல்லாம் அழைத்துவரும்படிக் கணவனை அனுப்பிவிட்டு அந்தப் பழத்தை எடுத்துக்கொண்டுவரும்படி மூத்தமகனோடு சொன்னாள். அந்தப்பிள்ளை அப்படியே போய் அந்தப் பானையைத் திறந்துபார்த்து, அம்மா! நீ எங்களைப் பரிகாசம் பண்ணுகிறாயோ? இந்தப் பானையில் மாம்பழம் வைத்திருப்பதாய் ஏன் பொய்சொல்லுகிறாய் என, அவள், இல்லை; மாம்பழந்தான் வைத்திருக்கிறது! நான்தானே நான்கு நாழிகைக்குமுன் அந்தப் பானையைக் கொண்டுவந்து வைத்தவள் என்று சொல்லக்கேட்டு, ஆனால் இங்கே வந்துபார், மாம்பழத்தைக் காணேன்; மிகவும் ஆச்சரியமான வேறொரு பொருளிருக்கிறது என்றான்.

அதைக்கேட்டு அவள் இதென்ன அதிசயமென்று அதைப் பார்க்க எழுந்தோடினாள். போய்ப்பார்க்கையில், யாவரும் பார்த்துப்

பிரமிக்கத்தக்க வெகு சுந்தரமான வடிவத்தோடு சர்வாபரணபூஷிதை யாய் முகத்தில் சூரியன்போலத் திலகமொன்று பிரகாசிக்க மாம்பழத் தளவே வடிவமுள்ள பெண் ஒருத்தியிருந்தாள்.

அந்த அற்புதத்தைக்கண்டு அவள், இதென்ன ஆச்சரியம்! இப் படிப்பட்ட புதுமையை நான் ஒருநாளும் கண்டதுமில்லை, கேட் டதுமில்லையே; கடவுள்தான் இப்படி நமக்குக் கிருபைபண்ணி ஞர்; நமது குழந்தைகளைப்போலவே இக்குழந்தையையும் நாம் அன்பாய் ஆதரிக்கவேண்டுமென்று சொல்லி அப்படியே பாது காத்துவந்தாள்.

அன்று முதல் அந்தப்பெண் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்துவந்தாள். வெகு சீக்கிரத்திலே அவளுக்கு நல்ல பருவம் வந்தது; அவளுடைய வடிவழகையும் நற்குண நற் செய்கைகளையும் பார்த்து யாவரும் வியந்தார்கள். ஆயினும் அவள் எப்போதும் விசனமாயே இருந்தாள். ஒருவரோடும் பேசுவதில்லை; தன் பெயர் சூரியபாய் என்பதைமட்டும் அவர்களோடு சொன்ஞள்.

அவ்விடைச்சியினுடைய பிள்ளைகளெல்லாரும் அப்பெண்ணி னுடைய வரலாற்றைக் கேட்க அதிக ஆவல்கொண்டிருந்தார்கள். அதுகண்டு அவ்விடைச்சி, இப்போது நாம் இவளை ஒன்றும் வருத் திக் கேட்கவேண்டாம்; நம்மோடு நன்ருய்ப் பழகினல், பிறகு தானே தன்செய்தியை உரைப்பாளென்று சொல்லி அவர்களுடைய ஆவலை அடக்கிக்கொண்டுவந்தாள்.

இப்படியிருக்க ஒருநாள் அந்தச் சிறுமி தண்ணீர் எடுத்துக் கொண்டுவரும்போது தற்செயலாய் அவ்விடத்தில் சவாரி செய்து கொண்டிருந்த ராஜா அவளைப்பார்த்து, இதோ என் அருமை மனைவி! இதோ என் அருமை மனைவி என்று கூவிக்கொண்டு அதிக சந்தோஷமாய் அவள் பின்னேயே குதிரையைத் துரத்தினன். பின்னே குதிரையின் அடியோசையைக் கேட்டு அந்தப் பெண் பயந்து சீக்கிரமாயோடி வீட்டிலே புகுந்துகொண்டாள். அரசன் அவ்வீட்டண்டை போய்ப் பார்த்தபோது அந்தப் பெண் அங்கே காணப்படவில்லை; ஒரு கிழவிமாத்திரம் அவ்வீட்டுவாயிலில் நின்று கொண்டிருந்தாள்.

ராஜா வெகு வேகமாய்ப்போய் அந்தக் கிழவியைப்பார்த்து, நீ ஏன் அவளை உன் வீட்டுக்குள்ளே ஒளித்துவைத்துக்கொண்டாய்?

அவளை வைத்துக்கொள்ள உனக்கென்ன சுவாதீனம்? அவள் என்னுடையவளாயிற்றே! என்று கேட்டான். அதற்கு அவள், உனக்கென்ன பித்தம் கொஞ்சம் அதிகரித்திருக்கிறதோ? நீ சொல்வது இன்னதென்று எனக்குத் தெரியவில்லையே என, அரசன், நீ ஏன் என்னை மோசம்பண்ணப்பார்க்கிறாய்? என் பெண்சாதிவந்து இப்போது இந்த வாயிலில் நுழைய நான் கண்டேனே! அவள் இந்த வீட்டிலேதான் இருக்கவேண்டும் என்றான். அதைக்கேட்டு இடைச்சி திடுக்கிட்டு, உன் பெண்சாதியா? உன் பெண்சாதியா? இப்போது கிணற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவந்த என் குழந்தையைப்பார்த்துச் சொல்லுகிறாயோ? என் குழந்தையை உனக்குக் கொடுத்துவிடுவேன் என்று நினைக்கிறாயோ? நீ ராஜாவானால் உன் மட்டும், நான் எளியவ்ளானால் என்மட்டும்; என் வீட்டுக்கு நான் ராஜாதான்; நீ என்ன வேண்டினாலும் என் குழந்தையை நான் உனக்குக் கொடேன்; ஓடிப்போ; தாடியைப்பிடித்து வலிக்கப் போகிறேன் என்று சொல்லி, ஒரு பெரிய தடியை எடுத்துக் கொண்டுவந்து அவனை அதட்டித் துரத்துவதற்காகத் தன் கணவனையும் துணையாகக் கூவினாள்.

அவள் தன்னை அப்படி எதிர்ப்பதைக்கண்டு, தன் சேவகர்களெல்லாம் முன்னதாய்ப் போய்விட்டதனாலும், தான் பார்த்தது தன் பெண்சாதிதானோ அல்லது அவ்விடைச்சியின் மகள்தானோ? அது நிச்சயமாய்த் தெரியாமையாலும் அரசன் அவளை ஒன்றும் செய்யக் கூடாமல் பட்டணம்போய்ச் சேர்ந்தான்.

தன் மாளிகை போனவுடனே அதன் உண்மையை அறிய வேண்டுமென்று தீர்மானித்து அரசன், இன்னும் சிறையிலேயே அடைபட்டுக்கிடந்த சூரியபாயினுடைய பழைய வேலைக்காரியான கிழவியை அந்தக்ஷணமே போய்க் கண்டு, சூரியபாயினுடைய செய்தியை உண்மையாய்ச் சொல்லும்படிக் கேட்க, அவள் இறந்துபோன செய்திதனக்கொன்றும் தெரியாதென்றும், மூத்தராணியார்மேலேயே சந்தேகமாயிருக்கிறதென்றும் அந்தக்கிழவி சொன்னாள். அதைக் கேட்டு அரசன், அவள்மேலிருந்த கோபம் கொஞ்சம் தணிந்து அவளைச் சிறையினின்றும் விடுவித்து, அந்த இடைச்சிவீட்டுக்குப் போய் அவள் குடும்பத்தின் வாலாற்றையெல்லாம் தெரிந்துகொள்வதோடுகூட, முக்கியமாய்த் தண்ணீரெடுத்துக்கொண்டுவாரத் தான்

கண்ட பெண் இன்னுளென்பதையும் செம்மையாய்த் தெரிந்து கொண்டுவந்து சொல்லும்படி அனுப்பினுன்.

அப்படியே அவள் அவ்விடைச்சி வீட்டுக்குப்போய்ச் சிலநாள் வரையில் அவளிடத்தில் பால்வாங்குவதுபோலிருந்து, பிறகு நாள் தோறும் இரண்டொருநாழிகை அவ்வீட்டிலேயே போயிருந்து அவளோடு விநோதமாய்க் கூடிக்கலந்து பேசுவதும், ஒவ்வொருநாள் முழுதும் அங்கேயே தங்கியிருப்பதுமாயிருந்து அவளுக்குத் தன்னிடத்தில் பூரணமாய் நம்பிக்கைவரச் செய்துகொண்டாள். இப்படியிருக்க ஒருநாள் அந்த வேலைக்காரக்கிழவி, தான் ராஜாவின் இளைய இராணிக்குப் பிரியமான தாதியாயிருந்ததும், அந்த இராணி இறந்து போனதும், அதற்காக ராஜா தன்னைச் சிறைசெய்ததுமாகிய தன் செய்திகளைச்சொல்ல, அதற்குப் பதிலாக இடைச்சியும் தான் பால் விற்று வரும்போது தன் பாற்பானையில் அற்புதமான மாம்பழமொன்று விழுந்ததும், வீட்டில் கொண்டுவந்து வைத்தவுடனே இரண்டொரு நாழிகையில் அது சிறந்த ஒரு கன்னிகையாக மாறினதுமாகிய தன் கதைகளைச் சொல்லி, இந்தப் பெண் எவளுவது ஒரு மகாராஜாவினுடைய வீட்டிற்குப்போய்ச் சேராமல் மிகவும் எளியவளான என் குடிசைக்குவந்து சேர்ந்தது எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறதென்றுள்.

அதைக்கேட்டு அந்த வேலைக்காரி, அந்தப்பெண் தன் வரலாற்றை என்றைக்காவது உன்னேடு சொல்லியிருக்கிருளா? இப்போதாவது கேட்டால் சொல்லுவாளா என, பாற்காரி, அவள் ஒருநாளும் தன் செய்தியை என்னேடு சொன்னதில்லை; வேண்டுமானுல் இப்போ கேட்டுப்பார்ப்போமென்று அந்தப் பெண்ணை அழைத்தாள். அவளைப் பார்த்தவுடனே, அவள் தன் எஜமானியான சூரியபாய்தானென்று நன்முய்த் தெரியவே, வேலைக்காரியினுடைய உள்ளம் சந்தோஷத்தால் பொங்கிப் பூரித்தது. ஆயினும் தன் எஜமானி தண்ணீரில் மூழ்கிப்போயினுளென்று நன்முய்த் தெரிந்திருப்பதனுல், இதென்ன அதிசயமோ பார்க்கவேண்டுமென்று சற்றுநேரம் வாயை மூடிக்கொண்டிருந்தாள்.

இடைச்சி சூரியபாயைப்பார்த்து, குழந்தாய்! நீ எங்களண்டை வந்து வெகுநாளாயிற்று; நானும் என் வயிற்றிற்பிறந்த பிள்ளைகளை விட அதிக அன்பாய் உன்னை ஆதரித்துவருகிறேன்; ஆயினும் நீ

யாரோ? எங்கிருந்துவந்தாயோ? ஒன்றும் எனக்கு இதுவரையில் தெரியாது; அதென்ன துக்கக்கதையாயிருக்குமோவென்று நானும் உன்னைக் கேட்கப் பயந்திருந்தேன்; இப்போது அதைச் சொல்ல உனக்கு இஷ்டமிருந்தால் நான் கேட்க விரும்புகிறேன் என்றாள்.

அதற்குச் சூரியபாய், தாயே! நீ சொல்வது உண்மைதான்; என் கதையைப்போலத் துக்கக்கதை வேறொன்றுமில்லை. என்னைப் பெற்றதாயும் உன்னைப்போல் ஒரு எளிய இடைச்சிதானென்றும், நான் மிகவும் சிறு குழந்தையாயிருந்தகாலத்தில் அவள் ஒருநாள் பட்டணத்திற்குப் பால்விற்கப்போய்த் திரும்பிவருகையில் வெயிலால் களைத்து என்னைப் பக்கத்தில் விட்டுக்கொண்டு ஒரு மரத்தின் கீழ்ப் படுக்க, அத்தருணத்தில் பெருங்கழுகுகள் வந்து திடீரென்று என்னைத் தூக்கிக்கொண்டு போய்விட்டனவென்றும் தோன்றுகிறது. எனக்குப் புத்திதெரிந்தபிறகு என்னைக் காப்பாற்றிவந்த என் தாய் தந்தையர்கள் இரண்டு கழுகுகள்தான் என்றாள்.

அந்த வார்த்தையைக் கேட்டவுடனே இடைச்சி, அம்மா! என் குழந்தாய்! என் அருமைக் குழந்தாய்! அந்த எளியவள் நான்தான்; என் மூத்தமகள் ஒருவயதுக் குழந்தையாயிருந்தபோது அவளைக் கழுகுகள்வந்து தூக்கிக்கொண்டு போய்விட்டன; இத்தனைகாலம் கழித்து உன்னைக் காணும்படி நான் என்னபாக்கியம் பெற்றேன்! என்று சொல்லி, அந்தச் சந்தோஷத்தைக் கேட்டுக்களிக்கத் தன் கணவனையும் குழந்தைகளையும் கூவி அழைத்தாள். அவர்களெல்லாரும் ஓடிவந்து அந்த அதிசயத்தைக்கேட்டுப் பேரானந்தமடைந்து அந்தப் பெண்ணைக் கட்டியணைத்து முத்தமிட்டுக்கொண்டார்கள்.

அவர்களெல்லாரும் இப்படிச் சந்தோஷத்தில் அமிழ்ந்திருக்கையில், இடைச்சி சூரியபாயைப் பார்த்து, என் அருமை மகளே! நீ என்னைவிட்டுப் போனபிறகு எங்கே எவ்விதமாயிருந்தாயென, அவள் சொல்லுகிறாள்:

அந்தக் கழுகுகள் என்னைத் தங்கள் வீட்டுக்குக் கொண்டுபோய் வெகு அருமையாய் ஆதரித்துவந்தன. நான் அநேகவருஷம் சௌக்கியமாகவே அவ்விடத்தில் வாழ்ந்துகொண்டிருந்தேன். அந்தப் பறவைகள் என்னிடத்தில் அதிக பக்ஷமாய், உலகத்தில் அருமையான பொருள் எதெது உண்டோ அவைகளையெல்லாம் கொண்டுவந்து கொடுத்து என்னைக் காப்பாற்றிவந்தன. அப்படியிருக்கையில் ஒரு

நான் எனக்காகச் சிறந்த வைரக்கல் மோதிரமொன்று தேடிக்கொண்டு வரும்படி தூரதேசம்போயின. அவை வெளியே போயிருந்தபோது அந்த வீட்டில் நெருப்பணைந்துபோகவே, சிறிது தூரத்துக்கப்பால் தெரிந்த ஒரு கிழவி வீட்டுக்குப்போய்க் கொஞ்சம் நெருப்புவாங்கி வந்தேன். மறுநாள் காலையில் எழுந்து என் வீட்டு வாயிற்கதவைத் திறக்கப்போனபோது கதவிலிருந்து என்னவோ சுரீலென்று கையில் தைத்தது. அது என்னவோ எனக்குத் தெரியாது. உடனே நான் பிரக்ஞையற்றுக் கீழே விழுந்தேன்.

அப்படி நான் நினைவில்லாமல் எத்தனைநாள் கீழே விழுந்து கிடந்தேனோ தெரியாது. மறுபடியும் பிரக்ஞைவந்து நான் கண்ணை விழித்துப்பார்த்தபோது என் கையில் சிறந்த வைரக்கல் மோதிரமொன்று போட்டிருந்தது. அதனால், அந்தக் கழுகுகள் திரும்பி வந்து பார்த்து நான் இறந்துபோய்விட்டதாய் எண்ணி எனக்காகக் கொண்டு வந்த மோதிரத்தைமட்டும் என் விரலிலேயே போட்டு விட்டு ஓடிப்போனதாய்த் தோன்றுகிறது. இதுமாத்திரமேயல்லாமல் என்னைச் சுற்றி அநேகர் காவல்காத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களோடிருந்த ராஜா ஒருவர் என்னைப் பெண்சாதியாக வைத்துக்கொண்டு இப்பட்டணத்திற்குக் கொண்டுவந்தார்.

அவ்வரசருடைய மூத்தராணி என்னிடத்தில் மிகப் பொறாமை கொண்டு என்னைக் கொல்வதற்குத்தக்க வழியென்னவென்று தேடிக்கொண்டேயிருந்து: கடைசியில் ஒருநாள் தருணம்பார்த்து என்னைக் குளத்தில் தள்ளிவிட்டாள். 'இளங்கன்று பயமறியாது' என்கிறபடி நான் சிறுவயதாதலால் எல்லாம் உண்மைதானென்று எண்ணி, என் பக்கத்திலிருந்து "வேண்டாம், வேண்டாம்" என்று சொல்லிக்கொண்டிருந்த என் உயிருக்கொப்பான தாதியின் பேச்சையும் கேளாமல் அவளுடைய மோசத்துக்குள்ளானேன்; ஆ! அப்போது என் தாதி சொன்னபடி நடந்திருப்பேனானால் இப்போது எவ்வளவு சௌக்கியமாய் வாழ்ந்துகொண்டிருப்பேன் என்றாள்.

இவ்வளவைக் கேட்டமாத்திரத்திலேயே அண்டையில் உட்கார்ந்திருந்த தாதி ஆநந்தம் உள்ளே அடங்காமல் எழுந்தோடி, ஓ! என் சீமாட்டி! என் அருமைச் சீமாட்டி! நான் உன்னைக் கண்டுபிடிக்க இத்தனைநாள் சென்றதா! என்று சொல்லி, சூரியபாயைத் தண்டனிட்டு அச்செய்தியை அரசனுக்குத் தெரிவிக்க ஓடினாள்.

பின்பு சூரியபாய், தான் குளத்தில் விழுந்ததும், அதனால் இறந்து போகாமல் பொற்றாமரைமலராகப் பூத்ததும், அந்தப் பூவினிடத்தில் அரசன் அதிக பிரீதியாயிருந்தது கண்டு மூத்தராணி அதைப்பிடுங்கிக் கொளுத்திவிடச்செய்ததும், பின்பு அந்தச் சாம்பலினின்றும் தான் ஒரு மாஞ்செடியாக முளைத்ததும், அம்மரம் பூவெடுத்தபோது தன்னுயிரெல்லாம் அதின் ஒரு பூவிற்சேர்ந்ததும் ஆகிய இவைகளையெல்லாம் ஒன்றுகூட விடாமற்சொல்லிக் கடைசியாய், அம்மா! அந்தப் பூ காயாகி பழுத்தவுடனே, எந்தக் காரணத்தினாலேயோ தெரியாது, ஏதோ ஒன்று பலவந்தமாய் என்னை உன் பாற்குடத்தில் விழும்படிச்செய்தது; என் விதிப்பயன் இப்படியாக முடிந்தது. நீ உன் வீட்டிற்குக் கொண்டுவந்தவுடனே நான் மறுபடியும் மானிட வடிவம் பெற்றேன் என்று சொன்னாள்.

அவளுடைய சகோதரர்களும் சகோதரிகளும் இந்தக் கதையைக் கேட்டு, அப்படியானால், நீ உயிரோடிருப்பதையும் அவருடைய இராணியென்பதையும் அரசர்க்கு என் தெரிவிக்கக்கூடாது என்று சொல்ல, சூரியபாய், அதெப்படிச் செய்யலாம்? இத்தனைநாள் அந்த ராஜா மூத்தராணிக்குக் கைவசமாகி நான் மாண்டுபோனதே நலமென்று நினைத்திருக்கமாட்டாரா? மறுபடியும் நான் அங்கே போய் அவள் செய்கிற கொடுமைக்கு ஆளாவதைவிட, ஒரு தொந்தரவுமில்லாமல் எளியவளாகவே உங்களோடுகூட இங்கேயே வாழ்ந்துகொண்டிருக்கிறேன் என்றாள்.

அதைக்கேட்டு அவர்களுடைய தாய், ஐயோ! என்னுடைய மதிகேட்டை நானென்னென்று சொல்வேன்? ஒருநாள் ராஜா உன்னைத் தேடிக்கொண்டு நேராய் இவ்விடத்திற்கு வந்தார். காணாமற்போன இராணி நீதானென்று எங்களுக்குத் தெரியாதாகையால் நாங்களெல்லாரும் சேர்ந்து அவரை அடித்துத் துரத்திவிட்டோம் என்று சொல்லித் துக்கித்தாள்.

அவர்களிப்படிப் பேசிக்கொண்டிருக்கையிலேயே கொஞ்சந் தூரத்தில் குதிரைகள் சவாரி செய்துகொண்டு வருகிற சத்தம் கேட்டது. சூரியபாய் உயிரோடிருக்கிறாளென்பதை அந்தத் தாதி சொல்லத் தெரிந்துகொண்டு உடனே ராஜாவே அவ்விடத்திற்கு வெகு வேகமாய் வந்து சேர்ந்தான்.

அப்போது சூரியபாயைப் பார்த்ததனால் அரசனுக்கும், அவனைப்

பார்த்ததனால் அவனுக்கும் உண்டான சந்தோஷம் இவ்வளவென்று சொல்ல எவராலாகும்! தன் மனையாளை மடியில் உட்காரவைத்துக்கொண்டு ஆனந்தக் கண்ணீர்பெருக ராஜா இடைச்சியைப் பார்த்து, ஆ! மோசக்காரக்கிழவி! என் அருமை மனைவி உன் வீட்டிலிருப்பது தெரிந்து நான் முன்னேயே வந்து கேட்டேனே; உண்மையைச் சொல்லாமல் ஒளித்தாயே என, அவள், ஐயா! பேதைகளைப் போஷிக்கின்ற மகாப்பிரபுவே! அது மெய்தான்; இவள் தங்களுடைய மனையாளென்பது எனக்குத் தெரியாது; ஆயினும் இவள் என்னுடைய மகள்தான் என்று சொல்லி, அந்தப் பெண் தனக்கு மகளானவிதத்தையும் விவரமாய்ச் சொன்னாள். அதைக்கேட்டு ராஜா சந்தோஷித்து அவர்களெல்லாரையும் பட்டணத்துக்கு அழைத்துக்கொண்டுபோய் யாவருக்கும் விநோதமாக விருந்து செய்வித்தான். சூரியபாயின் தகப்பனுக்குச் சிறந்தவையாய் நாலைந்து கிராமங்கள் விட்டுச் சிறந்த அதிகாரமும் கொடுத்து அந்தக் குடும்பத்தை மிகவும் பெருமைப்படுத்தினான். சூரியபாயினுடைய பழைய தாதியை அழைத்து அவளுக்கு வேண்டிய ஐசுவரியம் கொடுத்து, தாயே! நீ செய்த பேருதவிக்குப் பிரதியுபகாரம் நானென்ன செய்யப்போகிறேன்? அரமனைக் காவற்காரியென்று பேர் வைத்துக்கொண்டு நீ எப்போதும் அரமனையிலேயே இருக்கவேண்டும்; உன்னை அநியாயமாய்ச் சிறைசெய்த பாதகத்தை நான் எப்படித் தீர்த்துக்கொள்வேனோ தெரியாதென்றான். அதற்கு அவள், ஐயா! தங்களுக்குக் கோபம்வந்தபோது கூடத் தாங்கள் சாந்தமாகவேயிருந்தீர்கள்; அந்தப் பெருங்கோபத்தில் சிலர் செய்கிற மாதிரியாய் நீங்கள் என்னைக் கொலைசெய்துவிடக் கட்டளையிட்டிருப்பீர்களானால் இப்படிப்பட்ட நன்மைகள் ஒன்றும் உண்டாகாதே; ஆதலின் தங்களுடைய நற்குணத்தையே தாங்கள் பெருமையாக நினைக்கவேண்டும் என்றாள்.

மூத்தராணி செய்த கொடுமைக்காக முன் அந்த வேலைக்காரியை அடைத்திருந்த சிறையிலேயே அவளை ஆயுளளவும் அடைத்துவைக்கும்படிக் கட்டளையாயிற்று. பிறகு சூரியபாய் தான் தாமரைப் பூவாகவும் மாஞ்செடியாகவும் பிறந்ததற்கு ஞாபகமாய் அப்பட்டணத்தைச் சுற்றித் தாமரைத்தடாகங்களும் மாந்தோப்புகளும் ஏற்படுத்தி அடிக்கடி அங்கேபோய் விளையாடிக்கொண்டு ஒரு குறையுமில்லாமல் கணவனோடு கூடிச் சுகித்திருந்தாள்.

## 7-வது. விக்கிரமராஜன் செய்த தேசசஞ்சாரம்

வெகுநாளைக்கு முன்னே விக்கிரமராஜன் என்று ஒரு அரசனிருந்தான். அவனுக்குப் பட்டி என்று ஒரு மந்திரி. அந்த ராஜாவும் மந்திரியும் சிறுபிள்ளைகளா யிருக்கையிலேயே அவ்விருவருடைய தாய்தந்தையர்களும் இறந்துபோனார்கள். அவர்கள் இறந்துபோன நாள்முதல் அந்தப் பிள்ளைகள் ஒருவரைவிட்டொருவர் பிரியாமல் கூடவே படிப்பதும், கூடவே படுப்பதும், கூடவே புசிப்பதும், கூடவே விளையாடுவதுமாய் இணைபிரியாத நேசர்களாய் அண்ணன் தம்பிபோலிருந்தார்கள்.

அவ்விருவரும் ஈவு இரக்கமுதலிய நற்குணமுடையவர்கள். அந்த ராஜகுமாரனிடத்தில் பொருள்வேண்டிவந்து மனக்குறையோடு திரும்பிப்போனவர் ஒருவருமில்லை. ஏழைகளுக்குத் தானஞ் செய்வதிலிருந்த உற்சாகம் அவனுக்கு மற்றெதிலுமில்லை. பட்டியோ, புத்திக்கூர்மையும் நல்ல நிதானமும் தீர்க்காலோசனையும் உடையவன். ராஜா எந்தக் காரியஞ்செய்தாலும் பட்டியோடு ஆலோசியாமல் ஒன்றும் செய்வதில்லை. நல்ல விவேகிகளும் புத்திமான்களும் சாமர்த்தியமுடையவர்களுமான அவர்கள் இருவரும் ஒன்றாய்ச்சேர்ந்து அரசாட்சி செய்யும்போது அந்த இராச்சியம் செழித்து ஓங்கி விருத்தியடைவதற்குக் கேட்கவேண்டுவதென்ன? நற்காரியம் எதுவானாலும் அரசன் ஆவலுடன் செய்ய ஆரம்பிப்பவன்; மந்திரியோ அடாத காரியம் எதையும் செய்யாமல் தடுக்கக் கங்கணங்கட்டிக் காத்திருப்பவன்.

விக்கிரமராஜனுடைய தேசத்திற்கு வெகுதூரத்தில் ஒரு தேசத்திலே ஒரு ராஜனுக்குச் சண்பகவல்லி என்று ஒரு கன்னிகையிருந்தாள். அந்தப் பெண்ணுக்காக அவ்வரசன் வெகு அழகான

சிங்காரத்தோட்டமொன்று ஏற்படுத்தி, அதன் மத்தியில் அந்தச்சிறுமி வந்து விநோதமாய் விளையாடுவதற்காகக் கூடாரம்போலச் சண்பகச் செடிகள் தழைத்து வளரச்செய்திருந்தான். அந்தச் சண்பகச்செடிகளின் நுனியிலே மெத்தைபோட்டதுபோல மிகவும் மெதுவாய் அடர்ந்து மலர்ந்து குமுகுமென்று மணக்கிற சண்பகப்பூவமளிமேலேயே அந்தப்பெண் படுத்துக் கண்வளர்வது வழக்கம். அவளுடைய தோழிகளிருவரும் அவளுக்கு இருபுறத்திலும் படுத்திருப்பார்கள். பொழுதுவிடிந்ததும் அந்தக்கிளைகள் தரையோடு தரையாய் வணங்கிவந்து அப்பெண்களைக் கீழே இறக்கிவிட்டு மேலேபோய்ப் பகற்பொழுதெல்லாம் அப்பெண்களுக்கு நிழல் காத்திருக்கும். பகலெல்லாம் அதின் கீழேயே இருந்து அவர்கள் விளையாடுவார்கள். பொழுதுபோனதும் அந்தச் செடிகள் மறுபடியும் வணங்கித்தாழ்ந்துவர அவர்கள் அதன்மேல் ஏறிக்கொண்டு இரவெல்லாம் அங்கேயே படுத்திருப்பார்கள்.

அந்தச் சண்பகவல்லி தேவகன்னிகைபோல் அதிக அழகாயிருக்கிறாளெனக்கேட்டு அநேக ராஜாக்கள் அவளைக் கலியாணஞ்செய்துகொள்ள முயன்றார்கள். அவளுடைய வடிவழகைக் கண்டவர்களெல்லாரும் இப்படிக்கூட ஓரழகு உலகிலுண்டோவென்று அதிசயித்தார்கள். மயின்தோகைபோன்ற கூந்தலும், கருநெய்தல்போன்ற கண்களும், கொவ்வைக்கனிபோன்ற இதழும், முத்துச்சரம்போன்ற பல்வரிசையும், சங்கம்போன்ற கழுத்தும் பார்க்கப் பார்க்கப் புதுமையாயிருந்தன. அந்தப் பெண்ணினுடைய தகப்பன் அந்தத் தோட்டத்துள் புதிதாய் ஒருவரும் வந்து புகாமலும் உள்ளிருப்பவர் வெளியே போகாமலுமிருக்க அதைச்சுற்றி நுனியிலே கத்திகள் நாட்டி ஆகாயமளாவியவைகளாய் ஏழு மதிலெடுத்து, அந்தத்தோட்டத்துக்குள் புகுந்து அங்கே சண்பகவல்லி படுத்துத்தூங்கும் சண்பகச் செடியிலிருந்து எவனொருவன் மூன்று பூ பறித்துக்கொண்டு வருகிறானோ, அவனே தன் மகளைக் கலியாணஞ் செய்துகொள்ளவேண்டுமென்று பிரசித்தப்படுத்தினான். அதற்காக அநேகம் ராஜாக்களும் பிரபுக்களும் வேண்டியமட்டும் முயற்சிசெய்தார்கள். ஒருவராவது ஜயம் பெறவில்லை. சிலரால் முதல்மதிலையே தாண்ட முடியவில்லை; அதிக சமர்த்தர்களான சிலர் இரண்டாவது மூன்றாவது மதில்களை மட்டும் தாண்டிப்போய் அங்கேயே விழுந்துபோ

ஞர்கள். உலகத்தில் தமக்கு ஈடு இல்லவே இல்லையென்று பே
பெற்று கர்வங்கொண்டிருந்த இரண்டொருவர் வெகு பிரயாசப்பட்
ஆருவது மதிலைமட்டும் தாண்டினார்கள். ஆயினும் அப்புறம் போ
மாட்டாமல் அங்கேயே விழுந்து மாண்டுபோனார்கள். ஏழா
மதிலைத் தாவ முயன்றவர்கூட ஒருவருமில்லை.

இது இப்படியிருக்க, விக்கிரமராஜனுடைய தகப்பன் இறந்து
போவதற்கு முன்னமே அவன் தன் பட்டணத்துக்குக் கொஞ்ச
தூரத்தில் வெகு நேர்த்தியாய்த் தேவாலயமொன்று பிரதிஷ்டை
செய்திருந்தான். அந்தக் கோயிலில் மிகவும் அற்புதமான சுவர்ண
விக்கிரகம் ஒன்று உண்டு. நாளளவிலே அந்தக் கோயிலைச்சுற்றிப்
பல மரங்களும் செடிகளும் கொடிகளும் வளர்ந்து அந்தக் கோயில்
இருக்குமிடமே தெரியாமல் அதைச் சுற்றிக்கொண்டன.

அந்தச் செய்தி தெரிந்து பட்டி ஒருநாள் விக்கிரமராஜனைப்
பார்த்து, உங்களுடைய தகப்பனர் வெகு வருத்தப்பட்டு அளவற்ற
பொருள் செலவுசெய்து கட்டுவித்த தேவாலயம் ஒன்று மரங்களும்
செடிகளும் முளைத்துப் புலி காடிகளிருந்தாலும் தெரியாமல் பாழாய்ப்
போயிருக்கிறது. அந்தக் கோயிலை இப்போது நாம் சீர்ப்படுத்தினால்
கடவுளுக்கு மிகவும் திருப்தி உண்டாகுமென்று சொல்ல விக்கிரம
ராஜனும் அதற்குச் சம்மதிக்கவே, இருவருமாய் உடனே பல வேலை
யாட்களை அழைத்து அந்தக் காடுகளையெல்லாம் வெட்டிக் கோயி
லைச் சீர்ப்படுத்தவேண்டுமென்று கட்டளையிட்டார்கள். காடுகளை
வெட்டின பிற்பாடு உள்ளேபோய்ப் பார்த்து அக்கோயிலின் அழ
[illegible] அனைவரும் வியந்தார்கள். அது முழுதும் சலவைக்
[illegible] கட்டப்பட்டிருந்தது. சுவர்களெல்லாம் மிகவும்
அற்புதமாய்ச் சித்திரிக்கப்பட்டிருந்தன. மேற்புறமெல்லாம் விக்
கிரமராஜன் தகப்பனுடைய பேரும் பிரசித்தியும் விசேஷமாய் எழு
தப்பட்டிருந்தன. அந்தக் கோயிலின் மத்தியிலே சுவர்ணத்தாற்
செய்த விநாயகக் கடவுளுடைய விக்கிரகமொன்று வெகு சிறப்பாய்
ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

அந்தக் கோயிலின் அழகைக்கண்டு விக்கிரமராஜன் மிகவும் ஆச்
சரியப்பட்டு, அவ்விடம் மிகவும் ரமணீயமாயும் பரிசுத்தமாயுமிருக்
கிற தென்பதற்காக நாள்தோறும் இராத்திரி அவன் மந்திரியோடு
கூட வழக்கமாய் அங்கேயேபோய்ப் படுத்துக்கொண்டிருந்தான்.

ஒருநாள் இராத்திரி விக்கிரமராஜன் அதிசயமான கனவொன்று கண்டான். அதாவது, அவனுடைய தகப்பன் எதிரே வந்து தோன்றி குழந்தாய்! எழுந்திரு; இதோ இந்தக் கோயிலுக்கு முன்னே, சுற்றிக் கத்திகள் நாட்டிக் கட்டிய ஏழு ஆவரணங்களின் நடுவே அதிக உன்னதமாய்த் தீபஸ்தம்பமொன்று நாட்டியிருக்கிறதே; அதன் கீழ் அளவற்ற நிதிகள் புதைக்கப்பட்டிருக்கின்றன. இந்த விக்கினே சுவாருக்குக் கோபமுண்டாக்காமல் அதைக் கைக்கொள்ள ஒரே வழிதானுண்டு. முதலில் இந்தக் கடவுளுக்குப் பிரீதியுண்டாகும் படி நீ ஒரு ஸாகஸச்செய்கை செய்யவேண்டும்; அதற்கு இவர் சம் மதித்து உன் உயிரைக் காப்பாற்றுவாராளுல், உனக்கு இவருடைய கடாக்ஷம் கிடைத்திருக்கிறதென்று கண்டு, நீ பயமில்லாமல் அந்த நிதியைப் பெயர்த்தெடுத்துக்கொள்ளலாம்; அதனல் உனக்கு ஒரு அபாயமும் உண்டாகாது என்று சொல்ல, அதென்ன செய்கை யென்று விக்கிரமராஜன் கேட்டதற்கு அவன் இன்னும் சொல்லு கிருன்:

அந்தச் செய்கையென்ன தெரியுமா? இந்தத் தீபஸ்தம்பத்தில் உறுதியான ஒரு கயிற்றைக்கட்டி அக்கயிற்றின் மற்றொரு நுனியில் ஒரு கூடையைக்கட்டி, அந்தக் கூடையில் நீ தலைகீழாய் உட்கார்ந்து கொண்டு அப்படியே அக்கயிறு அந்தக் கம்பத்தைச் சுற்றச்செய்ய வேண்டும். மூன்று சுற்ருனவுடனே நீ கையிலிருக்கிற கத்தியால் அக்கயிற்றை அறுத்துவிடவேண்டும். அறுத்துவிட்டால் கீழே ஆவர ணமாயிருக்கிற கத்திகளின்மேல் நீ தலைகீழாய் விழுவாயல்லவா?

அப்படி வீழ்ந்தால் நீ சின்னபின்னமாய் அறுபட்டு உயிரையும் இழந்துபோவாய்; ஆயினும் பயப்படாதே; இந்த விநாயகக்கடவுள் உன்னிடத்தில் மிகவும் கருணைகூர்ந்திருக்கிருர். யாதொரு அபா யமும் உண்டாகாமல் உன்னைக் காத்தருளுவார். இந்த ஸாகஸச் செய்கையைச் செய்து நீ அபாயமில்லாமல் தப்புவாயாளுல், உன் னுடைய நன்னடக்கைகளுக்காக விநாயகக்கடவுள் திருவுளம் உகந் திருக்கிருரென்று தெரிந்து அந்த நிதியை நீ நிர்ப்பயமாய்ப் பெயர்த்து எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லி உடனே மறைந்து போயினன்.

மறு நிமிஷத்தில் விக்கிரமராஜன் விழித்துக்கொண்டு மந்திரி யைப் பார்த்து, பட்டி! இப்போது நான் விசித்திரமான கனவொன்று

கண்டேன். என்னவென்கிருயோ? என்னுடைய தந்தை நேராய் என் எதிரே தோன்றி இந்த விநாயகக்கடவுளுக்கு முகோல்லாசமாய் அபாயமான செய்கையொன்று செய்யக் கட்டளையிட்டார். அதாவது: இந்தத் தீபஸ்தம்பத்தின் நுனியில் ஒரு கயிற்றைக்கட்டித் தொங்கவிட்டு அதின் நுனியில் ஒரு கூடையைக்கட்டி அதிலே தலைகீழாய் உட்கார்ந்துகொண்டு, அந்தக் கயிறு கம்பத்தை வேகமாய்ச் சுற்றுகையில் நான் கீழே விழும்படிக் கயிற்றை அறுத்துவிடவேண்டும். இப்படியாக சுவாமிக்குப் பிரீதிசெய்வித்து அந்தத் தீபஸ்தம்பத்தின்கீழ் வெட்டிப்பார்த்தால் அளவற்ற நிதியகப்படும் என்று சொல்லி மறைந்துபோனர். இது உனக்கென்னவென்று தோன்றுகிறது என்றன்.

அதைக்கேட்டு மந்திரி, என் அபிப்பிராய மென்னவென்கிருயோ? உனக்கு அந்த நிதி வேண்டுமென்கிற அபேக்ஷையிருந்தால், சுவாமியின் கிருபையை நம்பி உன் தந்தை சொன்னபடியே செய்யலாம் என்றன்.

அப்படியே காலையில் விக்கிரமராஜன் ஒரு கயிற்றில் கூடையைக்கட்டி அதைத் தீபஸ்தம்பத்தின் நுனியில் முடியச்செய்து அந்தக் கூடையில் தலைகீழாய் உட்கார்ந்து இனி நான் செய்யவேண்டுவதென்னவென்று பட்டியைக் கேட்க, அவன், இது தெரியாதா? இந்தக் கத்தியைக் கையில் எடுத்துக்கொள்; நான் இக்கயிற்றை ஆட்டிவிடுகிறேன்; அதன் ஆட்டம் நிற்கப்போகிற தருணத்தில் நீ கத்தியால் கயிற்றை அறுத்துவிடு என்று சொல்லி அவன் கையில் ஒரு கத்தியைக் கொடுத்துவிட்டுக் கயிற்றைவீசிச் சுற்றி ஆட்டினன். அதிஞட்டம் நின்றதும ராஜன் கயிற்றைத் துண்டிக்க, கூடை வெகு வேகமாய்க் கீழேவிழ ஆரம்பித்தது. அப்படித் தன்னுடைய பக்தன் செய்த ஸாகஸச்செய்கையைக் கண்டு விநாயகக்கடவுள் அவனிடத்தில் பரிபூரணகடாக்ஷம் வைத்து ஒரு கிழவன்போலக் கோயிலிலிருந்து சரேலென்று வெளியே ஓடிவந்து, அந்தக் கூடை கீழே விழப்போகிற தருணத்தில் அதைக் கையிலேந்தி மெதுவாய்க் கீழே விட்டுவிட்டு உள்ளேபோயினர். அந்தக் கிழவன் சுவாமிதானென்று ஒருவருக்கும் தெரியவில்லை. அவன் ஒரு சாதாரணமான மனிதனென்றே நினைத்து, இவனுடைய சாமர்த்தியம் என்ன சாமர்த்தியமென்று அனைவரும் வியந்தார்கள். அப்படிச் சுவாமி வந்து அவ

ளைக் கையில் ஏந்திக்கொள்ளாவிட்டால், அவன் அந்தக் கத்திகளின் மேலே விழுந்து இறந்துபோகவேண்டுவதுதான்.

இவ்வாறு தான் பத்திரமாய்க் காப்பாற்றப்படவே விக்கிரமராஜன், சுவாமிக்குத் தன்னிடத்தில் பரிபூரணமாய் அனுக்கிரகமிருக்கிறதென்று தெரிந்து அந்த தீபஸ்தம்பத்தின் கீழே வெட்டக் கட்டளையிட்டான். வெட்டிப்பார்க்கையில், அதன்கீழ் மலைமலையாய் அளவற்ற இரத்தினங்களும் பொன் வெள்ளிச் சாமான்களும் ஆபரணவகைகளும் நாணயங்களும் ஏராளமாயிருந்தன. அந்த நிதியில் சிறிதளவுகூட அரசன் சொந்தத்திற்கு எடுத்துக்கொள்ளவில்லை. எல்லாப்பொருள்களையும் விற்றுப் பணமாக்கி ஏழைகளுக்குப் பலவிதமாய்த் தானதருமங்கள் செய்யக் கட்டளையிட்டான்.

மறுநாள் இராத்திரி இராஜன் வழக்கப்படியே கோயிலில் படுத்து நித்திரைசெய்யும்போது மறுபடியும் ஒரு கனவுகண்டான். முன்போலவே அவனுடைய தந்தை எதிரேவந்து தோன்றி, அருமைக் குழந்தாய்! நீ நாள்தப்பாமல் இந்தக் கோயிலுக்கு வந்துகொண்டிரு; இந்த விக்கினேசுவரர் உனக்குப் பரிபூரணமாய் ஞானோபதேசம் செய்வார்; அதனால் உனக்கு நல்ல விவேகமுண்டாகும். கல்வி மட்டும் சுலபமாயே உலகத்தில் சம்பாதிக்கலாம்; விவேகமோ, விசேஷமான படிப்பு உலகவழக்கம் ஈசுவரபக்தி ஜீவகாருண்யம் முதலியவெல்லாம் இருந்தே உண்டாகவேண்டியது. ஆதலால் நீ சுவாமியின் உபதேசத்தால் நல்ல விவேகியாகக்கடவாய்; கல்விகூட அழிந்துபோனாலும் போம்; விவேகம் ஒருபோதும் அழியாது என்றான். உடனே விக்கிரமராஜன் விழித்துக்கொண்டு அந்தக் கனவையும் மந்திரியோடு சொல்ல, அவன் அப்படியே நடத்தும்படி அங்கீகரிக்கவே, ராஜன் அப்படியே செய்ய ஆரம்பித்தான்.

விக்கிரமராஜன் தந்தையின் கட்டளைப்படியே நாள்தப்பாமல் கோயிலுக்குப்போய் விக்கினேசுவரரிடத்தினின்றும் வேண்டிய உபதேசங்களைப் பெற்றுவந்தான். அவன் எல்லாவற்றையும் தெரிந்துகொண்டபிறகு ஒருநாள் விக்கினேசுவரர், குழந்தாய்! மனிதர்களுக்கு வேண்டிய விஷயங்கள் எவ்வளவோ அவ்வளவும் நான் உனக்கு உபதேசித்தாயிற்று. கடைசியாய் சம்பத்தோ, சந்தானமோ, சாமர்த்தியமோ, அழகோ, வயதோ, சரீரசவுக்கியமோ உனக்கு எது வேண்டுமோ அதைக் கேட்டுப் பெற்றுக்கொள் என, ராஜா இன்னது

கேட்கிறதென்று தோன்றாமல் கவலைப்பட்டு அதைப்பற்றி ஆலோசனை செய்துகொண்டு வருவதற்காக ஒருநாள் செலவுகேட்டுக் கொண்டான்.

இப்படியிருக்க விக்கிரமராஜாவின் வீட்டுக்குச் சமீபத்தில் கம்மாளப்பையல் ஒருவனிருந்தான். அவன் மிகவும் சூதுள்ளவன்: ராஜா நல்லறிவு உபதேசித்துக்கொள்ளக் கோயிலுக்குப்போகிற செய்திகேட்டுத் தானும் அத்தருணத்தில் அங்கே போயிருந்து திருட்டுத்தனமாய் ஞானோபதேசம் பெறவேண்டுமென்று தீர்மானித்து, நாள்தோறும் ராஜன் போகிறபோதெல்லாம் தானும் மறைவிடமாய்ப் போய் ஒரு மூலையில் ஒளித்திருந்து அவர்கள் சொல்வதையெல்லாம் கேட்டுத் தானும் நல்ல விவேகியானான். கடைசியாய் அவனுக்கு இஷ்டமான வரமொன்று கேட்டுக்கொள்ளும்படி கணபதி செலவு கொடுத்ததைக் கேட்டு, ராஜா மறுபடியும் கோயிலுக்குப் போகும் போது தானும்போய், அவன் என்ன வரங்கேட்கிறானோ, அதை எவ்விதமாய்ப் பெற்றுக்கொள்ளுகிறானோ, அதைத் தானும் தெரிந்துகொண்டு வரவேண்டுமென்றிருந்தான்.

விக்கிரமராஜன் விக்கினேசுவரர் சொன்ன செய்தியைக் கேட்டுக்கொண்டு பட்டியண்டைபோய்ச் சொல்லி, நமக்குச் செல்வமும் சாமர்த்தியமும் குறைவில்லாமல் இருக்கிறது; மற்றவைகளும் சுலபத்திலேயே தேடிக்கொள்ளலாம்; ஆதலால் சுவாமியினிடத்தில் இன்ன வரம் கேட்கிறதென்று தெரியவில்லையே! உன் அபிப்பிராயம் என்னவென்றான். அதற்கு பட்டி, அது மெய்தான்; மனிதர்களுடைய சக்திக்கு அசாத்தியமான கோரிக்கை ஏதாவது ஒன்று உன்மனதிலிருக்குமானால் அதைத்தான் இத்தருணத்தில் பெற்றுக் கொள்ளவேண்டுமெனக் கேட்டு ராஜா, ஆம் அப்படிப்பட்ட எண்ணமொன்று எனக்கு நெடுநாளாயுண்டு; இஷ்டமானபோது இந்தத் தேகத்தை விட்டுவிடவும், பசுவோ பட்சியோ எனக்கு விருப்பமான சரீரத்துள் புகுந்துகொண்டு இஷ்டப்படி நடக்கவும், மறுபடி வேண்டும்போது என் தேகத்தில் புகுந்துகொள்ளவும் வேண்டுமென்று எனக்கு நெடுநாளாய் அபேட்சையுண்டு என, மந்திரி இந்த வரத்தையே கொடுக்கும்படி சுவாமியைக் கேட்டுக்கொள் என்றான்.

மறுநாள் காலையில் எழுந்து ராஜா நீராட்டம் முதலிய நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு தனக்கு இஷ்டமான வரத்தைக்

கேட்பதற்காகக் கோயிலுக்குப்போனான். அங்கே நடக்கிற செய்தியைத் திருட்டுத்தனமாய்க் கேட்பதற்காகக் கம்மாளப்பையலும் அவனைப் பின்தொடர்ந்துபோனான்.

கோயிலுக்குப் போனவுடனே ராஜாவைப்பார்த்து விக்கினேசுவரக்கடவுள், ஓ விக்கிரமாராஜனே! என்ன வரம் கேட்கும்படி நிச்சயித்துக்கொண்டுவந்தாய் என்று கேட்டார்.

அதைக்கேட்டு ராஜா, ஓ என் ஆண்டவனே! அடியேனை மகாராஜாவாக்கி நீர் வேண்டிய ஐசுவரியமும் வல்லமையும் தந்திருக்க, அடியேனுக்கு வேறென்ன தேவையிருக்கிறது. அழகோ, இருக்கிற அழகே போதும்; சரீரசவுக்கிய தீர்க்காயுள் முதலியவைகளுக்கும் உமது கடாட்சத்தால் யாதொரு குறையும் உண்டாகாது. ஆயினும் நீரே கிருபைசெய்து வேண்டியவரமொன்று கேட்டுக்கொள்ளும்படி நியமித்ததனால் அடியேன் வேண்டாமென்று சொல்வது சரியன்று. வேண்டும்போது இந்தச் சரீரத்தை விட்டுவிட்டு, மனிதனோ மாடோ பட்சியோ, எதில் எனக்கு மனது ருசிக்கிறதோ அந்தச் சரீரத்தில், என் அறிவுக்கும் வல்லமைக்கும் யாதொரு குறைவுமில்லாமல் என் இஷ்டப்படி ஏறிச்செலுத்தவும், ஒரு நாளோ ஒரு மாதமோ ஒரு வருஷமோ அல்லது ஒரு நூற்றாண்டேயோ எவ்வளவு காலம் வேண்டுமானாலும் அப்படியே இருக்கவும், நான் எப்போது திரும்பி வந்தாலும் அதுவரையில் என் சொந்த தேகம் சிறிதும் கெடாமல் நான் இருந்தால் எப்படியோ அப்படியே இருக்கவும் கிருபை செய்தருளவேண்டுமென்றான்.

அந்த வேண்டுகோளை விக்கினேசுவரர் கிருபையுடன் திருவுளம்பற்றி, அப்படிப் பரகாயப்பிரவேசஞ்செய்வதற்கு வேண்டிய மந்திரத்தை அவனுக்கு உபதேசித்து, அவன் தன் தேகத்தைவிட்டிருக்கும் காலத்தில் அது கெடாமலிருப்பதற்காக அதில் வைத்துப்போம்படி ஒரு சிறந்த மருந்தையும் தந்தருளினார்.

அந்த சமயத்தில் கோயிலுக்கு வெளியே மறைவாய் நின்று உள்ளே நடப்பதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த கம்மாளன் பரகாயப்பிரவேசம்பண்ணுவதற்குச் சுவாமி விக்கிரமாராஜனுக்கு உபதேசித்த மந்திரத்தைமட்டும் கேட்டுத் தெரிந்துகொண்டான். பரகாயப்பிரவேசம்பண்ணுகிறகாலத்தில் சுயசரீரம் அழியாமைக்காக அதில் வைத்துப்போம்படிக் கொடுத்தது இன்னதென்று அவனுக்குத் தெரி

யவுமில்லை; வேறெந்தவிதத்தினாலாவது அதை அறிந்துகொள்ளவும் கூடவில்லை. அதனால் அவன் பரகாயப்பிரவேசம் செய்கிற விஷயத்தில் பாதிக்கே அதிகாரியானான்.

சுவாமி அந்த மந்திரத்தை உபதேசித்தபிறகு விக்கிரமராஜன் அவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு வீட்டுக்குப்போய்த் தான் இஷ்டசித்தி பெற்றுவந்ததை மந்திரியுடன் சொன்னான். அதைக் கேட்டு மந்திரி, உனக்கு இந்த அற்புதமான சக்தி கிடைத்தது மிகவும் சந்தோஷமாயிருக்கிறது; ஆனால் நீ இந்த மந்திரத்தை முதலில் ஒரு நல்ல விஷயத்தில் உபயோகிக்கவேண்டும்; உடனே நீ சண்பகதேசத்திற்குப்போய் அத்தேசத்து ராஜாவின் மகளான சண்பகவல்லியை இவ்விடம் கொண்டுவந்துசேர் என்றான்.

அதெப்படிச் செய்கிறதென்று விக்கிரமராஜன் கேட்க பட்டி, நீ ஒரு கிளியின் சரீரத்தில் பிரவேசித்தாயானால், அவள் வசிக்கின்ற தோட்டத்திற்குள் உனக்குப்போக யாதொரு தடையுமிராது; சுலபமாய் அதின் பிராகாரங்களைத் தாண்டி உள்ளேபோய் அவள் படுத்திருக்கின்ற சண்பகக்கிளையை அசைக்காமல் மூக்கினால் கடித்து அந்தக்கிளையோடு கூடவே அவளைத் தூக்கிக்கொண்டு வந்துசேர் என்றான்.

அப்படியே ஆகட்டுமென்று ராஜா உடனே தான் ஒரு கிளியின் சரீரத்திற் புகுந்து, தன் தேகமழியாமைக்காகச் சுவாமி கொடுத்த ரக்ஷையை அதில் வைத்துவிட்டுப் பறந்துபோனான். அநேகம் ஆறுகளும் காடுகளும் நாடுகளும் மலைகளும் கடந்துபோய் அந்தப் பட்டணஞ்சேர்ந்து சண்பகவல்லியின் தோட்டத்தில் புகுந்தான். அதனுள்ளேபோக அவனுக்கு யாதொரு தடையுமுண்டாகவில்லை. வெகுவேகமாய்ச் சண்பகவல்லியிருக்கும் மரத்தண்டைபோய், அந்தப் பெண் படுத்திருந்த கிளையைமாத்திரமேயன்றி அவளுடைய தோழிகள் இருவர் படுத்திருந்த கிளைகளைக்கூட ஒடித்துத் தூக்கிக்கொண்டு பத்திரமாய் வீடுவந்து சேர்ந்தான்; வீட்டுக்கு வந்ததும் பட்சிசரீரத்தை விட்டுவிட்டுத் தன் தேகத்திற் புகுந்துகொண்டான். அப்போது பட்டி அவனைப்பார்த்து, அப்பா! முதல்முதல் இந்தக் காரியம் நமக்குச் சுகமாய்க் கைகூடினதற்காக நாம் சுவாமியைத் தொழுதேத்த வேண்டுமென்றான். சண்பகவல்லியின் அழகைப் பார்த்து யாவரும் அதிசயித்து, நம்முடைய ராஜா இந்தச் சிறந்த

பெண்மணியை ராணியாகத் தேடிக்கொண்டுவந்தாரே; இவருடைய சாமர்த்தியத்தை என்னென்று சொல்லலாமென்று வியந்தார்கள். பின்பு அவர்களுக்கு வெகு சிறப்பாய்க் கலியாணம் நடந்தது. அது முதல் கொஞ்சகாலம் அவர்களெல்லாரும் அங்கேயே சுகமாயிருந் தார்கள்.

இப்படியிருக்க ஒருநாள் ராஜா மந்திரியைப்பார்த்து, பட்டி! எனக்கு உலகம் முழுதும் பார்த்துவரவேண்டுமென்று அதிக ஆவலா யிருக்கிறது என, மந்திரி, என்ன! அதற்குள் வீட்டைவிட்டு ஓடிப் போகிருயா? புதிதாய்க் கலியாணமான குழந்தையை அதற்குள் தனியே விட்டுவிட்டு ஓடிப்போகிறதா என்ருன்.

அதைக்கேட்டு ராஜா, நீ சொல்வது உண்மைதான்; இந்தப் பெண்ணினிடத்திலாகட்டும் மற்ற ஜனங்களிடத்திலாகட்டும் எனக்கு மனப்பற்று அதிகமே; ஆயினும், என்னிடத்தில் விசித்திரமான சக்தி யொன்று இருப்பதால், அதைக் கையாளவேண்டுமென்கிற ஆசை எல்லாவற்றிலும் மேலானதாயிருக்கிறது. மறுபடியும் கிளியாகவே மாறிச் சீமைகளைச் சுற்றிப்பார்த்துவிட்டு வருகிறேன் என, அதைத் தடுக்கமாட்டாமல் மந்திரி அப்படியே ஆகட்டுமென்று அங்கீகரித் தான்.

பின்பு ராஜா தன் பெண்சாதியண்டைபோய், என் கண்ணே! நான் உலகங்களைப் பார்த்துவரப்போகிறேன்; திரும்பிவர எத்தனை நாள் செல்லுமோ அது எனக்கே தெரியாது. ஒரேநாளில் வந்தாலும் வந்துவிடுவேன்; பத்துவருஷம் சென்ருலும் செல்லும். நான் மந் திரியோடு சொல்லியிருக்கிறேன்; அவர் உன்னை வெகு ஜாக்கிர தையாகக் காத்துக்கொள்வார். என்னை அவர் தகப்பன்போலக் காத்து வருகிருரேயொழிய வேறில்லை; நீயும் அவரை உன் தந்தை போலவே பார்த்துவா; உனக்கு ஒரு குறையும் உண்டாகாமல் அவர் உன்னைக் காத்துக்கொள்வார் என்று சொல்லி அவளிடத்தில் செலவு கேட்டுக்கொண்டு, தன் சரீரம் அழியாதபடி சுவாமிகொடுத்த ரக்ஷையை அதில் வைத்துவிட்டு வெகு விசித்திரமான பஞ்சவர்ணக் கிளியின் சரீரத்திற் புகுந்துகொண்டு பறந்துபோய்விட்டான்.

இப்படி விக்கிரமராஜன் கூடுவிட்டுக் கூடுபாய்ந்து போன பிறகு, ராஜா பிரஞ்ஞைதப்பிப் பிணம்போல விழுந்துகிடக்கிருர் என்று பட்டணமெங்கும் பெரும் கூச்சலாயிற்று. அதைக்கேட்டுக்

கூடுவிட்டுக் கூடுபாய்கிற வித்தையை ராஜாவோடுகூடத் தானும் கற்றறிந்த கம்மாளன், அரசன் பரகாயப்பிரவேசம் பண்ணியே போயிருக்கவேண்டுமென்று தெரிந்து, இதுதான் தருணம்; நாம் ராஜாவின் சரீரத்திற்புகுந்து ராஜாவைப்போல நடத்தவேண்டுமென்று எண்ணி உடனே விக்கிரமராஜனுடைய சரீரத்திற் புகுந்து கொண்டான். புகுந்தவுடனே ராஜாவின் சரீரம் திடீரென்று எழுந்து சஞ்சரிக்க ஆரம்பித்தது. அதைக்கண்டு ஜனங்களெல்லாம், ராஜா கொஞ்சநேரம் பிரஞ்ஞை தப்பிக்கிடந்து உடனே பிழைத்துப் போனாரென்று சொல்லிச் சந்தோஷித்தார்கள். பட்டி மிகவும் புத்திசாலியாகையால் அவர்களைப்போல் அப்படி மூடத்தனமாக நினைக்கவில்லை. ராஜா தன் சரீரத்தைவிட்டுப் போனவுடனே அவர் சரீரம் எழுந்து நடக்க ஆரம்பித்ததே; இதென்ன அதிசயம்! நமது ராஜாவுக்குத் தெரிந்த மாயை வேறே யாராவது ஒருவனுக்குந் தெரிந்திருக்கும்; தானும் ராஜாவைப்போலக் கொஞ்சகாலம் நடத்துவது மிகவும் விந்தையாயிருக்கும் என்று இந்தச் சமயத்தில் அவன் இப்படிச் செய்யத்துணிந்தானேயொழிய வேறில்லை. இதன் உண்மையைச் சீக்கிரத்திலேயே பரீக்ஷித்தறியவேண்டுமென்று எண்ணியிருந்தான்.

அவன் இன்னானென்பதைக் கண்டறியவேண்டுமென்று மந்திரி சண்பகவல்லியண்டை போய், பெண்ணே! உனக்கென்ன தோன்றுகிறது? நம்முடைய ராஜா பட்சிவடிவம்பூண்டு கொஞ்சந்தூரம் போனாரோ, இல்லையோ, அதற்குள் இந்தச் சரீரம் எழுந்து உட்கார்ந்து பேசத்தொடங்கிற்றே; பார்த்தால் எல்லாம் ராஜாவைப் போலவே காண்கிறது. ஆயினும் இந்தச் சரீரத்தில் புகுந்துகொண்டிருப்பது நமது ராஜாவின் உயிரல்ல; ராஜாவுக்குக் கணபதி உபதேசித்த மாயையைத் தெரிந்துகொண்ட எவனோ ஒருவன் இந்தத் தருணங்கண்டு ராஜாவின் சரீரத்தில் புகுந்துகொண்டதாய் எனக்குத் தோன்றுகிறது; இதன் உண்மையை நாம் அறியவேண்டும்; நான் சொல்லுகிறபடி கேள்: இன்றையதினம் ராஜாவுக்கு இடப்போகிற சாப்பாட்டை, ஒருவரும் தின்பதற்குத் தகாத மட்டிச் சாப்பாடாய்ச் செய்துவைக்கச் சொல்; அதை அவன் ஒன்றும் பேசாமல் தின்றுவிட்டுப்போவானானால், நான் சொன்னது உண்மையென்று நினை; இன்றைக்கு இப்படிப்பட்ட சமையல்செய்தது யாரென்று குற்றஞ்

சொன்னால் அவர் ராஜாவென்பதற்குச் சந்தேகமில்லை; இதை உடனே கண்டறி என்றான்.

அந்த இராணி மந்திரிசொன்னபடியே செய்துபார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டு, மந்திரியண்டை வந்து, ஐயா! இது எனக்கு மிகவும் அதிசயமாயிருக்கிறது; இன்றையதினம் நான் இட்டசோற்றை நாய் கூடத்தின்னாது; இவர் சிறிதும் குற்றங்கூறாமல் அதைப் புசித்து விட்டார்; ஆதலால் நீர் சொல்வது உண்மைதானென்று தோன்று கிறது; இதற்கு நாம் செய்யவேண்டுவது என்னவென்று கேட்டாள்.

அதற்கு மந்திரி, நாம் என்னசெய்யலாம்; இவன் ராஜாவின் சரீரத்திலிருக்குமளவும் இவனை நாம் சிறையிலேகூட வைக்கக் கூடாது; ஆனால் ஒன்று, இவனோடு ஒருவரும் பேசவேண்டாம்; அவனைப் பேசவந்தாலும் அவன்மேல் கோபங்கொண்டு சண்டைக்கு ஆரம்பிப்போம்; யாரோடு பேசவந்தாலும் யாவரும் இப்படியே செய்தால், இவன் தான் நினைத்துவந்தபடி இந்த ராஜசரீரத்தில் யாதொரு சுகமுமில்லை என்று கண்டு, தானே இதைவிட்டு ஓடிப்போவான் என்றான்.

இராணியானவள் உடனே மந்திரிசொன்னபடியே செய்யும்படி யாவர்க்கும் கட்டளைசெய்துவிட்டாள். ராஜவேஷக்காரன் யாரோடு பேசப்போனாலும் அவரவர் பல்லைக்கடித்துப் புருவம் நெறித்துச் சண்டைசெய்ய வந்தார்கள். சோறும் நல்லசோறு கிடையாது. அது கண்டு அவன், இதென்ன, இது மிகவும் கேடுகெட்ட பிழைப்பாயிருக்கிறது! இப்படிப்பட்ட வருத்தத்தோடு ராஜாவாயிருந்தாவதென்ன? கூடுமானால் சுயசரீரத்தில், போய்ச்சேர்வதே நல்லதென்று நினைத்தான். ஆயினும், உயிரில்லாதபோது தன் சரீரம் கெடாதபடி அதைக் காக்க அவனுக்குச் சக்தியில்லையாதலால், அவன் அந்தச் சரீரத்தை விட்டவுடனே அது அழுக ஆரம்பித்து மூன்றுநாளைக்குள்ளே மக்கி மண்ணாய்ப்போயிற்று. அதனால் வேறு விதியில்லாமல் அவன் அந்த ராஜசரீரத்திலேயே நிற்கும்படியாயிற்று.

வாஸ்தவமான விக்கிரமராஜன் பஞ்சவர்ணக்கிளியாய்ப் பறந்து போனானே; அவன் வரலாற்றைக் கேளுங்கள்: அவன் வெகுதூரம் பறந்துபோய் அங்கே ஓரிடத்தில் அழகான ஆயிரங்கிளிகள் குடிகொண்டிருந்த ஒரு ஆலமரத்திற்சேர்ந்து தானும் ஆயிரத்தோராவது கிளியாய் அவைகளோடுகூடவே வாழ்ந்துகொண்டிருந்தான். அவை

களோடுகூட அவனும் நாள்தோறும் பகலில் சீமையெல்லாம் சுற்றிப் பார்த்து இரைதேடிக்கொண்டு பொழுதுபோனவுடனே அம்மரம் வந்துசேருவான். இப்படியே சிறிதுகாலம் சென்றது.

அந்த ஆலமரத்தின் வழியாய் ஒரு வேடன் வழக்கமாய் அடிக்கடி போய்க்கொண்டேயிருந்தான். அவன் போகும்போதும் வரும்போதும் அந்த மரத்திலிருக்கிற கிளிகளைப்பார்த்து, ஆ! இம்மரத்திலே இராத்திரி வந்து தங்குகிற ஆயிரத்தொரு பறவைகளையும் பிடித்துக் கொண்டால் நாம் வெகுகாலம் சுகமாய் வாழலாமே என்று எண்ணிக்கொண்டேபோவான். ஆயினும் அவன் அப்பட்சிகளை ஒன்றும் செய்யக்கூடவில்லை. ஏனெனில், அவ்வாலின் அடிமரம் கோணல் வளைவு ஒன்றுமில்லாமல் நேராய் ஆகாயம் அளாவி வளர்ந்திருந்ததோடுகூட ஒருவரும் ஏறக்கூடாமல் அதிக மழமழப்பாயும் இருந்தது. ஆதலால் அம்மரத்தின்மேலேற அவன் பலதடவை முயன்றும் கூடாமற்போயிற்று.

இப்படியிருக்க, ஒருநாள் பெருமழை பெய்யவே, வெளியே இரைதேடப்போயிருந்த கிளிகள் அன்றையதினம் வழக்கப்படி பொழுதுபோய் வருவதைவிட்டுச் சீக்கிரமே திரும்பிவந்தன. மரத்தண்டைவந்து பார்க்கையில், தங்கள் கூடுகளுக்கு இரைகொண்டு போன ஆயிரம் காக்கைகள் நடுவழியே மழைக்காக அம்மரத்தில் தங்கியிருந்தன. அதுகண்டு விக்கிரமராஜக்கிளி, இந்தக் காக்கைகள் தங்கள் குஞ்சுகளுக்காகப் பலவித விதைகளை வாயில் கௌவிக் கொண்டுபோகின்றன; இந்தக் காக்கைகள் கொஞ்சநேரம் இங்கேயே இருந்தால் இவை வைத்துக்கொண்டிருக்கிற விதை கொஞ்சம் கீழே சிந்தும்; சிந்தினால் அவையெல்லாம் முளைத்துப் படர்ந்து, நமக்குச் சத்துருவான வேடன் வலைபோட்டு நம்மைப் பிடிக்கச் சுலபமாய் மரத்தின்மேலேறும்படி இம்மரத்தை நன்றாய்ச் சுற்றிக் கொள்ளும். பின்பு நாம் இம்மரத்தில் தங்குவதற்கு ஆசைவைக்க வேண்டுவதில்லை: ஆதலால் இவைகளையெல்லாம் இப்போதே துரத்திவிடுவது நலம் என்று மற்றக் கிளிகளோடு சொல்லிற்று.

அதைக்கேட்டு அந்தக் கிளிகள், எப்போதோ நடக்கப்போகிற காரியத்தைப்பற்றியா நாம் இப்போது சிந்தைப்படுகிறது; அதுவரையில் நாம் பிழைத்திருப்பது என்ன நிச்சயம்? வீணான சந்தேகம் கொண்டு, ஐயோ பாவம்! இப்போ பெய்கிற மழையில் நாம் இவை

களைத் துரத்திவிடவேண்டாம் என்று சொல்லி அந்தக் காக்கைகளைத் துரத்த முயலாமலே இருந்துவிட்டன. ஆனால் கடைசியில் காரிய மட்டும் விக்கிரமராஜன் உத்தேசித்தபடிதான் முடிந்தது. காக்கைகள் வைத்துக்கொண்டிருந்தவற்றுள் சில பழங்களும் தானியங்களும் விதைகளும் கீழேவிழ, சீக்கிரமே அவையெல்லாம் முளைத்துப் படர்ந்து நன்றாய் அம்மரத்தைச் சூழ்ந்துகொண்டன.

மறுதடவை அந்த வேடன் அவ்வழியாய் வந்தபோது அதைப் பார்த்துப் பெருமையடைந்து, ஆ! என் தோழர்களே! இன்னுங்கூட என் கையில் அகப்படாமல் தப்பித்துக்கொள்வீர்களோ என்று சொல்லிச் சுலபமாய் அம்மரத்தின்மேலேறி ஆயிரத்தொரு கிளிகளுக்கும் ஆயிரத்தொரு வலையை விரித்துவைத்துவிட்டு இறங்கிப் போனான்.

அன்று இராத்திரி அந்தக் கிளிகள் ஆயிரத்தொன்றும் வந்து மரத்தில் உட்கார்ந்தன. உட்கார்ந்தவுடனே எல்லாவற்றிற்கும் காலிலே வலை சுற்றிக்கொள்ள, அது கண்டு அவை ஒன்றுந்தோன்றாமல், ஓகோ, நாம் எல்லாரும் மோசம்போனோமே! ஓ விக்கிரமராஜனே! நீ சொன்னதை அப்போது கேளாமற்போனோமே; கடைசியில் நீ சொன்னபடியே முடிந்தது பார்த்தாயா என்று சொல்லித் துக்கித்துக் கூவ ஆரம்பித்தன.

அவை படுகிற வருத்தத்தைப்பார்த்து விக்கிரமராஜன், அப்போது நான் நூறுதரம் சொன்னேன், கேளாமற்போனீர்களே; இப்போது போனதைச் சொல்லியாவதென்ன? ஒரு வழி சொல்லுகிறேன் கேளுங்கள்: அந்த வேடன் நம்மைப் பிடிக்கவருவதற்கு முன்னமே நாம் எல்லாம் செத்தவைபோலத் தலையை ஒருபுறமாய்ச் சாய்த்துக்கொண்டு கிடப்போம்; அது கண்டு அவன் நாம் செத்துப் போனதாகவே நினைத்து நம்மை ஒன்றும் தொந்தரைசெய்யாமல் வலையினின்றும் விடுவித்துக் கீழேபோடுவான்; ஆயிரத்தொரு கிளியும் கீழே விழுமளவும் கைகால் அசைக்காமல் அப்படியே கிடப்போம்; எல்லாக் கிளிகளையும் வலையைவிட்டு வாங்கிக் கீழே போட்டுவிட்டு அவன் கீழே இறங்குகிற தருணம்பார்த்து நாம் எல்லாரும் கும்பலாகப் பறந்துபோய்விடுவோம் என்று சொன்னான்.

இது நல்ல யோசனைதானென்று அதை எல்லாக் கிளிகளும் அங்கீகரித்து, அவைகளைப் பிடிக்க வேடன் வந்தபோது, கண்ணை மூடிக்

கொண்டு தலையையும் ஒருபுறமாய்ச் சாய்த்துக்கொண்டு கிடந்தன. அது கண்டு அவன், ஓ! எல்லாம் செத்துக்கிடக்கின்றனவே! பாக்கியம் வந்தாலும் இப்படியல்லவோ வரவேண்டுமென்று சொல்லிச் சந்தோஷித்து, ஒவ்வொரு கிளியாய் வலையினின்றும் வாங்கிக் கீழே போட்டான். ஆயிரம் கிளிகளையும் கீழேபோட்டாயிற்று. ஆயிரத்தோராவது கிளியின் வலையை அறுக்கப்போகிற தருணத்தில் கைதவறிக் கத்தி கீழே விழுந்தது. அதை எடுக்க அவன் இறங்கினான். அதுகண்டு கீழேகிடந்த பறவைகள் ஆயிரத்தொரு கிளிகளையும் கீழேபோட்டுவிட்டு வேடன் இறங்குகிறானென்றெண்ணி எல்லாம் ஒரே சங்கேதமாய்ப் பறந்தோடிப்போயின.

ஐயோ பாவம்! ஒரே ஒரு கிளி தனியே அகப்பட்டுக்கொண்டது! அந்தக்கிளி யாரென்று நினைக்கிறீர்கள்? தெய்வகதியால் **விக்கிரமராஜனாகவே** முடிந்தது. எல்லாக் கிளிகளும் ஓடிப்போய் விடவே, வேடன் மிகக் கோபங்கொண்டு, மிகுந்திருந்த அந்தக் கிளியைப்பார்த்து, அடா! துஷ்டக்கிளியே! இவ்வளவு சில்விஷம் நடந்ததும் உன்னாலல்லவா? இவ்வளவு நடந்ததும் உன்னாலே தானென்று எனக்கு நன்றாய்த் தெரிகிறது. நான் உன்னை என்ன செய்கிறேன் பார் என்று சொல்லி வெருட்டினான். அது கேட்டு அந்தக் கிளி அந்த வேடனுக்கு மிகவும் ஆச்சரியம் உண்டாகும்படி ஒரு வார்த்தை சொல்லிற்று:

அப்பா! என்னைக் கொல்லவேண்டாம்; என்னைக் கொல்வதனால் உனக்கு என்னகிடைக்கப்போகிறது? பக்கத்துப் பட்டணத்துக்குக் கொண்டுபோய் என்னை விற்றுவிடு; நான் வெகு அழகாயிருக்கிறேன்; என்னால் உனக்கு ஆயிரம் ரூபாய் கிடைக்கும் என்றது. அதுகேட்டு வேடன் ஆச்சரியப்பட்டு, ஆயிரம் ரூபாயா அடா பேய்ப்பட்சி! உன் மூஞ்சியைப் பார்த்து உனக்காக ஆயிரம் ரூபாய் கொடுக்கிற மடையன் யாரடா என்று இகழ்ந்துபேச, அந்தப்பட்சி, அதற்காக நீ சிந்திக்கவேண்டாம்; என்னைப் பட்டணத்திற்குக் கொண்டுபோய்த்தான் பார் என்றது.

என்னவோ சொல்லுகிறதே பார்ப்போமென்று வேடன் அந்தக் கிளியைப் பட்டணத்துக்குக் கொண்டுபோய், கிளிவாங்கவில்லையா! கிளி! பஞ்சவர்ணக்கிளி! இதின் பேச்சழகை வந்துபாருங்கள் என்று தெருத்தெருவாய்போய்க் கூவினான். அநேகர் வந்துபார்த்து

இதன் விலை என்னவென்று கேட்டார்கள். ஆயிரம் ரூபாய் என்று அவன் சொல்லக்கேட்டு இந்தக் கிளிக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கிற முட்டாள் யாரடா என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே போய் விட்டார்கள்.

ஒருவரும் வாங்காமற் போகவே வேடன் கோப மிஞ்சினவனாய்க் கிளியைப்பார்த்து, துஷ்டக்கிளியே! நான் முன்னேயே சொன்னேனே இல்லையா? ஆயிரம் ரூபாய் கொடுத்து உன்னை எவன் வாங்குவான் என்று சொல்ல, அந்தக் கிளி, வாங்குகிறவன் வருகிறான்; அவசரப்படாதே; இந்த வழியே அதோ ஒரு வர்த்தகன் வருகிறான்; அவன் என்னை வாங்கப்போகிறான் என்றது. அதைக் கேட்டு வேடன் அந்த வியாபாரிக்கு எதிரேபோய், ஐயா! இந்த அழகுக்கிளி தங்களுக்கு வேண்டுமோ என, அந்த வர்த்தகன், இதன் விலை என்ன? இரண்டு ரூபாய்க்குக் கொடுப்பாயா என்றதற்கு, வேடன், இல்லை ஐயா; ஆயிரம் ரூபாய்க்கு ஒரு காசுகுறைந்தாலும் இதைக்கொடேன் என்றான். அதைக்கேட்டு வர்த்தகன் திடுக்கிட்டு, என்ன? ஆயிரம் ரூபாயா! ஆயிரம் ரூபாயா!! இந்தப் பஞ்சைக் கிளிக்கா ஆயிரம் ரூபாய்!!! அவ்வளவு ரூபாயிருந்தால் வீடோ வயலோ தோட்டமோ வாகனங்களோ எதுவேண்டுமோ அதை வாங்கிக்கொண்டு சவுக்கியமாய் வாழலாமே! இந்தக் கிளிக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பவன் எவனடா? வேண்டுமானால் நான் இரண்டு ரூபாய் கொடுக்கிறேன்; இல்லாவிட்டால் போ என, விக்கிரமாராஜன், ஓ வர்த்தகனே! வர்த்தகனே! என்னை வாங்கிக்கொள்ளப் பயப்படவேண்டாம்; நான் விக்கிரமாராஜனுக்கும், வேடன் கேட்பதைக் கொடுத்து என்னை வாங்கிக்கொள்; அதற்குத் தகுந்த லாபம் நான் உனக்குத் தேடித்தருகிறேன்; நீ என்னை விட்டுவிடாதே; உன் கடைவியாபாரமெல்லாம் நான் ஒருவனே நடத்திக் கொண்டு போகிறேன் என்றான்.

அதைக்கேட்டு வர்த்தகன், கிளியே! நீயென்ன பித்தம்பிடித்தவன்போலப் பேசுகிறாய் என்றான். ஆயினும் அந்தக் கிளியின் சாமர்த்தியத்தைக் கண்டு அதினிடத்தில் அதிக நோக்கமுண்டாகி, வேடன் கேட்டபடியே ஆயிரம் ரூபாய்கொடுத்துக் கிளியை வாங்கிக்கொண்டு, அதைத் தன் கடையின் முற்றத்திலே கட்டி வைத்தான்.

அன்று முதல் அந்தக் கிளி தானே கடைக்காரனுய்க் கடையின் முன்புறத்திலிருந்து, வெகு விநோதமாய்ப் பேசிப் போகிறவர் வருகிறவர்களையெல்லாம் அழைத்து வர்த்தகம்செய்ய ஆரம்பித்தது; அந்தக் கிளி பேசுகிற விநோதத்தையும் அது சரக்குகள் விற்கிற சாதுரியத்தையும் கண்டு அப்பட்டணத்து ஜனங்கள் எல்லாம் வேறொரு கடைக்கும் போகாமல், முக்கியமாய் அந்த விநோதத்தைப் பார்ப்பதற்காகவே அந்தக் கடையிலேயே வந்து வர்த்தகம் பண்ண ஆரம்பித்தார்கள். அவரவர் கேட்டதை எடுத்துக்கொடுத்துக் கிளி வெகுதிறமையாய் வியாபாரஞ்செய்தது. வாங்கவருகிறவர்களும் அது கேட்கிற விலையைத் தடையில்லாமல் கொடுத்து வேண்டியவைகளை வாங்கிக்கொண்டுபோனார்கள். அந்தக் கிளியின் வியாபாரத் திறமையினால் ஒரு வாரத்திற்குள்ளே வர்த்தகனுக்கு வழக்கமாய்க் கிடைக்கிற லாபம் போய், அவன் கிளிக்காகக் கொடுத்த ஆயிரம் ரூபாயும் கிடைத்துவிட்டது. இப்படி யாவராலும் கொண்டாடப்பட்டு அந்தக் கிளி கொஞ்சகாலம் சுகமாக அவன் கடையிலேயே வர்த்தகம் செய்துகொண்டு அவனிடத்திலிருந்தது.

அந்தப் பட்டணத்திலே வேசி ஒருத்தி இருந்தாள். அவள் ஆட்டம் பாட்டுகளில் சிறந்தவளென்று அப்பட்டணமெங்கும் பேர்பெற்றவள். அந்தப் பட்டணத்தில் எங்கே என்ன விசேஷம் நடந்தாலும், பாட்டு கூத்துக் கச்சேரிகளுக்கு அவளையே வரவழைப்பது வழக்கம். அங்கே வேடனும் ஒருவனிருந்தான், அவன் மிகவும் எளியவன்; நாள்தோறும் காட்டுக்குப்போய்க் கட்டைவெட்டிக் கொண்டுவந்து விற்று அதனால் ஜீவித்துக்கொண்டிருந்தான்.

இப்படியிருக்க, அந்த வேடன் ஒருநாள் காட்டுக்குக் கட்டை வெட்டப்போனான். போனவிடத்தில் களைத்துப் படுத்துத் தூங்கிப் போய் உடனே ஒரு கனவுகண்டான். அதாவது, தான் விசேஷ தனவானாகவும், அப்பட்டணத்துப் பேர்பெற்ற தாசியைத் தான் கலியாணஞ் செய்துகொண்டதாகவும், பின்பு அவளைத் தன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய், அவளுக்கு வெகுமதியாகத் தான் ஆயிரம் ரூபாய் கொடுத்ததாகவும் கனவுகண்டான். அன்று மாலையில் அவன் கட்டைவிற்கக் கடைத்தெருவுக்குப் போனபோது அங்கே தன் நேசர்களோடு தான் காட்டிற்கண்ட கனவு இப்படிப் பட்டதென்று சொல்ல, அவர்கள் அதைக்கேட்டு இந்தக் கனவு

வெகு அதிசயமாயிருக்கிறதே யென்று சொல்லி வியந்து அதைப் பற்றி மற்றொன்றும் உரையாமற் போய்விட்டார்கள்.

அந்த வேடன் தான் கண்ட கனவைச் சொல்லிக்கொண்டிருந்த விடம் அந்த வேசியின் வீட்டுவாயில். அவன் தெருவிலே நின்று தன் கனவு இப்படிப்பட்டதென்பதைச் சொல்லிக்கொண்டிருந்த சமயத்தில், அந்த வேசியோ தன் வீட்டுப் பலகணிவாயிலண்டை நின்று அதைக் கேட்டுக்கொண்டிருந்தாள். அவன் சொல்லி முடித்ததும் அவள் இது நமக்கு நல்லகாலந்தான்; இவனிடத்தில் ஆயிரம் ரூபாய் இராவிட்டால் இவன் இப்படிக் கனவு காணமாட்டான்; நாம் கேட்டு இவன் பணங்கொடுக்கமாட்டேனென்றால், இவன் மேல் வியவகாரத்திற்குப் போவோம், பணம் எப்படிக் கிடைக்காமற்போகிறதோ பார்ப்போம் என்று எண்ணி, தன் வேலையாட்களை விட்டு அவனைப் பிடித்துக்கொள்ளக் கட்டளையிட்டாள். அவர்கள் அவனைப் பிடித்துக்கொண்டவுடனே, தான் வெளியே ஓடிவந்து, 'ஓ, என் கணவனே! கணவனே! நீ போனவழி தெரியாமல் நான் எத்தனைகாலம் உன்னை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது! என்னை இங்கே தனியே விட்டுவிட்டு நீ இத்தனைநாள் எங்கே போயிருந்தாய்?' என்று கூவினாள். அதைக்கண்டு வில்லி திடுக்கிட்டு, நீ சொல்வது இன்னதென்று எனக்குத் தெரியவில்லையே? நீ ஒரு பெரிய சீமாட்டி; நான் ஒரு எளிய வனவேடன்; நீ ஆள்மாராட்டமாய்ச் சொல்லுகிறாயோ என்னவோ தெரியவில்லை என்றான்.

அதைக்கேட்டு அந்த வேசி, 'அப்படியொன்றுமில்லை; நம்மிருவர்க்கும் அன்றையதினம் அவ்வளவு சிறப்பாய்க் கலியாணம் நடந்ததே நினைவில்லையா? பின்பு நீ என்னை உன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய், என்னைக் கலியாணஞ் செய்துகொண்டதற்காக எனக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பதாகக்கூட வாக்குத்தத்தம்பண்ணினாயே? ஆனால் நீ அந்த ரூபாயையும் கொடாமல் என்னையும் மறந்து எங்கே போய்விட்டாய்; பின்பு நான் என் தாய்வீட்டிலே வந்திருந்து இத்தனைநாள் உனக்காகக் காத்திருந்தேன்; நீ இப்படி என்னைத் துன்பப்படுத்தலாமா' என்றாள்.

அதைக்கேட்டு அந்த வில்லி, இதென்ன, நாம் இப்போது கனவு காண்கிறோமா என்னவென்று திகைத்து நின்றான். அதற்குள் அந்த வேசியின் பந்துக்களெல்லாம் வந்து அவனைச் சூழ்ந்துகொண்டு

அவள் சொல்வது மெய்தானென்றார்கள். அதனால் அவர்கள் சற்றே கலகப்பட்டு அதைத் தீர்த்துக்கொள்ளும்படி நியாயாதிபதியினிடம் சென்றார்கள். அதைத் தீர்க்க வழிதெரியாமல் அந்த நியாயாதிபதி அவர்களை நேராய் அரசனிடத்திற்கே அனுப்பினான். அரசனிடம் போய் வில்லி, ஐயா! நானொரு எளிய காட்டுமனிதன்; இவர்கள் என்னை வீணாய்ப்பிடித்து வருத்துகிறார்களென்ன, வேசி, இல்லை, இவன் நல்ல தனவான்; என்னைக் கலியாணஞ்செய்துகொண்டு அதற்காக எனக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பதாகச் சொன்னான். இப்போ நீ யாரோ எனக்குத் தெரியாதென்கிறான். அது கிடக்கட்டும், முன் சொன்னபடி ஆயிரம் ரூபாயையாவது கொடுத்துவிட்டால் நான் அவ்வளவோடு போய்விடுகிறேனென்றதற்கு, வில்லி, என்னிடத்தில் இப்போது ஆயிரம் ரூபாயிருந்தால் நான் அதை இவளுக்குச் சந்தோஷமாய்க் கொடுத்துவிடுவேன்; நான் அன்றாடம் கட்டைவிற்று இரண்டணா சம்பாதித்து ஜீவனம் செய்பவனாயிற்றே என்றான். இந்த வியாச்சியம் எப்படி முடிகிறதோ பார்க்கவேண்டுமென்று அப்பட்டணத்து ஜனங்களெல்லாம் வந்து வேடிக்கைபார்க்கக் காத்திருந்தார்கள்.

அரசன் அதை இன்னவிதமாய்த் தீர்மானிக்கிறதென்று தெரியாமல், இந்தப் பட்டணத்தில் ஒரு வர்த்தகனிடத்தில் சிறந்த கிளியொன்று இருக்கிறதாய்க் கேள்வி; அந்தக் கிளியின் சாமர்த்தியம் எவர்க்குமில்லை என்கிறார்கள்; அந்தக் கிளியை இங்கே அழைப்பித்து அதைக் கொண்டுதான் இதைத் தீர்மானிக்கவேண்டுமென்றான். அப்படியே அந்தக் கிளியை அழைப்பித்து ராஜாசனத்தில் உட்காரவைத்து அந்த வியவகாரத்தை விசாரித்துத் தீர்க்கும்படி சொன்னார்கள்.

சிங்காசனத்தில் உட்கார்ந்ததும் கிளி முதலில் வில்லியைப் பார்த்து, உன் கதை என்னவென்று கேட்டது. அதற்கு அவன் சொன்னதாவது: ஐயா, நான் நடந்ததைச் சத்தியமாய்ச் சொல்லுகிறேன்; நான் ஒரு எளிய காட்டுமனிதன்; தினந்தோறும் கட்டைவிற்று ஜீவிப்பவன்; இரண்டணாவுக்குமேல் ஒருநாளும் கூலி எனக்குக் கிடைத்ததில்லை. இப்படியிருக்க, ஒருநாள் தூக்கத்தில், நான் மிகுந்த செல்வவானாய்ப்போனதாகவும், இந்தச் சீமாட்டியைக் கலியாணஞ் செய்துகொண்டதாகவும், அதற்காக இவளுக்கு ஆயிரம்

ரூபாய் வெகுமதி கொடுத்ததாகவும் கனவுகண்டேன். அதென்ன பேய்க்கனவோ எனக்குத் தெரியவில்லையென்றான்.

அதைக்கேட்டுக் கிளி, போதும்போதுமென்று அவனை நிறுத்தி, ஓ ஆட்டக்காரி! உன் கதை என்னவென்றது. அவள் அவன்மேல் என்னவிதமாய்க் குற்றஞ்சார்த்தலாமோ அப்படிச் சொன்னாள். அவள் சொல்லிமுடித்ததும் கிளி அவளைப்பார்த்து, நல்லது; உன் கணவனுடைய வீடெங்கே? அவன் எவ்விடத்திற்கு உன்னைக் கொண்டுபோனான் என்று கேட்க, அவள் வெகுதூரத்துக்கப்பால் நடுக்காட்டிலே இருக்கிறதென்றாள். அதன்மேல், உனக்குக் கலியாணம் நடந்ததெப்போ? நீ அங்கே போயிருந்ததெப்போ? என்று கேட்க, அவள் ஏதோ ஒரு காலத்தைக்குறித்துச் சொன்னாள். அதைக் கேட்டுக் கிளி வெகுநாளாய் அப்பட்டணத்திலேயே நிலையாயிருந்த சில யோக்கியர்களை அழைத்துச் சாட்சிகேட்க, அவர்கள், இவள் சொல்லுகிறகாலத்தில் இவள் இந்தப் பட்டணத்திலேதான் இருந்தாள்; எங்களுக்கு நன்றாய்த் தெரியும் என்று உறுதியாய்ச் சொன்னார்கள். அதைக்கேட்டுக் கிளி வேசியைப் பார்த்து, நீ யாவரையும் ஒருமிக்க மோசஞ்செய்யப் பார்த்தாயல்லவா? சொல்லுகிறவள் சொன்னாலும் கேட்கிறவர்களுக்கு மதியிராதா? நீ இவ்வளவு சம்பத்துடன் தாய் வீட்டில் வாழ்வதை விட்டு, எங்கேயோ நடுக்காட்டில் ஒரு வேடன் வீட்டிலே போயிருந்தாயென்றால், அதை யார்தான் நம்பக்கூடும்? உனக்கும் இவனுக்கும் சம்பந்தமில்லை போ என்றது.

என்னசொல்லியும் கேளாமல் அவள் ஆயிரம் ரூபாய் தனக்கு அவசியம் சேரவேண்டுமென்று நிர்ப்பந்தஞ்செய்யவே, அந்தக் கிளி ஆயிரம் ரூபாய் கொண்டுவந்து ஒரு புட்டியில் போட்டு வாயை நன்றாய் அடைத்து முத்திரைபோட்டுவிட்டு, அதை அவள் கையிற் கொடுத்து, இந்தப் புட்டியை உடையாமலும் வாய்ப்புறத்தைத் திறவாமலும் இதற்குள் இருக்கிற ரூபாயை எடுத்துக்கொள் என்றது. அதுகண்டு அவள் அதெப்படி ஆகுமென, கிளி, ஒருநாளும் பணத்தைக் கண்ணாலே பாராத பேதைமனிதனிடத்தினின்றும் ஆயிரம் ரூபாய் மாத்திரம் எப்படிக்கிடைக்கும்? அதுவுங் கூடாததுதான்; இவனை விடுதலைசெய்தோம்; வேசிகள் பெருந் திருடர்களென்றும், பொய் மோசம் முதலியவைகளுக்கு அணுவளவும் அஞ்சுகிறவர்களல்லரென்றும் உலகமெங்கும் பிரசித்தமல்லவா? வேண்டுமானால்

பணங் கொழுத்துத் திரிகிறவர்களண்டை போய் உன் கொழுப்பைக் காட்டு; ஏழைகளை வருத்தாதே என்றது.

அந்தத் தீர்மானத்தைக் கேட்டு, இப்படிப்பட்ட சாமர்த்தியமுள்ள கிளியை யாராவது இதுவரையில் கண்டதுண்டோவென்று சொல்லி அனைவரும் ஆச்சரியப்பட்டார்கள். அந்த வேசிமட்டும் அதிக கோபங்கொண்டு, ஆகட்டும் மதிகெட்ட கிளியே! வெகுசீக்கிரத்திலே நான் உன்னைக் கைவசப்படுத்தி உன் தலையைக் கடித்துத் தின்னுவிட்டால் நான் வேசியல்ல பார் என்று சொல்ல, அதைக் கேட்டுக் கிளி, நீ உன் கையிலானதைப் பார்; நான் உனக்கும் தப்பிப்பிழைத்து உன்னைத் தெருவிலேகூடப் பிச்சையெடுப்பதற்கு உதவாதவளாக்கி, நீயே உன் வீடுமுதலிய எல்லாவற்றையும் விற்று, அதனுல் உண்டான துக்கத்தாலும் வெறுப்பாலும் கடைசியில் நீயே உன்னுயிரையும் மாய்த்துக்கொள்ளும்படி நான் உன்னைச் செய்யாமற்போனுல் நான் யார் பார் என்று சொல்லிற்று.

யாருடைய வார்த்தை மெய்யாகிறதோ பார்ப்போமென்று சொல்லிவிட்டு அந்த வேசி வீட்டுக்குப் போய்விட்டாள். அந்த வர்த்தகன் தன் கிளியை எடுத்துக்கொண்டுபோய்க் கிரமப்படியே தன் கடையிலே சேர்த்தான்; சிலநாள்வரையில் எல்லாம் சரியாகவே நடந்து வந்தது.

இப்படியிருக்க, அந்த வர்த்தகனுடைய மூத்தமகனுக்குக் கலியாணம் ஒன்று நேரிட்டது, கலியாணம் வெகு விசேஷமாய் நடக்கிறபோது பாட்டுக் கச்சேரி வைக்கும்படியாக வர்த்தகன் அப்பட்டணத்துப் பெரியதாசியை வரவழைத்தான். அவளுடைய ஆட்டம் பாட்டு முதலியவைகளைப் பார்த்து, அதிசயப்படாதவர்களில்லை. வர்த்தகனும் அதிக சந்தோஷப்பட்டு, உனக்கு வெகுமதியாக என்னிடத்திலிருக்கிற பொருள்களுள் எதை வேண்டுமானுலும் கேள், கொடுக்கிறேனென்று வாக்குத்தத்தம் செய்தான். அவள் நமக்கு இது நல்ல தருணம் வாய்த்ததென்று அகங்களித்து, ஐயா! எனக்கு வேறொன்றும் வேண்டாம்; உங்கள் கடையிலிருக்கிற கிளியைமாத்திரம் கொடுத்துவிடுங்கள், போதும்; அதுதவிர வேறெது கொடுத்தாலும் எனக்கு வேண்டுவதில்லை என்முள்.

தன் அருமைக்கிளியை அவள் வெகுமதியாகக் கேட்பாளென்று வர்த்தகன் கனவிலும் நினைக்கவில்லை. அவள் அந்தக் கிளியைக்

கேட்டபோது அவனுக்கு உண்டான துக்கத்தை என்னென்று சொல்லலாம்! அந்தக் கிளியைக் கொடுப்பதைவிடத் தன் உயிரைக்கொடுத்தாலும் கொடுத்துவிடலாமென்று நினைத்தான். ஆயினும் தான் சொன்னசொல் தவறக்கூடாதென்று விசனப்பட்டுக்கொண்டே கிளியைக் கொண்டுவரப்போனான். அவனுடைய துக்கத்தைப் பார்த்துக் கிளி, ஐயா நீங்கள் துக்கிக்கவேண்டாம்; அவள் கேட்கிறபடியே கொடுங்கள்; நான் என்னைப் பத்திரமாய்க் காத்துக்கொள்ள மாட்டுவேன் என்று சொல்லிற்று.

அப்படியே அந்த வர்த்தகன் தன் அருமைக்கிளியை வேசி கையில் கொடுத்துவிட்டான். அவள் அதை வாங்கிக்கொண்டு வீட்டுக்குப் போனதும் தன் சமையற்காரியை அழைத்து, இன்றையதினம் சாப்பாட்டுக்கு இந்தக் கிளியையும் சித்தப்படுத்தவேண்டும், உடனே இதன் தலையைமட்டும் பக்குவப்படுத்திக் கொண்டுவா; அதைத் தின்ன என் நாக்குப் பதைக்கிறதென்று சொல்ல, அப்படியே அந்த வேலைக்காரி கிளியை வாங்கி மடப்பள்ளிக்குக் கொண்டுபோய் அதின் இறகுகளைப் பிய்த்தாள். ஐந்தாறு இறகுகளைப் பிய்ப்பதற்குள்ளேயே அந்தக் கிளி செத்துப்போனது போலத் தலைதொய்ந்து கீழே விழுந்தது. அது கண்டு அவள் உண்மையாகவே அந்தக் கிளி செத்ததென்று நினைத்து மடப்பள்ளி ஜலதாரையண்டை அதைப் போட்டுவிட்டுத் தண்ணீர் கொண்டுவரப்போனாள். அத்தருணங்கண்டு அந்தக் கிளி வெகு சீக்கிரமாய் அந்த ஜலதாரைக்குள் புகுந்துகொண்டது.

தண்ணீருக்குப்போனவள் திரும்பிவந்து பார்த்துக் கிளியைக் காணமல், ஐயோ! நான் என்னசெய்வேன்! யஜமானிக்கு நான் என்ன பதில்சொல்லுகிறது? தண்ணீருக்குப் போய்வருவதற்குள் அந்தக் கிளி எங்கேயோ போய்விட்டதே என்று சொல்ல, அதைக் கேட்டு, மற்றொரு தாதி, அதற்கு நாம் என்னசெய்யலாம்; தேடிப் பார்ப்போமென்றால், அந்தக் கிளிக்கு உயிர்போய்விட்டபடியால் அது தானய் எங்கும் பறந்துபோயிருக்கமாட்டாது; பூனைதான் தூக்கிக்கொண்டு போயிருக்கும்; ஆனாலும் பயமில்லை; அதற்குப் பதிலாய் ஒரு கோழிக்குஞ்சின் தலையை அவளுக்குச் சமைத்துப் போட்டு விடலாமென்றாள்.

அப்படியே அவர்கள் ஒரு கோழிக்குஞ்சைப் பிடித்துப் பக்குவப்படுத்தி யஜமானியைச் சாப்பாட்டுக்கு அழைத்தார்கள். அவள்

அதைத் தின்னும்போது, ஆ, துஷ்டக்கிளியே! உன் ஆயுள் இன்றோடு முடிந்ததா! என்னைக் குடியைக் கெடுக்கும்படி என்னென்னவோ சூதுகளெல்லாம் நினைத்த மூளை இதல்லவா! நான் சொன்னதற்கெல்லாம் எதிராய்ப் பேசினது இந்த நாக்கல்லவா! என்னை வெருட்டிச்சொன்ன சொற்களெல்லாம் வந்தவழி இந்தக் கழுத்தல்லவா! இப்போது யாருடைய பேச்சு உண்மையாயிற்று என்று இப்படிச் சொல்லிச் சந்தோஷித்துக்கொண்டே அந்தக் கோழித் தலையைத் தின்றாள்.

ஜலதாரையிற் புகுந்துகொண்டிருந்த விக்கிரமராஜக்கிளி இந்தப் பேச்சுகளைக்கேட்டுத் திரும்பவும் வந்து அவள் தன்னைப் பிடித்துக் கொள்வாளோ என்னவோவென்று திகிற்பட்டது; இறகுகளெல்லாம் பிய்ந்துபோய்விட்டதனால் பறந்துபோகக்கூடவில்லை. அந்த ஜலதாரையின் வழியாய்க் கழுவப்பட்டு வருகிறவற்றைத் தின்றுகொண்டு சிலநாள் அந்தக்கிளி அங்கேயே இருந்தது. அங்கிருக்கும்போது கொஞ்சம் கொஞ்சமாய் தன் சிறிய இறகுகளெல்லாம் பெரிதாக வளர, அவை பூரணமாய் வளர்ந்ததும் கிளி அவ்விடம்விட்டுப் பறந்தோடி அவ்வூரில் தனிப்புறமாயிருந்த ஒரு கோயிலில் சுவாமியின் பின்புறத்திலேபோய் உட்கார்ந்திருந்தது.

இது இப்படியிருக்க, விக்கிரமராஜனைக் கொல்ல நினைத்த வேசியானவள், நமக்குச் சாகிறகாலம் சமீபித்ததே; எப்படிச் செத்துப் போகிறதென்று பயந்து சிலநாளாய் அந்தக் கோவிலுக்குப் போய்த் தான் சரீரத்தோடு மோட்சத்திற்குப் போகும்படிக் கிருபைசெய்ய வேண்டுமென்று சுவாமியைப் பிரார்த்தித்துக்கொண்டிருந்தாள். அந்த வழக்கப்படியே அன்றையதினமும் அவள் அந்தக் கோயிலுக்குப் போய், சுவாமி! என்னைச் சரீரத்தோடுமட்டும் மோட்சத்திற்குப் போம்படி அநுக்கிரகம் செய்யுங்கள்; அதற்குப் பதிலாக எந்தக் கைங்கரியம் வேண்டுமானாலும் செய்கிறேன் என்றாள்.

சுவாமியின் பின்புறத்தில் உட்கார்ந்திருந்த விக்கிரமராஜக் கிளி அதைக்கேட்டு, குழந்தாய்! உன் மனவுறுதியைப்பார்த்து எனக்குச் சந்தோஷமாயிற்று. நீ கேட்கிறபடியே ஆகட்டும்; ஆனால் நீ செய்ய வேண்டுவது ஒன்று; இவ்வுலகவாழ்க்கையில் உனக்கு இனி விருப்பமில்லையாதலால், அதற்கு அறிகுறியாய், உன் ஆஸ்திமுழுமையும் விற்று ஏழைகளுக்குக் கொடுத்துவிடு; வேண்டியபொருள் கொடுத்து

உன் சேவகர்கள் எல்லோரையும் நீக்கிவிட்டுத் தனியே நீ இங்கு வருவாயானால் அப்போதுதான் மோட்சத்திற்குப்போக யோக்கியதை உண்டாகுமென்றது.

இது சுவாமிதான் சொன்னதென்று அவள் நினைத்தாள். விக்கிரமராஜன் முன்னே வெருட்டிச்சொன்னது அப்போது அவளுக்கு நினைவில்லை. அதனால் அவள் உடனே வீட்டுக்குப்போய் எல்லாவற்றையும் விற்றுத் தானஞ்செய்துவிட்டுக் கோயிலுக்குப் போனாள். போகும்போது தனக்கு நடக்கப்போகிற பெருமையை யாவரோடும் சொல்லிக்கொண்டே போனாள். அதற்குள் அந்த வேசி சரீரத்தோடு அன்றையதினம் மோட்சத்திற்குப் போகப்போகிறாளென்கிற செய்தி நானாதேசங்களிலும் பரவ, அங்கங்குள்ள ராஜாக்கள் பிரபுக்கள் முதலிய யாவரும் வந்து அந்த அதிசயத்தைப் பார்க்கக் கூட்டம் கூடிப்போனார்கள். இப்படிப்பட்ட ஜனக்கூட்டத்தின் நடுவே அந்த வேசிபோய் நின்றபோது, சரேலென்று விக்கிரமராஜக் கிளி பறந்துவந்து வேசியின் தலைக்குநேராய் நின்று, ஓ சீமாட்டி! நான் சொன்னபடி செய்து முடித்தாயா? முன்னே கிளி சொன்ன பேச்சை மறந்துபோனாயே? கூண்டோடு கைலாசம் போகவேண்டுமோ என்றது.

அதைக்கேட்டு வேசி, அந்தக் குரலினால் அது முன் தன்னை வெருட்டின கிளிதானென்று தெரிந்துகொண்டு, பெருங்கோபத்துடன் அக்கும்பலின் நடுவே விழுந்துகொண்டுபோய்த் தெய்வத்தினெதிரே சாஷ்டாங்கமாய் தரையில் விழுந்து, ஓ, கருணைக்கடலே! நீ கட்டளையிட்டபடியே நான் எல்லாவற்றையும் செய்துவந்தேனே! நீ வாக்குக்கொடுத்தபடியே என்னை மோட்சத்திற்குக் கொண்டு போக மாட்டாயா என்றாள். அதற்கு யாதொரு உத்தரமும் உண்டாகவில்லை. அதனால் அவள் வெட்கமும் ரோஷமும் அதிகமாகித் தன் விதியைத் தானே வெறுத்து, அங்கிருந்த பெரிய பாறையொன்றில் தலையை முட்டிக்கொண்டு கீழே விழுந்து இறந்து போனாள்.

இதற்குள் விக்கிரமராஜன் கிளிவேஷம் பூண்டு பட்டணம் விட்டு வந்து இரண்டு வருஷமாய்விட்டது. இதென்ன, இன்னும் ராஜாவந்து சேரவில்லையேயென்று அவனைத் தேடும்படி பட்டி ஆறு மாதம் முன்னமே புறப்பட்டுத் தேசாதேசமும் தேடிக்கொண்டிருந்

தான்; ராஜன் எங்கும் அகப்படவில்லை. ஆயினும் தற்செயலாய் இந்த வேசி கூண்டோடு கைலாசம் போகப்போகிறாளென்று கேள்விப்பட்டு அந்த அதிசயத்தைப்பார்க்க அந்த மந்திரியும் அவ்விடம் வந்துசேர்ந்து அந்தக் கிளிசொன்ன வார்த்தைகளைக்கேட்டு அவனே விக்கிரமராஜனென்று தெரிந்துகொண்டான். அப்போது ராஜாவும் மந்திரியைப் பார்த்து அவன் தோளிலே போய் உட்கார, பட்டி அவனைப் பிடித்துக்கொண்டு தன் பட்டணத்துக்குப் போய்விட்டான்.

இவ்வளவு நிறைவேறினதும் ஒரு பெரிய காரியமன்று; இனி மேலிருக்கிற சங்கடத்தைப் பாருங்கள்; விக்கிரமராஜனுடைய உயிர் கிளியின் சரீரத்திலிருக்கிறது; கம்மாளனுடைய உயிர் ராஜாவின் சரீரத்திலிருக்கிறது. சுயசரீரத்தில் அரசனுக்கு இடமுண்டாவதெப்படி? கம்மாளப்பையல் அதை விட்டுத் தன் சரீரத்திற்குப் போவதற்கில்லை; அவன் சரீரம் முன்னமே அழிந்துபோய்விட்டதே! இந்தச் சங்கடத்தைத் தீர்க்கிறவழி இன்னதென்று தெரியாமல் மந்திரி நல்லகாலம் எப்போது வருமோவென்று காத்துக்கொண்டிருந்தான்.

அந்த ராஜவேஷக்காரனும் மந்திரியும் சண்டைக்காக ஒவ்வொரு ஆட்டுக்கடா வளர்த்துவைத்திருந்தார்கள். ஒருநாள் அந்த வேஷராஜன் மந்திரியைப்பார்த்து, இன்றையதினம் நம்முடைய ஆடுகளைச் சண்டைக்குவிட்டு, யாருடைய ஆட்டுக்கு வலிமை அதிகமோ பார்ப்போமென, அதற்கு மந்திரியும் சம்மதிக்கவே அப்படியே செய்தார்கள். ஆயினும் அந்த ராஜாவின் ஆட்டுக்கும் மந்திரியின் ஆட்டுக்கும் அதிக வித்தியாசமுண்டு. மந்திரியின் ஆடு மிகவும் பலிஷ்டமாயிருந்தது.

அந்த இரண்டு ஆடுகளும் அதிக ரோஷமாய்ச் சண்டைசெய்கிறபோது அந்தத் திருட்டுராஜன் தன் ஆடு கொஞ்சம் சளைத்ததென்று கண்டு தான் ராஜாவின் சரீரத்தைவிட்டு அந்த ஆட்டின் சரீரத்திற் புகுந்துகொண்டு தானே சண்டைசெய்ய ஆரம்பித்தான்.

அந்தத் தருணங்கண்டு கூண்டிலே கிளியாய் உட்கார்ந்திருந்த விக்கிரமராஜன் தன் சரீரத்திலே புகுந்துகொண்டான். ஆட்டுச் சண்டையில் பட்டியினுடைய ஆடு திருட்டுராஜாவினுடைய ஆட்டை இடித்துக் கீழே தள்ளிற்று. அத்தருணத்தில் மந்திரி கத்தியை

எடுத்து அதன் கழுத்தை வெட்டிவிட்டான். அத்தோடு ஆட்டின் உயிர்மாத்திரமேயன்றி கம்மாளனுடைய உயிரும் போய்விட்டது.

இவ்வளவுகாலம் கழித்தாவது ராஜாவந்து சேர்ந்தாரேயென்று இராணியான சண்பகவல்லி முதலிய யாவரும் பேரானந்தமடைந்தார்கள். இராணி அவனைக் கண்டு ஆனந்தக்கண்ணீர்பெருக்கி, இப்படி ஒருபோதும் இனிமேல் ஓடிப்போகக்கூடாதென்று வேண்டிக்கொள்ள அவனும் அப்படியே ஆகட்டுமென்று அங்கீகரித்திருந்தான்.

சீமைசுற்றியே வழக்கமாய்ப் போனதனால், தேசசஞ்சாரத்திலேயே அதிக ருசி உண்டாகி, ராஜாவாகப் பட்டணத்திலேயே உட்கார்ந்திருக்க **விக்கிரமராஜனுக்குச்** சிறிதும் மனம்வரவில்லை. அதனால் அவன் தன் சரீரத்திற்புகுந்துகொண்டது முதல் தன் நகரத்துக்கடுத்த காடுகளிலே தனியாய்ச்சுற்றிப் பொழுது போக்கிக்கொண்டிருந்தான். இப்படியிருக்க ஒருநாள் வெயில் அதிக உக்கிரமாயிருந்ததனால், காட்டுக்குப்போன **விக்கிரமராஜன்** களைத்துத் திரும்பி வீட்டுக்கு வரமாட்டாமல், அங்கேயே ஒரு பெரிய பாறையோரமாய் அதின் நிழலிலே படுத்தான். நடந்துவந்த அலுப்பினால் அவன் சற்றே வாய்திறந்து தூங்குகிறதருணத்தில், அண்டையிலிருந்த சிறிய பாம்பொன்று வெயிலின் கொடுமை தாளமாட்டாமல், இதுவும் ஒரு புற்றுதானென்று எண்ணித் திறந்திருந்த அவன் வாயிற் புகுந்து கழுத்தினுள்ளேபோய்ச் சுருட்டிக்கொண்டது.

உடனே **விக்கிரமராஜன்** விழித்துக்கொண்டு தன் வாய்க்குள்ளே பாம்பு புகுந்துகொண்டது தெரிந்து, ஓ பாம்பே! என் கழுத்தை விட்டு வெளியேவாவென்று அதைப் பலவாறு வேண்டியழைத்தான. அதைக்கேட்டு அந்தப் பாம்பு, நான் வரமாட்டேன்; தரையிலே விழுந்துகிடப்பதைவிட இங்கேயிருப்பது எனக்கு மிகவும் சவுக்கியமாயிருக்கிறதென்று சொல்லி அங்கேயேயிருந்தது. இதென்ன வாயிலே பாம்பு புகுந்துகொண்டதேயென்று **விக்கிரமராஜன்** அதே சிந்தையாய் மிகவும் ஏங்கி வேறொன்றும் தோன்றாமலிருந்தான். ஒவ்வொரு வேளையில் அந்தப் பாம்பு அவன் வாயின் வழியாய் வெளியே எட்டிப்பார்க்கும். அதைப் பிடிக்கப்போனால் உடனே உள்ளேபோய்விடும்; இப்படியே கொஞ்சக்காலம் நடந்து வந்தது.

இப்படிப்பட்ட சங்கடம் எவனுக்காவது என்றைக்காயினும் நேரிட்டதுண்டாவென்று தன் துக்கத்தை ராஜா அடிக்கடி மந்திரியோடு சொல்லித் துக்கிப்பான். அதற்கு மந்திரி, அப்பா என் உயிர்த் தோழனே! நீ ஏன் நின்றவிடத்தில் நில்லாமல் இப்படிச் சீமை சுற்றுகிறாய்; அதனாலேதானே இப்படிப்பட்ட சங்கடங்களெல்லாம் நேரிடுகின்றன. இனியாவது எங்கும் போகாமலிருப்பாயா என்று சொல்லி விசனப்படுவான். அதைக்கேட்டு ராஜா, இந்தப் பாம்பை மட்டும் யாராவது என் வாயைவிட்டு வாங்கிப்போடுவார்களானால் அதன்பிறகு நான் எங்கும் அசைகிறதில்லையென்பான். இப்படியே சிலநாள் சென்றது. அந்தப் பாம்பை ஒருவரும் வாங்கக்கூடவில்லை; அதனால் **விக்கிரமராஜன்** ஒருவிதமான பித்தம் பிடித்துப் பட்டணத்தைவிட்டு ஓடிப்போனான்.

இந்தச் சங்கதியைக் கேட்கவே மந்திரிக்கு உண்டான துக்கத்துக்கு அளவில்லை. நம்முடைய ராஜாவுக்கு ஒருவர்க்கும் இல்லாத விசேஷ சக்திகளெல்லாமிருந்தும் எதற்காயிற்று! நாம் நல்லதென்று நினைத்ததெல்லாம் நஞ்சாய்முடிந்ததே! தன் காரியங்களையும் தன் பிரஜைகளையும் சிறிதும் கவனிக்காமல், சிறையினின்றும் விடுபட்ட திருடன்போல் நம்மரசன் இப்படி ஓடிப்போகிறானே என்று அடிக்கடி சொல்லி மனங்கலங்கி நின்றான். பின்பு ராஜாவைத் தேடிப் பார்த்துவரும்படித் தூதர்களைத் துரத்தினான்; என்ன தேடியும் அவன் அகப்படவில்லை. அதனால் தானேபோய்த் தேடுகிறதென்று தீர்மானித்து ராஜாங்கத்துக் காரியங்களுக்குத் தகுந்த ஏற்பாடு செய்துவிட்டுத் தானே புறப்பட்டான்.

இதற்குள் பட்டணம்விட்டு ஓடிப்போன **விக்கிரமராஜன்** வெகு தூரம் சுற்றித்திரிந்து கடைசியாய் ஒரு பட்டணம்போய்ச் சேர்ந்து அந்த ராஜாவின் அரண்மனைவாயிலில் கூடிக்கிடந்த பேதைகளோடு பேதையாய் உட்கார்ந்திருந்தான். அந்த ராஜாவுக்குக் **குழதவல்லி** யென்று ஒரு மகளுண்டு. அந்தப் பெண்ணின் பெருமைகளைக் கேட்டு அநேகம் ராஜாக்கள் அவளைக் கலியாணம் செய்துகொள்ள விரும்பினார்கள். ஆயினும் ஒருவரையும் அவள் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தப் பெண்ணின் பிடிவாதத்தைக் கண்டு அவளுடைய தாய்தந்தையர்கள், குழந்தாய்! நீ ஏன் ஒருவரையும் வேண்டாமென்று விலக்குகிறாய்? உன்னைக் கலியாணஞ் செய்துகொள்ளவேண்டி

வருகிறவர்களுள் எத்தனையோ தனவான்களுமிருக்கிறார்கள் வல்ல வர்களுமிருக்கிறார்களே என்று கேட்டால், அதற்கு அந்தப் பெண், இவர்களையெல்லாம் நான் கலியாணஞ் செய்துகொள்ளப்போகிற தில்லை; அடிக்கடி என் கனவில் ஒரு மகாபுருஷன் வந்து தோன்று கிறான்; அவனையே நான் கணவனாக வரித்திருக்கிறேன். அவ னுக்கு விக்கிரமராஜனென்று பெயர்; அவன் வெகு தூரதேசத்தி லிருந்து வந்துகொண்டிருக்கிறான் என்பாள். அதைக்கேட்டு அவர் கள் அந்தப் பெயருள்ள ராஜன் ஒருவன் இப்பூமண்டலத்திலிருப்ப தாயே தெரியவில்லையே; ஏன் இப்படி ஒரு வீணை பித்தம்பிடித் துத் திரிகிறாய்; இந்த எண்ணத்தை விட்டுவிடு என்று சொல்லி எவ் வளவோ வேண்டுவார்கள். என்ன வேண்டியும் அவள், ஆகட்டும் ஆகட்டும், பொறுத்துப்பார்ப்போம், அப்படி ஒரு ராஜா சீக்கிரமே வருவாரென்று இப்படியே சொல்லிக்கொண்டிருந்தாள். அவள் இஷ்டப்படியே போகட்டும்; நாம் ஏன் நிர்ப்பந்திக்கவேண்டு மென்று அவர்களும் பொறுத்திருந்தார்கள்.

விக்கிரமராஜன் போய் அவர்களுடைய அரண்மனைவாயிலில் உட்கார்ந்ததும் ஒருநாள் குழகவல்லி அவனைப்பார்த்து, இதோ நான் கனவிலே கண்ட என் கணவன்; இதோ விக்கிரமராஜன் என்று கூவிச் சந்தோஷமாய்ச் சொல்ல, அதைக்கேட்டு அவளுடைய தாய், ஏதோ அவன்? பிச்சைக்காரர்கள்தானே இங்கே கூட்டமாய் இருக் கிறார்கள்? ராஜா எங்கே என்றாள். அதற்கு அந்தப் பெண் அவர் களுள் ஒருவன் விக்கிரமராஜனே யென்று உறுதியாய்ச் சொல்ல, அவனை விசாரித்துவரும்படி ஒரு சேவகனை அனுப்பினாள்.

அவனைப் போய்க் கேட்டபோது தான் விக்கிரமராஜன்தான் என்றான்; ஆயினும் அந்த ராஜாவுக்கும் இராணிக்கும் அந்தப் பேச் சில் சிறிதும் நம்பிக்கை உண்டாகவில்லை. குழகவல்லி அவனை யொழிய மற்றெவனையும் தான் கலியாணஞ் செய்துகொள்வதில்லை என்று பிடிவாதம் செய்ததைக்கண்டு, நீ இந்தப் பேதையைக் கலியா ணஞ் செய்துகொள்வாயானால், பின்பு நீயும் எங்களுக்குப் பெண் ணல்ல, நாங்களும் உனக்குப் பெற்றோரல்ல; உன் புருஷன் பின் னேயே நீ போகவேண்டுவதுதானென்றார்கள். அதுகேட்டு அந்தப் பெண் அப்படியே போய்விடுகிறேன்; நான் இவனைத்தவிர மற்றெவ னையும் கைபிடிப்பதில்லையென்றாள்.

அவள் இஷ்டப்படியே அவ்விருவருக்கும் கலியாணம் நடந்தேறிற்று. கலியாணமானவுடன் அந்தப் பெண்ணினுடைய பெற்ரோர் தாம் சொன்னபடியே வழிச்செலவுக்குமட்டும் கொஞ்சம் பொருள்கொடுத்து அவளைத் தங்கள் வீட்டைவிட்டுத் துரத்திவிட்டார்கள். விக்கிரமராஜன் இதுவரையில் தான்மாத்திரம் தனியே திரிந்ததெல்லாம் போய், இப்போது அந்தப் பெண்ணையும் கூட இழுத்துக்கொண்டு அல்லாடும்படியாயிற்று. அதனால் அவன் அப்பட்டணத்துக்குக் கொஞ்சம் தூரத்தில் ஒரு காட்டிலே சிறு குடிசையொன்று போட்டுக்கொண்டு தன் பெண்சாதியோடு கூட அங்கேயே குடிகொண்டிருந்தான்.

அப்போது அந்த ராஜகுமாரத்தி பட்ட வருத்தங்களை என்னென்று சொல்லலாம்! அவள் ஒருநாளும் வருந்தியுழையாதவள். பிறந்ததுமுதல் வெகு செல்வமாய்த் தாய்வீட்டில் இருந்தவளுக்கு இப்போது வீட்டுவேலையெல்லாம் தானே செய்துகொள்ளும்படி நேரிட்டதே! முக்கியமாய்த் தன் 'புருஷன் வாயில் பாம்பு புகுந்துகொண்டிருப்பதே அவளுக்குப் பெருஞ்சிந்தையாயிருந்தது. அதனால் அவள் எப்படியாவது அதை இழுத்து வெளியே போட வேண்டுமென்று இரவெல்லாம் விழித்துக் காத்துக்கொண்டிருந்தாள்; ஆயினும் அந்தப் பாம்பு ஒருநாளும் அவள் கையில் அகப்படவேயில்லை.

இப்படியிருக்க, ஒருநாள் இராத்திரி அவள் சிந்தித்துக்கொண்டேயிருக்கையில், இரண்டு பாம்புகள் புற்றினின்றும் வெளியே வந்து அந்தப் பெண்ணுக்கு நன்ராய்க் கேட்கும்படிப் பேசத்தொடங்கின. அதாவது: இந்தக் குடிசையிலிருப்பவர்கள் யாரென்று ஒரு பாம்பு மற்ருென்றைக் கேட்டது. அதற்கு அந்தப் பாம்பு, இவர்கள் விக்கிரமராஜனும் அவன் மனையாளான குழதவல்லியுமென்று சொல்ல, இவர்கள் இங்கே என்ன செய்கிருர்கள்? இந்த ராஜா தன் தேசத்தைவிட்டு ஏன் இவ்வளவு தூரம் வந்திருக்கிருனென்று மறுபடியும் கேட்டதற்கு, இவன் தொண்டையில் ஒரு பாம்பு புகுந்துகொண்டிருப்பதனால் இவன் மிகவும் விசனமடைந்து தன் தேசத்தினின்றும் ஓடிவந்துவிட்டான் என்றது.

ஆனல் இவன் தொண்டையிலிருந்து அந்தப் பாம்பை வெளிப்படுத்த எவராலும் ஆகாதோ என்று அது மறுபடியும் கேட்க, மற்

ெறுன்று, அது கஷ்டசாத்தியமான காரியம் ; ஏனெனில் அதற்குச் செய்யவேண்டிய செய்கை ஒருவர்க்குந் தெரியாது. அதென்ன வென்கிறுயோ? ஒருவித சீமைச் சோளங்கொட்டைகள் கொண்டு வந்து நன்ருய்ப் பொடிசெய்து தேங்காயெண்ணெயில் கரைத்துக் காய்ச்சி, இந்த ராஜாவைத் தலைகீழாய் ஒரு மரத்திலே கட்டித் தொங்கவிட்டு, அதின் புகை இவன் வாய்க்குள்ளே புகும்படிச் செய்தால், அந்தப் புகைபட்டவுடனே தொண்டைக்குள்ளிருக்கிற பாம்பு செத்துக் கீழேவிழும் என்று சொல்லிற்று.

இந்த மருந்தை நான் இதுவரையில் கேட்டதில்லையென்று மற்ெருரு பாம்புசொல்ல, அது, உனக்கு இந்த மருந்து தெரியாதா? நம்முடைய புற்றிலேயும் இதேவிதமாய் ஊதல்போடுவார்களானுல் நாமும் இறந்துபோவோம் ; பின்பு நம்முடைய புற்றுக்குள்ளிருக்கும் பொருள்களையெல்லாம் அவர்கள் இஷ்டப்படி எடுத்துக்கொண்டுபோய்விடலாம் என்றது. இப்படிக் கொஞ்சநேரம் பேசிவிட்டு அவை புற்றுக்குப் போய்விட்டன.

இந்தச் சம்பாஷணையை நன்ருய்க் கேட்டுக்கொண்டிருந்த **குழகவல்லி** அந்தப்படியே செய்யவேண்டுமென்று தீர்மானித்தாள். மறுநாள் பொழுதுவிடிந்ததும் அண்டை ஊர்களினின்றும் தனக்கு நன்ருய்த் தெரிந்தவர்களையெல்லாம் வரவழைத்து, அந்தக் கொட்டைகள் அநேகங் கொண்டுவந்து நன்ருய்ப் பொடிசெய்து ஒரு பெரிய சாலிலேபோட்டு அது நிரம்பத் தேங்காயெண்ணெய் வார்த்துக்கொண்டுவரும்படி சொன்னுள். அவர்கள் வந்து அப்படியே செய்து கொடுத்துவிட்டுப்போனுர்கள். பின்பு அவள் தன் புருஷனை ஒரு மரத்திலே தலைகீழாய்க் கட்டித் தொங்கவிட்டு அந்த எண்ணெயைக் காய்ச்சி அதன் ஆவியை அவன் வாயிலேற்றினுள். இரண்டொரு நிமிஷத்தில் அந்தப் பாம்பு மூச்சுத்திணறி இறந்துபோய்க் கீழேவிழுந்தது. அந்தச் செய்கைக்காக **விக்கிரமராஜன்** ஆச்சரியப்பட்டு, ஓ, என் அருமைப்பெண்டாட்டி! உன் சாமர்த்தியத்தை நான் என்னென்று சொல்வேன்! இவ்வுலகத்தில் ஒருவரும் செய்துமுடிக்கக்கூடாத காரியத்தை நீ நொடிப்பொழுதில் நிறைவேற்றினுயே! எனக்கு உயிருண்டாக்கினவளல்லவோ நீ என்று சொல்லி அவளைக் கொண்டாடினுன்.

பின்பு அவள் அந்த எண்ணெய்ப்பானையை முதனுள் இராத்

திரிப் பேசிக்கொண்டிருந்த பாம்பின் புற்றண்டை வைஉ அதனுவி அந்தப் புற்றினுள்ளே புகும்படிச்செய்து அங்கே பாம்பைக்கொன்று அந்த இடத்தை வெட்டிப்பார்க்கக் கட்டளையிட்டாள். அதனுள்ளே சிறந்த இரத்தினங்களும் ஆபரணங்களும் விசேஷமாய் அகப்பட்டன. அவற்றைக்கொண்டு அரசர்களுக்கு வேண்டிய நல்ல ஆடையாபரணங்களை விசேஷமாய் வரவழைத்து அவற்றை அணிந்துகொண்டு மிகுந்த திரவியத்தையும் எடுத்துக்கொண்டு தூழதவல்லி தன் கணவனோடுகூட வெகு வைபவமாய்த் தன் தந்தைவீட்டுக்குப் போனாள். அந்த ராஜா தன் பெண்ணினுடைய சாமர்த்தியத்தையும் மருமகனுடைய பெருமையையும் பார்த்து வியந்து, முன் தான் அவர்களிடத்தில் காட்டிய கொடுமைக்காக மிகவும் பச்சாத்தாபப்பட்டு அவர்களைப் பரிவுடன் தன் வீட்டுக்கு வரவழைத்தான்.

இப்படியிருக்க ஒருநாள் விக்கிரமராஜன், அந்தப் பட்டணத்தில் சிலநாளாய்ப் பிறதேசத்து மந்திரியொருவன் வந்திருப்பதாயும், அவன் பன்னிரண்டு வருஷமாய்த் தன் அரசனைத் தேடிக்கொண்டு நானுதேசங்களிலும் சுற்றுவதாயும், அங்கேயும் அவனைக் காணுமல் அவ்விடம் விட்டுப்போகச் சித்தமாயிருப்பதாயும் கேள்விப்பட்டு, அவன் யார்? நம்முடைய பட்டிதானோவென்று சந்தேகித்து அவனைப்பார்க்க ஓடினான். அவன் பட்டிதான். பட்டி ராஜாவைப் பார்த்தவுடனே, ஆநந்தப்பெருக்கால் உடம்பு பூரித்து அவனைக் கட்டியணைத்துக்கொண்டு, ஓ என் உயிர்த்தோழனே! நீ எங்களை விட்டுவந்து எத்தனைநாளாய்விட்டது! பன்னிரண்டு வருஷத்திற்கு மேலாகவில்லையா என்றான்.

விக்கிரமராஜன் பட்டியைப்பார்த்து, அவ்வளவுகாலமும் தன் வாய்ப்பாம்பு நீங்காமல் தான் வருத்தப்பட்டதும், அந்தப்பட்டணத்து அரசன் மகளைக் கலியாணஞ் செய்துகொண்டபிறகு அவளுடைய சாமர்த்தியத்தால் அந்தச் சங்கடம் நீங்கினதும், தன் தேசத்திற் போகப் பிரயாணமாயிருப்பதுமாகிய தன் கதை[illegible] சொன்னான். பின்பு அவர்கள் அந்த ராஜாவினி[illegible] பெற்றுக்கொண்டு விசேஷ சீதனங்களோடு [illegible] பட்டு வெகுநாள் வழிநடந்து சுதேசம் போ[illegible] வேளை தன் புருஷன் உயிரற்றே போ[illegible]

கொண்டிருந்த சண்பகவல்லிக்கு அவனைப் பார்த்த உண்டான சந்தோஷத்தை என்னென்று சொல்லலாம்! வல்லி தனக்கு மூத்தாளொருத்தியிருக்கிறாளென்று கேள்விப் பட்டு, அவள் தன்னைப்பார்த்து ஒருவேளை பொறாமைப்படுவாளோ என்னவோவென்று திகில்கொண்டிருந்தாள். ஆயினும் அவ்விருவரும் ஒன்றாய்ச் சேர்ந்தபோது மூத்தாள் இளையாளைப்பார்த்து, தோழி! நீ செய்த பேருதவிக்குத்தக்க கைம்மாறு நான் என்னசெய்யப்போகிறேன்? நம் மகாராஜாவின் தொண்டையிலிருந்த பாம்பைக்கொன்று அவரைக் காத்தது நீதானென்கிறார்களே என்று சொல்லி அவளை மிகவும் கொண்டாடினாள்.

அதுமுதல் விக்கிரமராஜன் தன் தேசத்திலேயே நிலையாய் நின்று, நல்லரசென்று யாவரும் மகிழ்ந்து கொண்டாடும்படி வெகு நேர்மையாய் அரசுசெலுத்திவந்தான். அவ்வரசனும் பட்டியும் தாங்கள் சிறு பிராயத்திற்கொண்ட ஸ்நேகத்திற்கு அணுவளவும் குறைவில்லாமல் ஆயுளளவும் ஒரேமாதிரியாய் ஒத்துவாழ்ந்தார்கள். இது காரணமாகவே, அண்ணன் தம்பிபோல் ஒத்துவாழுங்கள் என்கிற பழமொழிக்குப் பதிலாக அத்தேசத்தில், விக்கிரமனும் பட்டியும்போல் ஒத்துவாழுங்களென்பதே சிறந்த பழமொழியாய் வழங்கத்தலைப்பட்டது.

## 8-வது. ஏற்றத்தாழ்ச்சி அத்தனை அதிகமில்லை

ஒரு தேசத்தில் ஒரு சிற்றரசன் ஒருநாள் தன் மந்திரியைப் பார்த்து இதென்ன, என்னை அடிக்கடி குளிரும் காய்ச்சலுமாய் நோய்வந்து வருத்துகிறதே; நான் உடம்பை வெகு ஜாக்கிரதை யாகவே பாதுகாத்துவருகிறேன்; பனியிலாகட்டும் மழையிலாகட்டும் காற்றிலாகட்டும் நான் ஒருபோதும் சஞ்சரிப்பதில்லை; எப்போதும் உஷ்ணமான போர்வைகளையே போர்த்துக்கொண்டிருக்கிறேன்; ஆகாரமோ, நல்ல ஆகாரங்களையே புசித்து வருகிறேன்; எவ்வளவு ஜாக்கிரதையாய் நான் தேகத்தைப் பாதுகாத்துவந்தும் குளிரோ காய்ச்சலோ ஈளையோ இருமலோ ஏதாவது ஒன்று ஓயாமல் தொந்தரை செய்துகொண்டேயிருக்கிறது; இதென்ன துர்ப்பாக்கியமென்று கேட்டான். அதற்கு மந்திரி, மகாப்பிரபுவே! 'அளவுக்கு மிஞ்சி னல் அமுதமும் விஷமாம்' என்கிறபடி, எந்தச் செய்கையும் நாம் அளவுக்கு அதிகமாய்ச் செய்வதினல் நமக்குத் தீமையேயொழிய நன்மை யொன்றுமில்லை. ஒரு செய்கையை நாம் அளவுகடந்து செய்வதைவிடச் செய்யாமலிருப்பதே நலம்; வேண்டுமானல் இதற் குத் திருஷ்டாந்தமும் ஒன்று காட்டுகிறேன் என்முன்.

அப்படியே ஒருநாள் மந்திரி தன் சொல்லை அரசனுக்கு உண் மைப்படுத்திக் காட்டுவதற்காக அவனை அழைத்துக்கொண்டு விநோ தமாய் உலாத்திவரும்படி புலங்களுக்குச் சென்முன். சிறிதுதூரம் போகையில் வழியிலே ஆட்டிடையன் ஒருவன் இருந்தான். அந்த இடையன் எப்போதும் ஆடுகளை மேய்த்துக்கொண்டு காடுகளி லேயே சுற்றிக்கொண்டிருப்பவன்; மேலே போர்வைக்கு ஒரு கந்தற்கம்பளிதவிர வேறென்றும் கிடையாது. மழை பெய்தாலும்

வெயில் எரித்தாலும் பனிபெய்தாலும் மேலுக்கு அந்தக் கம்பளி தான்; வயிற்றுக்கு நல்ல சோறு கிடையாது. காயோகிழங்கோ அகப்பட்டதைத் தின்றுகொண்டு, கண்டதண்ணீரையும் குடித்துக் கொண்டு புலங்களிலேயே கருக்கோலைக் குடிசையிலே வசித்துக் கொண்டிருப்பவன். அவனைக்கண்டு மந்திரி ராஜாவைப்பார்த்து, இந்த எளியமனிதன் பிழைக்கிற பிழைப்பு இத்தன்மையதென்று தங்களுக்கு நன்றாய்த் தெரியுமே; இப்படி வெயிலிலும் காற்றிலும் அடிபடுவதனால் இவனுக்குச் சரீரத்தில் ஏதாவது அசவுக்கியமுண் டோவென்று இவனையே கேட்டுப்பார்க்கலாம் என்றான்.

மந்திரி சொன்னபடியே ராஜா இடையனைக் கண்டு, அப்பா! நீ இப்படி வெளியிலே திரிவதனால் உனக்கு உடம்பில் காய்ச்சல் குளிர்முதலிய தொந்தரையொன்றும் உண்டாவதில்லையா என்று கேட்க, அவன், பிரபுக்களே! தங்கள் தயவினால் எனக்கு அப்படிப் பட்டது ஒன்றும் உண்டாவதில்லை; பிறந்தநாள்முதல் நான் இப்படி யேதான் வெளிப்புறங்களில் திரிந்துகொண்டிருக்கிறேன்; வெயி லும் காற்றும் எனக்கு யாதொரு தீமையும் செய்வதில்லை; அந்தந்தக் காலத்திற்கு அதது இயற்கையாகவே இருக்கிறது என்றுசொன் னான்.

அதைக்கேட்டு ராஜா மந்திரியைப்பார்த்து, அப்பா! இது வெகு ஆச்சரியமாயிருக்கிறது! இந்த இடையன் அதிக பலசாலியாயிருக்க வேண்டும்! இவனுக்கு ஒன்றும் ஒரு தீங்கும் செய்வதில்லையே; இதென்ன அதிசயம் என்றுசொல்ல, அதையும் கண்டறிந்துபார்ப் போமென்று சொல்லி மந்திரி அந்த இடையனைக் கூடவே அரச னுடைய மாளிகைக்கு அழைத்துக்கொண்டுபோனான். அங்கே அவனைக் கொஞ்சக்காலம் வெகு ஜாக்கிரதையாக வைத்து ஆதரித்து வந்தார்கள். அவனை வீட்டைவிட்டு வெளியே சற்றும் நகரவொட் டுகிறதில்லை; காலைக்கூடத் தண்ணீரில் நனைக்கவொட்டுகிறதில்லை. இப்படியாக அவனுக்குப் பரமான்னம் முதலிய ராஜபோஜனமும் ராஜவஸ்திரங்களும் கொடுத்து ராஜபோகமாகவே உபசாரம் செய்து வந்தார்கள்.

சிலமாதங்களாகி இடையனுக்கு மிகவும் ஒடுக்கமான அறையில் வசிப்பதே நன்றாகப் பழக்கமாய்ப் போனபிறகு, ஒருநாள் மந்திரி சலவைக்கல்லினாற்செய்த ஒரு மண்டபத்தில் தரையிலே கொஞ்சம்

தண்ணீரைத் தெளிக்கச்செய்து அங்கே அந்த இடையனை வரவழைக்கக் கட்டளையிட்டான். அப்படியே ராஜாமுதலியவர்களெல்லாரும் வந்து கூடியிருக்க, இடையன் அந்த மண்டபத்திற்கு வந்தான். அவன் நாலைந்துமாதகாலமாய்க் குளிர்ச்சி யென்பதையே ஒருநாளும் அறியாதவனுதலால், அந்த இடத்தை மிதித்தவுடனே அவனுக்கு ஜலதோஷங்கண்டது, இத்தனைநாள் அவனிருந்த அந்தப்புறத்தைவிட அவ்விடம்கொஞ்சம் குளிர்ச்சியுள்ளதென்பதுதான் இதற்குக் காரணம். அன்றுமுதல் நாளுக்குநாள் குளிரும் காய்ச்சலும் அதிகமாகி எவ்விதமான வைத்தியத்திற்கும் சாத்தியப்படாமல் கடைசியாய் அவன் இறந்துபோனான்.

அந்த ஈரத்தரையை மிதித்தமாத்திரத்திலே அவன் உடம்பு நொந்துபோவான் என்று அரசன் கனவிலும் நினைக்கவில்லை. சிலநாள் கழித்து அரசன், நம்முடைய இடையன் எப்படியிருக்கிறான்; தண்ணீர்தெளித்த தரையை மிதித்ததனுலேயே ஒருவனுக்கு உடம்பில் நோய் உண்டாகுமா என்று மந்திரியைக் கேட்க, மந்திரி, ஐயோ! நான் என்னவென்று சொல்வேன்! அது கடைசியில் நான் எதிர்பார்த்திருந்ததைப்பார்க்கிலும் பொல்லாததாய் முடிந்தது. அந்த எளிய இடையன் உடனே ஜன்னிகண்டு இறந்துபோனான். முன்னே அதிக சவுக்கியமாய் நடத்தப்பட்டிருக்க, திடீரென்று அந்த நிலையை மாற்றவே உடனே அவன் இறந்துபோம்படியாயிற்று. இதனால், எப்படிப்பட்ட அபாயங்களெல்லாம் எளியவர்களை விட்டுத் தனவான்களையே சேரக்காத்திருக்கின்றனவென்று தெரிந்ததல்லவா? இப்படித்தான் இவ்வுலகத்தில் ஏற்றத்தாழ்ச்சி அத்தனை அதிகமாயிராமல் ஒருவாறு மட்டந்தட்டி யாவரும் ஒரே அளவற்ற செல்வமும் போகமும் தாம் இருக்குமளவும் விசேஷமாய் இன்பந்தருமாயினும், அடிக்கடி சரீரத்தில் அசவுக்கியமுண்டாக்கி வாழ்நாளையும் சுருக்கிவிடும். ஒன்றுமில்லாத எளியவர்கள் நல்ல தேகவலிமைபெற்று என்றும் ஒரு சீராகவாழ்வார்கள்.

# 9-வது. ஐந்துமலர் அரசி கதை

ஒருதேசத்தில் ஒரு ராஜாவுக்கு மூத்தாளும் இளையாளுமாய் இரண்டு மனைவிகளிருந்தார்கள். மூத்தாளைவிட இளையாளிடத்திலேயே அவ்வரசனுக்கு ஆசை அதிகம். ஆயினும் மூத்தாளுக்குமட்டும் ஒரு பிள்ளை பிறந்தது; இளையாளுக்கு ஒன்றுமில்லை. அந்தப் பிள்ளை இளையாள்வயிற்றில் பிறக்கவில்லை யென்பதனாலேயே அரசன் அவனைப் பகைத்து மிகவும் கொடுமையாக நடத்தினான். எப்படிப்பட்டவனுக்கும் விதிப்பயனை வெல்லக்கூடாதாகையால், அந்தப்பிள்ளை மகாராஜாவின் வயிற்றிற்பிறந்தும் பெருந்துன்பம் அனுபவிக்கும்படியாயிற்று.

தகுந்த வயது வந்தபிறகு ஒருநாள் அந்தப் பிள்ளை தன் தாயைப் பார்த்து, தாயே! இந்தத் தகப்பன் எப்போபார்த்தாலும் என்னைக் கடி கடியென்கிறார். இப்படிப்பட்ட தகப்பன் கீழே இருப்பதைவிட இன்னும் எங்கேயாவது போய் வயிறு வளர்க்கலாம்; நான் தேசாந்தரம் போய்வருகிறேன் என்றான். அதைக்கேட்டு அவள் அந்தச் செய்தியை அரசனுக்குத் தெரிவிக்க, அவன், அந்தப் பையலைப் போக வேண்டாமென்று அப்போது தடுத்தது யார்! சுகமாய்ப் போகட்டும்; ஆனால் இந்த முட்டாள் பையல் தேசாந்தரத்தில் எப்படி வயிற்றுக்குச் சோறுகண்டு தின்பானென்றுமட்டும் கொஞ்சம் கவலைப்படுகிறேன்; அவன் மனம்போனபடித் துர்வியாபாரங்களிற் செலவுசெய்ய நான் அவனுக்கு ஒரு காசுகூடக் கொடேனென்றான். அதைக் கேட்டு அவள் அவன் கருத்து இப்படிப்பட்டதென்று தன் மகனுடன் சொல்லி, தான் சிலநாளாய்ச் சேர்த்துவைத்திருந்த ஒரு வஸ்திரமூட்டையையும், ஒவ்வொரு ரொட்டிக்குள் ஒவ்வொரு மோகரா வைத்து

அநேகம் சிறு ரொட்டிகளும் கொடுத்தனுப்பினள். அவன் ரொட்டியைத் தின்னும்போது அதற்குள் மோகரா வைத்திருப்பதைக் கண்டு கொள்ளட்டும்; இப்போதே அது அவனுக்குத் தெரியவேண்டாமென்பது அவள் கருத்து.

அப்படியே அவன் தாயாரிடத்தில் செலவுபெற்றுக்கொண்டு அப்பட்டணத்தைவிட்டுச் சென்றான். அங்கிருந்து வெகுநாள் பிரயாணஞ்செய்து வெகுதூரஞ்சென்றபிறகு ஒருநாள் ஒரு பட்டணம் போய்ச் சேர்ந்து, தான் ஒரு ராஜகுமாரனென்பதை வெளியிட்டுத் தன் வரவை அரசனுக்குத் தெரிவியாமலே, யாரோ ஒரு வழிப்போக்கன்போல் ஒரு கம்மாளன் வீட்டிற்போயிறங்கினன். அவனைப் பார்த்து அந்தக் கம்மாளன், நீ யாரோ தெரியவில்லை; வேர்த்து விடாய்த்து வந்திருக்கிறாய் என்று சொல்லி அவனை நல்வரவாய் வரவழைத்து, அப்போது தான் வெகு அவசரமாய்ப் பாதக்குறடுகள் செய்துகொண்டிருந்ததனால் தானே போய் அவனுக்கு உபசாரம் பண்ணத் தீராமல், உள்ளே என் பெண்சாதியும் பெண்ணும் இருக்கிறார்கள்; அவர்கள் உனக்கு வேண்டியபடி உபசாரஞ்செய்வார்கள் போவென்றான். அப்படியே அவன் உள்ளேபோய் அந்தக் கம்மாளனுடைய மகளைக் கண்டு, அம்மா நான் ஒரு வழிப்போக்கன்; வெகு தூரம் வழிநடந்துவந்ததனால் மிகவும் இளைப்பாயும் பசியாயுமிருக்கிறது; கூடியசீக்கிரத்தில் கொஞ்சம் சோறுசமைத்துப் போடுவாயா? அதற்குக் கூலிகொடுத்துவிடுகிறேனென, அவள், அதற்கென்ன; இதோ ஒரு நொடியில் சமைத்துப் போடுகிறேன்; ஆனால் ஒன்று, நெருப்பு மூட்ட ஒரு சுள்ளிகூடக் கிடையாதே என்றாள். அதைக் கேட்ட அந்த ராஜன், நீ விறகுக்காகவா சிந்தைப்படுகிறாய்; இதைக் கொண்டு நீ இப்போது அடுப்பெரி; நாளைக்காலையில் இதற்குப் பதிலாக இதேமாதிரியாய் ஒன்று நான் செய்து தருகிறேனென்று சொல்லி, அப்போதுதான் அந்தக் கம்மாளன் புதிதாய்ச் செய்து முடித்த ஒரு ஜதை பாதக்குறட்டையெடுத்துப் பிளந்து கொடுத்து அடுப்பெரிக்கச் செய்தான்.

மறுநாள் பொழுதுவிடிந்ததும் ராஜகுமாரன் எழுந்து காட்டுக்குப்போய்க் கட்டையொன்று வெட்டிக்கொண்டுவந்து, தான் பிளந்து போட்ட பாதக்குறட்டுக்குப்பதிலாக அதைவிட மிகவும் சிறந்ததாய் ஒரு ஜதை செய்து, அதை அந்தக் கம்மாளன் விற்கவைத்திருந்த

சாமான்களோடுகூட வைத்துவிட்டான். சிறிதுநேரத்துக்கெல்லாம் அத்தேசத்து ராஜாவின் சேவகனொருவன் அரசனுக்காகப் பாதக் குறடுவாங்க அந்தக் கடைக்குவந்து அவ்விளவரசன் செய்துவைத் திருந்த புதிய ஜதையைப் பார்த்து, இதென்ன ஐயா! இத்தனை ஜதைகளிலும் இது ஒன்றுமாத்திரமே இவ்வளவு அழகாயிருக்கிறது! இதுதான் அரசனுக்கு வேண்டும்; எப்போதும் இதேமாதிரியாகவே நீ எனக்குச் செய்துகொடுக்கக் கோருகிறேனென்று சொல்லி நூறு ரூபாய் விலைகொடுத்துவிட்டு அதை வாங்கிக்கொண்டு போனான்.

அதைக் கண்டு அந்தக் கம்மாளனுக்கு மிகவும் ஆச்சரியமாயிற்று. சாதாரணமாய் அவன் செய்கிற பாதக்குறடுகளுக்கெல்லாம் ஜதை யொன்றுக்கு இரண்டுமூன்று ரூபாய்தான் கிடைக்கும். ராஜாவின் சேவகன் நூறுரூபாய் விலைமதித்துப்போன பொருள் தான் செய்த தல்லவென்றும், முதனாள்ராத்திரி தான் பார்த்தபோது அது அங்கே இல்லையென்றும் அவனுக்கு நன்றாய்த் தெரிந்தது. அதனால் அந்த அற்புதமான பொருள் தன் கடைக்கு எப்படிவந்ததென்று அதைப் பற்றி நெடுநேரம் ஆலோசித்தான். ஆலோசிக்க ஆலோசிக்க அவன் மனம் கவலைப்பட்டதேயொழிய அதன் வழியொன்றும் தெரிய வில்லை. அந்த அதிசயத்தைத் தன் பெண்சாதி பெண்களண்டை போய்ச் சொன்னபோது அவனுடைய மகள், அது நேற்றுவந்த வழிப்போக்கன் செய்துவைத்ததா யிருக்குமென்றுசொல்லி, ராத்திரி அடுப்பெரிக்கக் கட்டையில்லாமற்போனது, புதிதாய்ச் செய்து வைத்திருந்த பாதக்குறடுகளைப் பிளந்துபோட்டதுமுதலாய் நடந்த வரலாறுகளையெல்லாம் சொன்னாள்.

அதைக்கேட்டுக் கம்மாளன் மிகவும் ஆச்சரியப்பட்டு, இவன் நீறுபூத்த நெருப்பென்று தெரிந்து, இப்படிப்பட்ட வல்லவனை விட்டு விடுவதைவிடத் துர்ப்பாக்கியம் வேறென்ன! இவனே நம்மகளுக் குக் கணவனாகத்தக்கவனென்றெண்ணி அந்தக் கோரிக்கையை ராஜ குமாரனிடத்தில் வெளியிட்டான். ஆயினும் இவ்வளவுநேரத்திலும் இவன் ஒரு ராஜகுமாரனோ என்னவோவென்கிற சந்தேகங்கூட அந்தக் கம்மாளனுக்கு உண்டாகவில்லை.

அந்தக் கம்மாளப்பெண் நல்ல சவுந்தரியமும் சாமர்த்தியமும் நற்குண நற்செய்கையுமுடையவள். அவளுடைய சமையலை நளபாக மென்று சொல்லவேண்டுமேயொழிய வேறில்லை. அதனால் ராஜ

குமாரன், தன்னை மருமகனாகும்படிக் கம்மாளன் கேட்டபோது, அவனுடைய சுபாவத்தையும் பார்த்து, தன்னைவிட மேன்மைப்பட்டவர்கள்கூட இதிலும் கேடான விதிப்பயனை அனுபவிக்கிறார்களென்பதையும் தெரிந்து, அப்படியே ஆகட்டுமென்று அங்கீகரித்துத் தானும் அங்கேயேயிருந்து அவர்களுக்கு வேண்டிய பாதக்குறடுகள் செய்துகொடுத்துக்கொண்டு இருப்பதாகச் சொன்னான். அப்படியே அந்த ராஜகுமாரனுக்கும் கம்மாளன் மகளுக்கும் கலியாணம் நடந்தது.

மரத்தில் எப்படிப்பட்ட வேலைப்பாடும் செய்ய அந்த ராஜகுமாரனுக்குத் திறமையுண்டு. விற்பனைக்காகப் பாதக்குறடுகள் செய்யும்போது இடையிடையே ஒழிவுவேளைகளில் விநோதமான அடிக்கடிச் சிறிய விளையாட்டுக்கருவிகள் செய்துகொண்டிருப்பான். அப்படியே மரத்தால் ஆயிரம் கிளிகள் செய்தான். அவையெல்லாம் இயற்கையாயுண்டான கிளிகள்போலிருந்தனவேயொழிய மனிதநிர்மாணமாய்ச் சிறிதும் தோன்றவில்லை. உயிரில்லாமையொன்றுதான் குறைவு. அவைகளையெல்லாம் வெகு நேர்த்தியாய்ச் செய்தானபிறகு ஒருநாள் ராஜகுமாரன் வெகு அழகாய் வர்ணம் பூசி மெருகு கொடுத்து வெயிலில் உலரவைத்தான்.

அன்றையதினம் பொழுது போனபின்பும் அவன் அந்தக்கிளிகளை வெளிப்புறத்திலிருந்து எடுக்கவேயில்லை. இரவெல்லாம் அவை அங்கேயே இருந்தன. அன்று தற்செயலாய்ப் பார்வதியும் பரமேசுவரருமாய் ரிஷபவாகனத்தில் ஏறிக்கொண்டு ஆகாயமார்க்கமாய் உலகத்திலுள்ள விநோதங்களையெல்லாம் பார்த்துக்கொண்டு வந்தார்கள். பலவிடங்களையும் பார்த்துவிட்டு அந்த நகரத்தண்டை வந்தபோது, அங்கே வெயிலில் உலர்த்திவைத்திருந்த கிளிகளைக்கண்டு பார்வதி பரமேசுவரரைப் பார்த்து, இந்தக் கிளிகளின் அழகைப் பாருங்கள்! இவைகளுக்கு உயிரிருக்குமானால் எவ்வளவு அற்புதமாயிருக்கும்! இவைகளுக்கு நாமேன் உயிர் உண்டாக்கக்கூடாது என்றாள். அதைக்கேட்டு மகாதேவர், நாம் அப்படிச் செய்வதிற் பயனென்ன? அப்படிச் செய்தால் அது ஒரு குறும்புத்தனமாய்த் தோன்றுமேயொழிய வேறில்லையென்று சொல்ல, அவள், அப்படியல்ல; விநோதத்திற்காகவே அப்படிச் செய்துபார்க்கவேண்டும்; மரக்கிளிகள் பறக்கிறதென்றால் அதைவிட விந்தையான செய்கை வேறென்ன? அப்படிச் செய்யத் தங்களுக்கு இஷ்டமில்லையோ

வெனக் கேட்டு, உனக்கு விருப்பமிருந்தால் அப்படியே செய்கிறே னென்றுசொல்லி, அந்த ஆயிரம் கிளிகளுக்கும் பிராணப்பிரதிஷ் டைசெய்தார். உடனே அவர்களிருவரும் போய்விட்டார்கள்.

மறுநாள் விடியநேரத்தில் ராஜகுமாரன் எழுந்துவந்து தெருக் கதவைத் திறந்துபார்க்கையில் அவனுக்கு உண்டான ஆச்சரியத்தை என்னென்று சொல்லலாம்! அந்த ஆயிரம் பறவைகளும் சிறகடித் துக்கொண்டு பறப்பதும் ஓடுவதுமாய் ஆரவாரஞ் செய்துகொண் டிருந்தன.

அவற்றின் கூச்சலைக் கேட்டுக் கம்மாளன், அவன் பெண்சாதி, பெண் முதலியவர்களும் என்னவென்று எழுந்தோடிவந்து அந்த விநோதத்தைக் கண்டு அப்படியே தியங்கிநின்றார்கள். பின்பு அவ் வீட்டுக்காரி தன் மருமகனைப்பார்த்து, அப்பா நீ செய்கிற காரியம் ஒன்றைவிட ஒன்று மிகவும் அற்புதமாயிருக்கின்றது; ஆனால் ஒன்று, இந்தக் கொழுத்த கிளிகள் ஆயிரத்திற்கும் நாம் எங்கிருந்து இரைதேடிப்போடுகிறது. எங்களுடைய வரும்படி மிகவும் சொற் பம்; இவைகளையெல்லாம் வைத்திருக்கவேண்டுமென்றால் நீ தனிக் குடியாய்த்தான் இருக்கவேண்டும் என்றாள்.

அவள் சொல்லுவது நியாயந்தானென்று கண்டு, அவன் அப்ப டியே ஆகட்டுமென்று தானும் தன் பெண்சாதியுமாகத் தனியாய் ஒரு வீட்டில் அந்த ஆயிரம் கிளிகளையும் வைத்துக்கொண்டிருந்தான். அவர்கள் நிலையும் பதியுமாய் ஏற்படுமளவும் சிலநாளைக்குப் போது மானதாய் அந்தக் கம்மாளன் கொஞ்சம் சீதனங்கொடுத்தான். நாளள விலே அந்த ஆயிரங்கிளிகளும் ராஜகுமாரனுக்கு ஒரு தொல்லையா யிருப்பதைவிட்டு அதிர்ஷ்டம் மேன்மேலும் விருத்தியாவதற்கு முதற்காரணமாயின. அந்த ஆயிரம் பறவைகளும் நாள்தோறும் காலையில் எழுந்து இரைதேடப் புலங்களுக்குச் சென்று அங்கேயே பொழுதுபோமளவும் தின்றுகொண்டிருந்து மாலைவேளையில் தங் கள் மூக்கில், நெற்கதிரோ, தானியமோ, சாப்பிட உபயோகமான பொருள் எது அகப்பட்டாலும் வீட்டுக்குக் கொண்டுவரும். இப்படி அவை கொண்டுவருகிற பொருள்களே அவனுடைய செலவுக்கெல் லாம் போந்து மேலும் விசேஷமாக மீரும்; இப்படி மீந்தவற்றை யும் நாள்தோறும் தான் வேலைசெய்கிறவற்றையும் விற்றுப் பொருள் சேர்த்துச் சிலநாளில் அவன் சிறந்த தனவானாயினன்.

இப்படிக் கொஞ்சகாலம் அவன் சவுக்கியமாக அங்கேயே இருக்கையில், ஒருநாள் ராத்திரி அற்புதமான கனவொன்று கண்டான். அதாவது:— அநேகங்காதவழிக்கு அப்பால் ஏழு சமுத்திரங்களால் சூழப்பட்ட ராஜ்யமொன்று இருப்பதாகவும், அத்தேசத்து அரசனுக்கு ஐந்துமலராசி என்று ஒரு மகள் இருப்பதாகவும், அந்தப் பெண்ணின் பெயரே அத்தேசத்திற்கெல்லாம் பேராயிருப்பதாகவும், அத்தேசத்து மத்தியில் அதிக ஆழமும் விசாலமுமான ஏழு அகழ்களாலும் ஆகாயமளாவிய ஏழு மதில்களாலும் சூழப்பட்ட சிறந்த ஒரு மாளிகையில் அந்தக் கன்னிகை வசிப்பதாகவும், மலர்போல மிகவும் மனோகரமாயும் அழகாயும் இருப்பதனாலும், ஐந்து தாமரை மலர்களளவே நிறையுள்ளவளாயிருப்பதாலும் அவளுக்கு ஐந்துமலராசி என்று பெயர் வந்ததாகவும், அத்தேசத்தைச் சூழ்ந்திருக்கும் ஏழு கடல்களையும் கடந்து, தன் மாளிகையைச் சுற்றியுள்ள ஏழு மதில்களையும் அகழ்களையும் எவனொருவன் தாண்டித் தன்னிடத்திற்கு வருகிறானோ அவனையே தான் கலியாணஞ்செய்துகொள்வதாக அந்தப் பெண் பிரதிக்ஞை செய்திருப்பதாகவும் இப்படி ஒரு கனவுகண்டான். உடனே விழித்துக்கொண்டு இதென்னவென்று திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்து, இப்படிப்பட்ட கதையை இதற்கு முன் தான் என்றைக்காவது கேட்டதுண்டோவென்று நெடுநேரம் ஆலோசித்தான். அப்படிப்பட்டதாய் ஒன்றும் நினைவுவரவில்லை.

அவன் அப்படிச் சிந்தித்துக்கொண்டிருக்கையில், அவனுடைய மனையாள், எழுந்துவந்து அவனைப்பார்த்து, என்ன ஆலோசனை செய்கிறீரென்றாள். அவன் தான் கண்ட காட்சியைச்சொல்ல, அதைக் கேட்டு அவள், இந்தக் கனவு வெகு புதுமையாயிருக்கிறதே; ஆயினும் இதைப்பற்றிச் சிந்திப்பானேன். நம்முடைய பெரிய பக்ஷியைக் கேட்டால் எல்லாச் செய்தியும் தெளிவாய்த் தெரியவருமே; அந்தக் கிளி நல்ல அறிவுள்ளது; இந்தச் செய்தியும் அதற்கு நன்றாய்த் தெரிந்திருக்குமென்றாள். அவள் குறித்துச்சொன்ன கிளி நல்ல விவேகியாதலால், மாலையில் கிளிகளெல்லாம் வந்ததும் அவன் அந்தக் கிளியை அழைத்துத் தான் கண்ட கனவின் வரலாற்றைச் சொல்லி இது உண்மையாயிருக்குமாவென்று கேட்க, அது சொல்லுகின்றது:—நீ கண்டதெல்லாம் உண்மைதான்; வெகுதூரத்துக்கப்பால் ஐந்துமலராசி தேசமென்று ஒரு தேசமுண்டு. அதைச்

சுற்றி ஏழு கடலிருப்பதும் உண்மையே. ஏழு மதில்களாலும் அகழ்களாலும் சூழப்பட்ட அரணுள்ள ஒரு கோட்டைக்குள்ளேதான் அந்தப் பெண்ணரசி வசிக்கிறாள். அந்த அரண்களையெல்லாம் தாண்டிக்கொண்டு வருகிறவனையல்லாது மற்றெவனையும் தான் கலியாணஞ் செய்துகொள்வதில்லையென்று அவள் திடமான மனவுறுதி கொண்டிருக்கிறாள். அந்தப் பெண்ணின் அழகைக் கேள்விப்பட்டு அநேகர் அவளைக் கலியாணஞ்செய்துகொள்ள முயன்றார்கள். ஒருவரும் பயன்பெறவில்லை.

அத்தேசத்து அரசனுக்கும் அரசிக்கும் அந்தப் பெண்ணினிடத்தில் விருப்பம் அதிகம். நாள்தோறும் அந்தப் பெண் தாய்தந்தையர்களைப் பார்க்கப்போவாள்; அப்போது அவர்கள் அந்தப்பெண்ணை ஒரு தராசிலும் ஐந்து தாமரைமலர்களை மற்றொன்றிலும் வைத்து நிறுப்பார்கள்; அம்மலரின் எடையைவிட அவளுடைய எடை அணுவளவும் அதிகமிராது; அதனாலேயே அவளுக்கு ஐந்துமலராசி என்று பெயரிட்டார்கள் என்று அந்த வரலாற்றையெல்லாம் சொல்லிற்று.

அத்தேசத்திற்குப் போய் அவ்வழகியைப் பார்க்கவேண்டுமென்று எனக்கு அதிக அபேட்சையாயிருக்கிறது; அந்த அரண்களைக் கடந்துபோக வழிமட்டுந் தெரியவில்லையே யென்று ராஜகுமாரன் மறுபடியும் கேட்டதற்கு, அந்தப் பறவை, அதற்குத்தக்க உபாயம் ஒன்று சொல்லுகிறேன் கேள்: நானும் மற்றொரு கிளியும் ஒன்றாய்க்கூடி என்னுடைய இடதுபக்கத்து ரக்கையும் அதின் வலது பக்கத்து ரக்கையும ஒன்றின்மேலொன்றாக நன்றாய்ப் பொருந்தும்படி அவ்வளவு நெருக்கமாய் ஒரே பறவைபோல நின்று எங்கள் ஒரு புறத்து ரக்கையைமட்டும் ஆட்டிக்கொண்டு பறந்துபோகிறோம்; ஒன்றின்மேலொன்றாய் பொருந்தி நல்ல நாற்காலிபோல் அமைந்த எங்கள் ரக்கைகளின்மேல் ஏறிக்கொண்டு நீ சுகமாய் வா; ராத்திரி வேளைகளில் மட்டும் பெரிய விருட்சங்களில் தங்கிப் பகலெல்லாம் பறந்து நாங்கள் உன்னை அங்கே கொண்டு சேர்க்கிறோமென்றது. இது நல்ல உபாயந்தானென்று அவ்விளவரசன் அதை அங்கீகரித்துத் தன் பெண்சாதியண்டை வந்து, நான் அத்தேசத்திற்குப்போய் அந்த அதிசயத்தைப் பார்த்து வரலாமாவென்றான்.

அதற்கு அவள், அந்தப் பெண்ணைக் கலியாணஞ் செய்துகொள்ள உமக்கு விருப்பமிருந்தால் சுகமாய்ப் போய்வரலாம்; உயிரைமட்

டும் போக்கடித்துக்கொள்ளப்போகிறீர்! ஜாக்கிரதையாய் வந்து சேரும் என்று சொல்ல, அதைக்கேட்டு அவன் சந்தோஷமடைந்து தான் போய்வருமளவும் அவளைப் பத்திரமாய்க் காத்துக்கொள்ளும் படித் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றெட்டு கிளிகளுக்கும் எச்சரிக்கை சொல்லிவிட்டு, தன் பெண்சாதியைப்பார்த்து, நான் திரும்பி வருவேனோ மாட்டேனோவென்று நீ திகிற்படவேண்டாம்; ஐந்து மலராசி ஏற்படுத்திய பந்தயத்தை ஜயித்து நான் அவளைக் கலியாணஞ்செய்துகொண்டு சீக்கிரமே திரும்பிவருகிறேன்; கம்மாளப்பெண்ணாயினும் நீ தான் எனக்குப் பட்டமகிஷியென்று சொல்லிச் செலவுபெற்றுக்கொண்டான்.

தாம் சொன்னபடியே இரண்டு கிளிகள் ஒன்றாய்ச் சேர்ந்து தங்கள் ரக்கைகளின்மேல் அவனை ஏற்றிக்கொண்டு ஆகாயமார்க்கத்தில் வாயுவேகம் மனோவேகமாய்ப் பறந்துபோயின. இராக்காலங்களில்மட்டும் போக வழிதெரியாதாகையால் அங்கங்கே சற்றே தங்கிக்கொண்டு, அநேகநாள் வரையில் காடு மேடு மலை நதி முதலிய பலவற்றையுங் கடந்து வெகுதூரம் சென்று, கடைசியாய் ஐந்துமலராசி நாட்டைச் சூழ்ந்திருக்கும் சமுத்திரம்போய்ச் சேர்ந்தன. அந்தச் சமுத்திரத்தில் நடுவே தங்க யாதொரு திட்டுமில்லையாதலால், அங்கே மாத்திரம் இரவும் பகலும் ஒரேநெட்டாய்ச் சிலநாள் யாத்திரை செய்யும்படியாயிற்று.

அதனால் அப்பறவைகள் மிகவும் ஓய்ந்து அந்தச் சமுத்திரத்தின் அக்கரையோரமாயிருந்த ஒரு பெரிய மரத்திலேபோய்த் தங்கின. ராஜாவும் அண்டையிலிருந்த ஒரு ஊரிலேபோய்க் கொஞ்சம் இளைப்பாறும்படி நிச்சயித்து, அந்தப் பறவைகள் வசத்தில் தன் சாமான்களையெல்லாம் கொடுத்து அவற்றை அங்கேயே இருக்கச் செய்து தான்மாத்திரம் அந்த ஊருக்குப்போனான். அங்கே ஒரு தோட்டக்காரி வீட்டிலிறங்கி, அவள் கையில் ஒரு மோகரா கொடுத்துத் தனக்கு விடுதியும் உணவும் கொடுக்கும்படிக் கேட்க, அவள் அப்படியே கொடுத்து அவனை நன்றாக உபசரித்தாள்.

மறுநாள் காலையில் எழுந்து அவன் அந்தத் தோட்டக்காரியைப் பார்த்து, அம்மா! நான் வெகு தூரதேசத்திலிருந்து வந்தவன்; இத்தேசத்தின் பெயரென்ன? இப்போது இங்கே ஏதாவது அதிசயமுண்டோ என்று கேட்க, அவள், இத்தேசத்திற்கு ஐந்துமல

ராசி தேசமென்றுபெயர்; இப்போது இத்தேசத்தில் மிகவும் துக்க மான செய்தி யொன்றுண்டு: இத்தேசத்து அரசனுக்கு ஒரு மகள் இருக்கிறாள்; அவளைப்போல அழகி இப்பூமண்டலத்தில் எங்குமில்லை; அவ்வரசி மலர்போல மிகவும் மெல்லியளாயும் அழ காயுமிருப்பதுமன்றி ஐந்துமலரளவே எடையுடையவளாயிருப்ப தால் அவளுக்கு ஐந்துமலராசி என்று பெயரிடப்பட்டது. அவ ளாலேதான் இத்தேசத்திற்கும் அந்தப் பெயர் அமைந்தது. அதோ அந்தப் பட்டணத்து நடுவே ஒரு சிறு மாளிகையில் அவள் வசிக் கின்றாள். எங்களுடைய துர்ப்பாக்கியத்தால் அவள் தன் மாளிகை யைச் சுற்றியிருக்கின்ற மதில்களையும் அகழ்களையும் காலாலேயே தாவிவருகிறவனையல்லாது மற்றெவனையும் தான் கைபிடிப்பதில்லை யென்று பிடிவாதங்கொண்டிருக்கிறாள். அவள்மேல் ஆசைகொண்டு வந்து உயிரிழந்துபோன ராஜாக்களுக்குக் கணக்கில்லை. இன்னும் அவள் தன் பிடிவாதத்தை விடமாட்டேன் என்கிறாள். நாள்தப்பி னாலும் இத்தனைபேர் இன்று மாண்டார்களென்கிற துக்கச்செய்தி காதில் விழுகிறது தப்புகிறதில்லை. இந்தத் துக்கத்துக்கு என்று முடிவு உண்டாகுமோ? எங்களுடைய துன்பம் இவ்வளவுமாத் திரமேயோ? இவள் ஒருவரையும் கலியாணஞ் செய்துகொள்ளா மல் மறுப்பதனால், இந்த ராஜாவின் காலத்திற்குப்பிறகு பட்டத் துக்கு உரியவனாய் ஒருவனும் உண்டாகப்போகிறதில்லை. கீழதி காரிகளெல்லாம் தாமே அரசனாகவேண்டுமென்று கருதி ஒருவர்க் கொருவர் அடிதடிசெய்துகொண்டு கடைசியில் ராஜ்யத்தைத் தலை கீழாக்கி விடும்படியானகாலம் நேர்ந்துவிட்டதே என்று சொல்லித் துக்கித்தாள்.

அதைக்கேட்டு அந்த ராஜகுமாரன், இவ்வளவுதானே செய்தி; தாண்டுவதில் எனக்கு விசேஷமாய்த் திறமையுண்டு. உங்களரசியின் இஷ்டப்படியே நான் அவள் பந்தயத்தை ஜயித்து அவளைக் கலியா ணஞ்செய்துகொள்கிறேன் என்று சொல்ல, அந்தத் தோட்டக்காரி, சிறுவனே! அந்தக் காரியத்திற்குமட்டும் நீ துணியாதே; உனக்கு மதிமயங்கியிருக்கிறதோ! நீ சொன்னபடித்தான் சொல்லிப்போய் அநேகமாயிரம் வீரர்கள் உயிரிழந்தார்கள். அப்படிப்பட்ட மகா சூரர்களைப்பார்க்கிலும் நீ வல்லவனா? இந்த ஆசையை விட்டுவிடு; இதனால் முழுமோசமாகும் என்றாள்.

இவ்விஷயத்தை என் தோழர்களோடு ஆலோசனை செய்து பார்க்கிறேனென்று அவன் அங்கிருந்து புறப்பட்டுத் தன் கிளிகளிருந்த ஆலமரத்தண்டை வந்தான். அந்தப் பறவைகள் இவ்வளவு தூரம் தன்னைக் கொண்டுவந்ததுபோலவே அந்த அகாதமான அகழ்களையும் ஆகாயமளாவிய மதில்களையும் தாண்டி அவ்விடம் கொண்டு சேர்க்குமென்பது அவனுடைய கருத்து. அம்மரத்தண்டை போனதும் பெரிய பட்சி அவனைப் பார்த்து, நீ இங்கிருந்துபோய் இரண்டு நாளாயிற்றே; நீ போனவிடத்தில் என்னவிசேஷமென்று கேட்க, ராஜகுமாரன், ஐந்துமலரரசி இன்னும் கலியாணமில்லாமலே மதில்களாலும் அகழ்களாலும் அரண்செய்யப்பட்ட கோட்டைக்குள்ளேயே வசித்துக்கொண்டிருக்கிறாள். அவள் செய்த பிரதிக்கினையும் அப்படித்தான் இருக்கிறது; நல்லது, நீங்கள் என்னை இவ்வளவு தூரம் தூக்கிக்கொண்டுவந்தீர்களே; இந்தச் சிறிதுதூரமும் கொண்டுபோகமாட்டீர்களா என்றான்.

அதைக்கேட்டு அந்தப் பட்சி, நீ இப்போது பித்தம்பிடித்துப் பேசுகிறாயோ? அப்படியே நாங்கள் உன்னை அங்கே கொண்டுசேர்க்கிறோம்; அதனால் நீ பெறுகிற பேறென்ன? நாங்கள் உன்னைத் தூக்கிக்கொண்டுபோனால், அது நீயே காலால் தாவுவதுபோலாகுமா? காலாலேயே அவற்றையெல்லாம் கடந்துவருகிறவனையல்லவோ கலியாணஞ்செய்துகொள்ளும்படி அவள் பிரதிக்கினை செய்திருப்பது; அப்படிச் செய்யவேண்டுமென்று உனக்கு இஷ்டமிருந்தால் நீயே அவற்றைத் தாண்டிப்போக ஏன் முயலக்கூடாது; என்னென்னவோ வீணான பேச்செல்லாம் பேசுகிறாயே; நீ வாலிபத்தில் ஓடவும் குதிக்கவும் தாண்டவும் பழகினதெல்லாம் மறந்துபோயினையோ? (அவனுடைய பிறப்பு வளர்ப்பு முதற்கொண்டு அவன் சரித்திரமெல்லாம் அந்தக் கிளிகளுக்குத் தெரியும்.) கற்றவித்தையைக் காட்டத்தக்க தருணமிதுதானே என்று இப்படிப் பலவாய் அவனுக்கு நன்மைகளைத் தெரியச்சொல்லிற்று. அதற்கு அவன், நீ சொல்வது சரிதான்; அப்படியே நான் செய்துபார்க்கிறேன், நான் போய்வருமளவும் நீங்கள் இங்கேயே காத்திருங்கள் என்று சொல்லிவிட்டுப்போனான்.

அங்கிருந்து அவன் அந்தப் பட்டணத்தண்டை போகிறபோது பொழுதும்போய்விட்டது. மறுநாள் காலையிலெழுந்து அந்தக் கொ

டிய அரண்களெப்படியிருக்கிறதோ பார்ப்போமென்று அவன் அவ்விடத்திற்குச் சென்றான். அவன் நல்ல தேகவலிமையும் சுறுசுறுப்பும் உடையவனுயிருக்கவே அதைப் பார்த்தபோது சுலபமாய்த் தாவக்கூடுமென்று அவனுக்குத் தோன்றிற்று. அப்படியே எழு அகழ்களையும் மேகமண்டலத்தளவு உயர்ந்த ஆறு மதில்களையும் தாண்டினுன். ஏழாவது மதிலேத்தாவ எழும்புகிறபோது கொஞ்சம் கால்தடுக்கி அந்த மதில் நுனியில் நாட்டிய ஈட்டிகளின்மேல் விழுந்தான்; அந்த ஈட்டிகள் அவனுடம்பில் நன்றாய்ப்பாய, உடனே அவனுக்கு உயிர் போய்விட்டது.

ஐந்துமலராசியின் தாய்தந்தையர்கள் வழக்கப்படியே காலையிலெழுந்து தங்கள் மகளுடைய மாளிகையைப்போய்ப் பார்க்க, ராஜகுமாரன் தலைகீழாய் ஈட்டிநுனியிலே விழுந்துகிடக்கக் கண்டார்கள். அவர்கள் கண்கூசும்படி அவன் உடம்பு பிரகாசித்துக்கொண்டிருந்ததனுல், அது இன்னதென்று அங்கிருந்தே நிதானிக்க அவர்களாலாகவில்லை. அதனுல் ராஜா மந்திரியை அழைத்து, சிலநாளாய் இங்கே வந்து இவற்றைத் தாண்ட முயன்றவன் ஒருவனையும் காணும்; அதோ எழாவது மதில் நுனியில் ஈட்டியின்மேல் ஏதோ ஒன்று தெரிகிறதே; அதென்னவென்று கேட்க, மந்திரி, அது, இதுவரையில் வந்து உயிரைத் தோற்றவர்களைப்போல், இப்போது வந்து உயிரையிழந்த ஒரு ராஜகுமாரனே என்று சொல்லக்கேட்டு, அரசன், ஆனுல் அதைப்பார்க்கக்கூடாமல் ஏனிப்படிக் கண்கூசுகிறதென்று கேட்டான்.

அதற்கு மந்திரி, அவ்வளவு பளபளப்பான வடிவழகுள்ளவனிவன்; இதற்குமுன் வந்தவர்களுள் இவ்வளவு அழகுள்ளவன் ஒருவனுமில்லையென்று சொல்ல, ராஜா, ஐயோ! இந்தப் பெண்ணுல் எப்படிப்பட்டவர்களெல்லாம் மாண்டுபோனுர்கள்! இனிமேல் ஒருவரையும் இவளுக்காக நான் இப்படிச் சாகவொட்டுகிறதில்லை. இந்தப் பிணத்தோடுகூட இந்தப் பெண்ணையும் காட்டுக்கு ஓட்டிவிடுகிறேன் என்றான்.

உடனே அவ்வரசன் சேவகர்களையழைத்து அந்தப் பிணத்தைப் பத்திரமாய் எடுத்துக்கொண்டு வரச்செய்தான். அப்போது அந்த ராஜகுமாரனைப் பார்த்தால் சிறிதளவும் அவனுடம்பில் விகாரந்தட்ட

வேயில்லை ; உயிரோடிருப்பவனுடைய சரீரம்போலவேயிருந்தது ; ஆனால் உயிர்மாத்திரமில்லை.

அவனைப் பார்த்தவுடனே அந்த ராஜா கலகலவென்று கண்ணீர் உதிர்த்து, ஐயோ ! ஐயோ !! இப்படிப்பட்ட தைரியமும் அழகுமுள்ள பிள்ளைகூட இப்பெண்ணுக்காக உயிரை மாய்த்தானே என்று சொல்லி அழுது மிகவும் மனம்நொந்து, அந்த மதில்களையெல்லாம் இடித்துத் தள்ளி அகழ்களைத் தூர்த்துவிடும்படியாகவும், அந்த இறந்துபோன ராஜகுமாரனுக்கும் தன் மகளுக்கும் கலியாணஞ்செய்வித்து இரண்டு பல்லக்குகளில் இருவரையும் ஏற்றிக்கொண்டு கண்ணுக்கெட்டாத தூரத்தில் அவர்களைக்கொண்டு விட்டுவரும்படியாகவும் கடுங்கட்டளையிட்டு, இதனோடு இவ்வுலகத்தைப் பிடித்த சனி நீங்கட்டுமென்றான்.

அதுதெரிந்து இராணி தன் மகளிடத்திலுள்ள அன்பினால் அவளைத் துறக்க மனம்வராமல், அரசனண்டைபோய், ஒரு பிணத்தோடுகூட அருமைக்குழந்தையைத் துறந்துவிடலாமா என்று சொல்லிப் புலம்ப, அரசன், நீ சொல்வது சரிதான் ; இந்த ஒரு பெண்ணுக்காக எத்தனைபேரை நாம் கொல்லலாம் ; இப்படிப்பட்ட ராஜகுமாரனும் மாண்டுபோனானே ; இனி இவளுக்காக ஒருவரும் மாள எனக்கு இஷ்டமில்லையென்று சொல்லி, தான் செய்த கட்டளையை மாற்றவேமாட்டேனென்றான். அப்படியே இரண்டு வாகனங்கள் சித்தப்படுத்தி அவற்றில் அவ்விருவரையும் ஏற்றிக்கொண்டுபோய் வெகுதூரத்துக்கப்பால் ஒரு பெருங்காட்டிலே விட்டுவிட்டார்கள். அந்தக்காட்டிலே சுற்றுக்குப் பதின்காதவழி மனிதசஞ்சாரமே கிடையாது ; நாலாமூலையிலும் காட்டுமிருகங்களே கோரமாய்க் கூவுகின்றன. ஐயோ ! அப்படிப்பட்ட பயங்கரமானவிடத்தில் கஷ்டமென்பதையே கண்டறியாத அந்தப்பெண் தனியே பக்கத்தில் ஒரு பிணத்தையும் வைத்துக்கொண்டு என்னசெய்வாளோ !

அவர்களைத் தூக்கிக்கொண்டு வந்தவர்களும் வாகனங்களை அங்கே வைத்தவுடனே திரும்பிவிட்டார்கள் ; சிறிதுநேரத்தில் அவர்களுடைய சத்தமும் அடங்கிப்போயிற்று. அப்படியிருக்கச் சூரியனும் மேற்றிசையில் மறைகிற தருணமாயிற்று ; பகலிலேயே சூரியனொளி தெரியாமல் இரவுபோல் இருண்டு பயங்கரமாயிருக்குமென்றால், அங்கே இரவில் எப்படியிருக்கும் ! அம்மாவேளை

யில் அந்தப்பெண் தன் பல்லக்கைவிட்டு எழுந்து, நாம் இங்கே தனியாய்க்கிடப்பானேன்; நம் கணவன் பக்கத்திலேபோய் உட்கார்ந்து அவன் வடிவழகையாவது சற்றே பார்த்துக்கொண்டிருப்போம். ஏதாவது ஒரு காட்டுமிருகமாவது வந்து கொன்று நம்மையும் அவனைப்போலாக்கிவிடட்டும்; இல்லாவிட்டால் இரண்டொரு தினத்தில் பசியினாலாவது இறந்துபோகலாமென்று எண்ணி அந்த ராஜகுமாரனுடைய பல்லக்கிலேபோய் அவனண்டை உட்கார்ந்தாள். இதுவரையில் ஒருநாளும் அவள் அவனழகை நன்றாய்ப் பார்த்ததில்லையே! அவன் உயிரற்று விழுந்துகிடந்தாலும், அவன் மேனியழகும் முகத்தின் சோபையும் ஒன்றும் தோன்றாமல் அவளை மயங்கச்செய்தது. அவன் படுத்துத் தூங்குகிறவன்போலிருந்தானேயொழிய வேறில்லை. அவள் அவனைப் பார்த்து, ஐயோ! இவ்வுலகத்துக்கெல்லாம் ஒரு திலகமணிபோன்ற இப்படிப்பட்ட மகா புருஷன் எனக்காக உயிரைமாய்த்து விழுந்துகிடக்கிறானே! யானை தன் தலையில் தானே மண்ணைவாரிப் போட்டுக்கொள்வதுபோல், எனக்கு எல்லா இன்பங்களையும் விளைவிக்கவல்ல இவ்வழகனைக் கொன்றுவிட்டு அவனெதிரேவந்து நிற்கிறேனே; என் நெஞ்சுறுதியை என்னென்று சொல்லலாம்! ஓ என் அருமை நாயகனே! உன்னைப் பறிகொடுத்து நான்படுகிற பரிதாபத்தைச் சற்றே கண் திறந்து பார்க்கக்கூடாதா? ஓ என் செல்வக்கணவனே! நீ இப்போது பிழைத்திருப்பாயானால் நாமிருவரும் எவ்வளவு சந்தோஷமாக வாழலாம் என்றிப்படிப் பலவிதமாய்ப் புலம்பிக்கொண்டிருந்தாள்.

இப்படியிருக்கப் பொழுதுபோய்விட்டது; புலி சிங்கம் யானை கரடி முதலிய கொடியமிருகங்களெல்லாம் தங்கள் குகைகளைவிட்டு இரைதேடி நாற்புறமும் சுற்ற ஆரம்பித்தன. அந்த மிருகங்களெல்லாம் அவ்வரசனும் அரசியுமிருந்த வழியாயே வந்து போயினவென்றாலும், ஒன்றாவது அவர்களுக்குச் சிறிதும் தீமை செய்யத்துணியவில்லை. காட்டுமிருகங்கள்கூடக் கொடுமைசெய்யத் துணியாதபடி அவள் அவ்வளவு அழகாயிருந்தாள். அப்படியே எல்லாமிருகங்களும் வந்துபோனபின்பு, கடைசியில் விடிய நாலைந்துநாழிகைக்கு ஆணும்பெண்ணுமாய் இரண்டு நரிகள் வெகுதூரம் சுற்றி ஓய்ந்து, அந்தப் பெண் உட்கார்ந்திருக்குமிடத்துக்கருகே சற்றே இளைப்பாறும்படி வந்து உட்கார்ந்தன. உட்கார்ந்தபிறகு பெண் நரி ஆணைப்

பார்த்து, தோழனே! எனக்குக் கதைகேட்க விருப்பமாயிருக்கிறது; ஏதாவது ஒரு கதைசொல்லக் கோருகிறேன் என்றது. அது கேட்டு ஆண் நரி, நான் என்னகதை சொல்லுகிறது; நல்லது, அதோ பார், அங்கே இரண்டுபேர் இருக்கிறார்களே தெரிகிறதா என, பெண் நரி, தெரிகிறது, அவர்களைப்பற்றி என்னவென்று கேட்டதற்கு, ஆண் நரி சொல்லுகின்றது: அதோ தரையில் உட்கார்ந்திருக்கிறாளே அவள் இத்தேசத்தரசன் மகளான ஐந்துமலராசி; அந்தப் பூபல்லக்கி லிருப்பவன் யார் தெரியுமா? அவன் ஒரு மகாராஜாவினுடைய மகன்; ஆயினும் மிகுந்த துர்ப்பாக்கியத்துக்கு ஆளாயிருக்கிறான்; தகப்பன் தன்னிடத்தில் மிகவும் பகைகொண்டிருந்ததனால் அவனி டத்திலிருக்க மனமில்லாமல் பலதேசங்களிலும் சுற்றிக் கடைசியில் ஐந்துமலராசியைப்பற்றி ஒரு கனவுகண்டு, அவளைக் கலியாணஞ் செய்துகொள்ளவேண்டும் என்று இங்கே வந்தான். ஐயோ! ஏழாவது மதிலைத்தாண்ட முயலும்போது அதின்மேலே விழுந்து இறந் தான். அவன் விதிப்பயன் இப்படியாக முடிந்தது என்றது.

அதைக் கேட்டுப் பெண் நரி, ஐயோ! இதைக் கேட்கும்போதே எனக்கு மனம் வேகின்றதே; இனி இவன் பிழைப்பதற்கு யாதொரு வழியுமில்லையா என, மற்றொன்று, இல்லாமற்போகவில்லை; ஒரு வழியிருக்கிறது; அதைத் தெரிந்துகொண்டு தகுந்தபடி செய்கிறவர் ஒருவருமில்லை என்றதற்கு, பெண் நரி, அதென்னமருந்து? அதை எப்படிப் பிரயோகிக்கிறது என்று கேட்டது. இப்படி இவை பேசுவதெல்லாம் ஐந்துமலராசிக்குக் கேட்டுக்கொண்டேயிருந்தது; கடைசியில் இந்தக் கேள்விகேட்கப்பட்டபோது அதன் விடையைக் கேட்க அவள் கவனமாய்க் காத்திருந்தாள்.

ஆண் நரி சொல்லுகின்றது: அதோ ஒரு மரம் இருக்கிறது பார்த்தாயா! அதின் இலைகளைப்பறித்து அதன் ரசத்தைப் பிழிந்தெடுத்து அதை இவன் காதுகளிலும் கன்னங்களிலும் உதட்டிலும் ஈட்டி குத்தின காயத்திலும் கொஞ்சம் கொஞ்சம் பூசினால் உடனே இவன் பிழைத்தெழுந்திருப்பான் என்றது.

அதற்குள் பொழுதுவிடிந்துபோகவே அவ்விரண்டு நரிகளும் அவ்விடம் விட்டோடிப்போயின. நரி சொன்னதையெல்லாம் நன்றாய் நினைவுவைத்துக்கொண்டு ஐந்துமலராசி அந்தப்படியே செய்து பார்க்கவேண்டுமென்று உடனே எழுந்து, ஒருநாளும் தரையை

மிதித்தறியாத தன் மெல்லியபாதங்களால் கல்லும் முள்ளுமான அந்தத் தரையில் நடந்து அம்மரத்தண்டைபோய் அதின் இலைகளைக் கொண்டுவந்து, அதைத் தன் செந்தாமரைக் கைகளால் கசக்கிப் பிழியமாளாமல், ஒரு பாறையின்மேல்வைத்து நன்றாய் இடித்துத் தன் பட்டாடையில் வைத்து அவன் காதுமுதலிய இடங்களில் அதன் சாற்றைப் பிழிந்தாள்; பிழிந்தவுடனே அதன் வேகம் நன்றாய் உள்ளே உறைக்க, அவன் தூங்கியெழுந்தவன்போல எழுந்து உட்கார்ந்து, நாலுபக்கமும் சுற்றிப்பார்த்து, தேவகன்னிகைபோன்ற ஒரு பெண்மணியும் தானுமாய்ப் பயங்கரமான பெருங்காட்டின் நடுவே நிற்பதுகண்டு, இதென்ன அதிசயமென்று பிரமித்து நின்றான்.

அப்போது அவ்வரசனும் அரசியுமாகிய இருவருள் எவருக்கு உண்டான ஆச்சரியம் அதிகமோ அதைமட்டும் சொல்ல ஒருவராலுமாகாது. இந்த மருந்து எவ்வளவு சீக்கிரத்தில் பிடித்தது பார்த்தாயாவென்று அவ்வரசி அதிசயித்தாள். அவ்வரசன் எழுந்து உட்கார்ந்து அப்பெண்கள்நாயகத்தை நேராய்க் கண்ணாலே பார்த்துக் கொண்டிருந்தும், இதென்ன, ஒருவேளை கனவுதானோவென்று மயங்கிநின்றான். அவன் செத்துப் பிணமாய் வீழ்ந்துகிடந்தபோதே அவ்வளவு அழகனாயிருந்தானென்றால், இப்போது அவனழகைப் பற்றிக் கேட்கவேண்டுவதென்ன! சுறுசுறுப்பும் சாமர்த்தியமும் தேகவலிமையும் தைரியமும் அவனிடத்தில் குடிகொண்டிருந்தன. அந்த ராஜன் தன் எதிரே நின்றவளுடைய சவுந்தரியத்தைக்கண்டு, இப்படிப்பட்ட அழகிகூட உலகத்தில் ஒருத்தியுண்டோ; இவள் யார்? நாம் இதுவரையில் கனவில்கண்ட வடிவமாகவே யிருக்கிறாளே; இதுவும் ஒரு கனவுதானோ; அல்லது இவள் உண்மையாய் அவ்வரசிதானோ? என்றிப்படிப் பலவாறு சிந்தித்து, இது இப்படியே இராமல் மாறிப்போகுமோ என்னவோவென்று திகிற்பட்டு, உட்கார்ந்தவிடத்தைவிட்டு நகரக்கூடப் பயந்துநின்றான்.

அவன் இப்படிப் பலவிதமாய்க் கவலைகொண்டிருக்கையில் ஐந்துமலராசி அவனைப்பார்த்து, நீ இப்போது நேர்ந்திருக்கும் நிலையைக் கண்டு இதென்னவென்று பிரமித்து நிற்கிறாய்; நீ என்னை அறியமாட்டாய்; நான் உன் மனையாளான ஐந்துமலராசி என்றாள். அது கேட்டு அவன் பேரானந்தமடைந்து, ஓ என் அருமைச்சீமாட்டி,

நீதானு! உன்னைக் கண்டுபிடிக்க நான் எவ்வளவு வருத்தப்பட்டே னென, அவள், ஆம், அது எனக்கு நன்ருய்த்தெரியும்; எனக்காக நீ முதலில் உயிரைக்கூட மாய்த்துக்கொண்டாயே; ஆயினும் நான் உன்னை மறுபடியும் பிழைப்பித்தேன். போனதுபோகட்டும், இனி அதைச்சொல்லி ஆகவேண்டுவதென்ன; என் தந்தைவீட்டுக்குப் போவோம் வா; அவர்கள் உன்னை மிகவும் அன்பாய் வரவழைத்து ஆதரிப்பார்கள் என்ருள்.

அதுகேட்டு அவன், அதற்கு இப்போது தருணமன்று; முதலில் நான் என் ஊருக்குப்போய் வரவேண்டும், இஷ்டமானுல் நீயும் என்னேடுகூடவே வா; நான் என் தேசத்தை விட்டுவந்து நெடு நாளாயிற்று; அங்கேபோய்ப் பின்பு உன் தந்தைவீட்டுக்குப் போக லாம் என்ருன்.

அப்படியே ஆகட்டுமென்று அந்தப் பெண் அங்கீகரிக்கவே அவர்களிருவரும் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டார்கள். அந்தப் பெருங்காட்டினின்றும் வெளியேபோகக் கொஞ்சத்தில் வழி அகப் படாமல் அக்காடுமுழுதும் நெடுநேரம் அல்லாடிக் கடைசியில் ஏதோ ஒருவழி கண்டுபிடித்துப்போய் அவ்வரசன் கிளிகளை விட்டுவந்த ஆலமரம்போய்ச் சேர்ந்தார்கள். அந்தக் கிளிகள் அவனைப்பார்த்து, நீ இந்தப் பட்டணத்திற்குப் போய்வர இத்தனைநாள் சென்றதா? நெடுநாளாகவே, இனி நீ திரும்பிவரமாட்டாயென்று நினைத்திருந் தோம்; அங்கேபோய் நீ செய்துமுடித்த காரியந்தான் என்ன? ஒன்று மில்லை; உன்னை நீயே வதைத்துக்கொண்டாயே; அதுதான் மிகுந் தது. நாங்கள் சொன்னபடியே நீயேன் சாவதானமாய்ப் பார்த்துத் தாவக்கூடாது என்று கேட்க, அவன், அது என்னுடைய அசாமர்த் தியமேயொழிய வேறன்று; நீங்கள் இந்நேரம் எனக்காகக் காத் திருந்ததற்காக மன்னிக்கவேண்டும்; இனி நாம் நமது சொந்த தேசத் திற்குப் போகலாமே; ஆனுல் நீங்கள் என்னையும் என் அருமை மனையாட்டியையும் தூக்கிக்கொண்டு போகவேண்டுமென்ருன்.

அதைக்கேட்டு அந்தக் கிளிகள், அப்படியே போகலாம்; முதலில் கையோடு கொஞ்சம் சாப்பாடு சித்தம் செய்துகொண்டு வந்துவிடு; இல்லாவிட்டால் நடுவழியில் வெகு சங்கடமுண்டாகும் என்று சொல்ல, அரசன் அப்படியே ஆகட்டுமென்று அருகாமையிலிருந்த ஒரு ஊருக்குப்போய்க் கொஞ்சம் சாப்பாடு வாங்கிக்கொண்டுவந்

தான். வந்ததும் தன் பெண்சாதியைப் பார்த்து, என் கண்ணே! இங்கிருந்து என் தேசத்திற்கு வெகு தூரம் போகவேண்டியிருக்கிறதே; அவ்வளவுதூரம் நீயும் ஏன் ஓடிவரவேண்டும். இங்கேயே இருப்பாயானால், நான் போய்ச் சீக்கிரமே திரும்பிவருகிறேனென்று சொல்ல, அவள், நான்மாத்திரம் தனியே இங்கே என்னசெய்கிறது, நீ இல்லாமல் நான் தாய்வீட்டுக்குக்கூடப் போகமாட்டேன்; நீ எங்கேபோனாலும் நானும் கூடவே வரவேண்டுமென்று ஒரேபிடியாய்ப் பிடிக்கவே, அவன் அவளை நிறுத்தமாட்டாமல் அவளோடு கூடவே கிளிகளின்மேல் ஏறிக்கொண்டான். உடனே அவர்களைத் தூக்கிக்கொண்டு அந்தப் பறவைகள் ஆகாயமார்க்கமாய்ப் பறந்து அநேகம் கடல்களையும் காடுகளையும் மலைகளையும் கடந்து ஒரு வருஷகாலம் ஓயாமல் யாத்திரை செய்து கடைசியில், அவ்வரசனுடைய தந்தையின் நாடுபோய்ச் சேர்ந்து, அங்கே அரசனுடைய சிங்காரத்தோட்டமொன்றில் சற்றே இளைப்பாறும்படிக் கீழே இறங்கின. ஆயினும் அது தன் தந்தையின் தோட்டந்தானென்று அவ்விளவரசனுக்குத் தெரியவில்லை. அவன் இளமைப்பருவத்திலேயே அத்தேசத்தினின்றும் ஓடிப்போய்விட்டானே; இவ்வளவுகாலத்தில் எத்தனையோ மாறுபாடுகள் உண்டாயிராதா?

அந்தத் தோட்டத்திலிருக்கையில் அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை பலவித ராஜலக்ஷணங்களும் பொருந்தி யாவரும் பார்த்து வியக்கத்தக்க வடிவழகுள்ளதாயிருந்தது. தனக்கு அப்படிப்பட்ட சங்கடமான காலத்திலே பிள்ளை பிறந்தது கண்டு அவன், ஐயோ! தங்க இடமும் தின்னச் சோறுமில்லாமல் தவிக்கிற இந்தக் காலத்தில் நடுக்காட்டிலே குழந்தை பிறந்ததே; என்னசெய்கிறதென்று மிகவும் விசனமடைந்து, தன் பெண்சாதியைப்பார்த்து, பெண்ணே! நான் எங்கேயாவது போய்க் கொஞ்சம் சோற்றுக்கு வழிதேடிக்கொண்டு, இது என்ன தேசம்; குடியிருக்க எங்கேயாவது கொஞ்சம் இடமகப்படுமா என்று விசாரித்துக்கொண்டு சீக்கிரமே வந்துசேருகிறேன், பயப்படாதே; சீக்கிரமே வந்துசேருகிறேன் என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

அங்கிருந்து புறப்படுகையில் கொஞ்சம் தூரத்துக்கப்பால் ஆகாயத்தில் மெல்லியதாய்ப் புகை கிளம்பக்கண்டு, அவன், அங்கே ஏதோ வீடு இருப்பதாய்க் காண்கிறது; அங்கே போனால் எல்லாச்செய்தியுங்

தெரிந்துகொண்டுவரலாமென்று அவ்விடத்தைநோக்கிச் சென்றான். அது பலவித வித்தைக்காரர்களும் கூத்தாடிகளும் அநேகர் வந்திறங்கியிருக்குமிடம். அவன் அங்கேபோய்ப் பார்த்தபோது அவ்விடம் தான் எதிர்பார்த்திருந்ததைவிட மிகப் பெரிதானதென்றும், ஏறக்குறைய ஒரு கிராமமென்று சொல்லும்படி இருக்கிறதென்றும் கண்டான். அங்கே ஒவ்வொரு வீட்டிலும் ஜனங்கள் ஆடுவதும் பாடுவதும் வேடிக்கை வித்தைகள் செய்வதுமாயிருந்தார்கள். எங்கேபார்த்தாலும் ஜனங்கள் வெகு சந்தோஷமாயிருப்பதாய்க் காணப்பட்டது.

அந்தக் காரடிவித்தைக்காரர்கள் இந்த ராஜகுமாரனைப் பார்த்தவுடனே இவனுடைய அழகுக்காக மிகவும் ஆச்சரியப்பட்டு அவனையும் தங்களோடுகூடச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று தீர்மானித்தார்கள். இப்படிப்பட்ட அழகனும் ஒருவன் தங்களோடுகூட ஆட்டம் பாட்டுகளிற் சேர்ந்திருப்பானானால், அதற்காகவே அநேகர் பார்க்க வருவார்கள்; விசேஷலாபங் கிடைக்குமென்பது அவர்களுடைய கருத்து.

இந்தச் சூதைத் தெரிந்துகொள்ளாமல் அவ்விளவரசன் அங்கிருந்த ஒரு பெரிய குடிசையிற்சென்று அவ்வீட்டுக்காரியைக்கண்டு தனக்குக் கொஞ்சம் அரிசியும் நெருப்பும் கொடுக்கும்படிக் கேட்டான். அவள் அப்படியே ஆகட்டுமென்று அவற்றை எடுத்துக்கொண்டுவர உள்ளேசென்றாள். ஆயினும் அவள் அவற்றை அவன் கையிற்கொடுப்பதற்கு முன்னமே அவளும் அவளைச் சேர்ந்தவர்களுமாய் ஒருவித மயக்கப் பொடியை அவற்றிற்போட்டு அவன் கையிற்கொண்டுவந்து கொடுத்தார்கள். அவற்றை வாங்கிக்கொண்டவுடனே அவனுக்குத்தன் பெண்சாதி பிள்ளைகளுடைய நினைவு போய்விட்டது. அதுமாத்திரமேயன்று; அந்தநிமிஷத்திற்குமுன் தான்செய்தசெய்கைகள் யாவும் மறந்துபோயின. பின்பு அந்த மாயக்காரர்களெல்லாரும் ஒன்றுகூடி அவனண்டைவந்து, நீ இவ்விடத்தைவிட்டு ஏன் போய்விடவேண்டும்; எங்களோடுகூடவே சேர்ந்திருக்கக்கூடாதாவென்று சொல்லி வேண்ட, அவன் அப்படியே ஆகட்டுமென்று அங்கீகரித்து சந்தோஷமாய் அவர்களோடுகூடவே சேர்ந்திருந்தான்.

நடுக்காட்டில் ஒரு தோப்பிலே தனியாய் ஐந்துமலராசி பட்ட பாட்டைக் கேளுங்கள். இடந்தேடப்போன தன் நாயகன் திரும்பி வருவான், வருவானென்று நெடுநேரம் எதிர்பார்த்திருந்தாள்; அவன்

வாவேயில்லை; அப்படியிருக்கப் பொழுதும்போய்விட்டது. வெகு நேரம் காத்திருந்து கடைசியில் இளைப்பினாலும் வருத்தத்தாலும் மெய்ம்மறந்து அவள் மூர்ச்சைபோயினாள்.

இது இப்படியிருக்க, ஐந்துமலராசியின் மாமியான அத்தேசத்து இராணிக்குப் பிறந்திருந்த சிறுகுழந்தையொன்று அன்றையதினம் இறந்துபோயிற்று; இறந்துபோகவே அந்தப் பிணத்தைப் புதைக்கும் படி ஐந்துமலராசி படுத்திருந்த தோட்டத்திற்கு எடுத்துவந்த அவளுடைய வேலைக்காரர்கள், அதைப் புதைக்கப்போகிறதருணத்தில் தீனமாய்க் குழந்தையின் அழுகைக்குரல் ஒன்றைக்கேட்டு நாற்புறமும் சுற்றிப்பார்க்க, அருகாமையில் பிணம்போல் ஒரு அழகி விழுந்து கிடப்பதையும், அவள் பக்கத்தில் சூரியன் உதித்தாற்போல் மிகப் பளபளப்பான பாலகனொருவன் படுத்து அழுவதையும் கண்டார்கள். கண்டவுடனே, தங்கள் கையிலிருந்த பிணத்தை அவள் பக்கத்தில் போட்டுவிட்டு அங்கிருந்த குழந்தையை எடுத்துக்கொண்டு வீட்டுக்குப் போய்ச் சேரவேண்டுமென்று அவர்களுக்கு ஒரு எண்ணமுண்டாயிற்று. அப்படியே அவர்கள் நிறைவேற்றினார்கள்.

அவர்கள் அந்தக் காட்டிலிருந்து வீட்டுக்குவந்ததும் தங்கள் எஜமானியைக் கண்டு, அம்மணி! உங்கள் குழந்தை இறந்துபோகவில்லை இங்கிருந்து கொஞ்சதூரம் எடுத்துக்கொண்டு போகையிலேயே உடம்புதெளிந்து அழ ஆரம்பித்தது என்று சொல்லி ஐந்துமலராசியின் குழந்தையை அவளுக்குக் காட்டினார்கள். ஆயினும் அவர்கள் உண்மையை ஒளிக்கவில்லை. நாளளவிலே நடந்த வரலாறு இப்படிப் பட்டதென்று நடந்ததை நடந்தபடியே சொல்லிவிட்டார்கள், அதற்குள் அந்தக் குழந்தையினிடத்தில் அவளுக்கு மனம் அதிகமாய்ப் பற்றிப்போனபடியால் அதை விட மனம் வரவில்லை; தன் வயிற்றிற் பிறந்த பிள்ளையைவிட அதிகமாகவே ஆதரித்தாள்; அந்தக் குழந்தை இன்னானென்று அவளுக்குத் தெரியாமற்போனபோதிலும், உண்மையாய் அவன் அவளுக்குப் பேரப்பிள்ளையல்லவா?

இது இப்படியிருக்க அரசன்வீட்டுத் தோட்டக்காரி ஒருத்தி வழக்கப்படியே பூவெடுக்க அந்தத் தோட்டத்திற்குப் போகையில், ஒருநாள் ஐந்துமலராசி பிணம்போலக் கிடப்பதையும் பக்கத்தில் ஒரு குழந்தை செத்துக்கிடப்பதையும் கண்டு மிகவும் பரிதாபப்பட்டு அவளண்டைபோய் அவளுடைய கைகால்களைத் தேய்ப்பதுமுதலான பல

உபசாரங்கள்செய்து அவளுக்குக் கொஞ்சம் பிரஞ்ஞை உண்டாகச் செய்தாள். வெகுநேரம் கழித்துத் தேகத்தில் கொஞ்சம் சூடு உண்டாக, அந்த் இராணி கண்ணை விழித்துப்பார்த்து, எதிரே தோட்டக்காரி நின்றதைக்கண்டு, இப்போது நான் எவ்விடத்திலிருக்கிறேன்? என் கணவன் இன்னும் திரும்பிவரவில்லையா? என்று கேட்டாள்.

அதற்கு அந்தத் தோட்டக்காரி, என் தாயே! உன் கணவன் யாரோ? எங்கே போனானோ நானறியேன், நான் இந்தத் தோட்டக்காரி; இவ்விடத்துக்கு நான் பூவெடுக்கவருகையில், நீ தரையில் விழுந்து கிடப்பதையும், இந்தக் குழந்தை பிணமாய் உன் பக்கத்தில் கிடப்பதையும் கண்டு இதென்னவென்று பார்க்கவந்தேன். ஐயோ! உன் பரிதாபத்தைப் பார்க்கக்கூடவில்லையே! என் வீட்டுக்குவா! என் கையிலானமட்டும் நான் உன்னை ஆதரிக்கிறேன் என்றாள்.

அதைக்கேட்டு ஐந்துமலரரசி, என் அருமைத்தோழி! இது என் குழந்தையல்லவே! என் மகன் இறந்துபோகவில்லை. அவன் இந்தக் குழந்தையைப்பார்க்கிலும் எவ்வளவோ அழகாயிருப்பானே! அவன் தகப்பனுடைய பிரதிமையாயிருந்தானேயொழிய வேறில்லை; அந்தக் குழந்தையைக் கையிலெடுத்தால் எவ்வளவு பெருமையாயிருக்கும்; இது சிறிதும் அதைப்போலில்லை. யாரோ இவ்விடத்திற்கு வந்து என் குழந்தையை எடுத்துக்கொண்டு இந்தப் பிணத்தை இங்கே போட்டுவிட்டு போயிருக்கவேண்டுமென்று சொல்லிப் புலம்பினாள்.

பின்பு அந்தத் தோட்டக்காரி அந்தக் குழந்தையை அங்கேயே ஓரிடத்தில் புதைத்துவிட்டு ஐந்துமலரரசியைத் தன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய் அங்கே அவளை மிகவும் அன்பாய் ஆதரித்துவந்தாள். அதுமுதல் பதினைன்கு வருஷகாலம் ஐந்துமலரரசி அந்தத் தோட்டக்காரியின் வசத்திலேயே இருந்தாள். அவ்வளவு காலத்திலும் அவளுக்குத் தன் கணவனுடைய செய்தியும் தெரியவில்லை; குழந்தை போனவழியுந் தெரியவில்லை.

இதற்குள் அரசன் அரண்மனைக்குப்போய்ச்சேர்ந்த ஐந்துமலரரசியினுடைய மகன் மிகுந்த செல்வமும் சீருமாய்ப் போஷிக்கப்பட்டு நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து நல்ல வயதுள்ள ராஜகுமாரனானான். பின்பு அவன் ஒருநாள் ராஜாவின் உத்தியானவனத்தில் உல்லாசமாய் உலாத்திக்கொண்டிருக்கையில், தோட்டக்காரி வீட்டில் ஐந்துமலரரசி உட்கார்ந்திருப்பதைக் கண்டு

வியந்து தோட்டக்காரியை அழைத்து, உன் வீட்டில் ஒரு அழகி உட்கார்ந்திருக்கக் கண்டேன்; அவ்வளவு அழகுள்ள பெண்ணை நான் ஒருநாளும் பார்த்ததில்லை; அவள் யார்? எங்கிருந்து வந்திருக்கிறுளென்று கேட்க, அவள், இளவரசரே! நீர் என்ன விவேகமற்றபேச்சு பேசுகிறீர்; என் வீட்டில் என்னைத்தவிர வேறொருவருமில்லை என்று வெருட்டிப் பேசினதற்கு, அவன், இல்லை அம்மா; அந்த வழியாய் வருகையில் தெய்வப்பெண்போன்ற ஒருத்தி உன் வீட்டிலிருக்க நான் நேராய்க் கண்டேன் என்று சொன்ஞன். அதைக் கேட்டு அவள், இந்தச் செய்தியை இவன் பட்டணத்தில் பிரசித்தப்படுத்தி அவளுக்கெங்கே தீங்கு விளைவிக்கிறுனோவென்று பயந்து அவனை அதட்டித் துரத்திவிடவேண்டுமென்று தீர்மானித்து, நீர் அரசனுனல் உம்மட்டும்; இனி என் வீட்டுப்பேச்சை எடுப்பீராஞல் நான் மிகக் கொடியவளாயிருப்பேனென்று சொல்லி வெருட்டிஞள். இப்படி அவர்கள் பேசிக்கொண்டிருக்கையில், அவர்கள் பேசுவதைக் கேட்க வேண்டுமென்று ஐந்துமலாராசி அவ்வீட்டுத் தெருக்கதவண்டை மறைவிடமாய் வந்துநின்றுள். அவள் அந்தப் பிள்ளையைப் பார்த்ததும் ஆனந்தம் உள்ளடங்காமல், என் கணவனுக்கும் இவனுக்கும் சிறிதளவும் வேற்றுமையில்லையே! கண் முகம் முதலியவெல்லாம் அதேமாதிரியாயே இருக்கின்றன. இவன் நான் பெற்ற பிள்ளை தானே? என் மகன் பிழைத்திருந்தால் இப்போது அவனுக்கு இதே வயதுதானிருக்கும் என்று சொல்லிக் கதறிஞள்.

ராஜகுமாரன் அவளுடைய கூச்சலைக்கேட்டு, இவள் யார்? என்ன சொல்லுகிறுளென்று தோட்டக்காரியைக் கேட்க, அவள், நீர் என் வீட்டில் யாரோ ஒருத்தியைப் பார்த்தேனென்றீரே, இவள் தான் அவள்; பதினைன்கு வருஷத்திற்குமுன்னே இவளுக்கு ஒரு குழந்தை இறந்துபோயிற்று. உம்மைப் பார்த்தால் அதேசாயலாயிருக்கிறதென்றும், நீர்தானே அந்தக் குழந்தையென்றும் சொல்லிப் புலம்புகிறுள். ஆனல் இவள் நினைப்பது பிசகு; நீர் நம்மகாராஜாவின் குமாரனென்பது எங்களுக்கெல்லாம் நன்றுய்த் தெரியுமே என்றுள். இதற்குள் ஐந்துமலாராசியும் வீட்டைவிட்டு அவர்களண்டை வந்து அந்தப் பிள்ளையைப் பார்த்து, இளவரசரே! உம்மைப் பார்க்கும்போது என் துக்கம் தானேபொங்கி வெளியேவருகின்றது. என் கணவன் வடிவழகுக்கும் உமது வடிவழகுக்கும்

அணுவளவேனும் வேற்றுமையில்லை; என் குழந்தையும் இதேசாய லாகவேயிருந்தது. நான் அவ்விருவரையும் இழந்து பதின்ைறு வருஷமாய்விட்டது என்று சொல்லி, பின்பு அவள், தான் முதலில் ஒரு சிறந்த ராஜகுமாரத்தியாகப் பிறந்தது, தன் கணவனேடுகூட அவனுடைய தேசத்திற்கு வருகையில், நடுவழியே அந்தத் தோட்டத் தில் தனக்கொரு குழந்தை பிறந்தது, பிறகு தன் கணவன் கொஞ்சம் சோறும் இடமும் தேடி வரும்படிப்போய்த் திரும்பாமல் அப்ப டியே போய்விட்டது, பின்பு தான் மூர்ச்சைபோய்க் கிடக்கை யில் யாரோ ஒரு செத்தகுழந்தையைத் தன் பக்கத்தில் போட்டு விட்டு அங்கிருந்த தன் அருமைக் குழந்தையை எடுத்துக்கொண்டு போய்விட்டது, பின்பு அந்தத் தோட்டக்காரி தன்னை வைத்தாதரித் தது முதலான தன் கதைகளையெல்லாம் சொல்லி, அதை முடித் ததும் கோவென்று கதறினாள்.

அவளுடைய சங்கடத்தைப்பார்த்து அந்த ராஜகுமாரன், தாயே! நீ விசனப்படவேண்டாம்; நான் என்னால் கூடியவரையில் முயற்சி செய்து உன் கணவனையும் மகனையும் தேடிப்பிடிக்கிறேன். நானே தான் உன் பிள்ளையோ என்னவோ அதுதான் யாருக்குத் தெரியும் என்று சொல்லிவிட்டு வெகுசீக்கிரமே தன் வீட்டுக்குப்போய்த் தாயைப்பார்த்து, தாயே! என்னைப்பெற்றவள் நீதானா? உண்மையை எனக்குத் தெரியச்சொல்; பொழுதுபோவதற்குள் இந்தச் செய்தி எனக்குத் தெரியவேண்டுமென்று கேட்க, அவள், குழந்தாய்! நீ என்ன மூடத்தனமான கேள்வியெல்லாம் கேட்கிறாய்? நான் இது வரையில் உன்னை என் வயிற்றிற்பிறந்த பிள்ளையைப்போல வளர்த் தேனா? வேறுவிதமாக வளர்த்தேனா? என்றாள். அதற்கு அவன், ஆம்; அது மெய்தான்; ஆயினும் நான் உண்மையைக் கேட்கிறேன்; நான் உன் வயிற்றிலேயே பிறந்தவனா? அல்லது அயலாருடைய பிள்ளையாயிருந்து பின்பு உன்னால் வளர்த்துக்கொள்ளப்பட்டவனா? நீ உண்மையைச் சொல்லாமற்போனால், நான் உடனே உயிரை விட்டுவிடுகிறேனென்று சொல்லிக் கத்தியை உருவிக் கையிலெடுத் துக்கொண்டு கழுத்தை அறுத்துக்கொள்ளப்போனான். அதுகண்டு அவள், நில்லு, நில்லு குழந்தாய்! நடந்ததைச் சொல்லுகிறேன் கேளென்று சொல்லி அவன் கையைப் பிடித்துக்கொண்டு நடந்ததை யெல்லாம் சொல்லிவிட்டாள்.

அதாவது—குழந்தாய்! நீ பிறப்பதற்கு முதனுள் எனக்கு ஒரு குழந்தை பிறந்தது; ஆனுல் அது உடனே இறந்துபோயிற்று. அந்தக் குழந்தையைப் புதைப்பதற்காக வேலைக்காரர்கள் தோட்டத்திற்குக் கொண்டுபோனபோது, அங்கே செத்தவள்போல் ஒரு பெண்பிள்ளையும் அவள் பக்கத்தில் ஒரு குழந்தையுமிருக்கக் கண்டார்களாம். நீதான் அந்தக் குழந்தை. பின்பு அவர்கள் எடுத்துக்கொண்டுபோன சவத்தை அவள் பக்கத்திலே போட்டுவிட்டு உன்னை இவ்விடத்திற்குக் கொண்டுவந்தார்கள். உன்னை நான் சொந்தப்பிள்ளையாகவே பாவித்து வளர்த்து வருகிறேன்; இதுதான் எனக்குத் தெரியுமென்ருள். ஆனுல் பின்பு என் தாய் போனவழி என்னவென்று அவன் கேட்க, அவள், அது எனக்குத் தெரியாது; இரண்டுநாள் கழித்து ஆள்களை விட்டு அவ்விடமெல்லாம் தேடச்சொன்னேன். அந்தக் குழந்தையும் அகப்படவில்லை; அவளையும் காணேன்; அவள் எப்படியாளுளென்று நான் சொல்வேனென்ருள்.

அதைக்கேட்டு அந்தப் பிள்ளை, அம்மா! நமது தோட்டக்காரன் வீட்டில் ஒரு சீமாட்டியிருக்கிருள். அவளைப் பதினுன்கு வருஷத்திற்குமுன்னே நமது தோட்டக்காரி காட்டிலே கண்டு அதுமுதல் அவளே வளர்த்து வருகிருளாம். அவள்தான் என் தாயாய் இருக்க வேண்டும். நம்மால் கூடிய உபசாரம்செய்து உடனே நாம் அவளை இங்கே அழைத்துவரவேண்டும்; இதைவிட நாம் இப்போது அவளுக்கு வேறென்ன செய்யலாம் என்ருன்.

அப்படியே அந்தக் குமாரன் அநேகமாய் யானை குதிரை முதலிய பரிஜனங்களைக் கூட்டிக்கொண்டு தன் தாய்க்கும் தோட்டக்காரிக்குமாய்ச் சிறந்த ஆடையாபரணங்களும் எடுத்துக்கொண்டு தானே நேராய்த் தோட்டக்காரி வீட்டிற்குப்போய், தாயைத் தெண்டனிட்டு அவளை நன்ருய் அலங்காரம் செய்துகொள்ளச்செய்து சிறந்த ஒரு வாகனத்திலேற்றிக்கொண்டு, பல பரிஜனங்கள் சூழ்ந்துவர வெகு வைபவமாய் அரண்மனைக்கு அழைத்துவந்தான். அந்தப் பெண்ணின் வடிவழகைப் பார்த்தவர்களெல்லாம் இப்படிப்பட்ட பெண்மணியை நாம் இதுவரையில் இப்பூமண்டலத்தில் கண்டதில்லையே என்று சொல்லி அதிசயித்தார்கள். பின்பு அந்த ராஜகுமாரன் **ஐந்துமலாரசியை** வெகு செல்வமாய் ஆதரித்து வைத்துக்கொண்டிருந்தான். அவளும் அப்படியே யாவராலும் வெகு நல்லவளென்று

மிகவும் கொண்டாடிப் புகழப்பட்டுக் கொஞ்சக்காலம் அங்கேயே சுகமாயிருந்தாள்.

இப்படியிருக்கையில் ஒருநாள் அந்தச் சிறுவன் தன் பெற்ற தாயான ஐந்துமலராசியைப்பார்த்து அவளுடைய கதையையும் தன் தகப்பன் கதையையும் அவளுக்குத் தெரிந்தவரையிலும் ஆதி தொடங்கிச் செம்மையாய்ச் சொல்லும்படி வேண்டிக் கேட்க, அவள் அப்படியே தனக்குத் தெரிந்தவரையில் எல்லாக் கதையையும் சொன்னாள். அதைக்கேட்டு அந்தக் குமாரன், என் அருமைத்தாயே! இனி நீ என் தந்தையைப்பற்றிச் சிந்தைப்படவேண்டாம்; தைரியமாயிரு; உடனே நான் நாலுதேசங்களுக்கும் தூதர்களைத்துரத்தி அவருடைய செய்தியைச் சீக்கிரமே தெரிந்துகொண்டு வரச்செய்கிறேனென்று சொல்லி, அந்தக்ஷணமே நாலாமூலையிலும் தன் தந்தையைத் தேடும்படித் தூதர்களை அனுப்பினான். அவர்களும் அந்தக் கட்டளையின்படியே முழுதும் சுற்றிப்பார்த்துக் கடைசியாய் அவனை எங்கும் காணாமலே வந்து சேர்ந்தார்கள்.

இப்படி வீணாகத் தேடுவதற்குள் நான்கு வருஷகாலஞ் சென்றுவிட்டது. தூதர்களெல்லாம் போனபடியே திரும்பி வந்ததைக் கண்டு ராஜகுமாரன், இதென்ன மாயமென்று உடனே தன் தாயண்டைபோய், அம்மா! இனி இந்தச் சீமையில் என் தந்தையைத்தேட ஓரிடமும் பாக்கியில்லை; எங்கும் அவரைக் காணோமே. அவர் போன வழியைப்பற்றிச் சிறிதளவு குறிப்பு அகப்பட்டாலும் அதைக்கொண்டு தேடச்சொல்லலாம். இன்னவழியென்று தெரியவில்லையே; நல்லது, முதலில் அவர் உன்னைவிட்டுப் போகும்போது ஒரு செய்தியும் உன்னுடன் சொல்லிப்போகவில்லையா என, அவள் என் குலக்கொழுந்தே! உன் தந்தை என்னைவிட்டுப் பிரிந்தபோது, கொஞ்சம் சாப்பிடச் சோறும், தங்க நிழலும், எங்கேயாவது தேடிக்கொண்டு, இதென்ன தேசமோ அதையும் விசாரித்து வருகிறேன் என்பதாகச் சொல்லி, பயப்படவேண்டாம், சீக்கிரமே திரும்பி வந்துவிடுகிறேன் என்று எனக்குத் தைரியமும் சொல்லிவிட்டுப் போனார்; அதேபோக்குத்தான் என்றாள்.

அதைக்கேட்டு அந்தச் சிறுவன், அவர் எந்தத்திசை நோக்கிச் சென்றார்; அதாவது தெரியுமா என, அவள், அதோ கூத்தாடிகளுடைய குப்பமிருக்கின்றதே அந்தக் குப்பத்தை நோக்கிச் சென்றார்;

அங்கே போய் ஏதாவது கொஞ்சம் தவித்தவாய்க்குத் தண்ணீர் தேடிக் கொண்டு வருவாரென்றிருந்தேன்; பிள்ளைவரங் கேட்கப்போன விடத்தில் புருஷனைப் பறிகொடுத்ததென்று வசனஞ்சொல்வார்கள்; அது என் விஷயத்தில் யதார்த்தமாயிற்றே என்றாள். அதன்மேல் அவன், இப்போது அவர் எவ்வளவு மாறுவேஷப்பட்டிருந்தாலும் நீ அவரை அடையாளங் கண்டுபிடிக்கமாட்டுவாயா என்று கேட்ட தற்கு, அவள், ஓ! நன்றாய்க் கண்டுபிடிக்கமாட்டுவேன்; நான் அவ ரைப்பார்த்து எவ்வளவுகாலந்தானாகட்டும், அவர் எவ்வளவுதான் நோவிலடிபடட்டும்; மாறுவேஷப்படட்டும்; எப்படிப்பட்ட வேற் றுமை உண்டானாலும் நான் அவரை அடையாளம் பிடிக்கமாட்டு வேன்; இப்போது பதினெட்டு வருஷமானதினாலே நான் அவர் உருவத்தை மறந்துபோவேனா? இதோ அவர் உருவம் அப்படியே என் மனதில் எழுதப்பட்டிருக்கின்றதேயென்று சொன்னாள்.

ஆனால், நாம் இந்தக் குப்பத்திற்கே செய்தியனுப்பி அவ்விடத் தார் அனைவரையும் இங்கு வரவழைப்போம்; அவர்களோடுகூடவே இவரும் ஒருவேளை சேர்ந்துபோயிருந்தாலுமிருக்கலாம்; அவர் அகப் பட்டாலும் அகப்படாமற்போனாலும், கடைசியாய் அவரைத் தேடுவ தற்காக நாம் செய்யவேண்டிய காரியம் இதுதானென்று சொல்லி அந்தச் சிறுவன் உடனே, அவ்வூரார் அனைவரும் இன்று பகலில் அரமனைக்குவந்து சேரவேண்டும்; ஒருவர்கூட அவ்வூரில் நிற்கக் கூடாது; பாடகர்களெல்லாம் பாடவும், ஆட்டக்காரர்களெல்லாம் ஆடவும், ஜாலவித்தைக்காரர்களெல்லாம் பலவகையான ஜாலவித் தைசெய்யவும், பார்க்க நாங்களெல்லோரும் விரும்புகிறோமென்று செய்திசொல்லி அனுப்பினான்.

அப்படியே அவர்களெல்லாரும் வந்துசேர்ந்து பார்ப்போர் அனை வரும் பிரமித்து நிற்கும்படி மிகவும் அற்புதமான பலவித வித்தை முதலியவை செய்ய ஆரம்பித்தார்கள். அவர்களுள் ஒருவன் அரை யில் கந்தைத்துணியொன்றைச் சுற்றிக்கொண்டு மிகவும் விகாரவடிவ மாய்த் தாளம்போட்டுக்கொண்டிருந்தான். அவனைப் பார்த்தவுடனே ஐந்துமலராசி, அதோ உன் தந்தையென்று தன் மகனுடன் சொல்ல, அவன், என்ன! கண்ணாலேபார்க்க வழங்காத வடிவத்துடன் தாளம் போட்டுக்கொண்டு நிற்கிறானே அவனா என் தகப்பனென்ன, ஆம், அவனே என்றாள்.

உடனே அச்சிறுவன் தன் சேவகனை அழைத்து, அதோ அந்த மனிதனை இங்கே பிடித்துவா என, அப்படியே அவன் அம்மனிதனை அவர்களெதிரே கொண்டுவந்து நிறுத்தினன். பெற்ற தாய்க்குக்கூட அவன் தன் மகனென்று அடையாளந் தெரியவில்லை. அவனை அடையாளங் கண்டுபிடித்தவள் அவன் மனைவி ஒருத்தியே. பதினெட்டு வருஷகாலமாய் அவன் அந்தக் கூத்தாடிகளோடு கூடி அவ்வளவு விகாரப்பட்டுப்போனன். அவன் உடம்பெல்லாம் கன்னங்கறேலென்று கறுத்துத் திரையும் சொறியுமாய்க் கிடந்தது. அவன் கூத்தாடி வேஷத்துக்கு வேண்டியபடி மூக்கு குத்திக்கொண்டு மூக்கில் ஒரு கம்பியும் காதில் ஒரு பெரிய வளையமும் மாட்டியிருந்தான். முன் இருந்த அங்கக்குறி ஒன்ருவது அவனிடத்தில் இல்லை. அப்போது அந்தச் சிறுமகன் அவனைப்பார்த்து, முன் நீ என்றைக்காவது அரசனுயிருந்ததாக உனக்கு நினைவுவருகிறதா என்று கேட்க, அவன், அப்படி ஒன்றுமில்லை; நான் எனக்குப் புத்திதெரிந்த நாள் முதல் இப்படியேதான் கூத்தாடி வேஷம்பூண்டு ஜீவனம்பண்ணிக் கொண்டிருக்கிறேன் என்ருன். அந்த வித்தைக்காரர்களுடைய மாயையால் அவனுக்குத் தன்னுடைய பழைய நடத்தையெல்லாம் முழுதும் மறந்துபோயின.

அதுகேட்டு அந்த ராஜகுமாரன் அந்தக் கூத்தாடிகள் அனைவரையும் உடனே சிறையிலடைக்கும்படி கட்டளையிட்டு, தன் தந்தை அப்படிக் கெட்டுப்போனதற்குக் காரணமும் மறுபடியும் அவர் முன் போல் ஆவதற்கு வழியும் தெரிந்து அவர் சரீரம் செம்மைப்படுமளவும் அவர்களை விடக்கூடாதென்று திட்டஞ்செய்தான், பின்பு அந்நாட்டுச் சிறந்த வைத்தியர்கள் பலரை அழைப்பித்து, பதினெட்டு வருஷகாலமாய் இவர் எங்கெங்கேயோ திரிந்து சரீரத்தையுங் கெடுத்துக்கொண்டு தன் நினைவு விவேகம் முதலியவற்றையும் இழந்துபோயிருக்கிருர். அவர் தேகத்தைச் சொஸ்தப்படுத்தி எப்போதும்போலத் தன் நினைவு நன்ருய் வந்து இவர் சுகமாக வாழும்படிச்செய்ய உங்களாலாகுமா? கூடுமாஞல் இவர் தேகம் இப்படிக் கெட்டுப் போனதற்குக் காரணம் என்னவோ அதையும் தெரிவிக்க வேண்டுகிறேன் என, அவ்வைத்தியர்கள், இவர் ஒருவித மாயையினுல் மயக்கப்பட்டு மதிமயங்கிப்போயிருக்கிருர். ஆயினும் நாங்கள் அதற்குத் தக்க மாற்று மருந்து கொடுத்து இவர் தேகத்தை அனுகூலப்படுத்து

கிறோம் என்று சொல்லி அப்படியே செய்தார்கள். அவர்களுடைய வைத்தியத் திறமையினால் சிலநாளிலேயே அவனுடைய சரீரம் நன்றாய்ச் சொஸ்தப்பட்டு நல்ல திறமையும் வலிமையுமுண்டாகி முன்நினைவு நன்றாய் வந்துவிட்டது.

அப்படி முன்நினைவு வந்தபின் அவர்களையெல்லாம் பார்த்தபோது அவ்வரசனுக்கு உண்டான அதிசயத்தை என்னென்று சொல்லலாம்! தானும், தன் அருமை மனையாளான ஐந்துமலராசியும், தன் அருமை மகனும் ஆகிய யாவரும் தன் தந்தையின் அரமனையில் வசித்துக்கொண்டிருக்கக்கண்டான். அவனுடைய கிழத்தந்தையும் அவனைப்பார்த்துப் பேரானந்தமடைந்து, முன் அவனிடத்திற்கொண்டிருந்த பகையை ஒழித்து அவனை மிகவும் பெருமையாக வாழ்த்தினான். நெடுநாளாய் இழந்துபோன தன் செல்வமகனைக் கண்டபோது, தனக்கு உண்டான ஆனந்தத்திற்கு அளவுண்டோ! இப்படி எல்லாரும் சேர்ந்து சிறிதுநேரம் பேரானந்தமாய்ப் பேசிக் குலாவிக்கொண்டிருந்தபிறகு, கிழவரசன், குழந்தாய்! என் குலவிளக்கே! தெரியாமையால் நீ இத்தனைகாலந்தான் சீமையெல்லாம் சுற்றினையே, கடைசியில் தெய்வாதீனமாய் வீடுவந்து சேர்ந்தாய்; இனி எங்கும் போகாமல் பெண்சாதி பிள்ளைகளோடு இங்கேயே சுகமாயிருக்கவேண்டுமென்றான். அதற்கு அவ்வரசன், அப்படியே ஆகட்டும், நீங்கள் சொல்வதை நான் மறுப்பதில்லை; ஆனால் ஒன்று, எனக்கு இந்தப் பெண்சாதி ஒருத்திமாத்திரமேயல்ல; என்னைத் தன் உயிரைவிட அதிகமாக ஆதரித்த மூத்தமனையாள் ஒருத்தியிருக்கிறாள். அவளோடுகூட அவள் தேசத்தில் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றெட்டு பேசும் மரக்கிளிகள் இருக்கின்றன. அவ்வருமைக்கிளிகளையும் அம்மனையாட்டியையும் உடனே அழைத்து வரவேண்டுமென்றான்.

அப்படியே அவன் அவர்களிடத்தில் செலவு பெற்றுக்கொண்டு, இத்தனைநாள்வரையில் அப்பட்டணத்துத் தோட்டத்திலேயே வசித்துக்கொண்டிருந்த தன் இரண்டு கிளிகளின்மேல் ஏறிக்கொண்டு மூத்தமனையாளுடைய தேசத்திற்குப் போய், அவளையும் மற்றக் கிளிகளையும் அழைத்துக்கொண்டு தன் தகப்பனுடைய பட்டணம் வந்து சேர்ந்தான். வந்ததும் தகப்பன் அவனைப்பார்த்து, மகனே! என் காலத்திற்குப் பிறகு நீயும் உன் தம்பியும் (தம்பியாவது—அவ்வரச

னுடைய அருமைமனையாட்டியான இளையாளுக்குப் பிறந்தவன்)
அடிக்கடி மனஸ்தாபப்பட்டுக்கொண்டிராமல் ஒருமைப்பட்டு வாழ
வேண்டும்; நீங்கள் இரண்டுபேரும் எனக்குச் சரிதானென்று சொல்
லித் தன் நாட்டை இரண்டாகப் பிரித்து அவ்விருவருக்கும் கொடு
த்துவிட்டான்.

இவ்விதமாய் ஏற்பாடாகிச் சிலநாள்வரையில் அவர்களெல்லோ
ரும் அங்கேயே கூடிவாழ்ந்திருந்தார்கள். இப்படியிருக்க ஒருநாள்
ஐந்துமலராசி தன் தாய்தந்தையர்களைப்பார்க்க விருப்பமாயிருக்கிற
தென்று தன் கணவனுடன் சொல்ல, அவன் அப்படியே போய்வரு
வோமென்று சொல்லி, உடனே தன் கிளிகளை வரவழைத்து அவற்
றின்மேல் ஏறிக்கொண்டு தன் பெண்சாதி பிள்ளைகளோடு புறப்பட்
டுச் சென்றான். முன் அவன் ஐந்துமலராசியைக் கலியாணஞ்
செய்துகொள்ளச் சென்றவழியே ஆகாயமார்க்கமாய் வெகுநாள் பிர
யாணஞ்செய்து அநேகம் கடல்களைக்கடந்து ஐந்துமலராசி தேசம்
போய்ச் சேர்ந்தான். இவர்கள் வெகுதூரத்தில் வருகையிலேயே
ஐந்துமலராசியின் தந்தை இவர்கள் ஆகாயத்தில் வாயுவேகம் மனோ
வேகமாய்ப் பறந்து வருவதுகண்டு அதிசயித்துத் தன்னிடத்திலிருக்
கும் அநேகம் பிரபுக்களை அழைத்து, அதோ வருகிறது யார் விசா
ரித்து வாருங்களென்றனுப்பினான்.

அவர்களெல்லாரும் அப்படியே பட்டணத்துக் கோட்டை வாயி
லுக்கு வெளியேபோய்க் காத்திருந்து அவ்வரசனை எதிர்கொண்
டழைத்து, மகாப்பிரபுவே! உங்களுடைய மகிமையைப் பார்க்கும்
போதே எங்களுக்கு மிக்க மகிழ்ச்சியுண்டாகின்றது. ஆகாயத்தில்
இப்படிப் பறந்துவரும்படியான மகிமை யாருக்கு உண்டு; தாங்கள்
யாரோ? எங்கிருந்து வந்தீர்களோ? அதைத் தெரியச்சொன்னால்
எங்கள் அரசருக்கறிவிக்கிறோம் என அவன் ஐந்துமலராசியின்
கணவனான உங்கள் மருமகன் வந்து உங்களைப் பார்க்கக் காத்திருக்
கிறானென்று ராஜாவோடு சொல்லுங்களென்றான். அப்படியே
அவர்கள் அச்செய்தியை அரசனுக்கு அறிவிக்க, அவன் அதைக்
கேட்டு, இதென்ன ஆச்சரியம்! நம்மருமகன் இறந்துபோய் இரு
பது வருஷத்திற்கு மேலாகிறதே! ஆயினும் இவன் யாரோ போய்ப்
பார்ப்போமென்று அவனிடம் போகப் புறப்பட்டான்; அவன் பின்
னோடு அரமனையிலுள்ளவர்கள் அனைவரும் புறப்பட்டார்கள். அவ்

வாசன் தன் கோட்டைவாயிலைக் கடந்துபோகையில், அப்போது தான் ஐந்துமலாாசி ஒரு கையில் தன் கணவனையும் மற்றொரு கையில் மகனையும் பிடித்துக்கொண்டு அவ்விடத்துக்கு வந்தாள். அவள் நெடுநாளாய்ப் பாராத தகப்பனைப் புதிதாய்ப் பார்த்தவுடனே ஆனந்தக்கண்ணீர் பெருக்கி, தந்தையே! உங்களை நான் பார்த்து வெகு காலமாய்விட்டதே, இப்போது உங்களைப் பார்க்க வெகு ஆவல் கொண்டு வந்தேன்; முன் இங்கே இறந்துபோன என் கணவன் இதோ நிற்கிறார். இக்குழந்தை என் மகன் என்று சொன்னாள். அவ்வரசனையும் அரசியையும் பார்த்து அத்தேசத்தாரனைவரும் மிகவும் மகிழ்ச்சிகொண்டு, இவர்களே இத்தேசத்திற்கு அரசராகி நம்மைக் காத்துக்கொண்டு நெடுநாள் வாழ்ந்திருக்கும்படி கடவுள் கிருபைசெய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள்.

பின்பு அவர்களெல்லாரும் அரமனைபோய்ச் சேர்ந்து கொஞ்சநேரம்விநோதமாய்ப்பேசிக்கொண்டிருந்தபிறகுஐந்துமலாாசி, முன் அவர்கள் தன்னைத் தனியே நடுக்காட்டில் கொண்டுவிட்டு வந்தநாள் முதல் அன்றுவரையில் நடந்த தன் சரித்திரங்களையெல்லாம் தாய் தந்தையர்களுக்குச் சொன்னாள். அவ்வரசன் அதைக் கேட்டுத் தன் மகளுடைய பெருமையையும் மருமகனுடைய திறமையையுங் கண்டு மிகுந்த சந்தோஷத்துடன் மருமகனைப் பார்த்து, இனி நீ இவ்விடம் விட்டு எங்கும் போகக்கூடாது; எனக்கு மகனும் நீதான், மருமகனும் நீதான்; உன்னைத்தவிர என் காலத்திற்குப்பிறகு இந்நாட்டை ஆளத்தகுந்தவர் ஒருவருமில்லை; மேலும் நான் கிழவனாய்ச் சரீரத்தில் வலிமைகுறைந்து அரசுசெலுத்தத் திறமையற்றவனாய், இந்தச் சுமையை யார்தலையிலாவது இறக்கிவிட்டுக் கொஞ்சக்காலம் இளைப்பாறியிருக்கலாமென்று நினைக்கிறேன்; ஆதலால் நீ உன் பெண்டு பிள்ளைகளோடு இங்கேயேயிருந்து இந்த ராஜ்யத்தை ஆண்டுவர வேண்டுமென்றான்.

அதைக்கேட்டு அந்த ராஜன் அப்படியே ஆகட்டும்; ஆனால் முதலில் ஒருதரம் என் தேசத்திற்குப் போய்வந்து பின்பு இங்கேயே நிலையாயிருக்கிறேனென்று சொல்லி அவர்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தன் மனைவியையும் மகனையும் அங்கேயே நிறுத்திவிட்டுத் தான்மாத்திரம் தன் மரக்கிளிகள்மேல் ஏறிக்கொண்டு சுதேசத்தை நோக்கிச் சென்றான். அவ்விடம்போய்ச் சேர்ந்ததும் தன்

மாதா பிதாக்களைக் கண்டு, என் மாமனாருக்கு இத்தேசத்தைவிட ஆயிரம் மடங்கு அதிகமான ராஜ்யமிருக்கின்றது. அதை ஆள்வதற்கு ஒருவருமில்லாமல் அவர் என்னையே அத்தேசத்திற்கு அரசனாயிருக்கும்படி வேண்டுகிறார். உங்களிடத்தில் செலவு பெற்றுக்கொண்டு போகலாமென்று வந்தேன். எனக்குச் செலவுகொடுக்க வேண்டுமென்று சொல்ல, அவர்கள், நீ எங்கேயாயினும் க்ஷேமமாயிருந்தால் அதுவே எங்களுக்குச் சந்தோஷமென்று சொல்லிப்போக உத்தரவு கொடுத்தார்கள்.

பின்பு அவன் தன் தம்பியைப் பார்த்து, குழந்தாய்! என் மாமனார் கொடுத்த ராஜ்யமே எனக்கு ஆளப் போதுமானதாயிருக்கின்றது; பிதுராச்சிதமாய்க் கிடைத்த என் பாகத்தையும் நீயே எடுத்துக்கொள் என்று சொல்லி, தந்தை தனக்குக் கொடுத்த பாதிராஜ்யத்தையும் ஆண்டுவரும்படி தன் தம்பிக்கே கொடுத்துவிட்டு, அப்பட்டணத்துப் பெரியோரையெல்லாம் வணங்கிச் செலவு பெற்றுக்கொண்டு தன் மூத்த மனையாளையும் அழைத்துக்கொண்டு தன் கிளிகளெல்லாம் பின்தொடர்ந்துவர வெகு விநோதமாய் ஐந்துமலராசி தேசம்போய்ச் சேர்ந்தான். சேர்ந்ததும் இரண்டொருதினத்தில் அந்த ராஜ்யத்திலே பட்டாபிஷேகம் செய்துகொண்டு அங்கேயே வெகுகாலம் க்ஷேமமாகக் குடிகளைக் காத்துக்கொண்டிருந்தான்.

# 10-வது. சூரிய சந்திர வாயுக்கள் விருந்துண்ட கதை

ஒருநாள் சூரியன், சந்திரன், வாயு இவர்களெல்லாம் தங்களுக்குச் சிற்றப்பனும் சிற்றம்மையுமாகிய இடிமின்னல்களுடனே ஓரிடத்திற்கு விருந்துண்ணப்போனார்கள். அவர்களுடைய தாய் (அதாவது ஆகாயத்தில் வெகுதூரத்திலே நமது கண்ணுக்குப் புலப்படுகிற நக்ஷத்திரங்களுள் ஒன்று ;) தனியே இருந்துகொண்டு தன் மக்கள் எப்பொழுது திரும்பி வருவார்களோவென்று அவர்கள் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

சூரியன் வாயு ஆகிய இருவரும் பேராசைகொண்டவர்களும் தன்னயம் பாராட்டுகின்றவர்களுமா யிருந்தார்கள். வீட்டிலே தாயொருத்தியிருக்கிறாளே, அவளுக்கு ஏதாவது கொஞ்சம் கொண்டுபோய்க் கொடுப்போமென்கிற எண்ணம் எவ்வளவுமில்லாமலே அந்தச் சூரிய வாயுக்கள் இருவரும் தங்களுக்கு அளித்த நல்விருந்தைத் தாங்களே திருப்தியாய்ப் புசித்துக் களிப்படைந்தார்கள். சாந்தகுணமுள்ள சந்திரனோ தன் தாயை மறக்கவில்லை. தனக்குப் பரிமாறின ஒவ்வொரு பண்டத்திலும் சிறிதுசிறிது பங்கு எடுத்துத் தன் தாய்க்கு என்று ஒரு மூட்டையாகக் கட்டி வைத்துக்கொண்டான்.

மிகவும் பிரகாசமுள்ள தன் கண்களைக் கொட்டாமலே மலரமலர விழித்துக்கொண்டு நெடுநேரம் தன் மக்கள் வருகிற வழியையே பார்த்துக்கொண்டிருந்த தாய், அவர்கள் திரும்பி வீட்டண்டை வந்தவுடனே, என் அருமைக்குழந்தைகாள்! நீங்கள் எனக்கு என்ன கொண்டுவந்தீர்கள் என்று கேட்க, மூத்தமகனான் சூரியன், நான்

ஒன்றும் உனக்காக வீட்டுக்குக் கொண்டுவரவில்லை. நான் என் நேசர்களோடு உல்லாசமாய் விருந்துண்ணப் போனேனேயன்றி, தாய்க்குச் சோறெடுத்துக்கொண்டு வருவதற்கல்ல என்று சொன்னான். பின்பு வாயுவானவன், அம்மா! நானும் ஒன்றுங் கொண்டு வரவில்லை. விநோதத்திற்காக நான் எங்கேயாவது வெளியே போனால், அப்பொழுது நீ நமக்கு நல்ல உணவுகள் வந்து சேருமென்று ஒருபோதும் எதிர்பாராதே என்று சொன்னான். கடைசியில் சந்திரன், என் தாயே! ஏதாவது ஒரு எனங்கொண்டுவா, இதோ நான் கொண்டுவந்த பண்டங்களைப் பார் என்று சொல்லித் தன் கைக்குட்டையில் கட்டிவைத்திருந்ததை அவிழ்த்துக் காட்டினான். அதிலிருந்தவையெல்லாம் அவள் ஒருநாளும் கண்டிராத சிறந்த வாசனையும் ருசியுமுள்ள இனிய பண்டங்களாயிருந்தன.

அதைப் பார்த்தவுடனே தாய்நக்ஷத்திரம் சூரியனை நோக்கி, அடா! நீ உன் விநோதத்தையே பெரியதாய் நாடி வீட்டில் தாய் ஒருத்தி இருக்கிறாளேயென்கிற எண்ணம் சிறிதும் இல்லாமல், உன் வயிற்றை மாத்திரம் நிரப்பிக்கொண்டு களித்துவந்ததனால், இன்று முதல் உன் கிரணங்களெல்லாம் நெருப்புப்போல் வெப்பமுடையவைகளாகவும் எதையும் எரித்துப்போடத்தக்க தன்மையுடையவைகளாகவும் ஆகக்கடவன; உன் கொடுமையைக் கண்டு யாவரும் உன்னைப் பகைக்கக்கடவர்கள்; உன்னைக் கண்டவுடனே எல்லோரும் தங்கள் தலையை மூடிக்கொள்ளக்கடவர்கள் என்று இப்படிச் சாபமிட்டாள். அதனாலேதான் சூரியன் நாளைக்கும் கொடிய வெப்பமாய் எரிகின்றதுபோலும்.

அதன்பின்பு அவள் வாயுவை நோக்கி, அடா, தீக்குத் துணையானவனே! உன் கோலாகலத்திலும் கொந்தளிப்பிலும் நீ சிறிதேனும் என் நினைவேயில்லாமல் என்னை மறந்துபோனாயல்லவா? ஆகையால் எதையும் எரிக்கிற கிரீஷ்மகாலத்திலேயே நீயும் வெப்பமாய் வீசத்தலைப்பட்டு எந்தப் பிராணியையும் வதக்கிக் கொளுத்தக்கடவை; அதனால் உன்னை எவரும் வெறுத்துத் தடுக்கக்கடவர்கள் என்று ஆணையிட்டாள். அதனாலேதான் கோடைகாலத்திய தீக்காற்று மிகவும் நாம் வெறுக்கத்தக்கதாயிருக்கின்றதென்கிறார்கள்.

அவள் கடைசியாய்ச் சந்திரனை நோக்கி, என் அருமைக்குழந்தாய்! நீ சுகமனுபவிக்குங்காலத்திலும் உன் தாயை மறவாமல் அவ

னுக்கும் உன் உணவிற் சிறிதுபங்கு கொண்டுவந்ததனால், இதுமுதல் நீ எப்போதும் குளிர்ந்த குணமும், சாந்தகுணமும், ஒளியும் பொருந்தியிருக்கக் கடவாய்; மிகவும் தெளிவான உன் அமுதகிரணங்களோடு விஷத்தன்மையுள்ள கிரணம் ஒன்றும் சேராது; பிராணிகள் உன்னை எப்போதும் மிகவும் குளிர்ந்தவன் என்று கொண்டாடி, நீ பால்போல நிலவுகாய்ந்து நிற்கையில், மிகவும் களிப்புற்றிருக்கக் கடவர்கள் என்று வாழ்த்தினாள். இதுதான் சந்திரகிரணம் எக்காலத்திலும் அழகாயும் சீதமாயும் யாவரும் சந்தோஷமாய்க் கொண்டாடத்தக்கதாயும் இருப்பதற்குக் காரணமாகின்றதாம்.

## 11-வது. நரியும், அம்பட்டனும், ஒரு பிராமணனும்

ஒருகால் ஒரு அம்பட்டனுக்கும் நரிக்கும் நேசமுண்டாயிற்று. அவர்களுள் நரி மிகவும் கபடநினைவும் கள்ளக் 'கருத்துமுள்ளது. ஆயினும் அம்பட்டன், தன்னைப்போல் ஒருபோதும் சூது நினைப்பு நினையாமலும், தான் சூதுசெய்வதாகத் தன்னிடத்தில் அவன் ஒரு போதும் ஐயப்படாமலும் இருக்கும்படி நரி அவ்வளவு தந்திரமாக நடந்து வந்தது. அந்த நரி அவ்வளவு மோசநினைவு கொண்டிராமலிருக்குமாயின், அந்த நேசம் நாளதுவரையிலுங்கூட நீடித்து வந்திருக்கும். இப்படிப்பட்ட சூதுகள் ஒன்றையும் அம்பட்டன் அதிகமாய் அறியான்.

இப்படியிருக்கையில், ஒருநாள் நரி அம்பட்டனண்டை வந்து, தோழனே! நாம் நமக்குச் சொந்தமாய் ஒரு தோட்டம் வாங்கி அதில் வெள்ளரி, வள்ளி, பூசுணி முதலிய படர்கொடிகள் போட்டுப் பயிர் செய்தால் எவ்வளவு நன்மையாயிருக்கும். நாம் ஏன் அப்படிச் செய்யக்கூடாது என்றது. அதுகேட்டு அம்பட்டன், நீ சொன்ன யோசனை வெகு நன்றாயிருக்கிறது; அப்படியே செய்வோம்; இதோ திரவியமிருக்கின்றது, இதைக் கொண்டுபோய் நமக்காக ஒரு நேர்த்தியான தோட்டம் வாங்குவாயா? என்று சொல்ல, நரி ஆகட்டுமென்று அவன் கொடுத்த பொருளை எடுத்துக்கொண்டு போய் வெள்ளரி முதலிய பல படர்கொடிகளும், மா பலா முதலிய பழமரங்களும் நிறைந்த ஒரு திவ்யமான தோட்டத்தை வாங்கித் தினந்தப்பாமல் அத்தோட்டத்திற்குச் சென்று அங்குள்ள பழங்களைத் திருப்தியாய்ப் புசித்துக்கொண்டு வந்தது. ஒருநாள் அம்பட்டன், நீ

நமக்கு வாங்கின தோட்டம் எப்படியிருக்கிறதென்று கேட்டதற்கு, நரி, வெகு சிறந்ததாயிருக்கின்றது; அதில் வெகு நேர்த்தியான பழமரங்களும் செடிகளுமிருக்கின்றன. இன்னும் பழுக்கின்ற தருணமாகவில்லை; பழுத்தால் உனக்கு அவசியம் தெரிவிக்கிறேன் என்றது. அதைக் கேட்டு அவன் திருப்தியடைந்து பிறகு அதைப் பற்றி யாதொன்றும் கேளாமலேயிருந்தான்.

சிலநாள் கழித்தபின்பு அம்பட்டன், தோட்டம் இன்னும் பழுக்காமலிருக்குமாவென்று எண்ணி ஒருநாள் நரியைப் பார்த்து, நேசனே! தோட்டத்தில் செடிகள் இன்னும் பழுக்கவில்லையா? என்று கேட்க, அந்தக் குள்ளநரி, என் நண்பனே! இன்னுமில்லை; இப்போதுதான் மரங்கள் பூவெடுக்கின்றது என்று சொல்லிற்று. இவ்வளவுகாலத்தில் அத்தோட்டத்தில் பழுத்த பழத்திற்கும் நரி தின்றதற்கும் கணக்கு வழக்கில்லை. வெகுவாய் நரி அத்தோட்டத்திலேயே குடியிருந்து பழங்களை வாயோயாமல் தின்றுகொண்டேயிருந்தது.

சிறிதுகாலங்கழித்து மறுபடியும் அம்பட்டன், தோட்டத்தில் இன்னும் பழம் பழுக்கவில்லையாவென்று கேட்டான். 'அதற்கு நரி, இப்போதுதான் பூ உதிர்ந்து பிஞ்சுவிடுகிற தருணமாயிருக்கின்றது; பழுக்கிற பருவமாயின் உனக்கு அறிவியேனு? என்று சொல்லவே, அவன், இதென்ன அதிசயமாயிருக்கின்றது; செடிகளெல்லாம் பழுத்து மாறுகிறசமயம் வந்துவிட்டதே. இன்னும் பழுக்காமலிருக்குமா! நரி நம்மை மோசஞ்செய்வதுபோலக் காண்கிறதென்று தனக்குள்ளே சந்தேகங்கொண்டு, அதைப்பற்றி நரியுடன் ஒன்றுஞ் சொல்லாமலே, மறுநாள் நரி தோட்டத்திற்குப் போகும்போது அதற்குத் தெரியாமலே அதைப் பின்தொடர்ந்துபோனுன்.

அன்றையதினம் அந்த நரி தன் இனத்தாரையெல்லாம் விருந்துண்ணத் தன் தோட்டத்திற்கு வரும்படி வேண்டியழைத்திருந்ததனுல், பக்கத்துக் காடுகளிலுள்ள நரிகளெல்லாம் கூட்டங்கூட்டமாய்க் குதித்து இங்குமங்கும் கூத்தாடிக்கொண்டு இத்தோட்டத்திற்கு வந்து பழவகைகளையெல்லாம் கடித்துத் தின்று கொழுத்துக் கூச்சலிட்டுச் சந்தோஷித்திருந்தன.

அம்பட்டன் வேலியண்டை பதுங்கிநின்று இந்தக் காட்டு மிருகங்களெல்லாம் கூட்டங்கூடிக் களித்திருப்பதையும், தனக்குத்

தோழன்போல நடித்த திருட்டு நரி அவைகளுக்கு வேண்டியபடி உபசாரஞ்செய்து சிலவற்றோடு விநோதமாய்ப் பேசிக்கொண்டும், சிலவற்றோடு சிரித்துக்கொண்டும், பலவற்றோடு பழங்களைப் போஜனந்தமாய்ப் புசித்துக்கொண்டும் இருப்பதையுங் கண்டு மிகவும் கோபமடைந்தான். ஆயினும், அந்த மிருகங்களெல்லாம் பெருங் கூட்டமாயும் மிக்க வலிமையுள்ளவைகளாயு மிருந்ததனால், தற்காலத்தில் அவைகளை ஒன்றுஞ்செய்யத் துணியாமல், ஆகட்டும்; நான் இந்தத் திருட்டு நரியை விட்டேனா! மறுபடி அது இந்தத் தோட்டத்திற்கு வந்து துள்ளித் தலையெடுக்கவொட்டாமல் செய்துபோடுகிறேன் என்று சொல்லி உடனே வீட்டுக்குப்போனான். தருணம் பார்த்திருந்து அந்த நரிகளெல்லாம் ஓடிப்போனபின்பு அவன் மறுபடியும் தோட்டத்திற்கு வந்து, அங்கே நரிகள் தின்று மிகுந்திருந்த ஒரு பெரிய வெள்ளரிப்பழத்தில் இலை மறைவாய் ஒரு கூர்மையான கத்தியைக் கட்டிவிட்டு வீடுபோய்ச் சேர்ந்தான். இவ்வாறு தான் தோட்டத்தில் கண்ட அதிசயத்தையாவது, அந்தப் பகையைத் தீர்ப்பதற்காகத் தான் செய்துவந்ததையாவது அவன் ஒருவரோடும் சொல்லவில்லை.

நரி மறுநாள் காலையில் எழுந்து, நமது தோட்டத்தில் ஒரு பழமாவது மிகுந்திராதா, போய்ப் பார்த்துவரவேண்டுமென்று எண்ணங்கொண்டு புறப்பட்டுத் தோட்டத்திற்குப்போய் முழுதுஞ் சுற்றித் தேடிப் பார்த்தது; எங்கும் ஒரு பழமும் அகப்படவில்லை. கடைசியில் அம்பட்டன் கத்திகட்டிவைத்த பெரும்பழத்தைப் பார்த்துச் சந்தோஷமடைந்து அதைத் தின்ன ஆரம்பித்தது. தின்றுகொண்டிருக்கையில், மறைவாய்க் கட்டியிருந்த கத்தி வெகு நுட்பமாய் அறுப்பது தெரியாமலே கழுத்து, தாடை, விலா முதலிய விடமெல்லாம் நன்றாய் அறுத்துவிட்டது.

அந்தநோய் உடம்பில் உறைக்கவே நரி திடுக்கிட்டு நிதானித்துப் பார்த்து, ஆ! இது அந்தக் கேடுகெட்ட * கர்மகனுடைய காரியந்தான் என்று பெருங்கூச்சலாய்க் கதறி அவனுடைய வீட்டுக்குப் போகத் துணியாமல் காட்டுக்கோடி வெகுதூரத்துக்கு அப்பால், உதிரம் உடம்பினின்றும் வெகுவாய் வடிந்துபோகவே உடம்பு பலவீனப்பட்டு அப்புறம் நடக்கச் சக்தியற்று, ஒரு பெரிய பாறையில் உயிரை

* கர்மகன்—அம்பட்டன.

விட்டுவிடத் தீர்மானித்துக் காலைப் பரப்பிக்கொண்டு வீழ்ந்தது; ஆயினும் அது இறந்துபோகவில்லை. மூன்றுநாள்வரையில் உடம்பை அணுவளவும் அசைக்கக்கூடாத நோவும், அளவற்ற ரத்தம் ஆறாய்ப் பெருகிப்போனதனால் வரவர அதிக ஆயாசமும் உண்டாயிருந்தது.

நாலாநாள் சரீரத்திற் கொஞ்சம் சக்தியுண்டாக, நரி அந்தப் பாறையைவிட்டு எழுந்திருக்கப் பார்த்தது. அந்த மூன்றுநாளும் அதின் உடம்பு ரத்தமெல்லாம் பாறைமேல் பெருகவே, அந்தப் பாறையோடு உடம்பு காயமெல்லாம் உறுதியாய் ஒட்டிப் பெயர்க்கக்கூடாமல் பொருக்குதட்டிப்போயிருந்தது. அதனால் நரி ஒன்றுந் தோன்றாமல் திகிலடைந்து தன் உடலைப் பாறையினின்றும் பெயர்க்கப் பலவிதமாய்ப் பிரயத்தினப்பட்டது. எவ்வளவு முயன்றும் உடலைப் பாறையினின்றும் பெயர்க்கக்கூடவில்லை. அதுகண்டு அந்த நரி, ஐயோ! ஐயோ! நோவு நீங்கிவிடுமென்று நினைத்துச் சந்தோஷமாயிருந்ததெல்லாம்போகக் கடைசியில் இப்படி உயிர் மாய்க்கும்படியா நேர்ந்தது! ஐயோ! இது நான் செய்த சூதுக்குச் சிக்ஷையோ! என்று பலவிதமாய்ப் புலம்பத் தொடங்கிற்று. இப்படியிருக்கையில், 'அகதிக்கு ஆகாயமே துணை' என்கிறபடி, தெய்வ கடாக்ஷத்தால் ஒரு மழைபெய்தது. பெய்யவே மழைநீர் அதின் உடம்பிலிருந்த புண்களிலூறி உடலை எளிதில் எடுக்கும்படிச் செய்தது.

அந்தப் பாறையினின்றும் எழுந்திருக்க வழியுண்டானவுடனே, இனிப் பிழைக்கிறவிதம் எப்படி என்று நரிக்குப் பெரிய சிந்தையுண்டாயிற்று. திரும்பவும் அந்த அம்பட்டன் வீட்டுக்குப்போக அதற்கு மனந்துணியவில்லை. கொஞ்சநேரத்துக்குப் பிறகு அதன் மனதில் ஒரு யோசனை தோன்றிற்று. அந்த யோசனைப்படியே பக்கத்திலிருந்த சேற்றை ஒரு பெரிய சட்டியில் வாரிப்போட்டு, இலைகளால் அதின் வாயைச் செம்மையாய்க்கட்டித் தலையில் வைத்துக்கொண்டு அதை விற்கப் பக்கத்தூருக்குப் போயிற்று.

அவ்வூரில் ஒரு வீட்டுவாயிலில் பெண்பிள்ளை ஒருத்தி உட்கார்ந்திருக்கக் கண்டு, நரி அவளண்டைபோய், அம்மா! வெண்ணெய் வாங்கிக்கொள்கிறீர்களா? வெகு நேர்த்தியான வெண்ணெய்; உங்களுக்குத் தேவையிருக்குமாவென்றது. அதைக்கேட்டு அவள், கொண்டுவா பார்ப்போம்; நல்ல வெண்ணெய்தானா; எதோ காட்டு என்றாள். அதற்கு நரி, இது மிகவும் உயர்ந்த வெண்ணெய்; இந்

தப் பாத்திரத்தை இப்போது திறக்கக்கூடாது; திறந்துவைத்தால் கெட்டுப்போகும்; அதை நீர் உபயோகப்படுத்தப்போகிற வேளையிலே தான் திறந்துகொள்ளவேண்டும்; வேண்டுமானால் வாங்கிக்கொள்ளும், வேண்டாமற்போனால் நான் இன்னும் எங்கேயாவது விற்றுக் கொள்கிறேன். வீணாய்த் தாமதஞ்செய்யவேண்டாம் என்று வெகு கம்பீரமாய்ப் பேசிற்று. அந்தப் பேச்சின் திறத்தினாலும், அந்தச் சட்டிக்குள்ளிருப்பது வெகு உயர்ந்ததாயிருக்குமென்று யாவரும் நினைக்கும்படி அவ்வளவு பக்குவமாய் அதன் வாயைக் கட்டியிருந்ததனாலும், அதற்குள் இருப்பது சிறந்ததாகவே இருக்குமென்று அவள் நினைத்தாள். அவளுக்கு வெண்ணெயும் அவசியம் வேண்டியதாயிருந்தது. அதனால் அவள், வெண்ணெய் நல்லதாயிராமல் நரி நம்மை மோசஞ்செய்யக் கருதியிருக்குமாயின், அதை எப்படியாவது நமது தலையில் கட்டிவிட்டுப்போகும்படி நம்மை நிர்ப்பந்தப் படுத்தாதா; இப்படி ஓடிப்போவதிலேயே நோக்கமாயிருக்குமா என்று தனக்குள்ளே உறுதிகொண்டு, நல்லது, சட்டியை வை; இதோ ரூபாய், எடுத்துக்கொள்; வெண்ணெய் நல்லதென்பதற்குச் சமுசயமில்லையே என்றாள். அதற்கு நரி, நீ ஏன் திரும்பித் திரும்பிக் கேட்கிறாய்; உனக்குச் சந்தேகமிருந்தால் கொடுத்துவிடு; நான் இன்னும் எங்கேயாவது விற்றுக்கொள்கிறேன்; ஆனாலொன்று, இதை ஒரு குளிர்ந்தவிடத்திலே வைத்து உனக்கு அவசியமான போதுதான் திறக்கவேண்டும்; மற்றப்படி திறந்தால் கெட்டுப்போம் என்று அவளுக்குத் தைரியமுண்டாகும்படி சொல்லி ரூபாயை வாங்கிக்கொண்டு ஓடிப்போய்விட்டது. கொஞ்சநேரங்கழித்து அந்தப் பெண் அதைத் திறந்து பார்த்து, நரி தன்னை மோசஞ்செய்ததற்காக அதிக கோபமடைந்தாள். அவள் கோபம் யாரை என்ன செய்யும்; அந்நேரத்துக்குள் நரி வெகுதூரம் ஓடிப்போய்விட்டதே!

இப்படி மோசவெண்ணெய் விற்றுச் சம்பாதித்த பொருள் எத்தனை நாளைக்குத் தாங்கும். சிலநாளையில் அந்தப்பொருள் செலவழிந்துபோகவே, நரி மறுபடியும் முன்போலவே விசாரப்படத் தலைப்பட்டது. ஆயினும் அதின் அதிஷ்டவசத்தால் ஒரு எருது பாதையோரத்தில் செத்துக் கிடந்தது. அதைக்கண்டு நரி சந்தோஷமடைந்து, அந்தப் பிணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய்த் தின்றுகொண்டே வெளியிலிருப்பவர் கண்ணுக்குத் தெரியாமல் அதின்

வயிற்றுக்குள்ளே போய்விட்டது. அது நல்ல கோடைகாலமாகை யால், அந்த எருதுத்தோல் வெயிலால் நன்றாயுலர்ந்து சுருங்கிக் கடிக்கக்கூடாமல் முன் அது உள்ளேபோன துவாரமும் அடைபட்டுப் போகவே, உள்ளேபோன நரி திரும்பி வெளியேவர வழியில்லாமல், அதனுள்ளேயே அல்லாடித் தவிக்கும்படியாயிற்று.

இப்படியிருக்கையில், அவ்வூர்ப் பறையர்கள் அந்த எருதை இழுத்துக்கொண்டுபோக வந்தார்கள். அது தெரிந்து நரி, நம்மைக் கண்டால் இவர்கள் கொன்றுவிடுவார்களே; காணவிட்டால் உயிரோடு நம்மையும் புதைத்துப்போடுவார்களே என்று பயந்து அதற்கொரு உபாயஞ்செய்தது: அந்த ஜனங்கள் கிட்ட வந்தவுடனே நரி ஓ மனிதர்களே! நீங்கள் என்னைத் தீண்டப்போகிறீர்களோ? நான் ஒரு தவசியென்று உங்களுக்குத் தெரியாதோ? என்று கூவிற்று. அவர்கள் அந்தக் கூச்சலைக் கேட்டு மிகவும் பயந்து, இதென்ன! செத்த எருது பேசுகிறதே! ஏதோ ஒரு தேவதை இதில் உட்புகுந்திருக்கவேண்டும் என்று நடுங்கிக்கொண்டு, சுவாமிகளே! நீங்கள் யார்? தங்களுக்கு என்ன தேவை என்று கேட்டார்கள். அதைக் கேட்டு நரி, நான் ஒரு பரிசுத்தனான தவசி; உங்களுருக்கெல்லாம் நானே எஜமானன்; நீங்கள் ஒருபோதும் எனக்குப் பூசை புரஸ்காரம் முதலிய உபசாரமொன்றுஞ் செய்வதில்லை; ஆதலால் நான் உங்களிடத்தில் மிகவுங் கோபங்கொண்டிருக்கிறேன் என்று கூச்சலிட்டது, அதற்கு அவர்கள், ஓ எங்கள் பெருமானே! தங்கள் திருவுள்ளத்துக்கு உவப்பான பொருள் என்னவோ அதைத் தெரிவித்தால் உடனே கொண்டுவந்து நிவேதனஞ்செய்யக் காத்திருக்கிறோம் என்று வேண்ட, நரி சந்தோஷமடைந்து, நல்லது, அளவற்ற பூக்களும், சோறும், ஒரு கொழுத்த கோழியும் கொண்டுவந்து வைத்து எனக்கு அபிஷேகஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்தால் உங்கள் பிழைகளை நான் பொறுப்பேன் என்று சொல்லவே, அவர்களெல்லாம் அப்படியே கொண்டுவந்து வைத்து எருதுத்தோல்மேல் அபிஷேகஞ்செய்தார்கள். அந்தத் தண்ணீர் ஊறித் தோல்மெதுப்பட்டவுடனே நரி அவ்வுடலைப் பிளந்துகொண்டு வெளியே வந்து வாயில் கோழியைக் கவ்விக்கொண்டு, யாவரும் இதென்னவென்று பிரமித்து நிற்க, ஒரு குதியாய்க் குதித்துக் காட்டுக்கு ஓடிப்போய்விட்டது. அதைப் பிடிக்கப் பலபேர் பின்தொடர்ந்து ஓடினார்கள். ஒரு

வர் கையிலும் அது அகப்படவில்லை. ஒவ்வொருவரும் கைகால் முறிந்து திரும்பிவந்து சேர்ந்தார்கள்.

இவ்வாறு அவர்களை மோசஞ்செய்துவிட்டு அந்த நரி ஒரு பெருங்காட்டிற் சென்றது. அங்கே ஒரு செடியின்கீழ்த் தனியே தங்கியிருந்த ஆட்டுக்குட்டியொன்று இந்த நரியைப்பார்த்து, ஓ! ஓ! இது நம்மைத் தின்றுவிடுமே! இதை எப்படியாவது வெருட்டித் துரத்திவிடவேண்டும் என்று எண்ணங்கொண்டு, இதோ நரி, இதோ நரி! ஓடிவாருங்கள் என்று உரக்கக்கூவிப் பல ஆடுகள் ஓடிவருவதுபோலத் தானொன்றே இங்குமங்குமாய் ஓடிக் கிளைகளைக் குலுக்கி இலைகளை அசைத்துச் சலசலவென்று சத்தமுண்டாக்கிற்று. அதைக் கேட்டு நரி பயந்து ஓடிப்போவது கண்டு, ஆட்டுக்குட்டி மறுபடியும், சீக்கிரம் ஓடி வாருங்கள், நரி ஓடிப்போகிறது! நரி ஓடிப்போகிறது! சீக்கிரம் சீக்கிரம் என்று பலதரம் கூச்சலிட்டது. அதைக் கேட்கவே அக்காட்டிலிருந்த மற்ற நரிகள்கூடத் திகிலடைந்து ஓடிப்போய்விட்டன. இப்படிப் பலபேரை மோசஞ்செய்துவந்த நரி கடைசியில் ஒரு அற்பமான ஆட்டுக்குட்டியால் வெருட்டுண்டு பயந்தோடிற்று.

'முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉங்
கற்றனை யென்று களியற்க—சிற்றுளியால்
கல்லுந் தகரும் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தினால்.'

இப்படித் திருட்டுப் பிழைப்பு பிழைத்து எத்தனைநாள் ஜீவனஞ்செய்யமாளும். ஆட்டுக்குட்டியினின்றுந் தோல்வியடைந்தபிறகு அந்த நரி பிழைக்க வழியொன்றும் அகப்படாமல் திரும்பவும் முன் தனக்குத் தோழனாயிருந்த அம்பட்டனுடைய ஊர்வந்து சேர்ந்து, இரவிலே திருடி ஜீவித்துக்கொண்டிருந்தது. அந்த நரி அங்கே வருவது அவ்வூரார் ஒருவர்க்கும் சம்மதம் இல்லையென்றாலும், அதை ஒருவரும் ஒன்றும் செய்யத் துணியவில்லை. அதின் பழைய நேசனும் அது தனக்கு முன்செய்த வஞ்சனைக்காகப் பகைதீர்த்துக்கொள்ளத் தீர்மானித்து, அதைப் பலதடவைகளில் பிடிக்கப் பார்த்தான்; தவறிப்போயிற்று. கடைசியில் ஒருநாள் ராத்திரி வலைபோட்டுப் பிடித்துக்கொண்டு, ஆ! நன்றிகெட்ட நரியே! முன் நான் கட்டிவைத்த கத்திக்குத் தப்பிப்போனாயல்லவா? இனி என்னசெய்யப்போகிறாய்?

என்று சொல்லி, அதின் நான்கு கால்களையும் வலித்துக்கட்டித் தன் மனையாளண்டை வந்து, இதோ உனக்கு எப்படிப்பட்ட பரிசு கொண்டுவந்தேன் பார் என்று சொல்ல, அதைக்கேட்டு அவள் ஓடி வந்தாள். அவள் கையில் அந்த நரியைக் கொடுத்து இதை அவிழ்த்து விடாமல் உள்ளே பத்திரமாய் அடைத்துவை; நான் நல்லதாய் இதை வெட்ட ஒரு கத்தி வாங்கி வருகிறேன் என்று சொல்லிப்போனான். அவளும் அப்படியே அதை வீட்டுக்குள் ஒரு அறையில் அடைத்து வைத்தாள்.

அம்பட்டன் அப்புறம் போனவுடனே நரி அவன் மனையாளைப் பார்த்து, ஓ என் பெருமாட்டி! இன்னும் ஒரு நிமிஷத்திற்கெல்லாம் உன் கணவன் வந்து என்னைக் கொல்லப்போகிறார்; நாவறண்டு போகின்றது, சற்று இந்தக் கட்டை அவிழ்த்துவிடுவாயானால் உனக்கு வெகு சுகிர்தமுண்டு; ஒருவாய் தண்ணீர் குடித்துவிட்டு ஓடிவருகிறேன்; தவித்த வாய்க்குத் தண்ணீரில்லாமல் இறந்துபோகிறேனே! என்று வேண்ட, அவள், அது நான் செய்யமாட்டேன்; நீ ஓடிப் போவாய்; அவர் வந்து என்னைப் புடைப்பார்; அந்தச் செய்தியே எனக்குத் தெரியாதென்று சும்மா விருந்தாள். நரி மறுபடியும், அம்மா! இப்படித்தவிக்கிறேனே! உனக்குக் கொஞ்சமும் கருணையில்லையா? ஒரு நிமிஷகாலத்தில் தண்ணீர் குடித்துவிட்டு வருகிறேன்; நான் ஓடிப்போகவில்லை; சத்தியமாய்ச் சொல்லுகிறேன் என்று வெகுவிதமாய் வேண்டவே, அவள்: ஐயோ பாவம்! இனி இது என்ன சுகம் அனுபவிக்கப்போகிறது! இன்னும் ஒரு நொடியில் உயிர் போகப்போகிறதே என்று இரங்கி, அதின் கால்கயிற்றை அவிழ்த்துக் கழுத்திலே போட்டுப் பிடித்துக்கொண்டு வாயிலண்டையிருந்த வாய்க்காலில் தண்ணீர்காட்டக் கொண்டுபோனாள். அத்தருணத்தில் நரி ஒருகுதி குதித்துத் துள்ளித் திமிறிக்கொண்டு ஓடிப் போய்விட்டது.

அதற்குப்பின்பு அந்த நரி சிலநாள்வரையில் ஓரிடத்திலும் இருப்பு கொள்ளாமல், பல இடங்களிலும் ஓடித்திரிந்து கண்டதைத் தின்று கொண்டிருந்தது. இப்படியிருக்கையில் ஒருநாள் ஓரிடத்தில் வழியே போகும்போது பாதையோரத்தில் ஒரு குடிசையில் ஒரு ஏழைப் பார்ப்பான், ஏழு பெண்களை வைத்துக்கொண்டு அவர்களைக் காப்பாற்ற வழியற்று, ஐயோ! நான் இப்பெண்களை வைத்துக்கொண்டு

என்ன செய்வேன்! இவர்களைக் கலியாணஞ் செய்துகொள்பவர் ஒருவரும் இல்லையே; என் உயிருள்ளளவும் இவர்களை நானே போஷிக்கும்படி நேர்ந்ததே; காப்பாற்ற வழியொன்றும் இல்லையே! நாய் நரி எதாவது ஒன்று வந்து கேட்டாலும் கொடுத்துவிடலாம்; அதையும் காணேமே என்று சொல்லித் தானே வெறுத்துக்கொண்டிருந்தான். அதைக் கேட்டுக்கொண்டேபோன நரி மறுநாள் அங்கே வந்து, ஓ பிராமணரே! நீர் நேற்று, நாய் நரி எதாவது ஒன்று வந்து கேட்டாலும் என் பெண்ணைக் கொடுத்துவிடுவேன் என்று சொன்னீரல்லவா? இப்போது எனக்கு ஒரு பெண்ணைக் கொடுப்பீரா என்று கேட்டது.

அதைக் கேட்டவுடனே அந்த மனிதன் இதென்னவென்று திகிலடைந்தான். அவன் அந்தப் பேச்சுபேசினது உண்மையாயினும், அப்படி நேரிடுமென்று அவன் கனவிலும் நினைக்கவில்லை. அது வருத்தம்பொருமற் பேசின பேச்சேயன்றி வேறல்ல. ஆயினும் சொன்னசொல் தவறுவது நீதி அல்லவென்று அவன் அப்படியே செய்யத் தீர்மானித்தான். அத்தருணத்தில் அப்பெண்களெல்லாம் பசியெடுத்துச் சோற்றுக்கு அழத்தலைப்பட்டன. அப்போது அவர்களுக்குக் கொடுக்க அவனண்டை ஒன்றுமில்லை. அந்தச் சமயம் பார்த்து நரி மறுபடியும், நீர் உமது பெண்களில் ஒன்றை எனக்குக் கொடுத்துவிடுவீரானல் உமது வருத்தம் கொஞ்சம் குறைவுபடாதா? எனக்குக் கொடுக்கிற பெண்ணை நான் பாதுகாத்துக்கொள்ளுகிறேன்; அதற்காக நீர் சிந்திக்கவேண்டாம் என்றது. அதைக் கேட்டுப் பார்ப்பான் சந்தோஷமடைந்து, தன் பெரிய பெண்ணை அதற்குக் கலியாணஞ் செய்துகொடுக்க, நரியும் வெகு சந்தோஷமாய் அப்பெண்ணை அழைத்துக்கொண்டு தன் குகைக்குப் போய்விட்டது.

இந்தக் கதைகளைக் கேட்கும்போது அந்த நரி வெகு சாமர்த்தியமுள்ளதென்று யாவர்க்கும் தோன்றவில்லையா? அது சாதாரணமான நரிகளைப்போலன்று; அப்படியிருந்தால் இத்தன்மையான காரியங்களை அது என்றைக்காவது செய்யமாட்டுமோ? இப்படிச் செய்ததெல்லாம் ஒரு சிறந்த ராஜகுமாரனே; அவன் ராஜாவாயினும் மாயைகளையெல்லாம் நன்ருய்க் கற்றுணர்ந்தவன். அதனல் விநோதத்திற்காகவே இப்படி மாறுவேஷம்பூண்டு திரிந்துகொண்டிருந்தான்.

அவன் இருப்பிடம் வெளியிலிருந்து பார்ப்பவர்க்கு ஒரு சாதாரணமான குகையாகத் தோன்றினலும், உள்ளே நவரத்தினங்களிழைத்த சுவர்ணமயமான ஒரு ராஜமாளிகையாய் இருந்தது. அவன் நரியல்ல, ராஜாவென்பது அவன் மனையாளுக்குக்கூடத் தெரியாது. ஏனெனில், அவன் காலைப்பொழுதுதவிர மற்ற வேளைகளில் அந்த வேஷத்தை வாங்குவதில்லை. இப்படி அவன் ஒவ்வொருநாளும் காலையில்மாத்திரம் நரிவேஷத்தை வாங்கி நன்ருய் ஸ்நானஞ்செய்துவிட்டு மறுபடியும் அதேவேஷந்தரித்து விநோதமாய் ஆடித்திரிந்துகொண்டு தன் சொந்த மனையாளும், இப்போது கலியாணஞ்செய்துகொண்ட பார்ப்பான் பெண்ணும் தானுமாய்ச் சுகமாக வாழ்ந்துகொண்டிருந்தான்.

இப்படியிருக்கையில் ஒருநாள் அந்த ராஜகுமாரனுகிய நரி தன் குகையைவிட்டு வெளியே வந்து மலைச்சாரலில் உலாத்திக்கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் அதன் மாமனுன கிழப்பிராமணன் மெல்லமெல்ல அதனண்டைக்கு வந்துகொண்டிருந்தான். அவனைக் கண்டு நரி மிகவும் மனவருத்தமுற்றது. ஏனெனில் அவன் மிகவும் எளியவனுகையால் தன்னை உதவி கேட்பதற்காகவே தன்னிடத்திற்கு வருகிருனென்று அது நினைத்தது; அது உண்மைதான். அந்தப் பிராமணன் நரியண்டை வந்து, மருமகனே! நான் சிறிதுகாலம் உன்னுடன் உன் குகைக்குள் வஸித்துக்கொண்டிருக்கலாமா? இப்போது நான் பிழைக்க வழியற்று இருக்கிறேனுகையால் இத்தருணத்தில் நீதான் என்னைக் கைவிடாமற் காக்கவேண்டுமென்று வேண்டினன்.

அதுகேட்டு நரி, இந்தக் கேடுகெட்ட குடிசையில் நீங்கள் நுழையலாமா? இங்கேவசிப்பது உங்களுக்குத் தகுதியன்று. உங்களுடைய மகளை நான் புசித்துவிட்டிருப்பேனென்று சந்தேகமுண்டானுல் அவளை இங்கே வரவழைக்கிறேன், பார்த்துக்கொள்ளலாம்; உங்களுக்கு ஏதாவது உதவிசெய்யக்கூடுமோ கூடாதோ அதையும் அவள் வந்தபிறகு கூடிப் பேசிப் பார்ப்போம் என்றது. தன் அரமனையை அவனுக்குக் காட்டக்கூடாதென்பது அதன் உண்மையான கருத்து.

அந்தப் பெண் வந்தபிறகு மூவரும் ஒரு பாறைமேலுட்கார்ந்து சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது பிராமணன், எனக்கு ஜீவனத்திற்கு யாதொரு வழியுமில்லை; நீ கைவிடுவாயானுல்

என் பெண்டுபிள்ளைகளெல்லாம் கூண்டோடு கைலாசம் போக வேண்டுவதுதானென்று தன் துன்பத்தைப் பரிதாபமாய்ச் சொல்ல, நரி, அது மெய்தான்; உங்கள் குடும்பமெல்லாம் காப்பதென்றால் என்னால் முடியுமா? ஆயினும் என்னால் கூடியவளவு சிறிது உதவி செய்கிறேனென்று எழுந்து குகைக்குப்போய் ஒரு சிறந்த மாதளஞ் செடியைக் கொண்டுவந்து அவன் கையிற் கொடுத்து, இதை நீங்கள் கொண்டுபோய் உங்கள் புழக்கடைத் தோட்டத்தில் நடுவீர்களானால் வேண்டியபடி பலன் கொடுக்கும்; அதை விற்று ஜீவிக்கலாமென்றது. சந்தோஷமாய் அவனும் அந்தச் செடியை வாங்கிக்கொண்டு போய்த் தோட்டத்தில் நட்டுவைத்தான்.

மறுநாள் உதயத்திற்குள் அது, வெகு நேர்த்தியான பழங்கள் அளவற்றுக் குலுங்க, ஓர் அற்புதமான மாதளஞ்செடியாய் வளர்ந்திருந்தது. அதைப்பார்க்கவே அந்தப் பிராமணன், அவனுடைய மனைவி, மக்கள் யாவருக்கும் பேரானந்தமுண்டாயிற்று. அண்டை அயலாரும் இவன் புழக்கடையில் எவ்வளவு சீக்கிரமாய் மாதளஞ்செடி வளர்ந்து பழுத்துவிட்டது பார்த்தீர்களாவென்று ஒருவரோடு ஒருவர் சொல்லி அதிசயித்தார்கள்.

அப்போது வஞ்சகனென்னும் அண்டைவீட்டுக் கோமுட்டி ஒருவனுக்கு மாதளம்பழம் அவசியம் தேவையாயிருந்தது. இந்தப் பிராமணனுடைய தோட்டத்தில் வெகு நேர்த்தியான பழங்கள் பழுத்திருப்பது கேள்விப்பட்டு அவன் இங்குவந்து அவ்வீட்டுக்காரியைக் கேட்டு இரண்டொரு பழம் விலைகொடுத்து வாங்கிக்கொண்டு போனான். வீட்டுக்குப்போய் அதை அரிகையில், அவன் கண்ட அதிசயத்தை நாம் என்னவென்று சொல்லக்கூடும்! அந்த அதிசயக்காட்சி அவனைப் பிரமிக்கச் செய்தது. அந்தப் பழத்திற்குள் மிகவும் மதுரமான விதைகளிருக்குமென்று எண்ணிப் பழத்தை அவன் அரிந்தான். அதனுள் விதையெல்லாம் விலையில்லா மாணிக்கமணிகளாயிருந்தன. அதைப் பார்த்தவுடனே அவன் ஆனந்தக்கடலில் மூழ்கித் தன் கை நிரம்பத் திரவியத்தை வாரிக்கொண்டு வெகு வேகமாய்ப் பிராமணன் வீட்டுக்கு ஓடிவந்து, அவன் பெண்சாதியைக் கண்டு, ஓ பெண்மணியே! நீ கொடுத்த பழங்கள் வெகு ருசியாயிருக்கின்றன; ஆதலால் உன் செடியிலிருக்கிற எல்லாப் பழங்களையும் நானே வாங்கிக்கொள்ள விரும்புகிறேனென்று சொல்லி, தான் கொண்டுபோன

பணத்தை அவள் கையிற்கொடுத்துவிட்டு அங்கிருந்த பழங்களையெல்லாம் வாங்கி வீடுகொண்டு சேர்த்தான்.

அந்தத் திருட்டுக்கோமுட்டி தான் இவ்வாறு தேடிய பொருளை மற்றெவருக்கும் அறிவிக்கவில்லை. அந்த எளிய பார்ப்பானும் அவன் பெண்டுபிள்ளைகளும் சிறிதும் ஆலோசனையற்றவர்களாய்த் தங்கள் பழங்களில் ஒன்றையும் அரிந்துபாராமல் சிறிது பொருளுக்கு அளவற்ற மாணிக்கங்களை விற்றுப்போட்டார்கள்.

மறுநாள் காலையில் எழுந்து பார்க்கையில் முதனாள்போலவே அம் மரத்தில் அபரிமிதமாய்ப் பழங்கள் பழுத்து நிறைந்திருந்தன. அது கண்டு அந்தக் கொடிய கோமுட்டி, அதை யாராவது வாங்கிப்போய் அதன் பெருமையை அறியப்போகிறார்களேயென்று பயந்து, மறுபடியும் ஓடிவந்து அந்தப் பழங்களையும் வாங்கிக்கொண்டுபோனான். இப்படியே வெகுநாள்வரையில் நடந்து வந்தது. 'ஆசைக்கு அளவில்லை' என்று பெரியோர் சொல்வது பொய்யாகுமா! இவ்வாறு இந்தப் பார்ப்பானிடத்தினின்றும் பழம் வாங்கி வஞ்சகன் வீடுமுழுதும் நவரத்தினங்களைக் குவித்துவிட்டான். இப்படியே கொஞ்சக் காலங்கழிந்தது. அப்படியிருக்கையில் அந்தச் செடி பட்டுப்போகிற காலம் வந்துவிட்டது. அப்போது ஒருநாள் கோமுட்டி வழக்கப்படி பழம் வாங்க வந்தான்; அன்றையதினம் ஒரு பழமும் பழுக்காமலிருக்கவே, அவன் மிகவும் விசனமாய் முகம்வாடி வீடுபோய்ச் சேர்ந்தான்.

அந்தச் செடி பழுக்க ஆரம்பித்த நாள்முதல் தினந்தோறும் பழுக்கும் பழங்களை விற்றுச் சம்பாதித்த பணம் அவர்களுக்கு அன்றாடம் ஜீவனத்திற்குத்தான் போந்ததும் போதாததுமாயிருந்தது. அன்றையதினம் பழங்கள் பழுக்காமற்போகவே, அவர்கள் அரிசிவாங்கப் பணமில்லாமல் முன்போலவே துக்கிக்கத் தொடங்கினார்கள். அச் சமயத்தில் அதிக சமர்த்தியான அந்தப் பிராமணனுடைய கடைசிப் பெண் பசி பொறுக்கமாட்டாமல், நமது புழக்கடைச் செடியில் வாடிவதங்கின பழமாவது இரண்டொன்று அகப்படாதா பார்ப்போமென்று போய்ச் செடிமுழுதும் ஆராய்ந்து பார்த்தாள். ஒருவர் கண்ணுக்குந் தெரியாமல் இரண்டுமூன்று பழங்கள் இலைமறைவாய்க் கிடந்தன. அவைகளைத்தேடிப் பறித்துக்கொண்டு ஓடிவந்து ஆவலோடு அரிகையில், அதனுள் நவரத்தினங்கள் நிறைந்திருப்பது

கண்டு, ஆச்சரியத்தால் ஒன்றுந்தோன்ருமல் கோவென்று கூவினுள். அதைக் கேட்டு அவள் தாய் தந்தையர்களும் சகோதரிகளும் என்ன என்னவென்று பயந்து ஓடிவந்தார்கள். அவர்களைப் பார்த்து அந்தப் பெண், இதோ இந்த அற்புதத்தைக் கண்டீர்களா! ஒவ்வொரு பழத்தி லும் உயர்ந்த ரத்தினங்கள் அளவற்றுக் கிடக்கின்றன! நாம் விற்றுப் போட்ட பழங்களில் இன்னுஞ் சிறந்த மணிகள் அபரிமிதமாயிருந்தி ருக்கு மென்பதற்குச் சந்தேகமேயில்லை. இதனுலேதான் அந்தக் கோமுட்டி நமது பழங்களை வேறொருவரும் வாங்கவொட்டாமல் தான் ஒருவனே அதிக ஆவல்கொண்டு வாங்கிப்போனதுபோலத் தோற்றுகின்றது என்ருள்.

அதைப் பார்த்து யாவரும் சந்தோஷத்தால் மதிமயங்கிப்போனுர்கள். அந்தப் பிராமணன், ஐயோ! நமது மருமகன் செய்த உதவியின் பெருமையை அறியாமல் நாம் மோசம்போனேமே! இதென்ன துர்ப்பாக்கியம் பார்த்தீர்களா! தானுகவந்த ஸ்ரீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளினதுபோலாயிற்றே! நல்லது; நான் இதோ போய் நமது பழங்களையெல்லாம் கொடுத்துவிடும்படி அந்தக் கோமுட்டியை வற்புறுத்தி வாங்கிவருகிறேன் என்று சொல்லி, உடனே கோமுட்டி வீட்டுக்குப்போய் அவனைக் கண்டு, நீ என் வீட்டிலிருந்து வாங்கிவந்த பழங்களைக் கொடு என்ருன். அதைக் கேட்டுக் கோமுட்டி ஒன்றுமறியாதவன்போல எது பழமென்று சொல்ல, அவன், அடா! வஞ்சகனென்கிற பேர் உனக்குத்தான் தகும்; என் பெண்சாதி விலை தெரியாமல் விற்றுவிட்ட நவரத்தினங்கள் நிறைந்திருந்த பழங்களைத் திருட்டுத்தனமாய் வாங்கிக்கொண்டு வந்துவிட்டாயல்லவா! அது உனக்கு நியாயமன்று; சில பழங்களையாவது கொடுத்துவிடு என்று கேட்க, வஞ்சகன், நீ என்ன உன்னுடம்பு தெரியாமற் பேசுகிருய்! நான் சாதாரணமான பழங்களையே வாங்கி வந்தேன்; அவையெல்லாம் அப்போதே வயிற்றிற்போய்ச்சேர்ந்தன; இனி என்னிடத்தில் இப்படிப்பட்ட திருட்டுப்பேச்சு பேசாதே; உனக்கு வேலை வேறொன்றுமில்லையோ என்று சொல்லி, வீடு நிரம்ப நவரத்தினங்களை வைத்துக்கொண்டே, ஒன்றுமில்லையென்று அவனைத் தெருவிலே தள்ளிக் கதவைச் சாத்திவிட்டான்.

வஞ்சகன் அந்தப் பொருள்களைக் கொடுக்கமாட்டேனென்று சொல்லி அடித்துத் துரத்திவிடவே, பிராமணன் மிகவும் விசன

மடைந்து வீட்டுக்குத் திரும்பி வந்து, அன்று பொழுதைக்கூடப் போக்க வேறுவழியில்லாமையால், தன் மகள் கையில் அகப்பட்ட மணிகளையாவது விற்றுக்கொண்டு வரலாமென்று அவைகளை எடுத்துக்கொண்டு ஒரு தட்டான் கடைக்குப் போனான்; போய்த் தட்டானைக் கண்டு இந்தக் கற்கள் உனக்குத் தேவையாவென்று கேட்டதற்கு, அந்தத் தட்டான், அவன் கையிலிருந்த சிலாக்கியமான ரத்தினங்களைப் பார்த்து, நமக்கு நல்லதருணம் வாய்த்ததென்று மிகவும் சந்தோஷமடைந்து, ஏழையான உனக்கு இவைகள் கிடைத்தவிதம் எப்படி? இவையெல்லாம் திருட்டுக்கற்களல்லவா? நீ பெருந்திருடன்; உள்ளறிந்த கள்ளன்; இக்கற்களை நான் வெகுநாளாய்க்காணாமல் தேடிக்கொண்டிருக்கிறேனே; என் கடையிலேயே திருடி என்னண்டையே விற்கவந்தாயல்லவா? என்று இரைச்சலிட்டான்.

அதைக்கேட்டு அந்தப் பேதைப் பார்ப்பான், ஐயோ! அதல்லவே! அதல்லவே! சத்தியமாய்ச் சொல்லுகிறேன்; இவையெல்லாம் என் மருமகன் கொடுத்த பொருள்கள் என்று கதறினான். அவனை எவ்விதமாயாவது வெருட்டவேண்டுமென்று தட்டான், ஓகோ! திருடன் திருடன் என்று கூவினான். அந்த மணிகள் தனக்குக் கிடைத்த விதம் இவ்வாறென்று பார்ப்பான் எத்தனைதரம் பிரமாணம் பண்ணிச்சொல்லியும் தட்டான் அதை நம்பமாட்டேன் என்றான். அந்த ரத்தினங்களைத் தான் எப்படியாவது பிடுங்கிக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்ததனால் அந்த பொற்கொல்லன், பார்ப்பான் கையை உறுதியாய்ப் பிடித்துக்கொண்டு அவனை அடித்து வெருட்டி, வேண்டாம்; நன்மையாய்ச் சொல்லுகிறேன்; நீ திருடின கற்களைக் கொடுத்துவிடு என்று தான் வெகு சத்தியவந்தன்போலப் பலவிதமாய்க் கேட்டான். எவ்வளவுநேரம் வேண்டியும் அவன், இது நான் திருடினதன்று; நான் இதைக் கொடுக்கமாட்டேனென்று ஒரேபிடியாய்ப் பிடிக்கவே, தட்டான், ஓகோ! கள்ளன் கள்ளன் என்று பெருங்கூச்சலிட்டான். ஜனங்கள் அநேகர் கூட்டங்கூடிப் போனார்கள்; போலீசு சேவகர்களும் வந்து நிறைந்தார்கள். அத்தருணத்தில் கொல்லன் பேரிரைச்சலாய், நீ திருடின மணிகளை இப்போதே கொடுத்துவிடுவையானால் தப்பித்துக்கொள்ளலாம்; இல்லாவிட்டால் போலீசு சேவகர்கள் வசம் ஒப்புவிப்பேன்; அவர்கள் சிறையிலடைத்து வருத்துவர்களென்றான். பிராமணன் தனக்கு

அந்த மணி கிடைத்தவழியை எத்தனைதரம் சொல்லியும் அதைக் கேட்பார் ஒருவருமில்லை; கேட்டாலும் நம்புவாரில்லை. ஏழை வார்த்தை அம்பலமேறுமா? தான் எவ்வளவு முறையிட்டும் தன் பேச்சு பயன்படாமற்போகவே, அந்த எளிய மனிதன், இதென்ன, இப்படி நம்மைப் போனவிடமெல்லாம் பேய்பிடித்தாட்டுகிறதே; இதென்ன விபரீதகாலம்! கைக்கெட்டினது வாய்க்கு எட்டவில்லையே என்று விசனமடைந்தான். ஆயினும், பொருளுக்கு ஆசைப்பட்டுப் பிராணனை விடலாமா? பொருள் போனாற்போகிறது; நாம் கொடுத்து வைத்தது இவ்வளவுதான்; இந்த ஆபத்துவேளையில் போலீசார்கையில் அகப்படாமல் தப்பித்துக்கொண்டால் அதுவே மேலானதென்று எண்ணி, தன் மணிகளைத் தட்டான் கையிற் கொடுத்துவிட்டுப்போகத் தீர்மானித்தான். கொல்லனும் அவன் கையிலிருந்த மணிகளைப் பிடுங்கிக்கொண்டு தான் வெகு யோக்கியன்போல அவனை ஒன்றுஞ் செய்யாமல் அதட்டித் துரத்திவிட்டான். இந்தக் கள்ளனை ஒன்றுஞ் செய்யாமல் துரத்திவிட்ட கொல்லன் மிகவும் ஈவு இரக்கம் பூததயை முதலிய நற்குணங்கள் உள்ளவனென்று அவனையே யாவரும் கொண்டாடினார்கள். அந்தப் பேதைப் பிராமணனும் தன் பொருளைத் தட்டான்கையிற் பறிகொடுத்து ஒன்றுந் தோன்றாமல் வந்த வழியே வீடுபோய்ச் சேர்ந்தான்.

> "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
> சூழினுந் தான்முந் துறும்."

இந்தத் துர்ப்பாக்கிய விருத்தாந்தத்தைக் கேட்டு அவன் பெண்டு பிள்ளைகள் மிகவும் விசனமடைந்து, மறுபடியும் மருமகனை ஒரு தடவை போய்ப் பார்த்துவரும்படிச் சொன்னார்கள். பிராமணனும் அக்கருத்துக்கிசைந்து அந்த நரியின் குகைக்குச் சென்றான். அவன் வெகு தூரத்தில் வருகையிலேயே நரி கண்டு, அவன் மனதில் சந்துஷ்டியில்லாமல் கலக்கமுற்றிருந்ததை 'அகத்தினழகு முகத்தில் தெரியும்' என்கிறபடி, அவன் முகக்களையினாலேயே தெரிந்துகொண்டு, அவனண்டை வந்து, ஓ! மாமனே! நீங்கள் இவ்வளவு சுறுக்காய்த் திரும்பிவருவீர்களென்று நான் கனவிலும் கருதவில்லையே! என்ன விசேஷமென்று கேட்க, அவன், நீ செய்த உதவியைக்கொண்டு நாங்கள் எவ்வளவோகாலம் சுகமாக வாழ்ந்துகொண்டிருக்கலாம்! பால் பாக்கியமில்லாதான் விலைப்பாலையும் பூனை

குடித்ததேயென்று என் துர்ப்பாக்கியத்தை உன்னுடன் சொல்லிப் போகலாமென்று வந்தேனே யொழிய வேறில்லையென்றான். அதைக் கேட்டு நரி, அதென்ன? நான் கொடுத்த மாதளஞ்செடியை நீங்கள் என்ன செய்தீர்களென, அவன், அந்தத் துக்கத்தை நீ ஏன் கேட்கிறாய் என்று, தான் அந்தச் செடியைக்கொண்டுபோய் நட்டதும், மறுநாளே அந்தச் செடி பெரிதாகிப் பழுக்கத்தொடங்கியதும், அன்றுமுதல் ஒரே கோமுட்டி அந்தப் பழங்கள் எல்லாவற்றையும் திருட்டுத்தனமாய் வாங்கிக்கொண்டுபோனதும், தானும் அவற்றின் அருமையை அறியாமல் அற்பவிலைக்கு விற்றுவிட்டதும், பிறகு அந்தச் செடி பட்டுப்போகிற காலம்வந்து ஒருநாள் பழங்கள் பழுக்காமற்போகவே 'அன்றையதினம் சோற்றுக்குக் கதியில்லாமல் யாவரும் பசியால் வருந்துகையில், தன் சிறியமகள் பசிதாளமாட்டாமல் அந்தச் செடியை நாலாமூலையும் ஆராய்ந்து பார்த்து இரண்டொரு பழந் தேடிக்கொண்டுவந்து அரிய, அந்தப் பழங்களில் விலையில்லா மாணிக்கங்கள் விசேஷமாய் நிறைந்திருக்கவே அதைக் கண்டு, தன்னைக் கோமுட்டி மோசஞ்செய்ததாக நினைத்துத் தான் உடனே அவன் வீட்டிற்குப்போய்த் தன் பழங்களைக் கொடுக்கும்படிக் கேட்க, அவன் ஏது பழமென்று சொல்லித் தன்னை வெருட்டினதும், தன்னிடத்திலிருந்த மணியையாவது விற்றுக்கொண்டு வருவோமென்று தட்டான் கடைக்குப்போக அவன் கையிற் புடைபட்டுவந்ததுமாகிய எல்லாச் செய்திகளையும் ஒன்றுவிடாமற் சொன்னான். அதைக் கேட்டு நரி, அதிஷ்டமில்லாதவர்களுக்கு

'வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றாற் போகா'

செல்வம் வேண்டுமென்றால் எங்கிருந்துவரும் என்று சொல்லி நகைத்து, எப்படியாவது க்ஷேமமாயிருக்கட்டுமென்று கருதி நாம் நன்மைசெய்யப்போகத் தீமையாய் விளைகின்றதே! எவரெவர்களுக்கு எவ்வளவு தகுமோ அவ்வளவுதான் செய்யலாம்; உங்களைப் போன்ற துரதிஷ்டப் பிராணிகளுக்குச் சிறந்த பொருள் ஒன்றுந் தகாது என்று ஒரு சிறிய சட்டியை அவன் கையில் கொடுத்து, உங்களுக்கு ஏற்றது இதுதான்; உங்கள் வீட்டில் யாருக்கு எப்போது பசியெடுத்தாலும் இதில் வெகு நேர்த்தியான உணவுகள் அகப்பட்டுக் கொண்டிருக்கும்; இதை வைத்துக்கொண்டு சவுக்கியமாய்ப் பிழை

யுங்கள் என்று சொல்லிற்று. பிராமணன் அதை வாங்கிக்கொண்டு அதிலுள்ள உணவு குமுகுமு என்று மணக்கவே மிகவுஞ் சந்தோஷமாய் மருமகனைத் தழுவி முத்தமிட்டு, இப்போது என் குடும்பமெல்லாம் உன்னாலல்லவோ நிலைநிற்கிறது என்று அவனை வாழ்த்திச் செலவு பெற்றுக்கொண்டு வீட்டுக்குப்போனான்.

அந்தச் சட்டி உணவை வைத்துக்கொண்டு அவர்கள் சிலகாலம் சுகமாகவே வாழ்ந்திருந்தார்கள். அந்தச் சட்டியும் நாள் தப்பாமல் அவர்களுக்கு வேண்டுமளவு நாளுக்குநாள் வெகு நேர்த்தியான உணவுகளைத் தந்துகொண்டிருந்தது. அக்காலத்தில் அவர்கள் அண்டைவீட்டில் ஒரு செல்வவான் இருந்தான்; அவன் ராஜசமுகத்தில் மிகவும் செல்வாக்குள்ளவன். அவன் நாள்தோறும் பிராமணன் வீட்டில் உணவுகள் வெகு ருசியாய் மணப்பதை மோந்து, இதென்ன! இந்த ஏழைப் பார்ப்பான் வீட்டுப் போஜனம் இப்படி வாசனைவீசுகின்றதே! நாம் எவ்வளவு செலவுசெய்து சமைத்தாலும் இப்படியாகிறதில்லையே என்று வியந்து, ஒருநாள் அந்தப் பிராமணனை அழைத்து, நீ வெகு தரித்திரனாயினும் நாள்தப்பாமல் உன் வீட்டுச் சாப்பாடுமாத்திரம் வெகு நேர்த்தியாய் மணக்கின்றதே; அதன் வரலாறு என்னவென்று கேட்டான்.

அந்த ஏழைப் பார்ப்பான் தனக்கு யார்க்குமில்லாத பெருஞ்செல்வ மிருக்கிறதென்ற பெருமையினாலும், ‘வெள்ளைக்கில்லை கள்ளச்சிந்தை’ என்கிறபடி கபடமற்ற கருத்துடையவனாயிருந்ததனாலும் மறுநாள் அண்டைவீட்டுச் செல்வவானைத் தன் வீட்டுக்கு விருந்துண்ண வரவழைத்தான். அவனும் சந்தோஷமாய்ப் போய்ப் போஜனத்துக்கு உட்காருகையில், கள்ளங்கபடமறியாத அந்தப் பிராமணன், மாடத்தில் கவிழ்த்திருந்த சட்டியை நிமிர்த்தி அதிலிருந்து அந்த விருந்தாளி ஒருநாளும் உண்ணாத உணவுகளை எடுத்துப் பரிமாறி அதின் வரலாற்றையும் அவற்கு அறிவித்தான்.

அதைக் கேட்டதும் கேளாததுமாய் அயல்வாழ்ந்தால் ஐந்து பட்டினி கிடப்பவனும் அயலாருடைமைக்குப்பேயாய்ப்பறப்பவனுமான அந்தச் செல்வவான் அரசனண்டைக்கு ஓடி, இந்தப் பட்டணத்தில் ஒரு ஏழைப் பார்ப்பான் இருக்கிறான்; அவனிடத்தில் அற்புதமான சட்டியொன்றிருக்கக்கண்டேன்; அதில் அதிகருசியான சாப்பாடுகள் எடுக்க எடுக்க மேன்மேலும் சுரந்துகொண்டிருக்கின்றன.

ஒருநாள் நானும் அதைப் புசித்துப் பார்த்தேன்; அதன் பெருமை இவ்வளவென்று என்னால் சொல்லிமுடியாது. அதை நான் பிடுங்கிக்கொண்டுவந்தால் குற்றமாகும்; தங்களுக்கு அதன்மேல் விருப்பமிருந்தால் வரவழைத்துக்கொள்ளலாமென்றான். அரசன் அதைக் கேட்டு, இதென்ன! நீ சொல்வது வெகு புதுமையாயிருக்கின்றதே! சட்டியில் சோறு சுரப்பதுண்டோ? அதை நான் நேராய்ப் பார்த்தாலல்லது எனக்கு உண்மைப்படாது என்று சொல்லி, அந்தச் சட்டியைப் பார்ப்பதற்காகப் பார்ப்பான் வீட்டிற்குவந்தான். அரசனைக் காணவே அந்தப் பேதைப் பிராமணன் வெகு சந்தோஷமாய்த் தன் சட்டியின் அற்புதங்களையெல்லாம் அவனுக்குங் காட்டினான். அதைக் கண்டு அரசன் பிரமித்து உடனே அந்தச் சட்டியைப் பிராமணனிடத்தினின்றும் பிடுங்கிக்கொண்டுவந்து அரமனை சேர்க்கும்படிச் சேவகர்களுக்குக் கட்டளையிட்டுப்போனான். அவர்களும் அப்படியே அந்தச் சட்டியை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். இவ்வாறு இரண்டாந்தரமும் அந்த எளிய மனிதன் தன் மருமகன் கொடையை இழந்துபோனான்.

தன் பொருளை அரசன் கொள்ளையாடிக்கொண்டுபோகவே, அம்மனிதன் ஒன்றும் தோன்றாமல் தன் மனையாளைப் பார்த்து, இனி நமக்கு என்னகதி; மருமகனண்டைதானே திரும்பவும் போயிரக்கவேண்டும் என்று சொல்லித் துக்கிக்க, அவள், நமது மதிக்குறைவினாலேதானே நமக்கு இவ்விதமான துன்பம் வந்து விளைகின்றது. வீட்டுச்செய்தியை வெளிப்போகவொட்டாமல் ரகசியமாய் வைத்துக்கொண்டிருந்தால் இப்படியெல்லாம் ஏன் நேரிடுகிறது! அடிக்கடி போய் நாம் தொந்தரைசெய்தால் மருமகன்தான் சும்மா விருப்பாரா? கடைசியில் அவர்க்குங் கோபமுண்டானால் என்ன செய்கிறது என்றாள்.

மருமகனைவிட வேறுகதியில்லாமையால் பிராமணன் மறுபடியும் நரியிடத்திற்குப்போய்த் தன் துக்கக்கதைகளைச்சொல்ல, அதுகேட்டு நரி மிகவும் வெறுப்படைந்து, ஓ பெரியவரே! நானும் எத்தனையோ இடங்களிற் பார்த்திருக்கிறேன்; உம்மைப்போலப் புத்திஹீனரை எங்குங்கண்டதில்லை. உமது வீட்டுக்கதையை அயலாருடன் நீர் ஏன் சொல்லுகிறீர்! 'வீட்டுக்கருமம் நாட்டுக்கு உரையேல்' எனப் பழமொழி கேட்டதில்லையா! இப்போது அதை நினைத்துப் பயனென்ன!

போனதைச் சொல்லுகிறவன் புத்தியீனனல்லவா! இதோ மற்றொரு சட்டியிருக்கிறது, இது நீர் இழந்துபோன பொருள்களையெல்லாம் வாங்கிக் கொடுக்கும். இதனுள் ஒரு கயிறுந்தடியும் இருக்கின்றன; உங்கள் பொருளைப் பறித்துக்கொண்டவர்களண்டைபோய் இதைத் திறந்து அவர்களை அடிக்கும்படி கட்டளையிடுங்கள்; உங்கள் பொருள் உடனே உங்களண்டை வந்து சேரும், நீங்கள்மாத்திரம் தனியேயிருக்கும்போது இதைத் திறக்கப்போகிறீர்கள்! உங்களையே மடக்கிக்கொண்டு உதைக்கும்; வெகு ஜாக்கிரதையாய் வைத்துக்கொண்டிருந்தால் வெகுநாளைக்குப் பிழைக்கலாம்; இனிமேல் என்னிடத்திற்கு வருவதிற் பயனில்லையென்று சொல்லி அனுப்பிற்று.

அந்தப் பிராமணன் வெகு சந்தோஷமாய் மருமகனை ஆசீர்வதித்துச் செலவுபெற்றுக்கொண்டு போகையில் நடுவழியே, அந்த நரி சொன்னது மெய்யோ பொய்யோவென்று சந்தேகமுண்டாகி, அந்தச் சட்டியைக் கொஞ்சத் திறந்தான். உடனே அதினின்றும் ஒரு தாம்புந் தடியும் வெளியே குதித்து, தாம்பு அவனை ஒரு மரத்தோடு சேர்த்துக்கட்ட, தடி உயிர்போகும்படி அடிக்கத் தொடங்கிற்று. அதைத் தடுக்கச் சக்தியில்லாமல் அவன் மிகவும் உடம்பு நொந்து, ஐயோ! போதும் போதும்! வேண்டாம், இதுவும் ஒரு தலைவிதியாவென்று பலதரம் முறையிட்டான். என்னசொல்லியும் அது ஓயாமல் அவன் அயர்ந்து கீழே விழுமளவும் அடித்துவிட்டு நின்றது.

உடனே அவன் அவைகளை எடுத்துச் சட்டியில் அடைத்து மூடிவிட்டு, தான் அடிபட்ட விசனம் ஒருபக்கத்திலிருக்க, தனக்கு அத்தன்மையான சட்டி கிடைத்ததற்காக வெகு சந்தோஷமடைந்து, முன்னிலும் நேர்த்தியான சட்டியொன்று இப்போது வந்திருக்கிறது; விருப்பமிருந்தால் வந்துபார்க்கலாமென்று அரசனுக்கும் செல்வவானுக்கும் உடனே செய்திசொல்லி அனுப்பினான். அதைக் கேட்டவுடனே அவர்கள், இது முன்னதைவிட மேன்மை பெற்றதாயிருக்கும்; முன்போலவே கொள்ளையடித்துக்கொண்டு வரலாமென்று பேரானந்தமாய் அநேகம் பரிஜனங்களோடுகூட அந்தப் பிராமணன் இருக்குமிடத்திற்கு வந்தார்கள். அவர்கள் வந்ததும் அவன் சட்டியைத் திறந்துவிட்டு, இவர்கள் ஒவ்வொருவரையுங் கட்டி உதையுங்கள் என்று கட்டளையிட்டான். உடனே கயிறு

குதித்து யாவரையும் மரத்திற் கட்டிவிட்டது. பின்பு தடி எழும்பி ராஜா, தனிகன், மற்றுமுள்ள பரிஜனங்கள் யாவரையும் அடிக்க ஆரம்பித்தது. அவர்கள் அந்தப் புடையலைப் பொறுக்கமாட்டாமல் வெருள வெருள விழித்துக் கூச்சலிடக் கண்டு, பிராமணன், இப்போதாவது ஊரார் உடமைக்குப் பேயாய்ப்பறப்பது கூடாதென்று புத்தி வந்ததா? இனியாவது என் சோற்றுச்சட்டியைக் கொடுக்க மனம் வருகிறதா? இனி இவ்வகைக் ,கெட்டநடையை விட்டுவிடுவீர்களாவென்று கேட்டான்.

அவர்களெல்லாரும் மிகவும் பயந்து இன்னம் சிறிதுநேரம் இப்படியேயிருந்தால் உயிரை இழந்துபோமோவென்று திகிலடைந்தார்கள். அரசன், இனிப் புத்திவந்தது; உன் சொத்தை இதோ கொடுத்துவிடுகிறேன்; இந்தத் தடியடியை நிறுத்து, இந்தத் தடியடியை நிறுத்து என்று கதறிப் பலவாறு வேண்டவே, பிராமணன் இரக்கமுற்றுத் தடியையுந் தாம்பையுமிழுத்துச் சட்டியில் அடைத்தான். உடனே சோற்றுச்சட்டியும் வந்து சேர்ந்தது. யாவரும் பிராமணனிடத்தில் பயமுற்றவர்களாய் அவனுக்கு விசேஷ மரியாதை செய்துவிட்டு அவரவர் இருப்பிடம்போய்ச் சேர்ந்தார்கள். எந்நாளும் தனக்குக் குறையுண்டாகாதபடி வெகுநேர்த்தியாய் பலவகைப் போஜனமும் அளிக்கத்தக்கதோர் அற்புதச்சட்டியும்,தனக்குப் பகையாளியென்பவன் இவ்வுலகிலேயே உண்டாகாமலிருக்கும்படி செய்யவல்ல ஒரு தடிதாம்புச் சட்டியும் கிடைக்கவே, பிராமணன் பேரானந்தமடைந்து வீடுபோய்ச் சேர்ந்து தனக்குத் தன் மருமகன் கொடுத்த கொடையின் அதிசயத்தைச் சொல்லி வீட்டிலுள்ளோர் அனைவரையும் ஆனந்தக்கடலில் ஆழ்த்தினன்.

பின்பு மற்றொருநாள் அவன், தான் முன் விலைதெரியாமல் விற்றுப்போட்ட பழங்களையும் வீடுகொண்டுவந்து சேர்க்கவேண்டுமென்று கருத்துகொண்டு, தன்னை மோசஞ்செய்து தன் பழங்களை வாங்கிப்போன வஞ்சகக் கோமுட்டிவீட்டில் தன் தடிச்சட்டியைக் கொண்டுவைத்துத் திறந்துவிட்டான். உடனே தடியும் தாம்பும் அதினின்றும் எழுந்து, முன் அரசன் பட்டபாட்டை அவனும் அனுபவிக்கும்படிச் செய்தன. அத்தருணத்தில் பிராமணன், இனியாவது என் பழங்களைத் தாலாமா! இனியாவது என் பழங்களைத் தாலாமா! என்று வேண்டினன். அதுகண்டு அந்தக் கோமுட்டியும் பயந்து

அடிநின்றாற் போதுமென்று, வீடுகொள்ளாமல் அடைத்து வைத்த பழங்களை அவன் காலண்டை கொண்டுவந்து காணிக்கையாகக் கொட்டினான். அவைகளையெல்லாம் வீடுகொண்டு சேர்த்துவிட்டு, மறுபடியும் பிராமணன் தன்னை அடித்து மணிகளைப் பிடுங்கிக் கொண்ட தட்டான் கடைக்குப் போய், அவனும் உடல் முறியப் புடைபடச்செய்து அம்மணிகளையும் வாங்கிக்கொண்டு வீடுவந்து சேர்ந்து நெடுநாள் சுகமாக வாழ்ந்திருந்தான்.

இப்படியிருக்கையில் ஒருநாள் அந்தப் பிராமணனுடைய மூத்த மகளான நரியின் மனையாள் தன் சகோதரிகளைத் தன் வீட்டிற்கு வரவழைத்தாள். அவ்விடத்திலிருக்கையில் அதிக வல்லவளான கடைசிப்பெண், ஒருநாள் காலையில் நரிராஜன் நரிப்போர்வையை வாங்கி அதைத் துவைத்து ஓரிடத்தில் உலர்த்திவிட்டு ஸ்நானஞ் செய்து கொண்டிருக்கப் பார்த்து, அவன் அதிக சுந்தரனான ராஜகுமாரனாயிருக்கவே ஆச்சரியமடைந்து, அங்கிருந்த நரித்தோலை எடுத்து எரித்துவிட்டு, உடனே ஓடித் தன் அக்காளை எழுப்பி, தாயே! இந்த அதிசயத்தைக் கேட்டாயா! இத்தனைநாளாய் உன் புருஷன் ஒரு நரி ராஜன் என்றல்லவோ நினைத்திருந்தோம்; இப்போது அவரை வந்து பார் என்று சொன்னாள். அதைக்கேட்டு அவள் எழுந்து ஓடித் தன் புருஷனழகைப் பார்த்துப் பிரமித்து நின்றாள். நரிப்போர்வை போய்விட்டதனால் அந்த ராஜகுமாரன் திரும்பவும் நரிவேஷந்தரிக் கக்கூடாமல் தன் புன்சேஷ்டைகள் யாவையும் அன்றோடு விட்டு விட்டு அதுமுதல் தன் குடும்பத்தோடு மாமன் குடும்பத்தையும் வெகு மேன்மையாய்ப் பாதுகாத்துக்கொண்டு நெடுநாள் க்ஷேமமா யிருந்தான்.

## 12-வது. பிராமணனும், புலியும், ஆறு நியாயாதிபதிகளும்

முற்காலத்தில் தேசாந்தர யாத்திரையாய்ப் போய்க்கொண்டிருந்த ஒரு பிராமணன் நடுவழியிலே இருப்புக்கூடு ஒன்று இருக்கக் கண்டான். அந்த ஊராரெல்லாரும் சேர்ந்து ஒரு பெரும்புலியைப் பிடித்து அந்தக் கூட்டுக்குள் அடைத்துவைத்திருந்தார்கள். அந்தப் பிராமணன் அவ்வழியே போகக்கண்டு, அந்தக் கூட்டில் அடைபட்டிருந்த வேங்கை அவனை அழைத்து, ஓ, என் சகோதரப் பிராமணரே! சகோதரப் பிராமணரே! உமக்கு என்னிடத்தில் தயவில்லையா! வெகுநாளாய்த் தண்ணீர் குடியாமல் தாகத்தால் தவிக்கிறேனே! ஒரு நிமிஷகாலம் இந்தக் கூட்டுக்கதவை திறந்து என்னை வெளியே விடுவீரானால் தண்ணீர் குடித்துவிட்டு வந்து மறுபடியும் உள்ளே புகுந்துகொள்ளுகிறேன்; இந்த வேளையில் அவ்வளவு உதவிசெய்வீரானால் நான் பிழைப்பேனென்று வேண்டிக்கொண்டது. அதற்கு அந்தப் பிராமணன், நீ பேசுவது வெகு நன்றாயிருக்கிறது! கதவைத் திறந்து வெளியே விட்டவுடனே நீ என்னைத் தின்றுவிடமாட்டாயா! என் உயிருக்கு அபாயமுண்டாகத்தக்க காரியம் நான் ஒருபோதும் செய்துகொள்ளமாட்டேன் என்றான்.

அதைக் கேட்டு அந்தப் புலி, ஓ, கருணைக்கடலே! சரணமென்று அடைந்தவரைக் கைவிடாதவரே! நான் அப்படி ஒருபோதும் செய்வதில்லை; நான் அவ்வளவு நன்றிகெட்டவனா? சத்தியமாய்ச் சொல்லுகிறேன்; ஒரு நொடியில் தண்ணீர் குடித்துவிட்டு வந்து உடனே உள்ளே புகுந்துகொள்ளுகிறேன்; அவ்வளவு உதவி செய்யவேண்டு

மென்று நெடுநேரம் பிரார்த்தித்தது. மிகவும் வருந்தி வேண்டவே, பிராமணன் மனமிரங்கி அந்தக் கூட்டின் கதவைத் திறந்தான். தனக்குக் கொஞ்சம் வெளியேவர வழி அகப்பட்டவுடனே அந்த வேங்கை ஒரே குதியாய்க் குதித்து அவன்மேல் பாய்ந்து, முதலில் உன்னைத் தின்றுவிட்டல்லவோ தண்ணீர் குடிக்கவேண்டும். வெறும்வயிற்றில் தண்ணீர் குடிக்கலாமா என்றது. அதைக் கேட்டு அந்தப் பிராமணன் அஞ்சாமல், ஓ புலிராஜனே! நீ அவசரப்படாதே; இதைப்பற்றி முதலில் ஆறுபேருடைய அபிப்பிராயத்தைக் கேட்போம்; யாவரும் நீ இப்போது செய்யத் துணிந்திருப்பது நியாயந்தானென்று சொல்வார்களானால், பிறகு நீ என்னைக் கொல்ல யாதொரு தடையுமில்லை என்றான். புலியும் அதற்குச் சம்மதித்து, நல்லது அப்படியே ஆகட்டும்; ஆறுபேருடைய கருத்தைக் கேட்போம் வா என்றது.

புலியும் பிராமணனும் மத்தியஸ்தர்களைத் தேடிக்கொண்டுபோனார்கள். வழியில் பெரிய ஆலமரமொன்று இருந்தது. அதைப் பார்த்து பிராமணன், ஓ, ஆலமரமே! ஆலமரமே! நீ எங்களுக்கு ஒரு நியாயஞ் சொல்லவேண்டுமென்றான், அதைக்கேட்டு அம்மரம், எந்த விஷயத்தைப்பற்றி நியாயஞ்சொல்லவேண்டுமென்று கேட்க, பிராமணன், இந்தப் புலி வழியிலே போய்க்கொண்டிருந்த என்னை அழைத்து, ஓ! தயாநிதியே! இந்தக் கூட்டின் கதவைச் சற்றே திறந்துவிடுங்கள்; கொஞ்சம் தண்ணீர் குடித்துவிட்டு வருகிறேன் என்று வேண்டிக்கொண்டது; எனக்கு யாதொரு தீங்குஞ் செய்வதில்லையென்று வாக்குக்கொடுத்ததனால், ஐயோ பாவம் என்று கதவைத் திறந்தேன். வெளியே வந்தவுடன் என்னைக் கொல்லத் தீர்மானித்தது. அப்படிச் செய்வது நியாயமா அல்லவா என்றான்.

அதைக்கேட்டு அந்த ஆலமரம், அப்படியா! நன்றாய்க் கீழு மேலும் கொளுத்துகிற கோடைகாலத்து வெயிலில் மனிதர்களெல்லாம் என் அடியில்வந்து தங்கியிருந்து இளைப்பாறினபிறகு, போகும்போது எனது அழகிய கிளைகளையெல்லாம் ஒடித்து, தங்களுக்கு வேண்டுமளவு நிழல்கொடுத்துக் காத்த என் இலைகளையெல்லாம் கிள்ளிக்கொண்டு போகிறார்கள். மனிதர்கள் மிகவும் நன்றிகெட்டவர்கள்; ஆதலால் மனிதனைப் புலி சுகமாய்ப் பிடுங்கித் தின்னலாமென்று தீர்மானஞ்செய்தது.

அதைக் கேட்டவுடனே புலி அவனைக் கொன்றுபோட்டிருக்கலாம். ஆயினும் அந்தப் பிராமணன் புலியைப் பார்த்து, ஓ புலியாசே! நீ இப்போதே என்னை அவசரப்பட்டுக் கொல்லாதே; ஆறு பேருடைய அபிப்பிராயத்தைக் கேட்கும்படி வாக்குத்தத்தஞ் செய்திருக்கிறாயல்லவா என்று சொல்லவே, புலி, நல்லது அப்படியே ஆகட்டும் என்று அங்கீகரித்தது. இருவரும் அங்கிருந்து புறப்பட்டுச் சிறிதுதூரம் போனார்கள். அங்கே ஒரு ஒட்டகம் இருக்கக்கண்டு பிராமணன், ஓ ஒட்டகநாயகமே! ஒட்டகநாயகமே! ஒரு நியாயங் கூறவேண்டும் என்றான். ஒட்டகம் எந்தவிஷயமாய் என்று கேட்க, பிராமணன், தான் வழியே போய்க்கொண்டிருக்கும்போது அந்தப் புலி தன்னை வேண்டினதும், தான் மாட்டேனென்று சொன்னதும், அதற்குப் புலி தான் யாதொரு தீங்கும் செய்வதில்லையென்று பிரதிஞ்ஞை பண்ணிக்கொடுத்ததும், தான் இரக்கமுற்றுக் கதவைத் திறந்தவுடன் அது தன்மேல் பாய்ந்து கொல்லவந்ததும் சவிஸ்தாரமாய்ச் சொல்லி, அது என்னைக் கொல்வது நியாயமா? அல்லவா என்று கேட்டான். அதற்கு ஒட்டகஞ் சொன்ன தீர்மானமாவது: நான் நல்லவயதும் வலிமையும் உள்ளவனாய் நன்றாய் உழைத்து வேலை செய்தகாலத்தில், என் எஜமானன் நல்ல நல்ல உணவுகளெல்லாம் கொடுத்து என்னைப் பரிவோடு பாதுகாத்து வந்தான். அவனண்டையே உழைத்து என் வலிமையெல்லாம் ஒழித்துக் கிழவனாய்ப் போனேன்; இப்போது அவன் என்னைச் சிறிதும் ஆதரியாமல் தாங்கமாட்டாத சுமையை ஏற்றி, இரையும்போடாமல் அலைக்கழிக்கிறான்; மனிதர்கள் நியாயத்துக்குக் கட்டுப்படாத கொடியவர்கள்; ஆதலால் மனிதனைப் புலி சுகமாய்ப் பிடுங்கித் தின்னலாம் என்று ஒட்டகம் தீர்ப்புச்செய்தது.

அப்போது அந்தப் புலி அவனைக் கொன்றாலுங் கொன்றிருக்கலாம். ஆயினும் அவன் புலியைப் பார்த்து, நில், அவசரப்படாதே; ஆறுபேருடைய தீர்மானத்தையும் கேட்கவேண்டுமல்லவா என்று சொன்னதனால், புலி அப்படியே ஆகட்டுமென்று புறப்பட்டது.

சிறிதுதூரம் போகையில் அங்கே வழியோரத்தில் ஒரு எருது படுத்திருப்பது கண்டு, பார்ப்பான், ஓ தோழனே! நீ ஒரு செய்தி விசாரித்துத் தீர்மானஞ் சொல்லவேண்டுமென்றான். ரிஷபம் என்ன செய்தி என்று கேட்க, பார்ப்பான், ஒரு கூட்டில் அடை

பட்டிருந்த இந்தப் புலி வழியே போய்க்கொண்டிருந்த என்னை அழைத்து, சற்றே கதவைத் திறந்து தண்ணீர் குடிக்கவிடும்படிக் கேட்டுக்கொண்டதுமன்றி, எனக்கு யாதொரு தீங்குஞ் செய்வதில்லை என்று சபதமும் செய்து கொடுத்தது. அதனால் நான் தயைசெய்து கதவைத்திறந்து வெளியே விட்டவுடனே இது என்னைக் கொல்லக் கருத்து கொண்டது. அப்படிச் செய்வது நியாயமா, அநியாயமா என்றான். அதற்கு எருது சொன்னதாவது: எனக்கு நன்றாய் உழைக்க உடம்பில் சக்தியிருந்தபோது, என் எஜமானன் என்னை மிகவும் ஆதரவாய்க் காப்பாற்றினான்; இப்போது நான் கிழவனாகி உபயோகமற்றுப் போகவே, அவன் நான் முன்செய்த உதவியையெல்லாம் மறந்து, எக்கேடாயினும் கெடட்டுமென்று துரத்திவிட்டான். மனிதர்கள் நன்றி கெட்டவர்கள்; ஆதலால் மனிதனைப் புலி நன்றாய்ப் பிடுங்கித் தின்னலாமென்று ரிஷபமும் தீர்மானஞ் செய்தது.

நியாயாதிகாரிகளாகக் கருதப்பட்ட ஆறு பிராணிகளுள் மூன்று இவ்வாறு பிராமணனுக்கு விரோதமாயே தீர்ப்புச்செய்தன. இன்னும் அவனுக்கு நிராசை பிறக்கவில்லை. மற்ற மூன்றையுங் கேட்கலாமென்று எண்ணங்கொண்டுபோனான்.

போய்க்கொண்டிருக்கையில் ஆகாயத்திலே ஒரு கழுகு பறக்கக் கண்டு அந்தணன், ஓ பட்சிராஜனே! பட்சிராஜனே! எனக்கு ஒரு தீர்மானஞ் சொல்லவேண்டுமென்று தன் வியவஹாரத்தைச் சொல்லிக் கேட்க, அந்தக் கழுகு, மனிதர்கள் எங்களைக் கண்டால் சும்மா இராமல் உடனே சுட்டுப்போடுகிறார்கள்; குன்றுகளிலும் மரங்களிலும் ஏறிக் குஞ்சுகளைத் திருடுகிறார்கள். மனிதர்கள் உலகத்திற்கு உபத்திரவஞ் செய்கிறவர்கள். ஆதலால் மனிதனைப் புலி சுகமாய்ப் பிடுங்கித் தின்னலாமென்று நியாயந்தீர்த்தது.

இவைகளையெல்லாம் கேட்கவே புலி, ஓ பிராமணரே! எல்லாம் உமக்கு விரோதமாயே நியாயஞ் சொல்லுகின்றனவே; இன்னும் ஏன் தாமதம் என்று குதித்துக் கர்ச்சனைசெய்தது. அதற்குப் பிராமணன், இன்னும் சற்றுநேரம் பொறு; இருவருடைய கருத்து மிகுந்திருக்கிறதல்லவா? அதையும் கேட்போமென்று சொல்லிப் புலியை அழைத்துக்கொண்டுபோனான்; அங்கே ஒரு முதலையைக் கண்டு, அதாவது தன் பக்கமாய்ப் பேசுமோவென்று, தன் கதையை

ஆதிதொடங்கிச் சொன்னான். அதைக் கேட்டு முதலை சொன்னதாவது: நாங்கள் தலையைத் தண்ணீருக்குமேலே தூக்குவதற்குமுன்னமே மனிதர்கள் எங்களைக் கொல்லக் காத்திருக்கிறார்கள். இப்பூமியில் மனிதர்கள் இருக்குமளவும் எங்களுக்குச் சுகம் கிடையாது. ஆதலால் மனிதனைப் புலி சுகமாய்த் தின்னலாமென்று முதலையும் அவனுக்கு விரோதமாயே தீர்ப்புச்செய்தது.

அதைக் கேட்கவே, அந்தப் பார்ப்பான் தன் உயிர் போய்விட்டதென்றே நினைத்தான்; ஆயினும் கொஞ்சநேரம் பொறுத்திருந்து ஆறாவது நியாயாதிபதியின் அபிப்பிராயத்தையும் கேட்டறியும்படிப் புலியை வேண்டிக்கொண்டான். ஒரு குள்ளநரி ஆறாவது நியாயாதிபதியாக ஏற்பட்டது. அந்த வேதியன் தன் செய்தியையெல்லாம் சொல்லி, " மாமா நரிராஜனே! மாமா நரிராஜனே! இதைப்பற்றி உமது அபிப்பிராயம் என்னவென்று கேட்க, நரி, உம்மிடத்திலே தான் தப்பிதமிருக்கிறதோ, அதினிடத்திலேதான் தப்பிதமிருக்கிறதோ, நான் எப்படி நிதானிக்கிறது? உங்களிருவருக்கும் விவாதம் உண்டாவதற்கு முன் நீங்கள் எவ்விதமாயிருந்தீர்களோ, அப்படியே பார்த்தால்தான் குற்றத்தைக் கண்டறியலாம்; முன் நீங்கள் இருந்த விதத்தை எனக்குக் காட்டுங்கள் என்றது. அதற்குச் சம்மதித்துப் பார்ப்பானும் புலியும் தங்களுக்கு விவாதம் உண்டான இடத்திற்குப் போகப் புறப்பட்டார்கள். நரியும் பின்தொடர்ந்துபோயிற்று. அங்கே போய்ச் சேர்ந்தபிறகு நரி பிராமணனை நோக்கி, எதோ நீர் நின்றவிடத்தைச் சரியாய்க் காட்டும் என்றது. பார்ப்பான், இதோ இங்கேதான் நின்றேன் என்று அந்தக் கூட்டண்டைபோய் நின்றான். மறுபடியும் நரி, அந்த இடந்தானா? சிறிதும் பிசகில்லையா? என்று கேட்க, அவன் இதே இடந்தான் என்றான். ஆனால் புலி எங்கே நின்றது என்று நரி கேட்க, புலி இந்தக் கூட்டுக்குள் என்று சொல்லிற்று. அதைக்கேட்டு நரி, அதெப்படி? கூட்டுக்குள் நீ எவ்விதமாய் நின்றாய்? எந்த முகம் நீ பார்த்திருந்தாய் என்று வினவ, புலி, அதைப்பற்றி என்ன? இப்படித்தான் நின்றேன் என்று கூட்டுக்குள் எழும்பிக் குதித்து, தான் முன்நின்றபடியே நின்றது. அதைப் பார்த்து நரி, நல்லது, எல்லாச் செய்தியும் செம்மையாய்த் தெரியாமல் நிதானிக்கக்கூடவில்லை; இந்தக் கூட்டுக்கதவு அப்போது சாத்தியிருந்ததா, திறந்திருந்ததா என்று கேட்க, பார்ப்பான் சாத்திப் பூட்டி

யிருந்தது என்றான். ஆயின் அப்படியே சாத்திப் பூட்டு பார்ப்போம் என்று நரி கட்டளையிட்டது.

அப்படியே பிராமணன் கதவைச்சாத்திப் பூட்டியபிறகு, நரி புலியைப் பார்த்து, ஆ நன்றியற்ற கேடுகெட்ட புலியே! ஐயோ! நாவறண்டு தண்ணீரில்லாமல் தவிக்கிறதேயென்று கதவைத் திறந்து விட்டால், அவனைத் தின்றுவிடுவதுதானோ அவனுக்கு நீ செய்கிற பிரதியுபகாரம்? நல்லகாரியஞ் செய்யத் துணிந்தாய்! உன் வாழ் நாளெல்லாம் நீ இங்கேதான் இருந்து கழிக்கவேண்டும்; இனி ஒரு நாளும் ஒருவரும் உன்னை வெளியே விடமாட்டார்கள். நான் வந்து நேரமாயிற்று; எனக்குப் போக விடைகொடுக்கவேண்டும் என்று சொல்லி, பின்பு பிராமணனைப் பார்த்து, ஓ என் தோழரே! அந்தணரே! நீர் போகவேண்டிய இடத்திற்கு இனி சுகமாய்ப் போகலாம்; யாதொரு தடையுமில்லை. உமக்கு வழி அப்படி; எனக்கு வழி இப்படி என்று சொல்லிவிட்டு, நரி வந்தவழியைப் பார்த்துக்கொண்டு ஓடிப்போயிற்று. பிராமணனும் வெகு சந்தோஷமாய்த் தான்போகவேண்டிய விடத்திற்குப்போகப் பயணப்பட்டான்.

## 13-வது. ஒரு வீரவண்ணான்

முன்னொருகாலத்தில் ஒருநாள் ராத்திரி இடியும், மின்னலும், காற்றும், குளிரும் சேர்ந்து வெகு பயங்கரமாய்க் காற்றுமழை அடித்தது. அப்போது ஒரு வேங்கை எங்குந்தங்க இடமில்லாமல், ஒரு ஏழைக்கிழவி வீட்டுத் தெருச்சுவரண்டை வந்து ஒதுங்கி நின்றது. அந்த வீடு மிகவும் பழைய கூரைக்குடிசையாகையால், நெடுநாளாய் வெயிலிலும் காற்றிலும் மழையிலும் அடிபட்டு மேல்கூரையெல்லாம் செத்து, அப்போதிய மழையும் காற்றும் தாளமாட்டாமல் நொறுங்கித் தலைமேல் விழுவதுபோலிருந்ததுமன்றியில், சாணிடங்கூட மிகுதியில்லாமல் சொட்டுச் சொட்டென்று ஒழுக்கு தரையெங்கும் சொட்டிக்கொண்டிருந்தது. அதனால் அவ்வீட்டுக்காரி தான் நனைவதுமல்லாமல் வீட்டுப் பண்டங்களெல்லாம் நனைந்து பாழாய்ப் போகிறதேயென்று அவைகளை இடம்விட்டு இடம் மாற்றி மாற்றி வைத்துக்கொண்டிருந்தாள். அவள் எந்த மூலைக்குப்போனாலும் அங்கே ஒழுக்காயிருந்தது. அதனால் அவள் ஒன்றுந்தோன்றாமல், ஐயோ! இதென்ன பிராண சங்கடமாயிருக்கிறது! இன்னும் நிமிஷத்துக்கெல்லாம் வீடு முழுதும் தலைமேல் விழும்போலிருக்கிறதே! இந்த ஒழுக்கைப் பார்த்தால் எனக்கு வெகு பயங்கரமாயிருக்கிறது; யானை சிங்கம் புலி முதலியவை வந்தாற்கூட நான் இவ்வளவு திகிற்படமாட்டேனென்று இப்படிப் பலதரம் சொல்லி முறையிட்டுக்கொண்டு, கட்டில் பலகை பெட்டி முதலியவைகளை ஒழுக்கில்லாத இடத்தில் கொண்டுபோட எத்தனித்தாள். சுவர் ஓரத்தில் ஒதுங்கி நின்று இவையெல்லாம் கேட்டிருந்த புலி, இதென்ன! யானை சிங்கம் புலி இவைகளைவிட ஒழுக்கு அதிக அச்சமுண்டாக்குகிற

தென்று சொல்லி இந்தப் பெண்பிள்ளை கதறுகிறாளே! அந்த ஒழுக்கு எப்படிப்பட்டதோ; அது மிகவும் கொடியதாயிருக்குமெனத் தோன்றுகிறது என்று சிந்தித்துக்கொண்டிருக்கையில், அவள் சாமான்களைக் கடகடவென்று ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இழுத்த சத்தத்தைக் கேட்டு, அப்பா! இதென்ன! இந்தச் சத்தம் இடிமுழக்கத்தைப்பார்க்கிலும் பயங்கரமாயிருக்கின்றதே! இதுதான் ஒழுக்கின் சத்தமோ என்று இப்படித் தனக்குள்ளே எண்ணமிட்டு நடுங்கிக்கொண்டிருந்தது.

இப்படியிருக்கையில் அவ்வூர் வண்ணானொருவன் தன் கழுதையைக் காணாமல் தேடிக்கொண்டு அவ்வழியே வந்தான். அன்றைய தினம் அவன் குளிர் பொறுக்கமாட்டாமல் அதிகமாய்க் குடித்து வெறித்து மதிமயங்கி யிருந்ததினால், ஒரு மின்னலொளியில் அந்தப் புலி தோன்றினதைக் கண்டு, அதுதான் தன் கழுதையென்று நினைத்து அதனண்டைபோய், ஒரு கையால் அதன் ஒரு காதைப் பிடித்துக்கொண்டு, மற்றொரு கையால் தன் பலத்தையெல்லாங் கொண்டு அதை அடித்து இழுத்துக் குத்தி வாயில் வந்தபடி, அடா! நன்றிகெட்ட நாயே! நீ எனக்கு ஆட்பட்டு என்னண்டை வேலை செய்வது இப்படித்தானோ? இந்தப் பெருமழையிலும் பெருங்காற்றிலும் எதிரே யாராவது வந்து முன்னுச்சிமயிரைப் பிடித்திழுத்தாலுந் தெரியாத காரிருளிலும் உன்னைத் தேடும்படி என்னைத் தெருத்தெருவாய் அலைக்கழிக்கிறாயா? வா வெளியே! இல்லாவிட்டால் உன் முதுகெலும்பெல்லாம் முறித்துப்போடுவேன் என்று கோபத்தாலும் வெறியாலும் தாறுமாறாய்ப் பேசி அந்தப் புலியை அடித்ததட்டி வெளியே இழுத்தான். அதைக்கண்டு அந்தப் புலி இன்னது செய்கிறதென்று தெரியாமல் நடுநடுங்கி, அப்பா! இதுதான் அந்தப் பெண்பிள்ளை சொன்ன ஒழுக்குபோலத் தோன்றுகிறது! யானை சிங்கம் புலி இவைகளைவிட இது அதிக பயங்கரமாயிருக்கிறதென்று சொல்லி அவள் திகிற்பட்டது என்ன அதிசயம்! இது புடைக்கிற புடையல் நம்மையே இவ்வளவு துன்பப்படுத்துகிறதே என்று இப்படிச் சிந்தித்துக்கொண்டே போயிற்று. வண்ணானும் அதைப் பிடித்திழுத்து அதின்மேல் ஏறிக்கொண்டு கையோயாமல் அடித்தோட்டி வீடுகொண்டு சேர்த்து அணணந்தாள்போட்டுக் கட்டிவிட்டுப் படுக்கப்போனான்.

மறுநாள் விடியநேரத்தில் வண்ணாத்தி வழக்கப்படியே எழுந்து வருகையில், தங்கள் கழுதை கட்டுகிறவிடத்தில் ஒரு பெரும்புலி கட்டியிருக்கக் கண்டு, இதென்னவென்று அதிசயித்துச் சரே லென்று ஓடித் தன் புருஷனை எழுப்பி, ராத்திரி நீ எதைப் பிடித்து வந்து கட்டினாய் என்று கேட்க, அவன், நமது கேடுகெட்ட கழுதை யைத்தான் கொண்டுவந்து கட்டினேனென்று சொன்னான். அதன் மேல் அவள், ஆனால் வா பார்ப்போம் என்று சொல்லி அவனை அழைத்துக்கொண்டுவந்து புலியிருப்பதைக் காட்டினாள். அதைப் பார்த்தபோது அவனுக்கு உண்டான ஆச்சரியம் இவ்வளவென்று அளவிட்டுச்சொல்ல ஒருவராலுமாகாது. அதைக்கண்டு அந்த வண் ணான் இதென்ன புதுமையென்று எங்குமில்லாத ஆச்சரியமடைந்த தோடு கூட, உடம்பில் எங்கேயாவது புலி தீண்டியிருக்குமோ வென்று பெருந்திகிலுமடைந்து தன் உடம்புமுழுதும் ஆராய்ந்து பார்த்தான். தெய்வகதியாய் ஒன்றுமில்லாமலிருந்தது. அந்தப் புலி யும் அவன் ராத்திரி கட்டிவைத்தபடி நின்றவிடத்தைவிட்டு நகரா மலே நின்றுகொண்டிருந்தது.

விடிந்த கொஞ்சநேரத்துக்கெல்லாம் அந்த வண்ணான் மகா வீரச் செய்கை செய்தானென்று ஒரு செய்தி அவ்வூர்முழுதும் பரந்தது. அதைக்கேட்டு அந்த அதிசயத்தைப் பார்க்க யாவரும் ஆவல்கொண்டு ஓடிவந்து, இந்தப் பெரும்புலியை நீ எப்படிப் பிடித்தாய்? எப்படிக் கட்டினாய்? உன் கையில் இது எப்படி அகப்பட்டது என்று ஒவ் வொருவரும் கேட்கத் தலைப்பட்டார்கள். அன்றையதினமெல் லாம் வந்தவர்களுக்கு விடைகொடுத்தனுப்புவதே அவனுக்குப் பெரிய வேலையாயிருந்தது. கடைசியில் அவன் மகா பராக்கிரமசாலி யென்று யாவரும் வியந்து, ஒரு ஆயுதமுமில்லாமல் ஒரு வேங்கை யைப் பிடித்துக் கட்டும்படியான வீரத்தனமுள்ளவன் ஒருவன் உன் ராஜ்யத்தில் இருக்கிறானென்று சொல்லி அரசனுக்கும் கடித மெழுதி யனுப்பினார்கள்.

அந்தக் கடிதத்தைக் கண்டவுடனே அரசனும் ஆச்சரியப்பட்டு, அந்த அற்புதத்தைத் தான் நேராகவே போய்ப் பார்க்கவேண்டு மென்று ஆவல்கொண்டு, நாற்படைகளும் மற்றுமுள்ள மந்திரி பிர தானி முதலிய பரிவாரங்களும் புடைசூழப் புறப்பட்டுவந்தான். வண்ணான் கையில் அகப்பட்ட புலி மிகவும் பெருத்துக் கொழுத்

திருந்தது. அது வெகுகாலமாய் ஒருவர்கையிலும் அகப்படாமல் சுற்றுப்புறமெங்கும் பயமுறுத்திக்கொண்டிருந்ததாகையால், அப்படிப்பட்ட புலியைப் பிடித்தானென்று அந்த வண்ணானுடைய பெருமை இன்னும் அதிகமாய் ஓங்கிற்று. இந்தச் செய்தியெல்லாங் கேட்டு ராஜா, அவன் மகா சூரனென்று நினைத்து அவனை அதிகமாக மேன்மைப்படுத்தி, அவனுக்கு விசேஷமாய்க் காணிகளும் பூமிகளும் வீடுகளும் அளவற்ற ஐசுவரியமும் கொடுத்து அவனை அநேகம் சேனைகளுக்குத் தலைவனாக்கித் தன் ஆஸ்தானத்திலுள்ள கனவான்களுள் ஒருவனாக வைத்துக்கொண்டான்.

இப்படிச் சிலகாலங் கழிகையில், இந்த அரசனோடு நெடுநாளாய்க் கலகஞ்செய்துகொண்டிருந்த அண்டைநாட்டு அரசன் ஒருவன், தான் இப்போது வெளிப்படையாய்ச் சண்டைசெய்யத் தீர்மானித்திருப்பதாகச் செய்திசொல்லி அனுப்பினான். அப்படி மடிமாங்காய் போட்டுப் போர்க்கழைத்த அரசன் அளவற்ற படைகளோடு தன் நாட்டை நெருங்கிவந்தானென்கிற செய்தியும் அதன்பின்னேயே வந்துவிட்டது.

திடீரென்று நேர்ந்த அந்தச் சங்கடத்தைக் கேட்டு ராஜசபையில் ஒருவர்க்குங் கைகாலாடாமற்போயிற்று. அரசன் தன் மந்திரி பிரதானி முதலியவர்களையும் சேனைத்தலைவர்களையும் வரவழைத்து, இப்போது நமது நாட்டில் படையெடுத்திருக்கிற பகைவனை வெல்லத் தலைவனாய்ச் சேனையை நடத்திக்கொண்டுபோகத் தைரியமுடையவர் யாரென்று வினவ, அவர்கள், இப்போது நன்றாய்ப் போர்க்குப் பழக்கிய படைகள் பூர்த்தியாய்க் கைவசத்திலில்லை ஆகையால், முக்கிய சேனாதிபதிப் பட்டத்தை ஏற்றுக்கொண்டு நம்பிக்கையாய்ப் பகைவனை எதிர்த்துச்செல்ல ஒருவர்க்குந் துணிவு உண்டாகவில்லையென்று சொன்னார்கள். அதைக்கேட்டு ராஜா இன்னது செய்கிறதென்று தெரியாமல் தவித்திருக்கையில், சிலர், நீங்கள் ஏன் இப்போது இவ்வாறு தவிக்கிறீர்கள்? முன் ஒரு வீரவண்ணானை அநேகம் தளங்களுக்குத் தலைவனாயிருக்கும்படி நியமித்திருக்கிறீர்களல்லவா? இப்போது அவனை முக்கிய சேனாதிபதியாக்கி அனுப்பத் தடையென்ன? ஒருவர்க்கும் வசப்படாத பெரும்புலியைப் பிடித்துப் பூனைபோல் அடக்கினவனுக்கு இந்தப் பகைவனை வெல்வது ஒரு பெருங்காரியமா என்று சொல்ல, ராஜனும், சரிதானென்று நினைத்து,

அந்தக்ஷணமே அந்த வண்ணனை வரவழைத்து, இப்போது இந்த ராஜ்யமெல்லாம் உன் கைமேலேதான் நிற்கின்றது; நீ போய் இப்போது நம்மை எதிர்த்துவருகிற பகைவன் படையைப் புடைத்துத் தூரத்தினாலல்லது இந்த ராஜ்யம் நமக்குத் தக்காது; இச்சமயத்தில் எனக்குத் தக்க துணை உன்னைவிட வேறொருவருமில்லையென்றான். அதற்கு அவன், தங்கள் கட்டளைக்குக் கீழ்ப்படியாமலிருப்பேனா? ஆனால் ஒன்று வேண்டுகிறேன்; நம்படைகளையெல்லாம் நடத்திக்கொண்டு போவதற்குமுன் நான்மாத்திரம் தனித்து ஒருதரம் போய்ப் பார்த்து எதிரி சேனைத்தொகையையும் கூடுமானால் வலிமையையும் அறிந்துகொண்டுவரச் செலவுகொடுக்க வேண்டுமென்றான்.

அரசன் அதற்குச் சம்மதிக்கவே, வண்ணான் திரும்பி வீட்டுக்கு வந்து மனையாளைப் பார்த்து, இப்போது நான் சேனைத்தலைவனாய்ப் பகைவனை வெல்லப்போகும்படி அரமனையில் உத்தரவாயிருக்கிறது. இதுவரையில் அந்தக் காரியம் நான் ஒருபோதும் செய்ததில்லை; ஆகையால் அது எனக்கு வெகு கடினமாகத் தோன்றுகின்றது; ஆயினும் அரசன் ஆணையைக் கடந்தால் தலைபோகுமென்று அதற்குச் சம்மதித்துவந்தேன். குதிரைமேல் ஏறிக் குதிரைப்படைகளுக்குத் தலைவனாய்ச் சென்று அதைப் போர்க்கு நடத்தவேண்டும்; நான் ஒருநாளும் குதிரைமேல் ஏறினவனன்றே; ஆயினும் முன்னதாய் நான்மாத்திரம் ஒருதரம்போய் வேவுபார்த்து வருகிறேன் என்று இரண்டொரு நாளைக்குச் செலவுகேட்டுக்கொண்டு வந்திருக்கிறேன். நாளைக்காலையில் பயணப்படவேண்டும்; நான் சுலபமாய்ப் போய் வரும்படி ஒரு குதிரைமட்டத்தைச் சித்தப்படுத்தவேண்டுமென்றான்.

அப்படியே மறுநாள் காலையில் அவன் பயணப்படச் சித்தமாயிருக்கையில், அரசன் சிறந்த குதிரையொன்றைச் சீராய்ச் சிங்காரித்து அதன்மேல் ஏறிப்போகும்படி அனுப்பினான். அந்தக் குதிரை ஆகாயமளாவி நிமிஷங்கூடக் கால் தரையில் பாவாமல் படபடவென்று துடித்துக்கொண்டிருந்ததையும், அதன் கம்பீரத்தையும் கண்டு பயந்து, வண்ணான் இதன்மேல் எப்படி ஏறிப்போகிறதென்று ஏங்கி நின்றான். ஆயினும் அரசன் கட்டளையை மறுக்க மாட்டாமல், தன் பெண்சாதியைப் பார்த்து, நான் இந்தப் பெருங் குதிரைமேல் எப்படி ஏறிப்போவேனென்று சொல்ல, அவள், நீ

பயப்படாதே; மெதுவாய் நீ மாத்திரம் இதன்மேல் ஏறிக்கொள்வாயானல் பிறகு நீ கீழே விழவொட்டாமல் நான் நன்ருய் இறுக்கிக் கட்டிப்போடுகிறேன்; இராக்காலத்தில் புறப்படுவாயானல் உன்னைக் கட்டியிருப்பதை ஒருவரும் பார்க்கமாட்டார்களென்ருள். அவன் சரிதானென்று அதற்குச் சம்மதித்திருந்தான். அன்று ராத்திரி வண்ணாத்தி வண்ணானைப் பயணப்படுத்திக் குதிரையைக்கொண்டு நிறுத்தி ஏறச்சொல்ல, அவன் அதைப்பார்த்து, இவ்வளவு உயரம் நான் எப்படி ஏறுவேனென்ருன். அதற்கு அவன் பெண்சாதி மெதுவாய் எழும்பிக் குதித்து ஏறிக்கொள் என்று சொல்ல, அப்படியே இரண்டு மூன்றுதரம் எழும்பி எழும்பித் தாவினன். தாவியும் அதன்மேல் ஏறமாட்டாமல் கீழே விழுந்தான். மற்ருெருதடவை ஏறும்போது, நான் எந்த முகமாய்க் குதிரைமேல் உட்காரவேண்டுமோ அது மறந்துபோகிறதென்று சொல்ல, வண்ணாத்தி, குதிரையின் தலையைப்பார்த்துக்கொண்டு உட்காரவேண்டுமென்ருள். அப்படியே அந்தத் தடவை வேகமாய் எழும்பப் பின்முகமாய்க் குதிரைமேல் உட்கார்ந்தான். அது கண்டு வண்ணாத்தி மறுபடியும், இப்படி அல்லவே; குதிரையின் தலையைப் பார்த்துக்கொண்டல்லவோ உட்காரவேண்டும் என்று சொல்லி, குதிரைமேலிருந்து அவனைக் கீழிறக்கி விட்டுத் திரும்பவும் ஏறச்சொன்னள். வண்ணான், இதோ ஏறுகிறேன்; இடது காலைத்தான் இந்த அங்கபடியில் வைக்கிறேன்; வலதுகாலை என்ன செய்கிறதோ, எங்கே வைக்கிறதோ தெரியவில்லை; அது அடிக்கடி மறந்துபோகிறதென்று சொல்ல, அவள், குதிரையைத் தாவி மற்ருெருபுறத்து அங்கபடியில் வைத்துக்கொள்ளவேண்டும்; மெல்லத் தாவியேறு; நானும் ஒருகை பிடிக்கிறேன் என்ருன். பின்பு பலதடவையேறிப் பலதடவை கீழேவீழ்ந்து பல தடவை பின்புறமாய்த் திரும்பியேறி, இப்படி வெகு நாழிகை தடுமாறிக் கடைசியில் சரியாக ஏறி உட்கார்ந்தான். உட்கார்ந்ததும் வடவடவென்று உடல்நடுங்க ஒன்றுந்தோன்ருமல் வண்ணான், ஓகோ! என் அருமை மனையாட்டி! சீக்கிரம் என்னைக் கட்டு! கட்டு! கீழே விழுந்துபோனேன்; உடல் நடுங்குகிறதென்ருன். உடனே அவள் உரத்தகயிறுகளைக் கொண்டுவந்து, அவன் கால்களை அங்கபடியோடு சேர்த்து உறுதியாய்க்கட்டி, இரண்டு அங்கபடியையும் ஒன்ருய்ச் சேர்த்துக்கட்டி, அவன் அரையைக் குதிரைவயிற்ருே

டும், கழுத்தை ஒருபுறத்திலும் சாயாதபடி முன்புறமாய்க் குதிரையின் கழுத்திலும் பின்புறமாய் வாலிலும் வலித்துக் கட்டினாள்.

தன் உடம்பில் ஊசிநாட்ட இடமில்லாமல் இறுக்கிக் கட்டிப் போடவே அந்தக் குதிரை, தன்மேலிருப்பது பூதமோ பேயோ என்று திகிற்பட்டு, நின்றவிடத்தில் நில்லாமல் எழும்பிக் குதித்துத் துள்ளிக் கடைசியில் நாலுகால் பாய்ச்சலாய்க் கால் தரையில் பாவாமலே பறந்தோடத் தலைப்பட்டது. அதன்மேல் நின்ற வண்ணான் அதுகண்டு ஒன்றும் தோன்றாமல் கண்ணீர் மாலைமாலையாய்ப் பெருக, ஓ! மனையாட்டி! மனையாட்டி! நீ என் கைகளைக்கட்ட மறந்துபோனாயே; இப்போது நான் என்ன செய்கிறது என்று கூவிக் கதற, அவள், பயமில்லை; பிடரிமயிரைப் பத்திரமாய்ப் பிடித்துக்கொண்டு போவென்றாள். அப்படியே அவன் குதிரையின் பிடரியைப் பிடித்துக்கொண்டான். வரவர வேகம் அதிகமாகி, மேடுகளும் பள்ளங்களும், குன்றுகளும் கணவாய்களும், ஆறுகளும் ஏரிகளும் பாலைவனங்களும் அலட்சியமாய்த் தாவிக்கொண்டு, இப்போது தென்படுகிற பொருள்கள் ஒரு நிமிஷங்கழித்துத் தென்படாதபடி வாயுவேகம் மனோவேகமாய் வழிதுறையில்லாமல் தன் மனதிற்குத் தோன்றியபடி அக்குதிரை ஓடத் தலைப்பட்டது.

அதன்மேல் இறுகக்கட்டுண்டு உட்கார்ந்திருக்கின்ற வண்ணான் அந்தச் சவாரிவேகத்தைப் பொறுக்கமாட்டாமல் தவிப்பதோடுகூட, அந்தக் குதிரை தன்னை எங்கே சத்துருக்கள் இருக்குமிடத்திற்குக் கொண்டுபோய் யுத்தபூமிக்குப் பலியாக்கிவிடுகிறதோ என்கிற திகிலினால் ஒன்றுந் தோன்றாமல் மிகவும் மனம் நடுங்கிக்கொண்டே போனான். அப்படிப் போய்க்கொண்டிருக்கையில் எப்படியாவது தப்பித்துக்கொள்ளவேண்டுமென்று துணிந்து, அவன் வழியிலிருந்த ஒரு சிற்றாலமரக்கிளையைப் பிடித்துக்கொண்டான். குதிரையின் கட்டு விடுபட்டுப்போமென்று எண்ணி அவன் அம்மரக்கிளையைத் தாவ, கிணறுவெட்டப் பூதம் புறப்பட்ட கதையாய், அம்மரம் வேரோடு பெயர்ந்து அவன் கையோடு வந்துவிட்டது. அவன் அதைக் கீழே போடமாட்டாமல் அப்படியே போனான். கடைசியாய்க் குதிரை அவனைப் பகைவன் படையிறங்கியிருக்குமிடத்தில் கொண்டுபோய்ச் சேர்த்தது.

சத்துரு சேனையிலிருந்த போர்வீரர்களெல்லாம் இவனை வெகு தூரத்திலேயே பார்த்து, ஓகோ! இவன் நம்மெதிரிப் படையாட்களுள் ஒருவன்போலக் காண்கிறான். இவன் மரம் மரமாய்ப் பெயர்த்து எடுத்துக்கொண்டு ஓடிவருகிறானே! அந்தப் படையாட்களெல்லாரும் இப்படியே இருப்பார்களானால் நாம் இப்போதே செத்தவர்கள்தாம் என்று எண்ணி அரசனண்டை ஓடி, ஓகோ குடிகெட்டது! இதோ சத்துரு சேனையெல்லாம் வந்துவிட்டது; அவர்களுக்கு ஆயுதம் காட்டுமரங்களேயொழிய வேறொன்றுமன்று; ஒவ்வொருவரும் இரண்டு கைகளிலும் இரண்டு மரங்களைப் பெயர்த்தெடுத்துக்கொண்டு குதிரைமேல் ஏறிவருகிறார்கள். நாங்கள் மனிதர்களோடு போராட வல்லவர்களே ஒழிய இப்படிப்பட்ட ராக்ஷதர்களோடு சண்டைசெய்ய வல்லவர்களல்லவென்று சொல்லி முறையிட்டுத் திக்குக்கொருவராய் ஓடிப்போனார்கள். இப்படிச் சேனைகளெல்லாம் ஓடிப்போகவே அந்த ராஜன் இன்னது செய்கிறதென்று தோன்றாமல், தான் எதிர்க்கத் துணிந்திருந்த அரசன் பேருக்குச் சமாதானவுடன்படிக்கை ஒன்று எழுதிக் கையெழுத்துசெய்து அந்தக் கூடாரத்திலேயே போட்டுவிட்டுத் தானும் ஓடிப்போனான்.

அவர்கள் போனதும் போகாததுமாயிருக்கையில், வண்ணானுடைய குதிரை வெகுதூரம் ஓடிவந்ததனால் ஓய்ந்து களைத்து அப்புறம் ஓடச் சக்தியற்றதாய் அந்தச் சேனை யிறங்கியிருந்த இடத்தில் வந்து நின்றது. குதிரை அவ்விடம்போய் நின்றதும் அதன்மேலிருந்த கட்டுகளெல்லாம் விடுபட்டுப்போயின. வண்ணான் சர்வசத்தும் ஒடுங்கி உயிர் தத்தளிக்க மூர்ச்சைபோய்த் தரையில் வீழ்ந்தான். கொஞ்சநேரம் கழிந்து நினைவுவந்து விழித்துப்பார்க்கையில் பலவகைப் படைகளோடுங் கண்ணுக்கெட்டினதூரம் படர்ந்திருந்த சேனையெல்லாம் ஓடிப்போயிருந்தன. அதைக் கண்டு ஆச்சரியமடைந்து வண்ணான் அவ்விடத்தைச் சுற்றிப் பார்த்தான். அங்கிருந்த சிறந்த கூடாரமொன்றில், 'நாங்கள் தங்களோடு சமாதானமாய்ப் போக ஆவல்கொண்டு இதோ ஓடிப்போகிறோம்; எதிர்த்த குற்றத்தை மன்னிக்கவேண்டும்' என்று எழுதித் தங்கள் அரசன் பேருக்கு விலாசத்துடன் கடிதமொன்று போட்டிருந்தது.

வண்ணான் அந்தக் கடிதத்தைக் கண்டு எடுத்துக்கொண்டு சந்தோஷமாய்த் திரும்பிப் பட்டணத்திற்குப்போகப் புறப்பட்டு மறுபடியும்

குதிரையில் ஏறிப்போகப் பயந்து குதிரையை இழுத்துக்கொண்டே நடந்து நேர்வழியாய் வெகுசீக்கிரத்தில் வீடுவந்து சேர்ந்தான். அவ்வளவு சீக்கிரத்தில் தன் புருஷன் போய்வந்ததைக்கண்டு வண்ணாத்தி ஆனந்தத்தால் உடம்பு பூரித்து எதிர்கொண்டாடிவந்தாள். அவளைக் கண்டதும் வண்ணான், ஆ! ஆ! நான் பட்டபாட்டை என்னவென்று சொல்லுவேன்! இவ்வுலகத்தில் ஓரிடங்கூட மிகுதியில்லாமல் இந்தக் குதிரை என்னைச் சுற்றுவித்தது. போனதுபோயிற்று; இனி அதைச் சொல்லியென்ன? உடனே இந்தக் கடிதத்தையும் எனக்காக வந்த இக்குதிரையையும் அரசனிடத்திற்கு அனுப்பிவிடு; குதிரையை இப்போதே அனுப்பிவிடாவிட்டால் நாளைக் காலையில் அரமனைக்குப் போகும்போது இதன்மேலேயே ஏறிக்கொண்டு போகவேண்டிவரும்; அதை நினைக்கும்போதே என் உடல் நடுங்குகின்றது என்று சொல்ல, அவள் அப்படியே கடிதத்தையும் குதிரையையும் ஒரு சேவகன்கையில் கொடுத்து, இப்போது நேரமாய்விட்டபடியால் நாளை உதயத்திற்குத் தன் புருஷன் அரமனைக்கு வருவார் என்று அரசனுக்குச் செய்திசொல்லி அனுப்பினாள்.

மறுநாள் காலையில் வண்ணான் அரமனைக்குப்போகப் புறப்பட்டான். போகும்போது ஜனங்கள் அவனைப் பார்த்து, இவ்வளவு பராக்கிரமம் உள்ளவன் எவ்வளவு வணக்கம் உடையவனாயிருக்கிறான் என்று சொல்லி அதிசயித்தார்கள். அவன் குதிரைமேல் ஏறப் பயந்து காலால் நடந்துபோவது யாருக்குத்தெரியும்! அந்த வண்ணான் அரமனைவாயிலில் நுழைவதற்குமுன்னமே அரசன் எதிர்கொண்டு வந்து அவனை ஆஸ்தானத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் வேண்டிய மரியாதைகள்செய்து, நீ நமது சத்துருவை ஜயித்த விதமென்ன? உன்னைக் கண்டு அவன் ஓடிப்போன விதமெப்படி என்று பல தடவை கேட்டு மகிழ்ந்து, அவன் கொண்டுவந்த கடிதத்தில் கண்டபடியே சமாதான உடன்படிக்கையும் ஏற்படுத்தி, அந்த வண்ணானுக்குப் பல பட்டப்பெயர்களும் அளவற்ற பொருள்களும் பரிசாகக் கொடுத்து, இவனைப்போல், தைரியமும் சவுரியமுமுடையவன் வேறொருவனும் இல்லையென்று எண்ணி அவனை ராஜகாரியத்துணைவனாகத் தன்னிடத்திலேயே வைத்துக்கொண்டான். வண்ணானும் ஒரு குறையுமில்லாமல் தன் ஆயுளளவும் சுகமாயிருந்தான்.

## 14-வது. அரக்கர் மாளிகை

நெடுநாளைக்குமுன் அரசன் ஒருவன் இருந்தான். இரண்டு பெண்களைப் பெற்றுவிட்டு அவனுடைய மனைவி இறந்துபோனுள். அவள் இறந்துபோன சிலநாளைக்கெல்லாம் அவனுக்கு மறுவிவாக மாயிற்று. அந்த இளையாள் அரசன் வீட்டுக்கு வந்த நாள்முதல் மூத் தாளுடைய பெண்களிருவரையும் மிகவும் பகைத்து, அவர்களுக்குப் பலவிதமாய்ப் பொல்லாங்கு செய்துவந்தாள். அந்த ராஜாவும் தன் பெண்களை விசாரிக்கவேண்டிய வருத்தத்தைத் தான் ஏற்றுக்கொள் ளாமல் எல்லாம் தன் மனையாள் ஆதீனமாயே விட்டுவைத்தான். ஆதலால் அந்த ராணி அப்பெண்களை என்ன செய்தாலும் கேட்பா ரில்லை. அக்கொடியவள் கையில் அகப்பட்டுக்கொண்டு அந்தப் பெண்கள் பட்ட வருத்தம் இப்படிப்பட்டதென்று சொல்லக்கூடாது. அவள் படுத்துகிற பாட்டைப் பொறுக்கமாட்டாமல் ஒருநாள் அப் பெண்களுள் ஒருத்தி மற்றொருத்தியைப் பார்த்து, பெண்ணே! இவ் விடத்தில் நாம் இப்படிப்பட்ட துக்கப்பிழைப்பு பிழைப்பதைவிட, நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகலாம்; காட்டுக்கு ஓடிப்போய்க் காய் கிழங்குகளையாவது தின்று பிழைக்கலாம் வா என்று சொல்ல, அப்படியே அவர்கள் இருவரும் காட்டுக்குப்போய்க் காய்கனிகளைத் தின்று சிலகாலம் அங்கேயே திரிந்துகொண்டிருந்தார்கள்.

இப்படி அவர்கள் காட்டில் அல்லாடிக்கொண்டிருக்கையில், ஒரு நாள் நடுக்காட்டிலே மிகவும் அற்புதமான மாளிகை ஒன்றிருக்கக் கண்டார்கள். அது ஒரு ராக்ஷதனுடைய மாளிகை. இப்பெண்கள் போய்ப் பார்த்த தருணத்தில் அம்மாளிகைக்கு உடையவனுன ராக்ஷ தன் தன் மனையாளோடுகூட வெளியே போயிருந்தான். அந்த

மாளிகையைக் கண்டு அப்பெண்களுள் ஒருத்தி, நடுக்காட்டிலிருக்கின்ற இந்த அரமனை ஒரு ராக்ஷதனுடையதா யிருக்குமே ஒழியப் பின் எவருடையதாயுமிராது, ஆயினும் உடையவன் இப்போது வீட்டுக்குள் இருப்பதாய்த் தோன்றவில்லை ; இத்தருணத்தில் நாம் உள்ளே நுழைந்து தின்பண்டம் ஏதாவது வைத்திருக்கிறதா பார்ப்போம் என்று சொல்ல, அப்படியே இருவரும் உள்ளே நுழைந்து பார்த்தார்கள். கொஞ்சம் அரிசி அகப்படவே அதைச் சமைத்துப் புசித்துவிட்டு அம்மாளிகையை நன்றாய்ச் சுத்திசெய்து சீர்ப்படுத்திக்கொண்டிருக்க, அத்தருணத்தில் காட்டுக்குப்போயிருந்த ராக்ஷதன் தன் மனையாளோடு திரும்பி வந்தான். அவனைக்கண்டு அந்தப் பெண்கள் பயந்து உடனே அவ்வீட்டின் மேல்மாடியில் ஏறி அங்கே ஒரு மூலையில் ஒளித்துக்கொண்டார்கள். அவ்வொளிப்பிடத்திலிருந்து அம்மாளிகையின் உட்புறம் வெளிப்புறம் இரண்டையும் நன்றாய்ப் பார்க்கக்கூடியதாய் அவ்விடம் அவர்களுக்கு வாய்த்திருந்தது. ராக்ஷதன் விநோதமாய்ப் பொழுதுபோக்குவதெல்லாம் அந்த மேல்மாளிகையிலேதான் ; அவன் பலவகைத் தானியங்கள் சேகரித்து வைப்பதும், ஆடையாபரணங்கள் வைப்பதும் அம்மேல்மாளிகையிலேதான். அவ்விடத்தில் இந்த ராஜகுமாரத்திகளிருவரும் ஒரு நெற்களஞ்சியத்தின்கீழ் ஒளித்துக்கொண்டிருந்தார்கள்.

ராக்ஷதன் வீட்டுக்கு வந்ததும் வீட்டை நாற்புறமும் சுற்றிப் பார்த்து, இம்மாளிகை முழுதும் எவ்வளவு நன்றாய்ச் சீர்ப்படுத்தி வைத்திருக்கிறது பார்த்தாயா ! ஒரு தூசிகூட இல்லாமல் தரைமுழுதும் பெருக்கி எடுக்கப்பட்டிருக்கின்றது. இவ்விடத்திற்கு யாரோ வந்துதான் இவ்வளவு வேலை செய்திருக்கவேண்டும் ; அல்லது நீயே இவைகளையெல்லாம் இப்படிச் சீர்ப்படுத்திவைத்தாயா என்று கேட்க ராக்ஷசி, நான் ஒன்றும் அறியேன் என்றாள். அதைக் கேட்டு ராக்ஷதன் தன் மூக்கை மலர விரித்து வாசனை பிடித்துக்கொண்டு அந்த வீட்டைப் பலதரம் சுற்றி வந்து, இவ்விடத்தில் யாரோ வந்து தங்கியிருக்கவேண்டும் ; மனிதமாமிசமும் ரத்தமும் நாற்றமடிக்கிறது ; எவன் எங்கே வந்து ஒளித்திருக்கிறான் என்று கூவ, அவன் மனையாள், நீ என்ன சிறிதும் ஆலோசனையில்லாத பேச்சுப் பேசுகிறாய்! நீ அறுபதுநாழிகையும் நூற்றுக்கணக்காய் மனிதர்களைக் கொன்று புசித்துக்கொண்டிருக்கிறாய்! இன்னுங்கூட இதோ தின்றுகொண்

டிருக்கிறாயே! அதன் மணம் உன் மூக்குக்கு ஏன் எட்டாமலிருக்கும்? அதைவிட்டு என்னவோ பேசுகிறாயே என்று சொன்னாள். அவர்கள் இருவரும் இப்படிக் கொஞ்சநேரம் விவாதப்பட்டுக்கொண்டிருந்தார்கள். கடைசியில் ராக்ஷதன், நீ என்னவோ சொல்லுகிறாய், எனக்கு நரமாம்சநாற்றம் நன்றாய் வருகிறது; அது எப்படியாவது கிடக்கட்டும், வெகு தாகமாயிருக்கிறது; கொஞ்சம் தண்ணீர் குடிப்போம் வா என, அவ்விருவரும் அண்டையிலிருந்த ஒரு கிணற்றண்டைபோய்த் தண்ணீர் மொண்டுகொண்டிருந்தார்கள்.

இப்படி உள்ளே நடந்த செய்திகளையெல்லாம் ராஜகுமாரத்திகளிருவரும் மேல்மாடியிலிருந்து உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். கடைசியில் அந்த ராக்ஷதன் தன் மனைவியோடுகூடக் கிணற்றங்கரையிலே போய் நிற்கக் கண்டு, அந்தப் பெண்களுள் மிகவும் சமர்த்தியான இளையவள் மூத்தவளைப்பார்த்து, இப்போது நான் நம் இருவருக்கும் நன்மையாய் ஒரு காரியம் செய்து வருகிறேனென்று சொல்லிவிட்டு, உடனே கீழிறங்கி ராக்ஷதர்களுக்குத் தெரியாமல் மெதுவாய் நகர்ந்துகொண்டு கிணற்றண்டை அவர்கள் காலின் கீழே போய், அவர்கள் காலை நொண்டி விரல்களை மாத்திரம் ஊன்றி நின்றுகொண்டிருக்கிற தருணம்பார்த்துத் திடீரென்று இருவர் காலையும் பிடித்துத் தூக்கி அவர்களைக் கிணற்றிலே தள்ளிவிட்டாள். ராக்ஷதர்கள் இருவரும் கிணற்றிலே வீழ்ந்து உடனே மூழ்கி இறந்துபோனார்கள். அந்தப்பெண் தான் கோரின காரியத்தை முடித்துக்கொண்டு தன் அக்காளண்டை வந்து, நான் ராக்ஷதர்களைக் கொன்றுபோட்டேனென்று சொல்ல, அவள், இருவரையும் கொன்றுபோட்டாயா என்று கேட்டதற்கு, ஆம், இருவரையுந்தான் கொன்றுபோட்டேன்; இனி அவர்கள் ஒருநாளும் பிழைத்துவரமாட்டார்கள் என்று சொல்லிச் சந்தோஷமடைந்தாள்.

ராக்ஷதர்கள் இறந்துபோனபிறகு அந்த ராஜகுமாரத்திகள் இருவரும் அந்த மாளிகையைத் தாங்களே சுவாதீனப்படுத்திக்கொண்டு அதில் வெகு சவுக்கியமாக நெடுநாள் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். அந்த ராக்ஷதன் அங்கங்கிருந்து கொண்டுவந்து சேகரித்துவைத்த அளவற்ற சிறந்த ஆடையாபரணங்களும், பொன் வெள்ளி சாமான்களும், இன்னும் பலவிதமான பொருள்களும் அம்மாளிகை முழுதும் நிரப்பப்பட்டிருந்தன; அம்மாளிகையைச் சுற்றிலும் ஆடுகளும் மாடு

களும் நிறைந்திருந்தன. அப்பெண்களுள் இளையவள் நாள்தோறும் ஆடுமாடுகளைக் காலையில் வெளியே ஓட்டிக்கொண்டுபோய் மேய்த்துக்கொண்டு மாலைவேளையில் வீட்டிற்குத் திரும்பி வருவாள். மூத்தவள் வீட்டிலேயேயிருந்து சோறுசமைப்பது முதலான வீட்டு வேலைகளைச் செய்துகொண்டு வீட்டைப் பத்திரமாய்க் காத்துக் கொண்டிருப்பாள். அவ்விரண்டு பெண்களுள் இளையவள் மிக்க யுக்தியும் விவேகமும் முன்யோசனையும் உடையவளாதலால், நாள் தோறும் தான் வீட்டைவிட்டு வெளியே போகும்போது, நீ வீட்டைப் பத்திரமாய்க் காத்துக்கொண்டிரு; புதிதாய் யாராவது இவ்விடத்திற்கு வருவார்கள்; ஆணாகட்டும் பெண்ணாகட்டும், யார்வந்தாலும் அவர்கள் கண்ணுக்கு அகப்படாமல் ஒளித்துக்கொள்; யாராவது பரதேசியாய் வந்து சோறு தண்ணீர் இரப்பார்களானால், கந்தைத்துணியும் கரிபூசின மேனியுமாய் நம்மால் எவ்வளவு செய்யக் கூடுமோ அவ்வளவும் உடம்பை விகாரப்படுத்திக்கொண்டு அவர்கள் எதிரே போய் நில்; இல்லாவிட்டால் அவர்கள் உன் அழகைப் பார்த்து உன்னைப் பிடித்து இழுத்துக்கொண்டு போய்விடுவார்கள். போய்விட்டால் பின்பு நாம் இருவரும் ஒருபோதும் கூடமாட்டோம் என்று எச்சரிக்கை சொல்லிவிட்டுப்போவாள். மூத்தவளும் அப்படியே ஆகட்டுமென்று சொல்லி மிகவும் ஜாக்கிரதையாய் வீட்டிலே காத்துக்கொண்டிருப்பாள். இப்படியாகச் சிறிதுகாலம் சென்றது.

நெடுநாள்வரையில் அவ்விடத்திற்கு ஒருவரும் வரவில்லை; அந்தப் பெண்களுக்கு எந்தவிதமான துன்பமும் உண்டாகவில்லை. அப்படியிருக்க, அண்டைநாட்டு ராஜகுமாரன் ஒருவன் வெகு நாளாய் அந்தக் காட்டுக்கு வந்து வேட்டையாடிக்கொண்டிருந்தான். அப்போது ஒருநாள் அவன் நெடுநேரம் வேட்டையாடிக் களைத்துத் தண்ணீர் அகப்படாமல் எங்கே அகப்படுமோவென்று தேடிக் கொண்டு இந்தப் பெண்கள் குடியிருந்த அரமனையண்டைவந்து சேர்ந்தான். நிர்மானுஷியமான நடுக்காட்டிலே மிகவும் அற்புதமான மாளிகையொன்றிருப்பதைக் கண்டு அந்த ராஜகுமாரன், இதென்னவென்று ஆச்சரியமடைந்து தன் பரிஜனங்களை அழைத்து, நீங்கள் இந்த அதிசயத்தைக் கண்டீர்களா? இந்தப் பெருங்காட்டின் நடுவே இப்படிப்பட்ட அழகான அரமனையை எவன் கட்டியிருப்

பான்? நல்லது, அங்கேபோய்க் கொஞ்சம் தண்ணீர் வாங்கிக் கொண்டு வருவோமென, சேவகர்கள், வேண்டாம், வேண்டாம், நாம் அவ்விடத்திற்குப் போகக்கூடாது; இந்தப் பெருங்காட்டி லிருக்கிற வீடு ஒரு ராக்ஷதனுடையதாயிருக்குமே ஒழிய மற்றெவ னுடையதாயுமிராது என்று சொல்லி மறுக்க, ராஜகுமாரன், எல்லா வற்றையும் நாம் நேராய்ப் போய்ப் பார்ப்போம்; பயங்கரமான பிராணியொன்றும் இதில் வசிப்பதாய் எனக்குத் தோன்றவில்லை; அப்படியிருந்தால் இரைச்சலும் ஆரவாரமுமாயிராதா? இப்படிக் கம்மென்று அடங்கியிருக்குமா என்று சொல்லி அம்மாளிகைக்குச் சென்றான். அங்கே வெளிக்கதவு சாத்தித் தாழ்ப்பாள் போட்டிருந் தது. ராஜகுமாரன் கதவண்டைபோய் நின்று, இந்த வீட்டுக்கு உடையவர் யாரையா? நாங்கள் நாவறண்டு வந்திருக்கிறோம்; இந்த வேளையில் கொஞ்சம் தண்ணீர் கொடுத்துக் காப்பாற்றுங்கள் என்று கூவினான். அவன் என்ன கூவியும் ஒருவரும் ஏனென்று விடை கொடுக்கவில்லை. அந்த மாளிகைக்குள்ளிருந்த ராஜகுமாரத்தி அவன் குரலைக் கேட்டவுடனே, தன் தேகத்தை விகாரப்படுத்திக் கொள்வதற்காகக் கரியரைத்துப் பூசுவதும், கந்தைகளை எடுத்துக் கட்டிக்கொள்வதுமாயிருந்தாள். அந்தத் தாமதத்தைப் பொறுக்க மாட்டாமல் ராஜகுமாரன் மிகுந்த கோபத்துடன் கதவைப் பிளப் பதுபோலப் பலதரம் இடித்து, யாருள்ளே? கதவைத் திறப்பீர்களா, மாட்டீர்களா; திறக்காவிட்டால் நானே கதவைப் பிளந்துகொண்டு உள்ளே வந்துவிடுவேன் என்று கூவ, அதைக்கேட்டு உள்ளே இருந்த பெண் மிகவும் வெருண்டு சீக்கிரமாய்த் தன் உடலை விகா ரப்படுத்திக்கொண்டு, ஒரு பாத்திரத்திலே கொஞ்சம் தண்ணீரோடு கூட வந்து கதவைத் திறந்தாள். ஆயினும் அவன் யாரோ என் னவோ என்கிற பயத்தினால் அவள் ஒரு பேச்சுகூடப் பேசத் துணிய வில்லை. அந்த ராஜகுமாரன் நல்ல சாமர்த்தியமுடையவனாதலால், தண்ணீர் குடிக்கத் தலையை நிமிர்த்தும்போது அந்தப் பெண்ணைப் பார்த்து, இதென்ன, இந்தப் பெண்வடிவம் இப்படியிருக்கிறதே; இவளைப் பார்க்கையில் அதிக ரூபவதியாயிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது; வேண்டுமென்று ஏதோ ஒன்றை உடம்பெல்லாம் பூசிக்கொண்டு இவ்வளவு விகாரமாய்த் தென்படுகிறாள். இதன் உண்மையைக் கண்டறியவேண்டுமென்று தன் கையிலிருந்த தண்

ணீரைக் குடிக்காமல் அந்தப் பெண்ணின் முகத்தில் இறைத்தான். இறைக்கவே அவள் ஒருவாறு கதறிக்கொண்டு கொஞ்சம் பின்னிடைந்தாள். அவள் முகத்தில் இறைத்த நீர் அங்கிருந்த கரியை நன்றாய் கழுவிக்கொண்டு கீழே வழிய, அந்த முகமானது கிரகணத்தினின்றும் விடுபட்ட சந்திர பிம்பம்போல வெகு நன்றாய்ப் பிரகாசித்தது. அந்த முகத்தின் சவுந்தரியத்தைக் கண்டு ராஜகுமாரன் பிரமித்து, அவ்வழகியின் செந்தாமரைமலர்க் கைகள் இரண்டையும் பிடித்துக்கொண்டு, என்னுசைக்கிளியே! நீ யார்? எங்கிருந்து வந்தாய்? உன் தாய்தந்தையர்கள் எங்கே? இந்த நடுக்காட்டில் நீமாத்திரம் இப்படித் தனித்து வசிப்பதற்குக் காரணமென்ன? எல்லாம் உள்ளது உள்ளபடியே சொல், இல்லாவிட்டால் உன் தலையை வெட்டிப்போடுவேனென்று சொல்லிக் கத்தியை உருவுவதுபோல நடிக்க, அவள் அதுகண்டு மிகவும் பயந்து கொஞ்சநேரம் வாயெடுத்துப்பேசாமல் நின்றாள். ஆயினும் அவன் எங்கே கொன்றுபோடுகிறானோவென்கிற திகிலினால் மனதைக் கொஞ்சம் தைரியப்படுத்திக்கொண்டு, தான் ஒரு ராஜகுமாரத்தியென்றும், தன் மாற்றாந்தாயினுடைய கொடுமையைப் பொறுக்கமாட்டாமல் காட்டுக்கு ஓடிவந்து அந்த மாளிகையில் தனித்து வசிக்கும்படி நேரிட்டதென்றும் தன்னுடைய துக்கக்கதையைச் சொல்லி, அதை முடித்ததும் முடியாததுமாய்த் தீனமாகப் புலம்பத் தொடங்கினாள். அவளுடைய பரிதாபத்தைப் பார்த்து ராஜகுமாரன் இரக்கமுற்று, என் காதற்கொழுந்தே! இப்போது நான் உன்னிடத்தில் காட்டிய கொடுமைக்காக நீ என்னை மன்னிக்கவேண்டும்; பயப்படாதே, உன்னை என் பட்டணத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் நானே உன்னைக் கலியாணஞ் செய்துகொள்ளுகிறேன் என்றான். அவன் சொல்லுகிற வார்த்தைகளைக் கேட்கக்கேட்க அவளுக்கு மனதில் அச்சமும் திகிலும் அதிகமாகிக்கொண்டே வந்தது. கடைசியாய் அவள், அவன் சொல்லுவது இன்னதென்றுகூடத் தெரியாமல் மூர்ச்சைபோனாள். அவ்வளவு நேரத்திலும் அந்தப் பெண் தன் சகோதரியைப்பற்றி யாதொன்றும் அவனுடன் சொல்லவில்லை; தனக்குச் சகோதரி ஒருத்தி யிருக்கிறாளென்றுகூடச் சொல்லவில்லை. ஏனெனில் இவன் நம்மையே கொன்றுவிடுவதாய்ச் சொல்லுகிறானே, அவள் செய்தியைச் சொன்னால் அவளையும் பிடித்துக் கொன்று

போடுவான் என்று பயந்து, ஐயோ பாவம்! அவளாவது எங்கேயாயினும் தப்பிப் பிழைக்கட்டும் என்று நினைத்துச் சும்மாயிருந்துவிட்டாள். அந்த ராஜகுமாரன் பூததயை பச்சாத்தாபம் முதலிய நற்குணங்கள் நிறைந்தவன்; பிறந்தநாள்முதல் ஒருவரையொருவர் விட்டுப் பிரியாத இந்தப் பெண்களைப் பிரிக்கவேண்டுமென்று அவன் ஒருபோதும் எண்ணமாட்டான். ஐயோ! இந்தச் செய்தியொன்றும் அவனுக்குத் தெரியாதே. ஒருநாளும் புது மனிதரைக் கண்ணாலே பாராதவளாதலால், நாம் நல்ல வார்த்தை சொன்னாலுங்கூட அதைக் கேட்டு இவள் நடுங்குகிறாளென்று நினைத்து அவன் தன் சேவகர்களை அழைத்து, இந்தப் பெண்ணை எடுத்துப் பல்லக்கில் ஏற்றிக்கொள்ளுங்கள்; நமது பட்டணத்திற்குப் போவோமென்றான். ராஜகுமாரனுடைய கட்டளைப்படியே சேவகர்கள் அந்தப் பெண்ணைப் பல்லக்கில் ஏற்றிக்கொண்டார்கள்.

இப்படித் தன்னைப் பல்லக்கில் போட்டடைத்துத் தூக்கிக்கொண்டு போகும்போது அந்தப் பெண் கொஞ்சம் நினைவு வந்து கண்திறந்து பார்த்தாள். பார்த்து, ஐயோ! இதென்ன? நம்மை எங்கேயோ தூக்கிக்கொண்டுபோகிறார்களே! பொழுதுபோனவுடன் காட்டுக்குப்போன பெண் திரும்பி வீட்டுக்கு வந்து பார்த்தால் என்ன நினைப்பாளோ! என்ன சங்கடப்படுவாளோ! என்ன புலம்புவாளோ! என்று விசனமடைந்து, நாம் போனவழியாவது அவளுக்குத் தெரியும்படி ஏதாவது ஒரு குறிபோட்டுக்கொண்டு போகவேண்டுமென்று எண்ணி, தான் கழுத்தில் தரித்துக்கொண்டிருந்த முத்துமாலைகளிலிருந்த முத்துகளையுருவித் தன் பட்டாடையொன்றைத் துண்டுதுண்டாய்க் கிழித்துக் காற்றிலே பறந்துபோகாமல் கொஞ்சம் புளுவாயிருக்கும்படி ஒவ்வொரு முத்தை முடிந்து கொஞ்சந்தூரத்துக்கு ஒவ்வொன்றாக அந்த ராஜகுமாரனுடைய அரமனை போகுமளவும் வழிமுழுதும் போட்டுக்கொண்டுபோய்க் கடைசியில் மிகுந்ததை அந்த அரமனை வாயிலண்டை போட்டு வைத்தாள்.

அத்தேசத்து ராஜாவும் ராணியும் தம்மகன் இட்டுக்கொண்டு வந்த பெண்மணியின் சவுந்தரியத்தைக் கண்டு மிகவும் களிப்படைந்தார்கள். மேலும் ஆதிதொடங்கி அவளுடைய சரித்திரத்தைக் கேட்டு மிகவும் பரிதாபப்பட்டு, இனி இவளுக்குத் தம்மால் கூடியவரையில் நன்மை

விளை விக்கவேண்டுமென்று நிர்மானித்து தம்மகனுக்கே அந்தப் பெண்ணைக் கலியாணஞ்செய்துகொள்ள நிச்சயித்தார்கள். அந்தப்படியே ஒருநாள் நல்ல சுபமுகூர்த்தத்தில் அவ்விருவருக்கும் அனைவருங்கண்டு அதிசயிக்கும்படி மிக்க வைபவத்துடனே கலியாணம் நடந்தேறிற்று. அவ்வரசனும் அரசியும் அம்மருமகளுக்கு அதுவரையில் அவள் பட்டதுக்கங்களெல்லாம் மறந்து மேன்மேலும் களிப்பும் சந்தோஷமும் உண்டாகவேண்டுமென்று தம்மாலியன்றமட்டும் அவளுக்குச் சிறந்த ஆடையாபரணங்களெல்லாம் கொடுத்து, பின்பு ஒரு குறையும் உண்டாகாதபடிப் பலவித உபசாரங்களும் செய்வித்துவந்தார்கள். என்ன செய்தாலும் அந்தப் பெண்ணுக்குச் சிறிதும் சந்தோஷமுண்டாகவில்லை. தன் தங்கை தனியேநின்று என்ன வருத்தப்படுகிறளோ! எவ்விதமாயிருக்கிறளோ என்கிற துக்கம் அவள் மனதை விட்டு நீங்கவேயில்லை. இச்செய்தியைத் தன் புருஷனுக்குத் தெரிவித்து அவளைத் தேடி அழைத்துவரச்சொல்வோமென்பதற்கும் அவளுக்கு மனதில் துணிவு உண்டாகவில்லை. இப்படியே கொஞ்சக் காலம் துக்கப்பட்டுக்கொண்டே கழித்தாள்.

இதிப்படியிருக்க, ஆடுமாடுகளை மேய்த்துவரக் காட்டுக்குப்போயிருந்த இளையவள் பொழுதுபோனதும் அவைகளை ஓட்டிக்கொண்டு வீட்டுக்குத் திரும்பி வந்தாள். வந்துபார்க்கையில் வாயிற்கதவு திறந்தது திறந்தபடியே இருந்தது. வாயிலண்டை ஒருவரும் நின்றுகொண்டிருக்கக் காணப்படவில்லை. நாள்தோறும் இவள் மாலைவேளையில் மாடோட்டிக்கொண்டு வீட்டுக்கு வருகையில் உடன்பிறந்தாள் வாயிலண்டை வந்துநின்று இவள் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருப்பாள். அன்றையதினம் அவளையும் காணமல் கதவும் திறந்தது திறந்தபடியே கிடக்கவே, அச்சிறுமி இதென்னவென்று திடுக்கிட்டு வீடு முழுதும் சுற்றிச்சுற்றிப் பலதரம் தேடிப்பார்த்தாள்; ஒருவரும் காணப்படவில்லை. வெளியேபோய் எங்கேயாவது தேடிப்பார்ப்போம் என்பதற்குமில்லை; பொழுது போய்விட்டது. அப்போது அவள் மனந்தவித்த தவிப்பை என்னென்று சொல்லலாம்! அடி என் தாயே! கண்ணே! என் உயிரே! நீ எங்கே போய்விட்டாய்; நான் இதோ வந்து உன்னைக் காணமல் தவிக்கிறேனே; யாராவது வந்து உன்னைப் பலவந்தமாய்ப் பிடித்து இழுத்துக்கொண்டு போய்விட்டார்களா என்றிப்படிப் பலவிதமாய் இரவு முழுதும் புலம்

பிக்கொண்டிருந்தாள். அந்த ஒரு இராப்பொழுது கொஞ்சத்தில் ஒழியாமல் அவளுக்கு ஒரு யுகமாயிருந்தது. எப்பொழுது கிழக்கு வெளுக்கப்போகிறதென்று காத்துக்கொண்டிருந்தாள்.

மறுநாள் பொழுதுவிடிந்ததும் அவள் தன் தமக்கையைத் தேடப் புறப்பட்டாள். அம்மாளிகையைச் சுற்றி நாற்புறமும் தேடுகையில் ஒருபுறத்தில் ஓரண்டை மூத்தவள் முடிந்து போட்டுப்போன முடி யொன்று அகப்பட்டது. அதை எடுத்துப் பார்த்து அதனுள் இருந்த முத்து தன் தமக்கை தரித்துக்கொண்டிருந்த முத்துமாலையின் முத் தென்றும், அதை முடித்திருந்த பட்டு அவள் அணிந்திருந்த பட்டா டையின் துண்டென்றும் தெரிந்துகொண்டு அந்த வழியே சிறிது தூரம்போனாள். அங்கே மற்றொரு முடி அகப்பட்டது. இன்னும் சிறிதுதூரத்திற்கப்பால் இன்னொன்று அகப்பட்டது. இப்படியே ஐந்தாறுமுடிகள் அகப்படவே, தான் போனவழி நமக்குத் தெரிய வேண்டுமென்று நம் அக்காள்தான் இப்படிப் போட்டுக்கொண்டு போயிருக்கிறாளென்று தெரிந்து சிறிது சந்தோஷமடைந்து அதே வழியாய்ச் சென்றாள். அதிகமாய் நடந்து வழக்கப்படாதவளாதலால் வழி கொஞ்சத்தில் மாளவில்லை. தன்னாலியன்றமட்டும் மெல்ல மெல்ல வெகுநாள் நடந்துபோனாள். வெகுதூரம் நடந்து மிகவும் ஓய்ந்துபோனதனால், ஒவ்வோரிடத்தில் ஒரு முடியிலிருந்து மற்றொரு முடியண்டைபோக இரண்டு மூன்றுநாள்கூடச் சென்றது. உடம்பு ஓய்ந்துபோயும் உடன்பிறந்தாளைக் காணவேண்டுமென்னும் ஆவல் அதிகமாயிருக்கவே, வருத்தத்தோடு வருத்தமாய் மெல்ல மெல்ல நடந்து அவள் ஒரு பெரிய பட்டணத்தண்டை போய்ச் சேர்ந்தாள். அங்கே போகையில் தன் உடன்பிறந்தாள் இந்தப் பட்டணத்திற்கே கொண்டுவரப்பட்டிருக்கிறாளென்று அவளுக்கு நன்றாய்த் தெரிந் தது. அந்தச் சிறுமகள் மகா சவுந்தரியமுடையவள். அவள் புத்தி யின் தன்மைக்கேற்றபடியே வடிவழகும் மேன்மை பெற்றிருந்தது. அந்நகரத்தண்டை போகையில் அவள், இப்பட்டணத்து ஜனங்கள் நம் அழகைக் கண்டால் நம் உடன்பிறந்தாளைச் செய்ததுபோலவே நம்மையும் பிடித்துக்கொள்வார்கள். பின்பு அவளைக் காண்போமென் கிற ஆசை நமக்கு ஒருபோதும் இல்லை. ஆதலின் நம்முடைய வடி வழகை மறைத்துக்கொண்டுதான் இந்நகரத்துள் நுழையவேண்டும் என்று நினைத்தாள். நினைக்கையில், வழியோரத்திலே வறுமையால்

வற்றியுலர்ந்த கிழப்பிணமொன்று தென்பட்டது. அவ்வுடலில் எலும்பும் தோலுந்தவிர மற்றொன்றுமில்லை. இம்மகள் அதைப் பார்த்ததும் நமக்காகவே சுவாமி இதை இங்கே கொண்டுவந்துபோட்டார் என்று சந்தோஷத்துடன், அவ்வுடலிலிருந்து தோலையுரித்து அதைநன்ருய்க்கழுவி, தன் செந்தாமரை முகமும் சங்கக்கழுத்தும் தங்கக்கொடிமேனியும் விகாரப்படும்படி மேலே போர்த்துக் கொண்டு, வழியே கிடந்த நீண்ட தடியொன்றையும் கையில் ஊன்றிக்கொண்டு ஒரு தள்ளாத கூனிக்கிழவிபோலத் தத்தித்தத்தி நடந்து நடந்துபோனுள். அவள் போத்துக்கொண்ட கிழத்தோல் முழுதும் திரைத்துச் சிற்சில விடங்களில் அழுகியுமிருக்கவே பார்ப்போர்களெல்லாம் இப்படிக்கூட விகாரவடிவாய் உலகில் ஒரு கிழவியிருப்பாளோ என்று சொல்லி அவளைப் பரிகாசம் பண்ணிக்கொண்டேபோனுர்கள். அவளுடைய இயற்கையான வடிவம் இதல்லவென்றும், வேண்டுமென்று மேலுக்கு வேஷந்தரித்துக்கொண்டிருக்கிருளென்றும் ஒருவர்க்குந் தோன்றவில்லை.

இப்படியே அப்பெண்ணரசி இங்குமங்குங் கிடந்த முத்து முடிகளைப் பொறுக்கிக்கொண்டு பட்டணத்துத் தெருவழியே போனுள். அது கடைசியில் அவளுடைய தமக்கை வாழ்கின்ற மாளிகை வாயிலண்டை கொண்டுவிட்டது. அம்மாளிகை வாயிலில் மிகுந்த முத்துக்கள் யாவும் கும்பலாய்க் கொட்டிக்கிடக்கவே, இதற்கருகிலே தான் எங்கேயாவது ஓரிடத்தில் மூத்தவள் வந்திருக்கவேண்டுமென்று அவளுக்கு நிச்சயமாய்த் தோன்றிற்று. அந்த ராஜமாளிகைக்குள் எப்படியாவது நுழைந்துத் தேடிப்பார்க்கவேண்டுமென்று அவள் மனம் மிகவும் தவித்தது. இப்படிப்பட்ட அவலக்ஷணமான கூனிக் கிழவியைக் காவலாளர்கள் என்றைக்காவது உள்ளே விடுவார்களா? தன் கையிலிருக்கிற முத்துக்களில் இரண்டொன்றைப் பரிதானங் கொடுத்து உள்ளே போவோமென்பதற்கும் அவளுக்குத் துணிவுண்டாகவில்லை; இவைகளைக் கொள்ளையடித்துக் கொண்டுவந்தாள் என்று எங்கே பிடித்துக்கொள்வார்களோவென்று திகிலடைந்தாள். ஆதலால் அங்கேபோய் ஒருவரையும் கேட்கத் தைரியமுண்டாகாமல் அம்மாளிகைக்குச் சமீபத்தில் தனக்கேற்றதாய் வாய்க்கும் ஓரிடத்தில் தங்கியிருந்து, தன் சோதரியைப்பற்றிச் செம்மையாய் ஏதாவது ஒரு செய்தி தெரியும்படியான நல்லகாலம் நேரிடுமளவும் அங்கேயே

காத்துக்கொண்டிருக்கவேண்டுமென்று தீர்மானித்து, அம்மாளிகைக்கு எதிரிலிருந்த ஒரு குடியானவன் வீட்டுத் தெருத்திண்ணையிலேபோய் உட்கார்ந்து காத்துக்கொண்டிருந்தாள். அப்போது அவ் வீட்டுக்காரி வந்து பார்த்து, அம்மா பாட்டியாரே! நீர் யார்? ஏன் இவ்விடத்திற்கு வந்தீர்? உமக்கு என்ன தேவை? உமக்குச் சொந்த மனிதர் ஒருவரும் கிடையாதோவென்று கேட்க, அவள், ஐயோ! ஒருவரும் கிடையாதே, நான் ஒரு பரதேசிப்பெண்; என்னை இந்தத் தள்ளாதவயதில் காப்பாற்றத் தாய்தந்தையர்களும் இல்லை, பிள்ளை பெண்களும் இல்லை, உடன்பிறந்தவர்களும் இல்லை, மற்றெவருமில்லை, யாவரும் போய்விட்டார்கள்; நான் வீடுவீடாய்ப்போய் இரந்தாலொழிய என் சாண்வயிற்றுக்கு ஒரு கவளத்திற்குக்கூட வழியில்லை என்றாள்.

அதைக் கேட்டு அவ்வீட்டுக்காரி அவளிடத்தில் இரக்கமுற்று, தாயே! நீர் துக்கிக்கவேண்டாம், எனக்குக் கிடைத்த நிழலில் நீரும் சவுக்கியமாய்த் தங்கியிருக்கலாம். நாங்கள் புசிக்கிற போஜனத்தில் நீரும் சிறிதளவு கிடைத்தவரையில் புசித்துக்கொண்டு இங்கேயேயிரும் என்று சொல்லி அவளைத் தேற்றினாள். அதைக் கேட்டு அந்தப் பெண் இதுவும் நமக்கொரு நல்லகாலந்தானென்று அவளிடுகிற சோற்றைத் தின்றுகொண்டு அவ்வீட்டிலேயே குடியாயிருந்தாள். அப்படியே கொஞ்சக்காலமாயிற்று; ஆயினும் சோதரியைப்பற்றிய செய்திமட்டும் அவ்வளவு காலத்திலும் அவளுக்கு யாதொன்றுந் தெரியவில்லை.

அந்த ராஜமாளிகைக்கு அருகே மிகவும் அழகாய்ப் பெரிய தடாகமொன்று உண்டு. அதில் மிகவும் சிறப்பாய்ச் செந்தாமரை படர்ந்திருந்தது. அதில் அரசர்க்கே உரியதாய் மிகவும் அற்புதமான செந்தாமரை மலர்கள் நாள்தோறும் மலர்வதுண்டு. அப்பட்டணத்து அரசன் அவற்றில் மிகவும் விருப்பங்கொண்டவனாய் அவைகளைத் தன் கண்கள்போலக் காத்துவந்தான். அந்தத் தடாகம் அச்சிறுமகள் தங்கியிருந்த குடியானவன் வீட்டுக்கு அடுத்திருந்ததனால், அப்பெண் நாள்தோறும் காலையில் விடிய யாமவேளைக்கு எழுந்து அந்தத் தடாகத்திற்குப் போய்த் தான் மேலே தரித்திருக்கும் தோலைக் கழற்றித் தோய்த்து ஒரு மரத்தில் உலர்த்திவிட்டுத் தன் அழகான மேனியை நன்றாய்த் தேய்த்து ஸ்நானம்பண்ணி, நீர்கொண்ட மேகம்போலக் கறுத்துக் குதிகாலிற்புரளும் கூந்தலை நன்றாய்க் கோதி, தான் சிறு

வயதுதொடங்கி வழக்கப்பட்டிருக்கிறபடியே, அத்தடாகத்திலுள்ள செந்தாமரை மலர்களுள் சிலவற்றைப் பறித்துத் தலையில் அணிந்துகொண்டு, உலர்த்தியதோல் நன்றாய்க் காற்றாடி உலருமளவும் தன் இயற்கை வடிவத்தோடேயே இருந்து களிப்படைவாள். அந்தத் தோல் உலர்ந்ததும் தான் தரித்துக்கொண்ட பூக்களை அவிழ்த்துப் போட்டுவிட்டுத் தோலைப் போர்த்துக்கொண்டு சூரியனொளி தரையில் வீழ்வதற்கு முன்னமே அந்தக் குடியானவன் வீடுவந்து சேருவாள். இப்படியே சிலநாள் நடந்துவந்தது.

அப்படியிருக்க ஒருநாள் அரசன் அந்தத் தடாகத்தை வழக்கப்படி வந்து பார்க்க, முன்போலிராமல் அதில் மலர்கள் குறைந்திருக்கவே யாரோ இரவில் வந்து மலர்களைத் திருடிக்கொண்டுபோகிறார்களென்று தெரிந்து அந்தத் திருடனைக் கண்டுபிடிக்கும்படிக் காவல் வைத்தான். இரண்டொருநாள் ஒருசெய்தியுந் தெரியாமற்போகவே, அப்பட்டணத்தில் வல்லவரென்று பேர்பெற்றவர்கள் அனைவரும் இதென்ன அதிசயமென்று அந்தத் திருடனைக் கண்டுபிடிக்க ஒருதலையாய் முயன்றார்கள்; ஒருவராலும் ஆகவில்லை. பலபேர்கள் ஏமாந்துபோகவே எவ்விதத்திலாவது இந்தக் கள்ளனைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று ஆவல் அதிகமாயிற்று. கடைசியாய் அவ்வரசனுடைய மிக்க தைரியமும் துணிவுமுடையவனான இளையமகன், அதாவது இந்தச் சிறுமகளின் தமக்கையைக் கலியாணஞ்செய்துகொண்டவனுக்கிளையவன், இந்தத் திருடனை நான் எப்படியாவது கண்டுபிடித்துக் கொடுக்கிறேன் என்று சபதஞ் செய்தான். அந்தத் தடாகத்தைச் சுற்றி அதன் கரையில் அநேக மரங்கள் அழகாய் முளைத்திருந்தன. ஒருநாள் மாலைவேளையிலேயே வந்து அந்த இளைய ராஜகுமாரன் அவற்றுள் ஒரு மரத்தில் ஏறிக்கொண்டு எப்போது எவன் வருவானோவென்று மலர்ந்த கண் விடாமலே நெடுநேரம் விழித்துக்கொண்டிருந்தான். ஒருவரும் வரவில்லை. தாமரைமலர்களெல்லாம் தடாகத்தில் அசைவற்றிருந்தன; காற்றுகூட ஊத்து வீசி அவைகளை ஒடிக்கப் பயந்து நின்றது; ராஜகுமாரனுக்கோ தூக்கத்தால் கண்கள் மயக்கமுற்றன. அப்படியிருந்தும் அவன், பொழுது விடியுமளவும் இருந்து அந்த அதிசயத்தைப் பார்க்கவேண்டுமென்று தூக்கக்கண்ணை நன்றாய்த் துடைத்துக்கொண்டு ஒரே நிலையாய்க் காத்துக்கொண்டிருந்தான். இப்படியிருக்க விடியும் வேளையாயிற்று. அத்தருணத்தில் கிழவிவேஷம் பூண்ட அந்த ராஜகுமாரத்தி யல்லா

மல் மற்றெவள் அங்கே வரப்போகிருள்! வழக்கப்படியே அந்தச் சிறுபெண் அந்தத் தடாகத்திற்கு வந்தாள். அவளைப் பார்த்து ராஜ குமாரன், ஆ! இவள்தானே தினந்தோறும் வருகிற திருடன்; இந்த விகாரவடிவமுள்ள கிழவிக்குத் தாமரைப் பூவாலாகவேண்டுவ தென்ன என்றெண்ணி, என்ன நடக்கிறதோ பார்ப்போமென்றிருந் தான். அவ்வழகி குளக்கரையில் வந்து மேலே போர்த்திருந்த கிழப் போர்வையைக் கழற்றும்போது அவனுக்கு உண்டான ஆச்சரியத்தை என்னென்று சொல்லலாம்! அவள் மேற்போர்வையைக் கழற்றின வுடனே மின்னற்கொடிபோலிராநின்ற அவளுடைய இயற்கையான வடிவழகைக்கண்டு பிரமித்து, இவ்வளவு அழகும் மேனியும் இள மையுமுடையவளாகக்கூட ஒரு பெண் உலகிலுண்டோ? இவ ளென்ன சாதாரணமான பெண்தானே? அல்லது தெய்வப்பெண் ணே? அல்லது பூதம் பிசாசம் ஏதாவதொன்று இவ்விதமாக வேஷந் தரித்துக்கொண்டு வந்ததோ என்றிப்படி அவன் பலவாறு நினைத் தான்.

அக்குளத்திற்கு நீராடவந்த அவ்விளவரசியும் வழக்கப்படியே குளத்திலிறங்கித் தன் மேற்போர்வையை வாங்கித் தோய்த்து உலர்த்தி விட்டு நன்ருய் நீராடிப் பின்பு தன் கூந்தலைக் கோதித் தாமரை மலர்களை முடித்துக்கொண்டு நல்ல ஆடையாபரணங்களும் அணி ந்து சிறிதுநேரம் விநோதமாயிருந்து விடியநேரமானதும், நீர் கொண்ட மேகத்தினின்றும் மின்னலை வீழ்த்துவதுபோல, தன் கூந் தலிலிருந்த தாமரைமலர்களைக் களைந்தெறிந்து கிழப்போர்வையைப் போர்த்துக்கொண்டு வேகமாய் வீட்டுக்குச் சென்ருள். இவற்றை யெல்லாம் ஒளித்துப் பார்த்திருந்த ராஜகுமாரன் தான் வீட்டுக்குப் போனதும் போகாததுமாய்த் தாய் தந்தையர்களைக் கண்டு, நம் எதிர் வீட்டு வாயிலில் உட்கார்ந்திருக்கின்ற கிழவியை நான் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்ருன். அதைக்கேட்டு அவர்கள், உனக்கென்ன பித்தம் பிடித்ததோ! உடம்பெல்லாம் நரையுந்திரையு மாய் இன்றே நாளையோ சாகக்கிடக்கின்ற கிழவியைக் கலியா ணஞ் செய்துகொள்ளுகிறதா? பார்க்க வழங்காத பிச்சைக்காரக் கிழவியைப்போய்க் கலியாணஞ்செய்துகொள்ள விரும்பும்படி, உன்னைப்போன்ற ராஜகுமாரர்களுக்குச் சிறந்த பெண்களில்லாமல், அப்படி உலகம் பாழ்த்துப்போயிற்றே? வேண்டுமென்ருல் ராஜகன் னிகைகள் அநேகர் காத்திருக்கிருர்களே என, அந்தக் குமாரன்,

நீங்கள் என்னதான் சொல்லுங்கள்; நான் அந்தப் பெண்ணையே விவாகஞ்செய்துகொள்வேன், இதுவரையில் நீங்கள் சொன்னதற்கு நான் என்றைக்காவது குறுக்கு சொன்னதுண்டா? இந்த ஒன்று மட்டும் நீங்கள் மனமொப்பி என் இஷ்டப்படியே நடப்பிக்க வேண்டுமென்று வேண்டினான். அதுகேட்டு அவர்கள் மிக்க வெறுப்பும் விசனமும் அடைந்தார்கள். ஆயினும் அவன் மனதைத் திருப்பக்கூடாமையால், விதியில்லையென்று அவன் சொன்னபடியே ஏற்றுக்கொண்டு கிழவிவேஷம் பூண்டிருக்கும் அவ்விளவரசியை அழைப்பித்து, இந்த மணமகளைப் பார்த்தால் அனைவரும் நகைப்பார்களென்று எண்ணி, விசேஷ ஆடம்பரம் ஒன்றுமில்லாமல் ரகசியமாய் அவ்விருவருக்கும் கலியாணம் நடத்தினார்கள்.

கலியாணமானதும் ராஜகுமாரன் தன் மனையாளண்டைபோய், என் பிராணநாயகி! நீ இந்தக் கிழத்தோலை இன்னும் எத்தனைநாளைக்குத் தரித்துக்கொண்டிருக்கக் கருதியிருக்கிறாய்? இப்பொழுதே களைந்துவிடும்படி நான் உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான். அதைக்கேட்டு அந்தப் பெண், நாம் மாறுவேஷம் பூண்டிருப்பது இவருக்கு எப்படித் தெரிந்தது? இல்லாவிட்டால் நம் கருத்தை அறியவேண்டுமென்று நம்மைப் பரீக்ஷிப்பதற்காகவே இப்படிப் பேசுகிறாரா என்று ஆச்சரியமும் சந்தேகமும் அடைந்தாள். ஆயினும், நாம் இந்தப் போர்வையை வாங்கி நம் இயற்கை வடிவத்தைக் காட்டினால், நம் அழகைக்கண்டு வெளியே போகவொட்டாமல் நம்மை அந்தப்புரத்தில் அடைத்துப்போடுவார்; பின்பு நம் சோதரியைத் தேட வழி உண்டாகாது; ஆதலால் இதைப் பிராணன்போனாலும் கழற்றக்கூடாதென்று தீர்மானித்து, நீர் சொல்லுகிற கருத்து என்னவோ எனக்கு ஒன்றும் அகப்படவில்லையே? என் வயதுக்குத்தக்க வேஷத்தோடுதான் நான் இருக்கிறேன்; மேல்தோலை மாற்றிக்கொள்ளுகிறவர்கள் கூட உலகத்திலுண்டோ என, ராஜகுமாரன் மிகக் கோபங்கொண்டவன்போலக் காட்டி, நீ மேலே போர்த்துக்கொண்டிருக்கிற பொய்த்தோலை வாங்கிப் போடுகிறாயா? அல்லது நான் ஒரேவெட்டாய் உன்னை வெட்டிப்போடட்டுமா என்று அதட்டவும், அவள் சலியாமல் தலைவணங்கிக்கொண்டு, தாங்கள் இஷ்டப்படியே நடத்துங்கள் ஐயா; மேல்தோலை மாற்றமட்டும் ஒருவராலுமாகாது என்று, தான் பற்களெல்லாம் வீழ்ந்து மிக்க வயதுசென்ற கிழவிபோல வழவழத்துப் பேசினாள். அதைக்கண்டு ராஜகுமாரன்,

நகைத்து, நல்லது, இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இப்படியிருக்குமோ பார்ப்போமென்று சமயம் பார்த்துக்கொண்டிருந்தான். அந்த ராஜகுமாரத்தியும் தன் வேஷத்தை வாங்காமலே இருந்தாள். ஆயினும் அவள் நாள்தோறும் முன் வழக்கப்படியே விடிய யாமவேளைக்கு எழுந்து நீராடிக்கொண்டிருந்தாள். தருணம் பார்த்துக்கொண்டிருந்த ராஜகுமாரனும் இச்செய்தியைத் தெரிந்துகொண்டு ஒருநாள் அவள் அதிகாலையில் எழுந்து போகும்போது தானும் அவளுக்குத் தெரியாமல் பின்தொடர்ந்துபோய், அவள் மேற்போர்வையை உலர்த்திவிட்டு நீராடுகிற தருணம் பார்த்து அதைத் திருடிக்கொண்டுவந்து தீயில்போட்டு எரித்துவிட்டு ஒன்றும் அறியாதவன்போலிருந்தான். நீராடிவிட்டு வந்து பார்க்கையில் தன் வேஷத்தோலைக் காணமற்போகவே அந்தப் பெண் மிகவும் விசனமடைந்து வேறு விதியில்லாமல் தன் உண்மையான உருவத்தோடே கணவனெதிரே வந்து நின்றாள். அவளைப் பார்த்து ராஜகுமாரன், ஓகோ! இன்றைக்கு என்ன விசேஷம்? உன் தோல் இப்போது எங்கே போயிற்று? அது மாற்றற்கூடாததல்லவா என்று சற்றுநேரம் பரிகாசமாய்ப் பேசினான். இதற்குள் இந்தச்செய்தி அம்மாளிகை முழுதும் பரந்துபோயிற்று. அதைக் கேட்டவுடனே அனைவரும் அவ்வதிசயத்தைப் பார்க்க ஓடிவந்தார்கள். அந்தப் பெண்ணை வந்து பார்த்தவர்களெல்லாம் அவள் அழகைக் கண்டு அதிசயித்து, நம் மூத்த ராஜகுமாரனுக்குக் காட்டிற் கிடைத்த மகளும் இம்மகளும் ஒரே அச்சில் உருக்கி வார்த்தவர்போலிருக்கிறார்களே என்று சொல்லி மகிழ்ந்தார்கள். அந்தப் பெண்ணினுடைய மாமி மாமன்மார்கள் அதைக்கேட்டு ஆனந்தத்தால் உடம்பு பூரித்து அவளை மிகவும் மேன்மையாய்க் கொண்டாடிப் பின்பு தம் மூத்த மருமகளண்டை அழைத்துக்கொண்டுபோனார்கள். அவளைப்போய்ப் பார்த்ததும் இவள்தான் நம் உடன்பிறந்தாளென்று தெரிந்து அந்தச் சிற்றரசி மிக்க சந்தோஷமடைந்து உடனே அவளை அணைத்து முத்தமிட்டுக்கொண்டாள். அத்தருணத்தில் அவ்விருவருடைய மனநிலையும் இத்தன்மையாயிருந்ததென்று எடுத்துரைக்க எவராலுமாகாது. இவ்வதிசயச்செய்தி அப்பட்டணமெங்கும் பரவ, அன்றையதினத்தை அந்நகரத்தார் அனைவரும் ஒரு மகோற்சவமாகக் கொண்டாடினார்கள். அன்று முதல் அவ்விரண்டு ராஜகுமாரத்திகளும் முன்னிலும் அதிக அன்புற்றவர்களாய் ஆயுளளவும் ஒத்து வாழ்ந்திருந்தார்கள்.

## 15-வது. குருடனும், செவிடனும், கழுதையும்

ஒருகால் ஒரு குருடனும் செவிடனும் சேர்ந்து, செவிடன் குருடனுக்குப் பதிலாய்ப் பார்ப்பதாகவும், குருடன் செவிடனுக்குப் பதிலாய்க் கேட்பதாகவும் ஒன்றாய்க் கூடி, கூட்டுவியாபாரம் செய்வதாய் ஒப்பந்தஞ்செய்துகொண்டு இருவரும் கூட்டாளிகளானார்கள். ஒருநாள் ஓரிடத்தில் பாட்டுகூத்து வெகு விநோதமாய் நடக்கிறதென்று கேள்விப்பட்டு அதற்கு அவ்விருவரும் போனார்கள். குருடன், மிகவும் காதுக்கு இனிப்பாய் பாட்டு பாடுகிறார்கள், கூத்து எப்படியிருக்கிறதோ என்றான். செவிடன், கூத்து வெகு நன்றாயிருக்கிறது, பாட்டு எனக்குக் கேட்கவில்லையே என்று சொல்லித் துக்கித்தான். ஆயினும் குருடன் கேட்பதைச் செவிடனுக்குச் சொல்வதும், செவிடன் பார்ப்பதைக் குருடனுக்குச் சொல்வதுமாய் ஒருவர்க்கொருவர் ஒத்தாசையாயிருந்து காலத்தைக் கழித்துக்கொண்டிருந்தார்கள்.

மற்றொருநாள் அவர்களிருவரும் வெளியே யாத்திரைபோவதாய்ப் புறப்பட்டார்கள். போய்க்கொண்டிருக்கையில் ஓரிடத்தில் ஒரு கழுதையும், அதன் பக்கத்தில் ஒரு பெரிய வண்ணான் தாழியும், அந்தத் தாழி நிரம்பத் துணியுமிருந்தன. அதைச் செவிடன் கண்டு குருடனைப் பார்த்து, தோழனே! இங்கே ஒரு கழுதையும் வண்ணான் தாழியும் இருக்கின்றன; உடையவன் ஒருவனையும் காணேன்; இவைகளைக் கொண்டுபோவோமானால் ஏதாவது ஒரு காலத்தில் நமக்கு உபயோகமாகும் என்று சொல்ல, குருடனும் நல்லது அப்படியே கொண்டுபோவோம் என்றான். குருடன் தலையில் தாழியைத் தூக்கி வைத்துக்கொண்டான்; செவிடன் கழு

தையைப் பிடித்துக்கொண்டான். அப்படியே இருவரும் சிறிது தூரம் போகையில் அங்கே ஓரிடத்தில் எறும்புப்புற்று ஒன்றிருந்தது. செவிடன் அதைப் பார்த்து, தோழா! ஒருவகை விநோதமான கறுப்பு எறும்புகள் இங்கே அளவற்றிருக்கின்றன. இவ்வளவு பெரிய எறும்புகளை நான் எங்கும் ஒருபோதும் கண்டதில்லை. இவற்றுள் சிலவற்றைக் கொண்டுபோனால் நம்முடைய நேசர்களுக்குக் காட்டலாமென்று சொல்ல, குருடன், நீ சொல்லுகிறபடியே செய்வோம்; நம்முடைய தோழர்களுக்குக் காணிக்கையாகச் சில கொண்டுபோகவேண்டுவதுதான் என்று சொல்லிச் சம்மதிக்கவே, செவிடன், தன் கையிலிருந்த பொடிடப்பியில் ஏழெட்டு எறும்பைப் பிடித்துப் போட்டுக்கொண்டான். பிறகு இருவரும் தமது வழியே நடந்துபோனார்கள்.

இப்படிச் சிறிது தூரம் போகையில், இடியும் மின்னலும் காற்றும் குளிருமாய்ப் பிரளயகாலம்போல் அதிக பயங்கரமாகக் காற்றுமழை அடிக்க ஆரம்பித்தது. அதைக் கண்டு செவிடன், அப்பா! இதென்ன மின்னல்! கண்ணைப் பறித்துக்கொண்டுபோகும்போலிருக்கிறதே! கடிய நட; எங்கேயாவது ஓரிடத்தில் போய்ப் பத்திரமாய்ப் பதுங்கிக்கொள்வோமென்றான். குருடன், அதென்ன மின்னல் மின்னுகிறதோ எனக்குத் தெரியவில்லை கருவும் கலங்கும்படி நிமிஷத்துக்கு நிமிஷம் அதிக பயங்கரமாய் இடி இடிக்கின்றதே! எப்போ தலைமேல் விழுமோவென்று திகிலாயிருக்கின்றது; வேகமாய் நடந்து எங்கேயாவது ஓரிடத்தில் போய்த் தங்கினால்தான் நல்லது என்றான்.

அப்போது அவர்களிருந்த இடத்திற்குச் சமீபத்தில் தேவாலயம் போலச் சிறந்த மாளிகை ஒன்று தெரிந்தது. செவிடன் அதைப் பார்த்துச் சொல்லவே, இருவரும் இராத்திரி அவ்விடத்தில் தங்கியிருக்கும்படித் தீர்மானித்து, வேகமாய் அவ்விடத்துக்குப் போய் அதற்குள் புகுந்து கழுதையையும் தாழியையும் உள்ளே வைத்துக் கொண்டு கதவை மூடிக்கொண்டார்கள். அது ஒரு கோவிலென்று அவர்களுக்குத் தோன்றியிருந்தது. உண்மையாய் அது கோவிலன்று; ஒரு ராக்ஷதனுடைய மாளிகை. இவர்கள் உள்ளேபோய்ப் புகுந்து கதவைப் போட்டுக்கொண்டவுடனே, வெளியேபோயிருந்த ராக்ஷதனும் திரும்பி வந்தான். வந்துபார்க்கையில், தன் மாளிகை

யின் வாயிற்கதவு மூடியிருந்தது; உள்ளே மனிதர்கள் நடமாடுகிற ஓசையும் பேசுகிற சத்தமும் கேட்டது. அதைப் பார்த்து அந்த ராக்ஷதன் இதென்னவென்று பிரமித்து, ஓ! ஓ! யாரோ உள்ளே புகுந்துகொண்டிருப்பதுபோலக் காண்கிறதே! யார் உள்ளே வந்திருக்கிறது? உங்களுக்கு நான் நல்ல விருந்தளிக்க வந்தேன்; கதவைத் திறவுங்கள், கதவைத் திறவுங்கள்! யாருள்ளே! நேரமாகிறது என்று கதவைப் பலதடவை இடித்திடித்து இடியைவிட உரப்பாய்க் கூச்சலிட்டான். அவன் தோற்றமோ, அவன் கூச்சலைவிடக் கோடி மடங்கு அதிகமாகப் பயங்கரமாயிருந்தது. செவிடன் சுவரிலுள்ள சாளரத்தின்வழியாய் அவன் உருவத்தைப் பார்த்து மிகவும் பயந்து, அதற்கு இன்னது செய்கிறதென்று தெரியாமல் நடுநடுங்கிப் போனான். அந்த ராக்ஷதனைப் பாராமையாய் குருடன் பயப்படாமல் தைரியமாய்க் கதவண்டை வந்து, யார் நீ? இதென்ன, தலைநோயுண்டாகும்படி அர்த்தராத்திரியில் வந்து சளசளவென்று கதவையிடித்து இப்படிக் கூச்சலிடுகிறாய்! உனக்குச் சிறிதளவாயினும் புத்தி விவேகமொன்றுமில்லையா? என்று கூவினான்.

ராக்ஷதன் அதைக்கேட்டு மிகவும் கோபமடைந்து, நான் ராக்ஷதனென்று உனக்குத் தெரியாதோ? இது என் மாளிகைதான், சீக்கிரம் கதவைத்திற; இல்லாவிட்டால் உன்னைக் கொன்றுபோடுவேன் என்றான். அவனைப் பார்க்கப் பார்க்கப் பயம் அதிகமாகிச் செவிடன் உடல்நடுங்கி அகங்கலங்கி ஒன்றும் தோன்றாமல் திகிலடைந்து நின்றான். பார்க்கச் சக்தியில்லாத குருடன் சிறிதும் தைரியம் குலையாமல், ஆ! நீ யார்? ராக்ஷதனா? அப்படியா! நீ ராக்ஷதனானால் நான் பாக்ஷதனாயிற்றே; பாக்ஷதன் ராக்ஷதனுக்குக் குறைந்தவனோ என்றான். அதைக் கேட்டு ராக்ஷதன், என்ன? பாக்ஷதனா? பாக்ஷதன்! பாக்ஷதன்! இதென்ன பேய்ப்பிதற்றலாயிருக்கிறது! பாக்ஷதனென்றுகூட ஒரு ஜாதியுண்டோ? இதுவரையில் இந்தப் பெயரை நான் கேட்டதேயில்லையே! என்று மனதிலேயே மெதுவாய்ச் சொல்லிக்கொண்டான். குருடன், போ, ஓடிப்போ; சளசளவென்று இங்கே இரைச்சலிட்டுக்கொண்டிராதே; நான் யார்! பாக்ஷதனல்லவா! பாக்ஷதர்களெல்லாம் ராக்ஷதர்களுக்குத் தந்தையல்லவா? இனி ஏதாவது தொந்தரைசெய்வாயானால் உடனே உன்னைக் கொன்றுபோடுவேன் என்றான். அதைக் கேட்டு ராக்ஷ

தன், அப்படியா? எனக்குத் தகப்பனா நீ? ஓ பெருமானே! என் தந்தையே! பாகூதனே! இத்தன்மையான என் பிறப்பின் வரலாற்றை நான் இதுவரையில் கேட்டதில்லையே; இது வெகு புதுமையாயிருக்கின்றது. நீங்கள் எனக்குத் தந்தை; என் தகப்பன் பெயர் பாகூதனென்பது இதுவரையில் எனக்குத் தெரியாமலிருந்தது; இப்போதுதான் அறிந்துகொண்டேன் என்றான்.

அதற்குக் குருடன், ஆம்! நான்தான் உன் தகப்பன்; நான் சொன்னபடி நீ கேட்கவேண்டும்; ஓடிப்போவென்று வெகு கம்பீரத் தொனியாய்ப் பேசி வெருட்ட ராகூதன் மிகவும் திகிலடைந்து, அப்படியே இதோ ஓடிப்போகிறேன்; நீங்கள் என் தந்தையானால் உங்கள் திருமுகத்தைக் கொஞ்சம் காட்டுங்கள், பார்த்துவிட்டு ஓடிப்போகிறேனென்றான். (ஒருவேளை மோசமாயிருக்குமோ என்னவோவென்று சந்தேகப்பட்டு அவன் அப்படிக் கேட்டது.) அந்தப் பேச்சைக் கேட்கவே குருடனுக்கும் செவிடனுக்கும் இன்னது செய்கிறதென்று தோன்றவில்லை. சிறிதுநேரம் யோசனை செய்தபிறகு ஒருவிதமாய்த் தீர்மானமுண்டாகி, சிறிய திட்டிக் கதவைத் திறந்து கழுதையின் மூக்கை வெளியே நீட்டிக் காட்டினார்கள். ராகூதன் அதைப் பார்க்கவே, அப்பா! அந்தமட்டும் தப்பினேன்! நமது தந்தையான பாகூதனுடைய முகமே, பார்ப்பவர் நடுநடுங்கிப்போகும்படி, இவ்வளவு பயங்கரமாயும் விகாரமாயுமிருக்கிறதே! என்று மனதிலே நினைத்துக்கொண்டு, ஓ தகப்பனாரே! தங்கள் முகம் உலகமெல்லாம் அச்சமுறும்படி மிகவும் பயங்கரமாயிருக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை. உலகத்தில் மண்டை பெரிதாயிருந்தாலும் சிலருக்கு உடல் சிறிதாயிருப்பதுண்டு. உங்களுக்கு எப்படியிருக்கிறதோ பார்ப்போம்; சற்றே திருமேனியைக் காட்டுங்கள்; பார்த்துவிட்டு ஓடிப்போகிறேனென்று சொல்ல, அவ்விருவரும் கடகடவென்று பெருஞ்சத்தமுண்டாகும்படி வண்ணான் தாழியைத் தரையிலிழுத்துவந்து தூக்கிச் சிறிய சாளரத்தின் வழியாய்க் காட்டினார்கள். அதேகண்ணாய் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த ராகூதன், கன்னங்கறுத்த அந்தப் பெரும்பாண்டத்தைப் பார்த்துப் பிரமித்து, நமது தந்தையான பாகூதனுக்குத் தலைக்குத் தக்கபடிதான் உடலுமிருக்கிறது! நம்மை ஒரு நொடியில் பக்ஷித்துப் போடுவார்! ஓடிப்போவதே நலம்! என்று எண்ணித் திகிலடைந்

தான். ஆயினும் இன்னும் சிறிது சந்தேகமுண்டாகி, அவன், ஓ பாக்ஷதரே! என் அருமைத் தகப்பனுரே! உங்கள் மண்டை எவ்வளவு பருத்திருக்கிறதோ அதைவிடப் பதின்மடங்கு அதிகமாய் உடலும் பருத்திருக்கிறது. அதெல்லாம் சரியே; ஆனுலொன்றிருக்கிறது; உங்கள் மிடற்ருேசையைக் கேட்கச் சற்று விருப்பங்கொள்கிறேன். ராக்ஷதர்கள் வெகு பயங்கரமாய்க் கர்ச்சிப்பார்களே; உங்கள் கர்ச்சனை எப்படிப்பட்டதோ என்று வணக்கமாய்க் கேட்கவே, அந்தச் செவிடன் கொஞ்சம் பயந்தணிந்து தந்திரமாய் ஒரு யோசனைசெய்து தன் பொடிடப்பியை யெடுத்து அதனுள்ளிருந்த கட்டெறும்புகளை வலதுகாதில் நான்கு, இடதுகாதில் நான்காகக் கழுதையின் காதில் ஏற்றிவிட்டான். அவை அந்தக் கழுதையின் காதுகளில் புகுந்து கொண்டு தம்மால் கூடியவளவு குடையத்தொடங்கின. இரண்டு காதிலும் பல கட்டெறும்புகள் புகுந்துகொண்டு குடைந்தால் அந்தப் பேதைக் கழுதை என்னசெய்யமாட்டும்! தொந்தரை பொறுக்கமாட்டாமல் தன் தெள்ளிய தீங்குரலைக்கொண்டு ஓயாமல் ஊளையிடத் தொடங்கிற்று. அந்தக் குரலைக் கேட்ட க்ஷணத்திலேயே ராக்ஷதன் கிடுகிடாய்த்து, போதும் போதும் தகப்பனுரே! போதும் போதும் பாக்ஷதரே! உமது கூச்சலைக் கேட்டு மூன்று உலகமும் நடுங்கிப் போகுமே! இதுவரையில் அடங்காமலிருந்த உம்முடைய மகன் இதோ உமது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து ஓடிப்போகிருன் என்று சொல்லிக்கொண்டே ஓடிப்போனுன். பின்பு செவிடன் அந்த எறும்புகளை எடுத்து முன்போலவே பரணியில் அடைத்துவிட்டான். அவ்விருவரும் அன்றிராத்திரியை அவ்விடத்திலேயே கழித்தார்கள்.

மறுநாள் காலையில் விடியனேரத்திலேயே செவிடன் குருடனை எழுப்பி, அப்பா தோழனே! எழுந்திரு; இவ்விடத்திற்கு நாம் வந்து சேர்ந்தது நமக்கு நல்ல அதிஷ்டகாலந்தான். ராக்ஷதன் கையிலும் அகப்படாமல் தப்பிப் பிழைத்தோம்; இங்கே தரையெல்லாம் பொன்னும் வெள்ளியும் நவரத்தினங்களும் குப்பல் குப்பலாய்க் கொட்டிக் கிடக்கின்றன; எழுந்திரு, நேரமாகிறதென்ருன். அவன் சொன்னது உண்மைதான்; அது ராக்ஷதனுடைய மாளிகையாகையால் அவன் அளவற்ற பொருள்களை நானுதேசங்களினின்றும் தேடிக் கொண்டுவந்து அங்கே சேர்த்து வைத்திருந்தான். குருடன் அதைக் கேட்டவுடனே வெகு சந்தோஷமாய் எழுந்து, தோழனே! இது

நமக்கு நல்லகாலந்தான். அந்தப் பொருள்கள் எங்கே காட்டு; நானும் உனக்குத் துணையாய்க் குவித்துச் சேர்த்துக் கட்டுகிறே னென்று சொன்னான். இருவரும் வேண்டிய பொருளைத் திரட்டி நான்கு மூட்டையாகக் கட்டி, இரண்டு மூட்டையைக் கண்டாளமாகக் கழுதைமேல் போட்டு, மற்ற இரண்டையும் தலைக்கொன்றாய்த் தூக்கிக்கொண்டு வீட்டுக்குப்போகப் புறப்பட்டார்கள்.

சென்றராத்திரி இவ்விருவரும் வெருட்டித் துரத்திய ராக்ஷதன் வெகுதூரம் ஓடிப்போகவில்லை. நமது தந்தையான ராக்ஷதன் எப்படியிருக்கிறானோ, பகலில் செம்மையாய்ப் பார்க்கவேண்டுமென்று சிறிதுதூரம் போய்நின்று அவன் எப்போது வெளியே வருவானென்று காத்துக்கொண்டிருந்தான். காலையில் கதவைத் திறந்துகொண்டு இரண்டு மனிதர்களும் ஒரு கழுதையும், ஒவ்வொருவரும் சுமக்கமாட்டாத பொருட்சுமையைச் சுமந்துகொண்டு, தன் மாளிகையினின்றும் புறப்பட்டுப்போவது கண்டு, ராக்ஷதன், இந்தப் பேய் மனிதர்களைக் கண்டா நாம் பயந்தோடி வந்தோம் என்று கோபம் தலைக்கேறினவனாய், இந்தக் குருடனையும் செவிடனையும் கழுதையையும் கொன்று தன் பொருள்களைப் பிடுங்கிக்கொள்ளத் தனக்குத் துணை செய்யும்படி ஆறு ராக்ஷதர்களைக் கூட்டிக்கொண்டு இவர்கள் மேல் பாய்ந்து ஓடிவந்தான்.

அதிக பயங்கரமாய்த் தரையில் வீழ்ந்து புரள்கின்ற செம்பட்டமயிர்களும், முழநீளம் நீண்டுவளைந்த கோரைப்பற்களும், இருப்புத்தடிபோன்ற கைகளும், வாள்போன்ற நகங்களுமாய் ஏழு ராக்ஷதர்கள் தங்களைத் துரத்திவரக் கண்டு, செவிடன் நடுநடுங்கி நாக்குக்குழறிக் கால் தள்ளாட ஒன்றுந்தோன்றாமல் தட்டித்தட்டி நடந்துபோனான். குருடனுக்கு இவை ஒன்றுந் தெரியாமையால் அவன் வெகு தைரியமாய், நேசனே! நீ ஏன் இப்படிப் பின்தங்கி நடக்கிறாய் என்று கேட்க, செவிடன், அப்பா! இதோ அதிபயங்கரமான வடிவத்தோடு ஏழு ராக்ஷதர்கள் நம்மேல் பாய்ந்து வருகிறார்களே! செய்யவேண்டுவதென்னவென்று திகிற்படுகிறேனென்றான். அதைக் கேட்டுக் குருடன், நீ இதற்கேன் அஞ்சுகிறாய்! இந்த மூட்டைகளை ஒரு புதரிலே போட்டு ஒளித்துவிட்டு என்னை ஒரு உயர்ந்த மரத்தடியில் கொண்டு விடுவாயானால், நான் முன்னே அதன்மேல் ஏறிக்கொள்ளுகிறேன்; நீயும் என் பின்னால் ஏறிக்கொண்டு பத்திரமாயிருக்கலா

மென்று சொல்ல, செவிடன் இது நல்ல யோசனைதானென்று தெரிந்து, அப்படியே மூட்டைகளையும் கழுதையையும் ஒரு புதரிலே தள்ளிவிட்டு அருகிலிருந்த உயர்ந்த ஒரு தென்னை மரத்தண்டை போய்ச் சேர்ந்தான். அந்தச் செவிடன் கடுநெஞ்சும் கள்ளக்கருத்தும் உள்ளவன். கண் தெரியாத கபோதியை முதலில் மரத்தின் மேல் ஏறவிடுவதைவிட்டு மரத்தில் கொஞ்சம் கீழ்ப்புறத்திலிருந்தால் ஒருவேளை அபாயத்திற் கிடமாகுமோ என்னவோ? அந்தவிடத்தில் குருடனையே இருக்கச் செய்யவேண்டும் என்று தான் முதலில் உச்சியில் ஏறிக்கொண்டு தனக்குக் கீழ்ப்புறத்தில் குருடனை ஏற்றி வைத்துக்கொண்டான்.

அதற்குள் அந்த ராக்ஷதர்களும் வேகமாய் ஓடிவந்தார்கள். இவர்கள் தன் கைக்கு எட்டாமல் உயர்ந்த மரத்தில் ஏறிக்கொள்ளவே, பெரிய ராக்ஷதன் ஒன்றுந் தோன்றாமல் தன் துணைவர்களைப் பார்த்து, நாம் ஒருவர் தோள்மேல் ஒருவராய் ஏறி இவர்களை எட்டினாலல்லது இவர்களை ஒன்றும் செய்யக்கூடாது என்று சொல்ல, அவர்களும், ஆம் அப்படித்தான் செய்யவேண்டுமென்றார்கள். ஒருவன் மரத்தடியில் நின்றான்; அவன் தோளில் ஒரு ராக்ஷதன் ஏறிக்கொண்டான்; அவன் தோளில் மற்றொருவன் ஏறிநின்றான்; அவன் தோளில் பின்னும் ஒருவன் ஏறிக்கொள்ள, அப்படியே ஆறு ராக்ஷதர்கள் ஒருவன் தோளில் ஒருவனாய் ஏறி நின்றார்கள். கடைசியில் அந்த ஆறு ராக்ஷதர்களையும் அழைத்துவந்த பெரிய ராக்ஷதன் அவ்வாறுபேரையும் தாவிக்கொண்டு ஏறிவந்தான். குருடன் தலைக்குமேலிருந்த செவிடன் தனக்கும் அபாயம் சம்பவிக்குமென்று திகிலடைந்து குருடன் கையைப் பிடித்துக்கொண்டு, ராக்ஷதன் மரத்தின்மேல் ஏறிக் கிட்டவருகிறான்! கிட்டவருகிறான்! என்று கூவினான். குருடன் உட்கார்ந்திருந்தவிடம் அவ்வளவாய்ப் பத்திரமான இடமல்ல; ஏதோ ஒரு மட்டையை மெதுவாய்ப் பற்றிக்கொண்டு தங்கியிருந்தான். ராக்ஷதன் தன்னை எட்டும்படியான இடத்தில் வந்துவிட்டானென்பது அவனுக்குத் தெரியாது. ராக்ஷதன் நெருங்கிவந்துவிடவே, செவிடன் மிகவும் அச்சமுற்று மெல்லக் குருடனைத் தள்ளிவிட்டான். அவன் உருண்டுவிழுகிற வேகத்தில் தெய்வாதீனமாய் அப்போது ஏறிக்கொண்டிருந்த ஏழாவது ராக்ஷதன் தோளில்வந்து தங்கினான். அப்போது அவனுக்குத் தானிருக்குமிடம் ராக்ஷதன்

புஜமென்றுந் தெரியாது. வேறொரு மாக்கிளையில் வந்து தங்கினதாய் எண்ணி கைக்குப் பிடியொன்றும் அகப்படாமல் கையை விரித்துத் தேடிப்பார்க்க, அந்த ராக்ஷதனது முறம்போன்ற காதுகள் இரண்டும் அகப்படவே, அதை உறுதியாய்ப் பிடித்துக்கொண்டு அந்த ராக்ஷதன் நடுங்கி வீரிடும்படி அதை அழுத்திப் பிசைந்து நிமிண்டினான். தன் தோளில் விழுந்து தன்னை அழுத்துவது இன்னதென்று அந்த ராக்ஷதனுக்குத் தெரியவில்லை. குருடன் அந்த ராக்ஷதன்மேல் அப்படித் திடீரென்று விழுந்து அவனை அழுத்தவே, அவ்விருவர் சுமையும் ஆறாவது ராக்ஷதனை அழுத்திற்று; அம்மூவர் சுமையுமாய்ச் சேர்ந்து ஐந்தாவது ராக்ஷதனை அழுத்த, அப்படியே அவ்வெட்டுப் பேரும் ஒருவர்மேலொருவராய் அழுத்தித் தரையில் வந்து வீழ்ந்தார்கள். சரேலென்று கீழே விழவே குருடன் பிரமித்து, ஓகோ! நேசனே! இதென்ன! இதென்ன! நான் இப்போது எங்கேயிருக்கிறேன்! எங்கே யிருக்கிறேன்! நேசனே! என்று கதறிக் கூவ, மரத்தின்மேல் பத்திரமாய் உட்கார்ந்திருந்த செவிடன், அப்பா! நல்லகாரியஞ் செய்தாய்! பயப்படாதே! நீ செய்தது சரிதான்! பயமில்லை! பிடியைமாத்திரம் உறுதியாய்ப் பிடித்துக்கொள்! உனக்குத் துணையாய் நானும் இதோ வருகிறேன் என்று சொல்லிக் குருடனைத் தைரியப்படுத்தினான். யாதொரு அபாயமும் இல்லாமல் உட்கார்ந்திருக்கும் இடத்தைவிட்டு ஒரு அடிகூட அசையச் செவிடனுக்குச் சிறிதளவும் விருப்பமில்லை. ஆயினும் வெளிக்கு மாத்திரம், நேசனே, அஞ்சாதே! தைரியமாயிரு; நானும் இதோ வந்துவிட்டேன்; வந்துவிட்டேன் என்று அவனுக்குத் தைரியம் சொல்லி உற்சாகப்படுத்திக்கொண்டிருந்தான். அவன் சொல்லச் சொல்லக் குருடன், தானிருக்குமிடம் அம்மரத்தில் ஓர் பாகமென்றே நினைத்து, தன் கையில் அகப்பட்டுக்கொண்ட காதுகளை அழுத்திப்பிடித்துப் பிசைந்து தள்ளினான். இந்தப் பெரிய ராக்ஷதனுக்குத் துணைசெய்யவந்த ஆறு ராக்ஷதர்கள், மரத்திலிருந்து சறுக்கி விழுந்த வேகத்தால் நல்ல அறைபட்டு, தலைகாலில்லாமல் தாறுமாறாய் விழுந்திருந்த குப்பலிலிருந்து ஒருவரை யொருவர் மெல்ல விடுவித்துக்கொண்டு, அந்தமட்டும் இந்த ராக்ஷதனுக்குத் துணைசெய்தது போதும் போதுமென்று வீரிட்டுக்கொண்டு அதிவேகமாய் ஓடிப் போனார்கள். தனக்குத் துணையாய் வந்தவர்கள் எல்லாரும் ஓடிப்

போகவே அந்தப் பெரிய ராக்ஷதன், நாம் மாத்திரம் தனித்திருந்தால் இன்னும் மேன்மேலும் அபாயம் அதிகமாகுமென்று திகிற்பட்டு, தன் தோள்மேல் பூதமோ பிசாசமோ ஏறிக்கொண்டதென்று மிகவும் பயந்து, ஒரு கொசுகைக் கீழே தள்ளுவதுபோல், தன்மேலிருந்த குருடனைத் தள்ளிவிட்டு, இது யாரோ என்னமோ என்றுகூட நின்று திரும்பிப்பாராமல் ஒரு குதியாய்க் குதித்துத் தன் தோழர்களோடு கூடி ஓடிப்போனான்.

இப்படி அந்த ராக்ஷதர்களெல்லாம் கண்ணுக்குத் தெரியாமல் வெகுதூரம் ஓடிப்போனபிறகு, நடந்தசெய்திகளையெல்லாம் மேலே நின்று பார்த்துக்கொண்டிருந்த செவிடன் வேகமாய் இறங்கிவந்து, குருடனை எடுத்து அணைத்துக்கொண்டு, அப்பா! என் பிராண சிநேகிதனே! நீ நல்லகாரியஞ் செய்தாய்! நமது சத்துருக்களையெல்லாம் ஒருவர் தப்பாமல் வெருட்டித் துரத்திவிட்டாயே! நானும் இதோ கூடிய சீக்கிரத்தில் உனக்குத் துணைசெய்ய வந்தேன் பார் என்று சொல்லிக் குருடனைக் களிக்கச்செய்தான். பின்பு அந்தச் செவிடன் புதரிலிருந்த பொதிகளையும் கழுதையையும் இழுத்து முன்போலவே இரண்டு பொதியைக் கழுதைமேல்போட, மற்றதை முன்போலவே குருடனொன்று செவிடனொன்றாய்த் தூக்கிக்கொண்டு தங்கள் ஊருக்குப்போகும்படி வழிநடந்தார்கள்.

அந்தக் காடு தாண்டினதும் செவிடன் குருடனை நோக்கி, நண்பனே! நாம் இப்போது ஊருக்குச் சமீபத்தில் வந்துவிட்டோம்; இந்தப் பொருள்களையெல்லாம் இப்படியே தூக்கிக்கொண்டுபோனால் ஒருவேளை நம்மைத் திருடர்களென்று பிடித்துக்கொள்வார்கள்; ஆகையால் இந்தப் பொருள்களை இங்கேயே பாதியாய்ப் பங்கிட்டு அவரவர் பாகத்தை அவரவர் இஷ்டப்படி இந்தக் காட்டிலேயோ அல்லது வேறெந்த இடத்திலேயோ ஒளித்துவைத்துவிட்டுப் போவதே நலமென்று தோன்றுகிறதென்று சொல்ல, குருடன், நீ சொல்வது நல்லயோசனைதான், அப்படியே இந்தப் பொருள்களையெல்லாம் உனக்கு ஒருபங்கும் எனக்கு ஒருபங்குமாகச் சரியாய் இரண்டு பங்காகப் பிரியென்றான். அந்தப் பொருள்களையெல்லாம் சரிபாதியாய்ப் பங்கிட்டுப் பாதிப்பொருள் குருடனுக்குக் கொடுக்கச் செவிடனுக்குச் சம்மதமில்லை. நாம் என்னசெய்தாலும் இவனுக்குக் கண்தெரியாதே என்று தான் எடுத்துவந்த மூட்டையையும் கழுதை

சுமந்துவந்த மூட்டைகளையும் ஒருபக்கத்தில் ஒளித்துவிட்டு, குருடன் கையிலிருந்த மூட்டையிலும் அநேகமாய் ஒளித்துவிட்டுக் கொஞ்சம் பொருளை இரண்டு பங்காகப் பிரித்து, ஒன்றைக் குருடன் முன்னிலும் ஒன்றைத் தன்முன்னிலும் வைத்து, தோழா! இதோ நமது பொருள்களை இரண்டு பங்காகப் பிரித்து உனக்கு ஒருபாகமும் எனக்கு ஒருபாகமுமாய் வைத்தேன் என்றான். குருடன் தன் முன்னிருந்த குப்பலைக் கையினால் தடவிப்பார்த்துத் தனக்குக் காட்டியபொருள் மிகவும் கொஞ்சமாயிருக்கவே கோபம் அதிகரித்தவனாய், அடா! இது உனக்குத் தகுதியன்று; இவன் கபோதிதானே என்று என்னை நீ மோசஞ்செய்ய நினைத்தாயோ? எல்லாப் பொருள்களையும் எடுத்துக்கொண்டு எனக்குச் சிறிதளவு காட்டுகிறாயே; இது உனக்கு நியாயந்தானா என்று கேட்க, செவிடன், நண்பனே! நீ என்ன அப்படிச் சொல்லுகிறாய்! நீயே நன்றாய் முழுதும் தடவிப் பார்; உனக்கு எவ்வளவு வைத்தேனோ, அவ்வளவுதான் நானும் வைத்துக்கொண்டிருக்கிறேன்; இதுதவிர வேறு பொருளில்லை என்றான். குருடன் முழுதும் கையை நீட்டித் தடவிப்பார்த்தான். தன் எதிரில் எவ்வளவு குப்பலிருந்ததோ, அவ்வளவுதான் செவிடன் எதிரிலுமிருந்தது; வேறொன்றுமில்லை. உள்ளது இவ்வளவுதானென்று செவிடன் மறுபடியும் சாதனை சாதிக்கவே, குருடன் முன்னிலும் கோபமதிகமாகி, அடா! அடா! நம்பினவனைக் கழுத்தறுக்கத் துணிந்த கொடியனே! கண்ணில்லையே, இவனை ஏய்க்கலாமென்று நினைத்தாயோ! 'கண்ணைக் கெடுத்த தெய்வம் மதியைக் கொடுத்ததாம்' என்கிறபடி, எனக்குக் கண்கெட்டுப்போனாலும் மதி கெட்டுப்போகவில்லை. நான் ஒரு மூட்டை தூக்கமாட்டாமல் தூக்கிக்கொண்டு வந்தேன்; நீ ஒரு பெருமூட்டை சுமந்துகொண்டு வந்தாய்; கழுதைமேல் ஒரு குன்றளவு ஏற்றிக்கொண்டு வந்தோம். அவையெல்லாம் இந்த இரண்டு சிறுகுப்பல்தானா இருக்கும்! இன்னும் எவ்வளவோ மிகுதியாயிருக்கவேண்டுமே; நான் சத்தியமாய்ச் சொல்லுவேனென்றான். அதைக்கேட்டுச் செவிடன், இதென்ன? நீ வாயில் வந்தபடி பிதற்றுகிறாய்; உனக்குப் பித்தந் தலைக்கேறிற்றோ? என்று சொன்னதற்கு, குருடன், நீ எப்படியாவது என்னை வாயடித்து ஏய்த்துவிட்டுப் பொருளைக் கொள்ளையடித்துக்கொண்டு போகலாமென்று நினைக்கிறாய்; அது நடவாது என்று சொல்ல செவிடன், நான் அப்

படி ஒருக்காலும் நினைக்கமாட்டேன் என்றான். குருடன், கைப்புண்ணுக்குக் கண்ணாடியேன்? இதோ நினைத்திருக்கிறாயே என்று சொன்னான். இப்படியே இருவரும் சிறிதுநேரம் வாதாடி ஒருவரை ஒருவர் இழிவாய்ப் பேசித் திட்டி இரைந்து அடித்து குத்திக்கொண்டிருந்தார்கள். எவ்வளவு நேரம் சச்சரவுசெய்தும் தான் பிடித்ததே பிடியாய்ச் செவிடன் பொருளில்லையென்று சபதஞ்செய்யவே, குருடன் கோபாவேசம் உள்ளடங்காமல் செவிடன் கன்னத்தில் உரத்து ஓரறை அறைந்தான். அந்த அறையின் அதிர்ச்சியால் அவன் செவி செம்மைப்பட்டுச் செவிடு நீங்கிப்போயிற்று. தன்னைக் கன்னத்தில் அறையவே செவிடன் கண்களில் நெருப்புப் பொறி பறக்கக் குருடனை மண்டை பிளந்து போகும்படி இடி இடித்ததுபோலக் குருடன் முகத்தில் ஒரு குத்துகுத்தினான். உடனே அவன் நொள்ளைக்கண் நல்லகண்ணாகிவிட்டது. தெய்வச்செயலைக் கண்டறிவது யார்!

இவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தீங்குசெய்ய நினைத்துப் புடைபுடைக்க, கிணறுவெட்டப் பூதம் புறப்பட்ட கதையாய் செவிடனுக்குக் காதுகேட்டது; குருடனுக்குக் கண்தெரிந்தது. அதனால் இருவரும் மிகுந்த ஆச்சரியமும் சந்தோஷமுமடைந்து உடனே அந்தரங்க நேசரானார்கள். பின்பு செவிடன் தான் பொருளை ஒளித்தது உண்மைதானென்று ஒப்புக்கொண்டு, முன் தான் மோசமாய்ப் பேசினதற்காக மன்னிப்பு கேட்டுக்கொண்டு, புதரினின்றும் ஒளித்தவையெல்லாவற்றையும் எடுத்துச் சரிபாதியாகப் பிரித்தான். அவரவர் பங்கை அவரவர் எடுத்துக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்து நெடுநாள் அநேகமாய்த் தானதருமங்கள் செய்துகொண்டு சுகமாயிருந்தார்கள்.

# 16-வது. சிங்கமும் நரியும்

முற்காலத்தில் ஒரு பெருங்காட்டிலே மிகக் கொடியதான சிங்க மொன்று நெடுநாளாய்க் குடிகொண்டு, அந்தக் காடுகளுக்கும் சுற்றுப்புறங்களிலுள்ள நாடுகளுக்கும் தானே தலைவனாய், அத்தேசம் முழுதும் பெரும்பயம் உண்டாக்கிக்கொண்டிருந்தது. அதன் குரலைக் கேட்கும்போதே அண்டையிலுள்ள மிருகங்கள் நடுங்கி அநேகமாய் மடிந்துபோகுமென்றால் அதன் கொடுமையைக் கேட்கவேண்டுவதென்ன? அந்தச் சிங்கம் நாள்தோறும் காலையில் எழுந்து தன் குகையைவிட்டு நடுக்காட்டிலேபோய் நின்று மிகவும் பயங்கரமாய் உரத்து ஒரு கர்ச்சனை கர்ச்சிக்கும்; அந்தச் சிங்கநாதத்தைக் கேட்டவுடனே அருகாமையிலுள்ள மிருகங்களெல்லாம் உடல் நடுங்கி ஒன்றுந் தோன்றாமல் பிரமித்துநிற்க, அச்சிங்கம் அவற்றின் மேல் பாய்ந்து தனக்கு வேண்டியவரையில் அவைகளைப் பிடித்துத் தின்பது வழக்கம்.

இப்படியே வெகுநாள் நடந்துவந்ததனால், அந்தக் காட்டிலிருந்த நரிகளெல்லாம் அநேகமாய்ப் பக்ஷிக்கப்பட்டுப்போயின; ஆணும் பெண்ணுமாய் அக்காட்டு நரிகளுக்கெல்லாம் ராஜாவாயிருந்த இரண்டு நரிகள்தாம் மிகுந்தன.

அத்தனைகாலமாய் அவ்விரண்டு நரிகளும் அந்தச் சிங்கத்தின் கையில் அகப்படாமல் தப்பித்துக்கொண்டிருப்பதற்குப் பட்டபாடு இவ்வளவவ்வளவன்று. அந்தச் சிங்கத்தின் சத்தம் எங்கேயாவது கேட்குமானால் உடனே அந்த நரிகள் அது இருக்குமிடத்திற்குக் காத தூரம் அப்பால் ஓடிப்போய்விடும். இப்படி அந்தச் சிங்கத்தின் கையில் அகப்படாமல் ஒரு நாளைக் கழிப்பது அவற்றிற்கு ஒரு யுகமாய்

இருந்தது. நாள்தோறும் காலையில் பெண் நரி ஆணைப்பார்த்து, ஐயோ! இந்தச் சிங்கத்தின் கர்ச்சனையைக் கேட்க எனக்குக் கர்ப்பம் கலங்குகிறதே; இன்றையதினம் நாம் இதன் பெருவாய்க்குப் பலியாய்விடுவோம், சந்தேகமில்லை; இதோ எவ்வளவு கொடிதாய்ச் சிங்கம் கர்ச்சிக்கிறது பார் என்று சொல்லிப் புலம்பும். அதற்கு ஆண் நரி, பயப்படாதே; நான் உன்னைப் பத்திரமாய்க் காத்துக்கொள்கிறேன்; இந்தச் சிங்கத்தின் கையில் அகப்படாமல் நெடுந்தூரம் ஓடிப்போவோம் வா என்று சொல்லி அதனோடுகூட ஓடிப்போம். இப்படி நித்தியகண்டம் பூர்ணாயுஸ்ஸாய் அவை அந்தக் காட்டில் காலங்கழித்துக்கொண்டிருந்தன.

இப்படியிருக்கையில் ஒருநாள் அந்தச் சிங்கம் அவற்றிற்குத் தெரியாமலே அருகாமையில் வந்துவிட்டது. தப்பித்துக்கொண்டுபோக அவற்றிற்கு யாதொருவழியும் தோன்றவில்லை. அதுகண்டு பெண் நரி மிகவும் பயந்து, தோழனே! நாம் இப்போது செய்யவேண்டுவதென்ன? சிங்கம் இதோ வந்துவிட்டதே! இப்போது அதற்கிருக்கிற கோபத்தைப் பார்த்தால் நொடிப்பொழுதில் நம்மைப் புசித்துவிடுமென்று தோன்றுகிறதே என்று சொல்லி விசனப்பட, ஆண் நரி, நீ இந்தத் தருணத்தில் மனங்கலங்காதே; ஆபத்துவேளையில் தைரியத்தைக் கைவிடலாமா? இத்தனைநாளாய்க் காப்பாற்றின கடவுள் இன்றும் நம்மைக் கைவிடார்; விசனப்படாதே; இத்தருணத்திலும் நாம் தப்பித்துக்கொள்ள வழி ஒன்று என் மனதில் தோன்றியிருக்கிறது என்று சொல்லிற்று.

அதன் யோசனைப்படியே அவ்விரண்டுமாய்ச் சிங்கத்தின் குகையை நோக்கிச் சென்று, அங்கே அவற்றின் எதிரேபோய் நின்றன. அந்த நரிகளைப்பார்த்தவுடனே சிங்கம் மிகக் கோபங்கொண்டு தலையை அசைத்துப் பேரிரைச்சலிட்டு, அற்பப்பூச்சிகளே! இங்கே வர உங்களுக்கு ஏன் இவ்வளவுநேரம்? நான் மூன்றுநாளாய் இரை அகப்படாமல் உங்களைத் தேடிக்கொண்டு காடுமேடெல்லாம் சுற்றினேனே! என்னை இப்படி அலைக்கழிக்கும்படி உங்களுக்கு அவ்வளவு துணிச்சலா! வாருங்கள், ஒரேவாயில் விழுங்கிவிடுகிறேன். கிட்டவாருங்களென்று நான் சொல்லுகிறேன்; இன்னும் தாமதமென்ன? சீக்கிரம் வாருங்கள் என்று சொல்லிப் பல்லைக்கடித்து வாலை அசைத்து மிகவும் குரூரமாய் விழித்துப் பார்த்து இடிமுழக்

கம்போல ஒரு கர்ச்சனைசெய்தது. அதைக்கேட்டு நரிராஜன் மிக வும் வணக்கமாய்ச் சிங்கத்தின் பக்கத்திலே போய்நின்று, ஓ சிங்கரா ஜனே! நீங்கள் எங்களுக்கெல்லாம் ராஜாவென்பது அடியேனுக்கு நன்றாய்த் தெரியும். இரண்டொருநாள் முன்னமே தங்கள் சமுகத் துக்கு வரவேண்டுமென்றுதான் நாங்கள் பிரயாணப்பட்டது. நடு வழியிலே நேரிட்ட சங்கடத்தை நான் என்னென்று சொல்வேன்! உங்களைவிட மிகவும் பெருத்த பலசாலியான ஒரு சிங்கராஜன் இந் தக் காட்டிலிருக்கின்றது; அந்த ராஜா வழிவிடமாட்டேனென்று எங்களை மடக்கிப்பிடித்துத் தானே தின்னவேண்டுமென்று பார்த் தது; அதன் கையில் அகப்படாமல் தப்பித்துக்கொண்டுவர இவ்வளவு காலந் தாமதமாயிற்று, மன்னிக்கவேண்டுமென்றது.

அதைக்கேட்டு அந்தச் சிங்கம், நீ என்ன வாயில் வந்தபடி பிதற் றுகிறாய்; என்னைவிட யார் இக்காட்டிற்கு அரசன் என்று பேர் பெற்று இங்கே இருப்பது? இப்படிப்பட்ட வீண்சாக்குப்போக்கெல் லாம் இனி என் எதிரில் உரையாதே என்று கர்ச்சிக்க, நரி, ஐயா! இதுவரையில் நாங்கள்கூட அப்படித்தான் நினைத்திருந்தோம்; பார்த்த பிறகல்லவோ இது எங்களுக்குத் தெரியவந்தது. அதனோடு எதிர்த் துச் சண்டைசெய்ய உங்களால் ஒருபோதும் ஆகாது; நாங்கள் உங் களுக்கு எப்படியோ, அப்படித்தான் நீங்கள் அதற்கு; அதன் முகம் தீயைக் கக்குகின்றது. அதன் வலிமைக்கு உலகத்தில் ஈடேயில்லை. நான் அதனிடத்தினின்றும் தப்பித்துக்கொண்டு தங்களிடம் வந்தது எனக்கு மறுபிறப்பே ஒழிய வேறல்ல என்று சொல்லிற்று. அதைக் கேட்டுச் சிங்கம், 'மொண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்கிறபடி, நீ மனதிற்கொண்டிருந்த திகிலினால் அதைக் கண்டு மிகவும் பயந்திருப்பதுபோலக் காண்கிறது. எதோ அந்த ராஜன் எங்கே காட்டு; ஒரு நொடியில் நான் அதைக் கொன்று போடுகிறேன் என்றது.

அதைக் கேட்கவே நரிகள் மிகவும் சந்தோஷமடைந்து, சிங்கத் திற்கு வழிகாட்டிக்கொண்டு ஓடி, வெகுதூரத்திற்கு அப்பால் சேறும் நீருமாயிருந்த ஒரு பாழ்ங்கிணற்றண்டை போய் நின்று, சிங்கத்தை அழைத்து, ஐயா! இதோ இந்தக் கிணற்றிலே அந்த அரசன் இருக் கிறானென்று காட்ட, சிங்கம் மெய்தானென்று நரியின் பேச்சை நம்பி அந்தக் கிணற்றை எட்டிப்பார்த்தது. பார்க்கவே அதனுள்

தோன்றின தன் நிழலைக் கண்டு, அது தனக்குச் சத்துருவான வேறொரு சிங்கமே என்று எண்ணி அதனிடத்தில் மிகக் கோபங்கொண்டு, பிடரியைச் சிலிர்த்துப் பேரிரைச்சலிட, அந்த நிழலும் அப்படியே செய்தது. அவ்வாறே பலதரம் சிங்கம் செய்த சேஷ்டைகளையெல்லாம் நிழலும் செய்யவே, சிங்கம் மிகக் கோபங்கொண்டு உடம்புதெரியாமல் அதைக் கொல்லவேண்டுமென்று எழும்பி அக்கிணற்றில் தோன்றின சிங்கத்தின்மேல் பாய்ந்தது. கிணற்றுக்குள் வேறு சிங்கமேது? அதில் குதித்தவுடனே சிங்கம் சேற்றில் அழுந்திப்போயிற்று. ஐயோ! தன்னை இப்படி மோசஞ்செய்த நரிகளைக் கொல்ல அது இனி எப்படி எழுந்து வரமாட்டும்! இரண்டொரு நிமிஷம் மன்றாடிப் பார்த்துக் காலைச் சேற்றிலிருந்து பெயர்க்க மாட்டாமல் அப்படியே இறந்துபோயிற்று. அதே கவனமாய்ப் பார்த்துக்கொண்டிருந்த நரிகள் சிங்கம் சேற்றில் அழுந்தினதும் ஒரு பெரும்பாறையைப் புரட்டி அதன்மேல் தள்ளிவிட்டு, இந்நாட்டு நரிகளையெல்லாம் நெடுநாளாய்க் கொன்றுகொண்டிருந்த சிங்கராஜனை நாங்கள் நொடிப்பொழுதில் கொன்றுவிட்டோம்; அச்சிங்கத்தை இதோ வந்துபாருங்கள் என்று சொல்லிச் சந்தோஷமாய்ப் பாடிக்கொண்டு அக்கிணற்றைச் சுற்றிக் கொஞ்சநேரம் கூத்தாடிவிட்டுப் பேரானந்தமாய் ஓடிப்போயின.

## 17-வது. மச்சகுமாரன் கதை

ஒரு அரசனும் அரசியும் நெடுநாள் பிள்ளையில்லாமலே துக்கித்துக்கொண்டிருந்தார்கள். பிள்ளைக்காக அவர்கள் செய்த தவமும் தானமும் சொல்லிமுடியா. ஒன்றும் பயன்படவில்லை. அப்படியிருக்க, ஒருநாள் சமையலுக்காக அரமனைக்கு அநேகம் மீன்கள் கொண்டுவரப்பட்டன. அவையெல்லாம் உயிரற்றிருந்தபோதிலும், ஒன்றுமாத்திரம் தப்பிப் பிராணனேடு இருந்தது. அங்கிருந்த வேலைக்காரிகளுள் ஒருத்தி அதைக் கண்டு, அந்தச் சிறு மீனை ஒரு தண்ணீர்க்குடுவையில் போட்டுவைத்தாள். ஒருநாள் ராணி அதைப் பார்த்து, அந்த மீன் வெகு அழகாயிருக்கவே அதை மிகவும் செல்வமாய்வைத்து, தனக்குப் பிள்ளையில்லாமையால் தனக்குள்ள ஆசையெல்லாம் அதனிடத்திலே காட்டித்தன் குழந்தைபோலவே வளர்த்து வந்தாள். ஜனங்களெல்லாம்| அதை **மச்சராஜன்** என்று வழங்கினார்கள்.

கொஞ்சநாளையில் **மச்சராஜன்** அந்தச் சிறுகுடுவையில் அடங்கமாட்டாமல் பெரிதாய் வளர்ந்துபோகவே, ஒரு பெரிய பாத்திரத்தில் எடுத்துவிட்டார்கள். இன்னும் சிலநாளையில் அதிலும் வசிக்கமாட்டாமல் பெரிதாய்ப்போகவே, பெரிய ஒரு தொட்டியில் கொண்டுவிட்டார்கள். நாளடைவில் அதிலும் இருக்கமாட்டாமல் மிகப் பெரிதாக வளர்ந்துபோனது கண்டு, ராணியானவள் பெரிதாக ஒரு குளம் வெட்டுவித்து, **மச்ராஜனை** அதிலே வசிக்கச்செய்து ஒவ்வொருநாளும் இரண்டுதடவையும் அதற்குச் சோறுகொண்டுபோய்ப் போட்டுப் பாதுகாத்து வந்தாள். அந்த **மச்சராஜனும்** அதிலேயே சுகமாக வாழ்ந்துகொண்டிருந்தான்.

ஜனங்களெல்லாம் மச்சராஜனை ஒரு மீனாக நினைத்திருந்தார்களென்றாலும், அது உண்மையன்று; அவன் ஒரு ராஜகுமாரன். ஒரு தருணத்தில் அவன் தேவதைகளுக்குக் கோபமூட்டினதனால், அவர்கள் அவனை மீனாகும்படிச் சபித்தார்கள். அதனால் அவன் மீனாகி ஆற்றிலே வாசஞ்செய்யும்படிச் சம்பவித்ததேயன்றி வேறல்ல.

இப்படியிருக்க, ஒருநாள் ராணியானவள் வழக்கப்படிச் சாப்பாடு கொண்டுபோகும்போது, மச்சராஜன் அவளை அழைத்து, அம்மா! என் அருமைத்தாயே! நான் எத்தனைநாளைக்குத் தனியே வருந்திக்கொண்டிருக்கிறது? எனக்கு ஒரு பெண்சாதியைத் தேடிக் கலியாணஞ் செய்விக்கக்கூடாதா? என்று கேட்டான். அதற்கு அவள், அப்படியே ஆகட்டும்; என்னால் கூடியவரையில் பிரயத்தினப்படுகிறேனென்று பதில் சொல்லிவிட்டு வந்து, உடனே தன் குமாரனாகிய மச்சராஜனுக்கு யாராவது பெண்கொடுப்பாருண்டாவென்று, தனக்குத் தெரிந்தவர்களுக்கெல்லாம் செய்திசொல்லி அனுப்பினாள். அதைக்கேட்டு அவர்களெல்லாம், அவன் மச்சராஜனாய்த்தானிருக்கட்டும்; எப்படியிருந்தாலும் கிளியை வளர்த்துப் பூனையின் கையில் கொடுப்பதுபோல், ஒரு பெரிய மீனுக்கு இரையாகும்படி எங்கள் அருமைக்குழந்தையை விட்டுவிடுவோமா? மாட்டோம் என்று பதில் சொல்லியனுப்பினார்கள்.

அந்தச் செய்தியைக் கேட்கவே ராணிக்கு இன்னது செய்கிறதென்று தோன்றாமற்போயிற்று. ஆயினும் அதனிடத்தில் ஒரு பிடிமானமாய் அதிக விருப்பமுண்டாய்ப் போகவே, எவ்விதத்திலாகிலும் அதற்குக் கலியாணம் செய்விக்கவேண்டுமென்று மனவுறுதிகொண்டு, மறுபடியும் பதினைந்து ரூபாய் மொகராவில் லக்ஷம் மொகரா கொடுத்து, தேசந்தேசமாய்ச் சுற்றிப்பார்த்து, எங்கே எவன் நமது மச்சராஜனுக்குப் பெண் கொடுக்கும்படிச் சம்மதிக்கிறானோ அவனுக்கு இதைக்கொடுத்துவிட்டு வரவேண்டும் என்றுசொல்லித் தூதர்களை நாலுதேசமும் அனுப்பினாள். அவளிடத்தில் செலவு பெற்றுக்கொண்டு தூதர்கள் தேசமெங்கும் சுற்றத் தலைப்பட்டார்கள். ஒருவரும் பெண்ணைக்கொடுக்கச் சம்மதிக்கவில்லை; எவ்வளவு தரித்திரனாயிருந்தாலும் தன் குழந்தையை மீன் விழுங்கிவிடுமென்று பயந்து தன் பெண்ணை விற்கத் துணியவில்லை. இப்படியிருக்க ஒருநாள் அவர்

கள் ஒரு ஊருக்குப் போனார்கள். அந்த ஊரில் ஒரு வைராகி குடியிருந்தான். அவன் மூத்தமனையாள் இறந்துபோனபடியால் மறு விவாகம் செய்துகொண்டிருந்தான். மூத்தமனையாளுக்கு ஒரு பெண்ணும், இளையாளுக்கு ஒரு பெண்ணுமுண்டு. மூத்தாளுடைய பெண்ணினிடத்தில் இளையாளுக்கு ஜன்மப்பகை. அவள் அந்தப் பெண்ணை வெகு கடினமான வேலையெல்லாம் செய்யச்சொல்லி அடிப்பாள். செம்மையாய்ச் சோறிடுகிறதில்லை; இவ்வளவு மாத்திரமே யல்லாமல் அந்தப்பெண் தன்மகளுக்குப் போட்டியாயிராதபடி எப்படியாவது அவளைத் தந்திரமாக ஒழித்துவிட்டுவேண்டுமென்றும் பலவிதமாய்ப் பிரயத்தினஞ் செய்துகொண்டிருந்தாள். இந்த ராணி பெண்தேடத் தூதனுப்பிய செய்திகேட்டு அவள், கும்பிடப்போன தெய்வம் குறுக்கேவந்ததென்று வெகுசந்தோஷமாய், அந்த வைராகி வெளியேபோயிருந்த தருணம்பார்த்து அவர்களை அழைப்பித்து, நீங்கள் கொண்டுவந்த மொகராக்களை என் கையில் கொடுத்துவிட்டு, உங்கள் மச்சராஜனுக்காக என் குழந்தையை அழைத்துக்கொண்டு போங்கள் என்றாள். (மீன் இவளைத் தின்றுவிடும்; பின்பு இவளுடைய தொல்லையில்லாமல் நாம் சுகமாயிருக்கலாமென்பது அவள் பூரணமாய்க்கொண்ட கருத்து.) அதற்கு அவர்கள் சம்மதிக்கவே, அவள் அந்தப் பெண்ணை அழைத்து, நீ ஆற்றுக்குப்போய் நன்றாய் ஸ்நானம் பண்ணிவிட்டுவா; இவர்களோடுகூட ராணியார் சமூகத்திற்குப் போகவேண்டுமென்று சொன்னாள். அதைக்கேட்டு அந்தப் பெண், தகப்பனுருமில்லையே; இந்த ஆபத்தினின்றும் எப்படித் தப்பித்துக்கொள்ளுகிறது என்று விசனமாய் ஆற்றங்கரைக்குப்போய் அழுதுகொண்டிருந்தாள். அழுகையில் அவள் கண்ணீர்த்துளி அண்டையிலிருந்த ஒரு புற்றில் வீழ்ந்தது. அது மேலே விழவே, அந்தப் புற்றுக்குள்ளிருந்த மகா புத்திசாலியான எழுதலை நாகமொன்று இதென்னவென்று புற்றின்மேல் தலையைத் தூக்கிப் பார்த்து, அந்தப்பெண் அழுதுகொண்டிருந்தது கண்டு, பெண்ணே! நீ என் அழுகிறாய் என்று கேட்டது. அதற்கு அவள், நான் என் துக்கத்தை என்னவென்று சொல்லுகிறது? என்னைப்போல் துரதிஷ்டமுள்ளவர் உலகத்தில் ஒருவருமில்லை; என் தகப்பனார் ஊரிலில்லாதவேளையில் என் மாற்றாந்தாய் என்னைப் பெரிய மீனாகிய மச்சராஜனுக்குப் பெண்டாகும்படி ராணியின் சேவகர்களுக்கு விற்

றுப்போட்டாள். நான் அங்கே போனவுடனே அந்த மீன் என்னை விழுங்கிவிடுமே என்று சொல்லக்கேட்டு, அந்த நாகம், குழந்தாய்! நீ பயப்படாதே; இந்த மூன்று பருக்கைக் கற்களை உன் முன்றானையில் பத்திரமாய் முடிந்துவைத்துக்கொள்; நீ யாருக்குப் பெண்டாகப் போகிருயோ அந்த மச்சராஜன் உண்மையான மீனல்ல; சாபத்தால் உருமாறியிருக்கிற ஒரு ராஜகுமாரன்; உங்களுக்காக ராணியார் குளத்தினடுவே ஒரு சிறுமாளிகை கட்டிவைத்திருக்கிருள். அங்கே போய் நீ கண் அயராமல் வெகு கவனமாய் விழித்துப் பார்த்துக்கொண்டிரு; இல்லாவிட்டால் அந்த மீன் வந்து உன்னை விழுங்கிவிடும். தண்ணீரில் அது நீந்திவருகிற சத்தங் கேட்கும்போதே வெகு கவனமாயிருந்து, அதைக் கண்டவுடனே இவைகளுள் ஒரு கல்லை அதன்மேல் எறி; அது தண்ணீர்க்குள் ஓடிப்போகும். இரண்டாந்தடவை வரும்போதும் அப்படியே கவனமாயிருந்து மற்ரெரு கல்லை எறி; அப்போதும் அது முன்போலவே போய்விடும். மூன்ருந்தரம் வரும்போது மூன்ருவது கல்லை அதன்மேல் எறிவாயாஞல் உடனே அதற்கு மீனுருவம்மாறி ராஜவடிவம் வந்துவிடும் என்று சொல்லி மூன்று கற்களைக் கொடுத்துவிட்டுப் புற்றுக்குள் மறைந்து போய்விட்டது. அந்த வைராகிப் பெண் மச்சராஜனுகிய மீன் தன்னைத் தின்றுவிடுமென்று உறுதியாய் நம்பியிருந்தாலும் ஒரு வேளை நாகம் சொன்னபடி ஆனுலும் ஆகாதா என்று அந்தக் கற்களை எடுத்துக்கொண்டுபோனுள்.

ராணியின் சேவகர்களெல்லாம் அந்தப் பெண்ணை அழைத்துக்கொண்டு வெகு சந்தோஷமாய்ப் பட்டணம்போய்ச் சேர்ந்தார்கள். அதைக்கண்டு தன் மகனுக்குப் பெண்சாதி கிடைத்தாளென்று ராணி மிகவும் ஆனந்தமாய் அச்சேவகர்களை வெகுமதி கொடுத்தனுப்பிவிட்டு, அந்தப்பெண்ணை மிகவும் அன்பாய் ஆதரித்துப் பின்பு அவர்களுக்காகக் கட்டிய நீர்மாளிகையில் அவளைக் கொண்டுபோய்விடும்படிக் கட்டளையிட்டாள். வைராகிப் பெண் அங்கேபோய்ச் சேர்ந்து அந்தமாளிகையின் அழகைப் பார்க்கிறபோது ஒன்றுந்தோன்ருமல் பிரமித்து நின்ருள். அந்தப்பெண் அவ்வளவு சிறந்த மாளிகையை ஒருநாளுங் கண்டதில்லை. ராணியார் வேண்டுமென்றே வெகு சிங்காரமாய் அந்தச் சிறு வீட்டைக் கட்டிவைத்தாள். அவ்வீட்டைச் சுற்றிலும் அகாதமாய்ப் பயங்கரமான தண்ணீரும், மச்ச

ராஜன் வந்து விழுங்கிவிடுமென்கிற திகிலுமிராவிட்டால், மாற்றாந் தாயாரிடத்திலிருந்து நாள்தோறும் உடம்பு வருந்த வேலைசெய்து வருத்தப்படுவதைவிட இங்கே வசிப்பது அவளுக்கு வெகு சுகமாகவே இருக்கும்.

அவள் அங்கேபோய்ச் சேர்ந்த சிறிதுநேரத்திற்கெல்லாம் ஜலத்தில் அலைமோதுகிற சத்தங்கேட்டது. வீட்டுவாயிலண்டை அலையெழும்பிவர ஆரம்பித்தது. வரவர அலை வேகமாய் அடிக்கத் தலைப்பட்டு இரைச்சலும் அதிகமாயிற்று. அந்தப்பெண் மச்சராஜன் வருகிறானென்று தெரிந்து வெகு கவனமாயிருந்தாள். அந்த மீன் பயங்கரமாய் வாயைத் திறந்துகொண்டு அவளுக்கெதிராக வேகமாய் நீந்தி வந்தது. அதின் தலை தண்ணீர்க்குமேலே தெரிந்தவுடன் அவள் நாகங் கொடுத்த கற்களுள் ஒன்றை எடுத்து அதன்மேல் எறிந்தாள்; அது தண்ணீரில் மூழ்கிப்போயிற்று. இரண்டாந்தரம் அது வந்தபோதும் அவள் அப்படியே மற்றொரு கல்லையெடுத்து எறிய, அப்போதும் அது முன்போலவே போய்விட்டது. மூன்றாந்தரம் அது முன்னிலும் அதிக பயங்கரமாய் வாயைத் திறந்துகொண்டு அதிககோபத்துடனே ஓடிவந்தது; அதைக்கண்டு அவள் உடனே தன் கையிலிருந்த மூன்றாவது கல்லை வீசியெறிய, அந்தக் கல் மேலேபட்டதும் முன் இருந்த மீன்வடிவம் போய் அதற்குப் பதில் வெகு அழகிய ராஜகுமாரன் ஒருவன் தோன்றினான். அதைப் பார்த்து அந்தப்பெண் கொஞ்சம் அஞ்சினவள்போலத் திகைத்து நின்றாள். ராஜகுமாரன் அவளைப்பார்த்து, என் அருமைக் கண்ணாட்டி! என்னைப் பிழைப்பித்த பாக்கியவதி! நீ ஏன் பயப்படுகிறாய்? வேண்டாம்; அதிகொரமான சாபத்தினின்றும் நீ என்னை விடுவித்தாய்; இந்த மகோபகாரத்துக்குப் பிரதியுபகாரம் என்னால் என்ன செய்யமாளும். எனக்கு மனையாட்டியாகச் சம்மதியிருந்தால் நாளையதினம் நாம் இருவரும் வெகு சம்பிரமமாய்க் கலியாணஞ் செய்துகொள்ளலாம் என்று சொல்லி, தெய்வகதியாய் நேர்ந்த தன் அதிஷ்டத்தை நினைத்துச் சந்தோஷித்துக்கொண்டே பொழுதுவிடிவதை எதிர்பார்த்திருந்தான்.

மறுநாள் காலையில் செம்மையாய் இருள் பிரிந்ததும் பிரியாததுமாயிருக்கையிலேயே பட்டணத்து ஜனங்கள் அநேகர், மச்சராஜன் தன் எளிய நாயகியைத் தின்றுவிட்டிருப்பானென்று, வேடிக்கை பார்க்க வெகு ஆவலுடனே அவ்விடத்திற்கு ஓடிவந்தார்கள். வந்து பார்த்த

வுடன் அவர்களுக்கு உண்டான அதிசயத்தை வாயினுற் சொல்லிமுடி யாது! அவர்கள் நினைத்துவந்தபடி அங்கே மச்சராஜன் ஒரு மீனு யிருக்கவில்லை; சிறந்த ராஜகுமாரனுயிருந்தான். இந்தச் செய்தி உடனே பட்டணமெங்கும் பரவிப்போயிற்று. அதைக் கேள்விப் பட்டு ராஜா, ராணி, அரமனையிலுள்ள மற்ற உத்தியோகஸ்தர்கள் யாவரும், அந்த அதிசயத்தைக் காண அவ்விடத்திற்கு ஓடிவந்து, அந்த மாளிகையினின்றும் மச்சராஜன் வைராகிப் பெண் ஆகிய அவ்விரு வரையும் கரைக்கு அழைத்துவரச்சொல்லி, அவர்களுடைய வரலாற் றைக் கேட்டு, ஆனந்தப்பெருக்கால் மிகவும் மனம் பூரித்துக் கலகல வென்று பேரிரைச்சலிடத் தலைப்பட்டார்கள்.! எப்படியானுலும் ஆகட்டும், கடைசியாய் எனக்கு ஒரு புத்திரன் கிடைத்தானல்லவா? என்று ராணி மனமகிழ்ந்தாள். ஜனங்களெல்லாம் தமக்குப் புதிதாய் யுவராஜாவும் ராஜாத்தியும் கிடைத்த ஆனந்தத்தால் உடம்புதெரியாமல் அந்தக் குளத்திற்கும் அரமனைக்கும் போகிற வழிமுழுதும் நடை பாவாடை பரப்பி, நமது புதிய ராஜாவையும் ராணியையும் பார்க்க வாருங்கள்; இவ்வளவு அழகிய ராஜதம்பதிகளை யாராவது எங்கே யாவது என்றைக்காவது கண்டிருப்பார்களா? பார்க்க ஓடிவாருங் கள் என்று அவரவர்கள் தங்கள் தங்களுடைய பந்துமித்திரர் முதலிய வர்களைக் கூவி அழைத்தார்கள். பின்பு யாவரும் கோலாகலமாய்ப் பட்டணம்போய்ச் சேர்ந்து வெகு சம்பிரமமாய் அவ்விருவர்க்கும் கலியாண மகோற்சவத்தை நடத்தினுர்கள்.

அந்த மச்சராஜனும் மச்சராணியும் கலியாணஞ்செய்துகொண்டு சிலகாலம் சுகமாக வாழ்ந்துகொண்டிருந்தார்கள். அப்படியிருக்க, மச்சராணியின் மாற்றுந்தாய் நடந்தசெய்தியைக் கேள்விப்பட்டு மிக வும் பொறுமைகொண்டு, தன் மூத்தாள் மகளுக்கு நேர்ந்த வைபவத் தைக்கண்டு சந்தோஷமடைந்தவள்போல நடித்து, அடிநாக்கில் நஞ் சும் நுனிநாக்கில் அமுதமுமாய்ப் பேசிக்கொண்டு அடிக்கடி அந்தப் பெண்ணண்டை வந்துகொண்டிருந்தாள். அந்தப் பெண் நல்ல இரு தயமுடையவளாகையால் முன் தன் மாற்றுந்தாய்செய்த கொடுமை யெல்லாம் மறந்து, அவளிடத்தில் மிகவும் பக்ஷமாக நடந்துவந்தாள்.

அப்படிச் சிலநாள் கழித்தபின்பு, ஒருநாள் மச்சராணி தன் தகப் பனைப் பார்க்கவேண்டுமென்று ஆசைகொண்டு, தன் பிறந்த வீட்டிற் குப் போய்வரும்படித் தன் புருஷனைச் செலவுகேட்க, அவன், சுக

மாய்ப் போய்வா; ஆனால் அங்கே நெடுநாள் நிற்காதே; ஒரு நிமிஷங் கூட நீ இராமற்போனால் எனக்குச் செம்மையாய்ப் பொழுதுபோ காது என்றான். ராணி, அப்படியே ஆகட்டும்; துரிதமாய் வந்து விடுகிறேன் என்று சொல்லிச் செலவுபெற்றுக்கொண்டு தகப்பன் வீட்டுக்குச் சென்றாள். தன் செல்வப்பெண் வந்ததைக் கண்டு அந்த வைராகிக்கு வெகு சந்தோஷமுண்டாயிற்று. அவன் பெண்சாதிக்கு அந்தப் பெண்ணிடத்தில் உள்ளூற விசுவாஸமில்லாமற்போனபோதி லும், இப்போது தன் அதீனத்தில் அகப்பட்டுக்கொண்டாளே; இனி நாம் அவளை நம் இஷ்டப்படிச் செய்யலாமென்றுமாத்திரம் மிகவும் சந்தோஷமுண்டாயிருந்தது. அவளைத் திரும்பவும் அரசனிடத்திற் குப் போகவொட்டாதபடித் தன்னால் கூடியவரையில் முயலவேண்டு மென்று தீர்மானித்து, அவள் ஒருநாள் தன் சொந்தப் பெண்ணை அழைத்து, என் அருமைக்குழந்தாய்! இந்தப் பெண்ணை மீன் விழுங்கிவிடுமென்று நாம் நினைத்திருக்க, இவள் உலகத்துக்கெல் லாம் ராஜாத்தியானாளே; நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்குமென்று உலகத்தார் சொல்லுகிறபடியாயிற்றே; லக்ஷம் மொகராதவிர நமக்கு வேறொன்றும் கிடைக்கவில்லையே! இதென்ன விபரீதகாலம் பார்த்தாயா? இதற்குத் தக்கவழி ஏதாவது ஒன்று தேட வேண்டும். நீ நான் சொல்லுகிறபடி கேள்; அப்படிச் செய்தால் நீயே அவளுக்குப் பதில் ராணியாய்விடலாம். அவளை ஆற்றங் கரைக்கு அழைத்துக்கொண்டுபோய், உன் உடைமைகளைச் சற்றே நான் போட்டுக்கொண்டு பார்க்கிறேனென்று வாங்கித் தரித்துக் கொண்டு, அவளை ஆற்றிலே தள்ளி அமிழ்த்திவிடு என்று துர்ப்போ தனை சொல்லியனுப்பினாள்.

அந்தச் சிறுக்கி அப்படியே ஆகட்டுமென்று அதற்குச் சம்மதித்து, தன் ஒன்றுவிட்ட உடன்பிறந்தாளை ஆற்றிற்கு அழைத்துக்கொண்டு போய், என் செல்வச் சகோதரியே! உன் ஆபரணங்களெல்லாம் எவ்வளவு அழகாயிருக்கின்றன! நான் சற்றே அணிந்துகொண்டு அழகு பார்க்கலாமா? என்று கேட்க, கள்ளங்கவடறியாத அந்த ராணி, இந்த அற்பகாரியத்திற்கு இவ்வளவு வேண்டுவானேன்? அப் படியே நீ சுகமாய் இந்த நகைகளைப் போட்டுக்கொண்டு அதனழகை இந்த ஆற்றிலே குனிந்து பார்க்கலாம் என்று, தான் போட்டுக்கொண் டிருந்த பூஷணங்களைக் கழற்றித் தன் தங்கை உடம்பில் போட்டாள்.

போட்டுமுடிந்ததும் அந்தக் கள்ளச் சிறுக்கி அவளைப் பின்புறமாய்த் திடீரென்று ஆற்றிலே தள்ளிவிட்டுக் கொஞ்சநேரமளவும் அவளுடம்பு மேலேகிளம்புகிறதா என்னவென்று நிதானித்துப் பார்த்துவிட்டுத் திரும்பி வீட்டுக்கு வந்து, தாயைக் கண்டு, அதோ அவளுடைய நகைகள்; இனி நமக்கு அவளுடைய தொல்லை இல்லை; நாம் சுகமாய் வாழலாம் என்றாள்.

அதைக் கேட்டுக் கெட்டநினைவுள்ள அந்தப் பெண்பிள்ளை வெகு சந்தோஷமடைந்து, தன் பெண்ணைச் சீராய்ச் சிங்காரித்து ராஜசமுகத்திற்கு அழைத்துக்கொண்டுபோய், இதோ உங்கள் சொத்தைக் கொண்டு சேர்த்துவிட்டேன் என்று மச்சராஜனோடுசொல்லிவிட்டு, குழந்தாய்! நீ இங்கேயே சுகமாய் வாழ்ந்திரு, நான் போய்வருகிறேன் என்று பெண்ணண்டை செலவுபெற்றுக்கொண்டு வீடுவந்து சேர்ந்தாள். மச்சராஜன், வந்தவுடனே அந்தப் பெண்ணைப் பார்த்து, இதென்ன! இவள் நமது ராணிபோலிருக்கவில்லையே என்று முதலில் யோசித்து மறுபடியும், உடம்பு முழுதும் ஆபரணங்களிட்டு மறைத்திருப்பதனாலேதான் அப்படித் தோன்றுகிறதோ என்னவோ? நாளையதினம் பார்ப்போமென்றிருந்தான். அப்படியே மறுநாள் வந்து அவளை உற்றுப்பார்த்து, இவள் நமது பிராணநாயகியல்ல; உருவை மாற்றியிருப்பதுபோலக் காண்கிறது; அந்த அழகியாளல் எப்போபார்த்தாலும் சிரிப்பும் விளையாட்டுமாயிருப்பாளே! எவ்வளவு நேரங் கேட்டாலும் திருப்தியுண்டாகாமல் தேனொழுக மதுரமாய்ப் பேசுவாளே; இவள் உதட்டைக்கூடப் பிரியாமல் மரம்போல நிற்கிறாள் என்று எண்ணி மறுபடியும், நாம் இவ்வளவு அவநம்பிக்கை கொள்ளக்கூடாது; ஊரிலிருந்து வந்த ஆயாசத்தால் ஒருவேளை இப்படியிருந்தாலும் இருக்கலாமென்று தன் மனதைத் தானே தேற்றிக் கொண்டான். மூன்றுநாள், எத்தனை நாள் சந்தேகப்பட்டுக்கொண்டிருக்கிறதென்று, அவள்மேல் அணிந்திருந்த உடைமைகளையெல்லாம் வாங்கிவிட்டுச் செம்மையாய்ப் பார்த்தான். அது தன் சொந்த மனையாளுடைய செந்தாமரை முகமாயிராமல் வேறுமுகமாயிருந்தது. அதைக் காணவே மச்சராஜன் மிகக் கோபங்கொண்டு, அந்தப் பெண்ணைப் பார்த்து, நீ இனி என் முன் இராதே; நீ சுதந்திரமாய் வாராமல் ஒருத்தியினுடைய துர்ப்போதனையைக் கேட்டு வந்ததனால் இப்போது உன் உயிரை மிகுத்தினேன்; உன்னை இங்கே கொண்டுவிட்

டவள் இப்போது என் முன்னே வந்து நின்றாலல்லவோ தெரியும்; ஓடிப்போ, என் கண்முன் இராதே என்று சொல்லி அவளைத் துரத்தி விட்டு, சேவகர்களை அழைத்து, அந்தப் பெண்பிள்ளை எங்கிருந்தாலும் பிடித்துவாருங்கள்; என் அருமைநாயகியை என்னண்டை கொண்டுவிடாமற்போனால் உடனே அவளுயிரை மாற்றிவிடுவேனென்று சொல்லி அவளைக் கையோடு பிடித்துவரும்படி அனுப்பினான். இந்தச் செய்தியை அவள் எவ்விதமாயோ கேள்விப்பட்டு, நாம் யார் கண்ணிலாவது அகப்பட்டால் உயிர்போய்விடுமென்று எங்கேயோ ஒருவர் கண்ணுக்கும் அகப்படாமல் மறைந்துபோனாள்.

முன் அந்த **மச்சராணி** ஆற்றில் விழுந்துபோனாளே; அவளுடைய வரலாற்றைக் கேளுங்கள்: அந்தப் பெண் ஆற்றில் வீழ்ந்த உடனே அங்கே தற்செயலாய் நீந்திக்கொண்டிருந்த அவளுடைய பூர்வசிநேகிதனான ஏழுதலைநாகங்கண்டு, இதென்ன! இவள் மூழ்கிப் போகிறாளேயென்று, அவளைத் தன் முதுகின்மேல் ஏற்றி அழைத்து வந்து வெகு பத்திரமாய்த் தன் புற்றிற்கொண்டு சேர்த்தது. அந்தப் புற்றிற்குக் கீழாய் ஆற்றுக்குப்போக ஒருவழியும், மேலாய்த் தரைக்குவர ஒருவழியும் ஆக இரண்டு வாயில்களுண்டு. தரைக்குப்போகிற வாயிலண்டை அந்தப் பெண்ணை வைத்துக்கொண்டு, நாகம் தன் குடும்பத்தோடு அவளையும் அருமையாய்க் காத்துவந்தது. **மச்சராணி**யும் தன் கணவனுடைய வீட்டுக்கு இவ்விதமாய்ப் போகிறதென்று தெரியாமல் அந்த ஏழுதலைநாகத்தினுடைய பெரிய புற்றிலேயே வாஸம்பண்ணிக்கொண்டிருந்தாள். நாகமும் அதன் பெண்சாதியும் அவளைத் தமது சொந்தப்பெண்ணாகவே பாராட்டி ரக்ஷித்துக்கொண்டு வந்தன.

இப்படியே சிலகாலமிருக்கையில் அவளுக்கு அங்கேயே பிள்ளை ஒன்று பிறந்தது. அது **மச்சராஜ**னுக்குப் பிறந்த பிள்ளையாகையால் அதற்கு **மச்சகுமார**னென்று பெயரிட்டார்கள். அந்தக் குமாரன் சகல ராஜலக்ஷணங்களோடுகூடி அதிக தைரியமும் சாமர்த்தியமும் அழகுமுள்ளவனாய், அங்கிருந்த நாகக்குட்டிகளையே விளையாட்டுக் கருவிகளாகக்கொண்டு, எப்போதும் அவைகளோடுகூடவே விளையாடிக்கொண்டிருந்தான். அந்தக் குழந்தைக்கு மூன்றுவயதானபிறகு ஒருநாள் அந்தவழியாய் வளையல் விற்பவன் ஒருவன் வரக்கண்டு, **மச்சராணி** அவனை அழைத்துத் தன் குழந்தையின் கைகளுக்குப்

போதுமான வளையல்களை வாங்கியடுக்கிறாள். அந்தச் சிறுவன் விளையாட்டுக் குழந்தையானதுபற்றி, வாங்கியிடுகிற வளையல்களை யெல்லாம் அப்பப்போதே உடைத்துக்கொண்டிருந்தான். அந்த நாகங்களின் புற்றிலே செல்வம் அளவற்றிருந்ததனால், **மச்சராணி** சிறிதும் சிந்தையில்லாமல் அடிக்கடி வளையல் வாங்கிக்கொண்டிருந்தாள். அவ்விடத்தில் அவளுக்கு எவ்விதமான குறையுமுண்டாகவில்லை; தன் புருஷனைப் பாராமலிருப்பதுதான் பெருங்குறை. அவள் தன் நாயகனண்டை போகவேண்டுமென்று கேட்கும்போதெல்லாம் நாகம், நான் உன்னைத் தனியே விடமாட்டேன்; நீ எங்கேயென்று அவரைத் தேடிப்போவாய்? அந்த ராஜாவே தேடிவந்து உன்னை அழைத்துக்கொண்டு போவாரானால் அது சிறப்பாயிருக்கும் என்று பதில் சொல்லிக்கொண்டிருந்தது. அதனால் அவள் தனக்கு எப்போது நல்லகாலம் வருமோவென்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

இவ்வளவுகாலத்தில் **மச்சராஜன்** தன் பெண்சாதியைத் தேடிக்கொண்டு சுற்றினதேசம் இவ்வளவு அவ்வளவன்று. எங்கேயும் அவளைப்பற்றி யாதொரு செய்தியையும் கேள்விப்படாமல் மிகவும் விசனமடைந்தவனாய், எப்படியாகிலும் அவளைத் தேடிப்பிடிக்கிறதே காரியமென்று ஒரேபிடிப்பாய்ப் பிடித்து, கண்டவனையெல்லாம் என் பெண்சாதியைப் பார்த்தாயா? என் கண்ணாட்டியைக் கண்டவர்களுண்டோ? என் பிராணநாயகியை யாராவது கண்டதுண்டோ? என்று வாயோயாமல் விசாரித்துக்கொண்டே நின்றவிடத்தில் நில்லாமல் ஓடிக்கொண்டிருந்தான். ஒருநாள் அந்த வளையல் விற்போனைக் கண்டு, நீ எங்கிருந்து வருகிறாயென்று கேட்க, அவன், இங்கே ஒரு ஆற்றங்கரையில் பாம்புப்புற்றிலே குடியிருக்கிறவர்களுக்கு வளையல் விற்று வருகிறேன் என்று சொன்னான். அதைக் கேட்டு **மச்சராஜன்**, அப்படியா! அவர்கள் யார் உனக்குத் தெரியுமா? என்று கேட்க, அந்த வியாபாரி, யாரானால் உனக்கென்ன? ஒரு தாயும் பிள்ளையுமிருக்கிறார்கள்; அந்தப் பிள்ளையைப்போல் அழகுள்ளவனை நான் எங்கும் இதுவரையில் பார்க்கவில்லையென்று சொன்னதைக் கேட்டு, அரசன், அந்தக் குழந்தையின் பெயரென்ன உனக்குத் தெரியுமா என்று வினவ, அவன், **மச்சகுமார**னென்று அடிக்கடி அழைக்கிறார்கள்; அதுதான் எனக்குத் தெரியும் என்றான்.

அதைக் கேட்கவே மச்சராஜன் அவர்கள்தாம் தன் பெண்சாதியும் பிள்ளையுமாயிருக்கவேண்டுமென்று எண்ணி, அந்த அற்புத மனிதர்களை நான் பார்க்கவேண்டும்; என்னை அவ்விடத்திற்கு அழைத்துக்கொண்டுபோவாயா என்று வளையல் விற்போனைக் கேட்க, அவன், இனி இன்றைக்குமாளாது; செவ்வானங்கூட மறைந்துபோயிற்று; இருட்டுவேளையில் அவ்விடத்திற்குப்போனால் நம்மைக் கண்டு அவர்கள் பயப்படுவார்கள்; நாளைக்காலையில் நான் போகும்போது என்னோடு வருவாயானால் அழைத்துக்கொண்டு போகிறேன்; நீ இப்போது மிகவும் களைத்து வருந்தியிருப்பது போலக் காண்கிறது; இராத்திரி என் வீட்டில் நின்று சற்று இளைப்பாறியிரு என்று சொன்னான். அதற்கு ராஜா சம்மதித்து இரவெல்லாம் அவ்வர்த்தகன் வீட்டிலேயே படுத்திருந்து, விடியனேரத்தில் எழுந்து அவனை எழுப்பி, உதயமாயிற்றே; அவர்களைப் பார்க்க அவ்விடத்திற்குப் போகலாமாவென, வளையல் விற்பவன், இப்போதே போகிறதா! நான் காலைப்போஜனம் பண்ணிக்கொள்ளாமல் ஒரு இடத்திற்கும் அசையமாட்டேன் என்றான். அதனால் ராஜா அவன் வருகிறவரையில் காத்திருந்து கொஞ்சநேரங் கழித்து அவனுடன் புறப்பட்டுப்போய், வெகு சவுந்தரியமுள்ள சிறுவன் ஒருவன் அந்தப் புற்றின்மேல் விளையாட, முதலில் வெகு தூரத்திலிருந்தே அவனைப் பார்த்து மனமகிழ்ந்தான்.

வர்த்தகன் வளையல்களைக் கலகலவென்று குலுக்கிக்கொண்டு போகும்போது, குழந்தாய்! உன் கைகளுக்குச் சரியான வளையல்களைப் பார்த்து எடுத்துக்கொள் என்று ஒரு பேச்சு புற்றுக்குள்ளிருந்து கேட்டது. அந்தச் சத்தம் காதில் விழவே, அது அருமைப் பெண்சாதியின் குரலேயென்று கண்டு, அரசன் அந்தப் புற்றின் வாயிலண்டைபோய் நின்று, ஓ சீமாட்டி! உன் குளிர்ந்த முகத்தை என் கண்ணெதிரே சிறிதுநேரம் காட்டி என் தாபத்தைத் தணிக்கமாட்டாயா என்று கூவ, அவள், அது தன் கணவன் குரல்போலிருக்கவே, வெகு வேகமாய் ஓடிவந்து அவனைப் பார்த்து, ஓ, என் பிராணநாதனே! நீங்கள் மறுபடியும் என்னைக் காணும்படியாயிற்றே! என்று கதறிப் பின்பு, தனக்குத் தன் சகோதரி தீங்கு செய்ய நினைத்ததும், அத்தருணத்தில் அந்த நாகம் தன் உயிரைக் காத்து அதுமுதல் தன்னைப் பரிபாலித்து வந்ததும், அப்புறம் குழந்தை

பிறந்து அதற்காக அந்த நாகம் குடும்பத்தோடு மகோபகாரம் செய்தது மாகிய இவைகளையெல்லாம் ஒன்று தப்பாமல் ஆதியோடந்தமாய் அறிவித்தாள். அதையெல்லாம் கேட்டபிறகு அரசனும் தன் கதைகளை முழுதும் சொல்லி, நல்லது, நீ இப்போது வீட்டுக்கு வருவதற்கு ஏதாவது தடையுண்டோ என்று கேட்க, அவள், பெற்றோர்கள்போலவே என்னை இதுவரையில் ஸம்ரக்ஷணை செய்து வந்த இந்த நாகங்கள் தனியே என்னை அனுப்பச் சம்மதிக்கவில்லை; இப்போது நீங்கள் வந்திருக்கிற செய்தியைத் தெரிவிக்கிறேன் என்று சொல்லி, நாகங்களை அழைத்து, இதோ என்னை அழைத்துக்கொண்டு போக எங்கள் மகாராஜா வந்திருக்கிறார்; போய்வரலாமா என்று கேட்டாள். அதற்கு அந்த மகோபகாரியான ஏழுதலைப்பாம்பு, ஆயின் நீ சுகமாய்ப் போய்வரலாம், சொத்துக்காரன் வந்தால் சொத்தை ஒப்புவிக்கவேண்டுவது கடமைதானே; யாதொரு தடையுமில்லை என்று வேண்டிய வரிசையோடு போகச் செலவுகொடுத்தது. அந்த நாகத்தின் பெண்சாதி வந்து, நீ இத்தனைநாள் பெண்போலவே என்னிடத்தில் வளர்ந்தாயே; எப்படி உன்னை அனுப்பிவிடுகிறதென்று அவளை விட்டுப் பிரிய மனமில்லாமலே சுகமாய்ப் போய்வா என்றது. மற்றச் சிறுநாகங்களும் தங்களோடுகூடவே விளையாடி வளர்ந்த ராஜகுமாரன் தங்களைவிட்டுப் பிரிகிறானென்று கேட்டு மிகவும் விசனமடைந்தன. யாவரும் சிறிதுநேரம் சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள். பிறகு அம்மூவரும் நாகங்களிடத்தில் விசேஷமான பரிசோடு செலவு பெற்றுக்கொண்டு தங்கள் அரமனை போய்ச் சேர்ந்து, வெகுகாலம் அளவற்ற ஐசுவரியத்தோடு ஒரு குறையுமின்றி அரசாட்சி செய்து வந்தார்கள்.

## 18-வது. பிரதிசெய்தல்

முன் ஒரு தேசத்திலே ஒரு ஒட்டகமும் நரியும் மிக்க நேசம் கொண்டு எங்கேபோனாலும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாமல் வெகு காலங்கூடி வாழ்ந்துகொண்டிருந்தன. அப்படியிருக்க ஒருநாள் நரி ஒட்டகத்தைப் பார்த்து, நண்பனே! இவ்வாற்றுக்கு அக்கரையிலே மிகவும் செழிப்பான கருப்பஞ்சோலையொன்றிருக்கின்றது; என்னை இவ்வாற்றைக் கடந்து அக்கரைகொண்டு சேர்ப்பாயானால் அத்தோட்டத்தை உனக்குக் காட்டுகிறேன். அவ்விடத்துக்குப் போனால் உனக்கும் நன்மை உண்டு; எனக்கும் நன்மை உண்டு. அக்கருப்பஞ்சோலையில் நீ சுகமாய் மேயலாம்; நானும் ஆற்றோரத்தில் யதேஷ்டமாய் மீன் நண்டு முதலியவைகளைப் பிடித்துத் தின்பேன். இதைவிட நமக்கு வேறென்ன வேண்டுமென்றது.

நீ சொல்வது சரிதானென்று ஒட்டகம் அதற்கு உடன்பட்டு, தண்ணீரில் ஒருபோதும் நீந்திப்போகமாட்டாத நரியைத் தன் முதுகின்மேல் ஏற்றிக்கொண்டு நீந்தி அவ்வாற்றைக் கடந்துபோயிற்று. அக்கரைபோய்ச் சேர்ந்ததும் ஒட்டகம் கருப்பந்தோட்டத்திற்குச் சென்றது; நரி ஆற்றங்கரையிலேயே இங்குமங்குமோடி அகப்பட்ட வரையில் மீன் நண்டு முதலியவைகளைப் பிடித்துத் தின்றுகொண்டிருந்தது.

நரி மிகவும் சிறிய பிராணியாதலால், ஒட்டகம் இரண்டு மூன்று கவளம் உட்கொள்வதற்குமுன்னமே, தன் வயிறுநிறையத் திருப்தியாய்த் தின்றுவிட்டது. தின்றானதும் நரி, தன் வயிறு நிறைந்ததேயென்று அவ்வளவோடு மிகச் சந்தோஷமாய், ஒட்டகம் மேய்கிற கருப்பந்தோட்டத்தைப் பலதரம் சுற்றிச் சுற்றி வந்து, தன்னால்

எவ்வளவு உரத்து ஊளையிடக்கூடுமோ அவ்வளவு உரப்பாய் ஊளையிட்டது.

அந்தச் சத்தத்தைக் கேட்டு அவ்வூராரெல்லாம், கருப்பஞ்சோலையில் நரி வந்திருக்கின்றது; நாலாமூலையிலும் வளைகள் தோண்டி வேரைக் களைந்துபோடுமேயென்று அதை ஓட்டுவதற்காக உடனே அவ்விடத்திற்கு ஓடிவந்தார்கள். அவர்கள் வந்து பார்த்தபோது அங்கிருந்தது நரிமாத்திரமேயன்று; ஒரு ஒட்டகமும் கருப்பங்கழிகளையெல்லாம் அநியாயமாய் முறித்துத் தின்றுகொண்டிருக்கக் கண்டார்கள். அவ்வளவுகாலம் அருமையாய் வளர்த்த சோலையை அப்படி ஒரு மிருகம் வந்து முறிக்கக் கண்டால் மனந்தாளுமா? அவர்களெல்லாம் அதிக கோபங்கொண்டு அவ்வொட்டகத்தை இடிப்பொடியப் புடைத்து அப்புறம் ஓட்டிவிட்டார்கள்.

அவர்கள் அவ்விடம்விட்டுப் போனபிறகு நரி ஒட்டகத்தண்டை வந்து, தோழனே! நாம் இனி வீட்டுக்குப் போகலாமா என்றது. அதைக் கேட்டு ஒட்டகம், போகலாம், வந்து நேரமாயிற்று; முன்போலவே என் முதுகின்மேல் ஏறிக்கொள் என, நரியும் சந்தோஷமாய் ஒட்டகத்தின்மேலே தாவி அதன் முதுகில் உட்கார்ந்தது.

ஒட்டகம் உடனே ஆற்றிலிறங்கிவிட்டது. அரைமட்டம் தண்ணீரில் வந்தபிறகு ஒட்டகம் நரியைப் பார்த்து, அப்பா நரிராஜனே! சிநேகம்பண்ணவேண்டுமென்றால் உன்னோடுதான் பண்ணவேண்டும்! இப்போது நீ எனக்குச் செய்தவளவு உபகாரம் மற்று எவன் செய்யப்போகிறான்? நான் இரண்டொரு கவளம் தின்பதற்கு முன்னமே நீ உன் வயிறு நிறைந்துபோயிற்றேயென்று, கோவென்று பேரிரைச்சலிட்டு, இவ்வூராரையெல்லாம் தூண்டிவிட்டு, என்னை இப்படி உடம்பெல்லாம் ரத்தமயமாகும்படி அடித்துக் கொல்லச் செய்தாயல்லவா? அப்படி நீ கூச்சலிட்டதற்குக் காரணமென்னவோ அது எனக்குத் தெரியவில்லையென்றது.

அதைக் கேட்டு நரி, அது என்னவோ எனக்குத் தெரியாது. என் வழக்கப்படி நான் கூச்சலிட்டேனேயொழிய வேறில்லை; வயிற்றுக்குத் தீனி தின்றவுடனே சந்தோஷமாய் ஊளையிடுவதில் எனக்கு விருப்பமதிகம் என்று சொல்லிற்று.

அந்நேரத்துக்குள் ஒட்டகம் ஆற்றில் வெகுதூரம் போய்விட்டது; கொஞ்சங்கொஞ்சமாய்த் தண்ணீரும் தோளுக்குமேல் வந்து

விட்டது. உடனே ஒட்டகம் நீந்தவேண்டியதாயிற்று. அப்போது அது நரியைப் பார்த்து, அப்பா நரியே! இப்புறமும் அப்புறமும் புரண்டு புரண்டு நீந்துவதென்றால், எனக்கு மிகச் சந்தோஷமென்று சொல்ல, நரி, வேண்டாம், வேண்டாம், நம்பிவந்தவனை நட்டாற்றில் தள்ளிவிடலாமா? இதற்கேன் ஆசைப்படுகிறாய் என, ஒட்டகம், அது ஏனோ எனக்குத் தெரியுமா? எனக்கு அதுதான் வழக்கம். மேலும் புசித்தவுடனே இரண்டொரு புரள் புரண்டால்தான் எனக்கு உடம்பு சுவாதீனப்படும் என்று சொல்லிக்கொண்டே முதுகைக் குலுக்கி ஒரு புரள்புரண்டது. நரி நட்டாற்றில் விழுந்து முழுகிப் போயிற்று. ஒட்டகம் சுகமாய்க் கரையேறிச் சந்தோஷமாகத் தன் இருப்பிடம்போய்ச் சேர்ந்தது.

## 19-வது. சந்தனராஜன் கதை

நெடுநாளைக்குமுன்னே ஒரு தேசத்தில் ஓர் அரசன் அரசாண்டு கொண்டிருந்தான். இவனுக்கு ஏழுபிள்ளைகள். பெண் ஒன்று. அந்தக் குழந்தைகளுடைய துர்ப்பாக்கியத்தால் சீக்கிரத்திலேயே அவ்வரசனும் அரசியும் இறந்துபோனார்கள். ஆயினும், கடவுளுடைய கடாக்ஷத்தால் அந்தப் பிள்ளைகள் தாமே தலையெடுத்து வல்லவர்களானார்கள். சிலநாளையில் அவ்வேழுபிள்ளைகளுக்கும் கலியாணமாகிப் பெண்சாதிகளும் வீட்டுக்கு வந்தார்கள். ஐயோ! அந்தப் பெண்கள் வந்தவேளை அவர்களுக்கும் அவர்களுடைய நாத்தனாரான சிறிய மகளுக்கும் சிறிதும் பொருந்தவில்லை. மூத்த பிள்ளைகள் ஆறுபேருடைய பெண்சாதிகளும் அந்தச் சிறுமகளைப் பகைத்தார்கள். கடைப்பிள்ளையான ஏழாம்மகனுடைய பெண்சாதி மட்டும் அச்சிறுமியினிடத்தில் மிகவும் நேசமுள்ளவளாய், மற்றவர்கள் அவளுக்கு என்ன கொடுமை செய்ய நினைத்தாலும், அதனால் அப்பெண்ணுக்கு யாதொரு தீங்கும் உண்டாகவொட்டாமல், அன்புடனே ஆதரித்துவந்தாள். அவ்வாறு மருமக்கள்மாரும் அந்தச் சிறிய நாத்தனாரைப்பற்றி ஏதாவது கொடுமையாய்ப் பேசும்போதெல்லாம் ஏழாவது மருமகள், ஐயோ! இவளுடைய தாய் வேண்டும் வேண்டுமென்று எத்தனையோநாள் தவஞ்செய்து பெற்ற இவ்வருமை மகளை நாம் இப்படிப் பகைக்கலாமா? இப்போது தாயிருந்தால் இப்பெண் எவ்வளவு செல்வமுஞ் சீருமாயிராது? பிறந்த நாள் முதல் தாய்முகத்தையே அறியாத இப்பேதைப் பெண்ணை நாம் பிரீதியுடன் போஷிக்காமல் இப்படிப் பகைப்பது நியாயமல்லவென்று சொல்லி வேண்டிக்கொள்வாள். அதைக் கேட்டு மற்றவர்கள், நீ

இப்படிப் பேசுவதனால் உனக்கும் எங்களுக்கும் விரோதமுண்டா குமேயொழிய, அந்தப் பெண்ணினிடத்தில் எங்களுக்குப் பிரீதி உண்டாகப்போகிறதில்லை. என் வீணே வாயைக் கெடுத்துக் கொள்கிறாய் என்று சொல்வார்கள். இவ்விதமாகவே சிலகாலம் நடந்துவந்தது.

அப்படியிருக்க ஒருநாள் அந்தக் கொடிய பெண்கள் ஆறுபேரும் தங்கள் புருஷர்கள் வீட்டிலில்லாதவேளையில், அந்தச் சிறுமியி னிடத்தில் குற்றஞ்சார்த்தப் பல பொய்க்கதைகள் கட்டிவைத்து, அவர்கள் வந்ததும் அவர்களுக்கு அப்பெண்ணினிடத்தில் மிகக் கோபமுண்டாகும்படி அதை நன்றாய்ப் போதனைசெய்து அப் பெண்ணை வீட்டைவிட்டுத் துரத்திவிடச் செய்தார்கள். இச்செய்தி ஏழாம் மருமகனுக்கு முன்னதாய்த் தெரியாததலால் அவன் அதற் குப் பிரதி ஒன்றும் செய்யக்கூடாமற்போயிற்று. இனி அவன் என்னசெய்யமாட்டுவான்! ஒன்றுமறியாத அந்தச் சிறு பெண்ணுக்கு நேர்ந்த விதியைப்பற்றி மிகவும் விசனமடைந்து, போகிறவிடத்தி லாவது அந்தப் பெண் சோறு துணிக்கு அல்லாடாதிருக்கட்டு மென்று தன்னால் கூடியவரையில் ரகசியமாய் அவற்றைக் கொடுத் தனுப்பினான். கொடிய பெண்கள் ஆறுபேரும் அம்மகளை வீட்டி னின்றும் துரத்தும்போதாவது வாயை மூடிக்கொண்டு துரத்த லாமே; அதுவுமில்லை: அடிசிறுக்கி! ஓடிப்போ; சந்தனராஜனைக் கலியாணஞ் செய்துகொண்டபிறகு நீ எங்கள் வீட்டுக்குச் சுகமாய் வரலாம்; நீ அந்த ராஜாவைக் கலியாணஞ் செய்துகொள்ளும்படி ஏற்பட்டு அதற்காக எங்களையெல்லாம் வரவழைத்து, எங்கள் ஆறு பேரையும் மணைக்கட்டையில் உட்காரவைத்து, உன்னிடத்தில் அன்புள்ள ஏழாம் மருமகனைச் சிறந்த நவரத்தினங்கள் இழைத்த ஒரு சிங்காசனத்தில் உட்காரவைப்பாயானால் அப்போதுதான் நீ குற்றமற்றவளாவாய் என்று சொல்லித் துரத்திவிட்டார்கள். அவர் கள் சொன்ன சந்தனராஜன் யாரெனில், அவன் அண்டை நாட் டில் பிரசித்தனயிருந்த ஒரு அரசன்; அவன் சில நாளைக்குமுன் னமே இறந்துபோனான்; அதனாலேதான் அவர்கள் அந்தப் பெண்ணை அப்படிப் பரிகாசமாய்ப் பேசினார்கள்.

ஐயோ! ஒருநாளும் வீட்டைவிட்டு வெளியே போயறியாத பெண்ணை ஊரைவிட்டு ஓடிப்போகும்படித் துரத்திவிட்டதால், அவள்

என்னசெய்யமாட்டுவாள்! அந்தச் சிறுமி ஒன்றுந் தோன்றாமல் புலம்பிக்கொண்டே ஒரு பெருங் காட்டுவழியாய்ப் போனாள். போகப்போக அந்தக் காடு மிகவும் பயங்கரமாயிருந்தது. எவ்வளவு தூரம் போனாலும் ஒரு பிராணிகூடத் தென்படவில்லை. கையிலே கொண்டுவந்த சாப்பாடும் வெகுவாய்ப் புசித்தாய்விட்டது. இனி எங்கேபோய்ச் சோறு இரக்கிறது! இரப்பதற்கும் ஒரு ஊரும் அருகே காணப்படவில்லை. இப்படி நெடுந்தூரம் சென்றபிறகு நடுவழியில் பெரிய தடாகமும் அதன் கரையில் சிறந்த ஒரு மாளிகையும் காணப்பட்டன. அது ஒரு அரக்கனுடைய மாளிகை. அப்புறம் நடக்கத்தள்ளாமல் அந்தப் பெண் அக்குளக்கரையில் உட்கார்ந்து, அங்கிருந்த மாளிகையைப் பார்த்து, இது ராக்ஷதனுடைய மாளிகைதான்; நமக்குத் தாயா, தகப்பனா, பிள்ளையா, குட்டியா என்ன இருக்கிறது! நாம் எக்கேடு கெட்டால்தான் கேட்பார் யார்? இவ்வீட்டு ராக்ஷதன் நம்மைப் பிடுங்கித் தின்றுவிட்டால் நம்முடைய துக்கம் இன்றோடு நீங்கிப்போகும் என்று மனதில் எண்ணிக் கொண்டே பசிதாளமாட்டாமல் தன் கையில் மிகுந்திருந்த சோற்றைத் தின்றுகொண்டிருந்தாள். அப்போது அவ்வீட்டில் ஒருவருமில்லை. ராக்ஷதன் வெளியே போயிருந்தான். ஒரு நாயும் பூனையும் வீட்டில் காவல்காத்துக்கொண்டிருந்தன.

கலியாணம் காட்சி முதலிய விசேஷ தினங்களில் ராக்ஷதன் தேகத்திற்கு அழகுசெய்துகொள்வதற்காக வைத்துக்கொண்டிருந்த குங்குமப்பூவுக்கு நாய் காவலாயிருந்தது; அவன் கண்ணுக்கு இட்டுக் கொள்வதற்காக வைத்திருந்த மையைப் பூனை காத்துக்கொண்டிருந்தது. இந்தப் பெண் குளக்கரையில் உட்கார்ந்து தின்பதை முதலில் பூனை பார்த்து, அவளண்டை ஓடிவந்து, அம்மா! எனக்கு மிகவும் பசியாயிருக்கிறது; ஒருகவளம் சோறு கொடுப்பாயா என்று கேட்டது. அதற்கு அவள், என்னிடத்தில் இதோ சிறிதளவு சோறுதானே இருக்கிறது; இதை உனக்குக் கொடுத்துவிட்டால் நான் பட்டினியாய்த்தானே கிடக்கவேண்டும்? நல்லது, நான் உனக்குக் கொஞ்சம் சோறு கொடுத்தால் அதற்குப் பதில் நீ எனக்கு என்ன கொடுக்கமாட்டுவாய் என, பூனை, ராக்ஷதன் கண்ணுக்கு இட்டுக்கொண்டு போகிற மை என்னிடத்தில் இருக்கிறது; வேண்டுமானால் கொண்டு வந்து கொடுக்கிறேன் என்று சொல்லி வீட்டுக்குச்சென்று ஒரு சிமிழ்

நிரம்ப மையைக் கொண்டுவந்து கொடுத்துச் சோறு வாங்கிக்கொண்டு போயிற்று. இதைப் பார்த்துக்கொண்டிருந்த நாய் தானும் அப்படியே வந்து கொஞ்சம் சோறு இரக்க, அவள், நான் உனக்குச் சோறுகொடுத்தால் அதற்குப் பதில் நீ எனக்கு என்ன தருவாய் என்று கேட்டதற்கு, நாய், ராக்ஷதன் தேகத்திற்கு அழகுசெய்துகொள்ள வைத்திருக்கும் குங்குமப்பூ என் வசத்திலிருக்கின்றது; கொண்டுவந்து தருகிறேன் என்று சொல்லிக் கொஞ்சம் குங்குமப்பூ கொண்டுவந்து கொடுத்துச் சோறு வாங்கிக்கொண்டுபோயிற்று. அவளும் அந்த மையையும் குங்குமப்பூவையும் வாங்கி முன்றானையில் முடிந்துகொண்டு அவற்றினிடத்தில் விடைபெற்றுக்கொண்டு அப்புறம்போகப் புறப்பட்டாள்.

அப்படியே அவள் இரண்டு மூன்றுநாள் வழி நடந்துபோனாள். அப்புறம் பார்த்தால் காடு முன்போல அவ்வளவாய் அடர்ந்திருக்கவில்லை. சிறிதுதூரத்துக்கப்பால் சிறந்த வீடொன்று காணப்பட்டது. அப்போது சூரியனும் அஸ்தமிக்கிற தருணமாயிற்று. அவள் கையில் வைத்திருந்த சோறும் செலவாய்ப்போகவே, எப்படியாவது இருள்மூடுவதற்குமுன் அவ்விடம்போய்ச் சேரவேண்டுமென்று சாசாவென்று நடந்தாள். அவள் குறித்துப்போனவிடம் செத்துப்போன சந்தனராஜனை விட்டிருந்த கோரி; அந்தச் செய்தி அவளுக்குத் தெரியாது.

சந்தனராஜன் செத்துப்போய்ச் சிலமாதங்களானாலும், அவனைத் தங்கள் கண்ணைக் காப்பாற்றிவந்த அவனுடைய தாய்தந்தை சகோதரி முதலியவர்களெல்லாம் அவனைப் பூமிக்குள் புதைத்துவிட மனமொப்பாமல், அழகாய் கோரி ஒன்று கட்டி, அதின் நடுவிலே சிறந்த ஒரு மேற்கட்டின்கீழ்ப் பஞ்சணையின்மேல் விட்டுவைத்தார்கள். அவன் செத்துப்போனாலும் அவனுடைய தேகம்மட்டும் சிறிதும் கெடவில்லை. படுத்துத் தூங்குகிறவனுடைய தேகம்போலவே இருந்தது. அவனுடைய தாயும் சகோதரிகளும் நாள்தோறும் காலையில் எழுந்து அவ்விடத்துக்கு வந்து பொழுதுபோகுமளவும் அங்கேயே அவனைப் பார்த்து அழுதுகொண்டிருந்து, பொழுதுபட்டதும் வீட்டுக்குப் போய்விடுவார்கள். அவ்விடத்துக்குச் சமீபத்தில் ஒரு கோவிலும், அந்தக் கோவிலில் பூசைபண்ணுகிற நம்பியான் வீடுமுண்டு. தங்கள் ராஜா இப்படிச் செத்து விழுந்துகிடக்கிறானென்றும், அவன்

இறந்துபோய் நெடுநாளாகியும் சரீரமட்டும் சிறிதும் கெடாமல் அப்படியே இருக்கிறதென்றும் கேள்விப்பட்டு அந்த ஆச்சரியத்தைக் காண அந்நாட்டார் அனைவரும் திரண்டுருண்டு வந்துகொண்டிருந்தார்கள். அவன் அப்படியிருப்பதற்குக் காரணமென்னவோ அதுமட்டும் ஒருவர்க்கும் தெரியவில்லை.

அந்தச் சிறுமகள் பொழுதுபோகிறதேயென்று வெகு வேகமாய் அவ்விடத்துக்குச் சமீபத்தில் வரும்போது ஒரு பெருங்காற்றும் பெருமழையுமெடுத்து அவளைத் தொப்பக்கட்டையாய் நனைத்துவிட்டது. நன்றாய் இருண்டு வழியுந் தெரியாமற்போயிற்று. சந்தனராஜனுடைய பிணத்தை அந்தவிடத்தில் விட்டிருக்கிற செய்தி அவளுக்குத் தெரிந்தால் அவள் அந்தகோரிக்குள் நுழையத் துணியவேமாட்டாள், நன்றாய் இருட்டிப்போனதனாலும் ஊரத்து மழை பொழிவதனாலும் அவள் வேகமாய் ஓடி அதற்குள் நுழைந்து அங்கே ஒரு மூலையில் ஒடுக்கிக்கொண்டிருந்தாள். அங்கே ஒரு மாடத்தில் மினுக்கு மினுக்கென்று எரிந்துகொண்டிருந்த ஒரு விளக்கொளியினால், வெகு அழகாய்ச் சிங்காரிக்கப்பட்டுச் சந்தனராஜன் படுத்திருப்பதை அவள் கண்டாளென்றாலும், அவன் படுத்துத் தூங்குகிறவன்போலவே காணப்பட்டதனால், யாரோ ஒரு பெரிய மனிதன் படுத்திருக்கிறானென்று, அதைக் கண்டு சிறிதும் அஞ்சாமல் அங்கேயே உட்கார்ந்திருந்தாள். அப்படியிருக்கையில் இராத்திரி பதினைந்து நாழிகைக்கு உயிர் உண்டாகி அவ்வரசன் எழுந்து ஒரு மூலையில் ஒடுக்கி உட்கார்ந்துகொண்டிருந்த அவ்வழகியைப் பார்த்து, ஒரு கைவிளக்கைக் கொளுத்திக்கொண்டு அவளண்டை வந்து, நீ யார்? என்ன செய்தி? என்று கேட்டான். அதற்கு அவள், நான் ஒரு பரதேசிப்பெண்; எனக்கு உற்றார் உறவினர் ஒருவருமில்லை; மழைக்காக நான் இங்கே ஒதுங்க வந்தேனேயொழிய வேறில்லை; குளிரும் பசியும் பிராணனை வதைக்கின்றது என்று சொல்லி, பின்பு தான் பிறந்ததும், வளர்ந்ததும், தன் சகோதரர்களுடைய பெண்சாதிகள் தன்மேல் வீணான பழிபோட்டு, நெடுநாளைக்குமுன்னமே இறந்துபோன சந்தனராஜனைக் கலியாணஞ் செய்துகொண்டபிறகு தங்கள் எதிரே வரும்படிக் கட்டளையிட்டுத் தன்னைக் காட்டுக்கு அடித்துத் துரத்திவிட்டதும், தன் கடைசி உடன்பிறந்தானுடைய பெண்சாதிமாத்திரம் மிகவும் பிரீதியாய்த் தன்னைக் காத்ததும், அவள் கொடுத்தனுப்பின பொருளைக்கொண்டே

தான் அத்தனை நாள் பசியாமல் புசித்துப் பிழைத்திருந்ததுமாகிய தன் கதைகளையும் சொன்னாள். அதை முழுதும் அவன் கவனமாய்க் கேட்டு அவள் சொன்ன செய்தியெல்லாம் உண்மைதானென்று நம்பி, அவள் விகாரமான கந்தைத்துணி தரித்திருந்தாலும், அவ்விருளில் ஒரு நக்ஷத்திரம்போலப் பளபளப்பாய்ப் பிரகாசித்ததனாலும், குங்குமச் சாந்தணிந்த மேனியும் மைதீட்டிய கண்ணும் மிகவும் சுந்தரமான வடிவழகும் உடையவளாயிருந்ததனாலும் இவள் ஒரு சாதாரணமான பெண் அல்ல, ஒரு ராஜகுமாரத்தியாகவே இருக்கவேண்டுமென்று எண்ணி அவளிடத்தில் மிகுந்த பரிதாபமுடையவனாய், பெண்ணே! பயப்படாதே; இனி உன்னை ரக்ஷிப்பது என்னுடைய கடமையென்று சொல்லி, தன் படுக்கையிலிருந்த சிறந்த பட்டாடையொன்றை எடுத்துக்கொடுத்துப் போர்த்துக்கொள்ளச் சொல்லி, அருகாமையிலிருந்த நம்பியான் வீட்டுக்குப்போய்க் கொஞ்சம் சோறு வாங்கிவந்து கொடுத்து அதைப் புசிப்பித்தான். பின்பு, நீ கேள்விப்பட்ட சந்தனராஜனென்பவன் நானே; பகற்பொழுதெல்லாம் நான் செத்தபிணமாய் விழுந்து கிடக்கிறேன்; இரவில் சிறிதுநேரம் எனக்கு உயிர் உண்டாகுமென்று தன் கதையையும் சொன்னான். அதைக் கேட்டு அவள், ஐயோ! ஆனால் நீங்கள் இப்படி இருக்கிற செய்தி உங்கள் வீட்டில் ஒருவர்க்கும் தெரியாதோ? இந்த நடுக்காட்டில் மிகவும இருண்ட இவ்வீட்டில் நீங்கள் தனித்திருக்கவேண்டிய காரணம் என்னவென்று கேட்க, அவன், இச்செய்தி இந்தக்கோவில் நம்பியான் ஒருவன் தவிர மற்றெவர்க்கும் தெரியாது; அடிக்கடி நான் இப்படி உயிரற்றுப்போவதை என் வீட்டாருக்குச் சொல்லியாவதென்ன? இதைக் கேட்டால் அவர்கள் இன்னும் அதிகமாய்த் துக்கிக்கும்படியாகுமென்று நான் அவர்களுக்கு ஒன்றும் தெரிவிக்கவில்லை. என் தாய்தந்தையர்கள் பகலிலேமாத்திரம் இவ்விடத்திற்கு வந்துபோவதனால் அவர்களும் இதைக் கண்டுகொள்ளக்கூடவில்லை. எப்பொழுதாவது நாம் நன்றாய்ப் பிழைக்கும்படியானகாலம் வராதாவென்று எதிர்பார்த்திருக்கிறேன் என்று சொல்லிவிட்டு, அருகிலிருந்த கோவில் நம்பியானை அழைத்து, நீ இத்தனைநாளாய்க் கொண்டுவைப்பதைப்போல இரட்டிப்பு ஆகாரம் இனிமேல் இங்கே கொண்டுவைப்பதுமன்றியில், இந்தச் சீமாட்டியைப் பத்திரமாய்க் காப்பாற்றி வைத்துக்கொண்டிரு; நான் பிழைக்கும்படியான காலம்

வந்தால் அப்போது இவளைக் கலியாணஞ் செய்துகொள்ளலாமென்றிருக்கிறேன் என்றான். இப்படிப் பேசிக்கொண்டேயிருக்கையில் திடீரென்று அவன் இறந்துபோனான்.

பின்பு அந்தப் பிராமணன் அப்பெண்ணை அழைத்துக்கொண்டு தன் வீட்டுக்குப்போய், தன் மனையாளோடு சொல்லி ஒரு குறையுமுண்டாகாமல் சவுக்கியமாய் அவளைக் காப்பாற்றும்படித் திட்டஞ் செய்தான். அந்தப் பெண்ணும் மறுநாள் பகற்பொழுதெல்லாம் அவ்வீட்டிலேயே தங்கியிருந்தாள். அன்று பொழுது விடிந்ததும் சந்தனராஜனுடைய தாயும் சகோதரிகளும் வழக்கப்படியே அம்மகனைப் பார்க்க அவ்விடத்திற்கு வந்தார்கள். பொழுதுபோகுமளவும் அவர்கள் அவ்விடத்திலேயே நின்று அழுதுகொண்டிருந்தார்களென்றாலும், இந்தப் பெண்ணைமட்டும் பார்க்கவில்லை. இருட்டுவதற்கு முன்னமே அவர்கள் வீட்டுக்குப் போய்விட்டார்கள். அன்றிராத்திரியும் பதினைந்து நாழிகைக்குச் சந்தனராஜன் கிரமப்படியே பிழைத்தெழுந்தான். எழுந்ததும் கோவில் நம்பியானை அழைத்து, அந்தப்பெண் இங்கேயே சுகமாயிருக்கிறாளா என்று கேட்க, அவன், நெடுந்தூரம் நடந்துவந்த இளைப்பினாலும் போக வேறிடமில்லையாகையாலும் இதுவரையிலும் இங்கேதானிருந்துகொண்டிருக்கிறாள் என்றான். அதைக்கேட்டுச் சந்தனராஜன், ஐயோ பாவம்! உற்றார் உறவினர் ஒருவருமில்லாமல் பரதேசத்திலே தனியேவந்து தவிக்கிறாள். அவளுக்குச் சம்மதமானால் அவளுக்கும் எனக்கும் இப்போதே நீ கலியாணத்தை நடத்திவிடு, அவள் எங்கும்போய் அல்லாடாமல் நம்மிடத்திலேயே சுகமாயிருக்கட்டுமென்றான். அப்படியே அவ்வேதியன் தன்னினத்தாரையெல்லாம் அழைத்து வைத்துக்கொண்டு விதிமுறை தவறாமல் அவர்களுக்குக் கலியாணஞ்செய்வித்தான். சந்தனராஜனும் ராணியும் சிலநாள் அப்படியே அவ்விடத்தில் இருந்தார்கள். அந்த ராணிக்கு ஒருகுறையும் உண்டாகவொட்டாமல் அவ்வேதியன் அன்புடன் தன் வயிற்றிற்பிறந்த பெண்போலவே அவளை ஆதரித்துவந்தான். அவ்வரசி பகற்பொழுதெல்லாம் வேதியன் வீட்டிலேயே இருந்து பொழுதுபோனதும் தன் புருஷன் படுத்திருக்குமிடத்திற்குப் போய் அவன் எழுந்திருக்கும் வேளையை எதிர்பார்த்திருந்து, எழுந்ததும் சிறிதுநேரம் அவனோடு பேசிக்கொண்டிருந்து, மறுபடி அவன் இறந்துபோனவுடனே வீடு

வந்து சேர்வாள். இப்படியிருக்க ஒருநாள் ராத்திரி அவள் அவனைப் பார்த்து, என் பிராணநாதனே! நான் உமக்கு மனையாட்டியாகி நடுராத்திரியில் இரண்டு நாழிகை உங்கள் பக்கத்தில் வந்து உட்கார்ந்து விநோதமாய்ப் பேசிக்கொண்டிருப்பதனால் உண்டாகிற சந்தோஷம், வேறு யாராவது ஒரு மகாராஜனுக்கு வாழ்க்கைப்பட்டு அவனோடு நூற்றாண்டுமுழுதும் கூடிக் குலாவிக்கொண்டிருந்தாலும் உண்டாகாது. ஐயோ! நீங்கள் எப்போதும் பிழைத்திருக்கும்படி இருந்தால் எப்படியிராது! இப்படி நாள்தோறும் நீங்கள் இறந்து போவதற்குக் காரணமென்ன? மறுபடி ராத்திரி ராத்திரி பதினைந்து நாழிகைக்குப் பிழைக்கிறீர்களே அது யாதுகாரணம்? அது உங்களுக்குத் தெரியுமா என்றாள்.

அதைக்கேட்டு அந்த ராஜன், ஆம், அது எனக்குத் தெரிந்தது தான். நான் என் கழுத்தில் ஒரு சந்தனமாலை தரித்துக்கொண்டிருந்தேன். அதுதான் என் உயிர்க்கு இருப்பிடம்; அதை என் கழுத்தினின்றும் வாங்கிப் பிறர் யாராவது தரித்துக்கொண்டால் நான் உடனே இறந்துபோவேன். நான் ஒருநாள் என் சிங்காரவனத்தில் விநோதமாய் உலாத்திக்கொண்டிருக்கையில், அவ்வழியாய் ஆகாயத்தில் பறந்துபோன தேவகன்னிகைகளுள் ஒருத்தி என் அழகைப் பார்த்து என்மேல் ஆசைகொண்டு, தன்னைக் கலியாணஞ் செய்து கொள்ளும்படி வேண்டினாள். நான் மாட்டேனென்று மறுக்கவே, அவள் என்மேல் கோபங்கொண்டு, என் உயிர்க்கு இருப்பிடமாய் நான் கழுத்தில் அணிந்திருந்த சந்தனமாலையைப் பிடுங்கிக்கொண்டு ஓடிப்போனாள். அந்தக்ஷணமே நான் உயிரற்றுக் கீழே வீழ்ந்தேன். நான் இறந்துபோனதாக நினைத்து என் சுற்றத்தார் என்னை இந்த கோரிக்குள் கொண்டுவிட்டுப்போனார்கள். நாள்தோறும் நிசிவேளையில் அந்தத் தெய்வப்பெண் என்னிடத்திற்கு வந்து தன்னைக் கலியாணஞ்செய்துகொள்ளும்படி என்னை வேண்டுகிறாள். அப்போது இரண்டு நாழிகை அவள், நான் தன் வேண்டுகோளுக்கு இசைவேனோ என்னவோ வென்று தன் கழுத்திலிருந்து சந்தனமாலையைக் கழற்றுவதனால் எனக்கு உயிர் உண்டாகின்றது. எவ்வளவு நயமாய் வேண்டியும் நான் கேளாமற்போனால், இனிப் பயனில்லையென்று கண்டு அவள் அந்த மாலையைத் தரித்துக்கொண்டு போய் விடுகிறாள்; நான் இறந்துபோகிறேன் என்றான். அந்தத் தேவ

கன்னிகையை நாம் பிடித்துக்கொள்ளக்கூடாதோவென்று அவ் விளவரசி கேட்க, அவன் மேலும் சொல்லுகிறான் : எப்படியாவது அந்தச் சந்தனமாலை அகப்பட்டால் நாம் பிழைக்கலாமேயென்று அதைப் பிடுங்கிக்கொள்ள நான் பலதடவை முயன்றேன். அவள் நமது கண்ணுக்குத் தோன்றாமல் ஆகாயத்திலேயே நின்று பேசி விட்டு ஓடிப்போகிறாள் ; அதனால் அவளைப் பிடிப்பது மிகவும் அசாத்தியமாயிருக்கிறதென்றான். அதைக்கேட்டுச் சந்தனராணிக்கு உண்டான விசனம் இவ்வளவவ்வளவன்று. ஐயோ ! நம்முடைய நாயகன் நன்றாய்ப் பிழைத்திருக்க நாம் என்றைக்குக் கண்ணாலே காணப்போகிறோம் ! நமக்குப் பிள்ளையும் பிறந்தது ; அதனால் நாம் பெறப்போகிற சவுக்கியமென்ன ? உலகத்திலுள்ள மற்றப் பிள்ளை களைப்போல் அன்புடன் எடுத்தாதரிக்க தகப்பனில்லாமல், அந்தப் பாலகன் தெருத்தெருவாய் அல்லாடக்கண்டு நாம் இன்னும் அதிக மாய்த் துக்கப்படவேண்டுவதுதானே. இராத்திரி இரண்டு நாழிகை தான் இவன் பிழைத்தெழுவது என்ன நிச்சயம் ? அதற்கும் அந்தத் தெய்வப்பெண்ணினுடைய கருணையல்லவோ வேண்டும். என் றைக்காவது ஒருநாள் அவள் திரும்பி இவ்வழிவராமல் அப்படியே போய்விட்டால் அன்றோடு நம்முடைய வாழ்க்கை ஒழிந்ததுதானே என்றிப்படிப் பலவிதமாய் எண்ணமிட்டுத் துக்கித்துக்கொண்டிருந் தாள். அதுகண்டு, அந்தப் பார்ப்பான் ஒருநாள், சந்தனராஜ னண்டை வந்து நம்முடைய ராணி எப்போதும் விசனமாயே இருக் கிறாள். நாம் மிகவும் செல்வமாய் அவளை ஆதரித்தாலல்லது அவள் உயிரை விட்டுவிடுவாளென்று தோன்றுகிறது. எங்களால் சிறிதும் வஞ்சனையில்லாமல் எங்கள் வீட்டில் அவளை நாங்கள் எவ்வளவு ஆதரித்தும் அவளுக்குப் போதவில்லை. உன் தாய் தந்தை முதலிய வர்களெல்லாம் மிகவும் ஈவு இரக்கமுடையவர்கள் ; அவ்விடத்துக்கு இவளை அனுப்பிவிட்டால், இவள் படுகிற சங்கடத்தைப் பார்த்து மிக வும் ஆதரவாய்ப் போஷிப்பார்களென்றான்.

அவ்வரசர்களுடைய மாளிகையின் முற்றவெளியிலே பெரிய பலகைபோன்ற சிறந்த சலவைக்கல் ஒன்று உண்டு. சந்தனராஜன் செம்மையாயிருந்த காலத்தில், அவன் அடிக்கடி அதன்மேல் வந்து உட்கார்ந்து பொழுதுபோக்குவது வழக்கம். அவன் அந்தக் கல் லின்மேல் அவ்வளவு விருப்பங்கொண்டிருந்தானென்பதற்காகவே,

அவன் இறந்துபோனபிறகு அவனுடைய தாய் தந்தையர்கள் அந்தக் கல்லை ஒருவரும் தொடக்கூடாதென்று வெகு கருத்தாய்க் காத்து வந்தார்கள். அந்தச் செய்தி சந்தனராஜனுக்குத் தெரியும் ; அதனால் அவன், தன் மனையாட்டி மிகவும் வருத்தப்படுகிறாளென்கிற செய்தி கேள்விப்பட்டவுடனே அவளை அழைத்து, என் கண்ணே ! நீ விசனப்படாதே ; இங்கிருந்து ராஜமாளிகைக்குப் போவாயானால், என் தாய்தந்தை முதலியவர்கள் உன்னை நன்றாய்க் காப்பாற்றுவார்கள். அவ்விடத்திற்கு நீ போகவேண்டிய விதம் எப்படியெனில், ராஜமாளிகையின் முற்றத்தில் பெரிய சலவைக்கல் ஒன்று இருக்கின்றது. அதினிடத்தில் நான் மிக்க விருப்பங்கொண்டிருந்தபடியால், இப்பொழுது அதை யாரும் தொடக்கூடாதென்று அங்கிருப்பவர்கள் அருமையாய்க் காத்துக்கொண்டிருக்கிறார்கள். நீ உன் மகனையும் எடுத்துக்கொண்டுபோய் அதன்மேல் உட்காருவாயானால், அவர்கள் உன்னை அவசியம் பார்த்து அப்புறம்போகச் சொல்வார்கள். அதற்கு நீ உடம்பு அநுகூலமில்லையென்று சொல்வாயானால், அவர்கள் அதைக்கேட்டுப் பரிதாபப்பட்டு உன்னிடத்தில் நேசம் பாராட்டுவார்களென்றான். அவன் சொல்லி அனுப்பினபடியே அவள் செய்தாள்.

அவள் தன் குழந்தையோடுகூட அந்தச் சலவைக்கல்லின்மேல் உட்கார்ந்திருப்பதைச் சந்தனராஜனுடைய சகோதரி வீட்டுக்குள்ளிருந்து பார்த்துத் தன் தாயை அழைத்து, தாயே ! நம்முடைய சலவைக்கல்லில் யாரோ ஒருத்தி மகனோடுகூட வந்து உட்கார்ந்திருக்கிறாள். அவளை அப்புறம்போகச் சொல்லுகிறேனென்று சொல்லி அவளண்டை எழுந்தோடி வந்தாள். அவர்களண்டை வந்தவுடனே தேவகன்னிகைபோன்ற சந்தனராணியையும் தன் உடன்பிறந்தானுடைய உருவத்தின் பிரதிமைபோலவேயிருந்த பாலகனையும் பார்த்து, மிகவும் ஆச்சரியப்பட்டுத் தன் தாயிடத்திற்குச் சென்று, தாயே ! இந்த அதிசயத்தை நான் என்னென்று சொல்வேன் ! அந்தச் சலவைக்கல்லின்மேல் உட்கார்ந்திருக்கிற பெண்ணைப்போல் அழகுள்ள பெண்ணை நான் இதுவரையில் கண்டதில்லை. ஐயோ பாவம் ! அவள் தேகம் அநுகூலமில்லையென்கிறாள் ; அவளை நாமேன் துரத்திவிடவேண்டும் ! எனக்கு மதிப்பிரமைதானோ, இல்லாவிட்டால் இந்தக் கல்லின்மேல் வந்து உட்கார்ந்திருப்பதினாலோ,

அந்தக் குழந்தை என் சகோதரன் பிரதிமைபோலவே என் புத்திக்குத் தோன்றுகின்றது என்று சொன்னாள்.

அதைக்கேட்டு அங்குள்ளவர்களெல்லாம் அந்த அதிசயத்தைப் பார்க்க ஓடிவந்தார்கள். அந்தத் தாயையும் குழந்தையையும் பார்த்தவுடனே யாவரும் அவர்களிடத்தில் மிக்க அன்புற்றவர்களாய்த் தங்களாலியன்றமட்டும் அவர்களுக்குத் துணைசெய்ய ஆரம்பித்தார்கள். சீக்கிரத்திலேயே அவளுக்குச் சரீரமும் சொஸ்தப்பட்டு, மனத்துயரமும் கொஞ்சமாய் நீங்க ஆரம்பித்தது. அவளுடைய குழந்தை முழுதும் சந்தனராஜனுடைய சாயலாயிருந்ததுபற்றிக் கண்டவர்களெல்லாம் அதனிடத்தில் பிரீதியாயிருந்தார்கள். சிலநாளையில் அவளுக்குத் தனியே வசிக்க வீடொன்று ஏற்பட்டது. பின்பு நாள்தோறும் ராத்திரி சந்தனராஜனும் அவ்வீட்டுக்கு ரகசியமாய் வந்து அவளோடு பேசுவதும் குழந்தையோடு விளையாடுவதுமாயிருந்தான். ஆயினும் அவன் தன் நிலையைத் தாய்தந்தையர்களுக்கு இன்னும் தெரிவிக்கவில்லை.

இப்படியிருக்க ஒருநாள் சந்தனராஜனுடைய குழந்தை அரசன் வீட்டில் விநோதமாய் விளையாடிக்கொண்டிருக்கையில், தங்கள் வீட்டுக்கு நாள்தோறும் நடுராத்திரியில் யாரோ ஒருவன் வந்து கொஞ்சநேரம் தன் தாயோடுபேசித் தன்னோடும் விளையாடிவிட்டுப் போகிறான் என்று, சந்தனராஜனுடைய சகோதரியோடு சொல்லிவிட்டது. இன்னது சொல்லலாம், இன்னது சொல்லக்கூடாதென்று குழந்தைகளுக்குத் தெரியுமா? இதுமாத்திரமேயன்றி சிசிவேளையில் அவ்வீட்டில் பேச்சரவம் உண்டாவதையும் அவள் கேட்டிருந்தாள். அதனால், மிகவும் எளியவளென்று வந்து நம்மோடு நேசஞ்செய்துகொண்ட பெண், ஒருவேளை நம்மை மோசஞ்செய்ய வந்திருக்கிறாளோ என்னவோவென்று சந்தேகங்கொண்டு, அவள் அச்செய்தியைத் தன் தாயுடன் சொல்லி, நாளை ராத்திரி நாம் அவ்விடத்திற்குப் போய் இதை அறிந்துகொள்ளவேண்டும் என்றாள்.

அப்படியே மறுநாள் ராத்திரி அவர்கள் அவ்வீட்டு ஓரமாய் ஒருவர்க்கும் தெரியாமல் போய்நின்று எங்கிருந்து எவன் வருகிறானோவென்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். நெடுநேரமளவும் ஒருவரும் வரவில்லை. நிசிவேளையில் சந்தனராஜன் வரக்கண்டு, அவனைப் பிடித்துக்கொண்டார்கள். நேராகவே கையில் அகப்பட்டுக்

கொண்டபிறகு அவன் என்ன செய்யலாம்! தான் ராத்திரி ஒருமணி நேரம் பிழைத்தெழுவது, மற்றப்பொழுதெல்லாம் செத்துக்கிடப்பது முதலான தன் கதைகளையெல்லாம் அவர்களுக்குத் தெரியச் சொன்னான். அவன் அப்படிப் பிழைத்தெழுகிற செய்தியைக் கேட்டு, அவர்களெல்லாம் பேரானந்தமடைந்து, அத்தனைநாள் அந்தச் செய்தியைத் தங்களுக்குத் தெரிவியாமலிருந்ததற்காக அவனை மிகவும் பழித்தார்கள். பின்பு அவன் தான் சந்தனராணியைக் கலியாணஞ் செய்துகொண்ட செய்தியையும் அவர்களுக்குச் சொல்லி, அதுவரையில் அவளை அன்புடன் ஆதரித்ததற்காக அவர்களுக்கு மிக்க வந்தனஞ்செய்தான்.

அன்றுமுதல் அவன் நாள்தோறும் ராத்திரி தன் வீட்டுக்கு வந்து, தாய்தந்தை முதலியவர்களோடு கொஞ்சநேரம் சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டிருந்தான். ஆயினும் அவன் எந்நாளும் இறப்பது மட்டும் தப்புவதில்லை; தேவகன்னிகையின் கழுத்தினின்றும் அவ்வரசனுடைய சந்தனமாலையை மீட்க வழியும் அவர்களுக்குத் தெரியவில்லை. அதற்காக யாவரும் சிலநாள் ஒன்றுந்தோன்றாமல் விசனப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது ஒருநாள் ராத்திரி அரசன் அரசி முதலியவர்களெல்லாம் அரமனையில் அந்தக் குழந்தையை வைத்துக்கொண்டு கொஞ்சிக் குலாவிக்கொண்டிருந்தார்கள். அத்தருணத்தில் அவர்களுடைய தலைக்குமேலே ஏழு தேவகன்னிகைகள் அவர்களுடைய கண்ணுக்குத் தெரியாமலே பறந்துபோனார்கள். சந்தனராஜனுடைய மாலையைப் பறித்துக்கொண்டு போனவளும் அவர்களுள் ஒருத்தி. அவள் அந்தச் சந்தனமாலையை அப்போது கையிலே வைத்துக்கொண்டிருந்தாள்.

தேவலோகத்துப் பெண்கள் அனைவரும் சந்தனராஜனிடத்திலும் அவன் மகனிடத்திலும் அதிக விருப்பமுடையவர்களாய், அடிக்கடி அவ்வரமனைக்கு வந்து அந்தக் குழந்தையோடு விளையாடுவது வழக்கம்; அப்போது அந்தக் குழந்தையும் அவர்களைப் பார்த்துச் சிரித்துக் கையை நீட்டி விளையாடும். மானிடர் கண்ணுக்குத் தேவதைகள் தெரியமாட்டார்களென்றாலும், குழந்தைகளின் கண்ணுக்கு நன்றாய்த் தெரிவார்கள்.

அன்றையதினம் அந்தத் தேவகன்னிகைகள் வந்தகாலத்தில், சந்தனராஜனுடைய புஜத்திலேறி விளையாடிக்கொண்டிருந்த குழந்தை,

தன் தலைக்குமேல் சுற்றி வட்டமிட்ட தேவதைகளுள் ஒருத்தியின் கையில் அந்த மாலை பளபளவென்று மின்னக்கண்டு, கையை நீட்டி அதைப் பிடித்திழுக்க, அதன் கயிறு அறுந்துபோய், மணிகளெல்லாம் பெருகிக் கீழே விழுந்தன. அதுகண்டு அந்தத் தேவதைகளெல்லாம் பயந்து துரிதமாய்ப் போய்விட்டார்கள். உடனே சந்தனராணி அந்த மணிகளையெல்லாம் சேர்த்தெடுத்து நன்றாய் ஒரு சாட்டிலே கோத்துத் தன் கணவனுடைய கழுத்திலே கட்டினாள். அப்போது அவர்களுக்கெல்லாம் உண்டான ஆனந்தத்திற்கு அளவுண்டோ? அவ்வரசனை அவ்வளவுகாலமாய்ப் பிணமாக்கிவைத்த மாயை நீங்கிற்றல்லவா?

அந்தச் செய்தி இரண்டொரு தினங்களில் அந்நாடு முழுதும் பரவ, இவ்வளவுகாலமாய்ச் செத்துக்கிடந்த எங்கள் அரசனை ஒரு பாலகன் பிழைப்பித்தானென்று சொல்லி, யாவரும் தங்கள் தங்கள் வீட்டிலே பெரும்பண்டிகை கொண்டாடினார்கள். சந்தனராஜனுடைய தாய்தந்தைகளும், தங்கள் மகனுக்கு முன் மிகவும் ரகசியமாய்க் கலியாணம் நடந்தது சரியன்று; இப்பூமண்டலத்திலுள்ள ராஜாக்களனைவரையும் வரவழைத்து விசேஷ ஆடம்பரத்துடன் மறுபடியும் விவாகமகோற்சவம் நடப்பிக்கவேண்டுமென்று தீர்மானித்து, தங்கள் மகன் செத்துப் பிழைத்தான்; அவனுடைய கலியாணத்திற்கு யாவரும் விஜயம்செய்யவேண்டுமென்று சொல்லிச் சீமையிலுள்ள ராஜாக்களுக்கெல்லாம் செய்தி அனுப்பினார்கள்.

அந்தக் கலியாணத்திற்கு வந்த பல ராஜாக்களுள் சந்தனராணியின் எழு சகோதரர்களும் அவர்களுடைய மனையாட்டிகளும் வந்தார்கள். அப்போது சந்தனராணி, முன் தன்னிடத்தில் பெரும்பகை பாராட்டிப் பெரும்பழிபோட்டுத் தன்னை நாட்டைவிட்டுத் துரத்தின ஆறு பெண்களுக்கும் உட்கார ஒரு மரக்கட்டையைக் கொடுத்து, தன்னிடத்தில் மிகவும் அன்புற்றிருந்த எழாவது பெண்ணுக்குமட்டும் சிறந்த ரத்தினாசனம் அமைத்துக்கொடுத்தாள்.

அவ்வேழுபேரையும் அழைத்து வந்து, அவரவர் ஆசனத்தில் உட்காரவைத்தபோது மூத்தவர்கள் ஆறுபேரும், இதென்ன? எங்களுக்கெல்லாம் மரக்கட்டையைக் கொடுத்து அவளுக்குமாத்திரம் மரகதாசனங்கொடுத்தீர்கள் என்று சொல்லி முறையிட்டார்கள். அதுகேட்டுச் சந்தனராணி எழுந்து நின்று அந்தச் சபையாரை

நோக்கி, தான் பிறந்து வளர்ந்தது, பின்பு அந்தக் கொடிய பெண்கள் ஆறுபேரும் தன்மேல் வீணான பழிபோட்டுத் தன் சகோதரர்களுக்குத் தன்னிடத்தில் கோபமுண்டாக்கி, நீ சந்தனராஜனைக் கலியாணஞ் செய்துகொள்ளுமளவும் எங்கள் முகத்தில் விழியாதேயென்று சொல்லித் தன்னைத் துரத்திவிட்டது முதலான தன் கதைகளையெல்லாம் சொன்னாள். அதைக் கேட்கவே அந்த ஆறு பெண்களும் பயத்தினாலும் வெட்கத்தினாலும் ஒன்றுந் தோன்றாமல் பிரமித்து ஊமையாக நின்றார்கள். அப்பெண்களுடைய புருஷர்களெல்லாம், அந்தக் கொடியவர்கள் தம்முடைய அருமைத் தங்கைக்கு அநியாயமாய்த் தீங்குசெய்ய நினைத்ததைக் கேட்டு, அவர்களை உடனே கொலைசெய்யக் கட்டளையிட்டார்கள். அன்றையதினமே சந்தனராஜனோடுகூட அவனுடைய மைத்துனர்கள் ஆறுபேருக்கும், விசேஷ வைபவங்களோடு, யாவரும் கண்டு மிகவும் பெருமையாய்க் கொண்டாடக் கலியாணம் நடத்தப்பட்டது. அன்றுமுதல் யாவரும் ஒருகுறையுமின்றி வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.

# 20-வது. மூன்று வல்லவர்கள் வேதாளங்களை, வென்ற கதை

முன் ஒரு தேசத்தில் சிறந்த தனிகன் ஒருவன் இருந்தான். சிறந்த வடிவழகுள்ள பெண் ஒருத்தி அவனுக்கு மனையாளாக வாய்த்தாள். அவனுக்கு அறுபது நாழிகையும் இலக்குவைத்து அம்பு போட்டடிப்பதைவிட வேறு உற்சாகமான காரியம் ஒன்றுங் கிடையாது. அம்புபோடுவதில் அவனைப்பார்க்க வல்லவனே யில்லை. அவன் தினந்தப்பாமல் காலையில் தன் மனையாள் மூக்குத்தி முத்துக்களில் ஒன்றை அவள்மேற் சிறிதும் காயம்படாமல் அடித்துவந்தான். இப்படியிருக்க, ஒருநாள் அவனுடைய மைத்துனன் தன் தங்கையைப் பிறந்த அகத்திற்கு அழைத்துக்கொண்டுபோக வந்தபோது தங்கையைப் பார்த்து, குழந்தாய், நீ என் வெளுத்து இளைத்து விசனமடைந்தவளாயிருக்கிறாய்? உன் நாயகன் உன்னிடத்தில் அன்பாயிருக்கவில்லையா? வேறேதாவது வருத்தமுண்டா? என்று கேட்க, அவள், அப்படிப்பட்ட குறை எனக்கு ஒன்றுமில்லை; தினந்தோறும் என் பிராணநாயகர் என் மூக்குத்தி முத்துக்களில் ஒன்றைக் குறிவைத்து அடித்து விளையாடிக்கொண்டிருக்கிறார்; என்றைய தினம் குறிதப்பி அவர் போடுகிற பாணம் என்மேல் படுமோவென்று எப்போதும் நடுங்கிக்கொண்டேயிருக்கிறேன்; அதனாலேயே எனக்கு உடம்பு இப்படி உருகிப்போகின்றது; அந்தச் செய்கை அவருக்கு விசேஷமாய்க் களிப்புண்டாக்குவதனால் வேண்டாமென்று அதை மறுக்கவுங் கூடவில்லை. அவர் தாமாகவே அதை விட்டுவிடு

வாரானால் எனக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கும் என்று சொன்னாள். அதைக்கேட்டு அவன், அதைப்பற்றி அவர் ஏதாவது உன்னுடன் சொல்வதுண்டோ என, அதற்கு அவள், நாள்தோறும் இவ்வாறு அடித்தவுடனே அவர் தனக்குச் சரியாய் ஒருவருமில்லையென்று சந்தோஷமாய் முகமலர்ந்து என்னண்டை வந்து, என் அருமை நாயகியே! என்னைப்போல வல்லவன் எவனாவது உண்டோ வென்று கேட்பார் ; உங்களவ்வளவு வல்லவன் உலகிலேயே இல்லையெனத் தோன்றுகிறதென்று நான் அவர்க்குப் பதில் சொல்லுவேனென்று சொல்ல, அவள் சகோதரன், இனிமேல் நீ அப்படிச் சொல்லவேண்டாம் ; நாளையதினம் வந்துகேட்டால், உன்னைவிட வல்லவர் பதினாயிரம்பேர் இருக்கிறார்கள் என்று சொல் என்றான். அவனுடைய யோசனைப்படியே அவள் மறுநாள் தன் கணவன் வந்து கேட்டபோது உங்களை விடச் சமர்த்தர்கள் எத்தனையோ பேர்களுண்டு என்றாள். அதைக்கேட்க அவனுக்குப் பொறாமல், ஆனால், அப்படிப்பட்டவர்கள் எங்கிருக்கிறார்களோ போய்ப் பார்த்துவர வேண்டுமென்று பேராவல்கொண்டு அவளை அங்கேயே விட்டு விட்டுச் சீமைசுற்றப் புறப்பட்டான்.

அந்த முத்துக்குறியடிப்போன் வீட்டைவிட்டுப் புறப்பட்டு வெகு தூரம் யாத்திரைசெய்தபிறகு, ஒருநாள் ஒரு ஆற்றங்கரைபோய்ச் சேர்ந்தான். அப்போது அங்கே மற்றொரு வழிப்போக்கன் வந்து உட்கார்ந்து போஜனம் செய்துகொண்டிருந்தான். முத்துக்குறியடிப்போன், அவன் பக்கத்தில்போய் உட்கார்ந்து கொஞ்சநேரம் யோகக்ஷேமம் வினவிக்கொண்டிருந்து பிறகு, நீர் இப்படி யாத்திரைசெய்வதற்குக் காரணமென்ன? எங்கே போகிறீர் என்று கேட்க, அந்தப் பாதைசாரி, நான் ஒரு மல்லன் ; இவ்வுலகத்திற்கெல்லாம் நானொருவனே பலசாலி ; மல்லயுத்தஞ் செய்வதிலும், ஒருவரும் எடுக்கமாட்டாத பெருஞ்சுமையை எடுப்பதிலும் வெகு விநோதச் செய்கைகள் செய்து காட்டுவேன். நமக்குச் சமானம் இவ்வுலகில் வேறொருவருமில்லையென்று நான் நெடுநாளாய் நினைத்து அகங்காரங்கொண்டிருந்தேன். சிலநாளைக்குமுன், வெகு தூரதேசத்தில் என்னைவிட வெகு வல்லவராய் ஒருவரிருப்பதாயும், அவர் தன் மனையாளுக்குச் சிறிதும் காயம்படாமல் அவள் மூக்குத்தி முத்துக்களில் ஒன்றைக் குறிவைத்தடிப்பதாயும் கேள்விப்பட்டு, அப்படி

ஒருவரிருந்தால் அவர் உலகத்தில் யாவரும் அதிசயிக்கத்தக்கவரா யிருக்கவேண்டுமென்று அவரைத் தேடிப்பார்க்கப் புறப்பட்டே னென்றான். அதைக் கேட்டவுடனே முத்துக்குறியடிப்போன், அப்படியா! ஆனால் நீர் உமது யாத்திரையை இவ்வளவோடு நிறுத் தலாம்; நீர் கேள்விப்பட்ட மனிதன் நானே என்று சொல்ல, அந்த மல்லன், ஆயின் உமக்கு என்ன குறை? நீர் யாத்திரையாய் வந்த காரணமென்ன? நீர் எவ்விடத்துக்குப் போகிறீர் என்றான். அதற்கு அவன், நம்மையும்விடச் சமர்த்தன் எங்கேயாவது உண்டோ என் னவோ பார்க்கவேண்டுமென்று புறப்பட்டேனெனவே, அவ்விரு வரும் சகோதரர்கள்போலப் பாவித்துத் தங்களைவிட வல்லவர் எங் கேயாவது இருந்தால் பார்த்துவரலாமென்று அவ்விடம்விட்டுப் பய ணப்பட்டார்கள்.

அவ்விடம்விட்டுச் சிறிதுதூரம் போனபின்பு நான்குபாதையும் ஒன்றுகூடுகிற ஒரு இடத்திலே போய் இறங்கினார்கள். அங்கே இவர்கள் ஒருநாளும் பாராத புதுமனிதன் ஒருவன் முன்னமே வந்து இறங்கியிருந்தான். அந்தத் தேசாந்தரி இவ்விருவரையுங் கண்டு, நீங்கள் யார்? எங்கே போகிறீர்கள் என் நேசர்களே என்று கேட்க, அவர்கள், நாங்களிருவரும் விசேஷ சாமர்த்தியமுடையவர்கள்; எங்களைவிடச் சமர்த்தர் எங்கேயாவது இருந்தால் பார்க்கலாமென்று போய்க்கொண்டிருக்கிறோம். நீர் யாரோ, எங்கிருந்து வருகி றீரோ தெரியவில்லையே? என்றார்கள். அதற்கு அவன், நான் ஒரு உயர்ந்த பண்டிதன்; என்னிடத்தில் சிறந்த புத்தி யுத்தி, ஆலோசனை, ஞாபகசக்தி முதலானவையெல்லாம் ஒன்றாய்க் குடிகொண்டிருக் கின்றன. என்னைவிட விநோதமான மனிதன் இந்த லோகத்தில் எங்குமில்லையென்று உண்மையாய் நம்பியிருந்தேன். இப்போது சிலநாளைக்கு முன்னே வெகு தூரதேசத்தில் அதிகமான சாமர்த்திய முள்ளவர்கள் இருவர் இருக்கிறார்களென்று கேள்விப்பட்டேன். அவர்களுள் ஒருவர் மல்லராம்; அவர் வலிமைக்கு ஈடான வலிமை இவ்வுலகத்திலேயே இல்லையாம். மற்றொருவர் தன் மனையாளு டைய மூக்கிலிருக்கிற மூக்குத்தி முத்துக்களில் ஒன்றைக் குறி வைத்து அடிக்க வல்லவராம். அது உண்மையானால் அறிந்து வரலாம் என்று போய்க்கொண்டிருக்கிறேன் என்று சொல்லவே, அவர்கள், ஓ பண்டிதரே! நீர் கேள்விப்பட்டது உண்மைதான்;

அவ்விருவரும் நாங்களே என்றார்கள். அதைக் கேட்டவுடனே அந்தப் பண்டிதன் பேரானந்தமடைந்து, அப்படியானால் நாம் மூவரும் ஒரேவிதமான எண்ணங்கொண்டு சீமைசுற்றத் தலைப்பட்டவர்கள்; ஆதலால் சகோதரர்கள்போலிருப்போம். உங்கள் தேசம் வெகு தூரத்திலிருக்கிறதல்லவா? என் வீடு சமீபத்திலிருப்பதனால் மூவரும் அங்கே போயிருந்து நமது விசேஷ சாமர்த்தியங்களையெல்லாம் பரீக்ஷைசெய்வோம் வாருங்கள் என்றான். அவ்விருவரும் அதற்குச் சம்மதித்து அந்தப் பண்டிதனுடன் சென்று அவன் வீட்டிற்குப் போயிருந்தார்கள்.

அந்த வீட்டு மடைப்பள்ளியில் 20, 30 பேர் சேர்ந்தாலும் அசைக்கமாளாத இருப்புக்கொப்பரை ஒன்றுண்டு. மல்லன் அன்று ராத்திரி விடியனேரத்திலெழுந்து தன் பராக்கிரமத்தை வெளிப்படுத்துவதற்காக மடைப்பள்ளிக்குச் சென்று அந்தக் கொப்பரையைத் தூக்கித் தோள்மேல் வைத்துக்கொண்டுபோய்ச் சமீபத்திலிருந்த ஆற்றின் நடுவே புதைத்துவிட்டு ஒன்றுமறியாதவன்போல் வந்து முன்போலவே முத்துக்குறியடிப்போன் பக்கத்தில் படுத்துக் கம்பளத்தைப் போர்த்துக்கொண்டான். அப்பொழுது அந்த வீட்டுப் பண்டிதனுடைய மனைவி தன் புருஷனை எழுப்பி, என்னவோ மெதுவாய்க் காலடியோசை கேட்கிறது; எவனோ காலடியோசை தெரியாமலிருக்க வேண்டுமென்று மெதுவாய் நடந்துபோகிறான்; கொஞ்சநேரத்துக்கு முன்னேயும் இப்படியே கேட்டது; ஒருவேளை திருடனாயிருந்தாலும் இருக்கலாம் என்று சொல்லவே, அவன் உடனே எழுந்து முழுதும் சுற்றிப்பார்த்தான். ஒருவரும் தென்படவில்லை. வீட்டிலெல்லாம் வைத்தது வைத்தபடியே இருந்தன. கடைசியாய் அடுப்பங்கரையண்டைபோய்ப் பார்க்கையில் வீட்டுக்காரி, ஐயோ! கொப்பரை எங்கேயென்று கூவினாள். அதைக்கேட்டுப் பண்டிதன் திடுக்கிட்டு, கொப்பரை காணாமற்போயிருக்குமென்று நான் சிறிதும் நினைக்கவேயில்லை. அதை எத்தனைபேர் சேர்ந்தாலும் அசைக்கக்கூடாதே; அதை எடுக்க யமன்தானே வரவேண்டும் என்றான். வீடெங்குந்தேடியும் அந்தக் கொப்பரை அகப்படவில்லை. முழுதும் தேடியபின் மடைப்பள்ளியண்டை ஓர் புதிய அடிச்சுவடு கண்டு, அதைப் பிடித்துக்கொண்டுபோனார்கள். அந்த அடி அவர்களை ஆற்றங்கரையண்டை கொண்டுவிட்டது. அப்புறம் அது

தொடர்ந்துபோகாமையால் பண்டிதன் தன் மனைவியைப் பார்த்து, எவனே மகா பலிஷ்டனான ஒருவனே அதைத் தூக்கிக்கொண்டு வந்து இந்த ஆற்றில் புதைத்திருக்கிறான்; ஏனெனில் ஒரே காலடிதான் தென்படுகிறது. இதற்கு அப்பால் அடிகள் ஒன்றையும் காணேன். அது யாரோ தெரியவில்லையே! நல்லது நமது வீட்டு விருந்தாளிகள் தூங்கிக்கொண்டிருக்கிறார்களா பார்ப்போம்; மல்லன் ஒருவேளை இக்காரியம் செய்தாலும் செய்திருக்கலாம் என்று சொல்லி வீட்டிற்கு வந்து பார்த்தான். அங்கே அவ்விருவரும் தூங்கக் கண்டு, முதலில் முத்துக்குறியடிப்போனை நிதானித்துப் பார்த்தான்; அவனல்லவென்று நன்றாய்த் தெரியவந்தது. பின்பு மல்லனண்டை வந்து சூதுகளெல்லாம் நன்றாய் அறிந்த புத்திசாலியான அந்தப் பண்டிதன் அவனை நக்கிப்பார்த்து அவன்தானென்று அறிந்துகொண்டு, தன் மனைவியை நோக்கிப் புன்சிரிப்புடன், நமது கொப்பரையைத் திருடி ஆற்றிற்புதைத்த திருடர் இதோ இருக்கிறார். இவர் உடம்பில் உள்ளங்கால்முதல் கழுத்துவரையில் உப்புரசம் சிறிதுமில்லாமையால் ஜலத்தில் மூழ்கி வந்து படுத்தவராயே இருக்கவேண்டும்; நல்லது, இச்செய்தியை நான் அறிந்துகொண்டதை இவருக்குக் குறிப்பாய்க் காட்டிக் காலையில் இவரைப் பிரமிக்கச் செய்கிறேன் என்று சொல்லிவிட்டு அவளுடன் படுக்கையறைபோய்ச் சேர்ந்தான்.

காலையில் முத்துக்குறியடிப்போனும் மல்லனும் எழுந்துவரக் கண்டு பண்டிதன், இன்றையதினம் நாம் ஸ்நானம்பண்ண ஆற்றுக்குத்தான் போகவேண்டும், வாருங்கள்; வீட்டில் ஸ்நானம்பண்ணுவதற்காக வைத்திருந்த பாத்திரத்தை ராத்திரி எவனே திருடிக்கொண்டுபோனான் என்றான். அதற்கு மல்லன், அந்தக் கொப்பரை எங்கேபோயிருக்கலாமென்று கேட்க, பண்டிதன், அது எனக்கு எப்படித் தெரியும் என்று சொல்லி, அவர்களை ஆற்றிற்கு அழைத்துக்கொண்டுபோய் நீரில் கொஞ்சநேரம் இங்குமங்கும் திரிந்து பின்பு அந்தப் பாத்திரம் இருக்கும் இடத்திற்குப்போய், நமது கொப்பரை இதோ இருக்கிறதே! இது எவ்வளவுதூரம் ஓடிவந்துவிட்டது பார்த்தீர்களா நேசர்களே என்றான். மல்லன், தான் கொப்பரையைப் புதைத்தவிடத்தைப் பண்டிதன் அறிந்துகொண்டதைக் கண்டு ஆச்சரியப்பட்டு, யார் இங்கே கொண்டுவந்து புதைத்

திருப்பார்கள் என்று ஒன்றும் அறியாதவன்போலக் கேட்டான். அதற்குப் பண்டிதன், ஏன்? நீர்தான் புதைத்திருக்கலாகாதா என்று சொல்லி, ராத்திரி நடந்த செய்தியையெல்லாம் உள்ளபடியே வெளியிட்டான். அவ்விருவர்களுடைய வல்லமையையும் காணவே முத்துக்குறியடிப்போனுக்கு இவர்களுக்குமுன்னே நாம் எவ்வளவென்று தோன்றிற்று. பின்பு மூன்று வல்லவர்களும் வீட்டுக்குப்போய் அன்றையதினத்தை வெகு விநோதமாய்ப் போக்கினார்கள்.

மறுநாள் பண்டிதன் மல்லனைப் பார்த்து, நாம் தினமாய்ப் புசிக்கிற போஜனம் இருக்கட்டும்; இன்றையதினம் ராஜபோஜனமாய்ப் புசிப்போம். ஓ மகா பலிஷ்டரான என் நண்பரே! அதோ குன்றின்மேல் மேய்கின்றனவே, அந்த ஆடுகளில் மிகவும் கொழுத்ததாய்ப் பார்த்து ஒன்றைப் பிடித்துக்கொண்டு வருகிறீரா? அதை இன்றையதினம் உபயோகிக்கலாமென, மல்லன் அப்படியே ஆகட்டுமென்று புறப்பட்டு அந்த ஆட்டுமந்தையண்டை போகையில், ஒரு கேடுகெட்ட வேதாளம் அவன் கருத்தறிந்து, இவன் நம்மை வீட்டுக்குக் கொண்டுபோகும்படிச் செய்தால் அங்கேபோய் வேடிக்கைபண்ணலாம் என்று எண்ணி, நேர்த்தியான ஒரு ஆடாக மாறிற்று. அதைப் பார்க்கவே மல்லன், இதைவிடச் சிறந்தது வேறொன்றும் இல்லையென்று அதை யெடுத்துக் கையால் அணைத்துக்கொண்டு வீட்டுக்குவரப் புறப்பட்டான். அது சாதாரணமான ஆடுகளைப் போல் இராமல் மிகவும் பலமாய் உதைத்து எழும்பி இடிக்க ஆரம்பித்தது. மல்லன் அவைகள் ஒன்றையும் லக்ஷியம் செய்யாமல் உறுதியாய்ப் பிடித்துக்கொண்டு வீடுவந்து சேர்ந்தான். பண்டிதன் அவன் வருவதைப் பார்த்து எதிர்கொண்டு ஓடிவந்தான். மல்லன் இறுக்கிக் கட்டிக்கொண்டிருப்பதனால் அந்த ஆடு கண் மண்டை பிதுங்கிப்போய் அதிக பயங்கரமாயிருந்தது. அதைப் பார்த்துப் பண்டிதன், இது ஆடன்று; ஒரு வேதாளம் என்று உடனே அறிந்துகொண்டு, நாம் இதைப் பார்த்துப் பயந்ததாய்க் காட்டினால், இந்த வேதாளம் உள்ளே புகுந்து யாவரையும் கொன்று தின்றுவிடும்; ஆதலால் இதைப் பயமுறுத்தவேண்டும் என்று எண்ணி, தைரியமாய் உரத்த குரலோடு, ஆகா; மல்லரே! மல்லரே!! மதிகெட்ட நேசரே! என்ன காரியஞ் செய்தீர்! கொழுத்ததாய்ப் பார்த்து ஒரு ஆடல்லவா பிடித்துக்கொண்டுவரச் சொன்னேன்! அப்படியிருக்க,

உபயோகமற்ற ஒரு சிறு வேதாளத்தைப் பிடித்துவந்தீரே! ஆடுகள் அகப்படாவிட்டால் இன்னும் ஒரு பத்து வேதாளமாவது பிடித்து வரலாகாதா? இங்கே யாவரும் பசியால் தவிக்கிறார்களே; இது என் பிள்ளைகளின் கடைவாய்ப் பல்லுக்காவது காணுமா? அவர்கள் ஒவ்வொருவரும் கொழுத்துப்பருத்த ஒவ்வொரு வேதாளந் தின்பார்களே; என் மனைவி மூன்று தின்பாள், நான் பன்னிரண்டு தின்பேனே. இதை நாம் எப்படிப் பங்கிடுகிறது என்று சொல்லவே, மல்லன் இதென்னவென்று திகைத்துப்போனான். வேதாளம் மிகவும் பயமடைந்து முழங்காலிட்டு நகர்ந்து வந்து, ஓ என் பிராணநாதர்களே! என்னைத் தின்றுவிடாமல் பிழைப்பூட்டுங்கள்; உங்களுக்கு இவ்வுலகத்திலுள்ள பொருள் எது வேண்டுமானாலும் கொண்டுவந்து கொடுக்கிறேன்; கொஞ்சம் வெளியே போவதற்கு மாத்திரம் எனக்குச் செலவுகொடுப்பீர்களானால் உடனே அளவற்ற ஐசுவரியமும் கொண்டுவந்து உங்கள் வீட்டில் நிரப்புகிறேன். என்னைத் தின்னாமலிருக்கிறீர்களா! என்னை விட்டுவிடுகிறீர்களா! என்று பலவாறு வேண்டிக்கொண்டது. அதற்குப் பண்டிதன், அட பேதையே! அப்படி எங்கேயாவது நடக்குமா! இப்போது நான் விட்டுவிடுவேனானால் பின்பு நீ செய்யப்போகிறது எனக்குத் தெரியாதா! இப்போது தப்பித்துக்கொண்டாயானால் மறுபடி நீ இந்தத் திக்கு நோக்குவாயா! எங்களுக்கு வச்சிரமும் வேண்டாம்; வைடூரியமும் வேண்டாம். நாளைவருகிற பலாப்பழத்தைவிட இன்றுவருகிற களாப்பழம் சிறந்ததென்று கேள்விப்பட்டதில்லையா? நாங்கள் பசியால் தவிக்கிறோம். இந்த வேளைக்கு நல்லதாய்ப் போஜனம் அகப்பட்டால் அதைவிட மேலானதொன்றுமில்லை. உன்னை விடமாட்டோம் என்றான். அவன் அவ்வளவு தைரியத்துடன் பயமின்றி சாதாரணமாய்ப் பேசவே, அவன் சொல்வதெல்லாம் மெய்யென்று அறிந்து அந்தவேதாளம் அதிக வணக்கத்துடன், ஓ சுவாமி! அப்படியில்லை; சத்தியமாய்ச் சொல்லுகிறேன்: அடியேனுக்கு வெளியே போகமாத்திரம் சிறிதுநேரம் செலவுகொடுங்கள்; உங்களுக்கு இஷ்டமான பொருள்கள் எல்லாவற்றையும் கொண்டு அவசியம் உடனே ஓடிவருகிறேன் என்று வாக்குத்தத்தஞ்செய்தது. பிறகு பண்டிதன் அதிக கம்பீரத்துடன், நல்லது நீ போய்வா; நீ வாக்குத்தத்தஞ்செய்தபடி அளவற்ற பொருள்களோடு உடனே திரும்பிவரா

மற் போவாயானால், உன்னை எப்படியாவது நாங்கள் கண்டுபிடித்துக் கொன்றுபோடுவோம்; நீயாகட்டும், உன் இனத்தாராகட்டும் ஒருவரும் எங்களுக்கு ஈடல்ல என்று சொல்லி அதற்குப் போகச் செலவுகொடுத்தான்.

மல்லனுடைய வலிமையையும், பண்டிதனுக்கு வேதாள போஜனத்திலிருந்த அதிக விருப்பத்தையும் பார்க்கவே அந்த வேதாளம், நாம் இவர் கையினின்றுந் தப்பித்துக்கொண்டது நமது அதிஷ்ட விசேஷந்தான் என்று சந்தோஷமடைந்து, துரிதமாய்த் தன் இருப்பிடத்திற்கு ஓடி, தங்கள் நிதியிலிருந்து விலையற்ற பொருள்களை விசேஷமாய் வாரிக்கொண்டு தன் உயிரைத் தப்புவித்துக்கொள்ளும்படித் தன் சக்திக்கு அதிகமான வேகத்துடன் பண்டிதன் வீட்டிற்குத் திரும்பிவரும்போது வழியில் அதற்கு இனமான வேதாளங்கள் அநேகம் அதைக் கண்டு மிகக்கோபங்கொண்டு, நமது பொருள்களையெல்லாம் எங்கே நீ வாரிக்கொண்டுபோகிறாய் என்று கேட்க, அந்த வேதாளம், என் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளக் கொண்டு போகிறேன்; நான் உல்லாசமாய்ச் சீமை சுற்றிக்கொண்டிருக்கையில் ஒருநாள், அதி பயங்கரமான சில பலிஷ்டர்கள் என்னைப் பிடித்துக்கொண்டு, பொருள்கொண்டுவந்து கொடாவிட்டால் என்னைத் தின்றுபோடுவதாய்ப் பயமுறுத்தினார்கள் என்று உத்தாஞ் சொல்லிற்று. மற்றவைகள் அதைக் கேட்டு, அப்படியானால் நாங்கள் அவர்களைப் பார்க்கவேண்டும்; வேதாளங்களை மனிதர்கள் தின்பார்கள் என்று நாங்கள் இதுவரையில் எங்கும் கேள்விப்பட்டதில்லையென்று சொன்னதற்கு, அந்த வேதாளம், அவர்கள் சாதாரணமான மனிதர்களைப்போலல்ல; உலகத்தில் அவர்களைப்போலப் பயங்கரமான மனிதர்களை நான் எங்குங் கண்டதில்லை. சமயம் நேர்ந்தால் அவர்கள் நமது ராஜாவைக்கூடப் பட்சித்துவிடுவார்கள். அவர்களுள் ஒருவர், தாம் நாள்தோறும் பன்னிரண்டு வேதாளங்கள் தின்பதாயும், தம்மனையாள் மூன்று தின்பதாயும், தம் மக்கள் ஒவ்வொன்று தின்பதாயும் சொன்னதொன்று சொல்லவே, அதைத் தடுக்காமல் அவை அன்றையதினம் அதற்குப் போக வழிவிட்டன. அந்தச் செய்திகேட்டு வேதாளராஜனும், நாளையதினம் இதைப்பற்றிச் சபைகூடி விசாரிக்கவேண்டும்; அத்தருணத்தில் அவசியம் மனிதனுக்கு ஊழியஞ்செய்கிற அந்த வேதாளமும் வந்து சேரவேண்டு

மென்று கட்டளையிட, அப்படியே ஆகட்டுமென்று அந்தச் சிறு வேதாளம் செலவுபெற்றுக்கொண்டு பண்டிதன் வீடுவந்து சேர்ந்தது.

அந்தப் பொருள்களை எடுத்துக்கொண்டு வேதாளம் திரும்பிப் பண்டிதன் வீடுவந்துசேர மூன்றுநாளாயிற்று. அதைப் பார்க்கவே பண்டிதன், மிகவும் கோபங்கொண்டவன்போலக் கண் சிவந்து, நீ திரும்பி வருவதற்கு என் இத்தனைநாள்? கூடியசீக்கிரத்தில் வருவதாய்ச்சொல்லிப்போனுயல்லவா ? என்று கேட்க, அது ஸ்வாமி! நான் என்ன செய்வேன் ; நான் இப்பொருள்களை வாரிக்கொண்டு வருவதைக் கண்டு பல வேதாளம் வழிமடக்கி வெகுதூரம் தர்க்கம்பேசி என்னை விடவேமாட்டோமென்று வெகுநேரம் மறுத்தன; உங்களைப்பற்றி நான் என்ன சொல்லியும் அவை நம்பவில்லை ; வெகுநேரம் அவைகளோடு போராடித் தப்பித்துக்கொண்டு வந்தேன். இதுவுமல்லாமல் மறுபடி நான் போய்ச் சேர்ந்தவுடன் உங்களுக்குப் பணிவிடை செய்வதைப்பற்றி விசாரணை நடக்கப்போகிறது என்று வணக்கத்துடன் விண்ணப்பஞ்செய்தது. அதுகேட்டுப் பண்டிதன், உங்கள் ராஜசபை எங்கே என, அந்த வேதாளம், அது இவ்விடத்திலில்லை ; வெகுதூரத்தில் ஒரு பெருங்காட்டுமத்தியில் இருக்கிறதென்று சொல்லவே, அவன், நாங்கள் அந்த விடத்தையும், உங்கள் ராஜாவையும், அவன் சபையையும் பார்க்கவேண்டும் ; உங்கள் ராஜாவுக்குக் கூட நாங்கள்தாம் ராஜாக்கள் ; யாவரும் எங்களுக்குக் கீழ்ப்பட்டவர்கள்தாம் ; ஆதலால் நீ போகும்போது எங்களையும் அவ்விடத்திற்கு அழைத்துக்கொண்டு போகவேண்டும் ; இல்லாவிட்டால் நீங்கள் எங்கள் கோபத்திற்கு ஆளாவீர்கள் என்றான். அவன் வெகு துணிச்சலாய்ப் பேசுகிற பேச்சுகளைக் கேட்டு வேதாளம் பயந்து, நல்லது, இதோ தங்கள் கட்டளைப்படியே காத்திருக்கிறேன் ; என் தோள் மேல் ஏறிக்கொண்டால் உங்களை அவ்விடம் கொண்டுசேர்ப்பேன் என்றது.

வேதாளங்கள் சபைகூடுகிற விநோதத்தைப் பார்த்துவரும்படி பண்டிதன், மல்லன், முத்துக்குறியடிப்போன் ஆகிய மூவரும் அதின் தோளில் ஏறிக்கொண்டார்கள். வேதாளம் அவர்களைத் தூக்கிக்கொண்டு வெகு வேகத்துடன் ஆகாயமார்க்கமாய்ப் பறந்து தாங்கள் சபைகூடுமிடத்திற்குப் போய், வேதாளராஜனுடைய சிங்கா

சனத்திற்கு நேரே உயர ஒரு மரக்கிளையில் விட்டது. கொஞ்ச நேரத்தில் கலகலவென்று ஒரு இரைச்சலுண்டாயிற்று. உடனே அநேகமாயிரம் வேதாளங்கள் அந்தச் சிங்காசனத்தைச் சுற்றிவந்து கண்ணுக்கெட்டின தூரம் நெருங்கிப்போயின. மரத்தின்மேல் மனிதர்கள் வந்து உட்கார்ந்திருப்பதை ஒன்றுவது கவனிக்கவில்லை.

சபைகூடினவுடனே வேதாளசக்கரவர்த்தி சிங்காசனத்தில் வந்து உட்கார்ந்து, தமது பொருளை மனிதருக்குக் கொண்டுபோய்க் கொடுத்த குற்றவாளியைச் சபைமுன்னே பிடித்துவரும்படிக் கட்டளையிட்டது. அக்கட்டளைப்படியே மற்றவையெல்லாம் அந்த வேதாளத்தைப் பிடித்துக்கொண்டுபோய்ச் சபைமுன்னே நிறுத்தி வைத்தன. விசாரணைசெய்ததில் அது செய்தது குற்றமேயென்று நிரூபணமாயிற்று. ஆயினும் அந்த வேதாளம் வெகு தைரியமாய், எங்கள் மகாராஜனே! ஒரு விண்ணப்பமுண்டு. திரவியங் கொண்டு வரும்படி என்னை நிர்ப்பந்தஞ்செய்தவர்கள் சாதாரணமான மனிதர்களல்ல; மிகவும் வல்லவர்கள்; மூவுலகத்தையும் பயமுறுத்தத்தக்கவர்கள்; அவர்கள் வேதாளங்களைத் தின்பார்களாம்; நீங்கள் எங்களை ஆளுவதுபோல், உங்களையும் ஸ்வதந்திராதிகாரமாய் அவர்கள் ஆளுகிறார்களாம்; என்னைப் பிடித்துக்கொண்டு விடவேமாட்டோம் என்றார்கள். அவர்களுள் ஒருவர் நாள்தோறும் பன்னிரண்டு வேதாளம் தின்பாராம். அவர் மனைவி மூன்று தின்பாளாம்; அவர் பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேதாளம் தின்பார்களாம்; ஆதலால் அவர்களுக்கு நான் ஊழியஞ்செய்யும்படியாயிற்று; என்மேல் சிறிதும் குற்றமில்லை என்றது.

அதைக் கேட்டு அந்த வேதாளசக்கரவர்த்தி, அப்படியாயின் அவர்களை நாங்கள் பார்க்கவேண்டும்; பார்த்தபிறகுதான் எங்களுக்கு உண்மைப்படும்; ஆயின்—என்று பேசுகிற தருணத்தில் அம்மூவரும் உட்கார்ந்திருந்த மரக்கிளை ஒடிந்து அவர்கள் ஒருவர்பின் ஒருவராய் வேதாளராஜனுடைய தலைமேல் விழுந்தார்கள். ஆகாயத்திலிருந்து தான் குதித்தார்களோவென்று அங்கிருந்த பூதங்களெல்லாம் நடுநடுங்கிப்போகவே, இதுதான் தருணமென்று முதலில் வீழ்ந்தவன் தன் வலிமையெல்லாங்கொண்டு அந்த வேதாளராஜனைக் குத்தி இடித்துக் கட்டி நசுக்கினான். அவன் பின்னே வீழ்ந்த முத்துக்குறியடிப்போனும் அப்படியே செய்தான். அதுகண்டு அப்போது வீழ்ந்துகொண்

டிருந்த பண்டிதன், ஆம் அப்படித்தான்; ஆம் அப்படித்தான்; முதலில் இதைத் தின்றுபோட்டால் மற்ற வேதாளங்களைப் பிறகு சுலபமாய்த் தின்னலாம் என்றான். அதைக் கேட்கவே அங்கிருந்தவையெல்லாம் பயந்து ஒன்று தப்பாமல் ஓடிப்போயின. அவைகளின் ராஜாமாத்திரம் தனியே அகப்பட்டுக்கொள்ளவே அது, ஓ மகாப்பிரபுக்களே! என் உயிரைமாத்திரம் தப்பவிடுங்கள்! என்னைப் பிழைப்பூட்டுங்கள்! நான் கேள்விப்பட்டதெல்லாம் உண்மையே; உங்களுக்கு எது வேண்டுமானாலும் தருவேன் என்று கூவி முறையிட்டது. பண்டிதன், அது கூடாது; கூடாது, நேசர்களே! நீங்களேன் சும்மாவிருக்கிறீர்கள், உங்கள் வேலையைப் பாருங்கள் என்றான். அவர்கள் முன்னிலும் பலமாய் அதை இடிக்க ஆரம்பித்தார்கள். தன் உயிரைமாத்திரம் தப்புவிக்கும்படி வேதாளம் எவ்வளவு நேரம் வேண்டியும் அவர்கள், மாட்டோம் என்று தங்களுக்குக் கைகால் ஓய்ந்துபோய் அந்த வேதாளமும் ஒருவழியுந் தோன்றாமல் பிரமித்துப்போகுமளவும் அதைப் புடைத்துக்கொண்டிருந்தார்கள். அந்த வேதாளம் சர்வசத்தும் ஒடுங்கி ஒருவழியுந் தோன்றாமல் வெருளவெருள விழிப்பது கண்டு அந்தப் பண்டிதன், உன்னை எப்படி விட்டுவிடுகிறது? இக்காட்டில் பொருளிருப்பதனால் எங்களுக்கு என்ன பயன்? இவைகளையெல்லாம் எங்கள் வீட்டில் கொண்டு சேர்ப்பாயானால் உன்னைத் தின்னாமல் விட்டுவிடுவோம். இப்போது நாங்கள் மிகவும் பசித்திருப்பதனால் எங்களுக்கு வேறு உணவாவது கொடுக்கவேண்டும் என்று சொன்னான்.

அந்தப் பேச்சைக் கேட்கவே வேதாளம் வெகு சந்தோஷமடைந்து, அப்படியே ஆகட்டும், இதோ காத்திருக்கிறேன் என்று ஓடிப்போன தன் பரிவாரங்களை அழைத்து, அந்த மூன்று பலிஷ்டர்களையும் எடுத்துக்கொண்டு வேண்டுமளவு தங்கள் நிதிகளையும் வாரிக்கொண்டு அவர்களைப் பின்தொடர்ந்துபோகும்படிக் கட்டளையிட்டது. சகலமான வேதாளகணங்களும் நான் முன்னே நான் முன்னே என்று அந்த மூன்று வல்லவர்களுக்கு ஒத்தாசைசெய்ய ஆவலோடு மேல்விழுந்து ஓடிவந்தன. அவ்வளவிலும் பண்டிதன் அந்த வேதாளராஜனை நோக்கி, நீ இப்போதேபோய்விடலாமென்று நினைக்கிறாயோ? இந்த வேலையெல்லாம் நிறைவேற்றியாகிறவரையில் உன்னை நாங்கள் விடமாட்டோமென்றான்.

அந்தக் கட்டளைப்படியே வேதாளகணங்களெல்லாம் ஓடிவந்து, அந்த மூன்று வல்லவர்களையும் பண்டிதன் வீட்டிற் கொண்டுசேர்த்து, அந்த வீட்டில் சகலவித சம்பத்துக்களையும் கொண்டுபோய்க் கொட்டி நிறைத்துவிட்டு அவர்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டு பறந்து போயின. இவ்வாறு மகா தைரியசாலியும் மேதாவியுமான அந்தப் பண்டிதன், தான் அந்த வேதாளத்திற்குச் சிறிதும் பயப்படாதவன் போலப் பாவித்து, வேதாளத்தின் கையில் அகப்பட்டுக்கொள்ளாமல் தன் குடும்பத்தையெல்லாம் காத்ததுமன்றி, பூதகணங்களையெல்லாம் தனக்குக் கீழ்ப்படுத்தித் தன் வீட்டுக்கு அபாரமான சம்பத்துக்களும் கொண்டுசேர்த்தான். பின்பு அந்தப் பண்டிதன் வேதாளங்கொடுத்த விலையில்லாப் பொருள்களை மூன்றுபங்காகப் பிரித்து, தானொன்று எடுத்துக்கொண்டு, தன் தோழர்களுள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருபங்கு கொடுத்து, அவர்களை அனுப்ப மனமில்லாமலே மிகவும் பரிவோடு அவரவர் தேசத்திற்கு அனுப்பினான்.

முத்துக்குறியடிப்போன் அளவற்ற ஐசுவரியத்தோடு மிகவும் சந்தோஷமாய் அவ்விடம்விட்டுப் புறப்பட்டுத் தன் வீட்டுக்கு வந்து, தான் கொண்டுவந்த பொருள்களையெல்லாம் தன் மனைவிகையில் கொடுத்து, தான் யாத்திரைபோன செய்திகளையெல்லாம் ஒன்று விடாமல் சொல்லி, நீ சொன்னது உண்மைதான்; என்னைவிடச் சமர்த்தர்கள் எத்தனையோபேர்கள் உண்டு; மல்லனும் பண்டிதனும் இல்லாவிட்டால் இந்தப் பொருள்களைக் கொண்டுவர என்றால் ஒருநாளும் முடியாது என்றான். அன்றுமுதல் அவன் தன் மனையாட்டியின் நாசியிலிருக்கிற முத்தைக் குறிவைத்து அடிப்பதை விட்டுவிட்டான். அதுகண்டு அவளும் அதிக சந்தோஷமடைந்தாள். பின்பு அவர்கள் ஒரு குறையுமில்லாமல் நெடுநாள் சுகமாக வாழ்ந்திருந்தார்கள்.

## 21-வது. பூமகளென்னும் பெண்மணி

வெகுகாலத்திற்குமுன்னே ஒரு தேசத்தில் ஒரு ராஜாவும் ராணியுமிருந்தார்கள். அவர்களுக்கு ஒரே ஒரு மகள். அந்தப் பெண் பூரண சந்திரன்போன்ற முகமும் தங்கக்கொடிபோன்ற மேனியுமுடையவளாய்ப் பூமகளென்று பெயர்பெற்றிருந்தாள். அந்தப் பெண் பிறந்ததினத்தில் அரசன் உலகத்திலுள்ள பண்டிதர்கள் அனைவரையும் வரவழைத்து அப்பெண்ணின் ஜாதகத்தைப் பார்த்து அவள் அதிஷ்டம் இப்படிப்பட்டதென்று சொல்லும்படிக் கேட்க, அவர்கள், இவளவ்வளவு அதிஷ்டசாலி உலகத்தில் ஒருவரும் இல்லை; இவள் மிகுந்த செல்வமும் செல்வாக்குமாய் வாழ்வாள் என்று சொன்னார்கள். அவர்கள் ஜாதகம் பார்த்துச் சொன்னது பொய்யன்று. மிகச் சிறுபிராயந் தொடங்கியே அந்தப் பெண் நற்குண நற்செய்கையுடையவளாய் அனைவரும் நல்ல பெண் என்று கொண்டாடும்படி நடந்துவந்தாள். மேலும் அவள் பேசத்தொடங்கின நாள்முதல், பேச வாய்திறக்கும்போதெல்லாம் அவள் வாயினின்றும் முத்து மாணிக்கம் முதலிய சிறந்த ரத்தினங்கள் கலகலவென்று சொரியத் தலைப்பட்டன. அவள் நடந்துபோவாளானால் போகிறவழியில் இருபக்கமும் விலையில்லா மணிகளும் மாணிக்கங்களும் பதித்த சுவர்ணாபரணங்கள் குப்பல்குப்பலாய்க் குவியும். இதனாலேயே அந்தப் பெண்ணுக்குத் தந்தையான அரசன் உலகத்தில் தனக்கு ஈடொருவரும் இல்லையென்று சொல்லும்படி அவ்வளவு தனவானானான். அவள் எழுந்து ஓடி நடந்தாலும் அவ்விடத்தில் கலரத்தினம் குவிகிறதென்றால், அவளைப் பெற்றவனுடைய பாக்கியம் அவளைவிட

வேறென்ன? இவ்வளவு மேன்மையோடுகூடப் பூமகள் பிறக்கும்போதே சிறந்த மணிவடமொன்று கழுத்தில் அணிந்தபடியே வந்து பிறந்தாள். அதுகண்டு அப்பெண்ணரசியின் பெற்றோர் பல சோதிட சாஸ்திரிகளை வரவழைத்து அதன் வரலாறு என்னவென்று விசாரிக்க, அவர்கள் அதைப் பார்த்து, இக்குழந்தை உலகத்திலுள்ள மற்றக் குழந்தைகளைப்போலச் சாதாரணமான குழந்தையன்று; இதன் கழுத்தில் கூடவே உண்டாயிருக்கின்ற மணிவடந்தான் இக்குழந்தைக்குப் பிராணாதாரம்; அதை வெகு ஜாக்கிரதையாய்க் காப்பாற்றுங்கள்; அதை வாங்கி வேறே யாராவது தரித்துக்கொண்டால் உடனே இப்பெண் இறந்துபோகவேண்டுவதுதான் என்று சொன்னார்கள். அதைக் கேட்டு ராணி அந்த மணிமாலையைச் சுலபமாய்க் கழற்றக் கூடாதபடிப் பெண்கழுத்தில் உறுதியாய்க் கட்டி வெகு கருத்தாய்க் காத்துவந்தாள். பூமகளுக்குக் கொஞ்சம் புத்திதெரிந்து சாதாரணமாய்ப் பேசத் திறமையுண்டானவுடன் அந்த மணிவடத்தின் மகிமையை அவளுடனும் சொல்லி எக்காலத்திலும் அதைக் கழற்றாமல் அதனிடத்தில் வெகு கருத்தாயிருக்க எச்சரிக்கைசெய்தாள்.

பின்வரும் கதை நடக்க ஆரம்பிக்கிறகாலத்தில் அந்தப் பெண்ணுக்குப் பதினான்கு வயது. அதுவரையிலும் அவளுக்குக் கலியாணமாகவில்லை. ஏனெனில், அந்தப் பெண்ணுக்குத்தானே கலியாணஞ் செய்துகொள்ளவேண்டுமென்று ஆசையுண்டாகி அவளே தனக்கு இஷ்டமான புருஷன் ஒருவனை வரித்துக்கொள்ளவேண்டுமேயொழிய, அதற்குமுன் நாம் ஒன்றும் செய்யக்கூடாதென்று ராஜாவும் ராணியும் தீர்மானித்திருந்தார்கள். பூமகளுடைய செல்வத்தைக் கேட்டு அநேகம் ராஜாக்களும் பிரபுக்களும் அவளைக் கலியாணஞ் செய்துகொள்ளவேண்டுமென்று அதற்காகப் பலவிதமாய் முயன்றார்கள்; அவள் ஒருவரையும் அங்கீகரிக்கவில்லை.

இப்படியிருக்கப் பூமகளின் பிறந்தநாள் பண்டிகை கொண்டாடும்போது ஒருதடவை அரசன் அப்பெண்ணுக்கு வெகு அழகாய் நவரத்தினங்கள் இழைத்த சுவர்ணபாதரக்ஷை ஒரு ஜதை செய்து கொடுத்திருந்தான். அவை ஒவ்வொன்றும் இருபதுலக்ஷம் ரூபாய் விலைமதிக்கத்தக்கதாயிருந்தன. அவ்வளவு விலைபெற்ற பாதரக்ஷை இவ்வுலகத்தில் ஒருவர்க்கும் கிடையாது. பூமகள் அந்தப்பாதரக்ஷைகளை வெகு அருமையாய் வைத்துக்கொண்டிருந்தாள். அவள் நடக்

கிறபொழுதெல்லாம் தன் மெல்லிய பாதங்கள் நோவாதபடி அதைத் தரித்துக்கொண்டுபோவது வழக்கம். ஒருநாள் அவள் அந்தப் பட்டணம் கட்டப்பட்டிருக்கின்ற மலைமேல் ஒரு பக்கத்தில் தோழிகளோடுகூட விநோதமாய்ப் பூபறித்து விளையாடுகையில், கால்தடுக்கி ஒரு கால் பாதரக்ஷை நழுவிக் கீழே வெகுதூரத்துக்கப்பால் தரையில் ஒரு பெருங்காட்டிலேபோய் வீழ்ந்தது. உடனே அந்தப் பெண் பல வேலையாட்களைவிட்டு அதைத் தேடக் கட்டளையிட்டாள். எவ்வளவு நேரம் தேடியும் அது அகப்படவில்லை. பின்பு இச்செய்தி அரசனுக்குத் தெரிய, அவன், அந்தப் பாதரக்ஷையைத் தேடி எடுத்துக் கொடுப்பவர்க்கு விசேஷ வெகுமதி செய்வதாய், அப்பட்டணம் முழுதும் பறையறைவித்தான். அன்றுமுதல் பலபேர் பலவிடங்களிலும் தேட ஆரம்பித்தார்கள். எங்கெங்கே எத்தனைநாள் தேடியும் அது ஒருவர் கையிலும் அகப்படவில்லை.

இது நடந்த சிலநாளைக்குப்பிறகு அம்மலையின்கீழ் இருக்கின்ற ஒரு தேசத்தரசனுடைய மூத்தகுமாரன் அம்மலையைச்சார்ந்த ஒரு காட்டுக்கு வேட்டையாடவந்தான். அந்தக் காட்டிலேதான் பூமகளுடைய பாதரக்ஷை விழுந்து கிடக்கின்றது. ராஜகுமாரன் வேட்டையாடுகையில் அந்தப் பாதரக்ஷை விழுந்துகிடப்பதைக் கண்டு அதை வீட்டுக்குக் கொண்டுபோய்த் தன் தாய்க்குக் காட்டி, அம்மா, இவ்வழகிய பொற்பாதரக்ஷையைத் தரித்துக்கொண்டிருந்த பாதம் எத்தன்மையதாயிருக்கவேண்டும் என்று சொல்ல, அவள் அதைப் பார்த்து, இது லோகோத்தரமான சௌந்தரியமுள்ள ஒரு சீமாட்டியினுடையதாயிருக்கவேண்டும்; சந்தேகமில்லை. என்ன குறைந்தாலும் அவளழகு அவள் பாதரக்ஷையின் அழகுக்குக் குறைந்திராது. இப்படிப்பட்ட பெண் ஒருத்தி உனக்கு மனையாளாக வாய்த்தால் வெகு சந்தோஷமாயிருக்குமென்றாள். பின்பு அவர்கள் அந்தப் பாதரக்ஷை இன்னாருடையதென்று தெரிந்துகொண்டு வரும்படியாக நாலு தேசங்களுக்கும் தூது அனுப்பினார்கள். என்ன தேடியும் அந்தப் பெண் இருக்குமிடம் அகப்படவில்லை. இப்படியிருக்கச் சிலமாதங்கள் கழித்தபிறகு யாரோ வழிப்போக்கர்கள், வெகுதூரத்துக்கு அப்பால் மிகப் பெரிதான ஒரு பர்வதத்தின்மேல் ஒரு பட்டணமிருக்கிறதென்றும், அப்பட்டணத்தரசனுக்கு மகா ரூபவதியான கன்னிகையொருத்தி இருக்கிறாளென்றும், அப்பெண்மணியின் சிறந்த பாத

ரக்ஷையொன்று காணாமற்போகவே, அதைத் தேடி எடுத்துக் கொடுப்பவருக்கு விசேஷமாய் வெகுமதி செய்வதாகப் பிரசித்தப்படுத்தியிருக்கிறார்களென்றும் அப்பட்டணத்திற்குச் செய்தி கொண்டுவந்தார்கள். அந்தச் சமாசாரத்தைக் கேட்டு அப்பட்டணத்தாரெல்லாம் நம்முடைய ராஜகுமாரன் கண்டெடுத்து வந்தது அப்பெண்மணியின் பாதரக்ஷைதானென்று நிச்சயித்தார்கள்.

அவ்வதிசயச் செய்தியைக் கேட்டதும் அப்பட்டணத்து ராணி தன் மகனைப் பார்த்து, குழந்தாய்! நீ தேடி எடுத்துவந்த பாதரக்ஷை அந்தப் பெருமலைமேல் வசிக்கும் அரசன் மகளுடையதேயல்லாமல் மற்றெவருடையதுமல்ல. நான் சொல்லுகிறபடி கேள்: இந்தப் பாதரக்ஷையைக் கொண்டுபோய் அவ்வரசனிடத்திற் கொடு; அவன் பிரசித்தப்படுத்தியிருக்கிறபடி உனக்கு ஏதாவது ஒரு வெகுமதி கொடுக்கவருவான்; அவன் மகள்தவிர மற்றொன்றும் உனக்கு வேண்டாமென்று சொல்; இதுதான் அவள் உனக்குப் பெண்டாகக் கிடைக்கத்தகுந்த வழியென்று சொன்னாள்.

அந்த ராஜகுமாரனும் தாய் சொன்னபடியே செய்தான். அவன் உடனே புறப்பட்டு வெகுதூரம் யாத்திரைசெய்து அம்மலையரசன் அரமனை போய்ச் சேர்ந்து, ராஜாவைக் கண்டு தான் கொண்டுபோன பாதரக்ஷையை அவனுக்குக் காட்டி, மகாப்பிரபுவே! நான் உங்கள் மகளுடைய பாதரக்ஷையை இதோ கண்டெடுத்து வந்தேன்; இதற்காக எனக்குத் தகுந்த வெகுமதி செய்யவேண்டுமென்று கேட்க, அவ்வரசன், உனக்கு யானைகள் வேண்டுமா? குதிரைகள் வேண்டுமா? ஆபரணங்கள் வேண்டுமா? மணிமாணிக்கங்கள் வேண்டுமா? எது வேண்டுமென்றான். அதற்கு அந்தக் குமாரன், மகாராஜனே! நான் இம்மலையின் கீழிருக்கின்ற ஒரு பெரிய தேசத்தரசனுடைய குமாரன்; நான் இம்மலைச்சாரலில் வந்து வேட்டையாடும்போது அங்கே இந்தப் பாதரக்ஷையைக் கண்டு இது உம்மகளுடையதென்று தெரிந்து வெகுநாள் வருத்தப்பட்டு யாத்திரைசெய்து இதைத் தங்களிடத்திற் கொடுக்கவந்தேன். தங்கள் மகளுடைய செந்தாமரைக் கையல்லாது மற்றெந்த வெகுமதியும் இதற்காக எனக்கு வேண்டாம்; தங்களுக்கு மருமகனாகவேண்டுமென்றே நான் கோருகிறேனென, அந்த ராஜா, அது ஒன்றுமாத்திரந்தான் என்றால் முடியாத காரியம்; ஏனெனில் அவளுடைய இஷ்டமில்லாமல் ஒருவரையும் கலியாண

ணஞ் செய்துகொள்ளும்படி ; அவளைப் பலவந்தப்படுத்தக்கூடா தென்று நான் தீர்மானம்பண்ணியிருக்கிறேன். இதுமாத்திரம் அந்தக் குழந்தையின் இஷ்டப்படியே நடக்கவேண்டும் ; அவள் உன் னைக் கலியாணஞ்செய்துகொள்ளக் கருதினுல் அப்படியே நடத்த நான் சித்தனுய்க் காத்திருக்கிறேன். அவள் இஷ்டமல்லவோ இதற்கு முக்கியமாயிருக்கிறதென்ருன்.

இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில், அந்த ராஜகுமா ரன் அரமனைவாயிலில் நுழையும்போது உப்பரிகைமேலிருந்து அவனைப் பார்த்திருந்த ராஜகுமாரத்தி அவன் வந்த காரியத்தையும் கேள்விப்பட்டு, நான் இந்த ராஜகுமாரனை நன்ருய்ப் பார்த்தேன், அவனுக்கேதான் நான் மணமாலை சூட்டப்போகிறேன் என்று செய்தி சொல்லியனுப்பினுள். அதைக் கேட்கவே அந்த ராஜகுமா ரனுக்குப் பழம் நழுவிப் பாலில் வீழ்ந்ததுபோலாயிற்று. அப்படியே வெகு மேன்மையாக அவ்விருவருக்கும் அங்கேயே கலியாணம் நடந்தேறிற்று.

பூமகளைக் கலியாணஞ் செய்துகொள்ளவேண்டுமென்று காத் துக்கொண்டிருந்த பல ராஜாக்களும் இச்செய்தியைக் கேள்விப் பட்டு, நாம் இத்தனைபேர் காத்திருக்க யாவரையும் விட்டு இவள் இந்த ராஜகுமாரன்மேல் ஆசைகொண்டாள் பார்த்தாயாவென்று ஒரு ஆச்சரியமும், தனக்குச் சிறிதும் ஈடில்லாத ஒரு எளிய ராஜ குமாரனைப்போய்க்கைபிடித்தாள் என்று ஒரு வெறுப்பும் அடைந்து, இது மிகவும் மதிக்குறைவாற்செய்கிற கலியாணமென்று பரிகாசம் பண்ணினுர்கள். ஆயினும் ஒருவராவது மணவிருந்தை விடவில்லை. அநேக ராஜாக்கள் கலியாணச் சாப்பாடு சாப்பிட்டுக்கொண்டு வெகு நாள் அங்கேயே சுகமாயிருந்தார்கள்.

பூமகளும் அவள் கணவனும் கலியாணமான சிலநாள்வரையில் அப்பட்டணத்திலேயே இருந்தார்கள். பின்பு ஒருநாள் அந்த ராஜ குமாரன் தன் மாமனுரைக் கண்டு, ஐயா! தாய் தந்தையர்களைப் பார்க்க எனக்கு வெகு ஆவலாயிருக்கிறது ; எங்கள் தேசத்திற்குப் போய்வருகிறேன் என, அவ்வரசன், உன் அருமைப் பெண்சாதி யையும் அழைத்துக்கொண்டு சுகமாய்ப் போய்வா ; அவளை உன் கண்ணைப்போலக் கருத்தாய்க் காத்துவரவேண்டும் ; அவள் கழுத்தி லிருக்கின்ற மணியைமட்டும் ஒருவரும் கழற்றித் தரித்துக்கொள்

ளாமலிருக்கும்படிப் பத்திரமாய்க் காத்துக்கொள்; அப்படி யாராவது தரித்துக்கொண்டால் உடனே இம்மகள் இறந்துபோவாள் என்று சொல்லி, யானை குதிரை ஆடை ஆபரணம் முதலிய பல வரிசைகளோடு பெண்ணையும் கூட்டியனுப்பினன். அந்த ராஜகுமாரனும் மாமனாரிடத்திற் செலவுபெற்றுக்கொண்டு சுதேசம் போய்ச் சேர்ந்தான். அவனுடைய தாய்தந்தையர்கள் தம்மகன் சிறந்த சீமாட்டி ஒருத்தியைக் கலியாணம் செய்துகொண்டு வைபவமாய் வரக்கண்டு மிகவும் ஆனந்தமடைந்தார்கள்.

பின்பு நடுவே ஒரு துர்ப்பாக்கியமான செய்கைமட்டும் நடவாமலிருக்குமாயின் அவர்கள் எல்லாரும் ஆயுளளவும் ஒரேரீதியாய் ஒரு குறைவுமில்லாமல் வெகு சுகமாக வாழ்ந்திருப்பார்கள். அந்த ராஜகுமாரனுக்குச் **செங்கமலம்** என்று மூத்தமனைவி ஒருத்தியிருந்தாள். அவனுக்கு நன்றாய்ப் புத்தி தெரியாமலிருக்கையிலேயே அந்தப் பெண்ணுக்கும் அவனுக்கும் கலியாணமாய்விட்டது. அவள் வஞ்சகம் பொறாமை முதலிய கெட்ட குணங்கள் உடையவளாதலின், அவளைவிடப் **பூமகளை**யே அந்த ராஜகுமாரன் அதிகமாய் மெச்சினன்; ஆயினும், **செங்கமலம்** பட்டமகிஷியானதுபற்றி அவளை ஒன்றும் செய்யக்கூடவில்லை. ராஜாவும் ராணியும் கூடப் **பூமக**ளையே அதிகமாய்க் கொண்டாடினார்கள். ராணியென்று பேர்பெற்றுத் தனக்குச் சரியாகவே வேறொருத்தியும் இருக்கக்கூடாதென்பது **செங்கமலத்தின்** கருத்து. அப்படியிருக்கத் தன்னைவிடப் பதினயிரம் பங்கு யாவராலும் மெச்சப்பட்டவளாய் ஒருத்தி வந்தாளானல் அவளைப்பார்த்து எப்படிப் பொறுப்பாள்! ஆனதுபற்றிப் **பூமகளைச் செங்கமலம்** மிகவும் கொடிய நினைவுகொண்டு உள்ளூற வெறுத்தாள். வெளிக்கு அவளிடத்தில் மிகவும் நேசமாயிருப்பவள் போல நடித்துவந்தாலும், அவளைக் கொல்வதற்குத் தருணம் எதுவோவென்று எதிர்பார்த்திருந்தாள். மூத்தவள் இளையாளிடத்தில் பகை கொண்டிருக்கிறாளென்பதை ராஜாவும் ராணியும் எப்படியோ அறிந்துகொண்டு அவ்விருவரையும் அதிகமாய் நெருங்க விடுவதில்லை. தாங்கள் கொண்ட பயத்திற்குத் தகுந்த காரணம் இன்னதென்று சரியாய்ச் சொல்லக்கூடாமையால், அதற்குத்தகுந்த ஏற்பாடு ஒன்றும் செய்யமாட்டாமல், அவ்விருவரையும் வெகு ஜாக்கிரதையாய் மாத்திரம் கண்காணித்து வந்தார்கள். **பூமகள்** கபடமற்ற மனமும் சம்

பீரமான தன்மையுமுடையவளாதலின், நீ செங்கமலத்தோடு அதிக மாய்ச் சேராதேயென்று மாமி மாமன்மார்கள் அவளுக்கு ஒருவாறு எச்சரிக்கை சொல்லும்போதெல்லாம், நான் அவளோடு சேர்ந்தா லென்ன? அவள் என்னிடத்தில் மிகவும் ஆதரவாயிருக்கிறா ளென்று எனக்குத் தோன்றுகிறது; நாம் அவளிடத்தில் வீணான சந்தேகங் கொள்வானேன்? நாங்கள் இருவரும் தங்கை தமக்கை கள் போலல்லவா என்று பதிலுரைப்பாள்.

இப்படியிருக்க, அந்த ராஜகுமாரன் ஒரு காரியவசமாய்க் கொஞ் சம் தூரதேசம் போய்வரும்படி நேரிட்டது. ஏதோ ஒரு அசந்தர்ப் பத்தால் பூமகளையும் கூட அழைத்துக்கொண்டுபோகச் சரிப்பட வில்லை. அதனால் அவளைத் தன் தாய்தந்தையர் வசத்தில் ஒப்புவித்து வெகு ஜாக்கிரதையாய்க் காத்துக்கொள்ளும்படிச் சொல்லிவிட்டுத் தான் வெகு சீக்கிரத்திலேயே திரும்பிவருவதாய்ச் சொல்லிப் போனான்.

ராஜகுமாரன் புறப்பட்டுப்போய்ச் சிலநாளானபிறகு ஒருநாள் செங்கமலம் பூமகளண்டை வந்து, தோழி! இப்போது நம்முடைய நாயகன் வெளியே போயிருக்கிறாரல்லவா? நாம் இருவரும் தனித் திருக்கிறோமே, நீ என் வீட்டுக்கு வந்தாலும் சரி, நான் உன் வீட் டுக்கு வந்தாலும் சரி; எப்படியாவது நாம் இருவரும்கூடி விநோத மாய்ப் பேசி விளையாடிக் காலங்கழிப்போமே என, பூமகள் அப்ப டியே ஆகட்டுமென்று அதை அங்கீகரித்தாள். அப்படி அவர்கள் பேசி விளையாடும்போது இளையாள் தான் தரித்திருக்கும் சிறந்த ஆபரணங்களையெல்லாம் வாங்கி மூத்தாளுக்குக் காட்டுவாள்; அவ ளுக்கு அணிந்தும் அழகு பார்ப்பாள். ஒருநாள் மூத்தவள் இளை யாளைப் பார்த்து, தோழி! நீ எப்போதும் இந்தக் கண்டசரத்தைக் கழுத்தைவிட்டு வாங்காமலே தரித்துக்கொண்டிருக்கிறாயே; அதற்கு ஏதாவது காரணமுண்டோ என, அவள், ஆம்; நான் பிறக்கும் போது இந்தக் கண்டசரத்தைக் கழுத்தில் அணிந்தபடியே வந்து பிறந் தேன். அதைப்பார்த்துப் பண்டிதர்கள், இதுதான் என் பிராண னுக்கு ஆதாரம்; இதை யாராவது வேறொருவர் வாங்கித் தரித்துக் கொள்வாரானால் நான் உடனே இறந்துபோவேனென்று சொன் னார்கள். அதனாலேதான் நான் இதைக் கழுத்தைவிட்டு வாங்கா மலே தரித்துக்கொண்டிருக்கிறேன். நான் பிறந்ததுமுதல் இது

வரையில் ஒருபோதும் இதைக் கழுத்தைவிட்டு வாங்கினதில்லை யென்று சாதாரணமாய்ச் சொன்னாள். அச்செய்தியைக் கேட்கவே மூத்தாளுக்கு வெகு சந்தோஷமுண்டாயிற்று. ஆயினும் தன் சொந்தக் கையினாலேயே ஒரு பாவஞ்செய்யக் கூடாதென்பதனாலும், திருடும்போது ஒருவேளை அகப்பட்டுக்கொள்வோமென்கிற திகிலினாலும் அவள் அதைத் தானே திருடத் துணியாமல், பூமகள் பேச்சைக் கேட்டவுடனே வீட்டுக்கு ஓடித் தன் உயிருக்கு ஒப்பான வேலைக்காரி ஒருத்தியை அழைத்து, நீ இன்று இராத்திரி பூமகள் வீட்டுக்குப்போய் அவள் நன்றாய்த் தூங்குகிற தருணம் பார்த்து அவள் கழுத்திலிருக்கின்ற மணிவடத்தைக் கழற்றிக்கொண்டு வந்துசேர்; அதிலேதான் அவள் உயிர் இருக்கின்றது; அதை வாங்கி நீ தரித்துக் கொண்டால் உடனே அவள் இறந்துபோவாள் என்று சொன்னாள். வேலைக்காரி அதைக் கேட்டு, பூமகளைச் செங்கமலம் ஆதிமுதல் பகைத்துக்கொண்டிருக்கிறாளென்றும், பூமகளின் சாவைவிட அவளுக்கு அதிக விருப்பமானது வேறொன்றுமில்லை யென்றும் தனக்கு நன்றாய்த் தெரியுமாதலால், அப்படியே ஆகட்டும் என்று ஒப்புக்கொண்டு அன்றிராத்திரியே பூமகள் வீட்டுக்குப்போய் அவள் நன்றாய்த் தூங்குகிற தருணம் பார்த்து, அவள் கண்டசரத்தைக் கழற்றித் தன் கழுத்தில் அணிந்துகொண்டு ஒருவர்க்கும் தெரியாமல் மெதுவாய் வீடுவந்து சேர்ந்தாள். அந்தக் கண்டசரத்தை வாங்கி வேலைக்காரி தரித்துக்கொண்டவுடனே பூமகளுக்குப் பிராணன் போய்விட்டது.

மறுநாள் காலையில் ராஜாவும் ராணியும் வழக்கப்படியே தம்மருமகளைப் பார்க்கப்போய் அவள் படுத்திருக்கும் அறைக்கதவை இடித்தார்கள்; ஒருவரும் விடைகொடுக்கவில்லை. மறுபடியும் பலதரம் இடித்தார்கள்; எத்தனைதரம் இடித்தும் ஒருவரும் வந்து கதவைத் திறக்கவில்லை. கடைசியில் அவர்கள் கதவைப் பெயர்த்துக்கொண்டு உள்ளேபோய்ப் பார்க்கையில், பூமகள் இட்டகால் இட்டகைகளாய்ப் படுத்துக்கொண்டிருந்தாள்; பேச்சுமூச்சு ஒன்றுமில்லை; உடம்பெல்லாம் ஜில்லென்று அல்லித்தண்டாய்க் கிடந்தது. ஆயினும் முகம்மட்டும் சிறிதும் விகாரப்படாமல் முதனாள் பார்த்தபடியே இருந்தது. இராத்திரி அவள் ஏதாவது உடம்பு சொஸ்தமில்லாமலிருந்தாளா? அல்லது யாராவது அவளுடைய அறைக்குள் வந்தார்

களா என்ன செய்தியென்று அங்கிருந்த வேலைக்காரிகளைக் கேட்க, அவர்கள் அப்படிப்பட்டது ஒன்றும் இல்லவே இல்லையென்று சொன்னார்கள். அதைப்பார்த்து ராஜா மிகவும் விசனமடைந்து எந்த மயிர்க்காலிலாவது சிறிதளவு உயிர் ஒட்டிக்கொண்டிருக்குமோ வென்று மிகவும் பண்டிதர்களான வைத்தியர்கள் அநேகரை வரவழைத்துப் பார்த்தான்; ஒன்றும் பயன்படவில்லை. பிராணன் போய்விட்டதே; இனி வைத்தியம் செய்வது கண்கெட்டபிறகு சூரிய நமஸ்காரஞ் செய்வதுபோலவே யன்றி வேறல்ல; மேலே நடக்கவேண்டிய காரியங்களைப் பாருங்கள் என்று சொல்லி அவர்கள் போய்விட்டார்கள்.

மிக்க சமர்த்தர்களான வைத்தியர்களும் அவள் இறந்துபோனவள்தானென்று உறுதியாய்ச் சொல்லவே, ராணியும் ராஜனும் துக்கக்கடலிலாழ்ந்து வெகுநேரம் கோவென்று கதறினார்கள். பின்பு அவர்கள் தன் மகன் வந்து பிணத்தின் முகத்தையாவது சற்றே பார்க்கட்டுமென்று, அவளை உடனே கொளுத்தத் துணியாமல் சுடுகாட்டில் ஒரு குளக்கரையிலே ஒரு மண்டபத்திலிருந்த அறைக்குள்ளே கொண்டுவிட்டு, எப்படியாகுமோவென்று நாள்தோறும் அவ்விடத்திற்குப் போய்ப் பார்த்துக்கொண்டே யிருந்தார்கள். பூமகளுடைய வடிவம் சிறிதும் விகாரப்படவேயில்லை. இரண்டொரு மாதங் கழித்து அவளுடைய கணவன் வந்து பார்த்தபோதும் மேனியழகும் முகக்களையும் சிறிதும் மாறாமல் அவள் இறப்பதற்கு முதனாள் எப்படியிருந்தாளோ அப்படியே காணப்பட்டாள். எப்பொழுது பார்த்தாலும் அவள் படுத்து நித்திரைசெய்கிறவள்போலவே இருந்தது கண்டு அனைவரும் ஆச்சரியப்பட்டார்கள். அவளுடைய நாயகனான ராஜகுமாரன் திரும்பிவந்து தன் மனையாட்டி மரணமடைந்த செய்தி கேட்டு உடனே மூர்ச்சைபோனான். அவன் துக்கப்படுவதைப் பார்த்து இவனும் அவளோடுகூடவே மாண்டுபோகப் போகிறானேயென்று அரசனும் அரசியும் பயந்தார்கள். ஐயோ! நமக்கு என்ன துரதிஷ்டம் நேர்ந்தது! நான் பக்கத்திலிருந்து பிராணனைக் காக்காவிடினும், அவள் உயிரை விடும்போது என்ன வருத்தப்பட்டு என்னென்ன சொல்; சொன்னாளோ அதைக்கூடக் கேட்கக் கொடுத்துவையாமற்போனேனேயென்று புலம்பிக்கொண்டு பூமகளின் பிணத்தை நீட்டிவைத்திருந்த மண்டபத்திற்குச் சென்று,

ஐயோ! நான் பெரும்பாவியானேனே! என்னைக் கண்டு ஒரு பேச்சு பேசிவிட்டு உடனே இறந்துபோகக்கூடாதா? ஓ! உலகத்திற்கெல்லாம் ஓர் அணியான என் கண்மணியே! என்னுடன் ஒரு பேச்சு பேசமாட்டாயா என்று இப்படிப் பலவிதமாய்க் கூவிப் பொழுதுபோகுமளவும் கோவென்று கதறுவதே காரியமாயிருந்தான்.

ராஜாவும் ராணியும் தம்மகனுடைய மனநிலையைப் பார்த்து, இவனுக்கு உயிரே போய்விடுமோ, அல்லது இப்படியே பித்தம் பிடித்துப்போமோவென்று திகிலடைந்து அவனை அவளிருக்கும் இடத்திற்குப் போகவொட்டாமல் தடுக்க முயன்றார்கள். அவர்களுடைய முயற்சி சிறிதும் பயன்படவில்லை. அவள் இறந்துபோன பிறகு நமக்கு எது இருந்தென்ன, எது போயென்னவென்று அவன் எல்லாவற்றிலும் வெறுப்படைந்திருந்தான்.

இதிப்படியிருக்க, பூமகளின் கண்டசரத்தைத் திருடிக்கொண்டு போன தாதி அதைப் பகலெல்லாம் தான் தரித்துக்கொண்டிருந்து இரவிற் படுக்கப்போகும்போது வாங்கி வைத்துவிட்டுப் படுப்பாள். அவள் அதைக் கழற்றினவுடனே பூமகளுக்குப் பிரஞ்ஞைவரும்; இரவெல்லாம் பிராணனோடேயே இருப்பாள். காலையில் தாதி அதைத் தரித்துக்கொண்டால் உடனே அவளுக்குப் பிராணன் போய்விடும். அவளை விட்டிருக்குமிடம் நகரத்துக்கு வெகுதூரமாகையாலும், ராஜா ராணி அவர்களுடைய மகன் எல்லாரும் பகலிலேயே அவ்விடத்துக்குப் போகிறதனாலும் இது ஒருவர்க்கும் தெரியாமலேயிருந்தது. முதல்நாள் அவளுக்கு அப்படிப் பிரஞ்ஞை வந்தபோது அவள், ஒருவருமில்லாத ஒரு பேரிருட்டறையில் தனித்திருக்கக் கண்டு மிகவும் பயந்து, ஒருவேளை நம்மைச் சிறையிலடைத்திருக்கிறார்களோ என்னவோவென்று நினைத்தாள். வரவர அதுவே வழக்கமாய்ப்போயிற்று. இரண்டொருநாளில் தன் மணி வடம் போய்விட்டதென்று தெரிந்துகொண்டு, பொழுது விடிந்ததும் எழுந்து எப்படியாவது வழிதேடிக்கொண்டு பட்டணம்போய் அதைக் கண்டுபிடிக்கவேண்டுமென்று எண்ணினாள். இரவில் நாலாமூலையிலும் காட்டுமிருகங்கள் பயங்கரமாய்க் கூவிக்கொண்டிருக்கப் பேரிருளிலே பட்டணத்திற்குப் போக அவளுக்கு மனந்துணியவில்லை. ஒருநாளும் அவளுக்குப் பொழுது விடியவே

யில்லை. கிழக்கு வெளுப்பதற்குமுன்னமே அந்தத் தாதி கண்டசரத்தைத் தரித்துக்கொள்ளுகிறாள், அவளுக்கு உடனே பிரஞ்ஞை தப்பிப்போகிறதே! ஆயினும் அவள் பசிதாளமாட்டாமல் ராத்திரி ராத்திரி நினைவு வந்தவுடனே எழுந்து அங்கிருந்த குளத்திற் சென்று கொஞ்சம் தண்ணீர் குடித்துவிட்டுப் போவாள். அப்போது அவளுக்குப் பேசவேண்டிய தருணம் ஒன்றுமில்லையாதலின் அவள் வாயினின்றும் நவரத்தினங்கள் உதிர்வது கிடையாது; அவள் போகிற வழியெல்லாம் இருபுறமும் உயர்ந்த ஆபரணங்கள்மாத்திரம் சிந்திக்கொண்டேபோகும். ஒருநாள் ராஜகுமாரன் பகலில் வந்தபோது அந்த ஆபரணங்களைப் பார்த்து இதென்னவென்று ஆச்சரியமடைந்து, தன் மனைவி மறுபடியும் பிழைப்பாளென்கிற எண்ணம் அவனுக்குக் கனவிலுமில்லையாயினும், அது எங்கிருந்து வருகிறதோ பார்க்கவேண்டுமென்று தீர்மானித்து நெடுநேரம் காத்திருந்தான்; ஒன்றும் தெரியவில்லை. பொழுதுபோனதும் அவன் வீட்டுக்குப் போய்விடுகிறானே! அதன்பிறகல்லவோ அவள் எழுந்திருக்கப் போகிறாள்!

இதற்குள் பூமகள் இறந்துபோனாளென்று அவளைக் காட்டிற் கொண்டுவிட்டு இரண்டுமாதமாய்விட்டது. பிறகு, அந்த ராஜகுமாரன் என்றையதினம் போய்ப் பகலெல்லாம் அவள் படுத்திருந்த மண்டபத்தண்டை காத்துக்கொண்டிருந்தானோ அன்றையதினம் இராத்திரி அவளுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை பிறந்தவுடனே பொழுதுவிடிய, வழக்கப்படியே தாய் இறந்துபோனாள். அந்த இளங்குழந்தை அண்டையில் ஒருவருமில்லாமல் அழத்தொடங்கிற்று. அது எப்படித்தான் அழுதாலும் நடுக்காட்டில் அதைக் கேட்பார் யார்? இத்தோடுகூட முதனாள் பகலெல்லாம் அங்கே போய்க் காத்துக்கொண்டிருந்த ராஜகுமாரன் அன்றைப் பகலெல்லாம் அவ்விடத்துக்குப் போகவேயில்லை. ஏனெனில், நேற்றுப் பகலிலே போய்க் காத்திருந்து வீணாய்ப்போயிற்றே; இன்றையதினம் இரவிலேபோய்ப் பார்ப்போமென்று நின்றுவிட்டான்.

அப்படியே அவன் அன்று ராத்திரி அவ்விடத்திற்குப் போனான். அங்கே போனவுடன் மெல்லிய குரலாய் அவள் படுத்திருக்கும் அறைக்குள்ளிருந்து அழுகைக்குரலொன்று கேட்க, அதை இன்னதென்று நிதானிக்கக்கூடாமல் அவன் பூதம் பேய் பிசாசு ஏதாவது

வந்து கூவுகிறதோ என்னவோவென்று நினைத்தான். அதைப்பற்றிச் சந்தேகித்துக்கொண்டே அவன் கொஞ்சநேரம் வெளியிலே சுற்றிக்கொண்டிருக்கையில் திடீரென்று கதவு திறந்த சத்தம் கேட்டது. உடனே பூமகள் குழந்தையைக் கையிலெடுத்துக்கொண்டு அவ்வறையினின்றும் வெளிப்பட்டுக் குளத்திற்குப்போனாள். போகும்போது அவளுடைய இருபுறத்திலும் ஆபரணங்கள் கலகலவென்று சொரிந்தன. அதைப் பார்த்து அந்த ராஜன், இதென்ன, நாம் இப்போது கனவு காண்கிறோமா, அல்லது இது நினைவுதானோ வென்று திகைத்து நிற்க, அவள் குளத்திலிறங்கிக் கொஞ்சம் தண்ணீர் குடித்துவிட்டுத் திரும்பித் தன் அறைக்குப் போவதைக் கண்டு, அவளைப் பின்தொடர்ந்துபோனான். பூமகள் தன்னைப் பின்தொடர்ந்துவருகிற காலடியோசையைக் கேட்டுப் பயந்து சீக்கிரமாய் உள்ளே போய்க் கதவைப் பூட்டிக்கொண்டாள். ராஜகுமாரனும் பின்னோடு வேகமாயோடி ‘கதவைத்திற, கதவைத்திற’ என்று கூவிக் கதவையிடிக்க, அவள் நீ யார்? பேயா, பிசாசா? என்று கேட்டாள். (ஏதோ ஒரு கொடிய ஜந்து தன்னையும் குழந்தையையும் முறித்துவிட வந்திருக்கிறதென்றே அவள் உண்மையாய் நினைத்தாள்.) அதற்கு ராஜா நான் அப்படிப்பட்டவனன்று; நான் உன் கணவன்; கதவைத்திற என் அருமைப் பூமகளே! நீ பிழைத்திருப்பது உண்மையாயின் கதவைத்திற என்று கூவிக் கதவை இடிக்க, தன் பெயரை அவன் எடுத்துரைத்ததனாலும், அந்தக்குரல் தன் கணவன் குரல்போலவே இருந்ததனாலும் அவன் தன் நாயகன்தானென்று நன்றாய்த் தெரிந்து கதவைத் திறந்தாள். அவன் உடனே உள்ளே நுழைந்து, பூமகள் மடியில் குழந்தையை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கக் கண்டு தானும் அவளெதிரே உட்கார்ந்து, பெண்ணே! இப்போது என்முன் தோன்றுவதெல்லாம் உண்மைதானோ? எனக்குத் தெரியச்சொல்லென்று கேட்க, அவள், எல்லாம் உண்மைதான்; இந்தக் குழந்தை நேற்று ராத்திரிதான் பிறந்தது. நீங்கள் வெளியே போயிருந்தபோது யாரோ என் மணிவடத்தைத் திருடிக்கொண்டு போய்விட்டார்கள்; அதனால் நான் பகற்பொழுதெல்லாம் பிரஞ்ஞையற்றுக் கிடக்கிறேன் என்று சொன்னாள்.

அப்பொழுதுதான் அந்த ராஜகுமாரன் அவள் கழுத்தில் கண்டசரமில்லாமலிருந்ததைக் கண்டான். அவள் சொன்னதைக் கேட்டு

அவன், என் அருமைக்கண்ணே! இனி நீ விசனப்படவேண்டாம்; இதோ நான் பட்டணம்போய் எப்படியாவது அந்த மணிவடத்தைக் கண்டுபிடித்துக்கொண்டுவருகிறேன் என்று அவளுக்குத் தேறுதல் சொல்லிக்கொண்டே இராப்பொழுதைப் போக்கினான். கிழக்கு வெளுத்ததும் அவன் பட்டணத்திற்குப்போய் ராஜமாளிகையிலுள்ளவர் அனைவரையும் வரவழைக்கக் கட்டளையிட்டான்.

அப்படியே யாவரும் வந்து சேர்ந்தார்கள். சேர்ந்தவுடன் ராஜகுமாரன் தன் மூத்தமனைவியின் தாதியொருத்தியினுடைய கழுத்தில் பூமகள் இழந்துபோன மணிமாலை யிருக்கக்கண்டு அது ஏதென்று கேட்க, அவள் ஒன்றும் சொல்லத் தோன்றாமல் பிரமித்து நின்றதனால், அதைப் பிடுங்கிக்கொண்டு அவளைச் சிறைசெய்யக் கட்டளையிட்டான். அந்தக் கட்டளையைக் கேட்டுத் தாதி மிகவும் பயந்து, பெரிய ராணியின் உத்தரவினாலேதான் நான் இக்காரியமெல்லாம் செய்தேனென்று நடந்ததை நடந்தபடியே சொல்லிவிட்டாள். அதைக் கேட்கவே ராஜா மிகவும் கோபங்கொண்டு அந்தக் கொடிய ராணியைக்கூட ஆயுளளவும் சிறைசெய்யத் திட்டஞ்செய்தான். தன் அருமைமனையாட்டியின் கைசோர்ந்த மணிவடம் கிடைக்கவே ராஜகுமாரன் பேரானந்தமடைந்து தன் தாய்தந்தையர்களையும் மற்றும் அநேகம் பரிஜனங்களையும் கூட்டிக்கொண்டு பூமகள் படுத்திருக்குமிடத்திற்குப்போய் அம்மணிவடத்தை அவள் கழுத்தில் தரிப்பித்தான். பின்பு அவ்வழகியையும் குழந்தையையும் அழைத்துக்கொண்டு யாவரும் அங்கிருந்து வெகு சந்தோஷமாய்ப் பட்டணம் வந்து சேர்ந்தார்கள். பூமகள் பிழைத்தெழுந்த செய்திகேட்டு அப்பட்டணத்தார் அனைவரும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். அன்று தொட்டு அந்த ராஜகுமாரன் ஒரு குறையுமின்றிச் செம்மையாய்க் குடிகளையும் காத்துக்கொண்டு சுகமாயிருந்தான்.

## 22-வது. நரியும், முதலையும்

ஒரு மலைக்காட்டில் ஆற்றோரத்திலே வசித்துக்கொண்டிருந்த ஒரு நரி ஒருநாள் மிகவும் பசித்து இரையொன்றும் அகப்படாமல், மீன் நண்டு ஏதாவது ஒன்று அகப்பட்டால் அதையாவது பிடித்துத் தின்னலாமென்று ஆற்றங்கரைக்குச் சென்றது. அவ்வாற்றிலே நெடுநாளாய்ப் பெரிய முதலையொன்று உண்டு. இந்த நரி அங்கே போன தருணத்தில் அம்முதலையும் அதிகமாய்ப் பசியால் வருந்தி எப்பொழுது எது அகப்படப்போகிறதென்று காத்துக்கொண்டிருந்தது. நரி அத்தருணத்தில் அதின் வாயில் அகப்பட்டுக்கொண்டால் அம்முதலைக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கும்.

அந்த நரி அவ்வாற்றங்கரைபோய்ச் சேர்ந்து கரையோரத்தில் ஏதாவது ஒரு ஜந்து இருக்கிறதா என்று கவனமாய்ப் பார்த்துக்கொண்டு கரையிலேயே இக்கோடிக்கு அக்கோடி பலமுறை ஓடித் தேடிப் பார்த்தது; ஒன்றும் அகப்படவில்லை. கடைசியில் அம்முதலை படுத்திருந்த விடத்திற்குச் சமீபத்தில் கோரைப்புதரின் நடுவே தெளிந்த தண்ணீரில் மீனொன்று ஓடக்கண்டு, தன் பசியினால் தண்ணீரில் இறங்கலாமா கூடாதாவென்று நிதானித்துப் பார்க்கக்கூடப் பொறுக்காமல், அதைப் பிடிக்கும்படி நரி உடனே காலைத் தண்ணீரில் வைத்தது; வைத்தவுடனே அண்டையிலிருந்த முதலை அந்தக் காலைக் கவ்விக்கொண்டது. அதுகண்டு நரி, ஓகோ! நமது வாய்க்கு ஏதோ ஒன்று தேடப்போய் நாமே முதலைவாயில் அகப்பட்டுக்கொண்டோமே! இனி நாம் செப்பவேண்டுவதென்ன! இன்னும் ஒரு நிமிஷத்தில் தண்ணீருக்குள் இழுத்துக்கொண்டுபோய் இது நம்மைக் கொன்றுவிடுமே என்று சொல்லி ‘பாம்பின்வாய்த் தேரைபோல்’

தத்தளித்து, இனி நம்மால் செய்யக்கூடியது ஒன்றுமில்லை ; ஆயினும் ஒரு உபாயம் செய்துபார்ப்போம், ஆனால் ஆகிறது, போனால் போகிறது என்று எண்ணி, ஆகா! இதென்ன ஆச்சரியம்! முதலையின் சாமர்த்தியத்தை நான் என்னவென்று சொல்வேன்! முதலை வெகு சாமர்த்தியமுள்ளது! நரியின்காலென்று நினைத்துக் கோரைக்கிழங்கைக் கவ்விக்கொண்டதே என்று சொல்லி உரத்துக்கூவி நகைத்தது. அந்தக் கூச்சலைக் கேட்டு முதலை கோரைப்புதரில் புதைந்து கிடந்ததனால், நரி சொல்வது உண்மையா அல்லவாவென்று நன்றாய்த் தலையெடுத்துப் பார்க்கக்கூடாமல், அந்தமட்டும் இவ்வளவு உபகாரஞ் செய்தாயே! எனக்கு உடம்பு மிகவும் ஓய்வாயிருக்கிறது, ஒன்றுந் தோன்றவில்லை, நான் நரியின் காலைத்தான் கவ்விக்கொண்டதாய் எண்ணினேன், அதுவோ நரியின் கால், என் வாயில் அகப்பட்டது கோரைக்கிழங்குதானே என்று சொல்லி நரியை விட்டுவிட்டது.

முதலைவாயினின்றும் காலை வாங்கிக்கொண்டவுடனே நரி, ஓ! புத்திசாலியான முதலையே! புத்திசாலியான முதலையே! அந்தமட்டும் என்னைத் தப்பவிட்டாயே என்று கூவிக்கொண்டு ஒரு குதியாய்க் குதித்து ஓடிப்போயிற்று. அந்தக் கூச்சலைக் கேட்கவே முதலைக்கு மிகவும் மனவருத்தம் உண்டாயிற்று. இனி அது என்ன வருத்தப்பட்டுத்தான் ஆகவேண்டுவதென்ன! அவ்வளவுநேரத்தில் நரி வெகுதூரம் ஓடிப்போய்விட்டதே!

மறுநாளும் அந்த நரி அப்படியே இரைதேடிக்கொண்டு அவ்வாற்றங்கரைக்கு வந்தது. முதனாள் பட்டபாட்டில், அதற்கு முதலையினிடத்தில் அதிக திகிலுண்டாயிருந்ததனால், அது கரையோரத்திலேயே நின்று, முதலை அங்கேயிருக்கிறதா இல்லையாவென்று அறியும்பொருட்டு ஒரு உபாயஞ்செய்தது. அதாவது: நான் இரை வேண்டுமென்று இவ்வாற்றிற்கு எப்பொழுது வந்தாலும், சிறுமீன்கள் விழித்து விழித்துப் பார்த்துக்கொண்டிருக்கும், சுலபமாய்ப் பிடித்துத் தின்றுவிட்டுப் போவேன் ; இந்த வேளையும் ஏதாவது ஒன்று அகப்பட்டால் பிடித்துத் தின்னலாம், பசிதணியும் ; ஒன்றையும் காணேனே என்று உரத்துக்கூவிற்று. அந்த நதியின் அடிப்புறத்தில் படுத்திருந்த முதலை இந்தக் கூச்சலைக் கேட்டு, இது நமக்கு நல்ல காலந்தான், மறுபடியும் அந்த நரி வந்திருக்கிறது ; இன்றையதினம் அதை விடக்கூடாது ; நாம் கரையோரத்திலே போய் மூக்கின்

நுனியை மெதுவாய் நீட்டிக்காட்டினால், இதுவும் ஒரு மீன்தா னென்று நரி அதைப் பிடிக்கவரும், அதை அப்படியே நாம் பிடித்து வாயிலே போட்டுக்கொள்ளலாமென்றெண்ணிக் கரையோரத்திலே வந்து மூக்கு நுனியை நீர்மட்டத்துக்குச் சரியாக நீட்டிக் காட்டிற்று.

முதலை மூக்கின் நுனியைக் கண்டவுடனே நரி, ஓ தோழனே! நீ இங்கேயேயிருக்கிறாயா? சந்தோஷம்; எனக்கு இன்றைப்பொழுதும் நல்ல பொழுதாய்த்தான் விடிந்தது. எனக்கு இன்றையதினம் இந்தவிடத்தில் சாப்பாடு கிடைக்கக் கடவுள் கட்டளையிடவில்லையெனக் காண்கிறது என்று சொல்லிக்கொண்டு அவ்விடம்விட்டு ஓடிப்போய் வெகுதூரத்திற்கு அப்பால் மற்றோரிடம் சேர்ந்து அங்கே இரைதேடித் தின்றது. இரண்டுதரம் தன் கைக்கெட்டினது வாய்க்கெட்டாமற்போனது கண்டு முதலை மிகவும் கோபங்கொண்டு, இனிமேல் அந்தக் குள்ளநரி இவ்விடத்திற்கு வருமானால், அதை நான் பிராணனோடு தப்பவிடுவதில்லை என்று தீர்மானங்கொண்டிருந்தது.

மறுநாளும் அப்படியே அந்தத் தந்திரமுள்ள நரி இரைதேடிக்கொண்டு அந்த நதிக்கரைக்கு வந்தது. அப்பொழுது அம்முதலை, இன்றையதினம் நான் எப்படியாவது இந்த நரியைப் பிடித்துக்கொள்ளவேண்டும் என்று தீர்மானித்துக் கரையோரத்தில் ஒளித்துக்கொண்டிருந்தது. தந்திரசாலிகளுக்கெல்லாம் தலைவனாதலால் நரி, இரண்டு நாளாய் முதலை தன்னைக் கறுவிக்கொண்டிருப்பது தெரிந்து, ஒருவேளை அது இன்றையதினம் நம்மைப் பிடித்துக்கொள்ளுமோ என்னவோவென்று ஆற்றோரத்திலேகூடப் போகப்பயந்து சற்று தூரத்திலேயே நின்றது. ஆயினும் பசித்து இளைப்படைந்திருந்ததனால், வயிற்றிற்கு இரைதேடிக்கொள்ளாது அப்புறம்போகப் பிரியமில்லாமல், ஆற்றின்செய்தி எப்படியிருக்கிறது பார்ப்போமென்று ஒரு உபாயம் செய்தது. அதாவது: ஓ, சிறு நண்டுகளே! நீங்கள் எல்லாரும் எங்கே போய்விட்டீர்கள்? நான் வெகு பசியுடன் வந்திருக்கிறேனே? ஒன்றுகூடக் கண்ணில் அகப்படவில்லையே; நான் எப்பொழுது வந்துபார்த்தாலும் இங்குமங்குமாய் அநேகம் ஓடித் திரியுமே, ஆற்றின் அடிப்புறத்திலிருந்தாலும் சேற்றில் புரளும்போது புள்! புள்!! புள்!!! என்று நீர்க்குமிழிகள் அநேகமாய்க் கிளம்புவ

துண்டே, இப்பொழுது அதையும் காணேனே என்று கூவிற்று. கரையோரத்தில் சேற்றில் அமிழ்ந்துகிடந்த முதலை அதைக் கேட்டு, நல்லது ; நாம் இன்றையதினம் ஒரு சிறு மீன்போலக் காட்டி இதை ஏமாற்றிவிடுவோம் என்று நினைத்துப் பலதரம் வாயினல் பெருமூச் சுவிட்டுப் பல பெருங்குமிழிகள் உண்டாகச் செய்தது. முதலையைப் போன்ற அவ்வளவு பெரிய ஜந்து உள்ளேயிருந்து நீரைக் கலக்கி விடவே மேற்புறத்தில் நீர் சுழல்காற்றில் அடிபட்டதுபோல நாற்புற மும் தளும்பி அலைமோதிற்று. நீர் அதிகமாய் அலண்டு தத்தளிப் பதைப் பார்த்துப் புத்திகூர்மையுடையதான நரி கொஞ்சநேரம் நிதா னித்து, இவ்விடத்தில் முதலைதான் வந்திருக்கிறது என்று தெரிந்து கொண்டு, தங்களுக்கு வந்தனமையா முதலையாரே! இவ்வளவு அன் பாய்த் தங்கள் நிலையை எனக்குத் தெரிவித்தீர்களே, தங்களுக்கு ஒரு வந்தனமையா முதலையாரே! தங்களுக்கு வந்தனமையா! தாங்கள் இங்கேயே இருப்பதாய் எனக்கு முன்னமே தெரிந்திருந்தால் நான் இவ்விடத்துக்கு வரவேமாட்டேனே என்று இப்படிப் பலவிதமாய்க் கூவிக்கொண்டு ஒரே ஓட்டமாய் மற்றொரு இடத்திற்கு ஓடிப் போயிற்று.

மூன்றுந்தரமும் இவ்விதமாய் ஏமாந்துபோகவே முதலைக்கு உண் டான கோபம் இவ்வளவவ்வளவன்று. இப்படி அந்தநரி ஒவ்வொரு தரமும் தன்னை மோசஞ்செய்து வருவதுகண்டு முதலை, நல்லது ஆகட்டும், இனி நான் அந்தத் திருட்டுநரியின் சூதுக்கு உட்படு கிறேனு பார்! இன்னொருதரம் அது இங்கே வருமானல் செத்தது தான்; அதைவிட வெகு சூதாய் நாம் அதினிடத்தில் நடக்கவேண்டும் என்று தனக்குள்தானே நினைத்துக்கொண்டு, மறுபடி அந்தநரி அவ் விடத்திற்கு எப்பொழுது வரப்போகிறதென்று வெகுநாள் எதிர்பார்த் துக்கொண்டிருந்தது. நரி மறுபடியும் அந்த வழி திரும்பவேயில்லை. முதலைக்குத் தெரிந்த சூது நரிக்குத் தெரியாமற்போகுமா! நாள்தோ றும் இதேவிதமாக நடந்துகொண்டிருக்குமானல் என்றைக்காவது ஒருநாள் இந்தக் கொடிய ஜந்துவின் வாயில் அகப்பட்டுக்கொள் வோம் ; இனி நாம் வீணுய்ப் பேராசைகொள்ளக்கூடாது. நமக்கு மீனும் வேண்டாம், நண்டும் வேண்டாம். காட்டிலுள்ள கனிகளை மாத்திரம் புசித்துத் திருப்தியடைந்திருப்பதே நலம் என்று எண்ணிப் பிறகு நரி அவ்வாற்றை எட்டிப்பார்க்கவேயில்லை ; காய் கனி கிழங்கு

முதலியவைகளைத் தின்றுகொண்டு காடுகளிலும் மலைகளிலுமே விநோதமாய்த் திரிந்துகொண்டிருந்தது.

நரி திரும்பிவருமென்று நெடுநாள் காத்திருந்தும் அது வாராமற் போகவே முதலை, இதென்ன அந்தத் துஷ்டமிருகம் நம்மை ஏமாற்றி விட்டது! நாம் தரையிலாவது போய் அது இருக்குமிடந் தேடி யோடி அதைப் பிடிக்கிறதேயொழியச் சும்மாவிடுவதில்லை என்று தீர்மானங்கொண்டு, கரைமேலேறி அண்டையிலிருந்த ஒரு பெருந் தோப்பிற்சென்று அங்கே கீழே வீழ்ந்துகிடந்த பலவகைப் பழங்களை யும் குப்பலாய்க் குவித்து அந்தக் குப்பலின்கீழ்த் தான் மறைந்து கொண்டு, நரி எப்பொழுது பழந்தின்ன வரப்போகிறது, நாம் அதைப் பிடித்துக்கொள்ளப்போகிறோம் என்று காத்திருந்தது. சிறிதுநேரத் தில் நரி வந்து பார்த்து, ஓகோ! இதென்ன மோசமாயிருக்கிறதே! என்றைக்காவது பழங்களெல்லாம் தாமே இப்படிக் கும்பலாக வீழ்ந்துகிடப்பதுண்டா! நமது தோழரான முதலையார் வந்திருக்கி றாரோ என்னவோ! அதைத் தெரிந்துகொள்ளுகிற விதம் எப்படி யென்று யோசித்து மேலே வருமாறு கூவிற்று: ஓ, இனிய பழங் களே! உங்களைப் புசிக்க எனக்கு வெகு ஆவலாயிருக்கிறது; நீங்க ளெல்லாம் மரத்திலிருந்து கீழே விழுந்தபடியே இங்குமங்கும் இறைந்து காற்றில் அசைவதுபோல் அசைந்துகொண்டிருந்தால்தான் உங்களை நான் அதிகமாய் விரும்புவேன்; இதென்ன இன்று இப் பழங்களெல்லாம் கும்பலாய்ச் சேர்ந்து அசைவற்றிருக்கின்றனவே; ஆயின் இவை சிறந்த பழங்களல்ல, இந்தப் பழம் ஒன்றும் எனக்குத் தேவையில்லை என்று உரத்துச் சொல்ல, முதலை அதைக் கேட்டு, ஓ, அப்படியா! இந்த நரி எவ்வளவு சந்தேகப்பிராணியாயிருக்கிறது! நல்லது, நாம் இந்தப் பழங்களைச் சற்றே அசைத்துவிடுவோம், அப் புறமாவது இது தின்னவராதா என்று சொல்லித் தன் உடலைச் சற்றே ஆட்டிவிட்டது. அவ்வளவு பெரிய ஜந்து கீழே நின்று உடம்பை அசைக்கவே, அதன்மேல் குப்பலாய்க் குவிந்திருந்த பழங் களெல்லாம் பெருங்காற்றடித்தால் எப்படியோ அப்படி நாலாமூலை யிலும் உருண்டு இறைந்துபோயின. சில பழங்கள் ஒரு பக்கத்தில் ஒரு மைல் தூரம் உருண்டுபோயின; சில மற்றொரு புறத்தில் இரண்டு மைல் தூரம் உருண்டுபோயின. இப்படிப் பழங்களெல் லாம் பல திசையிலும் வெகுதூரம் உருண்டு ஓடிப்போக, முதலை

மாத்திரம் நரி நன்றாய்ப் பார்க்கும்படி இருந்தவிடத்தை விட்டசையாமல் அப்படியே நின்றது.

அதைப் பார்த்து நரி, முதலையாரே! தாங்கள் இங்கே வந்திருப்பதை இப்போது எனக்குத் தெரிவித்ததற்காக நான் உங்களிடத்தில் மிகவும் நன்றி பாராட்டுகிறேன். நீங்கள் இங்கே வந்திருப்பீர்களென்று நான் கனவிலேகூடக் கருதவில்லை. இவ்வளவு தந்திரமாய்ப் பழக்குப்பலில் புகுந்துகொண்டு இருந்தீர்களே; உங்கள் சாமர்த்தியத்தை நான் என்னென்று சொல்லுவேன் என்று சொல்லிக்கொண்டு ஓடிப்போயிற்று. அந்தப் பேச்சைக் கேட்டபோது முதலைக்கு எரிகிற உடம்பில் எண்ணெயைக் காய்ச்சி ஊற்றினதுபோலாயிற்று. அதனால் முதலை உடம்பு தெரியாமல் கோபாவேசங்கொண்டு நரியைத் துரத்திக்கொண்டோடிற்று. என்றைக்காவது நரியோட்டத்திற்கு முதலையோட்டம் ஈடாகுமா? நரி ஒரு குதியாய்க் குதித்துக் கண்காணமல் நடுக்காட்டில் வெகுதூரம் ஓடிப்போய் விட்டது.

ஐயோ பாவம்! பேதைமுதலை இப்படி எத்தனைதரந்தான் ஏமாந்து போகும்! இந்தத் தடவையும் இவ்விதமாய் ஏமாந்துபோகவே கோபம் தலைக்கேறி, போனதுபோகட்டும், இன்னொருதரம் நான் அதன் மோசத்திற்கு உட்பட்டு அதை ஓடிப்போகவிடுவதில்லை; அந்தக் கேடுகெட்ட மிருகத்தைவிட நான் அதிக சூது கற்றவனென்று இந்தத் தடவை நான் அதற்கு நன்றாய்க் காட்டிவிடுகிறேன் என்று தீர்மானஞ் செய்துகொண்டு மறுநாள் காலையில் அந்த முதலை, நரி வெளியே போயிருக்கிற தருணம் பார்த்து, அருகே மலையோரத்திலிருந்த அதன் வளைக்குள் வெகு வேகமாய்ப் புகுந்துகொண்டு, நரி எப்பொழுது திரும்பிவரப்போகிறதென்று அதின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. கொஞ்சநேரத்தில் நரி காட்டிலிருந்து திரும்பி வீட்டிற்கு வந்தது. அந்தக் குகையின் வாயிலண்டை வந்து நன்றாய் நான்குபக்கமும் சுற்றிப்பார்த்து, ஓகோ! இதென்ன! ஒரு பெரிய ஜந்து இந்த வழியாய் நகர்ந்துபோனதுபோல் தரை தேய்ந்தும் குகை வாயிலில் இருபக்கங்களிலும் மண்கட்டிகள் பெயர்ந்தும் இருக்கின்றனவே! ஏதாவது ஒரு பெருத்த ஜந்து உடம்பு உள்ளே கொள்ளாமல் வருத்தப்பட்டு நுழைந்துபோயிருப்பதுபோல் காண்கின்றது! இந்தச்செய்தியை நன்றாய்த் தீரத் தெரிந்துகொள்ளாமல் உள்ளே

நுழையக்கூடாதென்று நிச்சயித்து, ஓ, சிறு குகையே! என் அருமை மாளிகையே! நான் வந்து வாயிலில் காத்திருக்கிறேனே! நீ என் ஒன்றும் பேசாமல் வாயை மூடிக்கொண்டிருக்கிறாய்! நான் எப்பொழுது வெளியே போய்வந்தாலும், உனக்கு ஒரு சங்கடமும் இல்லாமலிருந்தால், என்னை வருந்தி வேண்டியழைப்பாயே! இப்பொழுது நீ வாயெடுத்துப் பேசக்கூடாமல் உனக்குத் துன்பம் ஏதாவது நேரிட்டிருக்கிறதோ என்று இப்படிப் பலவாறு கேட்டது. நரியின் தந்திரம் முதலைக்கு என்றைக்காவது வருமா? நாள்தோறும் நரி வரும்போது அதைக் குகை கூவியழைப்பது வழக்கமோ என்னவோ! இன்றையதினம் ஒருவேளை நம்மைக் கண்டு பயந்து குகை வாயைத் திறவாமலிருக்கலாம்; அதற்குப் பதிலாக நாமே அழைப்போம், குகைதான் அழைக்கிறதென்று எண்ணி நரி உள்ளே வந்து நுழையட்டும் என்று நினைத்து முதலை மெல்லிய குரலாய், ஓ அழகிய சிறு நரியே! உன் மாளிகைக்கு நீ வரத்தடையென்ன? நான் ஏதோ பயந்து, அதனால் உன்னைவேண்டி வரவழைக்காமலிருந்தேன் என்று நினைக்கிறாயோ? அப்படிப்பட்டது ஒன்றுமில்லை. உன்னை அடுத்திருக்கிற எனக்குப் பயம் எங்கிருந்துவரும்? சுகமாய் வா என்று வேண்டியழைத்தது.

அந்தச் சொல்லைக் கேட்டு நரி மிகவும் பயந்து, ஓகோ! அந்தக் கொடிய கிழமுதலை மறுபடியும் இங்கே வந்திருப்பதுபோற் காண்கிறதே! நல்லது ஆகட்டும்; இந்தத் தருணத்தில் எப்படியாவது இதைக் கொல்ல முயலவேண்டும். இல்லாவிட்டால் என்றைக்காவது ஒருநாள் இது நம்மைப் பிடித்துக் கொல்லுமேயொழியச் சும்மா விடாது என்றெண்ணி, சலாமையா என் அருமை மாளிகையே! உன் தீங்குரலைக் கேட்டு எனக்கு வெகு சந்தோஷமாயிற்று. சோறாக்குவதற்குக் கொஞ்சம் விறகு பொறுக்கிக்கொண்டு இரண்டொரு நிமிஷத்தில் நான் உள்ளே வந்து சேருகிறேன் என்று அதற்கு விடைகொடுத்துவிட்டு உடனே வெளியே ஓடி, கட்டையோ குச்சோ முள்ளோ செடியோ, தன் கையில் அகப்பட்டதையெல்லாம் நன்றாய் உலர்ந்ததாய்ப் பார்த்துப் பொறுக்கி வந்து அந்தச் சிறு குகையின் வாயிலண்டை கொண்டுசேர்த்தது. இவ்வளவு நேரத்தில் அந்தக் குகைக்குள் பூனைபோலப் பதுங்கிக்கொண்டிருந்த முதலை, இத்தனைநாள் கழித்து இந்தத் துஷ்டநரி இன்றையதினம் நமது

மோசத்துக்கு உட்பட்டது; இரண்டொரு நிமிஷத்தில் அது இங்கே ஓடிவரும், ஒரேதாவாய்த் தாவிப் பிடித்துக்கொள்ளலாம் என்று அடிக்கடி நினைத்து, நினைக்கும்போதெல்லாம் சந்தோஷத்தால் தனக்குத்தானே சிறுநகை நகைத்துக்கொண்டிருந்தது. அதற்குள் நரியும் வேண்டுமளவு சுள்ளிகள் கொண்டுவந்து அந்தக் குகையின் துவாரத்தில் அடைத்துக் கொஞ்சம் அனலும் காட்டிவிட்டது. அத்தருணத்தில் காற்றும் வாட்டமாய் வீசவே அந்தச் சிறுதீ பெருந்தீயாய் மூண்டு தீயும் புகையும் அந்தக் குகையைக் கவர்ந்துகொண்டது. ஐயோ, பேதைமுதலை என்னசெய்யமாட்டும்! இரண்டொரு நிமிஷத்தில் மூச்சுத்திணறி மாண்டு எரிந்து நீறாய்ப்போயிற்று. நரி தான் நினைத்த காரியம் நிறைவேறிற்றென்று மிகவும் சந்தோஷமடைந்து, ஓ என் அருமை மாளிகையே! இப்போது உனக்கு எப்படியிருக்கிறது? குளிருக்கு இதமாய்க் கம்மென்றிருக்கிறதல்லவா!

என்பகைவன் முதலையிதோ வேகிறது பாருங்கள்
என்துயர மினைத்துங்காணின்றோடு நீங்கிற்றே

என்று இப்படிப்பாடிக் கூத்தாடிக்கொண்டு குகைக்கு வெளியே களித்து உலாவித் திரிந்தது.

03:29

C. L. S. PRESS, MADRAS—1918